DAILY MEDITATIONS

தியான மஞ்சரி

இது

F. பீற்றர்சன் ஐயர்

ஜர்மானிய பாஷையில் இயற்றிய நூலின்

தமிழ் மொழிபெயர்ப்பு.

Tranquebar.

Printed at the Ev. Luth. Mission Press.

1910.

118562

நூன்முகம்.

சத்திய வேதாகமம், பல்வகை வியாதிகளையும் தீர்க்கும் பல்வகை மூலிகைகளும் மருந்துச் சரக்குகளும் மருந்துகளும் வைத்திருக்கும் ஓர் வைத்திய சாலைக்கும், பல்வகை உணவுப் பொருள்களும் போசன பதார்த்தங்களும் உள்ள போசன வசதிக்கும் ஒப்பு. ஓர் வைத்திய சாலையில் பிரவேசிக்கிறவன் அங்குள்ள மருந்துப் புட்டிகளில் எதையேனும் நிதானமின்றி யருந்தலாகாது. ஒரு வீட்டின் போசன வசதியிலுள்ள உணவுப் பொருட்களில் எதையும் ஒரு தாய் நிதானமும் அளவுமின்றித் தன் பிள்ளைகளுக்குக் கொடாள். கர்த்தருடைய வேதத்தின்மேல் இரவும் பகலும் தியானிப்பாயிருத்தல் ஒவ்வொரு கிறிஸ்தவன் மேலும் விழுந்த கடன். ஆயினும் எல்லாக் கிறிஸ்தோரும் தங்களுக்கேற்ற ஆகாரத்தையும் ஏற்ற மருந்து வகைகளையும் அறிந்துபயோகிக்கும் திறமையுள்ளோர் அல்லர். ஆதலால் திருச்சபையில் ஞான காரியங்களில் அநுபவ முதிர்ந்த பெரியோர் திருச்சபை வருஷத்தின் அந்தந்த ஞாயிறுகளுக்கேற்ற நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து வைத்தனர். அவ்வாறே வார நாட்களின் வாசிப்புக்கேற்ற வாக்கியக் கோவைகளையும் அநுபவமுள்ளோர் தெரிந்தெடுத்து அவற்றோடு சுருக்க விஸ்தரிப்பையும் சேர்த்துத் தியானப் புத்தக ரூபமாயளித்திருக்கின்றனர். இவித தியானப் புத்தகங்கள் லூத்தரன் சபையாராகிய நமக்குத் தமிழில் அநேகம் இல்லை. மேலும் இருக்கும் சிலவும், பாஷையிலும் பொருளிலும் தெளிவின்றி விலையிலும் அதிகப்பட்டு இருப்பதால், இச்சிறு நூலைத் தமிழில் சங். M. ஞானஸ்கே, A. C. செபஸ்தியான் என்ற ஐயர்மார் மொழி பெயர்த்தனர். இந்நூல் சில வருஷங்களுக்குமுன் ஜர்மானிய தேசத்தில் F. பீற்றர்சன் ஐயரால் லூத்தரன் சபையாருக்காக இயற்றப்பட்டது. இதை அங்கே அநேகம் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களுடைய வீடுகளில் காலை மாலை ஜெபத்தில் உபயோகித்து வருகிறார்கள். இவ்வரிய தியானங்கள் நமது தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கும் பயன்படுமாறு அவற்றைத் தமிழ்ப் பாஷையில் மொழிபெயர்க்கலாயிற்று. நமது தேசத்துக் கிறிஸ்தவர்களும் காலை மாலை ஜெபம் நடத்தும் பழக்கமுள்ளவர்களாதலால் அவர்களுக்கும் இப்புத்தகம் உதவியாயிருக்கும் என்

பதற்குச் சந்தேகமில்லை. இப்புத்தகத்தில் குறித்திருக்கும் பிரார்த்தனையைப் பாடி வேதவாக்கியத்தையும் அதற்குப்பின் வரும் விஸ்தரிப்பையும் ஜெபத்தையும் வாசித்துக் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லி அப்போஸ்தல ஆசீர்வாதத்தைக் கூறிக் காலை அல்லது மாலை ஜெபத்தை முடிக்கலாம். இப்பேர்ப்பட்ட ஜெபத் தியானங்களால் தேவ வசனத்தின் பேரில் தேட்டமும் கோவில் ஆராதனைகளுக்கு வரும் நாட்டமும் உண்டாகும்.

இத்தியானப் புத்தகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமைக்கும் நமது ஞானோபதேசத்தின் ஒரு பாகம் விஸ்தரிப்புக்காகக் குறித்திருக்கிறது. நமது ஞானோபதேசத்தில் வேதத்தின் சாரம் அடங்கியிருப்பதால் அதை நன்றாய்ப் படித்தாராய்பவர்கள் நமது லூத்தரன் சபைப் போதகத்தின் அருமையை அறிந்துகொள்ளுவார்கள் என்பதற்கையமில்லை.

இந்நூல் தமிழில் வெளிவர நமது ஐயர்மாரில் பலர் இதன் வசே... யில் வேண்டிய உதவி புரிந்தனர். அவர்களனைவருக்கும் சங். M. வான்ஸ்கே ஐயர் அவர்க்கும் நம் நன்றி கூறுகின்றனர். இந்நூலின் ஏடுகளனைத்தையும் கடைசியில் சரிபார்க்கும் உத்தரவாதம் எனக்கிருந்தது. இக்கடமையைச் சரிவரச் செய்ய என்னாலியன்ற அளவில் முயன்றேன். இனியும் இதில் குற்றங் குறைகளிருப்பினும், பெரியோர்களவை பொறுத்து இவ்வரியதோர் தியான நூலை விருப்புடனேற்பர் என்பதென் துணிபு.

இந்நூல் தமிழறிந்த எல்லாக் கிறிஸ்தவ சபையார் வீடுகளிலும் இடம் பெற்று, அநேக ஆன்மாக்களுக்கு ஞான ஜீவ போஜனமாகுமாறு, திருச்சபையின் பரிபாலனராகிய தேவ திரு ஆவியானவரே அருள் புரிக. ஆமேன்.

தரங்கை, 26. 9. 1913. } M. பவுல் அருளப்ப துரை.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6	16	மட்டுமெ	மட்டும்
9	9	இவ்வுலகத்தை	இவ்வுலகத்தை
10	11	அவருடையத் திரு	அவருடைய திரு
...	13	ப்ராபரனே	பராபரனே
12	26	உமக்கு காத்திருக்கவும்	உமக்குக் காத்திருக்கவும்
14	35	எதிர்ப்பார்த்து	எதிர்பார்த்து
15	32	சசல	சகல
19	30	உணாந்து	உணர்ந்து
22	3	என்றும்	என்று
...	8		ஓசி. 17, 20. 21.
25	3	வேத	தேவ
26	32	கடினமக்ா	கடினமாக
29	13	பிரத்திபுத்தாரமாகமாக	பிரத்தியுத்தாரமாக
...	25	ஜீவனம்பண்ண	ஜீவனம்பண்ண
30	28	பாகியவதி	பாக்கியவதி
33	18	பிளளைகளாக்க	பிள்ளைகளாக்க
...	28	வழிசென்று	வழிசென்று
...	32	பிளளைகளே	பிள்ளைகளே
34	25	இருதயஙகளும்	இருதயங்களும்
35	26	மன்னிபபை	மன்னிப்பை
40	26	அனுபபி	அனுப்பி
42	16	தேவரீர் ரீர்	தேவரீர்
46	9	அவருககு	அவருக்கு
...	15	வெள்ளத்திலும	வெள்ளத்திலும்
51	26	இரகஙிவந்து	இரங்கிவந்து
55	16	போனுர்கவென்று	போனுர்களென்று
56	31	அவர்கள்	அவர்களை
65	20	வெளிபபடுத்தினர்	வெளிப்படுத்தினர்
74	16	பாகிகளையும் பார்த்தார்	பாடுகளையும் பார்த்தால்
84	12	மடிக்குபோகலாம்	மடிக்குப்போகலாகும்
93	8	வேதபுத்தகம்	வேதபுத்தகம்
99	31	இஙகே	இங்கே

பக்கம்	வரி.	பிழை	திருத்தம்
120	29	புது சிவனை	புதுா ஜீவனை
149	30	பாவத்தை	பாவத்தை
151	26	அறியோம்	அறிவோம்
1[illegible]3	6	படைத்த பிதாவாகிய	படைத்த சர்வத்திற்கும்
19[illegible]	1[illegible]	சரீரத்துக்கு	சரீரத்துக்கும் [வல்லமை
19[illegible]	12	வித்மாயும்	விதமாயும்
20[illegible]	2	மலம்	மைமல்
...	15	இரட்[illegible]பு	இரட்சிப்பு
20[illegible]	13	மங்கையை	மகிமையில்
...	19	மகிமையில்	மங்கையில்
209	14	தோழத்தல்லாத	தோழத்ததல்லாத
242	11	வெளிச்சிசத்	வெளிச்சத்தி
[illegible]	[illegible]	[illegible]ரசங்கிகும்படி	பிரசங்கிக்கும்படி
270	3	கிரியை	கிருபை
279	17	குணப்படுபவர்களுக்கு	குணப்படுபவர்களுக்குக்
282	14	குறறங்களை	குற்றங்களை
297	26	நீ	நான்
...	35	பாவங்களிலுலே	பாவங்களிலுல்
317	2	கம்பதபடி	கம்பாதபடி
332	13	காங்கள	காங்கள்
351	23	படிக்கு கர்த்தராகிய	படிக்குக் கர்த்தராகிய
357	8	வல்லமையிலிருந்து	வல்லமையிலுமிருந்து
361	33	பாக்கியத்துக்கு துவக்கம்	பாக்கியத்துக்குத் துவக்
363	27	பெற்றவவன்	பெற்றவன் [கம்
364	31	என்று சொல்லி	என்று சொன்னார்
365	15	பத்துபேரையும்	பத்துப் பேரையும்
366	18	பாரமனும்	பாராமனும்
375	22	சிகேகிப்பார்?	சிகேகிப்பாரா?
391	18	இவர்	இவர்கள்
400	8	அவசியமானது	அதிசயமானது
412	34	சாராயத்தை	"சாராயத்தை
413	7	ஐயோ	ஐயோ"
419	14	எபி. 5, 5-1;	எபி. 5, 5-14
449	21	சிகேகிப்பதும்	சிகேகிப்பதும்
452	3	பெருவாரி காய்ச்சல்	பெருவாரிக் காய்ச்சல்

தியான மஞ்சரி.

வருகை முதலாம் வாரம், ஞாயிறு

பிரார்த்தனை 376, 1-2

சீயோன் குமாரத்தியுடனே, இதோ! உன் இராசா [illegible]த்தனவருமாய்க் கழுதையின்மேலும் நுகத்தடிக்குக் கீழ்ப்படி[illegible] கழுதைக்குட்டியின்மேலும் ஏறியிருக்கிறவருமாய் உன்னண்டைக்கு வருகிறாரென்றுசொல்லுங்கள். மத். 21, 5.

இது ஒரு சந்தோஷசெய்தி. கர்த்தராகிய கிறிஸ்து, இராஜகோலங்கொண்டு எருசலேமுக்குள் பிரவேசித்த ஞாயிற்றுக் கிழமையில் மேலேசொல்லிய சங்கதி நிறைவேறிற்று. அந்தப் பவனியில் அவருடைய சீஷர் தங்கள் வஸ்திரங்களை வழியில் விரித்து அவருக்குமுன் கிளைகளைத் தெளித்து, அவருக்கு மகிமையாக ஓசியன்னாவென்று பாடினார்கள். இம்மகிழ்ச்சியின் சத்தம் சீயோனின் வீதிகளில் தொனித்துக்கொண்டிருந்தது. விசனப்படாதே, பிரிய ஆத்துமாவே! அன்றைக்கு எருசலேமில் பிரவேசித்தவர் உனக்கும் இராசா. உனக்கும் ஆண்டவர். விலையுயர்ந்த தமது இரத்தத்தைக் கிரயமாகக் கொடுத்து உன்னையும் சம்பாதித்தவர். அவர் கிருபையின் இராசாவாக உன்னண்டைக்கும் வருகிறார். உன்மேலும் அவருக்குப் பாத்தியம் உண்டு. அவர் உன்னையும் தமது ஆளுகைக்குள் அமர்த்திக்கொள்ள வருகிறார்.

உன் ஆண்டவர் உனக்கு இவ்வளவு சமீபமாயிருக்கும்போது நீ என்ன செய்யப்போகிறாய்? ஒருவனும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ்செய்ய முடியாது. நீ ஞானஸ்நானத்தில் அவருக்குச் சொந்தமானதினால் பாவத்திற்கு ஊழியஞ்செய்வதை விட்டு அவருக்கு உன்னை முற்றிலும் ஒப்புக்கொடு. அநேகர் அவரை விட்டுக் கெட்டலையும் இக்காலத்தில் நானும் என் வீட்டாரும் கர்த்தரைச் சேவிப்போமென்று சொல்லு. ஞாயிறுதோறும் கோவிலில் அவரைப்பற்றிய வசனத்தைக் கேட்டு மற்ற நாட்களிலும் வசனத்தின் செய்கைக்காரனாயிருக்கவும் யோக்கியமும் தெய்வபத்தியும் பொருந்திய அமைதலான ஜீவியம்பண்ணவும் பிரயா

சப்படி. நீ இப்படி வருஷ முழுவதிலும் செய்தால் உனக்குப் பெரிய ஆசீர்வாதம் வரும். உன் பாதம் கல்லில் இடறாதபடி அவர் வசனம் உன் பாதைகளிலெல்லாம் வெளிச்சமாயிருக்கும்; உன் முழு ஜீவியமும் உயர இருக்கும் எருசலேமை நாடி [illegible] பின்செல்லும் ஜீவியமாகும்.

ஜெபம். கர்த்தராகிய பராபரனே! உமது நாமத்தில் இச்சபைப் புதுவருஷத்தைத் தொடங்குகிறோம்; எங்களில் ஒவ்வொருவருக்கும், முழுத் திருச்சபைக்கும் [illegible] உம்முடைய [illegible] நிறைந்த அருளுடையவராயிருக்கப்பண்ணும். கர்த்தாவே! உமது திருக்குமாரனுடைய இரத்தத்தினிமித்தம் [illegible] எல்லாக் காரியங்களையும் எங்களுக்கு வாய்க்கப்பண்ணும். சுவாமி, ஆமென்.

1 மோசே 1, 1-27 அல்லது சங். 24 வாசிக்கவும்.

வருகை முதலாம் வாரம், திங்கள்.

பி. 2, 1. 2.

நித்திரையை விட்டு எழுந்திருக்க வேண்டிய காலமாயிற்று என்று நாம் காலத்தை அறிந்திருக்கிறபடியால் இப்படி எச்சரிக்கிறேன்; என்னென்றால் நாம் விசுவாசிகளானபோது சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்போது நம்முடைய இரட்சிப்பு அதிகமாய்ச் சமீபித்திருக்கிறது. இராச் சென்றுபோயிற்று, பகல் சமீபித்தது; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிட்டு வெளிச்சத்தின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக் கடவோம். ரோ. 13, 11. 12.

இயேசுநாதர் பாவிகளை இரட்சிக்க முதல்முறை உலகத்தில் வந்தார். இரட்சிப்பை முடித்த அவருக்குப் பிதாவானவர் நியாயத்தீர்ப்பையும் ஒப்புவித்திருக்கிறார். தாம் நியமித்த புருஷனைக் கொண்டு பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்க்க ஒரு நாளை அவர் குறித்திருக்கிறார். இந்த நாள் அநுதினமும் நெருங்கிக் கொண்டு வருகிறது. மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். பெரிதும் பயங்கரமுமான நாள் என்று சொல்லப்பட்ட அந்தக் கடைசி நாளை [illegible] நிற்கக்கூடியவன் ஆர்? என்று அந்த நாளை [illegible] நாம் [illegible] மாட்டோம். நம்மை அப்போது நியாயந்தீர்க்கப் போகிறவர் நம்முடைய இரட்சகர்தான். அவர் நமக்கு அறிமுகமானவர். அவர் மன உருக்கமும் இரக்கமுமுள்ளவர் என்று அறிவோம். அவர் தம்முடையவர்களிடத்தில் கேட்கிறது இன்னதென்றும் அறிவோம். அதென்ன? அவர்கள் இரவில் செய்வதுபோலத் தூங்கவும் இரட்சிப்பின் நாளை [illegible] கழிக்க

வும் கூடாது. அவர்கள் பகலிலிருப்பதுபோல் விழித்திருந்து விசுவாசத்தின் ஆயுதங்களைப் பிடித்துப் பரிசுத்தமாவதற்காகப் போராடவேண்டும். கிருபைக் காலம் எப்போதும் குறுகிக் கொண்டே வருவதால் நாமதில் ஒரு மணி நேரத்தையும் தவற விடாமல் பிடிக்கக் கடவோம். பொய்யான சமாதானம், நிர்விசாரம் என்கிற தூக்கத்தை விட்டு எழுந்திருப்போமாக. நம்மில் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும் பழைய ஆதாமின் கெட்ட இச்சைகளையும் துர்ப்பழக்கங்களையும் நாம் களைந்து போடுவோமாக. நமக்குள்ளும் மற்றவர்களுக்குள்ளும் இருக்கிற பொல்லாப்போடு நாம் தைரியமாய் எதிர்த்துப் போர்புரிவதற்கு நாம் வெளிச்சத்தின் ஆயுதங்களாகிய விசுவாசத்தின் கேடயத்தையும் பராபரனுடைய வசனமென்ற ஆவியின் பட்டயத்தையும் அணிந்துகொள்வோமாக. அப்போது கர்த்தர் நம்மைத் தம்முடையவர்களாக அறிந்துகொள்வார். இப்படிக் கடைசி நாள் நமக்குக் கோபத்தின் நாளாயிராமல் இரட்சிப்பின் நாளாயிருக்கும்.

ஜெபம். எங்கள் அன்புள்ள இரட்சகரே! சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்த உம்மை உமது பிதா இந்த உலகத்துக்கு இரட்சகராகவும் நியாயாதிபதியாகவும் நியமித்தார். ஆ கர்த்தாவே, நாங்கள் நியாயத்தீர்ப்புக்கு ஆளாகாதபடி உமது இரட்சிப்பைச் சீக்கிரம் தேடவும் அதைக் கண்டுபிடிக்கவும் அதிலே மரணபரியந்தம் உண்மையாய் நிலைத்திருக்கவும் எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும். ஆமென்.

1 மோசே 1, 28-2, 9. அல்லது எசா. 1, 1-18 வாசிக்கவும்.

வருகை முதலாம் வாரம், செவ்வாய்.

பி. 2, 3-5.

இயேசு அண்ணாந்து பார்த்துச் சகேயுவைக் கண்டு: அவனுடனே சகேயுவே! தீவிரமாய் இறங்கு; இன்றைக்கு நான் உன் வீட்டிலிருக்கவேண்டுமென்றார். அவன் தீவிரமாய் இறங்கி அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டான். லூக். 19, 5. 6.

ஆயக்காரரில் தலைவன் ஒருவனுடைய வீட்டிலே இயேசுநாதர் தங்கப்போகிறார். இந்தக் கனத்துக்கு அவன் பாத்திரவானோ? ஆயக்காரரில் தலைவனை ஜனங்கள் சாதாரணமாய்ப் பெரிய மோசக்காரனென்று நினைப்பார்கள். இயேசுநாதர் மற்ற வீடுகளை விட்டு இவன் வீட்டிலே பிரவேசித்ததைப் பார்த்த அநேக ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர் ஏன் அவன் வீட்டுக்குள் போனார்? ஜனங்களின் எண்ணத்திற்கு மாறாக அவன்

நல்லவன். என்றும் ஜனங்களவனை மோசக்காரனென்று சொன்னது பொய் என்றும் இயேசுநாதர் அறிந்தாரா? ஆனால் சகேயு தானே நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கியிருந்தால் நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்துகிறேன் என்கிறான். அவன் இவ்வளவு நேர்மையாயிருந்ததும், பரிசேயரைப் போல நன்னீதிமானாக அல்ல, பாவியாகவே காட்டினதும் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தது. அவன் மனச்சாட்சி விழித்துக்கொண்டது. உலகப் பொருளுக்கு இம்மட்டும் தான் செய்த ஊழியத்துக்கு வெட்கப்பட்டு அவன் இப்போது இரட்சிப்பின்மேல் வாஞ்சையாயிருக்கிறான். இருதயத்தை நன்றாயறியும் கர்த்தர் மரத்தின்மேலிருந்த சகேயுவைப் பார்த்தபோது இதையெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் உணர்ந்துகொண்டார். அவர் பாவிகளைச் சிநேகிக்கும் இரட்சகர் ஆனதால், அவனைக் கடந்து அப்பாலே போகக்கூடாமல் இன்றைக்கு நான் உன் வீட்டிலிருக்க வேண்டுமென்கிறார்.

நமது கர்த்தர் எவ்வளவு உண்மையுள்ளவர். அவர் மனுஷரை இரட்சிக்க எவ்வளவு கவனம் வைத்துப் பிரயாசையெடுக்கிறார். பாடுபட்டு மரணமடைய எருசலேமுக்குப் போகும் வழியிலே அவர் தமக்கானதை நினைக்காமல் நல்ல மேய்ப்பனைப் போல் கடைசியான நேரமட்டும் இழந்துபோனதைத் தேடிக்கொண்டிருக்கிறார். அவருடைய கண் உன்மேலும் இருக்கிறது. ஆகையால் அவர் உன்னையும் விட்டுக் கடந்துபோகாமல் உன்னையும் நோக்கிப் பார்ப்பார்.

ஜெபம். இரக்கமுள்ள மேய்ப்பரே! எங்களை உமது திரு இரத்தத்தால் மீட்டுத் தேடிக்கொண்டே யிருக்கிறீர். எங்களை ஒருபோதும் மறக்கமாட்டீர். இரட்சகரே, எங்களைக் கண்டுபிடித்து எங்களையும் உமது திருமந்தையில் சேர்த்தருளும். ஆமென்.

1 மோசே 2, 15-25. அல்லது எசா. 2, 1-19 வாசிக்கவும்.

வருகை முதலாம் வாரம், புதன்.

பி. 2, 6-8.

உனக்கும் ஸ்திரீக்கும் உன்னுடைய வித்துக்கும் அவளுடைய வித்துக்கும் பகையை உண்டாக்குவேன், இவர் உன் தலையை நசுக்குவார் நீ அவர் குதிகாலை நசுக்குவாய் என்றார். 1 மோ. 3, 15.

பாவத்தில் விழுந்த ஆதிமனிதருக்குத் தேவன் இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார், அது இயேசுவைப்பற்றியது.

அவர் பாவிகளின் நேசராயினும் பாவத்துக்கு ஒருபோதும் உடன்படாமல் பிசாசின் கிரியைகளைக் குலைக்கவே வந்தவர். அவர் ஆதாமின் மற்றப் பிள்ளைகள் போன்றவர் அல்ல. அவர்களில் நல்லவர்களான யாக்கோபும் தாவீதுங்கூடப் பொல்லாத சத்துருவாகிய பிசாசுக்கு இணங்கினதினால் பெலவீனராய்ப் போனார்கள். இரட்சகரோ எப்போதும் யுத்தத்திற்கு ஆயத்தமாயிருந்து சாத்தானுக்குச் சேதத்தை உண்டுபண்ணினார். ஆனால் இந்தப் பொல்லாதவன் தன்னைச் சிநேகிதன்போலக் காண்பித்தாலும் அவர் அவனை நம்பாமல் அவன் இருதயத்தின் ஆழத்தில் உள்ள பொல்லாப்பையும் வெளியாக்கிவிட்டார். அந்தகாரத்தின் அதிகாரத்திற்கு நீங்கி விடுதலைபெற விரும்பின எவனையும் மீட்டுவிட்டார். அசுத்த ஆவிகள் அவரை நோக்கி, தேவகுமாரனே, உமக்கும் எங்களுக்கும் என்ன என்று நடுநடுங்கிக் கதறும்படி அவைகளை அப்போதே துரத்தினார்.

இதனால் சாத்தான் அவருக்குப் பிராண சத்துருவாகி எல்லா வல்லமையோடும் அவரை அழிக்கப் பார்த்தான். அவருடைய சொந்த ஜனம் அவரைத் தள்ளிவிட அவர்களை ஏவிவிட்டான். சொந்தச் சீஷன் அவரைக் காட்டிக்கொடுக்க அவனை ஏவிவிட்டான். யூதர் புறஜாதியார் இவர்களின் அதிகாரிகள் அவரைச் சிலுவையில் அறையும்படி அவர்களைத் தூண்டிவிட்டான்.

தேவனோ, அவரைத் திரும்ப உயிரோடெழுப்பினார். மரணம் ஜெயமாய் விழுங்கப்பட்டது. அவருடைய ஜெயம் நம்முடைய ஜெயமாம். அவரைப் பற்றிக்கொள்ளும் விசுவாசம் உலகத்தை ஜெயிக்கும் ஜெயம். ஆகையால், எல்லாப் பொல்லாப்பையும் பகைக்கும் பரிசுத்த பகையையுங்கூட நம்முடைய இரட்சகரிடம் பெற்றுக்கொள்வோமாக.

ஜெபம். பொல்லாத சத்துருவை வென்ற போர்வீரரே! எங்களைச் சிறைச்சாலையிலிருந்து மீட்ட ஜெயவீரரே! வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் எல்லாரும் உம்மை வணங்குவார்கள். உமக்கு இப்போதும் எப்போதும் சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. சுவாமி, ஆமென்.

1 மோசே 3, 1-24 அல்லது எசாயா 4, 2-6 வாசிக்கவும்.

வருகை முதலாம் வாரம், வியாழன்.

பி. 2, 9. 10.

வெட்டப்பட்ட ஈசாயின் அடிமரத்திலிருந்து ஒருதுளிர் புறப்பட்டு அவன் வேரிலிருந்து ஒரு கிளை எழும்பிக் கனிதரும். இவர்மேல்

கர்த்தருடைய ஆவியாகிய ஞானம் உணர்வு என்பவைகளின் ஆவியும், ஆலோசனை பெலன் என்பவைகளின் ஆவியும், அறிவு கர்த்தருக்குப் பயப்படுதல் என்பவைகளின் ஆவியுமானவர் தங்கியிருப்பார். எசா. 11, 1. 2.

கர்த்தர் பரலோக இராச்சியத்தை ஒரு கடுகு விதைக்கு ஒப்பிடுகிறார். பரலோக இராச்சியம் இந்த விதையைப்போல் சிறிதாய்த் துவக்கினாலும் வரவரப் பெரிதும் வல்லமையுள்ளதுமாகிறது. கர்த்தர் உலகத்தில் வந்தபோது அவருக்கு அப்படியே ஆயிற்று. முன்னமே வெட்டப்பட்ட ஈசாயின் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் புறப்பட்டது. வெகுகாலத்துக்கு முன்னே கெட்டுப் போய்த் தரித்திரதசைக்கு வந்த தாவீதின் வீட்டில் பிறந்த நமதாண்டவரே அந்தத் துளிர். இதுதான் அவருடைய மானிட உற்பத்தி. ஆவியின்படியோ அவர் நமக்கு முன்னும் பின்னும் இருந்த சகல இராசாக்களையும் தீர்க்கதரிசிகளையும் பார்க்கப் பெரியவர்.

அவர்மேல் ஞானம் உணர்வு என்பவைகளின் ஆவியானவர் தங்கியிருக்கிறார். தாம் செய்யவேண்டியதை அவர் எப்போதும் அறிவார். கொல்லதாமட்டுமே தாம் செல்லவேண்டிய வழியைத் தெளிவாய்ப் பார்க்கிறார். ஆலோசனை, பெலன் என்பவைகளின் ஆவியும் அவருக்கு உண்டு. அவர் தாம் விரும்பினதெல்லாவற்றையும் செய்யக்கூடியவர். தமது சீவன் போக நேரிட்டும் அவர் தமது பிதாவின் சித்தத்தைப் பணிவோடும் கீழ்ப்படிதலோடும் நிறைவேற்றினதால் அறிவு கர்த்தருக்குப் பயப்படுதல் என்பவைகளின் ஆவியானவரும் அவர்மேல் தங்கியிருக்கிறார். இப்படி ஆவியின் வரங்களை அவர் பூரணமாய் அணிந்துகொண்டதால் உலகத்தின் இரட்சிப்பை முடித்துவிட்டார். அவரைப் போன்றவர் ஆர்?

அந்த வரங்களை அவர் நமக்கும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார். நம்மில் ஒருவனும் சிதறிப்போன ஆட்டைப்போல் வழி தப்பித் திரியவேண்டியதில்லை. ஞானஸ்நானத்தில் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தாவியானவர் நம்மையும் நீதியின் பாதையில் நடத்தித் துன்பத்தின் பள்ளத்தாக்கிலே நடக்கிற நமக்கும் பொறுமையையும் பெலத்தையும் கொடுப்பார்.

தேவன் உன்னை வைத்த அற்ப உத்தியோகத்திலும் நற்கனிகளைக் கொடுத்துப் பிறத்தியாருக்குப் பிரயோசனப்படும் மரத்தைப்போல் இரு. நீ கிறிஸ்துவிலே பொருத்த வைக்கப்பட்ட கிளை. அவரை அன்றி நீ ஒன்றும் செய்யமுடியாது.

ஜெபம். பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பெற்ற கிறிஸ்து இயேசுவே! நானும் உம்மிலும் உம்மாலும் ஞானம், உணர்வு, ஆலோசனை, பெலன், தேவபயம் இவற்றையுடைய அருள்புரியும். சுவாமி, ஆமென்.

1 மோசே 4, 1-16 அல்லது எசா. 5, 1-21 வாசிக்கவும்.

வருகை முதலாம் வாரம், வெள்ளி.

பி. 3, 1. 2.

ஆனால் எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லெகேமே! நீ யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாய் இருந்தாலும் இஸ்ரவேலை ஆளப் போகிறவர் உன்னிலே இருந்து புறப்படுவார். அவருடைய புறப்படுதல்கள் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையவைகள். மீகா. 5, 1.

பரலோக இராச்சியத்தில் சம்பவித்ததெல்லாம் அதிசயம். அதில் நித்திய உலகமும் அநித்திய உலகமும் ஒன்றோடொன்று சம்பந்தப்படுகிறது. வானமும் பூமியும் கூடிவருகிறது. அற்பகாரியங்கூட வானத்தில் பராபரனால் முன் ஆலோசிக்கப்பட்டு நடந்தேறுகின்றது. அவருக்குச் சிறிதும் இல்லை பெரிதும் இல்லை. நமதுமேல் சுமரும் அளவில்லாத பாவக்குற்றத்தைச் சுமக்க இரட்சகர் தேவ குமாரனாயிருக்கவேண்டும். நமக்காகத் தேவனிடத்தில் பரிந்துபேச அவர் மனிதனுமாய் இருக்கவேண்டும். ஆகையால் பிதாவிடத்தில் அநாதியாய்ப் பிறந்த மெய்யான தேவனானவர் இப்பூமியில் மெய்யான மனுஷனாகவும் பிறக்கவேண்டியதாயிற்று. அதற்காகக் கடவுள் ஒரு ஜனத்தைத் தெரிந்துகொண்டு அதை அவருக்காக ஆயத்தப்படுத்தி அவர் பிறப்புக்கு இடமாக ஒரு ஊரைக் குறித்தார். அது பெத்லெகேம் என்னும் சிறிய ஊரே. அப்போதே வரப்போகிறவரைக் குறித்துத் தீர்க்கதரிசி இப்படியே பேசுகிறான். இப்போது வந்திருக்கிறவரைக் குறித்தும் அவருடைய ஜனத்தைக் குறித்தும் அப்போஸ்தலன் சொல்லுகிறதை உற்றுப்பார். இருக்கிறவைகளைத் தள்ளப் பராபரன் லோகத்தில் இழிகுலமானவைகளையும் அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் இல்லாதவைகளையும் தெரிந்துகொண்டார் என்கிறான் (1 கொரி. 1, 2-8). உன் தேவன் அநுசரிக்கும் முறையும் வழியும் இதுதான். நீ மாய்கையினால் மயங்காதபடி இதைக் கவனித்துப் பார். நீ மிக அற்ப அந்தஸ்திலிருந்தாலும் உண்மையுள்ளவனாய் இருப்பாயானால், கர்த்தர் பெத்லெகேமை நினைத்ததுபோல் உன்னையும் உன் வீட்டையும் நினைத்துக் கிறிஸ்துவின் மூலமாய் உனக்கு இரட்சிப்பையும் ஆசிர்வாதத்தையும் அருளுவார் என்பது நிச்சயம். ஏனென்றால் கர்த்தர் தாழ்மையானவர்களுக்குக் கிருபை அளிக்கிறார்.

ஜெபம். பரம பிதாவே! ஏழைப் பாவிகளாகிய எங்களுக்கு ஆறுதலாக உமது நேசகுமாரனை மேசியாவாக கொடுத்து அனுப்பினதற்காக உம்மை முழு இருதயத்தாலும் தோத்திரிக்கிறோம். நாங்கள் அவரை எங்கள் இராசாவும் இரட்சகருமாக அறிந்து அவரையே பற்றிக்கொண்டு, அவர்மேல் வைக்கும் உறுதியான நம்பிக்கையினால் நித்திய பாக்கியத்தை

அடைய உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு எங்களைப் பிரகாசிப்பித்து ஆண்டு நடத்தவேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். சுவாமி; ஆமேன்.

1 மோ. 5, 21-32 அல்லது எசாயா 5, 22-30 வாசிக்கவும்.

வருகை முதலாம் வாரம், சனி.

பி. 91, 1-2.

முதலாம் கற்பனையாவது. உன் தேவனாகிய கர்த்தர் நாமே, நமக்கு முன்பாக உனக்குவேறே தேவனில்லாமல் போவதாக. உயர வானத்திலேயும் கீழே பூமியிலேயும், பூமியின் கீழ்த் தண்ணீரிலேயும் உண்டான வஸ்துக்களுக்கு ஒத்திருக்கிற சுரூபத்தையாகிலும் விக்கிரகத்தை என்கிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும் வணங்கவும் வேண்டாம்.

இதற்கு அர்த்தம் என்ன? நாம் எல்லாவற்றையும் பார்க்கப் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு அவர்பேரில் நம்பிக்கையாயிருக்கவேண்டும்.

உன் தேவனாகிய கர்த்தர் நாமே. சீனாய்மலையில் தொனித்த இந்த மகா வாக்கியத்தினால் ஜீவனுள்ள ஒன்றான தேவன் தம்மை வெளிப்படுத்தினார். இந்த வாக்கியம் நமது அஞ்ஞான இருளை நீக்கும் வெளிச்சம். நீ உனக்குத் தோன்றினபடி உனக்கு ஒரு தேவனைப் பாவித்துக்கொண்டாலும் நீ தோற்றுவித்த தேவன் தேவனல்ல. உனக்குப் பரிசுத்த சன்மார்க்கத்தைக் கற்பிக்கிற நானே தேவன் என்கிறார். நாமே கர்த்தர் என்கிறார். தம்மைப் பரிகாசம் பண்ணவொட்டாமல் தமது கற்பனைகளுக்குக் கீழ்ப்படியக் கட்டளையிடுகிறவர் சர்வ வல்லவரென்று இஸ்ரவேல் புத்திரர் சீனாய்மலையில் உண்டான இடிமுழக்கத்தினாலும் மின்னலினாலும் பூமி அதிர்ச்சியினாலும் அறிந்துகொண்டார்கள். ஜீவனுள்ள பரிசுத்த பராபரன், தமது உக்கிரத்தில் நம்மோடு பேசினால் நாம் அதமாவோம். ஆதலால் நாம் எல்லாவற்றையும் பார்க்க அவருக்குப் பயப்படுவோமாக. நாமே உன் தேவன் என்கிறார். அவர் இஸ்ரவேலுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீரையும் வானத்திலிருந்து அப்பத்தையும் கொடுத்ததினால் அவர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டது முதல் கானான் தேசத்திற்கு வந்ததுவரையில் அவருடைய உண்மையுள்ள பராமரிப்பைக் கண்டார்கள். நமக்கோ அவர் அநுதினமும் ஆகாரத்தைக் கொடுத்துச் சகல மோசங்களுக்கும் நம்மைத் தற்காத்து இரட்சித்து வருகிறார். ஆகையால் நாம் எல்லாவற்றையும் பார்க்க அவரைச் சிநேகிப்போமாக.

உன் தேவனாகிய கர்த்தர் நாமே என்றுசொல்லி ஆண்டவர் இரண்டையும் ஒன்றாய்ச் சேர்க்கிறார். தேவனுடைய சர்வ வல்லமை அவருடைய சிநேகத்திற்கு ஊழியம் செய்கிறது. அவருடைய பரிசுத்தமும் இரக்கமும் ஒன்றுக்கொன்று விரோதமல்ல. ஆதலால் எல்லாவற்றையும் பார்க்க நாம் அவரை அதிகமாக நம்பக்கடவோம். நமக்கு வேறே தேவர்கள் வேண்டவே வேண்டாம்.

ஜெபம். சர்வவல்லமையுள்ள தேவனே! உமது சாத்தின் [illegible] உம்மைவிட்டுப் பின்வாங்கி இவ்வுலகத்தை நாடினோம். ஆனால் தேவரீர் மிகுந்த கிருபையினால் எங்களுக்கு இரங்கி, உமது பரிசுத்த நாமத்தை எங்களுக்கு வெளிப்படுத்தினீர். ஆண்டவரே, உம்மை முழு மனதாலும் சிநேகிக்க எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

1 மோசே 6, 5-22 அல்லது எசாயா 6, 1-13.

வருகை இரண்டாம் வாரம், ஞாயிறு.

பி. 316, 1. 2.

அப்போது மனுஷகுமாரனை மேகத்திலே வல்லமையோடும் வெகு மகிமையோடும் வரக் காண்பார்கள். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போதோ நீங்கள் நிமிர்ந்து உங்கள் தலைகளை எடுங்கள். ஏனெனில் உங்கள் மீட்பு சமீபித்தது. லூக். 21, 27. 28.

கர்த்தர் பூமியில் சஞ்சரித்தபோது ஒரு சமயத்தில் தமது சீஷரை நோக்கி, நீங்கள் பார்க்கிறதைப் பார்க்கும் கண்கள் பாக்கியமுள்ளவைகள் என்றார். சீஷர் கண்ட அந்த மகிமையைக் குறித்து, யோவான் அப்போஸ்தலன் வார்த்தை மாம்சமாகிக் கிருபையினாலும் உண்மையினாலும் நிறைந்ததாய் நம்மிடத்தில் வாசம்பண்ணிற்று, பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கேற்ற மகிமையாக அவருடைய மகிமையைக் கண்டோம் என்று கூறுகிறான். அவர்கள் அப்போது பார்த்ததை நாம் எல்லாரும் பார்க்கப்போகிறோம். நாம் கர்த்தரை அவர் இருக்கிற பிரகாரமாகவே பார்ப்போம். மகிமையையும் கனத்தையும் ஏற்றுக்கொள்ளப் பாத்திரரும் நம்மிடத்தில் பெரிதானவைகளைச் செய்தவருமாகிய அவரை நாமும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோடு கூடத் தாழவிழுந்து நித்தியமாய்ப் புகழ்ந்து தோத்திரிக்கும்போது நமது சந்தோஷமும் பூரணமாகும். இப்படிப்பட்ட மகிமையைப் பார்க்கத் தகுந்தவன் ஆர்? நாம் நம்மைச் சோதித்துப் பார்த்தால் ஒருவனும் இல்லை என்று சொல்லவேண்டும். ஏனெனில் நாம் பாவஜாதி. ஆகிலும் நம்மை

மரணபரியந்தம் சிநேகித்தவரால் நமக்குப் பரலோகம் திறந்திருக்கிறது. உன் இரட்சகரை முகமுகமாகப் பார்க்கப்போகிறதில் களிகூரு. அவர் உனக்கு அன்னியம் அல்ல. அவர் உன்னை அறுதி சிநேகத்தால் பரிசுத்த ஞானஸ்நானத்திலே விவாகத்துக்கென்று தமக்கு நியமித்துக்கொண்டார். நீயும் அவருக்கு அன்னியம் அல்ல அவர் உன்னைச் சிறுவயம் முதல் அறிந்திருக்கிறார். உன்னுடைய சகல பெலவீனங்களையும் அவர் அறிவார். நீ விழித்து ஜெபம்பண்ணுதலில் எத்தனைமுறை விழுந்தாய் என்றும் நீ அதைப்பற்றி மனங்கசந்தழுதாய் என்றும் அறிவார். நீ தினந்தோறும் அவருடைய இரத்தத்தினாலே உன்னைப் பாவங்களறச் சுத்தம்பண்ணிக்கொண்டு வந்தால் அவருடையத் திருமுகத்துக்குப் பயப்படத் தேவையில்லை.

ஜெபம். அன்புள்ள கர்த்தராகிய பராபரனே! உமது குமாரன் வரும்போது நாங்கள் அவருக்குப் பயப்படாமல் எங்கள் தலைகளை ஏறெடுத்து அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு சுத்த இருதயத்தினால் அவருக்கு ஊழியம் செய்து அவருடைய மகிமையில் பங்குடைய எங்களைத் தகுதிப்படுத்தியருளும். சுவாமி, ஆமென்.

1 மோ. 7, 1-24 அல்லது சங். 110 வாசிக்கவும்.

வருகை இரண்டாம் வாரம், திங்கள்.

பி. 316, 3. 4.

இப்போதும் பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களைத் திடப்படுத்துகிறதற்கு இயேசுகிறிஸ்து பராபரனுடைய சத்தியத்துக்காகச் சுன்னத்தின் ஊழியக்காரர் ஆனாரென்றும் புறசாதிகளோ இரக்கத்துக்காகப் பராபரனை மகிமைப்படுத்துகிறார்கள் என்றும் சொல்லுகிறேன். ரோ. 15, 8. 9.

பராபரன் தாம் தெரிந்துகொண்ட ஜனமாகிய யூதரிடத்தில் செய்ததெல்லாம் அதிசயிக்கத்தக்க செயல். அவர்கள் அவரை அடிக்கடி மறந்து, பொய்த் தேவர்களைப் பின்பற்றினாலும் அவர் அவர்களோடு பண்ணின உடன்படிக்கையை மறவாமல் அதைக் காப்பாற்றி அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினதெல்லாவற்றையும் நிறைவேற்றினார். கர்த்தர் இஸ்ரவேல் வீட்டாருக்குச் சொல்லியிருந்த நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் விழுந்துபோனதில்லை. இதுவே பராபரனுடைய உண்மை என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். ஆகிலும் புறசாதிகளையும் அவர் மறக்கமாட்டார். அவர் அவர்களுக்கு

யாதொன்றையும் வாக்களிக்கவில்லை. அவர்கள் அவரைவிட்டு அவருக்குச் செலுத்தவேண்டிய கனத்தைக் கல்லினாலும் மரத்தினாலும் செய்யப்பட்ட தங்கள் கைவேலையான விக்கிரகங்களுக்குச் செலுத்தி வந்தார்கள். என்றாலும் தமது அன்பு முழுவதையும் அவர்களுக்கும் கிடைக்கப்பண்ணி எல்லாருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டான சமாதானத்தை அவர்களுக்கும் அறிவிக்கச் சொல்லுகிறார். இதுதான் பராபரனுடைய இரக்கம் என்றும் இதற்காக மனிதர் அவரைத் தோத்திரிக்க வேண்டுமென்றும் அப்போஸ்தலன் சொல்லுகிறான். பராபரன் யூதருக்கும் புறசாதியாருக்கும் புரிந்த கிருபை, கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஏராளமாய்க் கிடைத்தது. கிருபையும் உண்மையும் திருச்சபையைத் தாங்கி நிற்கும் இரண்டு தூண்கள். பராபரன் சத்தியமுள்ளவர் ஆதலால் அவர்மேல் நம்பிக்கை வைக்கலாம். அவர் இரக்கம் உள்ளவர் ஆதலால் தைரியமற்றுப்போய் நடுநடுங்கத் தேவையில்லை. அவருடைய மன்னிப்பு நம்மை ஆற்றித்தேற்றும். இதற்காக நாம் நன்றியறிந்தவர்களாய் அவரை அறியாத அஞ்ஞானிகளும் அவருக்கு துதியன்று பாடவேண்டுமென்று ஆசைப்பட்டு நம்மால் ஆனமட்டும் அவர்களுக்கும் வழியைக் காட்டுவோமாக.

ஜெபம். உண்மையுள்ள பிதாவே! உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றி அவர்களில் உலகத்தின் இரட்சிப்பை உதிக்கப்பண்ணி எங்களையும் அதற்கு வரவழைத்தீர். ஆண்டவரே! நாங்கள் உம்முடைய சத்தத்தைக்கேட்டு விரைந்து உம்மண்டை ஓடிவர உமது ஆவியை எங்களுக்குத் தந்தருளும். சுவாமி, ஆமென்.

1 மோ. 8, 1-22 அல்லது ஏசா. 7, 1-16 வாசிக்கவும்.

வருகை இரண்டாம் வாரம், செவ்வாய்.

பி. 317, 1. 2.

இயேசு சீஷருடனே நாட்கள் வரும், அப்போது நீங்கள் மனுஷகுமாரனுடைய நாட்களில் ஒன்றைக்காண ஆசையாயிருந்தும் காணாதே போவீர்கள். உங்களுடனே, இதோ இங்கே, அதோ அங்கே என்பார்கள். ஆனால் நீங்கள் போகாமலும் பின்தொடராமலும் இருங்கள் என்றார். லூக். 17, 22. 23.

மனுஷனுடைய குமாரனுக்கு மகிமையாக நாம் கொண்டாடும் பண்டிகை நாட்கள் அநேகம் உண்டு. அவர் பிறந்தநாள், மரித்தநாள், உயிர்த்தநாள், பரத்துக்கு ஏறினநாள் இவைகள்

எல்லாம் நமக்கு நன்றாய்த்தெரியும். அவர் திரும்பிவரும் காலமோ தெரியவேதெரியாது. முழுவேதபுஸ்தகத்தையும் வாசித்துப் பார்த்தாலும் அது எந்தநாளென்று அறியமாட்டோம். சிலருக்கும் ஒன்றும்தெரியாது. அநேகம்பேர் கடைசிநாளைக் கணக்குப் பார்த்துக் கண்டுபிடிக்கலாமென்று எண்ணி மதிமயங்கிக் கணக்குப் பார்க்கத் துவக்கினார்கள். ஆனால் அவர்கள் கண்ட பலனென்ன? ஒவ்வொருவனும் தன் இரட்சிப்பைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் நடப்பிக்கவேண்டும் என்கிற கண்டிப்பான வார்த்தையைக் கவனிக்காமல்போனார்கள். அறியவேண்டிய காலத்தையோ அவர்கள் கண்டுபிடித்ததேயில்லை. மனிதர் தங்கள் ஆராயக்கூடாத காரியத்தை அறியவேண்டுமென்கிற ஆசையால் நம்முடைய பராபரனைக் கட்டாயம்பண்ணக்கூடுமோ? நமது பராபரன் ஆராய்ச்சிக்கெட்டாதவர். அவர் இரட்சிப்புக்குத் தேவையானதைத் தவிர வேறொன்றையும் வெளிப்படுத்தமாட்டார்.

கர்த்தருடைய வசனத்தில் இல்லாத விஷயங்களை மனிதர் நமக்குத் தெரிவிக்கும்போது நாம் அவர்கள் பிறகே போகாமலும் அவர்களைப் பின்தொடராமலும் இருப்பதே நமது கடமை. கர்த்தர் தாமதித்தால் அவர் பொறுமையுள்ளவர் என்று அறிக. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்றபடி கர்த்தர் உலகத்துக்குக் குணப்படுவதற்குத் தவணை கொடுத்திருக்கிறார்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருக்க உமது சீஷரை எச்சரித்ததுபோல் எங்களையும் எச்சரிக்கிறீர். நாங்கள் மோசம்போக ஒட்டாதேயும். உமது பரம வெளிச்சத்தினால் எங்களைப் பிரகாசிப்பித்து நாங்கள் பொறுமையோடே உமக்குக் காத்திருக்கவும் பொறுமையோடே நல்ல கனிகளைத் தரவும் உம்முடைய சத்தியத்தில் எங்களைப் பரிசுத்தம் ஆக்கியருளும். சுவாமி, ஆமென்.

1 மோ. 9, 1-16 அல்லது எசா. 9, 1-17 வாசிக்கவும்.

வருகை இரண்டாம் வாரம், புதன்.

பி. 317, 3.-4.

கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பிக் கம்பீரத்தோடே சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அவர்களைத் தொடர்ந்து பிடிக்கும். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். எசா. 35, 10.

இந்த மகிமையை அநுபவிக்கப்போகிற பாக்கியவான்கள் ஆர்? கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள்தான். அப்படியானால் அப்படிப்பட்டவர்கள் நாமேயன்பது திண்ணம். பிதாவிடத்தில் அநாதியாய்ப் பிறந்த மெய்யான தேவனும் கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனிதனுமாகிய இயேசுகிறிஸ்து என் கர்த்தர் என்றும், அவர் கெட்டுப்போய்ச் சபிக்கப்பட்ட என்னை எல்லாப் பாவங்களிலும் மரணத்திலும் பிசாசினுடைய வல்லமையிலுமிருந்து மீட்டு இரட்சித்துத் தமக்குச் சம்பாதித்துக்கொண்டார் என்றும் அறிக்கையிடுகிறோம். நாம் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள். துக்கமும் குறைவும் மரணமுமற்ற வாழ்வை அடைவோம் என்கிற மகிமையான நம்பிக்கையுள்ளவர்கள். என் அடிக்கடி தைரியம் அற்றுமலைக்கிறோம். எம்மவுக்குப் போகும் சீஷரைக் கர்த்தர் நோக்கித் தீர்க்கதரிசிகள் சொன்னயாவையும் விசுவாசிப்பதற்கு அவமதியும் மந்த இருதயமும் உடையவர்களே என்றார். பராபரன் நமது இரட்சிப்புக்காகச்செய்த ஆலோசனை முழுவதும் தீர்க்கதரிசிகளுடைய ஆகமங்களில் எழுதப்பட்டது. இயேசுவின் மகிமையை நமக்கு வெளிப்படுத்தும் சுவிசேஷங்களும் நமக்குண்டு. அதை எல்லாம் நாம் சிறு வயதுதுவக்கிப் படித்திருக்கிறோம். என்றாலும் இச்சீவனின் கவலைகளுக்கும் துர் இச்சைகளுக்கும் கீழ்ப்பட்டு நாம் படித்ததை எல்லாம் மறந்துவிட்டோம். இக்காரணத்தினால் நமது விசுவாசம் குறைந்துபோய்க் கர்த்தரால் மீட்கப்பட்டு நாம் இன்னம் கட்டுண்டவர்களாய்க் கிடக்கிறோம். நம்முடைய விசுவாசம் பெலப்படவேண்டுமானால் நாம் திரும்ப அதற்கு ஆகாரம் கொடுக்கவேண்டும். நாம் தேவவசனத்தைக் கவனித்து வேதபுஸ்தகத்தைக் கையில் எடுத்து அதிலே நமது சிந்தையைச் செலுத்துவோமாக. அப்போது நமது கண்கள் திறவுண்டுபோய் நாம் எவ்வளவு தனவான்கள் என்றும் இக்காலத்துப் பாடுகள் நம்மில் வெளிப்படப்போகிற மகிமைக்குப் பாத்திரமானவைகள் அல்லவென்பதையும் காண்போம்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பிதாவே! உமது மிகுந்த கிருபையினால் ஏழைப் பாவிகளாகிய எங்களையும் நித்திய மகிமையில் சேர்க்க வாக்களித்தீர். எங்கள் துன்பத்தையும் கண்ணீரையும் நீக்கப்போகிறீர். தேவரீர் சதாகாலங்களிலும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். சுவாமி, ஆமென்.

1 மோ. 9, 20-29 அல்லது எசா. 11, 1-6 வாசிக்கவும்.

வருகை இரண்டாம் வாரம், வியாழன்.

பி. 317, 5 - 6.

அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதிவாசமாயிருக்கிற புதுவானங்களையும் புதுப்பூமியையும் காத்திருக்கிறோம். ஆகையால், பிரியமானவர்களே, இவைகளுக்குக் காத்திருக்கிற நீங்கள் [illegible] கறையும் குற்றமுமற்றவர்களாய்ச் சமாதானத்திலே கண்டுபிடிக்கப்படத்தக்கதாக ஜாக்கிரதையாயிருங்கள்.

நமது இரட்சகர் மகிமையோடு வரும்போது புது வானத்தையும் புது பூமியையும் மனுஷருக்கு வாசஸ்தலமாக அருளுவார். அதைச் சுதந்தரித்துக்கொள்ளப் பெறுகிறவர்கள் ஆர்? ஜாக்கிரதையாயிருங்கள். இதுவே நமது பரம சுதந்தரத்துக்கு உதவும். பரிசுத்தம் அல்லாமல் ஒருவனும் ஆண்டவரைப் பார்க்கமாட்டான். நீதிவாசமாயிருக்கிற புதுப்பூமியின் மகிமைக்குள் இழிவும் அக்கிரமும் பொய்யும் ஒன்றும் நுழையாது. நாம் அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே [illegible] புதுப்பூமியில் புகுந்துகொள்ள அவசியம். தேவனிடமிருந்து [illegible] குறைவுபடாமலிருக்க இச்சையை அடக்கிப்போனவர்களுக்கு மாத்திரம் அதின் வாசல்கள் திறந்திருக்கும்.

ஜாக்கிரதையாயிருங்கள், பரம சுதந்தரம் வேண்டுமானால் இதுதான் அவசியம். விழித்து ஜெபித்து நம்மையே வெறுத்து, உலகத்தின் கண்ணிகளுக்குத் தப்பி, மாம்சத்தை அதின் இச்சைகளோடு சிலுவையில் அறைந்தால் விசுவாசத்தினாலும் நீதியினாலும் சோதிக்கப்பட்டுச் சமாதானத்தில் கண்டுபிடிக்கப்படுவோம். இதின்படியல்லாமல் நாம் அவருடைய வாக்குத்தத்தத்தின்படி நீதிவாசமாயிருக்கிற புதுவானத்திற்கும் புதுப்பூமிக்கும் காத்திருக்கிறோம். விசுவாசியாதவர்களோ ஒன்றுக்கும் காத்திருக்கிறதில்லை. அக்கிரமமே அவர்களுடைய கதி. உலகத்தார் நம்மைப் பரிகாசம்பண்ணினாலும் ஆண்டவர் தாமதம்செய்தாலும் நாம் பொறுமையோடு காத்திருக்கிறோம். அவர் வரவே வருவார். உண்மையுள்ள அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். நீதிமான்களுடைய நம்பிக்கை மகிழ்ச்சியாகும்.

ஜெபம். எங்கள் அன்புள்ள இரட்சகரே! எங்களுக்கு வானத்தில் ஒரு [illegible] ஆயத்தம்பண்ண அங்கே போய் எங்களை அழைத்துக்கொள்ளும்படி [illegible] உம்மைச் சந்திக்க [illegible] ராஜ்யத்தில் [illegible] ஆமென்.

1 கொ. 11, 1-9 அல்லது வெளி. 12, 1-6 வாசிக்கவும்.

வருகை இரண்டாம் வாரம், வெள்ளி.

பி. 317, 7. 8.

வானத்திலிருந்து உண்டான ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டேன். அது உரைத்ததாவது: இதோ! மனுஷரிடத்தில் பராபரனுடைய கூடாரம்; அவர்களிடத்திலே வாசமாயிருப்பார்; அவர்கள் இவருடைய ஜனங்களுமாயிருப்பார்கள். பராபரன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய பராபரனுமாயிருப்பார். எல்லாக் கண்ணீரையும் பராபரன் அவர்கள் கண்களில் இல்லாமல் துடைப்பார்; இனி மரணமும் இல்லை; இனித் துக்கமாகிலும் அலறுதலாகிலும் வருத்தமாகிலும் இல்லை; ஏனெனில் முந்தினவைகள் போய்விட்டது என்று உரைத்தது. ஆசனத்தின்மேல் உட்கார்ந்தவர்; இதோ! எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன் என்றார். அறிவிப்பு 21, 3-5.

பராபரன் தமது ஜனத்துக்கு அளித்த நன்மைகளை மோசே நினைத்து: இஸ்ரவேலே! நீ பாக்கியமான ஜனம். உன்னைப்போல இருக்கிறவர்கள் ஆர்? தேவன் இப்படிச் சமீபித்து வரப்பட்ட சனம் எங்கே என்று சொல்லுகிறார். பரமண்டலத்தில் உள்ள பராபரன் மலையில் இறங்கிவந்து, நியாயப்பிரமாணத்தின் இரண்டு கற்பலகைகளையும் மோசேக்குக் கொடுத்தார். அவர் தாமே தமது ஜனத்துக்கு முன்பாக மேகத் தூணிலும் அக்கினித் தூணிலும் நடந்துபோனார். காலம் நிறைவேறினபோது தமது நேசகுமாரன் மூலமாய் மனிதரண்டை வந்தார். பரிசுத்தாவி ஊற்றப்பட்ட நாளில் கிறிஸ்துவை விசுவாசித்தவர்களின் இருதயத்தில் பிரவேசம்பண்ணினார்.

ஆயினும் குறிக்கப்பட்ட இலக்குக்கு நாம் இன்னம் வரவில்லை. நாம் எப்படி இருப்பாம் என்று இன்னும் வெளியாகவில்லை; நமது பழைய துர்ச்சுபாவத்தில் அதிகம் மீந்திருக்கிறது. இருதயத்தைப் பாரப்படுத்தும் கவலைகள் இன்னம் உண்டு. மரணத்திற்கு இடமான பாழானசரீரம் நம்மை ஒட்டிக்கொண்டிருக்கிறது. இவ்வெல்லாக் குறைவுகளும் துன்பங்களும் ஒழிந்துபோகவேண்டும். இதோ எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன் என்று ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவர் கூறுகிறார். அவர் உலகத்தின் சகல பாஷைக்காரரிலிருந்தும் ஒரு சனத்தைக் கூட்டிச்சேர்த்துத் தமக்கு ஒரு சபையைத் தெரிந்துகொண்டு அதைப் புதிதாக்குவார். இதுதான் மனிதரிடத்தில் பராபரனுடைய கூடாரம். இதுதான் பரம எருசலேம். சரீரத்தையும் ஆத்துமத்தையும் வருத்தும் உபத்திரவங்களும் ஆதாமால் உண்டான சேதத்தின் பெருக்கமும் ஒழிந்துபோம்.

ஜெபம். மகிமையின் இராசாவே! நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான் என்று தேவரீர் சொன்னீரே.

ஆண்டவரே! நாங்களும் உமக்கு ஊழியஞ்செய்ய [illegible]ராயிருக்கிறோ; நாங்களும் இந்த உலகத்தில் உபத்திரவப்பட்டாலும் [illegible] எருசலேமில சேர ஆசைப்படுகிறோம் எங்களை மீட்கத் தீவிரமாய்ச் சே[illegible]வீராக. சுவாமி, ஆமேன்.

லூக். 1, 1-17 அல்லது எசா. 26, 1-21 வாசிக்கவும்.

வருகை இரண்டாம் வாரம், சனி

பி. 91, 3. 4.

இரண்டாம் கற்பனையாவது: உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

இதற்கர்த்தம் என்ன? நாம் பராபரனுக்குப் பயந்து அவரை நேசித்துக்கொண்டு அவருடைய நாமத்தினாலே பொய்யாணையிடாமலும் மந்திர தந்திரம் செய்யாமலும் தப்பறை சொல்லாமலும் சபி பண்ணாமலும் சகல இக்கட்டிலேயும் அந்த நாமத்தை வணங்கி வேண்டிக்கொண்டு புகழ்ந்து இஸ்தோத்திரம் பண்ணவேண்டும்.

பராபரன் தமது நாமத்தை நமக்குத் தெரியப்பண்ணினது பெரிய உபகாரம். நமக்கு எல்லா நன்மைகளையும் அருளுகிறவர் இன்னார் என்று நாம் அறியாமற்போனால் அஞ்ஞானிகளுக்கும் நமக்கும் என்ன பேதம்?

அவர் பேர் கர்த்தர். நிச்சயம் அவருடையது. அவர் தமது ஆஞ்ஞையை வே[illegible]வனும் கைப்பற்ற விடார். அவர் பேர் பராபரன். ஆகலால் அவர்பேரில் பரிபூரண நம்பிக்கையை வைக்கலாம். அவர் பேர் பிதா. நம்முடைய பலவீனங்களைப் பொறுமையோடு தாங்குவார். அவருடைய நாமத்தையும் தன்மையையும் அறிந்த நாம் தகுந்தபடி அவரோடு பேசலாம். ஜெபம் பண்ணுங்கள் என்று நமக்குக் கட்டளையிட்டு நெருக்கப்படும் நாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு; அப்போது உன்னை விடுவிப்போம், அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக் கடவாய் என்று அவர் வாக்களித்தபடி நாம் அவர் பேரைச் சொல்லிக் கூப்பிடலாம்.

ஆகையால் பராபரனுடைய நாமமானது அவர் தய[illegible]ய் நம்முடைய நம்பிக்கைக்கு ஒப்புவித்த பரிசுத்த ஸ்தலம். நாம் அதைப் பரிசுத்தமாக எண்ணி நெருக்கத்தில் வணங்கி வேண்டிக்கொண்டு அவருடைய ஒத்தாசையைப் பெற்றவுடனே அதைப் புகழ்ந்து ஸ்தோத்திரிப்போமாக. ஆனால் நமக்கும் பிறருக்கும் பொல்லாப்பை விரும்பி அவருடைய நாமத்தினால் தூஷணிக்க

வேண்டாம். இப்படிச் செய்வது கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய பயபக்திக்கும் பிறத்தியானுக்குச் செலுத்தவேண்டிய அன்புக்கும் ஒவ்வாது. அதிகாரிகள் நம்மைக் கேட்டாலன்றி நாம் அவருடைய நாமத்தினால் ஆணையிடவும் கூடாது. அவருடைய நாமத்தினால் மந்திரதந்திரம் செய்யவும் கர்த்தருடைய நாமத்தை நம்புகிற ஒருவன் கிறிஸ்தவனுக்கடாத பில்லிசூனியம் பண்ணவும் தப்பறை சொல்லவும் சபி பண்ணவும் கூடாது. கள்ளத் தீர்க்கதரிசிகளும் கள்ளப் போதகரும் இப்படிச் செய்வார்கள். தங்கள் வாயில் கர்த்தருடைய வசனத்தை வைத்துத் தங்கள் இருதயத்தில் அவருக்குத் தூரமாயிருக்கிறவர்களும் தேவபக்தியின் வேஷத்தைப் பூண்டும் அதன் வல்லமையை மறுக்கிறவர்களுமாகிய மாயக்காரரும் அப்படிச் செய்வார்கள்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! நாங்கள் உம்மை அறிவதற்கு உம்முடைய பரிசுத்த நாமத்தை எங்களுக்கு வெளிப்படுத்தி நாங்கள் அதைக் கொண்டு எல்லா இக்கட்டிலேயும் உம்மை நோக்கிக் கூப்பிடவேண்டும் என[illegible]ங்கள் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உம்மை ஒருபோதும் மறக்கா[illegible] உம்மை எப்போதும் தோத்திரிக்க எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும். சுவாமி, ஆமேன்.

லூக். 1, 18-25 அல்லது எசாயா 28, 14-29 வாசிக்கவும்.

வருகை மூன்றாம் வாரம், ஞாயிறு.

பி. 307, 1. 2.

காவலிலிருக்கிற யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் கேட்டுத் தன் சீஷர்களில் இரண்டு பேரை அனுப்பி, வருகிறவர் நீர்தானோ, அல்லது வேறொருவருக்குக் காத்திருப்போமோ என்று அவரைக் கேட்கச் சொன்னான். இயேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: நீங்கள் போய்க் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானுக்கு அறிவியுங்கள் என்றார். மத். 11, 2-4.

எல்லாத் தீர்க்கதரிசிகளையும் பார்க்கப் பெரியவனாகிய யோவான் ஸ்நானகனும் சந்தேகத்திலிருந்து நிச்சயத்திற்கும் இருளிலிருந்து வெளிச்சத்துக்கும் வரவேண்டியது. ஒவ்வொரு [illegible]வனிடத்திலும் நான் அநுசரித்திருக்கும் மார்க்கம் உண்மையோ என்று சந்தேகத்தோடு கேட்கும் கேள்விகள் எழும்பும் கலக்கமான வேளைகள் உண்டு. அப்படிப்பட்ட இருளிலே என்ன செய்யலாம்? அதை அற்பமாக எண்ணிக் கவனிக்காமல

போகலாகாது. யோவானைப் பார். அவனைப்போல் இயேசுவண்டை சேதி அனுப்பு. ஜெபத்தின் மூலமாய் உன் ஐயத்தை அவருக்கு அறிக்கையிடு. உன்னை வாதிக்கும் சந்தேகத்தையும் உன் இருதயத்தின் ஏக்கங்களையும் அவருக்குக் காட்டு. அவர் எல்லாக் கேள்விகளுக்கும் உத்தரவு சொல்வார். அவர் உன் பெலவீனத்தைப் பார்த்து, நீ காண்கிறதென்ன கேட்கிறதென்ன என்று வினவுவார். அவருடைய வசனத்தின் பெலத்தை உணர்ந்து கிருபையின் இராச்சியத்தைக் காணக்கூடியவன் எவனோ அவன் வேறொருவருக்குக் காத்திருக்கத் தேவையில்லை என்று சொல்லுவான். [illegible] அவரது கிருபையை ஞாபகப்படுத்திக்கொள். நீ குருடனும் செவிடனுமாயிருந்தாய்; கிறிஸ்து உன் கண்ணையும் காதையும் திறந்தார் என்று உணருவாய். அவருடைய ஆறுதலான வார்த்தை உன்னைச் செம்மையாக்கினது. பரிதாபமாய்க் கிடந்து வழிதப்பின ஏழைப் பாவியாயிருந்தாய்; அவருடைய சுவிசேஷம் உனக்கு நித்திய ஜீவனை அளித்தது. போராட்டம் ஆசீர்வாதமாய் மாறிப்போம். போராட்டத்தில் பொறுமையாயிருப்பதும் கர்த்தருடைய ஆதரவைக் குறித்துக் காத்திருப்பதும் நல்லது.

ஜெபம். எங்கள் அன்புள்ள இரட்சகரே! உம்முடைய தாசனாகிய யோவானை எப்படித் திடப்படுத்தினீரோ அப்படி எங்களையும் திடப்படுத்தும். எங்களுக்கும் உமது மகிமையைக் காண்பித்தருளும். எங்கள் விசுவாசம் அவியாவண்ணம் எங்களைக் காத்தருளும். சுவாமி, ஆமென்.

லூக். 1. 26-38 அல்லது சங். [illegible] வாசிக்கவும்.

வருகை மூன்றாம் வாரம், திங்கள்.

பி. 362.

1 கொரி. 4, 1. 2. எங்களை அவனவன் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரரும் பராபரனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரருமாக எண்ணிக்கொள்ளக் கடவன். அப்புறம் ஒருவன் உண்மையுள்ளவன் என்று கண்டுபிடிக்கப்படுவதே உக்கிராணக்காரரிடத்தில் தேடப்படுகிற காரியமாயிருக்கிறது.

தேவவசனத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரும் பராபரனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரருமாயிருக்கிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் [illegible]த்தி

யோகத்திலும் குடும்பத்திலும் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யக் கடமைப்பட்டவன். நீங்கள் வார்த்தையினாலாகிலும் கிரியையினாலாகிலும் என்னசெய்தாலும் அதை எல்லாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாய்ப் பிதாவாகிய பராபரனை ஸ்தோத்திரியுங்கள் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதே நமக்குக் கனம்.

ஒரு பெரிய மனுஷன் தனக்கு ஊழியம் செய்ய நம்மை வைத்தால் அதை எவ்வளவோ மேன்மையாக மதிப்போம். அவன் தன் மனதிலும் வீட்டிலும் உள்ள இரகசியங்களை நம்மை நம்பித் தெரிவித்து நம்மைத் தன் வீட்டுக்கு உக்கிராணக்காரனாக்கினால் அது நமக்கு எவ்வளவு கனம். ஏழைப்பாவிகளாகிய நம்மைப் பராபரன் தமது இரகசியங்களின் உக்கிராணக்காரராக அழைத்தார். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு லோகத்திலே வந்தார் என்பது உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமான வார்த்தை என்பதில் அந்த இரகசியமெல்லாம் அடங்கியிருக்கிறது. எல்லாருக்கு முன்பாகவும் நாம் பராபரனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரராக விளங்கவேண்டுமானால் இந்த வார்த்தை நமது மனதில் ஊன்றி உயிர் பெறவேண்டும்.

நமது பரம எஜமான் நம்மை உண்மையுள்ளவர்கள் என்று கண்டுபிடிப்பது அவசியம். உக்கிராணக்காரனிடத்தில் எஜமான் தேடுவது உண்மையேயன்றி வேறொன்றுமல்ல. அவர் நம்மிடத்தில் தேடுவது வரம் திறமை முதலியவையல்ல. உண்மையை மாத்திரம் தேடுகிறார். உண்மையுள்ள புருஷன், உண்மையுள்ள பெண்சாதி, உண்மையுள்ள சிநேகிதன், உண்மையுள்ள வேலையாள் ஆகிய இவர்களே தேவனுக்குகந்த பொக்கிஷம்.

ஜெபம். பரம பிதாவே! உம்முடைய இராச்சியத்தில் உமக்கு ஊழியம் செய்வோர் உண்மையுள்ளவராய் விளங்க விரும்புகிறீர். எங்களை உம்முடைய இரகசியங்களுக்கு உக்கிராணக்காரராகவும் வைத்தீர். நாங்கள் உமக்கு ஊழியம் செய்ய அபாத்திரர். அன்புள்ள பிதாவே! நாங்கள் உம்முடைய அளவற்ற இந்தக் கிருபையை உணர்ந்துகொண்டு எங்கள் முழுமனதோடும் உமதூழியத்துக்குத் தத்தம் செய்ய எங்களுக்கு உத்தாசை பண்ணியருளும். சுவாமி, ஆமென்.

. 1, 39-56 அல்லது ஏசா. 35, 1-1[illegible] வாசிக்கவும்.

வருகை மூன்றாம் வாரம், செவ்வாய்.

பி. 3, 3. 4.

நீயோ! பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுவாய்; அதேனெனில் கர்த்தருடைய வழிகளை ஆயத்தம் பண்ணவும் நமது பராபரனுடைய உருக்கமான இரக்கங்களினாலே அவருடைய சனத்துக்கு அவர்கள் பாவங்களின் மன்னிப்பாகிய இரட்சிப்பின் அறிவைக் கொடுக்கவும் நீ அவருடைய முகத்துக்கு முன்னாகப் போவாய். அந்த இரக்கங்களினாலே உன்னதத்திலிருந்து உதயமானது அந்தகாரத்திலும் மரண நிழலிலும் உட்கார்ந்தவர்களுக்குப் பிரகாசமாகவும் நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியில் நடத்தவும் நம்மைக் கண்டு சந்தித்தது என்றான். லூக். 1, 76-79.

இஸ்ரயேலின் பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். அவர் தம்முடைய ஜனத்தின்மேல் கருணை கூர்ந்து அதற்கு மீட்பை உண்டாக்கினார். உன்னத தேவன் நம்மைச் சந்திக்க வருகிறார் என்று சகரியாவைப் போல நாமும் [illegible]கூர்ந்து அவரை ஸ்தோத்திரிப்போமாக. நம்மை மீட்க ஒரு இரட்சகர் வேண்டும். பிதாவுக்கு ஒரேபேறானவராகிய இவர் உயர வானத்திலிருந்து வந்து பாவத்தால் நிர்ப்பந்தமு[illegible]ம் நம்மைச் சந்தித்தார். இவரே இருளிலும் மரண நிழலிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு உதித்த நீதியின் சூரியன். இவரது வெளிச்சத்தில் தான் நமது பாவ நிர்ப்பந்தத்தின் கொடுமையை அறிந்துகொள்ளுகிறோம். இந்தக் குமாரனைக்கொண்டு பிதாவானவர் கெட்டுப்போனவர்களைப் பக்ஷமாய்க் கூட்டிச் சேர்க்கிறார். கட்டுண்ட நமது ஜனத்தை விடுதலையாக்குகிறார். உன்னையுமவர் சந்தித்துப் பிரகாசிப்பித்து உன் கால்களையும் சமாதான வழியில் நடத்துவார். உன் வீட்டையும் உன் இருதயத்தையும் அவருக்கு ஆயத்தம் பண்ணு. அவர் அங்கிருக்கும் இருளைத் துரத்தி அதில் ஒழியாத வெளிச்சமாய்த் துலங்குவார். அவர் அவியாத தீபத்தை உன் கையில் கொடுப்பார். அவர் சொல்லைக் கேள். அவர் வார்த்தையை அசட்டை பண்ணாதே. உன் இருதயத்தை அவர் சமாதானத்தாலும் சந்தோஷத்தாலும் நிரப்புவார். நித்திய பிதா அனுப்புகிற இப்பிள்ளையைச் சந்தோஷமாய் வரவேற்கப் பேராவலோடு காத்திரு.

ஜெபம். நீதியின் சூரியனாக உதித்த இரக்ஷகரே! எங்கள் இருதயங்களிலும் உதித்துப் பிரகாசியும். அதில் உள்ள அந்தகாரத்தை எல்லாம் அகற்றி எங்களைச் சமாதான வழியில் நடத்தியருளும். உம்மை இன்னம் அறியாதவர்களையும் சந்தித்து அவர்களும் ஒரே மந்தையாகும்படி அருள் புரியும். சுவாமி, ஆமேன்.

லூக். 1, 57-66 அல்லது எசா. 40, 1-17 வாசிக்கவும்.

வருகை மூன்றாம் வாரம், புதன்.

பி. 3, 5. 6.

வாசல்களே! மகிமையின் இராசா உட்பிரவேசிப்பதற்கு உங்கள் நிலைகளை உயர்த்துங்கள். அநாதிவாசல்களே! உயருங்கள். ஆர் இந்த மகிமையின் இராசா? அவர் சேனைகளுடைய கர்த்தரானவர். அவரே மகிமையின் இராசா. சங். 24, 9. 10.

இந்த வார்த்தைகள் இரட்சகரின் வருகையை நமக்கு முன்னறிவிக்கின்றன. அவர் சீக்கிரம் பிரவேசம்பண்ணுவார். ஆதலால் வாசல்களை விரிவாக்குங்கள். இருக்கிற வாசல்கள் தாழ்வாயும் நெருக்கமாயுமிருக்கின்றன. மகிமையுள்ள இராசாவுக்கு வழிவிடுங்கள். உங்கள் இருதயங்களை அவருக்குத் திறவுங்கள். இம்மட்டும் நமது இருதயங்கள் இவ்வுலகத்தின் நிலையற்ற வாழ்வுக்கும் சிற்றின்பங்களுக்கும், ஊண், உடைமுதலியவற்றைப் பற்றிய கவலைக்கும் இடமாயிருந்தன. ஆத்துமாவே! உன் இருதயத்தின் வாசலை உயர்த்து. நீ ஏன் இன்னம் உலகத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கிறாய். உன் இருதய வாசலை விரிவாக்கு. தற்சிநேகத்தை வேரறக்களைந்து உன்னெஞ்சில் பரம சிநேகத்திற்கு இடங்கொடு. எல்லாவற்றையும் பார்க்கப் பராபரனையும் உன்னைப்போல் உனக்கடுத்தவனையும் நேசிக்கக் கற்றுக்கொள். பயத்தினாலும் துக்கத்தினாலும் உன் இருதயம் சுருங்கி ஒடுங்கவிடாதே. அதை உயர்த்தி விரிவாக்கு. இதோ! உன்னிடம் வருகிற உன் ஆண்டவர் உனக்குப்பூரண ஆறுதலைக்கொண்டுவருகிறார். இனி அவரை நீர் ஆரென்று கேளாதே. அவர் சேனைகளுடைய கர்த்தர் என்றும் மகிமையுள்ள இராசா என்றும் யுத்தத்தில் வல்ல பராக்கிரமசாலியென்றும் அறிந்துகொள். அவர் பாவம், மரணம், நரகம் என்றவைகளை வெல்லும்படிக்குக் காண்பித்த அவருடைய பராக்கிரமம் உனக்குத்தெரியுமே. இவரது சகாயத்தால் நீயும் உன் பிராணசத்துருவாகிய பிசாசை மேற்கொள்ளலாம்.

ஜெபம். மகிமையுள்ள ஆண்டவரே! எங்கள் இருதயத்தை உமக்குத் திறக்கிறோம். நீர் அதில் பிரவேசிக்க உம்மை வருந்தி அழைக்கிறோம். நீர் எங்கள் சத்தங்கேட்டு அசுத்தம் நிறைந்த எங்கள் உள்ளத்தைப் பார்த்து உமது ஆவியால் அதை உமக்கு ஏற்ற வாசஸ்தலமாக்கும். எங்கள் எல்லாச் சத்துருக்களையும் வென்ற பராக்கிரமசாலியே! நாங்களும் உமது வெற்றியால் மகிழ்ச்சி அடைவதற்குத் துணைபுரியும் சுவாமி, ஆமேன்.

லூக்கா 1, 67-30 அல்லது எசாயா 40, 18-31 வாசிக்கவும்.

வருகை மூன்றும் வாரம், வியாழன்.

லூ. 3, 7-9.

பராபரனுடைய இராச்சியம் எப்போது வருமென்றும் பரிசேயர் அவரைக்கேட்டபோது அவர் பிரத்தியுத்தாரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: பராபரனுடைய இராச்சியங் கண்ணோக்காண வாராது. இதோ, இங்கே; அதோ, அங்கே என்று சொல்லுவதும் இல்லை. ஏனெனில் இதோ, பராபரனுடைய இராச்சியம் உங்களுக்குள்ளே இருக்கிறது என்றார்.

உண்மையான கிறிஸ்தவன் தன் வாழ்நாளை எல்லாம் கிறிஸ்து தன்னிடம் வரும் நாளாக எண்ணுவான். மேலும் அவனுக்கு இவ்வுலகில் சஞ்சரிக்கும் காலம் மறுமையை நோக்கிப் பிரயாணஞ்செய்யுங்காலமாயிருப்பதால் இக்காலத்தில் அவன் தன்னைக் கிறிஸ்துபெருமானின் வருகைக்கு மென்மேலும் ஆயத்தம் பண்ணுவதையே முக்கிய காரியமாக மதிப்பான். ஆதலால் கர்த்தரின் சேவுகரென்னப்பட்ட நாமும் இக்காலத்தில் ஆண்டவரே, நான் உம்மை ஏற்றதான வணக்கத்தோடே சந்திக்கச்செய்வதென்ன என்று கேட்பது தகுதி. உமது இராச்சியம் வருவதாக என்கிற மன்றாட்டு இக்காலத்துக்கு மிகவும் ஏற்றது. தேவ இராச்சியம் வந்திருக்கிறதென்பது நமக்குப் பெருத்த ஆறுதல். சகல கிர்ப்பத்தமும் அநியாயமும் நிறைந்த இவ்வுலகில் திருவசனத்தின் பிரசங்கத்தால் உண்டாகும் சொற்ப பலனையும் சித்திப் பேற்றையும் நாம் காணுங்கால், தேவ இராச்சியத்தைக் குறித்து அருளப்பட்ட மேன்மையான வாக்குத்தத்தங்கள் உண்மையோவென்று நாம் ஐயமுற ஏதுவாயிருக்கிறது. இது இப்படி இருக்குமென்று அறிந்தே ஆண்டவர் தேவ இராச்சியம் கண்ணோக்காண வாராதென்கிறார்.

நீ உன் உள்ளத்தை உற்று நோக்கித் தேவ இராச்சியத்தில் எனக்கு இருக்கவேண்டிய பாக்கியமும், அமைதியும், சமாதானமும் இல்லையேயென்று கலங்காதே. நீ இவ்வுலகில் இருக்குமளவும் புறம்பே போராட்டமிருக்கும். உன் உள்ளத்திலோ தேவ சமாதானம் ஆளும். பிறர் மெச்ச நல்ல கிரியைகளைச் செய்வதும் வெளிக்குக் கிறிஸ்தவனைக் காட்டிக்கொள்வதும் போதுமென்றிருக்கப்படாது. நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினால் அடையும் சந்தோஷமுமுள்ள தேவ இராச்சியம் நமக்குள்ளும் நம்முடைய வீட்டிலும் நிலைபெறுமற்போனால் கிறிஸ்தவ ஆசார அனுஷ்டானங்களால் பயனொன்றுமில்லை. பராபரனுடைய இராச்சியம் இதோ இங்கே, அதோ அங்கே என்று சொல்லுவார்களேயானால் நீங்கள் அதைக் கேளாமலும் சொல்லோ

ரைப் பின்தொடராமலுமிருங்கள். அந்த இராச்சியம் ஆவிக்குரியதென்றறியுங்கள். குணப்பட்டுச் சுவிசேஷத்தை விசுவாசிப்பவனுடைய உள்ளத்திலன்றி வேறெங்கும் தேவ இராச்சியமில்லை.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது இராச்சியம் இவ்வுலகத்ததல்ல. ஆதலால் அதன் இரகசியங்களை அறிய எங்களால் முடியாது. தேவரீர் உமது பரிசுத்த ஆவியைக் கொண்டு எங்களுக்கு அதன் இரகசியங்களை அறியும் புத்தியையும் அதில் பிழைக்கப் பெலத்தையும் தந்தருளும். சுவாமி, ஆமென்.

மத். 3, 1-12 அல்லது ஏசா. 43, 8-20 வாசிக்கவும்.

வருகை மூன்றும் வாரம், வெள்ளி.

பி. 4, 1.2.

இதோ! வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என்னுடைய சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால் அவனண்டை நாம் உட்பிரவேசித்து அவனுடனே இராப்போசனம்பண்ணுவோம். அவன் என்னோடு இராப்போசனம் பண்ணுவான். வெளி. 3, 20.

உன் இருதயக் கதவைத்திறந்து வசிக்க விரும்புகிற உன் ஆண்டவர் உன்னை எவ்வளவு அருமையாய் வாழ்த்துகிறார் பார். இதோ வாசற்படியில் நின்றுகொண்டு ஆண்டவர்தாமே முதலில் தம்மைக் காணவந்திருப்பதாய்த் தெரிவிக்கிறார். அவருடைய சத்தம் தூங்கிக் கிடக்கும் நமது ஆத்துமங்களை எழுப்பிவிடும் இன்பமான சத்தம். ஆதலால் எழுந்திருந்து உன் கண்களை ஏறெடுத்து மகிமையுள்ள ஆண்டவர் உன்னிடம் வந்திருப்பதைக் கவனி. வாசற்படியிலே நிற்கிறேன் என்றுசொல்லுகிறவர் இராசாதி இராசா அல்லவா? பூமியிலுள்ள சத்துருக்களெல்லாம் ஒருங்குசேர்ந்தாலும் எதிர்க்க ஏலாதவல்லமையும் மகிமையுமுள்ளவர் இங்கே பிச்சைக்காரனைப்போல், இருதயவாசலுக்கு முன் நிற்கிறார். நமது ஆண்டவரை இக்கோலமாகக் காண்கிற நமது மனம் உருகவேண்டாமா? இவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் பெற்றவர். நம்மைக் கிருபையுடனே காப்பாற்றுகிறவர், நமது மீட்பர். உலகத்தை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதி அவர்தான். இப்படிப்பட்டவர் நமது இருதயவாசலுக்குமுன் நிற்கிறார். சில சமயங்களில் நாம் அவரை வெகுநேரம் காக்க வைத்தும் அவர் அளவில்லாப் பொறுமையோடு நிற்கிறார். நாம் சீக்கிரம் திறவாமல் இருப்பதைக்கண்டும் போய்விடாமல் அங்கே

மையுள்ளவனே இப்பண்டிகைக்கு ஆயத்தப்பட்டவன். ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடி யோவான் ஸ்நானகன் தேவ குமாரனுடைய வழியைச் சரிப்படுத்துகிறவன். தீர்க்கதரிசி அவனைப் பிரசங்கி என்று சொல்லாமல் சத்தம் என்று சொல்லுகிறான். வார்த்தை என்னப்பட்டவர் அவனைத் தமது வாயாக்கிக்கொண்டபடியால் அவன் சத்தமேயன்றி வேறொன்றுமில்லை.

இத்தூதன் நமக்கு இரண்டு கடமைகளை அறிவிக்கிறான். கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுங்களென்பது அவன் கூறுகிற முதல் கடமை. அவன் தன்னண்டை வந்தவர்களுக்குக் கிறிஸ்துவைக் காட்டுகிறான். அவர் பெருகவும் தானே சிறுகவும் வேண்டுமென்கிறான். இப்பண்டிகை காலத்தில் நன்கொடையினால் ஒருவரோடொருவர் திருப்தியாகிறதுமட்டும் போதாது. பிதா, இயேசு பிள்ளையைத் தந்த அருமையான அன்பை இருதயத்தில் பதிப்பதே முக்கியம். பெற்றோரே, நீங்கள் அறியவேண்டிய சங்கதி ஒன்றுண்டு. உங்கள் நேசம் உங்கள் பிள்ளைகளை இரட்சிக்காது. [illegible] அன்பே அவர்களை இரட்சிக்கும். அவருடைய அன்பு நம்முடைய குடும்பங்களில் ஐக்கியத்தை உண்டுபண்ணக் கூடியது. ஐக்கியமில்லாத குடும்பத்தில் அவருக்கு வழியைச் சரிப்படுத்துவதெப்படி? உன் ஜெபத்தினாலும் வார்த்தையினாலும் சிறந்த முன்மாதிரியினாலும் கர்த்தருக்கு வழியை ஆயத்தம்பண்ணு.

யோவான் நமக்குச் சொல்லிக்கொடுக்கும் இரண்டாம் பாடம் என்னவென்றால் கர்த்தருடைய கிருபையால் வழி திறவுண்டு நம்முடையவர்கள் வசனத்தை ஏற்றுக்கொள்வார்களானால் நாம் மனத்தாழ்மையோடும் நன்றியறிதலோடும் தலைவணங்கி நிற்கவேண்டியதுதான். நாம் வெறும் சத்தம். பிரசங்கிக்கிறவரோ கர்த்தர். அவருடைய ஜீவவசனம் எங்கே படுகிறதோ அங்கே உயிர் உண்டாகும்.

ஜெபம். எங்கள் அன்புள்ள மேசியாவே! எல்லாத் தீர்க்கதரிசிகளும் உமது வருகையை முன்னறிவித்து உமக்கு வழியை ஆயத்தம் பண்ணியும் உமது சொந்த ஜனமாகிய இஸ்ரவேலர் உம்மை அறியாமல் போனார்கள். ஆ, கர்த்தாவே, நாங்கள் எங்கள் இருதயத்தைக் கடினமாக்காமல் எங்களைக் காக்கும் உமது தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளை நம்பி நீரே மெய்யான மேசியாவென்றும் உம்மையன்றி உலகத்திற்கு இரட்சகர் இல்லையென்றும் விசுவாசிக்க எங்கள் இருதயத்தைத் திடப்படுத்தியருளும். சுவாமி, ஆமென்.

மத். 3, 13-17 அல்லது சங். 18 வாசிக்கவும்.

வருகை நாலாம் வாரம், திங்கள்.

பி. 4, 3-5.

கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிருங்கள் மறுபடியும் சொல்லுகிறேன், சந்தோஷமாயிருங்கள், உங்கள் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருக்கக் கடவது. கர்த்தர் சமீபமாயிருக்கிறார். பிலிப். 4, 4. 5.

கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் எப்போதும் சமீபமாயிருக்கிறார். ஆனால் கிறிஸ்து பிறப்பின் பண்டிகை சமீபிக்கும் இக்காலத்தில் அவருடைய கிருபையின் சந்தோஷத்தை அதிகமாயுணர்கிறோம். வருஷந்தோறும் இக்காலத்தில் பற்பல சந்தோஷக் குறிகளைக் கிறிஸ்தவர்களிடம் காணலாம். ஆகிலும் அவையெல்லாம் கர்த்தருக்குப் பிரியமான சந்தோஷமாயிரா. அவருக்கு ஏற்காததும் நமக்குச் சேதமுண்டுபண்ணுவதுமான சந்தோஷங்களுண்டு. லௌகிக சந்தோஷமெல்லாம் நிலையற்றது. கர்த்தர் உண்டுபண்ணும் சந்தோஷமோ என்றும் அழியாமல் ஒழியாமல் இருந்து இருதயத்தை எப்போதும் பூரிப்பிக்கும் தன்மையுள்ளது.

எப்போதும் சந்தோஷமாயிருங்கள். பொருள் நஷ்டம் வந்தாலும், எண்ணிய எண்ணம் கைகூடாவிட்டாலும், அருமையானவர்களை இழந்து தவித்துக் கலங்க நேரிட்டாலும் சந்தோஷமாயிருங்கள். இப்படிச் சந்தோஷமாயிருப்பது கூடியதா? இயேசு கிறிஸ்து தனக்குச் சொந்தம் என்றும் அவரிடத்திலிருந்து தனக்கு வருவதெல்லாம் நன்மையேயன்றித் தீமையல்ல என்றறிந்தவனெல்லாம் எப்போதும் சந்தோஷமாயிருப்பான். நாம் கர்த்தரை உறுதியாய் நம்பாவிட்டால் நமது உற்சாகம் குன்றி வீண்கவலைகளில் மூழ்கி ஆறுதலின்றிச் சிறகொடிந்த பக்ஷியைப் போல் தரையில் வீழ்ந்து கிடப்போம்.

சந்தோஷம் எங்கேயோ அங்கே சந்தோஷ வெளிப்பாடும் உண்டு. அகத்தின் களிப்பு முகத்தில் விளங்கும். ஒரு கிறிஸ்தவன் எப்போதும் பிறரிடத்தில் கோப முகத்தை அல்லது துக்க முகத்தைக் காட்டாமல் தன் இருதய சமாதானத்தை முகமலர்ச்சியால் வெளிப்படுத்துவான். அவனுடைய சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரியவரும். பராபரனுடைய பக்ஷமும் தயவும் வெளியான கிறிஸ்து பிறந்த பண்டிகையை ஆசரிக்கிற நாமும் நம்முடைய சாந்தகுணத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணுவோமாக.

ஜெபம்: ஆண்டவரே! உமது நேசகுமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய் எங்களுக்கு நிலையுள்ள சந்தோஷத்தைத் தந்தருளும். இவ்வு

யிலே எங்களுக்கு நேரிடும் இன்பத்திலும் துன்பத்திலும் வாழ்விலும் தாழ்விலும் நாங்கள் உம்முடைய சந்தோஷத்தில் நிலைத்திருக்க எங்களுக்குக் கிருபை செய்தருளும். சுவாமி, ஆமேன்.

மத். 11, 1-9 அல்லது எசா. 45, 1-25 வாசிக்கவும்.

வருகை நாலாம் வாரம், செவ்வாய்.

பி. 5, 1. 2.

அந்த நாளிலே யோவான்ஸ்நானகன் வந்து யூதேயாவின் வனாந்தரத்திலே பிரசங்கம்பண்ணி, குணப்படுங்கள் ஏனென்றால் வானஇராச்சியம் சமீபமாய்ச் சேர்ந்தது என்றான். மத். 3, 1. 2.

கிறிஸ்து பிறப்பின் பண்டிகைக்கு முந்தின நாலு வாரங்களிலும் இருதயக்கேடியைச் சுத்திகரித்து கர்த்தருக்கு வழியைச் சரிப்படுத்துங்கள் என்னும் சத்தம் தொனித்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சத்தத்தின் கருத்து இன்றையத்தின வாக்கியத்தில் தெளிவாய்க் கூறப்படுகிறது. குணப்படுங்கள் என்பதே யோவான் செய்த பிரசங்கத்தின் பொருள். குணப்படுதல் என்பது மனம்மாறுதல், கிறிஸ்துவைப் பிடித்துக்கொள்ள மனமுள்ளவன் தன் இருதயத்தில் மாறுதல் அடையவேண்டும். அவன் அவருக்குத் தன் இருதயத்தைத் சுத்தம்பண்ணவேண்டும். அப்போது அவனில் உலக சிந்தைபோய்ப் பரமசிந்தை உண்டாகும். அகந்தை தாழ்மையாக மாறும். பகையாண்டவிடத்தில் அன்பு ஆளும். காமி கற்புள்ளவனாவான்; ஓர் கிறிஸ்தவனது ஜீவியம் இவ்வாறு குணப்படும் ஜீவியமாகும். தான் செய்தவைகளை நினைத்து உணர்ந்து மனஸ்தாபப்பட்டு அவைகளை விட்டகற்ற மனமில்லாதவன் குணப்படமுடியாது. ஆகையால் நாம் பழைய மனிதனைக் களைந்துபோட்டுப் புதிய மனிதனைத் தரித்துக்கொள்வோமாக. வான இராச்சியம் சமீபமாய்ச் சேர்ந்தது. நமது இரட்சகர் பரம நன்மைகளோடு சமீபத்தில் இருக்கிறார். அவர் தமது ஆச்சரியமான கிருபையை நமக்கு அருளுவதாகவும் சொல்லுகிறார். ஆதலால் நாம் நம்மை அவருக்கு மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுப்போமாக. உனக்கு அருமையான பெற்றார், இனத்தார், உற்றார் முதலியோர் நன்மைகள் அநேகத்தை உனக்குச் செய்திருக்கக்கூடும். ஆனால் உன் இருதயத்திற்குச் சமாதானமும் சந்தோஷமும் நிறைந்த பரம வாழ்வைக்கொண்டு வருபவர் இயேசு ஒருவரே. ஆகையால் நீ எல்லாரையும்பார்க்க அவரைச் சிநேகி. அவர் சாயலாக மறுரூபமாகு. அப்போது அவர் தமது

அன்பின் மிகுதியை உன் உள்ளத்தில் ஊற்றி உன் பாவத்தை ஜெயித்து உனக்கு நித்திய ஜீவனைத் தருவார்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள நித்திய பராபரனே! நீர் இருளின் இராச்சியத்திலிருந்து உமது ஆச்சரியமான வெளிச்சத்திற்கு அழைத்ததற்காக உமக்குத் தோத்திரம். நாங்கள் எங்கள் பாவங்களை மனஸ்தாபத்தோடே அறியவும், சமாதானப்பிரபுவாகிய உமது குமாரன்மேல் நம்பிக்கைவைத்து எங்கள் உள்ளத்தில் தேவசமாதானத்தை அநுபவிக்கவும் நீர் எங்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். சுவாமி, ஆமேன்.

மாற். 6, 14-29 அல்லது எசா. 49, 1-18 வாசிக்கவும்.

வருகை நாலாம் வாரம், புதன்.

பி. 5, 3.4.

யோவான் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது: மனுஷன் தனக்குப் பரமண்டலத்திலிருந்து கொடுக்கப்பட்டாலொழிய ஒன்றையுந் தன்னுடையதாக்கிக்கொள்ளக்கூடாது. நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவனாயிருக்கிறேன் என்று நான் சொன்னதற்கு நீங்களே எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். மணவாளியை உடையவனே மணவாளன். மணவாளனுடைய சிநேகிதனோ நின்று அவர் பேசக்கேட்டு மணவாளனுடைய சத்தத்திற்காக மிகவும் சந்தோஷப்படுகிறான். இப்போதும் இந்த என்னுடைய சந்தோஷம் நிறைவேறிற்று. அவர் பெருகவும் நானோ சிறுகவும்வேண்டியது என்றான். யோ. 3, 27-30.

கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படும் எல்லாருக்கும் யோவானின் சாட்சி ஆசீர்வாதமாய்ப் பலிக்கும். அவன் தன்னைக் குறித்து நான் சிறுகவேண்டுமென்கிறான். கிறிஸ்துவுக்கு ஏற்ற ஜீவன்பயனை விரும்புகிறவன் நெருக்கமான வழியில் நடந்து இடுக்க வாசலால் உட்பிரவேசிக்கவேண்டும். அவ்வாசலில் நுழையக்கூடும்படிக்கு நாம் தினந்தோறும் சிறுகவேண்டும். கர்த்தர் நமக்கு அருமையானவர்களை எடுத்துக்கொள்ளும்போதும் நாம் துக்கசாகரத்தில் மூழ்கித் தவிக்கும்போதும் நாம் வியாதியினாலும் விருத்தாப்பியத்தினாலும் தனித்துக் கைவிடப்படுகையிலும் நான் சிறுகவேண்டுமென்கிற தீர்மானத்தை மறக்க ஒண்ணாது. கண்ணீரோடே விதைக்கிறவன் கெம்பீரத்தோடே அறுப்பான். அப்படி விதைக்கையில்தான் கிறிஸ்து பெருக இடம் உண்டு. யோவான்ஸ்நானகன் மணவாளனுடைய சத்தத்தைக் கேட்டுக் களிகூருகிறான். அந்தச் சத்தம் கிறிஸ்துவின் அற்புதங்களால் உண்டான சத்தமும் சுவிசேஷ பிரசங்கச் சத்தமுந்தான்.

குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. இவையெல்லாம் மெசியாவின் வரவுக்கு அறிகுறிகள். இவை நிறைவேறிவருவதால் அவருடைய அழியாத இராச்சியமும் வந்திருக்கிறது. அதிலே சேர உனக்கு மனதானால் கிறிஸ்து பெருகவும் நான் சிறுகவும் வேண்டுமென்கிற சத்தியத்தைக் கடைப்பிடி. உன் இருதயத்தில் அவர் ஒருவரே அரசாளவேண்டும். அதில் வேறொன்றும் ஆள இடங்கொடாதே. ஆளுகையை எல்லாம் அவருக்கு ஒப்புவி. அப்போது ஒருவேளை யோவான் சத்தியத்தினிமித்தம் காவலில் வைக்கப்பட்டுச் சிரச்சேதம் பண்ணப்பட்டதுபோல் நீயும் கிறிஸ்துவை அண்டிக்கொண்டு அவருக்கு உண்மைபாராட்டினால் பல துன்பங்களை அநுபவிக்க நேரிடும். இதினால் நீ சிறுகினாலும் அவர் உன்னில் பெருகி மகிமைப்படுவார்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! உலகத்தின் வெளிச்சமாக வந்தீர், மாட்டுக்கொட்டகையில் பிறந்து உம்முடைய மகிமையைத் தாழ்மையினால் மறைத்திருந்தீர். கர்த்தாவே! நாங்கள் உம்முடைய தாழ்மையைப் பார்த்து இடறலடையாமல் உம்மைப்போல் நாங்களும் தாழ்ந்து கடைசியில் நித்தியமோட்சத்தில் பங்கடைய எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும். சுவாமி, ஆமென்.

யோ. 1, 1-13 அல்லது எசா. 50, 4-11 வாசிக்கவும்.

வருகை காலாம் வாரம், வியாழன்.

பி. 5, 5-6.

அப்போது மரியாள் சொன்னதாவது: என் ஆத்துமம் கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய பராபரனிலே களிகூர்ந்திருக்கிறது. என்னெனில் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்; இதோ! இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். ஏனெனில் வல்லமை உடைத்தானவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார், அவருடைய நாமம் பரிசுத்தமாயிருக்கிறது, அவருடைய இரக்கம் தலைமுறை தலைமுறையாக அவருக்குப் பயந்தவர்கள்மேல் இருக்கும். லூக். 1, 46-50.

இது உலக இரட்சகருக்குத் தாய் ஆகும் பாக்கியத்தைப் பெற்ற மரியாள் பாடின ஸ்தோத்திரப் பாட்டு. பெத்லெகேமிலே கன்னிமரியாளிடத்தில் ஏழைப்பிள்ளையாய்ப் பிறக்க மனதுகொண்டவர் எல்லா வானங்களும் கொள்ளாத பரிசுத்தராகிய மகத்துவமுள்ள ஆண்டவர்தான். அவரால் ஆகாதது ஒன்றுமில்லை. அவர் சேராபீன்கள் புகழ்ந்து பாடின உன்னதமான ஆண்டவர். இப்படிப்பட்ட மகத்துவம் பொருந்திய ஆண்டவரைப் பெற்ற மரியாள் தன் கர்ப்பமண்டலத்திலே கர்த்தரை மகிமைப்படுத்தி இந்தப் பாட்டைப் பாடுகிறாள்.

நாமுங்கூட இவளைப் பாடுவது தகுதி. கர்த்தர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் என்று சொல்வது நமக்கும் அடுக்குமே. மரியாளைப்போல் நீ உன் வறுமையையும் சிறுமையையும் அறிந்து, உன்னைத் தாழ்த்தி உன் பாவத்தினால் நீ எல்லாவற்றிலும் ஏழையும் நிர்ப்பந்தனுமாய் இருக்கிறாய் என்று அறிக்கையிடுவாயாகில் இரட்சகர்பேரில் உண்மையாய்ச் சந்தோஷப்படுவாய். இதோ வல்லமையும் பரிசுத்தமுமுள்ளவர் உன் மாமிசத்தையும் இரத்தத்தையும் எடுத்துக்கொண்டார். உன்னைச் செல்வனாக்க ஏழையானார். உன்னை உயர்த்தத் தாழ்மையானார். உன்னைத் தேவபிள்ளையாக்க, மனித பிள்ளையானார். அவர் இரக்கமும் கிருபையும் உள்ள பராபரன். இவர் பாவியின் மரணத்தை விரும்பார். மரியாளைப்போல அவரை இரட்சகர் என்று சொல்லு. அவர் உன்னை உயர்த்தின பிறகு, நீயும் மரியாளைப்போல அவரை உயர்த்து. வாயால் மாத்திரம் அல்ல, இருதயத்தோடும் பாடி, என் ஆத்துமம் கர்த்தரை மகிமைப்படுத்துகிறது; என் ஆவி என் இரட்சகராகிய பராபரனில் களிகூர்ந்திருக்கிறது என்று சொல்.

ஜெபம். இரக்கமுள்ள பராபரனே! மாசற்ற கன்னியாஸ்திரியினிடத்தில் மனுஷ அவதாரம் செய்து, நாங்கள் அநுபவிக்கவேண்டிய திவ்ய பாக்கியங்களை எல்லாம் அநுபவிக்க வந்தீர். இதற்காக நாங்கள் உமக்கு முழுமனதோடும் ஸ்தோத்திரம் பாடுகிறோம். ஆண்டவரே! எங்கள் ஏழைப் பாட்டுக்குச் செவிகொடும், எங்களுக்கு மென்மேலும் உமது மகிமையைக் காண்பித்தருளும். சுவாமி, ஆமென்.

யோ. 1, 14-18 அல்லது எசா. 51, 1-23. வாசிக்கவும்.

வருகை காலாம் வாரம், வெள்ளி.

பி. 8, 1-3.

உன்னதங்களிலிருக்கிற பராபரனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனிதர்மேலே பிரியமும் உண்டாவதாக. லூக். 2, 14.

பராபரன் இயேசுகிறிஸ்து மூலமாய் நமக்குச் செய்த நன்மைகளுக்காக அவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கும் காலம் புதிய ஏற்பாட்டின் காலம். புதிய ஏற்பாட்டின் ஆரம்பமே ஸ்தோத்திரப்பாட்டுகளால் நிறைந்திருக்கிறது. சகரியா, கன்னிமரியாள்

வயது முதிர்ந்த சிமேயோன் என்ற பக்தருடைய பாட்டுகள் எல்லாம், வானசேனை பாடின உன்னதங்களிலிருக்கிற பராபரனுக்கு மகிமையுண்டாவதாக என்கிற பாட்டின் பொருளுக்குள் அடக்கம். பாவிகள் பராபரனுக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துகிறதில்லை. அவர்கள் அழிவற்ற தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷன், பறவைகள், நாலுகால் ஜீவன்கள், ஊருகின்ற ஜெந்துக்கள் இவைகளின் ரூபக்கொப்பாய் மாற்றினார்கள். அவர்கள் அவர் நாமத்தைப் பரிசுத்தமாக எண்ணுகிறதுமில்லை அவரை அறிந்து ஸ்தோத்திரிப்பதுமில்லை. பெத்லெகேமில் பிறந்தவரைக் கொண்டுதான் நாம் பராபரனை அறியவும், அவரை ஸ்தோத்திரிக்கவும் கூடும். புதிய ஏற்பாட்டின் பிள்ளைகளாகிய நாம் பராபரனை இயேசுகிறிஸ்துவின் பிதாவாகவும் அவர் மூலமாய் நமது பிதாவாகவும் அறிந்து, ஸ்தோத்திரிப்பதே அவருக்குச் செலுத்தவேண்டிய மகிமை.

பூமியிலே சமாதானம் உண்டாவதாக. பாவம் நிறைந்த உலகத்தில் சமாதானம் இல்லை. எங்கும் தாறுமாறும் சஞ்சலமும் சண்டை சச்சரவும் உண்டு. மனிதர் இழந்துபோன சமாதானத்தைச் சமாதானப் பிரபுவாகிய இயேசுகிறிஸ்து திரும்பக் கொண்டு வந்தார். அவர் நம்மைப் பராபரனோடு ஒப்புரவாக்கி வைத்து நமக்குப் பாவமன்னிப்பாகிய சமாதானத்தைச் சம்பாதித்துத் தந்தார். இப்பூமியில் பிரிக்கப்பட்டதை இணைத்து வைக்கிறார். அவர் நமக்கு, இருதயத்தை ஆளும் தேவ சமாதானத்தையும் மனிதரோடு அன்புபாராட்டும் குணவிசேஷத்தையும் அருளுகிறார்.

மனிதர்மேலே பிரியம் உண்டாவதாக. கிறிஸ்துவையன்றிப் பராபரன் உலகத்திலுள்ள எந்த மனிதன்மேலும் பிரியம் வைக்க நியாயமில்லை. தமது நேசகுமாரன் தமது சித்தத்தை நிறைவேற்றினபடியினால், அவர்மேல் மாத்திரம் பிரியம் வைத்தார். அவரது ஐக்கியத்தில் இருக்கிறவன் எவனோ அவன் இனிக் கோபத்தின் பிள்ளையாயிராமல் பராபரனுடைய பிரிய பிள்ளையாகிறான். அவர் தமது குமாரனைக்கொண்டு நமக்குச் செய்த நன்மைகளுக்காக தேவதூதர் இப்படி அவரைப் புகழ்வார்களானால், அவருடைய கிருபையைப் பெற்ற நாம் எத்தனைக்கதிகமாய் அவரைப் புகழ வேண்டும்.

ஜெபம். உன்னதங்களிலிருக்கிற பிதாவே! மண்ணும் விண்ணும் உம்மை வணங்கி நிற்கிறது. ஏனென்றால் தேவரீர் மகத்துவமுள்ளவர். உமது கோபத்தை நீக்கி உலகத்தை இரட்சிக்க உமது நேச குமாரனை அனுப்பினீர். இந்த அன்பைப் பார்த்து நாங்களும் பரம சேனைகளோடே உம்மைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம். எங்களை நித்திய சமாதானத்துக்கு வழிநடத்தியருளும். சுவாமி, ஆமென்.

யோ. 1, 19-28 அல்லது எசா. 52, 13-53, 12. வாசிக்கவும்.

வருகை நாலாம் வாரம், சனி.

பி. 8, 4. 5.

நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவர்களை மீட்டுக்கொள்ளவும், நாம் புத்திரசுவிகாரத்தையடையவும், பராபரன் காலம் நிறைவேறுதல் வந்தபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை அனுப்பினார். கலா. 4, 4. 5.

சீமை தேசத்தில் கிறிஸ்து பிறந்த பண்டிகையில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு வெகுமதி கொடுப்பார்கள். வெகுமதிகளை முந்திப் பாராதபடிக்குக் கதவைப் பூட்டி அறைவீட்டில் ஒரு மேசையில் புஸ்தகம், வஸ்திரம் முதலிய வெகுமதிகளைப் பரப்பி வைப்பார்கள். பிறகு கதவு திறக்கப்படும். வாசற்படியண்டை நிற்கும் பிள்ளைகள் சந்தோஷமாக உள்ளே வந்து தங்கள் தங்கள் வெகுமதியைப் பெற்றுக்கொள்வார்கள். அப்படியே நாமும் பிறப்பின் பண்டிகையில் ஒரு வெகுமதியைப் பெற ஆவலாயிருக்கிறோம். அது நமது பரம பிதா நமக்கு ஆயத்தம் பண்ணின வெகுமதி. அதைக் கொடுக்க அவர் நம்மை அழைக்கிறார். புத்திர சுவிகாரத்தால் அவர் பாவிகளைத் தம்முடைய பிள்ளைகளாக்க வேண்டுமென்று அநாதியாய் ஆலோசித்துக் காலம் நிறைவேறினபோது தமது குமாரனாகிய இயேசுவை அனுப்பினார். அவர் தேவ ரூபத்தில் வராமல் ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனிதனாய் வருகிறார். அவர் பூரண பரிசுத்தராயிருந்தும் பாவிகள் கட்டப்படவேண்டிய ஒழுங்குகளுக்கும் பிரமாணங்களுக்கும் தம்மைக் கீழ்ப்படுத்தி, நியாயப்பிரமாணத்தின் சாபத்தையும் பாவத்தின் சம்பளத்தையும் தமதுமேல் ஏற்றுக்கொள்ள வந்தார். இதினால் விளங்கும் அன்பின் ஆழத்தை நமது புத்தியினாலே கிரகித்து அளவிடக்கூடாது. உனக்காகப் பிணைபட்ட உன் இரக்ஷகரின் ஜீவியத்தைப் பார். அது பெத்லெகேமில் ஆரம்பித்துக் கெத்செமனே தோட்டத்தின் வழிசென்று கொல்கதாவில் முடிகிறது. உன் மீட்புக்காக அவர் படும் துன்பம் இவ்வளவு என்று பார். இவ்வளவு பாடுபட்டு உன்னை உயர்த்தச் சித்தமாயிருக்கிறார். அவர் உயர்த்துவதால் நிர்ப்பந்தமான மனிதர் பாக்கியமான தேவபுத்திரர் ஆகிறார்கள். நாம் பிள்ளைகளானால் வெளிச்சத்தில் உள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்துக்கு உற்றவர்களுமாயிருப்போம்.

ஜெபம். எங்கள் அன்புள்ள பிதாவே! காலம் நிறைவேறினவுடனே, இரக்ஷகரைப் பிறக்கச் செய்தீர். இனிமேல் எங்கள் மீட்புக்குத்

தடைசெய்பவர் ஆர். நாங்களோ இன்னம் தாமதம்பண்ணுகிறோம். இரக்கமுள்ள பிதாவே, எங்கள் கண்களைத் திறந்து, எங்களுக்கு உம்முடைய இரக்ஷிப்பைக் காண்பித்தருளும். சுவாமி, ஆமென்.

மத். 1, 18-25. அல்லது எசா. 54, 1-14. வாசிக்கவும்.

கர்த்தர் பிறந்த பண்டிகை முதலாம் நாள்.

பி. 12, 1. 2.

அந்தப்புறங்களில் வெளித்தங்கி, தங்கள் மந்தையை இராத்திரியிலே காவல் காக்கிற மேய்ப்பர் இருந்தார்கள். இதோ, கர்த்தருடைய தூதன் அவர்கள்கிட்ட வந்து நின்றான்; கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிப் பிரகாசித்தது; அப்போது மகா பயமாய்ப் பயந்தார்கள். தேவதூதன் அவர்களுக்குச் சொன்னதாவது: பயப்படாதேயுங்கள், ஏனெனில் இதோ, எல்லாச் சனத்துக்கும் வரப்போகிற பெரிய சந்தோஷத்தை உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கிறேன். அதாவது: உங்களுக்கு இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்கிற இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்தார் என்றான். லூக். 2, 8-11.

கர்த்தர் பிறந்த பண்டிகையை மேய்ப்பர் எவ்வளவு சிறப்பாய்க் கொண்டாடுகிறார்கள். அவர்களை இராவிருள் சூழ்ந்திருக்கிறது. அவர்கள் இருதயங்களும் இருள்தான். இயல்பாய் எந்த மனிதனுக்கும் இருளை விட்டு வெளிச்சத்துக்கும், மரணத்தைவிட்டுச் சீவனுக்கும், பாவத்தைவிட்டு நீதிக்கும், அடிமைத்தனத்தைவிட்டு மெய்விடுதலைக்கும் வர வழி தெரியாது. இதோ, கர்த்தருடைய தூதன் மேய்ப்பர் கிட்டவந்து நிற்கிறான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசிக்கிறது. அவ்வெளிச்சத்தின் நடுவில் ஒரு தூதன் நின்று பயப்படாதேயுங்கள் என்று சொன்னபோது, அவர்கள் இருதயங்களும் வெளிச்சமாகத் துவங்கின. இதோ, உங்களுக்குப் பெரிய சந்தோஷத்தை அறிவிக்கிறேன் என்று அவன் சொன்னவுடன் அவர்கள் பயம் நீங்கிச் சந்தோஷப்படலானார்கள்.

பல சங்கடங்கள் உன் மனதைப் பாரப்படுத்தி உன்னைத் துன்பப்படுத்தக் கூடும். உன் பயத்தை எல்லாம் இந்த இரக்ஷகரை நம்பி விட்டுவிடு. உனக்குச் சந்தோஷமே வைத்திருக்கிறது என்று அறி. தேவதூதன் சொன்ன சந்தோஷ செய்தியை நீயும் கியானித்துக்கொண்டிரு. உனக்கும் இன்று இரக்ஷகர் பிறந்தார். இரக்ஷகர் தேவையில்லாதவன் உலகில் ஒருவனாகிலும் இல்லை. அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னித்து, உன் நோக்காட்டையெல்லாம் குணமாக்க வந்தவர். உன் பிராணனை அழி-

வுக்கு விலக்கி மீட்டு உன்னைக் கிருபையாலும் இரக்கங்களாலும் முடிசூட்டுகிறவர். உன் வாயை மகிழ்ச்சியினால் நிரப்புகிறவர். அவர் பிறந்த பரிசுத்த இரவிலே வானம் திறவுண்டு தேவதூதர் கூட்டம் இறங்கி வந்தார்கள். உன்னிடத்திலும் வரக் காத்திருக்கிறார்கள்.

செபம். பரமபிதாவாகிய பராபரனே! உமது சொந்தகுமாரனை எங்கள் நிமித்தம் இங்கே அனுப்பி, அவர் மூலமாய் எங்களுக்கு வானத்துக்கு வழி திறந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்கள் இருதயம் சந்தோஷத்தால் நிறையவும் நாங்கள் வான இராச்சியத்தின் சுதந்தரர் ஆகவும் எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும். சுவாமி, ஆமென்.

லூக். 2, 1-14. அல்லது சங். 2 வாசிக்கவும்.

கர்த்தர் பிறந்த பண்டிகை இரண்டாம் நாள்.

பி. 12, 3. 4.

அந்த வார்த்தை மாம்சமாகிக் கிருபையினாலும் உண்மையினாலும் நிறைந்தவராய் நம்மிடத்தில் வாசம்பண்ணினது. பிதாவுக்கு ஒரேபேறானவரின் மகிமையாக அவருடைய மகிமையைக் கண்டோம். யோ. 1, 14.

கிறிஸ்து பிறந்த பண்டிகையைச் சரியாய்க் கொண்டாடுவதற்கு ஒன்று மாத்திரம் அவசியம். அது, நாம் அவருடைய மகிமையைக் கண்டோம் என்னும் உள்ளான அறிவே. இப்படி அறிவது யோவான் அப்போஸ்தலனுக்கு இலேசு. அவன் துவக்க முதல் அவரோடிருந்து, அவர் தமது சொல்லாலும் செயலாலும் செய்த அதிசயங்களைக் காதாரக்கேட்டுக் கண்ணாரக்கண்டவன், அவரோடு புசித்துக்குடித்தவன், கெத்செமனேயிலே அவரோடு திகிலடைந்தவன், அவருடைய சிலுவையின் கீழ் நின்று அவர் பரம் ஏறும் தினத்திலே அவரோடு கூட ஒலிவமலைக்குப்போனவன். என் சிநேகிதனே! நீயும் பாவசங்கீர்த்தனத்துக்குப் போய் மன்னிப்பைப் பெற்று இராப்போசனத்தில் அவர் திருச்சரீரத்தையும் இரத்தத்தையும் புசித்துக்குடித்தாய்: கர்த்தருடைய வீட்டுக்குப் போய் அவர் வசனத்தைக் கேட்டாய். இதையெல்லாம் நீ யோசித்துப் பார்த்தால் நானும் அவருடைய மகிமையைக் கண்டேன் என்று நீயும் சொல்லலாமே. இன்றைக்கு மறுபடியும் அவருடைய மகிமை, அந்த வார்த்தை மாம்சமாகிறது என்பதில் நமக்கு நினைப்பூட்டப்படுகிறது. உன் மனதில் நினைப்பதை உன் வாய் வெளிப்படுத்தும். பராபரன் தமது உள்ளத்தில் சிந்திப்பதை இயேசுகிறிஸ்து

வெளிப்படுத்துவார். இதனிமித்தம் அவர் வார்த்தை என்னப்படுகிறார். மனிதராகிய நாம் பாவத்தினால் கெடுத்துப் பெலவீனப்பட்ட சாதியானதால் மாமிசம் என்னப்படுகிறோம். பராபரன் மாமிசமானதினால் நித்தியபராபரனாகிய அவர் நமது பெலவீன மாமிசத்தையும் இரத்தத்தையும் உடுத்துக்கொண்டார். இப்பிள்ளையில் வாசம்பண்ணும் அன்பைப் பார். அதை அளவிடக் கூடியவன் ஆர்? அவர் கையில் அடங்கியிருக்கும் வல்லமை எவ்வளவு பெரிது. அவரில் விளங்கும் ஞானம் எவ்வளவு மகிமையானது! விசுவாசத்தினால் இந்தக் கிருபையை உணர்ந்து விவேகத்தினால் இதின் உண்மையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள். அப்போது அவருடைய மகிமையைக்கண்டேன் என்று நீயும் சொல்லுவாய்.

ஜெபம். பரமபிதாவாகிய பராபரனே! நீர் உமது ஒரேபேறான குமாரனை எங்கள் மாமிசத்தில் வரப்பண்ணி, அவர் மூலமாய் எங்களைப் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் தயவாய் இரக்ஷித்ததற்காக உமக்கிஸ்தோத்திரம். இந்தக் கிருபை எங்களை எல்லாத் துன்பங்களிலும் போராட்டங்களிலும் தேற்ற, உமது குமாரன் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். சுவாமி, ஆமேன்.

லூக். 2, 15-20. அல்லது ஏசா. 55, 1-13 வாசிக்கவும்.

டிசம்பர் மீ 27 உ.

பி. 12, 5-7.

தேவதூதர்கள் அவர்களைவிட்டு வானத்துக்குப் போனபிற்பாடு, மேய்ப்பரான மனுஷர் ஒருவருக்கொருவர்: நாம் பெத்லெகேம் மட்டும் போய், கர்த்தர் நமக்கு அறிவித்ததான நடந்த இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டு, தீவிரித்து வந்து மரியாளையும் யோசேப்பையும் முன்னணையிலே படுத்திருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். லூக். 2, 15. 16.

மேய்ப்பர் இரக்ஷகரின் பிறப்பைப் பற்றிய சந்தோஷ செய்தியைக் கேட்டார்கள். தேவதூதரும் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடி ஓய்ந்தார்கள். மேய்ப்பர் மனதில் ஒரே ஆவல் இருக்கிறது. அது பெத்லெகேம் ஊருக்குப் போகவேண்டுமென்பதே. இப்படி ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். போகாமலிருக்க ஒருவனுக்கும் பிரியமில்லை. இதற்கு மாறாக நம்மில் எத்தனைபேர் இன்றைக்கு அவரைப்பற்றிய நற்செய்தியைக் கேட்க மனமற்றிருக்கிறார்கள். ஒருவேளை கேட்டாலும் கேட்டதே போ

தும் என்றிருந்து தங்கள் பொல்லா வழியைவிட்டுக் கிறிஸ்துவைத் தேடிப்போக அவர்களுக்குப் பிரியமில்லை. கிறிஸ்துவைப் பற்றி நீ எவ்வளவு அறிந்திருந்தாலும் அவரை விசுவாசக் கண்ணால் பார்த்திராவிட்டால் உனக்கென்ன பிரயோசனம்? ஆகையால் நாம் அவரைக்காண முயல்வோமாக. மேய்ப்பர் இயேசுபிள்ளையைத் தேடிப்போன காலம் இராக்காலமாயிருந்தது. அவர்கள் தேடித்தேடி அலுத்துப்போனாலும் திரும்பிவிடாமல் முன்னணையில் படுத்திருந்த பிள்ளையைக் காணுமட்டும் தேடினார்கள். நாமும் அவர்களைப் போல் இரக்ஷகரைக் காணுமட்டும் தேடுவோமாக. கர்த்தர் தம்மை நோக்கி உண்மையாய்க் கூப்பிடுகிற யாவருக்கும் சமீபமாயிருக்கிறார். அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு அகப்படுவார். ஆகிலும் நாம் அவரைத் தேடிப்போகும் வழியில் அநேகம் தடைகள் குறுக்கிடக்கூடும். நமது பாவம் ஒரு பக்கத்திலும், அவருடைய பிறப்பில் விளங்கின தாழ்மை, சாவில் விளங்கின சிறுமை மறு பக்கத்திலும் நமக்கு இடறலுண்டாக்கும். கிறிஸ்துவண்டை நம்மைப் போகவொட்டாமல் தடுக்கிற சிநேகிதரும் தோழரும் இருப்பார்கள். இப்பேர்ப்பட்ட தடைகளை நீ மேற்கொள்ளு. நீ அவரைக் கண்டுபிடித்தால்தான் உன் ஆத்துமா திருப்தியடையும். பாவம், வீண் கவலை முதலியவைகளுக்கு விலக்கமாய் உன் இருதயத்தைக் காத்துக்கொள். ஆண்டவரே, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவொட்டேன் என்று அவரை நோக்கி மன்றாடு.

ஜெபம். எங்கள் அன்புள்ள இரக்ஷகரே! மேய்ப்பர் கண்ணால் பார்த்த தேவரீரை நாங்களும் பார்க்க ஆசிக்கிறோம். ஏனெனில் தேவரீர் ஒருவரே எங்கள் ஆத்தும வாஞ்சையைத் திருப்திபண்ணக் கூடியவர். ஆண்டவரே, உமது மகத்துவத்தை எங்களுக்குக் காண்பித்தருளும். சுவாமி, ஆமேன்.

லூக். 2, 21-24. அல்லது ஏசா. 57, 1-21 வாசிக்கவும்.

டிசம்பர் மீ 28 உ.

பி. 12, 1. 2.

பராபரனுடைய இரட்சிப்புள்ள கிருபை எல்லா மனிதருக்கும் பிரசன்னப்பட்டிருந்து, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து மனத்தெளிவும் நீதியும் தெய்வ பக்தியுமாய் இப்பிரபஞ்சத்தில் ஜீவனம்பண்ண நம்மை உபதேசிக்கிறது. தீத்து. 2, 11. 12.

மனிதவதாரம் பண்ணின இயேசுகிறிஸ்துவில் பராபரனுடைய கிருபை வெளிப்பட்டிருக்கிறது. முன்னணையில் பிறந்தவரிடம் நீ வெறுமையாகிலும் [illegible] வாயாகில் அதைக் கண்டுபிடிப்பதில்லை. நீ கிருபையைத் தேடினால் அழுத்திக் குலுக்கிச் சரிந்து விழும் நல்ல அளவாக அதைப் பெற்றுக்கொள்வாய். கிருபையினால்தான் இக்குழந்தை பிதாவின் மடியை விட்டு இப்பூதலத்திற்கு இறங்கி வந்தது. கிருபையே மானிட உருவெடுத்து நமது நடுவில் பிரசன்னமாயிற்று. பாவத்தினால் புண்பட்டுத் தவிக்கும் ஆத்துமாவானது, பராபரனே! பாவியாகிய என்பேரில் கிருபையுள்ளவராகுமென்று கூப்பிடும்போது இரட்சிப்புள்ள கிருபை பிரசன்னப்பட்டிருக்கிறது என்ற உத்தரவு உன்னதத்திலிருந்து வருகிறது.

பரம வைத்தியர் இப்போது உன்னைச் சுகப்படுத்த வல்லவர். அவரிடத்தில் நீ தரித்திரு. அவர் தமது விரலைப் பாவமென்ற புண்ணில் வைக்கும்போது உனக்கு நோவுண்டாகுமானாலும் நீ அவரைத் தடுக்காதே. அவர் நமது பாவப் புண்களைச் சமூலமும் சுகப்படுத்த வேண்டுமென்றிருக்கிறார். இதற்கென்றே அவர் நமக்குக் கரிசனமாய்ப் புத்திசொல்லுகிறார். இதற்கென்றே அவர் நமக்கு உண்மையாய் உதவி புரிகிறார். ஒரு கண்ணினால் இப்பிரபஞ்சத்தின் இச்சைகளையும், மறு கண்ணினால் தேவகிருபையையும் நோக்கும் கிறிஸ்தவர்களை அவர் தமது இராச்சியத்தில் ஏற்றுக்கொள்ளார். ஆகலால் உன்னை முழுவதும் அவருக்கு ஒப்புவி. அப்போது நீ கிறிஸ்துவின் சிநேக வார்த்தையிலும் கிரியையிலும் கற்பும் சுத்தாங்கமும் உள்ளவனாய் விளங்குவாய். உன்னிடத்தில் நீதியும் உண்மையும் தோன்றும். பக்தியற்ற இந்தப் பொல்லாத உலகத்தில் பக்தியாய் ஜீவிப்பாய். பரம சமாதானத்தில் பங்கு பெறுவாய். தேவ ஊழியத்துக்கு உன்னை உற்சாகமாய் ஒப்புக்கொடுப்பாய். இப்படிக் கிறிஸ்து உனக்குப் பரம செல்வத்தைக் கொடுப்பார்.

ஜெபம். மாசில்லாமல் தூய்யதான பனிக்கட்டியிலும் தெளிவான சுத்தாங்க ஊற்றே இயேசுவே, சொரூபிகள் தூய்ய சின்ன பிரகாசம் யாவும் தேவரீரின் முன் மங்கிப்போகுதே. என் பாவத்தின் இருள் அனைத்தும் உமக்குள் தொலையட்டும். இயேசுவே, நான் உமக்கே ஒப்பாய்ச் சுத்தாங்கமாகவும். ஆமென், ஆமென்.

லூக். 2, 21-32. அல்லது ஏசா. 58, 1-14 வாசிக்கவும்.

டிசம்பர் மீ 29 உ.

மி. 14, ச. 4.

பராபரன் தம்முடைய ஒரேபேறான குமாரனை நாம் அவர் மூலமாய்ப் பிழைக்கும்படி லோகத்தில் அனுப்பினதினாலே, நமது மேலுள்ள பராபரனுடைய சிநேகம் வெளியாயிற்று. பராபரனை நாம் சிநேகித்தோம் என்பதிலல்ல, நம்மை அவர் சிநேகித்து, தம்முடைய குமாரனை நம்முடைய பாவங்களினிமித்தம் கிருபை உண்டாக்குதலாக, அனுப்பினதிலே சிநேகம் உண்டாயிருக்கிறது. 1 யோவா. 4, 9. 10.

சிநேகிக்கவும் சிநேகிக்கப்படவும் மனுஷன் இருக்கிறான். பிறருடைய புகழ்ச்சியும் மதிப்பும் அடக்கமும், அவர்கள் சிநேகத்தைப்போல் உனக்குத் திருப்திதராது. அவர்கள் உன்னைச் சிநேகித்தால்தான் உனக்குத் திருப்தியுண்டாகும். அதுபோலவே நாம் மற்றவர்களைச் சிநேகிக்கும்போதுதான் நாமும் பாக்கியமுள்ளவர்களாயிருப்போம். இவித பரஸ்பர அன்பு ஆத்துமாவுக்கு வெளிச்சமும் ஜீவனுமாயிருக்கும்.

பராபரன் உன்மேல் வைத்த அன்பை மனிதாவதாரம் செய்த கிறிஸ்துவில் பார். உன் அன்புக்கும் ஊற்று அங்கேதானிருக்கிறது. அவரிடமிருந்துதான் வெளிச்சமும் ஜீவனும் புறப்பட்டுவருகிறது. ஆ! இதென்ன வெளிச்சம். இதைப் பார்க்க எந்தக் கண்ணும் கூசும். நீ உன்னைச் சிறைப்படுத்தியிருக்கும் பாவ வல்லமையையும், உன்னைக் குற்றப்படுத்திக் கர்த்தருக்கு ஆகாதவனாக்கின கேட்டையும் நீ உணர்ந்தால் அருமை இரட்சகருடைய அன்பாகிய வெளிச்சம் உன் இருதயத்தில் நுழைய இடங்கொடு. உன் பாவம் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் இது நீங்குமோ என்று சந்தேகப்பட்டு மனத்தளர்வடையாதே.

அந்த வெளிச்சத்தினாலே நீயும் வெளிச்சம் ஆவாய். பராபரனைச் சிநேகிக்கிறவனுள்ளத்தில் இரக்ஷகர் கொண்டுவந்த ஜீவனுண்டு. பாவத்தினால் நாம் பராபரனண்டை போகத் தைரியமற்று, அவரை நியாயந்தீர்க்கிறவராக நினைத்துப் பயந்து, அவரைவிட்டு ஓடிப்போகிறோம். ஆனாலவருடைய அன்பை இரக்ஷகர் மூலமாய் அறிந்துகொண்டமாத்திரத்தில், அவருக்குப் பயப்படாமல், உற்சாகத்தோடு அவரண்டை சேர்வோம். இப்படி நாம் மெய்யான ஜீவனைப் பெற்றுப் பராபரனையும் அவர் மூலமாய் நமது சகோதரரையும் சிநேகிப்போம். தேவ சிநேகம் சகோதர சிநேகத்துக்கு ஊற்று.

ஜெபம். கிருபையும் இரக்கமுமுள்ள பிதாவே! உமது நேச குமாரனை எங்களுக்குக் கொடுத்து, அவர் மூலமாய் எங்களைப் பிள்ளைக

னும் சுதந்தரரும் ஆக்கிக்கொண்டதற்காக உமது நாமத்தைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம்.

உமது ஆவியைக்கொண்டு உமது நேசத்தின் அதிசயத்தை நாங்கள் சரியாய் அறியவும், அதனால் எங்கள் விசுவாசம் ஓங்கி நாங்கள் உமது சமாதானத்தினால் நிறைந்து, ஒருவரோடொருவர் அன்பினால் கட்டப்பட எங்களுக்கு ஒத்தாசை செய்யும், சுவாமி, ஆமேன்.

லூக். 2, 33-38. அல்லது எசா. 59, 1-21 வாசிக்கவும்.

டிசம்பர் மீ 30 உ.

பி. 14, 5. 6.

இயேசு பாலகன் நிமித்தமாக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்யத் தாய்தகப்பன் அவரைத் தேவாலயத்துக்குள் கொண்டுவருகையில் சிமெயோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, பராபரனை ஸ்தோத்திரித்துச் சொன்னதாவது: ஆண்டவரே, இப்போது உமது அடியானை உம்முடைய வார்த்தையின்படி சமாதானத்துடனே அனுப்பிவிடுகிறீர். ஏனெனில் உம்முடைய இரட்சிப்பை என் கண்கள் கண்டது என்றார். லூக். 2, 27-30.

பரமபிதா நாம் சாகும்நேரத்தில் நமக்குப் பாக்கியமான மரணத்தை அளித்து, அழுகையின் பள்ளத்தாக்காகிய இந்த லோகத்திலிருந்து பரலோகத்திலே தம்மண்டை கிருபையாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது நாம் செய்யும் எல்லா விண்ணப்பங்களின் தொகை. தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக் கொள்ளும் என்று ஜெபிக்கும்போது, பாக்கியமாய் மரிக்கவேண்டுமென்று விரும்பி மன்றாடுகிறோம். வயதுசென்ற சிமெயோனுக்குப் பாக்கியமான மரணம் கிடைத்தது. ஆகையால் அவன் ஆண்டவரே, உமது அடியானை உம்முடைய வார்த்தையின்படி சமாதானத்துடனே அனுப்பிவிடுகிறீர் என்கிறான். இந்தச் சமாதானத்தை அவன் இயேசு பாலகனிடத்தில் கண்டுபிடித்தான், உம்முடைய இரட்சிப்பை என் கண்கள் கண்டது என்கிறான். அவன் கைகள் அதை அணைத்துக்கொண்டிருக்கின்றன. அவன் வாய் அதைத் துதிக்கிறது. அவன் இருதயம் அதை விசுவாசிக்கிறது. நீயும் சிமெயோனைப்போல் மோட்சம் போகவேண்டுமென்று விரும்பினால் விசுவாசத்தோடு உன் கண்களைக் கிறிஸ்துவுக்கு நேராக ஏறெடு. அவர்பேரில் வைத்த அன்பினால் உன் இருதயம் துடிக்கட்டும். உன் கைகள் உண்மையாய் அவருக்கு ஊழியஞ்செய்யட்டும்.

நம்மை மீட்க மனித அவதாரஞ்செய்த கிறிஸ்துவுக்கு நம்மை முழுவதும் ஒப்புக்கொடுப்போம் என்கிற தீர்மானத்தை நாம் இப்பண்டிகை காலத்தில் செய்து, அதை நிறைவேற்றுவோமாக. இந்தச் சிமெயோன் நீதியும் தேவபக்தியுமுள்ளவன். இஸ்ரவேலின் ஆறுதலுக்குக் காத்திருந்தவன். அவன்மேல் பரிசுத்த ஆவியானவர் இருந்தார் என்று வாசிக்கிறோம். இந்த நாலு குணங்களும் உத்தமமும் உண்மையுமாய்க் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும். இப்பண்டிகை காலத்தில் நாம் செய்கிற தீர்மானம் இந்தக் குணங்களால் நிறைவேறும். மறுபடியும் ஒரு வருஷம் கழிந்துபோயிற்று. கர்த்தர் உன்னை அழைக்கும் நேரம் உனக்குத் தெரியாது. காலம் போகிறது மரணம் வருகிறது. நீ சாகும்வேளையில் சிமெயோனைப்போல் சொல்லக்கூடுமானால் நீயே பாக்கியசாலி.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! நாங்கள் சாகும்வேளையில் உமது சத்தத்தைக்கேட்டு, சந்தோஷத்துடனே இந்த உலகத்தைவிட்டு உம்மண்டைசேரத் தேவரீர் எங்களை ஆயத்தப்படுத்தியருளும். கர்த்தாவே, நாங்கள் இவ்வுலகில் உமக்கேற்ற சேவனம்பண்ணி, தேவபக்தியாய்ப் பிழைத்துக் கடைசியில் உம்முடைய மகிமைக்குள் பிரவேசிக்க எங்களுக்குக் கிருபைசெய்தருளும், சுவாமி, ஆமேன்.

மத். 2, 1-12. அல்லது எசா. 60, 1-22 வாசிக்கவும்.

டிசம்பர் மீ 31 உ.

ஞ. 26, 1-3.

ஆண்டவரே! தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர். பர்வதங்கள் தோன்றுமுன்னும் நீர் பூமியையும் பூச்சக்கரத்தையும் உருவாக்குமுன்னும், தேவரீர் அநாதியாய் என்றென்றைக்கும் பராபரனாயிருக்கிறீர். நீர் மனுஷரைத் திரும்பத் தூளாக்கி மனுப்புத்திரரே, திரும்புங்கள் என்கிறீர். ஏனெனில் ஆயிரம் வருஷம் உமது பார்வைக்கு நேற்றுக் கடந்துபோன நாளைப்போலும் இராச்சாமத்தைப்போலுமிருக்கிறது. சங். 90, 1-4.

வருஷத்தின் கடைசி நாள் வந்துவிட்டது. ஒரு வருஷம் இன்றோடே முடிந்துபோகிறது. இவ்வருஷத்தில் நடந்ததென்ன? ஒருவன் ஒரு சிநேகிதனைக் கண்டடைந்தான். இன்னொருவன் ஒரு சிநேகிதனை இழந்துவிட்டான். இங்கே ஒரு பிள்ளை பிறந்தது. அங்கே ஒரு கல்லறை வெட்டப்பட்டது. அழுகையும் நகைப்பும் துன்பமும் இன்பமும் குறைவும் நிறைவும் இவ்வருஷத்தில் மாறி மாறிவந்தது.

காலமென்னும் வெள்ளத்தில் மனிதன் அமிழ்ந்தி மறையுமட்டும் அதில் சில நேரம் மிதந்துகொண்டு போகிறான். இது நாம் நினைக்கவேண்டிய ஒரு சத்தியம். இந்த வெள்ளத்திலிருந்து நமக்கு யாதொரு மீட்பும் இல்லையா? ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர். நீர் மாறுதலுக்கும் அழிவுக்கும் உரியவரல்ல, நீர் என்றென்றைக்குமிருக்கிறீர். நீர் எங்கள் சுவாசத்தையும் ஜீவனையும் உமது வல்லமை கரத்தினால் ஆண்டு நடத்துகிறீர். பருவதங்களையும் பூச்சக்கரத்தையும் உண்டாக்கினவர் நீரே. இந்த வருஷத்தில் சம்பவிப்பதெல்லாம் உம்மையன்றி வருவதில்லை. நாங்கள் உம்மையன்றி வேறொன்றையும் நம்பமாட்டோம்.

இது உண்மை. என்றாலும் பாவியான மனிதன் இவ்வண்ணமாக ஆண்டவர் பேரில் நம்பிக்கை வைக்கிறதில்லை. அவர் மனிதரை நீர்த்தூளியாக்கி, மனுப்புத்திரரை நியாயத்தீர்ப்புக்கு அழைப்பார் என்பதற்குத் திகில் அடைகிறான். இவ்வித திகிலை விட்டு ஆண்டவரே, தேவரீர் நீர் எங்களுக்கு அடைக்கலமானவர் என்று சொல்பவன் பாக்கியவான். நமக்காக மனிதனாகி நின்று இயேசுவினிமித்தம் பராபரன் நமதுமேல் கிருபை வைக்கிறார். இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் நாம் பிதாவண்டை வந்து அவருடைய தயவை அநுபவிக்கிறோம். இந்த விசுவாசத்தின் பிரகாசத்தினால் வருஷ முடிவிலும் நமது நாட்களின் முடிவிலும் நாம் ஜீவ வெளிச்சம் உள்ளவர்களாயிருக்கலாம்.

ஜெபம். காப்போம், என் சாவுவேளை சேரும்,
இதெத்தனை சமீபமோ, என் ஜீவ ஓட்டம் நிறைவேறும்
அவஸ்தை எப்போ சாலுமோ. ஆ! கிறிஸ்துவின் இரத்தமே
மரிப்பேனே, கர்த்தரே, சுவாமி, ஆமேன்.

சங். 90, அல்லது ஏசா. 61, 1-11 வாசிக்கவும்.

வருஷப்பிறப்பின் பண்டிகை.

பி. 27, 1. 2.

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றென்றைக்கும் அவரே. எபி. 13, 8.

இன்று தேவ கிருபையால் ஒரு புது வருஷத்தைக் கண்டோம். இக்காலில் ஒருவரொருவர் வாழ்த்தி ஆசீர்வாதங் கூறிக்கொள்வார்கள். இந்த ஆசீர்வாதங்களெல்லாம் இவ்வருஷத்தில் நம்மிடத்தில் நிறைவேறுமென்பது நிச்சயமில்லை. ஆனால் பூமியின் வம்சங்களை எல்லாம் ஆசீர்வதிக்க வந்தவர் நம்மோடிருக்

தால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்போம். இந்தப் புதிய வருஷத்திலும் அவர் நம்மைப் பாவத்தினின்று மீட்டு இரட்சிக்கும் தமக்குப் பிரியமான வேலையை நம்மிடத்தில் செய்யத் திருவுளங்கொண்டிருக்கிறார். இயேசு என்பவர் பலத்த இரட்சகர். அவரோடு நீ இப்புதிய வருஷத்தைத் தைரியமாய்த் துவக்கு; அப்போது எல்லாம் ஆசீர்வாதமாய் முடியும். நீ அவரை அவருடைய திருவசனத்தில் கண்டுபிடிக்கலாம். அவர் அதில் உனக்குத் தீர்க்கதரிசியும் பிரதான ஆசாரியரும் இராசாவுமாகிய கிறிஸ்துவாக அகப்படுவார். தேவவசனம் சுத்தமாய் அறிக்கையிடப்படுமிடத்தில் கிறிஸ்து தீர்க்கதரிசியாக நின்று பின்செல்லும் அடையாளங்களினால் தமது வசனத்தைப் பெலப்படுத்துகிறார். பாவிகள் பாவமன்னிப்பையும் ஒப்புரவாகுதலையும் தேடிப் பரிசுத்தமாவதற்குப் பிரயாசப்படுமிடத்தில் அவர் பிரதான ஆசாரியராக நடுவில் நின்று அவர்களுடைய பாவங்களை மன்னித்து அவர்களைத் திடப்படுத்துகிறார். தேவ பிள்ளைகள் நடுவில் அவர் இராசாவாக நின்று அவர்களைச் சகல மோசத்திற்கும் விலக்கிக் காத்து மோட்சத்திற்கு வழிநடத்திக்கொண்டுபோகிறார். இத்தனை திரளான ஆசீர்வாதங்களை இரட்சகர் இப்புது வருஷத்திலும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! உமது அளவற்ற கிருபையினால் நாங்கள் மறுபடியும் ஒரு வருஷத்தை முடித்து ஒரு புது வருஷத்தைத் தொடங்கினோம். எங்களுக்கு இவ்வருஷத்தில் நேரிடுவது இன்னதென்று தெரியாது. ஆனால் தேவரீர் அதை அறிவீர். ஆகையால் எங்கள் கவலைகளை எல்லாம் உமதுபேரில் எறிந்துவிடுகிறோம். தேவரீர் எங்களுக்காக விசாரிப்பாயிருந்து உமது திருநாமத்திற்கு மகிமை வரப்பண்ணும். சுவாமி, ஆமேன்.

மத். [illegible], 13-18. அல்லது சங். 100 வாசிக்கவும்.

ஜனுவரி மீ 2 உ.

பி. 26, 5-7.

[illegible]டைய ஆவி என்மேலிருக்கிறார், ஆனபடியினாலே தரித்திரருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கவும், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் குருடருக்குப் பார்வை அடைதலையும் பிரசங்கிக்கவும், நொறுங்குண்டவர்களை மன்னித்தனுப்பவும் கர்த்தருடைய பிரியமான வருஷத்தைப் பிரசங்கிக்கவும் என்னை அபிஷேகம்பண்ணி அனுப்பினார். லூக். 4, 18. 19.

இவ்வாக்கு ஏசாயாவின் ஆகமத்தில் பராபரனுடைய ஊழியக்காரனைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. இதே வார்த்தைகளை நமது கர்த்தர் ஒரு ஓய்வுநாளில் நாசரேத்தூர் ஜெபாலயத்தில் வாசித்துக்காட்டி, இவை உலக இரட்சகராகிய தம்மையே குறிப்பதாகச் சொன்னார். இந்த வாக்கின் பிரகாரம் மேசியாவானவர் இஸ்ரவேலின்மேல் கர்த்தருடைய பிரியமும் கிருபையும் இறங்கிவரும் ஒரு காலத்தை அதாவது கர்த்தருடைய பிரியமான வருஷத்தைத் தெரிவிக்கவேண்டும். அவர் இவ்வுலகத்தில் வந்ததோடு இந்த மகிமையான காலம் உதித்தது. நாம் தொடங்கின புதிய வருஷமும் அதில் ஒரு பாகம் ஆகையால் இந்தப் புதிய வருஷம் கர்த்தருடைய பிரியமும் கிருபையும் நிறைந்த வருஷமென்று தேவ வசனம் சொல்லுகிறது. இப்போது உன் சுமைகளோடு நீ அவரண்டை வா. உனக்குள்ள எல்லாக் கவலைகளையும் அவர் காலண்டை போடு. ஒருவேளை இந்தப் பொல்லாத உலகில் இக்ஷணம் நீ அலைக்கழிக்கப்படுகிறாய். பசியும் வருத்தமும் இளைப்பும் தவிப்பும் உன்னை வாட்டுகிறது. அப்படியானால் நொந்து காயப்பட்ட உன் இருதயத்தை இயேசுவண்டை கொண்டுவா.

குத்துண்ட இருதயத்தை அவர் கட்டுப்படுத்துவார். இயேசுவை நோக்கிக் கூப்பிடு அவர் உன்னைப் பாவத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பார். இதுவே அவருக்குப் பிரியமான வேலை. நீ குருடனைப்போல் முன்னும் பின்னும் வழி தெரியாமல் அலைய வேண்டாம். அவரண்டை வா. அவர் குருடருக்குப் பார்வையை அளிக்கிறவர். நீ தரித்திரனானால் அவரண்டை போ. அவர் உன்னைப் பரம நன்மைகளால் சீமானாக்குவார். இவ்விதமான நன்மைகளையெல்லாம் தேவன் அளிக்கக் காத்திருக்கிறார். இதுவே கர்த்தருடைய பிரியமான வருஷம்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! இவ்வுலகத்தில் துன்பத்தில் மூழ்கி அழியும் பாவிகளுக்குத் தேவரீர் கர்த்தருடைய பிரியமான வருஷத்தைக் கொண்டுவந்தீர். இனி நாங்கள் இம்மையில் கெட்டுப்போகத் தேவையில்லை. தேவரீருடைய தழும்புகள் எங்களைக் குணமாக்குகிறது. கர்த்தாவே! நீர் அளிக்கும் அந்தப் பாக்கியத்தையடைந்து இப்புதிய வருஷத்திலும் உமக்குப் பிரியமான பிள்ளைகளாய் நடக்க எங்களுக்குக் கிருபைசெய்தருளும். சுவாமி, ஆமேன்.

மத். 2, 19-23. அல்லது ஏசாயா 63: 1-19 வாசிக்கவும்.

ஜனுவரி மீ 3 உ.

டு. 27, 3. 4.

எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்களே. அதெப்படியென்றால் கிறிஸ்துவுக்குள்ளாக எத்தனைபேர் ஞானஸ்நானம் பெற்றீர்களோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்கள். கலாத். 3, 26. 27.

வருஷப்பிறப்புப் பண்டிகை திருவாக்கியத்திலுள்ள இந்த வார்த்தைகள் நமது ஞானஸ்நானத்தை நமக்கு நினைப்பூட்டுகின்றன. ஒரு புதிய வருஷத்தின் துவக்கத்தில் நாம் பெற்ற ஞானஸ்நானத்தை நினைப்பது தகுதி. பரிசுத்த ஞானஸ்நானத்தினால் நீ பராபரனுடைய பிள்ளையானாய். இயேசு கிறிஸ்துவின் பிதாவானவர் இதினால் உனக்கும் பிதா ஆனார். இதினால் நீ புதுப்பிறப்பைத் தரித்துக்கொண்டு பராபரனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்ற பரிசுத்த ஜனத்தோடு சேர்க்கப்பட்டாய்.

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் பரிசுத்த ஜனம். அந்த ஜனத்தின் அறிகுறி கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமே. கிறிஸ்துவின் இரத்தம் நம்மை எல்லாப் பாவமும் நீங்கச் சுத்திகரிக்கிறது என்பது அந்த விசுவாசத்தின் பொருள். அந்த விசுவாசம் கிறிஸ்துவின் நீதியைப் பற்றிக்கொண்டு இது என் அலங்காரம். இது என் கலியாண வஸ்திரம். இதை நான் உடுத்திக்கொண்டு தேவனுக்கு முன்பாக நிற்பேன் என்று சொல்லும்.

இந்த விசுவாசம் ஞானஸ்நானத்தில் பிறந்தது. அப்போது நீ கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டாய். அவரோடு உன்னான ஐக்கியமானாய். தேவ குமாரனாகிய அவரால் நீயும் தேவ பிள்ளையானாய்.

பராபரனுடைய பிள்ளையே! இந்த விசுவாசம் உன்னிடத்திலும் உன் குடும்பத்தாரிடத்திலுமிருக்கக் கவலையாயிரு. நீ பரிசுத்த ஞானஸ்நானத்தினாலடைந்த புதிய ஜீவனை உன் வார்த்தையிலும் நடக்கையிலும் விளங்கப்பண்ணு.

ஜெபம். பரம பிதாவே! உமது நேசகுமாரனால் எங்களை உமக்குப் பிள்ளைகளாகத் தெரிந்துகொண்டு எங்களுக்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் எங்களுக்குச் செய்ய மனதாயிருக்கிறீர். ஆண்டவரே! நாங்கள் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்கள் என்று எப்போதும் நினைத்து, அவரைப் பற்றும் விசுவாசத்தில் முடிவுமட்டும் நிலைத்திருந்து, எங்கள் பரம சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ள எங்களுக்குக் கிருபைசெய்தருளும். சுவாமி, ஆமேன்.

லூக். 2, 39-42. அல்லது ஏசா. 65, 1-18 வாசிக்கவும்

ஜனுவரி மீ 4 உ.

பி. 29, 1. 2.

அப்போது இயேசு கலிலேயாவிலிருந்து யோர்தானருகே யோவானண்டைக்கு, அவனால் ஞானஸ்நானம் பெறவந்தார். ஆனால் யோவான் அவருக்குத் தடைபண்ணி, நான் உம்மால் ஞானஸ்நானம் பெறத்தேவையாமே, நீர் என்னண்டைக்கு வருகிறீரோ என்றான். இயேசு அவனுடனே: இப்போது இடங்கொடு, எனெனில் இப்படி நீதியை எல்லாம் நிறைவேற்ற நமக்கு அடுத்ததாயிருக்கிறது என்று மறுமொழிசொன்னார். அப்போது அவருக்கு இடங்கொடுத்தான். மத். 3, 13-15.

பாவமற்ற இயேசு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறத்தேவையில்லை. என்றாலும் இயேசுநாதர் பாவிகளிலொருவராக வந்து யோவானால் ஞானஸ்நானம் பெற ஆசிக்கினார். நாம் நமது பாவங்களைத் தமதுமேல் எடுத்துக்கொண்டு யோர்தானின் வெள்ளத்தில் மாத்திரமல்ல சிலுவை, மரணம், என்ற பாடுகளின் வெள்ளத்திலும் இறங்க ஆயத்தமாயிருப்பதைக்காட்ட நமது நிமித்தம் ஒரு பாவியைப்போல ஞானஸ்நானம் பெற வந்தார். இப்படி அவர் நீதியை எல்லாம் நிறைவேற்றி, நமக்குப் பதிலாளியாகி நித்திய நீதியை நமக்குச் சம்பாதித்தார். பாவமன்னிப்பினால் நாம் பெற்றுக்கொள்ளுகிற நீதி இதுதான். இந்த நீதி கிடைத்தால்தான் நாம் பராபரனுக்கு முன்பாக நிற்கக்கூடும்.

இயேசுவின் ஞானஸ்நானம் நமது ஞானஸ்நானத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் அவருடைய மரணத்துக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம் என்றும் ஞானஸ்நானத்தின் மூலமாய் அவருடைய மரணத்தினால் உண்டான பலனில் நாமும் பங்குபெற்றோம் என்றும் அப்போஸ்தலன் சொல்லுகிறான். கிறிஸ்துவின் மரணம் ஏழைப்பாவிகளாகிய நமக்கு வானத்தைத் திறந்தது. இனித் தாராளமாய்ப் பிதாவண்டை போகலாம். பரிசுத்தாவியானவர் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவந்து நம்மைக் கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்குகிறார். இப்போது அவருடைய நீதி நம்முடைய நீதியாகும். பாவமும் மரணமும் ஆளும் இவ்வுலகத்தில் நமக்கு மோக்ஷம் திறந்திருக்கிறது. நம்முடைய பிரயாசங்கள் அல்ல, இயேசுநாதருடைய பிரயாசங்களே நமக்கு ஆறுதல்; ஞானஸ்நானத்தில் நமக்குக் கிடைத்த நன்மைகளை நாம் துணிகரமாய்த் தள்ளாத பக்ஷத்தில் பூமியிலுள்ள எந்த வல்லமையும் நரகமுங்கூட நம்மைவிட்டு மோக்ஷபாக்கியத்தைக் கொள்ளையிட்டெடுக்க முடியாது.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! தேவரீர் உமது ஞானஸ்நானத்தினால் எல்லா நீதியையும் நிறைவேற்றி எங்களுக்காகப் பிணைப்பட்டுச் சாபமானீர். எல்லாப் புத்திக்கும் எட்டாத இந்த அன்புக்காக உம்மைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம். ஆ, கர்த்தாவே! நாங்கள் உம்மைப்போல எல்லாவற்றிலும் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்ற எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும். சுவாமி, ஆமென்.

மத். 4, 1-11. அல்லது எசா. 66, 10-24 வாசிக்கவும்.

ஜனுவரி மீ 5 உ.

பி. 140, 1. 2.

அப்போது அவரண்டைக்குப் பிள்ளைகளை, அவர் அவைகளைத் தொடுகிறதற்காகக் கொண்டுவந்தார்கள். ஆனால் சீஷர், அவைகளைக் கொண்டுவந்தவர்களை அதட்டினார்கள். இயேசு அதைக்கண்டு, தாங்கல் அடைந்து அவர்களுக்குச் சொன்னதாவது: பிள்ளைகள் என்னண்டையில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவைகளைத் தடைபண்ணாதேயுங்கள். ஏனென்றால் பராபரனுடைய இராச்சியம் அப்படிக்கொத்தவர்களுடையதாயிருக்கிறது. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் ஆராகிலும் சிறுபிள்ளையைப்போலப் பராபரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாதேபோனால் அதற்குள் பிரவேசிக்கமாட்டான் என்று சொல்லி அவைகளை அணைத்துக்கொண்டு அவைகள்மேல் கைகளை வைத்து அவைகளை ஆசிர்வதித்தார். மாற். 10, 13-16.

நாமும் ஒரு காலத்தில் பிள்ளைகளாயிருந்தோம். இயேசுநாதர் நம்மைத் தொட்டு ஆசீர்வதிக்க, நம்முடைய தாய்தகப்பன்மார் நம்மை ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவந்தார்கள். விசுவசியாத பிள்ளைகளுக்கு இயேசுநாதர் யாதொன்றையும் செய்ய முடியாதென்று நினைத்துக் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம்கொடுக்க வேண்டாம் என்று சொல்லுகிறவர்கள் எப்போதும் இருப்பார்கள். ஆகிலும் பெத்லெகேமில் தாமே ஒரு பிள்ளையாய்ப் பிறந்தவர் பிள்ளைகளைத் தமது மார்போடு அணைத்துக்கொள்ளாமல் அவர்களைத் துரத்திவிடுவதில்லை. எல்லா மனிதருக்கும் ஒத்தாசைபண்ணி எல்லாரையும் வானராச்சியத்தில் சேர்த்து இரக்ஷிக்க விரும்புகிறவர், பிள்ளைகளை அதற்குப் புறம்பாக்குவதில்லை. இயேசு [illegible] விசுவசித்தவர்களுக்குமாத்திரம் இரக்ஷகரல்ல. ஒருவன் வளர வளர வான இராச்சியத்துக்குள் பிரவேசிக்க அதிக சாமர்த்தியத்தைப் பெறுவதுமில்லை. நாம் வளர வளரப் பாவமும் கூடவே வளருகிறதென்பது எல்லாருக்கும் தெரியும். ஆத

வரக் கூடிய சீக்கிரத்தில் இது முதலானதுகளையும் ஞானஸ்நானத் துக்குக் கொண்டுவரவேண்டியது நம்முடைய கடமை.

வான இராச்சியத்தில் நாம் பங்குபெறவும், இழந்து போன பாக்கியத்தைத் திரும்ப அடைந்து காத்துக்கொள்ளவும் வேண்டுமானால், பிள்ளைகளுக்கேற்ற சிந்தை நமக்குத் தேவை. ஒரு பிள்ளையைப்போல அவ்வளவு கபடில்லாமல் சந்தோ ஷத்தோடும் வாங்கிக்கொள்ள ஒருவருக்கும் தெரியாது. கொடுப் பதே தேவனுக்குரியது. வாங்கிக்கொள்வதே நமக்கடுத்தது. தேவன் நமக்குக் கொடுக்கும் திருவசனத்தையும் சாக்கிரமெந் துகளையும் பாவமன்னிப்பையும் வாங்கிக்கொள்ள, நமக்கு மனது உண்டானால் சந்தோஷமாய் மோட்ச வீட்டைப் பற்றிக்கொள்ளும் பிள்ளைகளைப்போல பரமபிதாவிடம் தேவனிடமுள்ளவை எல்லாவற்றையும் வாங்கிக்கொள்ளலாம். ஆனாலும் சிறு பிள்ளையைப்போல் பரா பரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாதவன் அதற் குள் பிரவேசிக்கமாட்டான் என்று இரட்சகர் கண்டிப்பாய்ச் சொல்லுகிறார். ஆகையால் நாம் நமது பழைய சிந்தனைகளை விட்டுவிட்டு பிள்ளைக்கொத்த நம்பிக்கையோடும் அன்போடும் நமது இரட்சகரை அண்டிக்கொள்வோமாக.

ஜெபம். எங்கள் நிமித்தம் சிறு பிள்ளையாகப் பிறந்த மீட் பரே! உமது சிந்தையை எங்கள் இருதயங்களில் உண்டாக்கியருளும். உமது அன்பின் நிலை அறியப்பட உமது இரக்கத்தை எங்களுக்குத் தந்தருளும். சுவாமி, ஆமென்.

யோ. 1, 29-34. அல்லது எபி. 1, 1-10 வாசிக்கவும்.

மகிமை விளக்கப் பண்டிகை.

கீ. 37.

ஏரோதே இராசாவின் காலத்திலே யூதேயாவின் பெத்லகேமிலே இயேசு பிறந்த பின்பு, இதோ சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து எருசலேமுக்கு வந்து: பிறந்திருக்கிற யூதருடைய இராசா எங்கே? ஏனெனில் அவருடைய நட்சத்திரத்தைக் கிழக்கிலே கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள். மத். 2, 1. 2.

இன்று மகிமை விளக்கப் பண்டிகையை ஜனவரி மீ 6-ம் உ.யில் கொண்டாடுகிறோம். பராபரன் அஞ்ஞானிகளைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தி இயேசுவின் மகிமையைப் புறச் சாதிகளுக்கும் காண்பித்த செய்தியை நினைத்து இன்று அவரைத்

துதிக்கிறோம். சோதிட சாஸ்திரிகளான அஞ்ஞானிகள் ஒரு அதிசய நட்சத்திரத்தைக் கண்டார்கள். பிலேயாமுடைய கால முதற்கொண்டு எல்லாரையும் இரட்சிக்கப்போகிறவர் பிறந்தால் ஒரு நட்சத்திரம் தோன்றும் என்கிற தீர்க்கதரிசனம் கிழக்குத் தேசத்தில் வழங்கிவந்தது.

இயேசு முழுலோகத்தின் இரட்சகரானதால் அவர் அஞ் ஞானிகளுக்கும் இரட்சகர்தான். பராபரன் இதுவரையில் புறச் சாதிகளை அவர்கள் சொந்த வழியில் போகவிட்டிருந்தார். இயேசு வெளிப்பட்ட இப்போதோ அவர் தமது வெளிச் சத்தை வெகுதூரம் பிரகாசிக்கச்செய்து அஞ்ஞானிகளும் இயே சுவின் மூலமாய் இரட்சிக்கப்படும்படிக்கு அவர்களுக்கு வழியைக் காண்பிக்கிறார். யூதரும் புறச்சாதியாரும் சேர்ந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து அவரைப் பணிந்துகொள்ளவேண்டும். அவ ரில் சகல சாதிகளும் இணைக்கப்படும்.

அஞ்ஞானிகளைக் கிறிஸ்துவண்டை வழிநடத்துவதே மிஷி யோன் வேலை. தேவன் அந்த வேலை நடக்கிற மனதாயிருக்கி றார். நாம் இதற்காக என்ன செய்கிறோம்? நாம் அஞ்ஞானிக ளின் பின் சந்ததியார். நமது முன்னோர் ஒருகாலத்தில் மிஷி யோன் ஊழியத்தைக்கொண்டு கிறிஸ்துவண்டை வந்தார்கள். இன்னம் தூரத்திலிருக்கிறவர்கள் கிறிஸ்துவண்டை வருகிறதற்கு கிறிஸ்தவர்களாகிய நாம் அதிக பிரயாசைப்படவேண்டியது. தாங்கள் பெற்ற நன்மைகளைச் சரியாய் உணர்ந்திருந்தவர்கள் அனைவரும் பிறருக்கும் கொடுக்க ஆவலாயிருப்பார்கள்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உமது வெளிச்சத் தினால் எங்களைப் பிரகாசிப்பித்து, அந்தகாரத்திலிருந்து உமது ஒளியண் டை கொண்டுவந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் இந்த தயவை நன்றாய் அறிந்து அனுபவித்தவர்களாய் உமது உத்தரவின்படி இன்னம் உம்மை அறியாதவர்களை உம்மண்டை அழைத்துவர, எங்களுக்கு ஒத் தாசை செய்யும், சுவாமி, ஆமென்.

1 யோவா. 1, 35-44. அல்லது எபே. 3, 11-25 வாசிக்கவும்.

ஜனவரி மீ 7 உ.

கீ. 383, 1-3.

[illegible] வெளிச்சமாகு; ஏனெனில் உன் வெளிச்சம் வருகிறது; கர்த்தருடைய மகிமை உன்மேல் உதிக்கிறது. இதோ, இருள் பூமியையும், அந்தகாரம் ஜனசதனங்களையும் மூடும். ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிக்கி றார். உன்மேலே அவருடைய மகிமை காணப்படும், உன் வெளிச்சத்தை

டைக்குச் சாதிகளும் உனக்கு உதிக்கிற ஒளிவண்டைக்கு இராசாக்களும் நடந்து வருவார்கள். எசா. 60, 1-3.

சுவிசேஷ பிரசங்கத்தினால் கர்த்தருடைய மகிமை நமது மேல் உதயமாயிற்று. அவருடைய கிருபையின் வெளிச்சத்தில் நாம் செம்மையாய் நடப்போம். அவரைப் பற்றும் விசுவாசத்தினால் பாவ இரவு நம்மைவிட்டு நீங்கிப்போம். அவரால் பாவம் எல்லாம் மன்னிக்கப்பட்டது, துன்பம் என்ற அந்தகாரம் நம்மைச் சூழுங் காலத்தில் அவர் நம்மை ஆற்றித்தேற்றுவார். மரணப் பள்ளத்தாக்கிலும் அவர் நம்மைக் கை பிடித்துப் பிதாவண்டை கொண்டுபோவார். இதுதான் கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கை.

இவ்வெளிச்சத்துக்கு இன்னம் தூரமாயிருந்து பாவ இருட்டாலும் மரண அந்தகாரத்தினாலும் இன்னும் சூழப்பட்டிருக்கிற லட்சக்கணக்கான ஜனம் நம்பிக்கையற்று, கெட்டலைந்து திரிகிறார்கள். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின மெய்யான தேவனை அவர்கள் அறியார்கள். அவர் அனுப்பின இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவையும் அறியார்கள். அவர்கள் குருடரைப்போல் வழிதப்பி, மரத்தினாலும் கல்லினாலும் செய்த விக்கிரகங்களிடத்தில் ஒத்தாசை தேடி, வெளியின் மிருகங்களையும் வானத்து நக்ஷத்திரங்களையும் வணங்கி ஆராதிக்கிறார்கள். அவர்கள் நடத்தையும் இருளாயிருக்கிறது. பொய்யும், வஞ்சகமும், வாயினால் சொல்லக்கூடாத அக்கிரமங்களும், அவமானமும், அவர்களில் அதிகம். தேவனைச் சிநேகிக்கும் சிநேகமும் பிறத்தியானைச் சிநேகிக்கும் சிநேகமும் அவர்களிடத்தில் காணோம். சாகும் வேளையிலோ திகிலும் கலக்கமுமுற்று, நம்பிக்கையின்றி அந்தகாரம் நிறைந்த இடத்துக்குப் போகிறார்கள்.

இதைப் பார்க்கிற நாம் என்ன செய்வோம். சூரியனால் வெளிச்சம்பெற்ற சந்திரன் தன் வெளிச்சத்தை வெகுதூரம் வீசி, இராவின் இருட்டைத் துரத்துவான். இயேசு என்பவர் நீதியின் சூரியன். நாமோ சந்திரர். நீ அவருடைய வெளிச்சத்தைக்கொண்டு இருட்டில் வசிக்கும் சாதிகளுக்கு நித்திய இரட்சிப்பைக் காண்பி.

ஜெபம். பரமண்டலத்திலுள்ள அன்புள்ள பிதாவே! இன்னம் அந்தகாரத்திலும் மரண நிழலிலும் வசிக்கிறவர்களை நாங்கள் மறந்துவிடாதபடிக்கு எங்கள் இருதயங்களில் அனலான சிநேகத்தைத் தந்தருளும். அவர்கள் எங்களோடுகூட உம்மண்டைத் திரும்பி உம்மைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கவும் தேவரீர் ஒருவரே மெய்யானவரென்று உம்மைப் பணிந்துகொள்ளவும் எங்களைக் கொண்டு அவர்களைக் கு[illegible]தியருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 1, 45-51 அல்லது எரேமி. 5, 1-6. வாசிக்கவும்.

ஜனுவரி மீ 8 உ.

பீ. 387, 1. 2.

இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் காணப்பட்டது. என்னவெனில் மக்கதோனிய மனுஷன் ஒருவன் வந்து நின்று, நீ இக்கரைக்கு மக்கதோனியாவிலே வந்து எங்களுக்கு ஒத்தாசை செய் என்று அவனை வேண்டிக்கொள்ளுகிறதாயிருந்தது. அவன் அந்தத் தரிசனத்தைக் கண்டபோது, கர்த்தர் எங்களை அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வரவழைத்தார் என்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு உடனே மக்கதோனியாவுக்குப் புறப்பட்டுப் போகப் பார்த்தோம். நடபடி. 16, 9-10.

பவுல் அப்போஸ்தலன் இரண்டாம் தரம் பயணம் பண்ணும்போது துரோவாவில் அவனுக்கு மக்கதோனிய மனுஷன் ஒருவன் காணப்பட்டு ஒத்தாசைசெய்ய வேண்டிக்கொண்டான். அந்த மனுஷன் ஒரு கிரேக்கன். கிரேக்கர் வித்தையிலும், சாஸ்திரத்திலும், படிப்பிலும், ஆஸ்தியிலும் மற்ற ஜாதிகளைப்பார்க்கத் தேர்ந்தவர்கள். இவை எல்லாம் அந்தமனுஷனுக்குப் பிரயோசனப்படவில்லை. இவை எல்லாம் மனச்சாட்சியின் எங்கலையும், இருதயத்தின் வாஞ்சையையும் திருப்தியாக்காது. பவுல் அப்போஸ்தலன் பிரசங்கிக்கும் பிரசங்கம் ஒன்றே அந்த மனுஷனுக்கு வேண்டிய ஒத்தாசையைச் செய்யக்கூடியது.

எல்லோரையும் இரட்சிக்கப் பராபரன் சித்தமாயிருக்கிறார் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறான். அஞ்ஞானிகள் எழுதவும், வாசிக்கவும், கணக்கிடவும் கற்றுக்கொண்டாலும், ஐரோப்பியருடைய சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்தாலும், அதெல்லாம் இரட்சிப்புக்கு உதவாது. கிரேக்கர் லௌகிக விஷயங்களில் அடையக்கூடிய விருத்தி எல்லாம் அடைந்திருந்தும், அவர்களுக்கு ஒன்றில் ஒத்தாசை தேவை. இறங்கிவந்து எங்களுக்கு ஒத்தாசை செய் என்று அந்த மனுஷன் அப்போஸ்தலனை வேண்டிக்கொண்டான். இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷம் ஒன்றே நம்முடைய ஆத்துமத்தைத் திருப்திபண்ணக்கூடியது. அந்தகாரத்தில் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு இந்த ஒத்தாசையைப் பண்ணக் கர்த்தர் நம்மையும் அனுப்புகிறார். நீங்கள் லோகமெங்கும் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்கிற கட்டளை உனக்கும் செல்லும். நீ தானே போகக்கூடாவிட்ட[illegible] [illegible]யின் போக உதவியாயிருக்கிற[illegible] பின் [illegible]மான [illegible] ஆட்களை அனுப்பவும், அவருடைய இராச்சியம் பூமியின் கடைசிமட்டும் பரம்பவும் ஜெபம்செய்வது உன் கடமை.

ஜெபம். எங்கள் பரம இராசாவே! உமது இராச்சியம் [illegible] வந்து விட்டது என்று எல்லாருக்கும் தெரிவிக்கப் பூமி எங்கும் உமது தூதரை அனுப்புகிறீர். லோகத்தின் பாவத்தைத் தீர்த்த தேவரீர் [illegible] சத்தாருக்கு ஒத்தாசை பண்ணக் கூடியவர். உமது [illegible]நாமம் என்றும் ஸ்தோத்திரிக்கப்படுவதாக, சுவாமி, ஆமென்.

லூக். 4, 14-21. அல்லது எபே. 6, 1-15 வாசிக்கவும்.

ஜனுவரி மீ 9 உ.

ஞ. 387, 5-6.

பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவுக்கு வந்து சேர்ந்து சபையைக் கூட்டி, பராபரன் தங்களோடிருந்து, எத்தனை பெரிய காரியங்களைச் செய்தார் என்கிறதையும், அவர் புறசாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார் என்கிறதையும் அறிவித்தார்கள். அப். 14.

பவுலும் பர்னபாவும் முதல் பிரயாணத்தை முடித்து, அந்தியோகியாவுக்குத் திரும்பிவந்து, கூடியிருந்த சபையாருக்குப் பராபரன் செய்த பெரிய காரியங்களை அறிவித்தார்கள். இது முதலாம் மிஷியோன் ஸ்தோத்திரப் பண்டிகை. மிஷியோனில் உழைக்கிறவர்கள் இப்போதும் சுவிசேஷத்தின் ஜெயத்தை சபைக்குத் தெரிவித்து வருகிறார்கள். மிஷியோன் பண்டிகைகளில் சபையைக் கூட்டி மிஷியோன் வேலை நடக்கும் இடங்களில் சம்பவிக்கும் பராபரனுடைய கிரியைகளை விபரிக்கிறார்கள். அந்தந்த தேசமும் ஜாதியும் கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்தது இப்படி என்றும், கர்த்தருடைய இராச்சியம் பரம்பி, விக்கிரகக் கோவில்கள் வரவர இடிந்துபோய் அஞ்ஞான மார்க்கத்தை விட்டு ஞானஸ்நானம் பெற்றவர்களின் தொகை வருஷா வருஷம் அதிகரித்துக் கொண்டே வருகிறது எப்படியென்றும் விபரித்துச் சொல்லுகிறார்கள்.

இதை எல்லாம் கேட்கக் கிறிஸ்தவர்களாகிய நாம் அதிக ஆவலாயிருக்கவேண்டியது. இதெல்லாம் கர்த்தருடைய கிரியை! பவுல் மிஷியோன் தலைவன் சொல்லுகிறபடி பராபரன் தாமே தமது வேலையை நடப்பிக்கிறார். மிஷியோனில் உழைக்கிறவர்களுக்கு அவர் வழியை ஆயத்தம்பண்ணுகிறார். அவர் [illegible] மனங்களைத் திறந்து போகிறார்; அவர்களுக்குத் [illegible] சாகத்தையும் கட்டளையிடுகிறார். வசனத்தை [illegible]வர்களின் இருதயத்தை அசைக்கிறார். அவர்களும் விசுவாசத்திற்கு வந்து, கிறிஸ்துவின் பரிபூரணத்திலே கிருபையின்மேல் கிருபையைப்பெற

அவர் தமது வார்த்தைக்குப் பெலன் கொடுக்கிறார். கர்த்தர் இன்னும் தமது சபையோடிருக்கிறாரென்று மிஷியோன் நமக்குக் காண்பிக்கிறது. அவருடைய வசனம் இன்னம் ஜீவனும் வல்லமையுமுள்ளது.

ஜெபம். மகிமையின் இராசாவே! உமது இராச்சியத்தை எங்கும் பரம்பசெய்து, வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் எல்லாரும் உம்மைப் பணிந்துகொள்ள உமது சுவிசேஷத்தை எங்கும் தெரிவிக்கப்பண்ணி, இந்த உலகத்தை நியாயந்தீர்க்கச் சீக்கிரம் வருவீர். ஆண்டவரே! நாங்களும் உமது வல்லமையை அறிந்து பயத்தோடு உம்மை வழிபட எங்களுக்கு அனுக்கிரகஞ்செய்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 4, 22-30. அல்லது எபே. 8, 4-9 வாசிக்கவும்.

ஜனுவரி மீ 10 உ.

ஞ. 34, 3. 4.

சாஸ்திரிகள் புறப்பட்டுப்போன பின்பு, இதோ, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டுச் சொன்னதாவது: நீ எழுந்திருந்து பிள்ளையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லுமட்டும் அவ்விடத்தில் இரு; ஏனென்றால் ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான் என்றான். [illegible] அவன் எழுந்திருந்து, இராவிலே பிள்ளையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப் போனான். மத். [illegible], 13-14.

இயேசுபிள்ளை முன்னணையிலிருக்கும்போதே துன்பத்தை அநுபவிக்கவேண்டியது. கொடியவனாகிய ஏரோதே இராசபாலகனுடைய உயிரை வாங்கப்போகிறான். கிழக்குச் சாஸ்திரிகள் பணிந்துகொள்ள வந்த அப்போது பிறந்த இராசாவினால் தன் ஆளுகை போய்விடும் என்று பயந்து இயேசுபிள்ளையைக் கொலைசெய்யப் பார்க்கிறான். பராபரனோ அவனுடைய பொல்லாத யோசனையை அவமாக்குகிறார். அவர் தமது தூதனை அனுப்பித் தமது பரிசுத்த பிள்ளையைப் பாதுகாக்கவும், யோசேப்பைக் கொண்டு [illegible] பத்திரமான அடைக்கல ஸ்தலத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கவும் ஏற்பாடுபண்ணினார்.

[illegible]மிலோ கொலையுண்ட குழந்தைகளின் [illegible] இரத்தம் அழுகையும் புலம்பலும் மிகுதி. இயேசுவுக்காக மரித்த இவர்கள் முதல் இரத்தசாட்சிகள். அவர்கள் ஏன் இப்படி மாண்டு போகவேண்டும்? இயேசுபிள்ளையைக் காப்பாற்றினவர் இந்தப்

பிள்ளைகளையும் காப்பாற்ற முடியாதா? முடியும். பெற்ற மனம் வருந்த, கல்லறையில் வைத்த பிள்ளைகளை இன்றைக்கும் அவர் உயிரோடே எழுப்பமுடியும். கர்த்தர் ஏன் சிலரை முன்றியும், சிலரைப் பிந்தியும் அழைத்து, சிலர் கொடியமரணமும், சிலர் சாதாரண மரணமும் அடையச் செய்கிறார். இந்தக் கேள்விகளுக்கு அவர் இப்போது பதில் சொல்லமாட்டார். மறுமையிலே நாம் அவரை ஒன்றும் கேட்கத் தேவையிராது. அவர்செய்ததெல்லாம் நன்றாயிருக்கிறதென்று அப்போது ஒப்புக்கொள்வோம். இவ்வுலகில் அவருடைய செயல்கள் அடிக்கடி நமக்கு விளங்காவிட்டாலும், ஒன்று நமக்குத் தெரியும். பராபரனைச் சிநேகிக்கிறவர்களுக்கு எல்லாக்காரியங்களும் நன்மைக்கென்று பலிக்கவேண்டும் என்பது. இதை நம்பினால் ஆறுதலடைவோம்.

ஜெயம், பரமபிதாவே! தேவரீர் உமது பிள்ளைகளாகிய எங்களை எல்லா மோசங்களுக்கும், துன்பங்களுக்கும் விலக்கிக் காப்பாற்றிவருகிறீர். உமது செட்டைகளின்கீழ் நம்பிக்கை வைத்திருக்கிறோம். தேவரீர் எங்களுக்கு அனுசாரியாயிருந்தால் எங்களுக்கு விரோதமாயிருப்பவன் ஆர்? உமது திருநாமத்திற்குச் சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக, சுவாமி, ஆமேன்.

யோ. 2, 1-25. அல்லது எரே. 9, 17-26 வாசிக்கவும்.

ஜனுவரி மீ 11 உ.

பி. 375, 1-2.

ஏரோதே இறந்தபின்பு, இதோ, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்கு எகிப்திலே காணப்பட்டு: நீ எழுந்திருந்து, பிள்ளையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப்போ; பிள்ளையின் பிராணனை வாங்கத்தேடினவர்கள் சென்றுபோனார்கள் என்றான். மத். 2, 19 20.

கொடிய ஏரோதின் அரசனுக்குப் பயங்கர முடிவு உண்டாயிற்று. அவன் நாட்களில் எரிதழல் [illegible]ரண்டாம்போல் கொடும் எரிவால் வாதிக்கப்பட்டான். உயிரோடிருக்கும்போதே [illegible] புழுக்கள் அவன் சரீரத்தை அரித்தன. அவன் புரிந்த கொடும் செயல்களினிமித்தமும், அநேகம் [illegible]களையும், பெத்[illegible] பாலகர்களையும் கொன்ற கொலை[illegible]த்தினிமித்தமும் [illegible] மனச்சாட்சி அவனைக்குத்தி வாதித்த[illegible]. [illegible]ல்லா தவர்களின் முடிவு பயங்கரம்.

இயேசு பாலகனோ [illegible]ரசனுடைய மூர்க்கத்துக்குத் தப்பி எகிப்து தேசத்தை வந்த[illegible]ந்தார். அத்தேசம் இஸ்ரவேலின்

முற்பிதாவாகிய யாக்கோபு தனது பிள்ளைகளோடு பஞ்சகாலத்தில் பத்திரமாய்த் தங்கியிருந்த தேசம்தான். பராபரன் தமது ஜனத்தை எகிப்திலிருந்து பரிசுத்த தேசத்துக்கு வழிநடத்தினவாறே தமது பிள்ளையாகிய இயேசுவையும் திரும்பக்கொண்டு வந்து தமது ஆலோசனையை நிறைவேற்றினர்.

[illegible]யின் பிராணனை வாங்கத் தேடினவர்கள் சென்றுபோனார்கள். இவ்வார்த்தையைத் திருச்சபை எக்காலத்திலும் கவனிக்கவேண்டியது. இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்கள் சென்றுபோனார்கள். இவரோ உயிரோடெழுந்து பிழைத்துக் கொண்டிருக்கிறார். கொடிய துன்பங்களினால் இயேசுவின் நாமத்தை வேர் அறுக்கப் பார்த்த ரோமராயரும் சென்றுபோனார்கள். இவரோ பிழைக்கிறார். தங்கள் வார்த்தையினாலும் புஸ்தகங்களினாலும் பத்திரிகைகளினாலும் அவரையும், அவருடைய இராச்சியத்தையும் அழிக்க விரும்பின பரிகாசக்காரரும் சென்றுபோனார்கள். இவரோ பிழைக்கிறார். தற்காலத்துப் பரிகாசக்காரரைப் பற்றியும் அவர்கள் மரித்து அழிந்துபோனார்களென்று சீக்கிரத்தில் சொல்லப்படும். இயேசுவைக்குறித்தோ அவர் என்றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிறார் என்று இதுவரைக்கும் சொல்லப்பட்டதுபோல் எக்காலத்திலும் சொல்லப்படும்.

ஜெயம், மகிமையின் இராசாவே! ஜாதிகள் கொந்தளித்து ஜனங்கள் விருதாக் காரியங்களைச் சிந்தித்தாலும், கர்த்தருக்கு விரோ[illegible], அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் இ[illegible]க்கள் எழும்பினாலும், பரமண்டலங்களில் வாசமாயிருக்கிற தேவரீர் அவர்களைப் பரிகாசம்பண்ணுகிறீர். ஆண்டவரே, எங்களையும் முழுத் திருச்சபையையும் காப்பாற்றியருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 3, 1-21. அல்லது எரே. 14, 1-22 வாசிக்கவும்.

ஜனுவரி மீ 12 உ.

பி. 372, 1-3. அல்லது 338, 1-2.

[illegible]லாங் கற்பனையாவது: உனக்கு நன்மை வருகிறதற்கும் நீ பூமியிலே [illegible]டித்திருக்கிறதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் [illegible]சங்கித்திருப்பாயாக.

இதற்கர்த்தம் என்ன? நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு நம்முடைய தாய்தகப்பன்மாரையும் எசமான்களையும் அசட்டைபண்ணாமலும் அவர்களுக்குக் கோபம் வருவிக்காமலும், அவர்க

ளைக் கனமாக எண்ணிக்கொண்டு அவர்களுக் கூழியஞ்செய்து கீழ்ப்படிந்து பட்சத்தையும் சங்கையையுங் காட்டி வரவேண்டும்.

நாளைக்காகக் குறிக்கப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தில் பன்னிரண்டு வயதான இயேசுபிள்ளை தமது பெற்றோரோடு நாசரேத்தூருக்குத் திரும்பிப்போய் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்று வாசிக்கிறோம். இதினால் இயேசுநாதர் [illegible] பணிவைக் கைக்கொள்வதற்கு ஒரு சிறந்த முன்மாதிரியை வைத்தார். பிள்ளைகள் பெற்றோரையும் பெற்றோர் ஸ்தானத்தில் இருக்கிற யாவரையுங் கனம்பண்ணவேண்டுமென்பது தேவ சித்தம். அவர்கள் இவ்வுலகில் கர்த்தருடைய பிரதிநிதிகளாயிருக்கிறபடியால், அவர்களை ஆதிக்கம் பெற்றவர்களாகவும் மேலானவர்களாகவும் எண்ணவேண்டும். நாம் இந்தத் தேவ கற்பனையை நிறைவேற்றும் விதம் லூத்தர் சொல்லும் அர்த்தத்தினால் விளங்கும். பெற்றோரையும் எசமான்களையும் அசட்டைபண்ணாமலும் அவர்களுக்குக் கோபம் வருவிக்காமலும் இருந்தால் இந்தக் கற்பனையை நிறைவேற்றுவோம். பெற்றோருக்குக் கனத்தையுங் கீழ்ப்படிதலையுஞ் செலுத்தாத பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு வெட்கத்தையும் மனநோவையும் உண்டுபண்ணித் தங்களைக் கண்டித்துப் புத்திசொல்லும் பெற்றோரைப் பரிகாசம் செய்து அவர்களுடைய தாழ்மைக்காக வெட்கப்பட்டு அவர்களுடைய ஆஸ்தியையும் உயிரையுஞ் சேதப்படுத்துவார்கள். அப்போது பெற்றோர் அவர்களைக் கர்த்தருக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டும்படியாய் நேரிடும்.

பெற்றோரைக் கனம்பண்ணுகிறவர்கள் இன்னதென்ன செய்வார்கள். அவர்களுக்கு ஊழியஞ்செய்து எல்லா விஷயத்திலும் அவர்களுக்கு உற்சாகமாய் உதவிபுரிந்து முதிர்வயதில் அவர்களைப் போஷித்துப் பராமரித்துத் தங்கள் பிள்ளைப்பிராயத்தில் அவர்களிடத்தில் அநுபவித்த நன்மைகளை மறவாமல் பதில் நன்மை செய்து அவர்களைத் தூக்கியெடுத்துப் படுக்கவைத்து எல்லாச் சகாயமும் மரியாதையும் பண்ணுவார்கள். தாங்கள் வாலிப வயதுக்கு வந்தும் அவர்களுடைய யோசனையைக் கேட்பார்கள். அவர்கள் தேவன் அருளின ஒரு ஆசீர்வாதம் என்று எண்ணுவார்கள்.

ஜெபம்: அன்புள்ள இயேசுவே! உமது அன்பினால் ஏவப்பட்டு இவ்வுலகில் இறங்கிவந்து உமது பிதா அருளின பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்து எங்களுக்கு நல்ல முன்மாதிரியை வைத்தீர். ஆண்டவரே! நாங்கள் எங்கள் பெற்றோருக்கும் அதிகாரிகளுக்கும் மனதாரக் கீழ்ப்படிந்து அவர்களைக் கனம்பண்ணுவதற்கு எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 3, 22-36 அல்லது எபேசி, 7, 5-17 வாசிக்கவும்.

மகி. விள. பண். பின். முதலாம் வாரம், ஞாயிறு.

ஏ. 14, 1-3.

இயேசு பெற்றோருடனே: நீங்கள் என்னைத் தேடினதேன்; என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களோ என்றார். அவர் தங்களுக்குச் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. லூக். 2, 49-50.

மரியாளும் யோசேப்பும் இந்த வார்த்தையை உணர்ந்துகொள்ளவில்லை. உன்னிடத்தில் பிறக்கப்போகிற பரிசுத்தமானது பராபரனுடைய குமாரன் என்று அழைக்கப்படும் என்று தேவதூதன் சொன்ன வார்த்தையை மரியாள் மறந்திருந்தாளா? இல்லை, இல்லை; என்றாலும் தன் பிள்ளை பராபரனைத் தன் பிதா என்று சொல்வது அவளுக்கு ஆச்சரியமாய்த் தோன்றுகிறது. இந்தப் பிள்ளைக்குத் தான் புறப்பட்ட இடம் எப்படித் தெரியும்? சிறு பிராயத்திலும் அவருடைய மகிமை மறைந்திருக்கக் கூடாது. அவருக்கு எங்கேயாகிலும் சொந்த இடம் இருக்குமேயானால் அது பராபரன் தமது சனத்துக்குப் பிரசன்னமான எருசலேமிலுள்ள தேவாலயந்தான். அது நமக்கும் சொந்த வீடு அல்லவா? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டுமென்று இயேசு சொன்னதுபோல நீயும் சொல்லவேண்டும். இந்த இயேசுவைக்கொண்டு நீ பராபரனுடைய பிள்ளை. சர்வ வல்லமையுள்ள பராபரன் உனக்கும் பிதா. இதைக் கேட்டு நீ அவருடைய வீட்டிலே அவரைத் தேடிப் போகமாட்டாயா? அங்கே அவர் உன்னோடு பேசி உன்னை ஆற்றித் தேற்றித் தமது வசனத்தினாலும் ஜீவ அப்பத்தினாலும் உன்னைப் போஷிப்பார். ஒரு பட்சி தன் கூட்டைத் தேடிப்போகும் வண்ணமாக நீ உன் பிதா வீட்டை நாடித்தேடுகிறாயா? அந்த வீட்டில் வழங்கும் சட்டங்கள் உனக்குத் தெரியுமா? அந்த வீட்டில் கூடிவந்து பிதாவைப் பணிந்துகொள்ளுகிற யாவரும் ஒருவரை ஒருவர் சிநேகித்து ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வார்கள். உலகத்தார் உன்னைப் பரிகாசம் பண்ணினாலும் என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டும் என்று சொல். கிறிஸ்துவின் மகிமை உன்னிடத்திலும் விளங்கும்படி உன் பிதாவின் வீட்டில் தங்கியிரு. அதைவிட்டுப் போகாதே. அதையன்றி உனக்கு வேறே அடைக்கலம் கிடையாது.

ஜெபம். சேனைகளின் பராபரனாகிய கர்த்தாவே! என் விண்ணப்பத்தைக் கேளும். யாக்கோபின் பராபரனே! செவிகொடும். எங்கள் கேடகமாகிய பராபரனே! கண்ணோக்கமாயிரும். நீர் அபிஷேகம்

பண்ணினவருடைய முகத்தைப் பாரும். எனெனில் ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உம்முடைய பிரகாரங்களில் ஒரே நாள் நல்லது. அசாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் பராபரனுடைய வீட்டின் வாசற்படியில் காப்பதையே தெரிந்துகொள்ளுவேன், சுவாமி, ஆமேன்.

யோ. 4. 1-26 அல்லது சங். 122 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். முதலாம் வாரம், திங்கள்.

ஞ. 116, 1. 2.

இப்போதும், சகோதரரே, நீங்கள் புத்தியுள்ள ஆராதனை பண்ணுகிறவர்களாய் உங்கள் சரீரங்களை ஜீவனும் பரிசுத்தமும் பராபரனுக்கு நற்பிரியமுமான பலியாக செலுத்த, பராபரனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். நீங்கள் இந்தப் பிரபஞ்சத்துக்கொத்த வேஷந்தரிக்காமல், நீங்கள் பராபரனுடைய நன்றும் நற்பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இதென்று சோதிக்கும்படிக்கு, உங்கள் மனதின் புதிதாக்குதலினால் மறுரூபமாகுங்கள். ரோ. 12, 1. 2.

பாகாலின் பூசாரிகள் தங்கள் தெய்வத்துக்குக் கனம் செலுத்தத் தங்கள் சரீரத்தைக் கத்தியினால் கீறிக்கொண்டார்கள். சந்நியாசிகள் பலவிதமாகத் தங்கள் உடம்பை வருத்துகிறார்கள். அநேகர் தங்கள் பிள்ளைகளைத் தெய்வத்துக்குப் பலியிடுகிறார்கள். இது பராபரனுக்குப் பிரியமான காணிக்கையுமல்ல, ஆராதனையுமல்ல. கிறிஸ்தவர்களுடைய பலியோ ஜீவனும் பரிசுத்தமும் தேவனுக்கு நற்பிரியமுமான பலி. நாம் பழைய மனிதனைக் கொன்றுபோட்டு நமது சரீரத்தையும் அதின் அவயவங்களையும் பாவத்துக்கென்றல்ல, தேவனுடைய ஊழியத்துக்கென்றும் பிறத்தியானுடைய ஊழியத்துக்கென்றும் ஒப்புக்கொடுப்போமாக. அதற்கு இயேசுநாதர் நமக்கு வழி காட்டுகிறார். அவருடைய கண் சுத்த சிநேகத்தால் பிரகாசிக்கிறது. அவருடைய வாயிலிருந்து இனிய சத்திய வசனங்கள் புறப்படுகிறது. அவர் கரங்கள் ஆசீர்வதிப்பதற்கென்று எப்போதும் விரித்திருக்கின்றன. அவர் கால்கள் தேவ சித்தத்துக்குப் பொருந்திய பாதையில் நடக்கின்றன. அவர் தமது தலை முட்களால் குத்துண்கவும் தமது கைகளும் கால்களும் ஆணிகளால் துளைக்கப்படவும் தமது சரீரம் காயப்படவும் தம்மைச் சத்துராதிகளுக்கு ஒப்புக்கொடுத்தார். உன் சரீரத்தை மாய்கைக்கும் மாமிச இச்சைக்கும் ஒப்புவிக்காதே. உன் வாயினால் பிறத்தியானைத் தூஷணிக்காதே. உலோபித்

தனத்துக்கும் பேராசைக்கும் அடிமையாய்ப் போய்விடாதே. உன் காதினால் அசுத்த பேச்சைக் கேட்காதே.

மாம்சமான மனிதன் மாமிசத்துக்கடுத்ததைச் சிந்திப்பான். ஆவியால் நிறைந்த மனிதனோ ஆவிக்கடுத்ததைச் சிந்திப்பான். பராபரன்தாமே தயவாய் உன் இருதயத்தைப் புதிதாக்கினாலன்றி நீ அவருக்குப் புத்தியுள்ள ஆராதனை செய்யமுடியாது. அவரைப் பணிந்துகொள்ளுகிறவர்கள் அவரை ஆவியிலும் உண்மையிலும் பணிந்துகொள்ளவேண்டும்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! நாங்கள் உமது சித்தத்தை கண்டறிந்துகொண்டு உமக்கேற்றபடி நடக்க எங்களுக்குத் துணைசெய்தருளும். உம்மாலன்றி எங்களால் ஒன்றும் செய்யமுடியாது. ஆதலால் தேவரீர் எங்களுக்குப் பக்கத்துணையாயிருந்து மோட்ச வழியைக் காண்பித்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 4. 27-46. அல்லது எரே. 19, 1-15 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். முதலாம் வாரம், செவ்வாய்.

ழ. 120, 1. 2.

உலாவுகிற இயேசுவை யோவான் கண்ணோக்கி: இதோ! பராபரனுடைய ஆட்டுக்குட்டி என்றான். அவனிரண்டு சீஷர் அவன் இதைச் சொல்லக் கேட்டு, இயேசுவைப் பின்சென்றார்கள். இயேசு திரும்பிக் கொண்டு, அவர்களைப் பின்செல்லக் கண்டு, அவர்களுடனே: என்ன தேடுகிறீர்கள் என்றார். அவர்கள் அவருடனே: ரபீ, (அதற்கு அர்த்தம், போதகரே) எங்கே தங்கியிருக்கிறீர் என்றார்கள். அவர் இவர்களுடனே வந்து பாருங்கள் என்றார். யோ. 1, 36-40.

வந்துபாருங்கள் என்று இயேசுநாதர் நமக்கும் சொல்லுகிறார். ஜனங்கள் வராமையினால் ஒன்றும் பார்க்கிறதுமில்லை; இயேசுவை அறியாதபடியினால் அவரை நம்புகிறதுமில்லை, சிநேகிக்கிறதுமில்லை. உலகத்தார் கண்ணாலே பார்த்தால்தான் நம்புவோம் என்று சொல்வார்கள். இங்கே அவர்கள் வந்து கண்ணாலே பார்க்கலாம். லோகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவர் அதோ போகிறார். பாவிகளை இரட்சிப்பதே அவருடைய மகிமையான தொழில்.

இயேசு அழைக்கக் கேட்டு அவரைப் பின்சென்ற சீஷர் அவரிடம் கண்டதென்ன? அவர்கள் தங்களைப்போன்ற ஒரு மனிதனைக் கண்டார்கள். பின்பு அவரைத் தேவ ஞானத்தால் நிறைந்த

போதகராகவும், பாவம் இல்லாத பத்தராகவும், சாத்திரம் கடறும் கீழ்ப்படியப் பெற்றவராகவும், சால கோபாக்கினைக்கும் வகித்தவராகவும், தன்பட்டபேர் [illegible] ராகவும், சீவனுள்ள பராபரனுடைய குமாரனாகவும், தன் ஆட்டுக்குட்டியாகத் தன்னை ஒப்புக்கொடுக்கும் மேய்ப்பனாகவும், மரணத்தைச் செயித்த யூதாவின் சிங்கமாகவும் அறிந்துகொண்டார்கள். அவருடைய மகிமையைப் பார்த்த அவர்கள் அவரை விட்டுப் போகவில்லை.

சீஷர் கண்டுபிடித்ததை நீயும் கண்டுபிடிக்க முடியும். உன் பாவத்தைச் சுமந்துதீர்த்த ஒரு இரட்சகர் உனக்கு வேண்டும். இயேசுவண்டை வா. அவரிடம் உன் இருதயத்துக்குச் சமாதானமும் உன் ஆத்துமத்துக்கு இரட்சிப்பும் உன் மனச்சாட்சிக்கு ஆறுதலும் கிடைக்கும். பிரயாசப்பட்டு பாரம் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டை வாருங்கள் என்று அவர் சத்தமாய்க் கூப்பிடுகிறார்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உமது பிதாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து இந்த லோகத்தின் பாவத்தைத் தீர்த்தவீர். இதற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே! உமது மகிமையை எங்களுக்கு வெளிப்படுத்தியருளும். நாங்கள் உம்மை மனப்பூர்வமாய்ப் பின்செல்வதற்கு உமது ஆவியின் பெலனை எங்களுக்குத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

யோ. 4, 47-54. அல்லது மத். 22, 10-29 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். முதலாம் வாரம், புதன்.

சீ. 120, 3. 4.

பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், ஏனெனில் இது நீதி. உனக்கு நன்மையுண்டாகிறதற்கும் உன் நாட்கள் பூமியிலே நீடித்திருக்கிறதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணு. இது வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது. எபேசி. 6, 1-3.

தேவனுடைய பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவார்கள். இயேசு பிள்ளையாயிருந்தபோது அவர் தமது பிதாவின் வீட்டில் இருக்கவேண்டியதென்றறிந்தும் அவர் மரியாளோடேகூடப் போய் நாசரேத்துக்குப் போய் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். தமது பெற்றோர் தமக்கு அன்னவஸ்திரமும் உடுப்பும் கொடுத்து, இரவும் பகலும் தம்மைக் காப்பாற்றி, தம்மை ஆதரித்

தேற்றி, உற்சாகப்படுத்துகிறார்கள். இவ்வாறெல்லாம் தேவனுக்குப் பதிலாக நின்று நமக்குச் சகல நன்மைகளையும் செய்து வருகிறார்கள். இதுதான் பெற்றோருடைய மேன்மை. அன்னையும் பிதாவும் அன்பு நிறைந்தவர்கள். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிகிறது போல இவர்களுக்கும் உற்சாகமாய்க் கீழ்ப்படிந்து ஊழியம் செய்வோம். உன் தகப்பனையும் தாயையும் சிநேகிக்க வேண்டுமென்று பராபரன் சொல்லாமல் நீ அவர்களைச் சங்கித்திருப்பாயாக என்று சொன்னதை நாம் கவனிக்க வேண்டுமென்று அத்தர் சொல்லுகிறார். நமக்குச் சமானமானவர்களைச் சிநேகிப்போம், மேலானவர்களையோ கனம் பண்ணுவோம் அதாவது அவர்களைப் பயத்தோடு சிநேகிப்போம். சுவாமியைக் கனம்பண்ணுகிறது போலப் பெற்றோரைக் கனம் பண்ணுவோம்.

இப்படிச் செய்யும் பிள்ளைகள் பூமியிலே நீடித்திருப்பார்கள். தகப்பனின் ஆசீர்வாதம் பிள்ளைகளுக்கு வீட்டைக்கட்டுகிறது. கீழ்ப்படியாமையினால் ஒரு குடும்பத்தில் சண்டையும் கலகமும் உண்டாகும். அந்தக் குடும்பம் வெகுசீக்கிரம் கெட்டுப்போகும். கர்த்தருடைய சாபம் அதன்மேலே இருக்கும். ஆயினும் பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிகிற வீட்டில் சண்டையும் கலகமும் இருக்காது. எல்லாரும் சமாதானமாயிருப்பார்கள். அதனால் வீட்டின் செல்வம் அதிகமாகும். கர்த்தருடைய ஆசீர்வாதம் அந்த வீட்டின் மேல் இருக்கும். அவர் பூர்வத்தில் கொடுத்த வாக்குத்தத்தத்தை இன்றைக்கும் நிறைவேற்றுகிறார்.

ஜெபம். பரமபிதாவே! உமது அளவற்ற கிருபையினால் எங்களுக்கு அருமையான தாய் தகப்பன்மாரைக் கட்டளையிட்டீர். நீர் அவர்களைக்கொண்டு எங்களுக்கு உமது இருதயத்தையும் சித்தத்தையும் கற்பித்து எங்களைச் செம்மையான வழியில் நடத்தினீர். தேவரீர் எங்களுக்கு அருள்செய்த அவர்களை நாங்கள் கனம்பண்ணி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்கு உற்சாகம் பண்ணி, உமது வாக்குத்தத்தத்தை எங்களிடத்திலும் நிறைவேற்றியருளும், சுவாமி, ஆமென்.

யோ. 5, 1-23. அல்லது எசேகி. 23, 1-20. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். முதலாம் வாரம், வியாழன்.

சீ. 120, 5.

பிதாக்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், பாலகர்களின் சிட்சையிலும் கர்த்தருடைய புத்தியிலும் அவர்களை வளருங்கள். எபே. 6, 4.

பராபரன் பெற்றோரை உயர்ந்த இடத்தில் வைத்திருக்கிறார். பெற்றோர் தமக்குப் பதிலாகப் பிள்ளைகளை மோட்சத்துக்கென்று வளர்க்க அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் அதிகாரம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிது அவர்கள் உத்தரவாதமும். ஒரு பிள்ளையின் ஆத்துமா முழுலோகத்தைப்பார்க்க விலையுயர்ந்தது. அவர்களுக்காகவும் இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டது. பொல்லாப்பில் அமிழ்ந்து கிடக்கும் உலகத்தில் பிள்ளைகளை மோட்சத்துக்கென்று வளர்ப்பதற்கு உயர இருந்து வரும் ஞானம் பெற்றோருக்கு அவசியம்.

நமது வாக்கியத்தில் பிள்ளைகளை வளர்க்கும் சாமர்த்தியத்தைக் குறித்து, உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாதேயுங்கள் என்று சொல்லியிருக்கிறது. அநியாய தண்டிப்பினாலும் முன்கோபத்தினாலும் பிள்ளைகளுக்குக் கோபம் பொங்கி வரும். மனிதனுடையகோபமோ பராபரனுக்கு முன்பாகச் சரியானதைச் செய்கிறதில்லை. பிள்ளைகள் நம்பிக்கைகெட்டுப்போகாதபடி நிதானமாய் அவர்களைத் தண்டித்துப் பின்பு அவர்களுக்குப் பட்சத்தையும் சிநேகத்தையும் காண்பித்தால் நல்லது. தண்டிக்கவேண்டாம் என்று அப்போஸ்தலன் சொல்லவில்லை. தாய் தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளுக்கு இளக்காரம் கொடுக்காதபடி ஏலியின் திருட்டாந்தம் அவர்களை எச்சரிக்கட்டும். தண்டனையோடு அன்பு சேர்ந்திருக்கவேண்டும், ஒரு கையால் அடித்து மறுகையால் அணைத்தால் நல்லது.

பால தண்டனையிலும் கர்த்தருடைய புத்தியிலும் அவர்களை வளருங்கள் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். நம்முடைய பிள்ளைகள், கர்த்தருக்குச் சொந்தம். ஆதலால் சீக்கிரம் கர்த்தருடைய நாமத்தை உன் பிள்ளைகளுக்குத் தெரிவி. இரட்சகரின் சிநேகத்தை அதன் இருதயத்தில் மூட்டிவிடு. வார்த்தையினால் மாத்திரம் அல்ல, நடக்கையினாலும் இயேசுவின் போதனையை அதன் இருதயத்தில் நட்டுவிடு. அநேகம் வார்த்தைகளைப் பார்க்க முன் மாதிரியே சிறந்தது. வார்த்தைகள் பறந்துபோம்; பக்தியுள்ள தாய் தந்தையின் ஞாபகமோ ஆத்துமத்தில் பதிந்திருக்கும்.

ஜெபம். பரமபிதாவே! எங்கள் பிள்ளைகள் உமக்கு பயப்படும் பயத்தில் வளர்க்கப்பட்டு உண்மை அறியும் அறிவில் தேர்ந்து உம்மை நம்பும் நம்பிக்கையில் நிலைத்திருந்து கிறிஸ்தவர்களுக்கு ஏற்ற ஜீவனம்பண்ணக் கிருபை செய்யும். அவர்கள் எங்களால் இடறல்படாதபடி எங்களைக் காப்பாற்றியருளும். எல்லாருக்கும் உண்மையான பிதாவாகிய தேவரீர் எங்களுக்கு உமது ஞானத்தைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

யோ. 5, 24-32 அல்லது எரேமி. 23, 21 - 32 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். முதலாம் வாரம், வெள்ளி.

ஞ. 141, 1-3.

அப்போது இயேசு பிசாசினாலே சோதிக்கப்படுவதற்கு ஆவியினால் வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசமாயிருந்த பின்பு அவருக்குப் பசித்தது. அப்போது சோதனைக்காரன் அவரண்டை வந்து: நீ பராபரனுடைய குமாரனானால் இந்தக் கற்களை அப்பங்களாகச்சொல் என்றது. அவரோ பிரத்தியுத்தாரமாக: மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, பராபரனுடைய வாயிலிருந்து புறப்படுகிற சகல வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதென்றார். மத். 4, 1-4.

இந்தச் சோதனையிலும் இயேசுவானவர் பிதாவின் ஐக்கியத்தை விடவில்லை. மரணபரியந்தம் இந்தப் பொல்லாத சத்துரு அவரை இளைப்பாற ஒட்டாமல் பராபரனுடைய சித்தத்தையும் வழியையும் விட்டு விலகும்படியாய் அவரைச் சோதித்து வந்தான். இயேசுவோ மரணமட்டும் உண்மையாயிருந்து தீரமாய்ப் போராடி வெற்றி சிறந்தார். அவருடைய ஜெயம் நம்முடையது. நாம் அவரைப்போல் ஜெயம் அடைவதற்கு அவர் நமக்காகச் சோதனைக்காரனை முறியடித்தார். இப்போது நமது எதிரியாகிய பிசாசு, நமது பாவங்களைப் பற்றி நம்மைக் குற்றப்படுத்தக் கூடாது. பாவம், மரணம், பிசாசு, இவைகளைப்பார்க்க இயேசுவே வல்லமையுடையவர்.

கிறிஸ்தவர்கள் எல்லாரையும் பார்த்து நமது வீராகிய கிறிஸ்து, என்னைப் பின்செல்லுங்கள் என்கிறார். நாம் வென்று, நம்முடைய பிதாவோடே அவருடைய ஆசனத்தில் உட்கார்ந்ததுபோல எவன் வெல்லுகிறானோ அவனுக்கும் நம்முடைய ஆசனத்தில் உட்காருவதை அளிப்போம் என்று வாக்களிக்கிறார்.

தேவவசனமாகிய ஆயுதத்தைக் கையில் பிடித்தால்தான் ஜெயம் கிடைக்கும். மோசக்காரியின் சொல்லுக்கு இணங்காமல், சிறைச்சாலைக்கும் பயப்படாதிருந்த யோசேப்பு ஒரு வீரன். அன்னியருடைய பொருளைத்திருடாமல் பசியைத் தாங்குகிறவன் மெய்யான வீரன். தங்கள் இருதயத்தில் எழும்பும் பொல்லாத ஆசையிச்சைகளை ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் மேற்கொண்டு சோதனைகளைத் தேவ வசனத்தினாலும் கிறிஸ்துவின் பெலத்தினாலும் துரத்திவிடுகிறவர்கள் உண்மையான வீரர். உலகம் அவர்களை அறியாது. ஆயினும் அவர்களுடைய நாமம் ஜீவ புஸ்தகத்தில் எழுதியிருக்கும். மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்போது ஜீவக்கிரீடத்தைப் பெறுவாய்.

ஜெபம். எங்கள் பரம இராசாவாகிய இயேசுகிறிஸ்துவே! எங்களுக்காக இவ்வுலகத்தின் பிரபுவாகிய சாத்தானோடு போர்புரிந்து வெற்றி

சிறந்து அவன் வல்லமையை முறித்து எங்களை விடுதலையாக்கி விட்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம். ஆ கர்த்தாவே! நாங்கள் உம்மைப்போல எல்லாவற்றிலும் சிறந்த பட்டயமாகிய வேதவசனத்தைக்கொண்டு பொல்லாங்கனை மேற்கொள்ள எங்களுக்குப் பக்கத்துணையாய் நின்றருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 5, 33-47 அல்லது எரேமி. 28, 1-17 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். முதலாம் வாரம், சனி.

சங். 141, 4-5.

ஐந்தாம் கற்பனையாவது: கொலைசெய்யாதிருப்பாயாக.

இதற்கர்த்தமென்ன? நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு பிறத்தியானுடைய சரீரத்திற்குச் சேதமானாலும் பொல்லாங்கானாலும் வருவிக்காமல் சகல சரீர இக்கட்டிலேயும் அவனுக்கு ஒத்தாசையாயிருந்து உபகாரம் பண்ணிக்கொண்டு வரவேண்டும்.

இக்கற்பனையைக் கைக்கொள்ளுகிறது இலேசுபோல் தோன்றுகிறது. ஆகிலும் மத்தேயு 5-ல் கர்த்தர் இந்தக் கற்பனைக்கு என்ன அர்த்தம் சொல்லுகிறார், தெரியுமா? கொலை செய்யாயாக வென்பதும் ஆகிலும் கொலைசெய்தால் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் பூர்வத்தாருக்குச் சொல்லப்பட்டதென்று கேட்டீர்கள்; நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமற் கோபித்துக் கொள்பவனெவனும் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், ஆகிலும் தன் சகோதரனைச் சீ என்றால் ஆலோசனைச் சபைத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், ஆகிலும் மதிகேடனே என்றால் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான் என்று கூறுகிறார். இதைப் பார்த்தால் குற்றமில்லாதவன் ஆர்? சகோதரனைக் கோபியாமலும் பகையாமலும் இருந்தவர் ஒருவருமில்லை; தன் வீட்டாரிடத்தில் கோபமும் மூர்க்கமும் கொள்ளாதவன் அகப்படுவது அருமை. நிந்தை சொல்லாதவனைக் கண்டுபிடிப்பது அபூர்வம். அடுத்தவனுக்குப் பொல்லாப்பையும் அவன் மனதுக்கு நோவையும் அவன் ஆத்துமத்துக்குச் சேதத்தையும் உண்டுபண்ணாதவன் எங்குமில்லை. ஒருவன் இக்கற்பனையை நிறைவேற்றினான் என்று கர்த்தரால் தீர்ப்புப் பெற, இவை எல்லாவற்றையும் செய்யாதிருக்கவேண்டும். அதுவும் போதாது. இக்கற்பனையில் நாம் செய்யக் கர்த்தர் கற்பித்தவைகளும் நம்மிடத்தில் விளங்குவது அவசியம். அவை, இக்கற்பனையின் அர்த்தத்தில் பின்வரும் முடிவினால் தெ-

ரியும். அவனுக்குச் சகல சரீர இக்கட்டிலேயும் ஒத்தாசையாய் இருந்து உபகாரம் பண்ணிக்கொண்டு வரவேண்டும்.

இந்தக் கற்பனையை நிறைவேற்றினவர் இயேசு ஒருவரே. பிதாவே, அவர்களுக்கு மன்னியும் என்று அவர் தமது சத்துருக்களுக்காக மன்றாடினார். அவர் அக்கிரமக்காரருக்காகச் சிலுவையில் மரித்தார். அவர் தம்மைத் துன்பப்படுத்தினவர்களுக்காக உயிரைக் கொடுத்தார். இதினால் அவர் தேவ கோபத்திற்கும் பகைக்கும் மன்னிப்பைச் சம்பாதித்துப் பராபரன் உன்னிடத்தில் கேட்கிற நீதியை உனக்குத் தந்தார். விசுவாசத்தினால் நீ இதைப் பற்றிக்கொண்டால் நீதிமான். அவருடைய சிநேகம் உன் கோபத்தின் தீயை அவித்து உன் உள்ளத்தில் அன்பின் தீயை மூட்டிவிடும்.

ஜெபம். இரக்கமுள்ள பிதாவே! உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள் ஒருவரையொருவர் பகைக்காமல் ஒருவரோடொருவர் சிநேகமாயிருக்க இந்தக் கற்பனையை அருளிச்செய்தீர். நாங்கள் எங்கள் பகையை விட்டு உமது பிள்ளைகளைப்போல் ஐக்கியமாக ஜீவனம்பண்ணி, உமக்கு மகிமையுண்டாகப் பிறத்தியானுக்கு ஊழியஞ்செய்ய எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

லூக். 4, 31-44 அல்லது எரேமி. 29, 1-14 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். இரண்டாம் வாரம், ஞாயிறு.

சங். 34, 5-7.

அடையாளங்களின் இந்தத் துவக்கத்தை இயேசு கலிலேயாவின் ஊரான கானாவிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர்கள் அவர் பேரிலே விசுவாசித்தார்கள். யோ. 2, 11.

தேவாலயத்தில் பன்னிரண்டு வயதான இயேசுபிள்ளை ஒரு வார்த்தையினால் தமது மகிமையை வெளிப்படுத்தினார். கானாவூரிலே புருஷனான அவர் அதை ஒரு கிரியையினாலே சீஷப் பிள்ளைகளுக்குக் காண்பித்தார். ஒரு மனுஷன் செய்யக்கூடாத அற்புதத்தைச் செய்து தாம் தேவனால் அனுப்பப்பட்டவர் என்று எல்லாருக்கும் தெரிவித்தார். அதுவுமன்றி அவர் என்னத்துக்கு அனுப்பப்பட்டவர் என்றும் பார்க்கிறோம்; கலியாண வீட்டாருக்குத் தண்ணீரைத் திராட்சரசமாக்கித் தருகிறார். மோசே அப்படிச் செய்வானோ? அப்பத்துக்குப் பதிலாகக் கல்லும் மீனுக்குப் பதிலாகத் தேளும் கொடுப்பான் அல்லவா? மனுஷருக்கு ஒத்தா-

சை பண்ணத்தான் இயேசுநாதர் அனுப்பப்பட்டவர். தாழ்ச்சியடைந்த நமது பிள்ளைகளுக்காகக் கவலைப்படும் இரட்சகரை நோக்கிப் பார். அவர் எங்கே அழைக்கப்படுகிறாரோ அங்கே துன்பம் நீங்கி இன்பம் ஆகும்.

அவருடைய இரக்கத்தை மாத்திரம் அல்ல, அவருடைய வல்லமையையும் பார். தண்ணீரைத் திராட்சரசமாக்குவார். ஐந்தப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேரைப் பசியாற்றுவார். உன்னுடைய கஷ்டத்தை நீக்க அவருக்கு வழிதெரியாதா? ஆனால் ஒன்றைக் கவனி. கையில் உள்ளதைக்கொண்டே ஒத்தாசைபண்ணுவார். அவர் தண்ணீரையும் அப்பத்தையும் மீனையும் தள்ளாமல் அதைக் கொண்டே ஜனங்களைப் போஷிக்கிறார். கையில் உள்ளதை அற்பமாக எண்ணாதே. அவர் அதை எடுத்து அதிகமாக்கக் கூடியவர். கர்த்தர் உனக்குக் கொடுத்ததை வீணாய்ச் செலவழிக்காதே. அது எவ்வளவு கொஞ்சமாயிருந்தாலும் உன்னையும் உன் குடும்பத்தையும் போஷிக்கக் கூடியது. ஒரு ஏழை விதவையின் கொஞ்சத்தினால் எலியாவைப் பஞ்சகாலத்தில் காப்பாற்றின கர்த்தர் உன்னையும் மறக்கமாட்டார்.

அவர் கைம்மாறு ஒன்றும் கேட்கிறதில்லை. ஓய், தாகமாயிருக்கிற நீங்கள் எல்லாரும் தண்ணீரண்டைக்கு வாருங்கள். பணம் இல்லாதவர்களே, நீங்கள் வந்து கொண்டு சாப்பிடுங்கள். நீங்கள் வந்து பணமும் விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். (எசா. 55, 1.) அவர் தேடுகிறது விசுவாசம் ஒன்றுதான். அவருடைய சீஷர் அவர்பேரில் விசுவாசித்தார்கள். நீங்கள் விசுவாசித்தால் பராபரனுடைய மகிமையைக் காண்பீர்கள் என்று இரட்சகர் சொல்லுகிறார்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! பலவழி வகையும் உம்மாலே ஏற்படும், நீர் செய்வது இசையும், நீர் சொன்னது வரும். நீர் வாக்குத்தத்தம் பண்ணி மொழிந்தது எல்லாம் உம்மால் தடையுமின்றி நற்காலத்தில் உண்டாம், சுவாமி, ஆமேன்.

லூக். 5, 1-26. அல்லது சங். 128, வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். இரண்டாம் வாரம், திங்கள்.

ம. 34, 8-10.

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். ரோ. 12, 12.

நாம் இயேசுநாதர் கானாவூரிலே செய்த அற்புதத்தைக் குறித்துக் கேட்டோம். இயேசுநாதரை நம்புகிறவர்களுக்கு ஒரு குறைவுமில்லை; அவர் நமது ஆத்துமத்திற்கு மாத்திரம் அல்ல, நமது சரீரத்துக்கும் வேண்டியதைக் கொடுப்பார். இனி ஒன்றுக்கும் கவலைப்படவேண்டியதில்லை என்று நினைப்போம். ஆனால் இயேசுநாதர் அப்படிப்பட்டதொன்றும் சொல்லவில்லை. அவர் இந்த உலகத்தில் எப்படி எல்லாக் கஷ்டங்களையும் அனுபவித்தாரோ அப்படி நாமும் அனுபவிக்க வேண்டும். அப்படியானால் நமக்கும் உலகத்தாருக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லையா? கிறிஸ்துமார்க்கத்தில் சேருவதினால் என்ன லாபம்? அதைத்தான் அப்போஸ்தலன் இன்றைக்கு நமக்குச் சொல்லுகிறான். நாம் உலகத்தாரைப்போல் இந்த உலகத்தில் கஷ்டப்பட வேண்டியது தான். அவர்களைப்போல் நாமும் பசியினாலும், வியாதியினாலும், மரணத்தினாலும் துன்பத்தை அனுபவிக்கவேண்டும். அப்படியிருந்தும், உலகத்தாருக்கு நம்பிக்கையில்லை, கிறிஸ்தவர்களுக்கோ நம்பிக்கையுண்டு; அவர்களுக்குச் சந்தோஷமில்லை, கிறிஸ்தவர்களுக்கோ சந்தோஷமுண்டு, அவர்களுக்குப் பொறுமையில்லை கிறிஸ்தவர்களுக்கோ பொறுமையுண்டு. அவர்கள் ஜெபம்பண்ணமாட்டார்கள், கிறிஸ்தவர்களோ ஜெபத்தினால் இயேசுநாதருடைய ஒத்தாசையைத் தேடுவார்கள். ஆதலால் நாங்கள் கடைசியாக ஜெயம் அடைவோம் என்று கிறிஸ்தவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

இயேசுவை நம்புகிறவர்கள் வெட்கத்தையடையமாட்டார்கள். தலை நிமிர்ந்து நின்று, வானத்தை அண்ணாந்து பார்த்துச் சந்தோஷமாயிருப்பார்கள். பராபரன் நம்மைப் பராமரித்துக் காப்பார் என்று நிச்சயமாயறிவார்கள். எல்லா உபத்திரவத்திலும் பொறுமையாயிருப்பார்கள். தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும் என்ற ஜெபத்தை ஆண்டவர் கேட்பார் என்று அறிவார்கள். பொறுத்தார் அரசாள்வார். இயேசுவின் பொறுமை நம்முடைய பொறுமையைப் பெலப்படுத்தும். பொறுமையோடே கர்த்தருடைய ஒத்தாசைக்குக் காத்திருப்பதே கிறிஸ்தவர்களுடைய சிறந்த கடமை. அதற்கு உறுதியான ஜெபம் தேவை. இயேசுபோல் நாம் ஜெபத்தில் பராபரனுடைய ஐக்கியத்தைத் தேடிச் சகல நன்மைகளின் ஊற்றான அவரிடத்தில் வேண்டிய பெலனையும் உற்சாகத்தையும் கேட்கலாம். இதுதான் கிறிஸ்தவர்களுக்கும் லோகத்தாருக்கும் உள்ள வித்தியாசம். கிறிஸ்தவர்கள் நம்பிக்கையோடிருக்க, லோகத்தார் நம்பிக்கையற்றுப்போவார்கள். கிறிஸ்தவர்கள் பொறுமையோடிருக்க, லோகத்தார் ஒன்றும் பொறுக்கமாட்டார்கள். கிறிஸ்தவர்கள் ஜெபம் செய்ய, லோகத்தார் தூஷணிப்பார்கள்.

ஜெபம். பரமபிதாவே! உம்முடைய நேச குமாரனுடைய நாமத்தினாலே செய்த ஜெபத்தைக் கேட்பீர். அவரைக்கொண்டு எங்களுக்கு நம்பிக்கையையும் பொறுமையையும் உறுதியையும் தந்தருளும். உம்மையன்றி நாங்கள் வேறொன்றையும் தேடாவண்ணம் எங்களைக் காப்பாற்றியருளும். சுவாமி, ஆமென்.

லூக். 5, 27-39. அல்லது எரேமி. 31, 1-17. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். இரண்டாம் வாரம், செவ்வாய்.

ஐ. 29, 3, 4.

நாத்தான்வேல் இயேசுவுடனே: எதனால் என்னை அறிந்திருக்கிறீர் என்றான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, அத்திமரத்தின் கீழ் இருக்கிற உன்னைக் கண்டேன் என்றார். நாத்தான்வேல் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: ரபீ, நீர் பராபரனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலுடைய இராசா என்றான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: அத்திமரத்தின் கீழ் இருக்கிற உன்னைக் கண்டேன் என்று நான் உன்னுடனே சொன்னதினாலே விசுவாசிக்கிறாய்; இவைகளிலும் பெரியவைகளைக் காண்பாய் என்றார். யோ. 1, 49-51.

கர்த்தர் தமது சீஷரைச் சேர்த்த காலத்தில் சகோதரன் சகோதரனையும் சிநேகிதன் சிநேகிதனையும் குரு சீஷனையும் இயேசுவண்டை வழிநடத்தினார்கள். மற்றச் சீஷரைப் பார்க்க நாத்தான்வேல் இயேசுவைக் கண்டுபிடித்த விதம் ஆச்சரியமானது. ஒருவனும் தன்னைப் பார்க்கவில்லை என்று அவன் நினைக்கும்போது இந்த இயேசு என்பவர் தன்னைப் பார்த்திருந்ததற்கு ஆச்சரியப்படுகிறான். அதுவுமல்லாமல் தான் இருந்த இடம் மாத்திரம் அல்ல, தன் இருதயமும் இவருக்குத் தெரியுமென்று நடுக்கத்தோடு அறிந்துகொள்ளுகிறான். ஒரு மனுஷனுடைய இருதயம் செம்மையோ இல்லையோ என்று சொல்ல இவரால் முடியும். இவ்விதமாக இரட்சகர் நாத்தான்வேலுடைய இருதயத்தைத் தம் வசம் ஆக்கிக்கொண்டார்.

உன்னுடைய இருதயத்தையும் அவர் தம் வசம் ஆக்கிக்கொண்டிருக்கிறாரா? ஆம் என்றால், உன் இருதயம் அவருக்குத் தெரியும் என்று அறி. ஒரு பாவத்தையும் அவருக்கு மறைத்து வைக்கவும் அவரை ஏமாற்றவும் முடியாது. உன் இருதயம் செம்மையோ இல்லையோ என்று உன்னைப் பார்க்கிலும் அவருக்கு நன்றாய்த் தெரியும்.

நீ இப்படி இயேசுநாதருக்கு உன் இருதயத்தைத் திறந்த நாள் முதற்கொண்டு உனக்கு வானமும் திறந்திருக்கும். இது

முதல் வானம் திறந்திருக்கிறதையும் பராபரனுடைய தூதர் மனுஷனுடைய குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் அவர்மேல் இறங்குகிறதையும் காண்பீர்கள் என்று இரட்சகர் சொல்லுகிறார். அவர் எங்கேயோ அங்கே மோட்சமும் சீவனும் உண்டு; செம்மையானவர்களுடைய இருதயம் அவருக்கு வாசஸ்தலம். அங்கே அவர் தமது சமாதானத்தோடு வந்து தமது இராச்சியத்தை ஏற்படுத்துவார்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உமது முதல் சீஷரைச் சேர்த்து அவர்களுக்கு உமது மகிமையைக் காண்பித்ததுபோல எங்களையும் உம்மண்டை அழைத்து உமது மகிமையை எங்களுக்குக் காண்பிக்க மனதாயிருக்கிறீர். நாங்கள் வருகிறோம், கர்த்தாவே! எங்கள் இருதயங்களைச் சோதித்துப் பார்த்துச் செம்மைப்படுத்தி அதிலே வாசமாயிரும். தேவரீர் ஒருவரே இஸ்ரவேலின் இராசா, சுவாமி, ஆமென்.

மத். 5, 1-26. அல்லது எரேமி. 31, 18-37. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். இரண்டாம் வாரம், புதன்.

ஐ. 180, 1-3.

நான் திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவனே வெகு கனியைக் கொடுக்கிறான். ஏனெனில் என்னை அல்லாமல் நீங்கள் ஒன்றுஞ் செய்யக் கூடாது. யோ. 15, 5.

இவ்வசனம் மகிமைப்பட்ட இரட்சகரைக் காட்டுகிறது. ஆண்டவராகிய அவர் மேகங்களுக்கு அப்பால் ஆசனம் போட்டு வீற்றிருக்கவும் மேட்டிமையான இராசாவாகச் செங்கோல் செலுத்தவும் மாட்டார். அவர் நம்மிடத்திலும் நம்மைச் சுற்றிலும் நமக்குள்ளும் இருக்கிறார். நமக்குச் சீவனும் சாரமும் பெலனுமாயிருக்கிறார். திராட்சக்கொடிகளுக்குச் செடியானது எப்படி உயிரைக் கொடுக்கிறதோ அப்படி அவர் நமது உயிருக்கு உயிராக இருக்கிறார். திராட்சச்செடியிலிருந்து கொடிகள் வளருகிறது போல் நமது உயிரும் இவரால் வளரும். ஒரு கொடி எவ்வளவு வளர்ந்து எத்தனை கனிகளைத் தந்தாலும் அது செடியை விட்டுப் பிரியாது. பிரிந்தால் அதன் உயிரும் போய் விடும்.

விசுவாசத்தினாலும் அன்பினாலும் உன் இரட்சகரைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள். எந்நேரமும் அவர் ஐக்கியத்திலேயே இருந்து வேண்டிய புதிய ஜீவ சாரத்தையும் பெலத்தையும்

பெற்றுக்கொள். அவரில் எப்படி நிலைத்திருக்கிறது என்று கேட்டால், நீங்கள் என் வசனத்திலே நிலைத்திருந்தால் மெய்யாய் என் சிஷராயிருக்கிறீர்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆகலால் அவருடைய வசனத்தைச் சந்தோஷத்தோடு கேட்டுப் படித்து அதற்குக் கீழ்ப்படிந்து நடந்தால் தான் நீ அவருடைய ஐக்கியத்தில் நிலைத்திருப்பாய்.

கர்த்தர் தமது கொடியாகிய உன்னிடத்தில் கனியைத் தேடுவார். இலை அடர்ந்த மரம் பார்வைக்கு எவ்வளவு நேர்த்தியாயிருந்தும் ஒன்றுக்கும் உதவாது. அவர் தேடுகிற கனி எப்படிப்பட்டது? திராட்சச்செடிக்கு இயற்கையான கனிதான். தமது குணத்தையே நம்மிடத்தில் தேடுகிறார். தாம் நமக்குக் காண்பித்த அன்பையே நம்மிடத்தில் பார்க்க ஆசையாயிருக்கிறார். அன்பு என்னும் திராட்சச்செடி அன்பு என்னும் கொடிகளைத் துளிர்க்கச் செய்யும்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! நீர் திராட்சச் செடியாகிய தேவரீருக்குள் நாங்கள் ஞானஸ்நானத்தால் பொருத்தவைக்கப்பட்டோம். நாங்கள் உம்மில் நிலைத்திருக்கவும் வளரவும் எங்களுக்குக் கிருபை செய்யும். நாங்கள் விசுவாசத்திலும் சிநேகத்திலும் பொறுமையிலும் மென்மேலும் வளர்ந்து, உம்மை இவ்வுலகில் மகிமைப்படுத்த எங்களுக்கு உமது குணத்தைத் தந்தருளும். சுவாமி, ஆமேன்.

மத். 5, 27-48. அல்லது எரேமி. 33, 1-22 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். இரண்டாம் வாரம், வியாழன்.

பி. 191, 1. 2.

இயேசு தோமாவுடனே: நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன்; என்னாலே ஒழிய, ஒருவனும் பிதாவண்டைக்கு வரான் என்றார். யோ. 14, 6.

ஆண்டவரே! நீர் போகிற இடத்தை அறியோம், வழியை நாங்கள் எப்படி அறியலாம் என்று தோமா முறையிட்டான். இதற்குக் கர்த்தர், நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று சொன்னார். பராபரனண்டை சேர இயேசுவைத் தவிர ஒரு மனிதனுக்கு வேறே ஒத்தாசை இல்லை. லுத்தர் இவ்வார்த்தையை விஸ்தரிக்கும்போது "இவ்வாக்கியம் இயேசு கிறிஸ்து ஒருவரையே பற்றியது. ஆரம்பத்தை நோக்கினால் அவர் வழி என்றும், மத்தியத்தையும் விர்த்தியையும் நோக்கினால் அவர் சத்தியம் என்றும், முடிவை நோக்கினால் அவர் ஜீவன் என்றும் சொல்லப்படுகிறார்" என்கிறார்.

ஒரு வழியைக் குறித்துக் காதினால் கேட்பது போதாது, அதிலே செல்லவும் வேண்டும். அதிலே செல்ல உனக்குச் சக்தி உண்டா? உன் மனச்சாட்சியின் ஏக்கமும் பெருமூச்சும் உன்னை வருத்துகிறதல்லவா? அந்த வழியைப் பிடித்துப்போக உனக்குத் தைரியம் இல்லைபோல் இருக்கிறது. பயப்படாதே, திடன்கொள். நானே வழி என்று சொன்ன ஆண்டவர் தம்மை நோக்கிப் பார்க்க உனக்குக் கட்டளையிடுகிறார். உன்னை நீ நம்பாதே. உலகத்தின் வழியையும் நம்பாதே. உன் சாமர்த்தியத்தினால் ஒருபோதும் மோட்ச வழியைக் கண்டு பிடிக்கமாட்டாய். இயேசுவை நம்புவோர்க்கு வழியும் அதில் செல்வதற்கு வேண்டிய சக்தியும் உண்டு.

இயேசு ஒருவரே சத்தியம். சத்தியம் என்பது ஒழிந்து போகாது. இவ்வுலகம் தன் இச்சையோடே ஒழிந்துபோகும். பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைநிற்பான். லோகத்தார் வழியில் செல்ல உனக்கு எத்தனை நாள் சக்தியிருக்கும்? சீக்கிரத்தில் உன் இச்சை எல்லாம் மண்ணாகும். உன் ஆசை எல்லாம் சாம்பலாய்ப் போய்விடும்.

இயேசு ஒருவரே ஜீவன். நீ பிழைக்கவேண்டுமானால் அவரை விட்டுப் போகாதே. அவரை விட்டுப் போகிறவர்கள் நடைப்பிணங்கள். ஒரு நற்கிரியையும் அவர்களால் செய்ய முடியாது. அவரை விசுவாசிக்கிறவர்களுக்கோ இப்பூமியிலேயே மோட்சம் உண்டு. அவர்களுக்குச் சாவும் கிடையாது. அவர்கள் மரித்தாலும் மரணத்தை ருசிபார்க்கமாட்டார்கள்.

ஜெபம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே! நாங்கள் உலகத்தின் ஞானத்தையும் மகிமையையும் தேடாமல் உம்மையே தெரிந்துகொள்ளவும் உமது மூலமாய்ப் பிதாவண்டை வந்து மோட்சம் அடையவும் உமது ஆவியைக்கொண்டு எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும். சுவாமி, ஆமேன்.

மத். 6, 1-18. அல்லது எரே. புலம். 1, 1-22 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். இரண்டாம் வாரம், வெள்ளி.

பி. 191, 3. 4.

மறுபடியும் இயேசு அவர்களுடனே பேசி: நான் லோகத்தின் வெளிச்சமாயிருக்கிறேன், என்னைப் பின் செல்லுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவனுடைய வெளிச்சம் அடைந்திருப்பான் என்றார். யோ. 8, 12.

கிறிஸ்து பிறந்த நாளில் முழு லோகத்துக்கும் இரட்சிப்பின் சூரியன் உதித்தது. இருளில நடக்கிற ஜனம் பெரிய வெளிச்சத்தைக் காணுகிறது. இருளான தேசத்தில் வாசம்பண்ணுகிறவர்கள் மேல் அது பிரகாசமாய் விளங்குகிறது. ஐயோ, இன்னம் உலகத்தில் எவ்வளவு இருள்! கிறிஸ்துமார்க்கத்தாருக்குள்ளே அநேகரான இருளும் அவிசுவாசத்தின் அந்தகாரமும் மிகுதி. வெளிச்சம் இருளிலே பிரகாசிக்கிறது. இருளோ அதை உணர்ந்து கொண்டதில்லை என்கிற வார்த்தை இப்போதும் உண்மை.

நீயும் இன்னும் இருளில் அலைகிறாயா? இயேசு கிறிஸ்துவின் வெளிச்சத்தினால் நீயும் வெளிச்சமாய்ப் பிரகாசிக்கிறாயா? நீ அவரை விசுவாசத்தினால் பிடித்துக்கொண்டிருக்கிறாயா? அல்லது வேறு இடங்களில் உன் ஆத்துமத்திற்குத் திருப்தியைத் தேடுகிறாயா? லோகத்தார் உனக்குப் பலவிதமான தீபங்களைக் காண்பிப்பார்கள். அந்தத் தீபங்கள் கொள்ளிவாய்ப் பைசாசங்கள் என்று அறிக. அவைகளை நம்பினால் உளையிலும் சதுப்பிலும் மூழ்கிப் போகவேண்டும். இயேசுநாதர் நமக்குக் காண்பிக்கும் தீபமோ நம்மைத் தப்பாமல் இலக்குக்குக் கொண்டுபோகும்.

வெளிச்சமானது ஜீவனை உண்டாக்கும். சூரியன் எங்கே பிரகாசிக்கிறதோ அங்கே புல் பூண்டு துளிர்த்துப் பூக்கும். இரட்சிப்பின் சூரியனாகிய இயேசு உன்னை எழுப்பி விடுவாரானால் நீ நவமான ஜீவனில் நடப்பாய். நீ பாவத்தைப் பகைத்து நீதியைச் சிநேகித்து அவருடைய நாமத்தினிமித்தமாகச் செம்மையான பாதையில் செல்லுவாய். மனிதருடைய ஞானத்தினாலும் சாஸ்திரத்தினாலும் குருடாகி வழிதப்பிப் போகாமல், இயேசு ஒருவரே உன் ஜீவியத்தின் வழிகாட்டியென்றும் உனக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் அருளும் இரட்சகரென்றும் அறிந்துகொள். அவர் எங்கேயோ அங்கே தெளிவும் நிச்சயமும் உண்டு. அவர் எங்கே இல்லையோ அங்கே இருளும் மயக்கமும் உண்டு.

ஜெபம். எங்கள் பரம சூரியனானவரே! உமது அளவற்ற கிருபையினால் இருள் நிறைந்த எங்கள் உலகத்தில் இறங்கி எங்களுக்கு மோட்ச வழியைக் காட்ட வந்ததற்காக உமக்குத் தோத்திரம். நாங்கள் அந்தகாரத்தை விட்டு உமது வெளிச்சத்தைத் தேட எங்கள் இருதயங்களைப் பிரகாசிப்பித்தருளும். சுவாமி, ஆமேன்.

மத். 6, 19-34. அல்லது எரே. புலம். 3, 19-42 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். இரண்டாம் வாரம், சனி.

பா. 327, 1. 2. அல்லது 334, 1. 2.

ஆறாம் கற்பனையாவது: விபசாரம் பண்ணாதிருப்பாயாக.

இதற்கர்த்தமென்ன? நாம் பராபரனுக்குப் பயந்து, அவரைச் சிநேகித்துக்கொண்டு, வார்த்தைகளிலேயும் கிரியைகளிலேயும் கற்புஞ் சுத்தாங்கமுமாய் நடந்து, புருஷனும் பெண்சாதியும் ஒருவருக்கொருவர் பட்சத்தையும் சங்கையையும் காட்டவேண்டும்.

விவாக மார்க்கம் மனிதனால் அல்ல, பராபரனால் ஏற்பட்டது. ஆகையால் அது பரிசுத்த மார்க்கம். பராபரன் தாமே பரதீசில் அதை ஏற்படுத்தினதினால், பரதீசின் பரிசுத்தத்தையும் பூரண பாக்கியத்தையும் இந்த மார்க்கம் தரக்கூடியது. ஆகையால் விவாக மார்க்கத்தார் விவாக ஐக்கியத்தை மீறினால் பராபரன் ஆதி மனிதரை எப்படிப் பரதீசில் இருந்து துரத்திவிட்டாரோ அப்படி இவர்களையும் கடினமாய்த் தண்டிப்பார். மணமக்கள் பீடத்துக்கு முன்பாகக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும்படி அவர்களுக்கு உத்தாசையாயிருப்பதெது? கானாவூரார் இயேசுநாதரை எப்படிக் கலியாணத்துக்கு அழைத்தார்களோ அப்படிக் கிறிஸ்தவ மணமக்கள் அவரைக் கலியாணத்துக்கு வரவேண்டிக்கொண்டு அவரோடு தங்கள் விவாகத்தை ஆரம்பித்தால் அவர் அவர்களுக்குத் துணையாக நிற்பார். கொடுத்த வாக்கை மீறுகிறவன் எல்லாம் வெட்கத்தை அடைவான். விபசாரத்தையும் வேசித்தனத்தையும் பாவம் என்று எண்ணாதவர்கள் அநேகர் உண்டு. அதினால் விளையும் கேடு அளவிறந்தது. புருஷனும் பெண்சாதியும் தங்களுக்குள்ளிருக்க வேண்டிய ஐக்கியத்தைச் சண்டை சச்சரவினாலும் பகையினாலும் ஒழுங்கீனத்தினாலும் கெடுத்துப்போட்டால் அவர்கள் மாத்திரம் அல்ல அவர்கள் பிள்ளைகளும் பாடனுபவிப்பார்கள்.

கர்த்தர் நமக்கு இன்னும் கட்டளையிடுகிறது என்ன? நாம் எல்லாரும் உள்ளும் புறம்பும், நினைவுகளிலும் வார்த்தைகளிலும் கிரியைகளிலும், கற்பும் சுத்தாங்கமுமாய்ச் ஜீவனம்பண்ணுவதே அவருடைய திருச்சித்தம். இருதயத்தில் சுத்தமானவர்கள் பாக்கியவான்கள். அதேதென்றால் அவர்கள் பராபரனைத் தரிசிப்பார்கள். 6-ம் கற்பனையை மீறுவதற்கான சோதனைகளுக்கு விலகிப்போகக்கடவோம். சிற்றின்பப் புஸ்தகங்களையும் கதைகளையும் துன்மார்க்கத்தோழமையையும் சோம்பலையும் பெருந்தீனியையும் விலக்குவோமாக. சுத்த இருதயத்துக்காகக் கர்த்தரை மன்றாடு. அவருடைய கிருபையை நோக்கிப்பார். உன் சரீரம் பரிசுத்தாவியின் ஆலயம் என்பதை மறக்காதே.

ஜெபம். மாசில்லாமல் தூய்மையான, பளிங்கிலேயும் தெளிவான சுத்தாங்க ஊற்றே, இயேசுவே! கேருபீன்கள் ஞாயிரின் பிரகாசம் யாவும் தேவரீரின் முன்பாக மங்கிப்போகுதே. என் பாவத்தின் இருள் அனைத்தும் உமக்குள் தொலையட்டும்; ஆ, இயேசுவே! நான் உமக்கே ஒப்பாய்ச் சுத்தாங்கமாகவும். சுவாமி, ஆமென்.

மத். 7, 1-12. அல்லது எசே. 1, 1-26 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். மூன்றும் வாரம், ஞாயிறு.

பி. 288, 1. 2.

இதோ, ஒரு குஷ்டரோகி வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே, உமக்குச் சித்தமுண்டானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆம் என்றான். அப்போது இயேசு கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே அவன் குஷ்டரோகம் சுத்தமாயிற்று. மத். 8, 2. 3.

இப்படி நமது கர்த்தர் நமது உபத்திரவத்தையும் பாடுகளையும் ஒரு நொடிப்பொழுதில் ஒரு வார்த்தையினால் நீக்கக் கூடியவர். அவர் சர்வ வல்லமையுள்ள தேவன், அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். ஆயினும் இரட்சிக்க அவருக்கு மனதும் உண்டோ? உலகத்திலுள்ள எல்லாப் பாடுகளையும் பார்த்தால் சர்வ வல்லமையுள்ளவருக்கு மனமில்லைபோலிருக்கிறது. ஆயினும் இதைப்பற்றி நீ கொஞ்சமாகிலும் சந்தேகப்படவேண்டாம். எல்லாரையும் இரட்சிக்க அவருக்கு மனம் உண்டு என்று வேதம் தெளிவாய்ச் சொல்லுகிறது. சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு மோதுண்ட அலைக்குச் சமானமானவன். அப்படிக்கொத்த மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதாகிலும் பெறுவான் என்று நினைக்கவேண்டாம்.

ஆண்டவரே, உமக்கு மனதுண்டானால் என்று அந்தக் குஷ்டரோகி சொல்லுகிறான். அடிக்கடி ஆண்டவர் நம்முடைய வேண்டுதலைக் கேட்கமாட்டார் போலிருக்கிறது. தாயானவள் அடிக்கடி பிள்ளைகள் கேட்கிறதை அவர்களுக்குக் கொடுக்கமாட்டாள். ஏன் என்று கேட்டால், கொடுத்தால் பிள்ளைகளுக்கு நன்மையாயிருக்காது. கேட்கிறது இன்னதென்று பிள்ளைகளுக்குத் தெரியாது. அப்படிப்போல், நாம் கர்த்தரிடத்தில் கேட்கிறது இன்னதென்று அடிக்கடி நமக்குத் தெரியாது. ஆதலால் மேலான யோசனையுள்ள அவர் நாம் வேண்டினபடி செய்யமாட்டார். அப்போது நாம் நம்பிக்கையற்றுப் போகலாகாது.

அவர் நமது வியாதியை நீக்கி நம்மைச் சுகப்படுத்தாவிட்டால், வியாதியே நமக்கு நன்மையாயிருக்குமென்று நம்புவோமாக.

சுகமானவுடன் ஒரு வேளை அவரை மறந்துவிடுவோம். அநேக உபத்திரவங்களின் வழியாய் நாம் பராபரனுடைய இராச்சியத்திற்குள் பிரவேசிக்கவேண்டும்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! எல்லா மனிதர்களுடைய உபத்திரவங்களையும் நீக்கச் சித்தமாயிருக்கிறீர். எங்கள் மேலும் இரங்கி [illegible]ன்னை இரட்சியும், உமது வார்த்தையின்படி எங்களுக்கு ஆகக்கடவது, சுவாமி, ஆமென்.

மத். 7, 13-29. அல்லது சங். 30 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். மூன்றும் வாரம், திங்கள்.

பி. 288, 3. 4.

இயேசு கப்பர்நகூமுக்குள் பிரவேசிக்கையில், நூற்றுக்குச் சேர்வைக்காரன் அவரண்டை வந்து அவரை வேண்டிக்கொண்டு: ஆண்டவரே, என் வேலைக்காரன் மிகவும் உபாதிப்பட்டு, வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடக்கிறான் என்றான். இயேசு அவனுடனே: நான் வந்து அவனைக் குணமாக்குவேன் என்றார். சேர்வைக்காரன் பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: ஆண்டவரே, நீர் என் தலைவாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரவான் அல்ல; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்போது என் வேலைக்காரன் ஆரோக்கியமாவான் என்றான். மத். 8, 5-8.

வானத்தையும் பூமியையும் அதிலுள்ளதெல்லாவற்றையும் தமது வாயின் வார்த்தையினால் உண்டாக்கின சர்வவல்லமையுள்ள தேவன் நம்முடைய பராபரன். அவர் இன்றைக்கும் தாம் விரும்புவதை ஓர் வார்த்தையினால் நமக்குக் கொடுக்கக் கூடாதிருப்பது எப்படி? அவருடைய வசனம் நமது கையிலிருக்கிறது. அது இன்றைக்கும் நிச்சயமும் உண்மையுமாயிருக்கிறது. அவர் பொய்சொல்லுகிறதுமில்லை, மோசம் பண்ணுகிறதுமில்லை.

கர்த்தருடைய வசனம் பெலவீன ஆத்துமாக்களுக்குப் பெலத்தையும், ஆறுதலையும் சமாதானத்தையும் அளிக்கக்கூடியது. ஒரு தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் என்றும், நெருக்கப்படுகிற நாளிலே நம்மை நோக்கிக்கூப்பிடு, அப்போது உன்னை விடுவிப்போம், அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக் கடவாய் என்றும், திடன்கொள் உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றும், சமாதானத்தோடே போ என்றும் அவருடைய வசனம் நமக்குச் சொல்லு

கிறது. இப்படிப்பட்ட வார்த்தைகளைக்காட்டிலும் அருமையான ஆறுதலுந் தரத்தக்க வார்த்தைகள் உண்டோ? நாம் இப்படிப்பட்ட தேவவார்த்தையை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டால் நமக்கு வேண்டிய திருப்தி கிடைக்கும். நீ விசுவாசித்தால் பராபரனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொன்னதில்லையா என்று ஆண்டவர் மார்த்தாளை நோக்கிக் கேட்டார்.

நாம் அடிக்கடி விசுவாசம் தளர்ந்து போவதற்குக் காரணம் என்ன? நாம் தாழ்மையோடு கர்த்தரிடத்தில் சேருமுன் அவர் உடனே நமக்குச் செவிகொடுக்கவேண்டும் என்கிற எண்ணத்தோடு மன்றாடுகிறதினாலே விசுவாசம் தளர்ந்துபோக இடமுண்டு. ஆண்டவரே! நீர் என் தலைவாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரவான் அல்ல என்று அறிக்கையிடுகிறவனெல்லாம் அவருடைய மகிமையைக் காண்பான்.

ஜெபம். எங்கள் பரம இராசாவாகிய இயேசுகிறிஸ்துவே! உமது வார்த்தையினால் வானமும் பூமியும் உண்டாயிற்று. நாங்கள் உமது வல்லமையை உறுதியாய் நம்பி, உமக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்கு உமது ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

மத். 8, 1-22. அல்லது எசேக். 21, 3-9 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். மூன்றாம் வாரம், செவ்வாய்.

பி. 191, 5. 6.

பிரயாசப்பட்டு பாரம் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள். நான் உங்களை முசிப்பாற்றுவேன். என் நுகத்தடியை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்திலே கற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றால் மெத்தனவும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். அப்படியே உங்கள் ஆத்துமங்களுக்கு முசிப்பாறுதல் கிடைக்கும். ஏனெனில் என் நுகத்தடி மெதுவும் என் சுமை லேசுமாயிருக்கிறதென்றார். மத். 11, 28-30.

உலகத்தார் சிநேகிக்காமலும், ஆற்றித்தேற்றாமலும் விட்டுவிட்ட எல்லாரையும் ஏற்றுக்கொள்ளக் கர்த்தர் தமது இருதயத்தைத் திறக்கிறார். வியாதியிலும் தரித்திரத்திலும் கஷ்டத்திலும் தவித்துத் தங்கள் சுமையை வெகு பிரயாசையோடு சுமந்துகொண்டுபோகிற எல்லாரையும் அவர் தம்மண்டை அழைக்கிறார். அன்பு பொங்கின அவருடைய இருதயத்தில் எல்லாருக்கும் இடம் உண்டு. அவர் சீர்ப்படுத்தக்கூடாத பொல்லாதவர்

களும் இல்லை. அவர் ஆற்றித்தேற்றக்கூடாத நிர்ப்பந்தமும் கிடையாது. அவர் சுகப்படுத்தக்கூடாத வியாதியுமில்லை.

ஒரு காலத்தில் பரதீசு என்னும் சிங்காரத்தோட்டத்தில் பாரமும் பிரயாசமுமில்லை. இப்பொழுதோ உலகத்திலே எத்தனை மனிதரோ அத்தனை பிரயாசப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களும் உண்டு. புறம்பான வேஷத்தினாலும் ஆடம்பரத்தினாலும் அவர்கள் நிர்ப்பந்தம் வெளிப்படவில்லையானாலும் அவர்கள் உள்ளத்தில் திருப்தியே இல்லை.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த தேவாட்டுக்குட்டியானவர் நம்முடைய பாவங்களையும் தம்முடைய முதுகின்மேல் சுமந்தார். பாவத்தினால் இளைத்து நொறுங்கின இருதயங்களுக்கு முசிப்பாறுதலும் சமாதானமும் அவரிடத்திலுண்டு. அவர் மெத்தனவும் மனத்தாழ்மையுமுள்ளவர். தம்மண்டை வருகிற ஒருவனையும் அவர் தள்ளிவிடமாட்டார்.

ஆகிலும் அவரிடத்தில் ஒரு பாரமும் இல்லை என்று நினைக்காதே. அவரும் உனக்கு ஒரு சுமையைத் தருவார். ஒரு நுகத்தடியை உன் கழுத்தில் வைப்பார். அவரைப் பின்செல்பவர்களும் பாடு அநுபவிக்கவேண்டியது. ஆனால் இனிமேல் அந்தப் பாட்டுக்குக் களைப்பு இல்லை. அவர்களும் சாகவேண்டும். ஆகிலும் சாவுக்குக் கூர் இல்லை. ஆகையால், என் நுகத்தடி மெதுவும் என் சுமை இலேசுமாயிருக்கிறது என்று இரட்சகர் சொல்லுகிறார்.

ஜெபம். குற்றம் அன்றிக் குரோதம் அற்று - எல்லா இகழ்ச்சியையும் பட்டு - மன்னித்தீர் சாந்த இயேசுவே, தேவ வீட்டுக்காய் அல்லாமல் - நீர் வேறொரிச்சையைக் காட்டாமல் - இருந்தீர் ஆட்டுக்குட்டியே! நான் அச்சப்பத்தியாய் - மிகுந்த சாந்தமாயிருக்கட்டும் - ஆ இயேசுவே! நான் உமக்கே ஒப்பாகச் சாந்தமாகவும், சுவாமி, ஆமேன்.

மத். 8, 23-34. அல்லது எசேக். 3, 16-27. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். மூன்றாம் வாரம், புதன்.

பி. 240, 1. 2.

வேலைக்காரரே, மாமிசத்தின்படி எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் இருதயம் கபடில்லாமையாய்ப் பயத்தோடும் நடுக்கத்தோடும் கீழ்ப்படிந்து, மனுஷருக்கு இதமியக்காரர்போல் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரர்போல் மனதாரப் பராபரனுடைய சித்தத்தின்படி

செய்து கண்பணிதராய் மனுஷருக்கென்றல்ல, கர்த்தருக்கென்று ஊழியஞ் செய்து, அவனவன் வேலைக்காரனானாலும், தன்னிச்சைக்காரனானாலும் சரி, என்னென்ன நன்மை செய்கிறானோ, அதினதின் பலனைக் கர்த்தரிடத்திலே அடைவானென்று அறியுங்கள். எபேசி. 6, 5-8.

நமது கர்த்தர் இவ்வுலகில் ஊழியம் செய்வித்துக்கொள்ள வராமல், ஊழியம் செய்யவும், தமது ஜீவனை அநேகரை மீட்கும் பொருளாகத் தரவும் வந்தார். இதுதான் அவருடைய மகிமை. இந்த மகிமையை அவர் தமது சிஷர்களிடத்திலும் பார்க்க விரும்புகிறார். நீங்கள் என்னைப் போதகர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கிறீர்கள். நிதானமாய் அப்படிச் சொல்லுகிறீர்கள். ஏனெனில் நான் அவர் தான். இப்போதும் உங்கள் ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்கள் கால்களைக் கழுவினது உண்டானால் நீங்களும் ஒருவருக்கொருவர் கால்களைக் கழுவக் கடவீர்கள். ஏனென்றால் உங்களுக்கு நான் செய்தது போல் நீங்களும் செய்வதற்கு உங்களுக்கு மாதிரியைக் காட்டினேன் என்றார். ஆகையால் ஊழியம் செய்வது இழிவான காரியமல்ல. கிறிஸ்துவின் சிந்தையோடு சேர்ந்த ஊழியம் கனமும் மேன்மையும் பொருந்தியது. கிறிஸ்துவைப் பின்தொடர்ந்து தங்கள் எசமான்களுக்குக் கீழ்ப்படிந்து வேலைசெய்கிறவர்கள் தேவனுக்கே ஊழியம் செய்கிறவர்கள். அதற்காகக் கர்த்தரிடத்தில் பலனைப் பெறுவார்கள். நாம் மனிதருக்கல்ல, பராபரனுக்கே ஊழியம் செய்கிறவர்கள் என்றும், மனிதர் நம்மைப் பார்க்கிறார்கள் என்று அல்ல, ஆண்டவரே நம்மைப் பார்க்கிறார் என்றும், மனதிலே வைத்து நம்முடைய வேலையைச் செய்வோமாக. உண்மையான கிறிஸ்தவனுடைய ஊழியமெல்லாம் உலகத்தாரால் எவ்வளவு அற்பமும் கேவலமுமாக எண்ணப்பட்டாலும், கர்த்தர் அதின்பேரில் பிரியப்படுவார். தன் தேசத்தையும் ஜனத்தையும் எப்படி ஆளுவது என்று சிந்திக்கிற இராசாவின் கவலையைப்போல் தன் அற்ப வேலையைத் தேவ பயத்தோடு எப்படிச் செய்வேனென்று யோசிக்கிற ஒரு கிறிஸ்தவ வேலைக்காரனின் கவலையும் பெரிது.

ஜெபம். ஆண்டவரே! நாங்கள் உம்மைப் போல் எல்லா ஊழியத்திலும் உண்மையுள்ளவர்களாகக் கண்டுபிடிக்கப்பட எங்களுக்கு உமது முன்மாதிரியை நினைப்பூட்டியருளும், சுவாமி, ஆமேன்.

மத். 9, 1-26. அல்லது எசேக். 18, 21-32 வாசிக்கவும்.

மகி. விளா. பண். பிந். மூன்றும் வாரம், வியாழன்.

பி. 240, 3. 4.

எசமான்களாகிய நீங்களும் அவர்களுக்கு அப்படியே செய்து, மிரட்டுதலைத் தவிர்த்து, உங்களுக்கும் எசமான் பரமண்டலங்களிலிருக்கிறார். அவரிடத்தில் பட்சபாதமில்லை என்கிறதை அறியுங்கள். எபே. 6, 9.

நீ, எசமானானாலும் வேலைக்காரனானாலும் உன்னை அந்த நிலையில் வைத்தவர் ஆண்டவர்தான் என்பதை மறக்காதே. அவர் ஒரு நாளில் ஒவ்வொருவனுக்கும் அவனவன் சரீரத்தினால் நடப்பித்த நன்மைக்கானாலும் தீமைக்கானாலும் தக்கபடி பலன் அளிப்பார். தன் இஷ்டப்படி நடந்து, தன் வேலைக்காரர் வேலைக்காரிகளைத் தன் இஷ்டப்படி நடத்தக்கூடிய கொடுங்கோல் எசமான் ஒருவனும் பூமியில் இல்லை. யோசேப்பின் சகோதரர், தங்கள் தகப்பன் மரித்தபின், அதிகாரத்தையும் வல்லமையையும் பெற்ற யோசேப்பு இப்போது சரிக்குச்சரிக்கட்டுவான் என்று பயந்தபோது, யோசேப்பு அவர்களை நோக்கிப் பயப்படாதேயுங்கள், ஏனெனில் நான் பராபரனுக்குக் கீழானவன் என்று சொன்னான். பயப்படாதிருங்கள், ஏனெனில் நான் பராபரனுக்குக் கீழானவன், என்று இக்காலத்து எசமான்களும் தங்கள் வேலைக்காரரை நோக்கிச் சொல்லவேண்டும். நம் எல்லாருக்கும் பரமண்டலத்தில் ஓர் எசமான் இருக்கிறார். அவருக்கு நாம் நமது செய்கைகள் எல்லாவற்றிற்காகவும் கணக்குச் சொல்லவேண்டியது. இவ்வுலகில் பல வித அந்தஸ்துக்கள் அவசியம். பராபரனுடைய இராச்சியத்திலோ முகமாட்டம் கிடையாது. ஜாதிகளுக்குத் தலைவர்களாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் அதிகாரிகளாயிருக்கிறார்கள் என்றும் அறிவீர்கள். உங்களிலே அப்படி வேண்டாம். உங்களில் எவனாகிலும் பெரியவனாக வேண்டுமென்றிருந்தால் உங்கள் பணிவிடைக்காரனாயிருப்பான். உங்களில் எவனாகிலும் முதலாளியாக வேண்டுமென்றிருந்தால் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருப்பான் என்று கிறிஸ்து சொல்லுகிறார்.

எசமான் எப்படியோ அப்படி வேலைக்காரனும் இருப்பான். எசமான் தேவ பக்தியும் தேவ பயமும் உள்ளவனாக இருந்தால் வேலைக்காரனும் அப்படியே இருப்பான். கப்பர்நகூம் ஊராருக்குச் சேர்வைக்காரன் தன் வேலைக்காரனைச் சிநேகித்ததினால் அவனுக்காகக் கர்த்தரிடத்தில் ஒத்தாசையைத் தேடப் புறப்பட்டுப் போனான். இப்போப்பட்ட எசமானுக்கு வேலைக்காரர் சந்தோஷத்தோடு பணிவிடை செய்வார்கள்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கையில் ஒப்புவித்திருக்கிற வேலைக்காரரை நாங்கள் சிநேகித்து, அவர்களுக்குப் பட்சத்தையும் பொறுமையையும் காட்டித் தேவரீர் எங்கள் எல்லாருக்கும் எசமான் என்பதை எப்போதும் மனதிலே வைத்து, உமக்குப் பயப்பட உமதாவியை எங்களுக்குத் தந்தருளும். சுவாமி, ஆமேன்.

மத். 9, 27-38. அல்லது எசேக். 34, 1-16 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். மூன்றும் வாரம், வெள்ளி.

பி. 240, 5. 6.

என் ஆத்துமமே, என் முறிந்துகொண்டிருக்கிறாய், என் என்னில் கொந்தளிக்கிறாய்? பராபரனுக்குக் காத்துக்கொண்டிரு; ஏனெனில் இன்னம் அவரை என் முகத்தின் குறையற்ற இரட்சிப்பு என்றும், என் பராபரனென்றும் துதிப்பேன். சங். 42, 12.

தன் ஆண்டவராகிய இயேசுவை அறிந்து, அவருக்கு நன்றியறிதலோடு ஊழியஞ் செய்யும் கிறிஸ்தவன் ஒருபொழுதும் துக்கப்படுவதும் மனம் அழிந்துபோவதுமில்லை. ஏனெனில் தன் இருதயத்திற்குச் சமாதானத்தையும் ஆறுதலையும் தருபவர் இன்னார் என்று அவனுக்கு நன்றாய்த் தெரியும். நமது இருதயம் பராபரனில் இளைப்பாறுமட்டும் நம்மில் அமைதலற்றிருக்கிறதென்று அகுஸ்தீன் என்னும் பெயர் பெற்ற போதகப் பிதா சொன்னது உண்மை. இயற்கையாய் நம்மெல்லாருடைய இருதயமும் ஒரு நாள் திருக்குள்ளதும் மறு நாள் நம்பிக்கையற்றதுமாயிருக்கிறது. ஆகிலும் அப்படி இல்லாமல் நமது ஆத்துமாவுக்கு அமைதலானத்தைத் தரக் கூடியவர் ஒருவர் இருக்கிறார். அவர் தமது சொந்தக் குமாரனைப் பாராமல் அவரை நம்மெல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத்தார். அவரோடேகூட யாவையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

இப்போது நாம் பவுல் அப்போஸ்தலனைப்போல் “நாம் எல்லா விதத்திலும் உபத்திரவப் படுகிறோம், ஆனால் ஒடுங்கிப் போகோம். பயப்படுகிறோம், ஆனால் மனமுறியப் பயப்படோம். துன்பப்படுகிறோம், ஆனால் கைவிடப்படோம். கீழே தள்ளப்படுகிறோம், ஆனால் கெட்டுப்போகோம்” என்று சொல்லவேண்டும். இம்மையின் இன்பமெல்லாம் ஒழிந்துபோம். இம்மையில் உனக்கு வெறும் பாடும் துக்கமும் இருந்தாலும் மறுமையில் நீ அதற்காகவும் தேவனைப் புகழ்ந்து ஸ்தோத்திரிப்பாய். ஆண்ட-

வர் கொஞ்சம் நேரம் தமது முகத்தை மறைத்தால் நமது விசுவாசத்தைச் சோதிக்கப்போகிறார். பார்க்காமல் நம்புவதே நம்பிக்கை. அவர் எப்போதும் மறைந்திருக்கமாட்டார். சீக்கிரம் தமது திருமுகத்தை நமக்குக் காண்பிப்பார்.

ஜெபம். ஆண்டவரே! பாடுகளிலும் நாங்கள் உமதண்டைப் பார்க்கவும் ஒருபோதும் சந்தேகத்திற்கு இடங்கொடாமல் உம்மைக் கெட்டியாய்ப் பிடிக்கவும் எங்களைத் திடப்படுத்தியருளும். தேவரீர் ஒருவரே எங்கள் ஆத்துமத்தைத் திருப்தி பண்ணக் கூடியவர். எங்களைக் கைவிடாதேயும், சுவாமி, ஆமேன்.

மத். 10, 1-18. அல்லது எசேக், 34, 17-31. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். மூன்றும் வாரம், சனி.

பி. 243, 1. 2.

ஏழாங் கற்பனையாவது, களவு செய்யாதிருப்பாயாக.

இதற்கர்த்தமென்ன? நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு பிறத்தியானுடைய பணத்தையானாலும் சொத்துக்களையென்கிலும் திருடாமலும் அவைகளைக் கள்ளவர்த்தகங்கள், சரக்குகள் முதலானவைகளினால் நமது பாரிசமாக்கிக்கொள்ளாமலும் அவன் சொத்துக்களையும் பிழைப்புகளையும் வர்த்திக்கப்பண்ணிக் காப்பதற்கு உதவியாயிருக்கவேண்டும்.

பராபரன் ஏழாம் கற்பனையைக்கொண்டு பிறத்தியானுக்குச் சொந்தமான பொருளைச் சுற்றிலும் ஒரு வேலி அடைத்தாற்போலிருக்கிறார். ஒருவன் ஏழையானாலும் சரி, பணக்காரன் ஆனாலும் சரி, தன் சொத்தை நியாயமாய்ச் சம்பாதித்தாலும் சரி, அநியாயமாய்ச் சம்பாதித்தாலும் சரி, எல்லாருடைய பொருளும் இந்தக் கற்பனையினால் காக்கப்படும். ஒருவன் பிறத்தியான் பொருளைப் பலவந்தத்தினால் தன் சொந்தமாக்கிக்கொண்டால் அது கொள்ளையாகும். அதை இரகசியமாய் எடுத்தால் திருட்டாகும். அதைத் தந்திரமாக அபகரித்தால் வஞ்சகமும் மோசமுமாகும். இப்படி எல்லாம் செய்யக்கூடாது என்று பராபரன் சொல்லுகிறார். உனக்கும் பிறத்தியானுக்கும் சொத்தைக் கொடுத்தவர் அவர் அல்லவா? ஆதலால் பிறர் பொருளைத் திருடுகிறவன் தேவனுடைய பொருளைத் திருடுகிறான்.

இந்தக் கற்பனையின்படி நாம் செய்யவேண்டியதென்ன? நாம் உண்மையான சிநேகிதர்போல் பிறத்தியானுக்கு நல்ல யோ-

சனங்களைச் சொல்லி அவன் உடைமைப்பொருள் அதிகரிக்க உதவியாயிருக்கவேண்டும்.

நாம் நமது காலத்தை வீணிலே கழித்து அவ்வாறு தேவன் நமக்குத் தந்த பொருளை அழிக்கக் கூடாது. அதுவும் திருட்டைப்போலாகும். நம்மில் ஒவ்வொருவனும் கையினாலோ காலாலோ தலையினாலோ வேலைசெய்து உழைத்துத் தன்னையும் தன்னுடையவர்களையும் ஒழுங்காய்ப் போஷித்துத் தரித்திரருக்குக் கொடுப்பதற்கு மீந்து வைக்கவேண்டியது நம்முடைய கடமை. நாம் கஷ்டகாலத்தில் பிறர் இடத்தில் உதவி கேட்காவண்ணம் வீண் செலவு பண்ணாமல் பணத்தைச் சேர்த்து வைப்பதும் அவசியம். வேலை செய்யாதவன் சாப்பிடவும் வேண்டாம்.

ஜெபம். எங்கள் அருமைப் பரம பிதாவே! உமது அளவிறந்த கிருபையினால் அனுதினமும் எங்களுக்கு வேண்டிய ஆகாரம் கிடைக்கிறது. தேவரீர் எங்களுக்கு அருளிச்செய்த சொத்துக்காக உமக்கு மனதார ஸ்தோத்திரம் செலுத்த எங்களுக்கு உபதாவியைத் தந்தருளும். தேவரீர் எங்கள் பிறத்தியானுக்கு அருளின சொத்தை நாங்கள் பொறாமையின்றிக் கண்டு அதை விர்த்திக்கப்பண்ண அவனுக்கு ஒத்தாசையாயிருப்பதற்கு எங்களை எவி எழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

மத். 10. 19-42. அல்லது எசேக். 36, 16-36. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். நாலாம் வாரம், ஞாயிறு.

பி. 245, 1. 2.

அவர் படவில் ஏறினபோது, அவருடைய சீஷர்கள் அவர் பிறகே சென்றார்கள். இதோ, படவு அலைகளினால் மூடப்படத் தக்கதாய்க் கடலில் பெரிய கொந்தளிப்பு எழுந்தது. அவரோ நித்திரை பண்ணினார். அப்போது அவருடைய சீஷர் சேர்ந்துவந்து அவரை எழுப்பி, ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்து போகிறோம் என்றார்கள். மத். 8, 23-26.

இயேசுவைப் பின்செல்லுகிறவர்கள் துன்பத்தை அநுபவிக்கவேண்டியது. இதை நாம் அடிக்கடி மறந்து நமக்குத் துன்பம் வரும்போது, கர்த்தருடைய சீஷருக்கு நேரிடக்கூடாத ஓர் அபூர்வ சங்கதி நேரிட்டதாக நினைத்து ஆச்சரியப்படுகிறோம். கிறிஸ்தவர்களுடைய சீவியம் பாடு நிறைந்தது. சிலுவையில் அறையுண்டவரைப் பின்செல்பவனுக்குச் சிலுவையே கதி.

கிறிஸ்து பண்ணின கப்பல் பிரயாணத்தில் இதைப் பார்க்கிறோம். அவரும் அவர் சீஷரும் படவில் ஏறிப் புறப்பட்டபின்

பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. இயேசுநாதர் கூட இருந்தும் பெருங்காற்று அடித்தது. காற்றும் கடலும் அவருக்குப் பயப்படவில்லைபோல் இருந்தது. அவரைச் சீஷரோடு விழுங்கப் போயிற்று? சீஷர் அப்படிப் பயந்திருந்தார்கள்.

அவரோ நித்திரைபண்ணினார். இது சீஷரின் திகிலை அதிகிக்கப்பண்ணிற்று. அவர்களுடைய விசுவாசத்தைச் சோதித்துப் பலப்படுத்துவதற்கு, இப்படி எல்லாம் வரவேண்டியது. அவர்கள் கர்த்தரை எழுப்பி, ஆண்டவரே! எங்களை இரட்சியும் என்று கூப்பிட்டார்கள். கர்த்தர் அப்போது இல்லையானால் அவர்கள் மடியத்தான் வேண்டும். நெருக்கமான நாளில் ஆண்டவர் நம்மருகில் இருக்கிறார் என்றறிவது மிக அவசியம்.

நெருக்கப்படும் காலத்தில் கர்த்தர் நமக்கும் சமீபமாயிருக்கிறார். அவர் நம்மிடத்திலும் நாம் அவரிடத்திலுமிருந்தால் நமக்கு யாதொரு குறைவுமில்லை. அவர் நமது சத்தத்தைக் கேட்கிறார். ஆகையால் நாம் மடிந்துபோக வேண்டாம். துன்பத்தினால் உண்டாகும் ஆசீர்வாதத்தைப் பார்; நாம் நல் நாட்களில் ஜெபம் செய்ய மறந்துவிட்டால், உபத்திரவ காலத்தில் திரும்ப ஜெபம் செய்யக் கற்றுக்கொள்வோம். துன்ப நாளில் நமது விசுவாசம் உண்மையுள்ளதா என்று சோதிக்கப்படும். தங்கத்தின் அருமை நெருப்பிலே தெரியவரும்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! நாங்கள் உம்மைப் பின்பற்றி அநேகம் துன்பங்கள் அநுபவிக்கவேண்டுமானாலும் தேவரீர் எங்களோடிருக்குமட்டும் பயப்படமாட்டோம். ஆண்டவரே! நாங்கள் நம்பிக்கையற்றுப் போவோமானால் எங்கள் விசுவாசத்தைத் திடப்படுத்தியருளும், சுவாமி, ஆமென்.

ஊபா. 7, 1-35. அல்லது சங். 46. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். நாலாம் வாரம், திங்கள்.

பி. 245, 3. 4.

அப்போது அவர் சீஷர்களுடனே, அற்ப விசுவாசிகளே, என் பயமடைந்திருக்கிறீர்கள் என்று சொல்லி, எழுந்திருந்து காற்றுகளையும் கடலையும் அதட்டினார். அப்போது மகா அமைதல் உண்டாயிற்று. அன்றியும் மனுஷர் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ, காற்றுகளும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள். மத். 8, 26. 27.

நெருக்கப்படும் நாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு, அப்போது உன்னை விடுவிப்பாம், அதற்காக நீ நம்மை மகிமைப் படுத்தக் கடவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார். சீஷர் நெருக்கத்தி

லே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அவர் அவர்களைச் சீக்கிரத்தில் விடுவித்தார். அவர்கள் தங்களை விடுவித்த அவரை மகிமைப்படுத்தி இவர் எப்படிப்பட்டவரோ காற்றுகளும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்.

ஆகிலும் அவர்கள் அவருடைய ஒத்தாசையைப் பெறுமுன் தங்கள் அற்ப விசுவாசத்துக்காகக் கர்த்தரால் கடிந்துகொள்ளப்பட்டார்கள். அவர்களுக்கு உறுதியான விசுவாசம் இருந்திருந்தால் கொந்தளிப்பு எழுந்தவுடனே, அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து, கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாதொன்றும் நமக்கு சேதமாகாது என்று சொல்லித் தங்களைத் தேற்றிக் கொண்டிருப்பார்கள். கர்த்தர் தங்களிடத்தில் இருந்தும், நாங்கள் மடிந்துபோகலாம் என்று விசுவாசத் தாழ்ச்சியினால் நினைத்தார்கள். கர்த்தர் தமது சீஷரின் அற்ப விசுவாசத்தைக் கடிந்துகொண்டும், அவர்களுக்கிருந்த அந்த விசுவாசம் ஒழிந்து போக ஒட்டாமல் இன்னம் இருந்த சிறு பொறி தணல் விட்டு எரியும்படியாக அதைப் பெலப்படுத்துகிறார். அவர் நெரிந்த நாணலை முறிக்காமலும் மங்கி எரிகிற திரியை அவிக்காமலுமிருப்பார்.

அவர் காற்றையும் கடலையும் அதட்டினவுடனே, பெரிய அமைதல் உண்டாயிற்று. இவர் எப்படிப்பட்டவரோ, காற்றுகளும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே, காற்றைத் தமது கைப்பிடியில் அடக்குகிறவர் யார்? தண்ணீரை வஸ்திரத்திலே கட்டினவர் யார்? பூமியின் எல்லைகளையெல்லாம் ஸ்தாபித்தவர் யார்? அவருடைய நாமம் என்ன? அவருடைய குமாரனின் நாமம் என்ன என்று சாலொமோன் கேட்கிறான். (நீதி. 30, 4.) அவர் ஆர் என்று நமக்குத் தெரியும். நாம் விசுவாசத்தினால் அவரை அறிந்து அவருக்குச் சமீபமாயிருக்கிறோம். இவ்வுலகத்தில் அவருடைய சபையாகிய படவைத் தாக்கி அமிழ்த்திவிடப் பயமுறுத்துகிற எல்லாக் கொந்தளிப்பையும் புயலையும் நமது கர்த்தராகிய இயேசு எப்படி அமர்த்துகிறார் என்பதை நாமும் ஒரு நாள் கண்டு அவரைப் புகழ்ந்து கொண்டாடுவோம்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள தேவ குமாரனே! உமக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதிகள் உமக்கு விரோதமாக எழும்பினாலும் நீர் கர்த்தராய் ஆண்டு கொண்டிருக்கிறீர். ஆ, கர்த்தரே! உம்மைச் சேர்ந்த எங்களையும் காப்பாற்றி, எங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தியருளும்.

மத். 11, 20-30. அல்லது எசேக். 33, 1-21 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். காலம் வாரம், செவ்வாய்.

ஞ. 246, 1. 2.

இயேசு உடனே அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள்; நான்தான், பயப்படாதேயுங்கள் என்றார். பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நீரேயானால் என்னைத் தண்ணீரின்மேல் உம்மண்டைக்கு வரச்சொல்லும் என்றான். அதற்கு அவர், வா என்றார். அப்பொழுது பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவண்டைக்கு வரத் தண்ணீரின்மேல் நடந்தான். ஆனால் உரத்த காற்றைக் கண்டு பயந்து, அமிழ்ந்துபோகையில், ஆண்டவரே! என்னை இரட்சியும், என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி, அவனைப் பிடித்துக்கொண்டு, அவனை நோக்கி: அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். மத். 14, 27-31.

இன்னொரு சமயம் சீஷர் கடலில் அலைகள் கொந்தளிப்பினால் சங்கடப்பட்டார்கள். அச்சமயத்தில் இயேசுநாதர் அவர்களோடு இருக்கவில்லை. ஆகிலும், அவர்கள் அவருடைய சகாயத்தின்மேல் வாஞ்சையாயிருந்ததால், அவர் அப்பொழுதே கிட்டச் சேர்ந்தார். அவர் கடலின்மேல் நடக்கும்போது சீஷர் அவரை ஒரு ஆவேசம் என்று நினைத்துப் பயந்தார்கள். திடன்கொள்ளுங்கள், பயப்படாதேயுங்கள் என்று கர்த்தர் சொன்னபோது பயம் எல்லாம் நீங்கிப் பேதுரு கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டுக் கொந்தளிக்கும் அலைகளின்மேல் நடந்து, அவரண்டை போகத் துணிந்தான். அவன் தன் கண்களை இயேசுவை விட்டுத் திருப்பிப் பயங்கரமான அபாயத்தைக் கண்டவுடனே, விசுவாசக் குறைவுபட்டுத் தண்ணீரில் அமிழ்ந்து கர்த்தரைக் கூப்பிட்டான். இவர் கையை நீட்டி, அவனைப் பத்திரமாய்ப் பிடித்துக்கொண்டு முன்போலவே அவன் அற்ப விசுவாசத்துக்காக அவனைக் கடிந்துகொண்டார்.

நாமும் ஒருக்கால் பெரிய ஆபத்தில் அகப்பட்டுத் துன்பம் என்ற அலைகள் நமதுமேல் புரண்டு நம்மை மூடிப்போடப் போகும்பொழுது கர்த்தர் தூரமாயிருக்கிறார் என்று நினைத்தோம். ஆகிலும் இதோ, அவர் சமீபத்திலிருந்தார். பிறகு அவரண்டை சேரத் துணிந்து மறுபடி நம்பிக்கையற்றுப்போய்த் துன்பத்தில் அமிழ்ந்து போனோம். நாம் நம்முடைய சீவிய காலத்தை எல்லாம் பார்த்தால் அதிலே தைரியமும் பயமும், துணிவும் சோர்வும், மாறி மாறி வருகிறது. அவர் எப்போதும் நம்மோடு இருக்கிறார் என்று நாம் உறுதியாய் நம்பினால் நாம் ஒருபோதும் துன்பத்துக்கும் பயப்படமாட்டோம். ஏனென்றால் நம்முடைய விசுவாசம் உலகத்தைச் ஜெயித்த ஜெயம்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! துக்கப்படுகிறவர்களின் ஆறுதலும் பெலவீனரின் பெலனுமானவரே, உபத்திரவத்தில் தவிக்கிற எல்லாருக்கும் செவிகொடுத்து அவர்களுடைய சத்தத்தைக் கேட்டு, அவர்களுக்கும்மது சகாயத்தை அருளிச்செய்து, அவர்கள் துன்பத்தை நீக்கி நித்திய சமாதானத்தைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

லூக். 7, 36-50. அல்லது எசேக். 38, 1-23. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். நாலாம் வாரம், புதன்.

பிரா. 246, 3. 4.

பராபரனே, என்னை இரட்சியும், ஏனெனில் தண்ணீர்கள் ஆத்தும மட்டும் வருகிறது. நிலையாத ஆழத்தின் உளையில் அமிழ்ந்தித் தண்ணீர்களின் பாதாளங்களுக்கு உள்ளானேன்; நீரோட்டங்கள் என் மேல் புரண்டுபோகிறது. சங். 69, 2. 3.

இந்தச் சங்கீதத்தில் சொல்லப்பட்ட அவஸ்தை உனக்குத் தெரியுமா? ஒரு மனுஷன் தண்ணீரில் விழுந்து நிலையாத ஆழத்தில் உளையிலும் சேற்றிலும் மெள்ள மெள்ள அமிழ்ந்து போகிறான். ஒரு கொடிதான வெள்ளம் அவனை கொண்டுபோகிறது. அவன் அவஸ்தை எவ்வளவென்று உனக்குத் தெரியுமா? ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் இப்பேர்ப்பட்ட அவஸ்தை வரக்கூடியது. சவுல் இராசாவால் துன்பப்படும்போது இந்தச் சங்கீதத்தைப் பாடின தாவீது இப்பேர்ப்பட்ட ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டான். அவன் உயிரோடிருக்குமட்டும் கா[illegible] சுகபத்திரமாயிருப்பேன் என்கிற நிச்சயம் அவனுக்கு இருந்ததில்லை. பிறரால் மாத்திரமல்ல, தன்னாலும் உண்டான துன்பங்களை அநுபவித்தான். தன் மகனாகிய அப்சலோமுக்குப் பயந்து ஓடிப்போக நேரிட்டது, அவன் சனத்தைக் கணக்கிட்டதினால் கொள்ளைநோய் அநேகரை வாரிக்கொண்டு போயிற்று. அவன் இப்படி அநுபவித்த பாடுகள் மேசியாவின் பாடுகளுக்கு ஓர் விதமுன்மாதிரி. ஆயினும் மேசியாவின் பாடு தாவீதின் உபத்திரவத்திலும் பெரியது. அவர் நம்முடைய பாவங்களின் நிமித்தம் கெத்சேமனே தோட்டத்தில் மரணத்தோடே போராடினார். அவர் நமக்காகப் பாடனுபவித்ததால் நம்முடைய பாடு இலேசாகிறது.

தேவன் ஒருவன் மீதிலும் அவன் சுமக்கக்கூடாத பாரத்தைச் சுமத்துகிறதில்லை. ஆகிலும் தண்ணீரில் அமிழ்கிறவனைப் போல் நாமும் அவஸ்தைப்படக்கூடிய சமயங்கள் உண்டு. அச்சமயங்களில் நமக்காகப் பாடுபட்டவரைக் கண்ணோக்கிப் பார்ப்

போமாக. அவர் ஒருவரே நமக்கு ஒத்தாசை புரியக்கூடியவர். நம்முடைய வருத்தங்கள் எவ்வளவு பெரிதாயிருந்தாலும் நமது பாடுகளின் பள்ளத்தாக்கு எவ்வளவு ஆழமாயிருந்தாலும் அவைகளிலிருந்து கர்த்தர் நம்மை இரட்சிப்பார். நமது துன்பம் இரட்சகரைப் பார்க்கிலும் பெரியதல்ல. துன்பம் எவ்வளவு பெரிதோ அவ்வளவுக்கு அதிகமாய்ப் பராபரன் தமது சகாயத்தையும் மகிமையையும் நம்மில் வெளிப்படுத்துவார். அவர் தம்முடையவர்களை அமிழவிட்டாலும் அவர்கள் முழுகிப்போக இடம் கொடுக்கமாட்டார். அவர் அவர்களை மரணத்துக்கு ஒப்புக் கொடுத்தாலும் மறுபடி அவர்களை அதிலிருந்து இரட்சிப்பார். புசலில் அகப்பட்ட சீஷரைப்போல நாம் அற்ப விசுவாசிகளாயிருப்பதால் நெருக்கப்படுகிற காலத்தில் மனங்கலங்கித் தப்ப வழியைக் காணோம். விசுவாசிகளுக்கு இப்பேர்ப்பட்ட அவநம்பிக்கை ஆகாதல்லவா.

ஜெபம். ஆண்டவரே! நாங்கள் மனம் சலித்துப்போகாதபடி எங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தும். நாங்கள் அநுபவிக்கவேண்டிய பாடுகளிலும் அவஸ்தைகளிலும் எங்கள் நம்பிக்கை கெட்டுப்போகாமல் நாங்கள் உம்மிடத்தில் சகாயத்தையும் இரட்சிப்பையும் தேட, எங்களுக்கு [illegible]ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

மத். 12, 1-13. அல்லது எசேக். 39, 1-29. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். நாலாம் வாரம், வியாழன்.

பிரா. 246, 5. 6.

பராபரன் நமக்கு அடைக்கலமும் பெலமும், நெருக்கங்களில் பரிபூரணமாய்க் கிடைக்கிற அநுகூலமுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் சமுத்திரங்களில் சாய்ந்தாலும், அலைகளின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அவைகள் பெருகுகிறதினால், பர்வதங்கள் அதிர்ந்தாலும், பயப்படோம். ஆறும் அதின் நீர்க்கால்களும் பராபரனுடைய பட்டணத்தையும் உன்னதமானவருடைய கூடாரங்களின் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும். பராபரன் அதின் நடுவில் இருக்கிறார். அது அசையாது. விடியற்காலம் வருகையில் பராபரன் அதுக்குச் சகாயம் பண்ணுவார். சங். 46, 2-6.

பழைய உடன்படிக்கையில் சொல்லப்பட்ட பராபரனுடைய பட்டணமாகிய எருசலேம் அல்லது சீயோன் பர்வதம் இயேசு கிறிஸ்துவின் சபைக்கு முன் அடையாளம். இந்தச் சபை அவரால் மீட்கப்பட்ட புது உடன்படிக்கையின் சபைதான். பழைய ஏற்பாட்டின் காலத்தில் சாதிகள் எழும்பி எருசலேமுக்கு

விரோதமாய் எப்படிப் போராடினார்களோ அப்படியே புதிய ஏற்பாட்டின் சபைக்கும் அநேகம் சத்துராதிகள் உண்டு. பரமண்டலத்தில் வாசமாயிருக்கிறவரோ சொல்லுகிறதென்ன, நரகத்தின் ஒலிமுகவாசல்கள் இந்தச் சபையை மேற்கொள்ள மாட்டாது என்கிறார். ஆகையால் முழு உலகமும் நமக்கு விரோதமாய் எழும்பி எதிர்த்தாலும் சபையைத் தாங்கும் தூண்கள் எல்லாம் விழுந்தாலும் நாம் பயப்படத் தேவையில்லை. தமது வசனத்தையும் ஞானதிரவியங்களையும் கொண்டு கர்த்தர் தாமே உலக முடிவுமட்டாகச் சகல நாட்களிலும் நம்மோடு இருக்கிறார்.

அவர் நம்மோடு இருப்பாரானால் அவருடைய சபையாகிய கப்பல் அமிழ்ந்துபோகக்கூடாது. அவர் தாமே சுக்கானைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறார். புசலும் கொந்தளிப்பும் சரியான காலத்தில் அமரவும் முழுவுலகமும் தமது சபையினாலே வெட்கம் அடையவும் செய்வார். கர்த்தர் தமது வசனத்தையும் ஞானதிரவியங்களையும் கொண்டு உன்னை விசுவாசத்தில் காப்பாற்றுவதற்கு நீ இடங்கொடுப்பாயானால், இந்தச் சபைக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் உனக்கும் பங்குண்டு. உன்னுடைய கப்பலும் நித்திய சமாதானத் துறைமுகத்துக்கு ஓடிப் பத்திரமாயிருக்கும். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கத்தை அடையார்கள். கர்த்தரைத் தன் தேவனாகக் கொண்டிருக்கிற சனம் பாக்கியமுள்ளது.

ஜெபம். எங்கள் பரமபிதாவே! தேவரீர், இன்றவரைக்கும் உமது பிள்ளைகளாகிய எங்களைக் காப்பாற்றி வருகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். சர்வ வல்லமையுள்ள பராபரனே, எங்களையும் உமது முழுத் திருச்சபையையும் சகல மோசங்களுக்கும் பிசாசின் வல்லமைக்கும் [illegible]கும் தற்காத்து இரட்சித்து, நித்திய பாக்கியத்தை எங்களுக்குத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

மத். 12, 24 - 50. அல்லது எசேக். 47, 1 - 23. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். நாலாம் வாரம், வெள்ளி.

பி. 249, 1 - 3.

உன்னதமானவரின் மறைவில் இருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் இராத்தங்குவான். கர்த்தரை என் அடைக்கலமும் என் கோட்டையும் நான் நம்பியிருக்கிற என் பராபரனும் என்கிறேன். ஏனெனில் அவர் உன்னைக் குருவி பிடிக்கிறவனுடைய கண்ணிக்கும் விக்கினமான பெருவாரிக் காய்ச்சலுக்கும் தப்புவிப்பார். தமது சிறகுகளாலே உன்னை மூடுவார், அவர் செட்டைகளின் கீழே இடங்கொண்டு தங்குவாய், அவருடைய உண்மை பரிசையும் கேடகமுமாம், சங். 91, 1 - 4.

பிராண மோசங்களால் சூழப்பட்ட ஆத்துமங்களுக்கு இவ்வாக்கியம் எத்தனை ஆறுதல்! கடைசித் துன்பமாகிய மரணத்துறுவாயில் உன்னதமானவருடைய மறைவில் பத்திரமாயிருப்பவன் பாக்கியவான். பாவம், பிசாசு, மரணம் என்பவைகளினால் உண்டாகும் போராட்டத்தில் இரட்சகருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலம் புகுந்திருப்பவனே பாக்கியவான். தேவன் நமது அடைக்கலமும் கோட்டையுமானவரானால் மரணமும் நம்மைப் பயமுறுத்த முடியாது. நாம் பிழைத்தால் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தால் கர்த்தருக்கென்று மரிக்கிறோம். ஆகையால் நாம் பிழைத்தாலும் மரித்தாலும் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.

நீ மரணத்துக்குத் தப்பியோடிப் போக விரும்புகிறாயா? அது உன்னால் முடியாது. நீ பாவத்தை விட்டு விலகி ஓடிப்போ, அப்போது மரணத்துக்குப் பயப்படத் தேவையில்லை. ஏனெனில் பாவம் மரணத்தின் கூர். கிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்குக் கிடைக்கும் பாவமன்னிப்பு அந்தக் கூரை உடைத்துவிட்டது. கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவன் சந்தோஷத்தோடு மரிக்கிறான். ஏனெனில் இங்கே அவனுடைய பயணம் முடிவு அடையும்போது, தான் எங்கே போகிறான் என்று அறிந்திருக்கிறான். அவன் மரணம் என்ற இருண்ட பள்ளத்தாக்கின் வழியாய்ப் போகும்போது கூட கிறிஸ்து அவனுக்கு ஒளியுள்ள விடிவெள்ளியைப்போல் பிரகாசிப்பார். இங்கே உன்னதமானவருடைய மறைவில் ஒதுக்கிடத்தைக் கண்டு பிடித்தவனெவனோ அவன் சர்வ வல்லவருடைய நிழலிலே சதாகாலமாய் வாசம்பண்ணுவான். இயேசுநாதர் இங்கே யாரைத் தமது சிறகுகளினாலே மூடினாரோ அவன் நித்தியமாயும் அவருடைய செட்டைகளின் கீழ்த் தங்குவான்.

ஜெபம். கர்த்தராகிய இயேசுவே! நீர் என் மறைவும் கேடகமுமானவர், உமது வார்த்தையின்மேல் நம்பிக்கையாயிருக்கிறேன். உலகத்தார் என்னைப் பரிகாசம் பண்ணினாலும் நான் உம்மை விடமாட்டேன். என்னைக் கெட்டியாய்ப் பிடித்திரும், சுவாமி, ஆமென்.

மத். 13, 1 - 23. அல்லது தானி. 7, 1 - 15 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். நாலாம் வாரம், சனி.

பி. 251, 1. 2.

ஒருவரை ஒருவர் சிநேகிக்கிற கடனேயல்லாமல் ஒருவனுக்கும் ஒன்றும் கடன்பட்டிராதேயுங்கள். ஏனெனில் மற்றவனைச் சிநேகிக்கிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினான். ரோம. 13, 8.

சிலுவை மரத்தில் தமது சரீரத்தை நமது பாவங்களுக்காகப் பலியிட்டவர் நமது பாவக்கடன் எல்லாவற்றையும் தீர்த்தபடியால் நாம் மீட்கப்பட்டுத் தேவனுடைய பிள்ளைகளாய்ப் பிதாவண்டை சேர நமக்கு வழியுண்டு. அவர் தீர்த்த கடனையன்றி வேறு ஒரு கடன் இன்னும் நமதுமேல் உண்டு. அது சிநேகக் கடனே. நான் உங்களைச் சிநேகித்ததுபோல் நீங்களும் ஒருவரை ஒருவர் சிநேகிக்கும்படி உங்களுக்குப் புதுக் கற்பனையைக் கொடுக்கிறேன் என்கிறார். கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் நாம் அவருடைய சிநேக ஐக்கியத்தில் சேர்க்கப்பட்டோம். நம்மை முந்திச் சிநேகித்தவரை நாம் திரும்பச் சிநேகிப்பதெப்படி? சகோதரரைச் சிநேகிப்பதினால் தான் அவரைச் சிநேகிக்கிறோம்.

சிநேகத்திற்கு ஒரு அதிசய இலட்சணமுண்டு. அதென்னவென்றால், நாம் எவ்வளவுக்கதிகமாகச் சிநேகிக்கிறோமோ, அவ்வளவுக்கு நமது சிநேகம் பெலத்திலும் உண்மையிலும் வளரும். அது வளர வளர நாம் பட்ட சிநேகக் கடன் இவ்வளவென்று அதிகமதிகமாய் உணர்ந்துகொள்வோம். அந்தக் கடனைத் தீர்க்க ஒருபோதும் முடியாது. நாம் தற்சிநேகத்தைப் பேர்த்து நம்மைப்போல் பிறத்தியானைச் சிநேகிக்க எவ்வளவுக்கதிகமாய்ப் பிரயாசைப்படுகிறோமோ அவ்வளவுக்கதிகமாய் நமது சிநேகக் கடன் நமக்குப் பெரிதாகும். அதைச் செலுத்தித் தீர்க்க முயல முயல அது எப்போதும் வளர்ந்துகொண்டே வரும். நாம் பிறத்தியாரிடத்தில் வேறே கடனை வாங்கவேண்டாம் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். என் பரமபிதா எனக்குக் கொடுத்தது போதும் என்று சொல்லுகிறவன் இலேசில் கடனை வாங்கமாட்டான். பிறத்தியானைச் சிநேகிக்கவேண்டுமென்கிற கடனோ எல்லார்மேலும் இருக்கிறது. நான் சிநேகித்தது போதும் என்று ஒருவனும் சொல்லக் கூடாது. பரமபிதா எப்படிச் சிநேகிப்பதை விட்டு ஓயாமலிருக்கிறாரோ அப்படி நாமும் ஓயாமல் சிநேகிப்பது நமது கடமை. இவ்விதமாகவே நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி நாளுக்கு நாள் தேவ சாயலுக்கு ஒப்பாக வேண்டியது.

ஜெயம், ஆ அழகே! என் மீட்புக்காக உதித்த தேவ மைந்தனே, என்ன உம்மை இத்தனை நாளாக அறிந்ததில்லை என்பதே - இப்போதென் ஆத்துமத்துக்கு நோவாயிருக்குது. நான் உம்மைத் தேட வாஞ்சையற்று, என் கேட்டோனைச் தெரிந்தேன் - நான் உம்மை விட்டுத் தூரப்பட்டுப் பிரபஞ்சத்தை நேசித்தேன் - இப்போ நானும்மைச் சேர்ந்தது, நீர் செய்த தயவு, சுவாமி, ஆமென்.

மத். 13, 24-43. அல்லது தானி. 7, 16-28 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஐந்தாம் வாரம், ஞாயிறு.

ஞ. 251, 3. 4.

வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக் காட்டினார். அதாவது வான இராச்சியம் தன் வயலில் நல்ல விதையை விதைக்கிற மனுஷனுக்கொப்பாயிருக்கிறது. மத். 13, 24-27.

மனித சாதி என்னும் நிலத்தில் கர்த்தர் நல்ல விதையை விதைக்கிறார். அவருடைய வசனம் என்ற விதை தெய்வீக பெலத்தையும் ஜீவனையும் இருதயத்துக்குள் உண்டாக்கி மனஸ்தாபம், விசுவாசம், சமாதானம் என்னும் கனிகளைக் கொடுக்கும். ஆகிலும் அவர் நல்ல விதையை விதைத்தபோதிலும் அவருடைய நிலம் களைகளால் நிறைந்து இருக்கிறது. அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டாலும் அவர்கள் இருதயம் ஆண்டவருக்குச் சொந்தமல்ல. அவர்கள் உலகத்தையும் அதன் இச்சையையும் சிநேகித்துப் பணம், கனம், மாமிச இச்சை என்பவைகளோடு ஒட்டிக்கொண்டு கிடக்கிறார்கள். குணப்படுதல் என்ற வாசல் அவர்களுக்கு அதிக நெருக்கம், பரிசுத்தமாகுதல் என்னும் பாதை அவர்களுக்கு அதிக இடுக்கம். சிலர் விசுவாசத்தைப் பற்றிப் பரிகாசம் செய்து மோட்சம், நரகம் இல்லை என்று சக்கந்தம் பண்ணுவார்கள். தங்கள் எசமானுடைய நிலத்தில் களைகள் ஓங்கி வளருவதை வேலைக்காரர் ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள்.

அவிசுவாசிகள், லோக சிந்தையுடையவர்கள், துன்மார்க்கர் ஆகிய இவர்கள் எங்கேயிருந்து உற்பத்தியாகிறார்கள்? கர்த்தர் இதற்கு என்ன பதில் சொல்லுகிறார்? அவருக்கு ஒரு சத்துரு உண்டு. அவன் தான் பிசாசு. பராபரனுடைய இராச்சியத்தை அழிக்கவேண்டுமென்கிற நாச ஆசை அவனுக்கு உண்டு. அவன் களை விதையைக் கை நிறைய அள்ளித் தெளிக்கிறான். அவன் குணம் யாருக்கும் தெரியாத திருட்டுக்குணம். தேவ நீதியைப் பற்றிய உணர்வையும் அவர் கிருபையைப் பற்றிய நம்பிக்கையையும் நமது இருதயத்திலிருந்து பேர்த்து, அவிசுவாசம் அவநம்பிக்கை முதலான பாவ தோஷங்களை நமது இருதயத்தில் திருட்டுத்தனமாக விதைக்கிறான். உன்னுடைய இருதயத்திலும் கூட அவன் தன் களை விதையை விதைப்பான். உன் இருதயத்தில் அதற்கு இடம் கொடாதே. உனக்குள் களை விதைக்கப்பட்டால் அதைத் திரும்பத் திரும்பப் பிடுங்கி வெளியே எறிந்துவிட்டு, ஜெபம் என்ற காவல்காரனை உன் இருதய வாசலுக்கு முன் நிறுத்தி வை. அப்போது உன் இருதயம் தேவாவியானவர் வாசம்பண்ணக் கூடிய இடம் ஆகும்.

ஜெபம். சுத்த இருதயத்தை எனக்குள் சிருஷ்டியும், பராபரனே! நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதிதாய் உண்டாக்கும். உம்முடைய முகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உம்முடைய பரிசுத்தாவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும், சுவாமி, ஆமேன்.

மத். 13, 54-58. அல்லது சங். 37. வாசிக்கவும்.

மகி. விள. பண். பி. ஐந்தாம் வாரம், திங்கள்.

கீ. 251, 5-7.

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள் பரிபூரணமாக எல்லா ஞானத்தோடும் வாசமாயிருந்து, நீங்கள் சங்கீதங்களாலும், கீர்த்தனங்களாலும், ஞானப்பாட்டுகளாலும் உங்களைப் போதித்து உங்களுக்குப் புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தருக்கு இனிதாய்ப் பாடுங்கள். கொலோ. 3, 16.

ஞாயிற்றுக் கிழமைதோறும் கிறிஸ்துவின் வசனம் தேவாலயங்களில் அறிவிக்கப்படுகிறது. கோயில் மணியின் தொனி வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது என்று நம்மை அழைக்கிறது. பீடத்தில் நாம் ஞான போசனத்தைப் பார்க்கிறோம். கர்த்தர் தமது வசனத்தைக் கொண்டு நமக்குக் கொடுக்கிற ஞானவரங்களினால் அவருடைய மகிமை வெளியாகிறது. இந்த வரங்களைப் பெற நாம் எல்லாரும் பிதாவின் வீட்டிற்கு ஓடிவர வேண்டும். வராதிருப்போமானால் வேத வசனத்திலும், தேவ சித்தத்திலும் பழகினவர்களாக முடியாது. அவருடைய வழிகளையும் அறிந்துகொள்ள மாட்டோம், கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக இருக்கமாட்டோம். கிறிஸ்தவ சிந்தையும் நம்மில் உண்டாகாது. சோதனை வருங்காலத்தில் நிலைநிற்க மாட்டோம். பாடுகள் நம்மைத் தாக்க வந்தால் ஆயுதமில்லாத போர் வீரனைப்போல் தத்தளிப்போம்.

ஆகையினால் அப்போஸ்தலன் தேவ வசனம் உங்களுக்குள் பரிபூரணமாய் வாசம்பண்ணக் கடவதென்று நமக்குப் புத்தி சொல்லுகிறான். அதிக அவசர முகாந்தரத்தினாலன்றி ஒருவனும் ஞாயிற்றுக் கிழமையில் தேவாராதனைக்கு வரத் தவறக் கூடாது. கோவில் ஆராதனையைப்போல் வீட்டிலும் அனுதினமும் ஒரு ஆராதனையை அல்லது ஒரு செபத்தை வைத்தால் நல்லது. நீ வீண்கதை பேசுவதினாலாவது கேட்பதினாலாவது உன் ஆத்துமத்துக்கு ஏதாகிலும் பெலன் அல்லது திருப்தி உண்

டாயிற்றோ? இல்லையே. சரீரத்துக்கு அன்றன்றுள்ள அப்பம் தேவையாயிருப்பதுபோல் ஆத்துமத்திற்குத் தேவ வசனமே தினமும் அவசியம். அதுதான் மெய்யான ஆகாரம். நீ தேவனுக்கு ஏற்றபடி நடக்க வேண்டுமானால் இந்த ஆகாரத்தினால் உன் ஆத்துமத்தைப் பெலப்படுத்திக்கொள்.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! நாங்கள் எந்நேரமும் உமது வசனமாகிய ஊற்றில் நித்திய ஜீவனை மொண்டுகொள்வதற்கு, உமது வேத புஸ்தகத்தைக் கையில் கொடுத்தீர். நாங்கள் உமது திருவசனத்தைச் சந்தோஷத்தோடு கேட்டுப் படித்து, அதினால் நித்திய ஜீவனை அடைய எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

யாத். 6, 1-29. அல்லது தானி. 9, 1-19 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஐந்தாம் வாரம், செவ்வாய்.

கீ. 290, 1. 2.

இயேசு அவளுக்குப் பிரத்தியுத்தரமாக: இந்தத் தண்ணீரில் குடிக்கிறவன் எவனும் திரும்பத் தாகமடைவான். ஆனால் எவனாகிலும் நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீரில் குடித்தால் அவன் என்றென்றைக்கும் தாகம் அடையான். நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள் நித்திய ஜீவனுக்கு ஊறுகிற தண்ணீர் ஊற்றாயிருக்கும் என்றார். இஸ்திரி ஆண்டவரே நான் தாகமடையாமலும் இங்கே மொள்ள வராமலுமிருப்பதற்கு அந்தத் தண்ணீரை எனக்குத் தாருமென்றாள். யோ. 4, 13-15.

யாக்கோபின் கிணற்றிலுள்ள தண்ணீர் இவ்வுலகத்தின் ஆஸ்தியையும் இன்பத்தையும் குறிக்கிறது. உலகத்தார் ஞானம் என்று சொல்லுகிற ஜலத்தை நீ எவ்வளவு மொண்டாலும் அது உன்னைத் திருப்தியாக்காது. ஏனெனில் தேவனைப் பற்றியும், அவருடைய இரட்சிப்பின் ஆலோசனையைப் பற்றியும், உலகத்தாருக்கு ஒன்றும் தெரியாது. உலகம் தன்னையன்றி வேறொன்றையும் நினைக்காது. மனுஷர் சிநேகம் என்று சொல்லுகிற ஜலத்தை நீ எவ்வளவு மொண்டு குடித்தாலும் உனக்குத் திரும்பத் தாகம் எடுக்கும். பணத்தையும், ஆஸ்தியையும், சந்தோஷத்தையும், இன்பத்தையும் அடைய நீ பிரயாசைப்பட்டாலும் உனக்கு உண்மையான சமாதானமும் திருப்தியும் வராது. இயேசு ஒருவரே உன் தாகத்தைத் தீர்ப்பவர். உன் உள்ளத்திலுள்ள கலக்கத்திற்கு உன் பாவமும் அதின் கனிகளும் காரணமாம். ஆத்

துமா கிருபையின்மேல் தாகமாயிருக்கிறது. அது இந்தக் கிருபைக்காகப் பெருமூச்சுவிடுகிறது. இந்தக் கிருபையைக் கொண்டுவருகிறவர் இயேசு ஒருவரே. ஏனெனில் அவர் அதை உயர் விலை கொடுத்துச் சம்பாதித்தார். அது இல்லையானால் நாம் கெட்டுப்போவோம் என்று அறிந்திருக்கிறோம்.

இந்தக் கிருபையினால் நாம் அளவற்ற ஆஸ்தியைப் பெறலாம். இவ்வுலகத்தின் மகிமை எல்லாம் மனஸ்தாபத்தோடு தம்மண்டை வருகிறவனுக்குக் கிறிஸ்து அருளும் கிருபையின் பிரகாசத்துக்கு முன் மங்கிப்போகவேண்டும். தேவ கிருபையைப் பெற்றவர்களுடைய களிப்பு அளவிறந்தது. பாவத்தின் வல்லமையும் பகட்டும் ஒழிந்துபோம். நாம் இம்மையிலும் மறுமையிலும் இயேசுவுக்குள் அடைக்கலம் அடைவோம். நமக்குத் திரும்பத் தாகம் எடுக்காது.

ஜெபம். கர்த்தராகிய இயேசுவே! உம்மிடத்தில் ஜீவ ஊற்று இருக்கிறது. உம்முடைய வெளிச்சத்தில் நாங்கள் வெளிச்சத்தைக் காணக்கிருபை செய்யும். நாங்கள் உலகத்தின் உப்புத் தண்ணீரைத் தேடாமல், மறுபடியும் தாகம் எடுக்காவண்ணம் உம்மண்டையோடி வந்து, நல்ல தண்ணீரை மொண்டு கொள்ளுவதற்கு எங்களுக்கு வழியைக் காண்பித்தருளும், சுவாமி, ஆமேன்.

மாற். 6, 30-56. அல்லது தானி. 9, 20-27. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஐந்தாம் வாரம், புதன்.

ஏ. 289, 1. 2.

இயேசு அவளுடனே சொன்னதாவது: ஸ்திரீயே, என்னை நம்பு. வேளை வரும், அப்போது இந்த மலையிலாகிலும் எருசலேமிலெங்கிலும் பிதாவைப் பணிந்துகொள்ளீர்கள். நீங்கள் அறியாததைப் பணிந்துகொள்ளுகிறீர்கள். நாங்கள் அறிந்திருக்கிறதைப் பணிந்துகொள்ளுகிறோம். ஏனெனில் இரட்சிப்பு யூதரிடத்திலிருந்து வருகிறது. ஆனால், உண்மையாய்ப் பணிகிறவர்கள் பிதாவை ஆவியிலும் உண்மையிலும் பணிந்துகொள்ளும் வேளை வரும். இப்போதும் வந்திருக்கிறது, ஏனெனில் அப்படியே தம்மைப் பணிந்துகொள்ளுகிறவர்களைப் பிதா தேடுகிறார். பராபரன் ஆவியாயிருக்கிறார், அவரைப் பணிந்துகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் பணிய வேண்டியதென்றார். யோ. 4, 21 - 24.

பராபரனை ஆராதிப்பதற்குத் தகுந்த இடம் எது? எருசலேமிலுள்ள தேவாலயமோ? சமாரியாவிலுள்ள கெரிசீம் மலையோ? என்பதைப் பற்றி யூதருக்கும் சமாரியருக்கும் வாக்குவாதமிருந்தது. இந்தத் தர்க்கத்தில் ஞாயம் யூதர் பக்கத்தில் தான்

இருந்தது. ஏனெனில் தேவாலயத்தைக் கட்டப் பராபரன் அவர்களுக்குத் தான் கட்டளை கொடுத்தார். அந்தத் தேவாலயத்தில் தமது நாமத்தைத் தங்கப் பண்ணுகிறதற்குக் கிருபையாய் ஏற்பாடு செய்திருந்தார். அங்கே செபத்தோடும் பலியோடும் யூதர் செய்யும் ஆராதனை அவருக்குப் பிரியம்.

ஆகிலும் இந்தத் தேவாராதனை எக்காலமும் இருக்கத்தக்க ஆராதனையல்ல. பழைய ஏற்பாட்டின் விசுவாசிகள் பராபரனைப் பிதாவாக அறிந்துகொள்ளவில்லை. கிறிஸ்து நமக்குப் பிதாவை வெளிப்படுத்தினார். பிதாவானவர் நம்மேல் அன்பு கூர்ந்து தமது ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்தில் அனுப்பி அவரை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததினால், கீழ்ப்படியாமையினால் கெட்டுப்போன நம்மை மறுபடியும் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். கிறிஸ்துவை நம்பியிருக்கிற இருதயமே பிதாவுக்கு ஏற்ற ஆலயம். இந்த ஆலயத்தில் மனஸ்தாபம், ஜெபம், புகழ்ச்சி, தோஸ்திரம் என்ற பலிகள் செலுத்தப்படும்.

உன் இருதயம் இப்பேர்ப்பட்ட தேவாலயமா? இயேசு கிறிஸ்துவை நம்பும் விசுவாசம் அதில் வாசம் பண்ணுகிறதா? அதிலே பிதாவோடு ஜெபத்தின் மூலமாய்ச் சம்பாஷணை நடக்கிறதா? பெற்றுக்கொண்ட கிருபைக்காகப் புகழ்ச்சியும் ஸ்தோத்திரமும் செலுத்தப்படுகிறதா? இன்னம் நம்மில் ஒட்டிக்கொண்டிருக்கிற பாவங்களுக்காகப் பெருமூச்சு விடுகிறதா? அப்படி இருந்தால் அது மெய்யான தெய்வாலயமாம்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பிதாவே! உம்முடைய ஆவிக்கு மறைவாக நான் எங்கே போவேன். உம்முடைய முகத்திற்கு மறைவாக எங்கே ஓடுவேன். நான் வானத்துக்கு ஏறினாலும் அங்கே தேவரீர் இருக்கிறீர். நான் பாதாளத்திலே படுக்கை போட்டாலும், இதோ, தேவரீர் இருக்கிறீர். நான் விடியற்காலத்தின் செட்டைகளை எடுத்துக் கடலின் ஏறு கடைசியிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உம்முடைய கை என்னை நடத்தி, உம்முடைய வலது கரம் என்னைப் பிடிக்கும், சுவாமி, ஆமேன்.

யோ. 6, 1-23. அல்லது தானி. 12, 1-13 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஐந்தாம் வாரம், வியாழன்.

ஏ. 289, 3. 4.

வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். வான இராச்சியம் புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு ஸ்திரீ எடுத்து மூன்று படி மாவில் அனைத்தும் உப்பிப்போகும் மட்டும் அடக்கி வைத்தாள் என்றார். மத். 13, 33.

இதற்கு முந்தின் சொல்லப்பட்ட கடுகு விதையினால் கிறிஸ்துவின் சபை எப்படிச் சிறிதாய்த் துவக்கி வரவரப் பெரிதாகிறது என்று காட்டப்பட்டது. புளித்தமாவின் உவமையிலோ கிறிஸ்து இயேசுவின் சுவிசேஷம் எப்படி எல்லாத்திலும் ஊடுருவிச் செல்லுகிறதென்பது விளக்கப்பட்டிருக்கிறது. பிசைந்த மா முழுவதும் புளித்த மாவின் தன்மையை அடையும். உன் இருதயத்தில் இடம் பெற்ற சுவிசேஷம் முழு மனிதனுக்குள்ளும் சென்று உன்னை இயேசுவின் சாயலுக்கு ஒப்பாகப் புதிதாக்கும். நாம் என்னென்ன வேலை செய்தாலும், இளைப்பாறினாலும், அழுதாலும், நகைத்தாலும், சாப்பிட்டாலும், படித்தாலும், எப்போதும் கிறிஸ்தவர்களாகக் கண்டுபிடிக்கப்படுவோம். ஒரு குடும்பத்தில் ஒருவன் பரிசுத்தம் ஆக்கும் சுவிசேஷத்தின் வல்லமையினால் நிரப்பப்பட்டால் அவன் குடும்பம் முழுவதும் பரிசுத்தமாகும். கிறிஸ்துவின் ஆவி அதிலே வாசம் பண்ணும். குடும்பம் மாத்திரம் அல்ல, ஊரும் நாடும் கிறிஸ்தவ சிநேகத்தின் ஆவியால் சாரம் ஏற்றப்படும்.

தற்காலத்தில் அநேகர் பேசிக்கொள்வது என்னவென்றால் தேசத்தை ஆளும் அதிகாரிகள் வேறு பிரமாணங்களையும் சட்டங்களையும் ஏற்படுத்தினால் எல்லாம் நன்றாகும் என்பதே. ஜனங்கள் தாமே நன்றாகவேண்டும் என்கிற எண்ணம் அவர்களுக்கு வரவில்லை. ஜனம் குணப்படாத பட்சத்தில் சிறந்த சட்டங்களினாலும் பிரயோசனம் இல்லை. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு நாம் இடங்கொடுத்தால் சீக்கிரம் சீர் அடையலாம். தேசம் சீர் அடைய வேண்டுமானால் நீயே முதலில் சீர் அடை. விசுவாசத்தினால் கிறிஸ்துவில் ஒட்டிக்கொண்டிருக்கிற ஒவ்வொருத்தனும் தன்னைச் சுற்றிலும் உள்ளவர்களுக்குப் புளித்த மாவாயிருக்கிறான். தேவ பக்தி உள்ள நடக்கையினால் ஒருவனுக்கும் தெரியாவண்ணம் அவன் மற்றவர்களைக் கிறிஸ்துவினிடமாய் இழுக்கிறான்.

செபம். எங்கள் பரம பிதாவே! லோகம் கெட்டுப்போகாமல் சீர் அடைவதற்கு உமது இராச்சியத்தை அதிலே ஏற்படுத்தி எங்களையும் அதிலே சேர்த்துக்கொண்டீர். ஆ, கர்த்தாவே! எங்கள் தேசத்தார் எல்லாரும் உமது பிரமாணத்தை அநுசரித்துச் செம்மையான வழியிலே நடக்க நாங்களும் உதவியாயிருப்பதற்கு எங்களுக்கு உமது பரிசுத்த ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 6, 24-51. அல்லது ஒசே. 2, 18-23 வாசிக்கவும்.

மகி. விள. பண். பி. ஐந்தாம் வாரம், வெள்ளி.

ஞா. 104, 1. 2.

பின்னும் வானராச்சியம் வயலில் ஒளிக்கப்பட்ட பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு அடக்கி அதற்காக அடைந்த சந்தோஷத்தினிமித்தம் போய்த் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அந்த வயலைக் கொள்ளுகிறான். பின்னும் வானராச்சியம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையேறப் பெற்ற ஒரு முத்தைக் கண்டு போய்த் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொண்டான். மத். 13, 44-46.

இயேசுநாதர் தமது ஆளுகையோடும் சமாதானத்தோடும் எங்கேயிருக்கிறாரோ அங்கே வானராச்சியம் இருக்கிறது. வயலில் ஒளிக்கப்பட்ட பொக்கிஷம், விலையேறப்பெற்ற முத்து என்பவைகளைப் பற்றிய உவமையில் வானராச்சியத்தைப் பார்க்க இவ்வுலகத்தில் உயர்ந்ததும் மேலானதும் ஒன்றுமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பணம், ஆஸ்தி, தாய் தகப்பன், பெண்ஜாதி, பிள்ளை, இவர்களை நீ மேலான பொக்கிஷமாய் எண்ணினால் வானராச்சியத்தைச் சம்பாதிக்க முடியாது. கிறிஸ்து ஒருவரையே அடையும்படியாய்ப் பவுல் அப்போஸ்தலன் மற்றெல்லாவற்றையும் குப்பையும் நஷ்டமுமாக எண்ணினான்.

இவ்வுலகத்திலுள்ள ஆஸ்தியையும் சுகத்தையும் நம்முடையதென்று சொல்லுவோம். நாம் அதன்மேல் சந்தோஷப்பட்டு அதற்காகத் தேவனைத் தோத்திரிக்க வேண்டியதல்லாமல் நம்முடைய இருதயம் அதன்மேல் சார்ந்து கிடக்கக் கூடாது. முக்கியமானதென்னவென்றால் நல்ல முத்துக்களும் மங்கிப்போய் விலையேறப்பெற்ற முத்து ஒன்றே நம்முடைய மனதைக் கவர்ந்துகொள்ளவேண்டும். அதைச் சம்பாதிப்பதற்கு எல்லாவற்றையும் விட்டுவிட, நீ தயாராயிருக்கிறாயா? தங்களை வெறுத்துக் கிறிஸ்துவின் நிமித்தம் ஆஸ்தியையோ குடும்பத்தையோ விட்டுவிடவேண்டிய காலத்தில் அநேகர் கிறிஸ்துவை மறுதலித்துத் தங்கள் உள்ளான சிந்தைகளை வெளிப்படுத்துவார்கள்.

கடைசி நாளிலோ எல்லாம் வெளியாகும். உண்மையான சீஷர் அல்லாத அநேகர் தங்களைச் சீஷர் என்கிறார்கள். உலக முடிவிலே, ஆண்டவர் மெய்க் கிறிஸ்தவர்களையும் பொய்க் கிறிஸ்தவர்களையும் நித்தியமாகப் பிரித்து வைப்பார். அப்போது இயேசுவானவர் நமக்கு ஒன்றான பொருளும் சகலமுமானவரோ, இல்லையோ என்று வெளியாகும். நீயோ அதை இப்பொழுதே அறிந்துகொள்ளலாம். எப்படி என்றால், குமாரனை விசு

வாசியாதவன் நித்திய சீவனைக் காண்பதில்லை என்று சொன்னபடி, நீ உன் இருதயத்தைச் சோதித்துப் பார்த்தால் உன்னைப் பற்றிச் சொல்லப்படும் தீர்ப்பு இப்பொழுதே தெரிய வரும்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது கிருபையினால் இந்த உலகத்தில் ஒரு சபையைத் தெரிந்துகொண்டு அதை அளவிறந்த இரக்கத்தோடு ஆண்டு நடத்தி வருகிறீர். இந்தச் சபையில் சேர்ந்த நாங்களும் உம்மையன்றி வேறொன்றையும் தேடாமல் நித்திய கோபாக்கினைக்குத் தப்பிக் கடைசி நாளில் நீதிமான்கள் நிற்குமிடத்தில் நிற்கும்படியாய் எங்களுக்குத் துணை செய்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 6, 52-71. அல்லது ஒசே. 5, 14-6, 6. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஐந்தாம் வாரம், சனி.

பி. 104, 3. 4.

மனுஷனுடைய குமாரன் தம்முடைய தூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய இராச்சியத்திலிருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையில் போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்போது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவான். மத். 13, 41-43.

இந்த உலகத்துக்கு ஒரு முடிவு உண்டாகும். கர்த்தர் தமது தூதர்கள் புடை சூழத் தமது மகிமையிலே வரப்போகிற நாள் உதயமாகும். அப்போது உலகம் அறுப்புக்கு முற்றியிருக்கும். தேவன் தமது இராச்சியத்தை யேற்படுத்தின இடமும் இந்த உலகந்தான். கடைசி நாளில் தேவதூதர் இந்த இராச்சியத்தைச் சுத்திகரிப்பார்கள். அவிசுவாசத்திலே நிலைத்திருந்தவர்களும், கர்த்தருடைய வசனத்தை வெளியரங்கமாய் அசட்டைபண்ணின அகந்தைக்காரரும், தங்கள் மாய்மாலத்தினாலும் அவபக்தியினாலும் இடறல் உண்டுபண்ணினவர்கள் எல்லாரும் தேவதூதரால் கூட்டப்படுவார்கள். அப்போது அநீதியரும், இச்சையடக்காதவர்களும், பொருளாசைக்காரரும், பாவத்துக்கு ஊழியம் செய்த சகலரும் ஒரு கூட்டமாய் நிற்பார்கள். [illegible]தருடைய கூர்மையான கண்ணுக்கு ஒருவனும் தப்ப முடியா[illegible]ஸ்துவின் பகைஞர் எல்லார் மேலும் பெரிய பயங்கரம் [illegible]ம். அவர்கள் கிறிஸ்துவின் வேண்டுதலையும், புத்திமதியை[illegible]த்தத்தையும் கவனிக்காமல் அவருடைய கிருபையைத் தள்ளிப்போட்ட அருகின

தில்லை. இப்போதோ அவர்கள் பயத்தோடும் நடுக்கத்தோடும், தங்களைக் கூட்டிச் சேர்க்கிற தூதரின் சத்தத்தைக் கேட்கவேண்டும். வம்பு பேசின வாய் மௌனம் அடையும். நகைப்பு அரிதாகும். சுகபத்திரமாய்த் தூங்குகிறவர்கள் திடுக்கிட்டு எழுந்திருப்பார்கள். குணப்பட்டுத் தேவ கோபத்துக்குத் தப்பிக்கொள்ள எவ்வளவு ஆவலாய் அவர்களிருந்தும் பிரயோசனமில்லை. இரு[illegible]யின் காலம் ப[illegible]துவிட்டது. நியாயத்தீர்ப்புத் துவக்கி நித்தி[illegible] அழிவோடு முடியும். அவர்கள் பயங்கரத்துக்கும் புலம்பலுக்கும் முடிவு இல்லை. கர்த்தர் தமது மகிமையை எல்லாரிடத்திலும் வெளிப்படுத்துவார். அவருக்குக் கீழ்ப்படிந்தவர்களும் கீழ்ப்படியாதவர்களும் அதை ஒப்புக்கொள்வார்கள்.

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து வெளுத்துக் கர்த்தரையும் அவருடைய வசனத்தையும் சிநேகித்தவர்கள் எல்லாரும் சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள். நித்திய மகிமையே அவர்கள் பங்காகும். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவான். கேட்கிறதற்கு உனக்கும் கர்த்தர் காது கொடுத்தார் அல்லவா? இந்த வார்த்தைகளைக் கேட்டு நீ குணப்படு. கடைசி நாளில் சாக்குச் சொல்ல இடமிராது.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! தேவரீர் உமது சகல தூதரோடும் இவ்வுலகத்தை நியாயந் தீர்க்க வரும்போது நாங்கள் நித்திய கோபாக்கினைக்குட்படாமல், நீதிமான்களோடு சேர்க்கப்பட்டு, உம்மை எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பதற்கு எங்கள் நிர்விசாரத்தை நீக்கி எங்களைச் சீக்கிரம் குணப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

மாற். 7, 1-23. அல்லது ஒசே. 13, 9-14. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஆறும் வாரம், ஞாயிறு.

பி. 104, 5. 6.

ஆறு நாளைக்குப் பிற்பாடு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவன் சகோதரன் யோவானையும் கூட்டிக்கொண்டு, தனிப்புற உயர்ந்த பர்வதத்தின்மேல் அழைத்துப் போய் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப்போலே பிரகாசித்தது. அவர் வஸ்திரங்கள் வெளிச்சத்தைப்போல வெண்மையாயின. இதோ, மோசேயும் எலியாவும் அவர்களுக்குத் தரிசனையாகி, அவரோடே பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது பேதுரு பிரத்தியுத்தாரமாக: இயேசுவுடனே ஆண்டவரே, நாம் இங்கேயிருக்கிறது நல்லது, உமக்குச் சித்தமானால் இங்கே மூன்று கூடாரங்களைப் போடுவோம் உமக்கொன்றும், மோசேக்கொன்றும், எலியாவுக்கொன்றும் என்றான். மத். 17, 1-4.

சீஷர் இயேசுவைச் சீவனுள்ள பராபரனுடைய குமாரனென்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவென்றும் அறிந்த பிறகு, கர்த்தர், தாம் பாடுபட்டு மரித்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்கவேண்டுமென்று அவர்களுக்கு அறிவித்தார். இப்படிப்பட்ட செய்தியைக் கேட்ட சீஷர் அதிக திகில் அடைந்தார்கள். இந்தச் செய்தியைக் கேட்க அவர்களுக்கு மனமே இல்லை. கர்த்தர் அவர்கள் இருதயத்தில் பெரும்பாரத்தைத் தாக்கி வைத்தார். பெலவீனப்பட்ட இருதயங்கள் மறுபடியும் திடன்கொள்ளுவதற்குப் பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் கூட்டிக்கொண்டு பிதாவோடு தனியிடத்தில் பேச ஒரு உயர்ந்த பருவதத்தில் ஏறினார். அங்கே சீஷர் ஓர் அதிசயத்தைக் கண்டார்கள். இராவிருட்டிலே சூரியன் பிரகாசித்ததுபோல திடீரென்று இயேசுவின் முகம் பிரகாசிக்கத் தொடங்கிற்று. உலகத்தில் காணப்படாத ஒரு மேலான ஜோதி இயேசுவின் சரீரத்திலிருந்து புறப்பட்டு அவருடைய வஸ்திரத்தையும் பிரகாசிக்கச் செய்தது. அவரண்டை மோசேயும் எலியாவும் வந்து, அவருடைய பாடு மரணத்தையும், அதினால் உண்டாகும் பலனாகிய நமது மீட்பையும் குறித்துப் பேசிக்கொண்டார்கள். மோட்சமே பூமியில் இறங்கி வந்துவிட்டதாகப் பேதுரு நினைத்து இங்கே இருக்கிறது நல்லதென்று மதிமயங்கிச் சொன்னான்.

இன்றைக்கும் கர்த்தர் தமது மகிமையை விசுவாசிகளாகிய நமக்கு வெளிப்படுத்துகிறார். அவருடைய ஐக்கியத்தில் இருந்துகொண்டு, இங்கே இருக்கிறது நல்லது என்று நாமும் சொல்லலாம். ஏனென்றால் நமது மீட்பைப் பற்றிய நிச்சயம் நமக்குண்டு. அவருடைய அன்பில் இளைப்பாறுவதே நல்லது. நாம் சாகுமட்டும் நமக்குப் பயமும் கலக்கமும் வந்தாலும் கர்த்தர் நம்மோடிருப்பார். அதன்றி நாமும் மறுரூபமாகிப் பாக்கியத்தை அடையப் போகிறோம். கிறிஸ்து, நமது தாழ்மையான சரீரத்தைத், தமது மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், மரணத்துக்குள்ளாகிய இது, மரியாமையையும் தரித்துக்கொள்ளும்போது மரணம் ஜெயமாய் விழுங்கப்பட்டதென்றும், மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே? என்றும் எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.

ஜெபம். பரமபிதாவே! உமது அளவிறந்த கிருபையின்படி உமது குமாரனை எங்களண்டை அனுப்பி அவருடைய மகிமையை எங்களுக்கு வெளிப்படுத்தினீர். நாங்கள் அந்த மகிமையில் பங்கடைவதற்கு எங்கள் மனதைப் பிரகாசிப்பித்தருளும், சுவாமி, ஆமேன்.

மாற். 7, 24-37. அல்லது சங். 45 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஆறும் வாரம், திங்கள்.

பி. 104, 7. 8.

அதிக திடமான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டே; பொழுது விடிந்து உங்கள் இருதயங்களில் வெள்ளி உதிக்குமட்டும் நீங்கள் இருளான ஸ்தலத்தில் பிரகாசிக்கிற வெளிச்சமாகிய அதைக் கவனித்திருக்கிறது நற்செய்கையாயிருக்கிறது. வேத எழுத்திலுள்ள ஒரு தீர்க்கதரிசனமும் சுய தோற்றலான வியார்த்திக்கானதல்லவென்கிறதை முதல் முதல் அறியுங்கள். ஏனெனில் தீர்க்கதரிசனம் பூர்வத்தில் மனுஷனுடைய சித்தத்தினால் வராமல், பராபரனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்தாவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள். 2 பேதுரு 1. 19-21.

வேத புஸ்தகத்திலே மகா திடமான தீர்க்கதரிசன வசனத்தை நமக்கு அருளின பராபரனுக்கு ஸ்தோத்திரம். இந்த வசனத்தினால் அவர் நமது மந்த புத்தியைப் பிரகாசிப்பித்து, இரட்சிப்பின் வழியைக் காண்பிக்கிறார். வேத புஸ்தகம் மனிதரால் எழுதப்பட்டதென்பது மெய்தான். ஆகிலும் தீர்க்கதரிசிகளும் சுவிசேஷகரும் அப்போஸ்தலரும் தங்கள் சுய யோசனையையும் தீர்க்கதரிசனங்களையும் வியார்த்தியையும் எழுதாமல், பரிசுத்தாவியானவர் எதை எழுத அவர்களை ஏவினாரோ, அதையே எழுதிவைத்தார்கள். அவர்கள் பராபரனுடைய உள்ளத்தைக் கண்ணுற்றுப் பார்த்து, இரட்சிக்கும் சத்தியத்தை யறிந்து அறிவிக்கத் தேவாவியானவர் அவர்களுடைய மனக் கண்ணைப் பார்வையடையச் செய்தார். ஆகையால் வேத வசனம், மெய்யாகவே தேவ வசனம். அது மனித வார்த்தையைப்போல் தவறிப் போகாது. அது மோசம் பண்ணாது. அது தெய்வீக போதகத்துக்குரிய கரிசனத்தோடும் ஞானத்தோடும், நம்மைப் போதித்து நாம் பாக்கியம் அடைவதற்கு நம்மைக் கண்டித்து ஆற்றித்தேற்றுகிற தீர்க்கதரிசன வசனந்தான்.

நீ இந்த வசனத்தை இருதயத்தில் ஏற்றுக்கொண்டால், நீ உன்னைக் கெடுக்கும் பாவ சித்தத்தையும், உன்னை இரட்சிக்கும் தேவ சித்தத்தையுமறிந்துகொள்வாய். ஆனபடியால் உன் வேத புஸ்தகத்தைச் சுறுசுறுப்பாய் வாசித்து மோட்ச வழியைக் கண்டு பிடித்துக்கொள். அந்த வேத புஸ்தகத்தினால் விசுவாசம் என்ற விடிவெள்ளி உன் இருதயத்தில் எழும்பி இரட்சிப்பின் நாள் உனக்கு உதயமாகும். கர்த்தர் தாமே உன்னோடு பேசி உனக்கு இரட்சிப்பின் வழியைக் காட்டுவது எவ்வளவு ஆறுதல். நீ தேவ வசனம் என்ற மெய்யான வெளிச்சத்திற்கு உன் இருதயத்தை அடைத்து நித்திய சத்தியத்தைப் பெருமையினாலும் நிர்விசாரத்தினாலும் அசட்டை பண்ணுவாயானால் நீ வழி தப்பி இலக்குக்கு வரமாட்டாய்.

ஜெபம். எங்கள் பரமபிதாவே! நாங்கள் செம்மையான வழியில் நடந்து மோட்சத்தையடைய உமது திருவசனத்தை எங்களுக்கு அருளிச்செய்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் இந்த வசனத்தின் வெளிச்சத்தைப் பின்தொடர்ந்து உம்மண்டை சேர உப[illegible]வியைக் கொண்டு எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

மாற். 8, 1-26 அல்லது யோவேல் 1, 1-20 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந்தின ஆறாம் வாரம், செவ்வாய்.

பி. 104, 9. 10.

சமாரியர் அவரண்டைக்கு வந்தபோது அவரைத் தங்களிடத்தில் இருக்க வேண்டிக்கொண்டார்கள். அவர் இரண்டு நாள் அங்கேயிருந்தார். அப்பொழுது அவருடைய வசனத்தினால் இன்னும் வெகு அதிகமான பேர்கள் விசுவாசித்து, ஸ்திரியுடனே: இனி உன் சொல்லுக்காக விசுவாசியோம், இவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய லோக இரட்சகர் என்கிறதை நாங்களே கேட்டு அறிந்திருக்கிறோம் என்றார்கள். யோ. 4, 40-42.

சமாரியர் யாக்கோபின் கிணற்றண்டை இயேசுவைத் தேடி வந்தார்கள். அந்த ஸ்திரி கர்த்தரோடு பேசின பின் பட்டணத்துக்கோடி, வந்து பாருங்கள், நான் செய்ததெல்லாவற்றையும் எனக்குச் சொன்ன ஒரு மனுஷனைப் பாருங்கள். அவர் கிறிஸ்துவோ, அல்லவோ என்று சொல்லுங்கள் என்று சனங்களுக்கு அறிவித்திருந்தாள். தம்மண்டை வருகிற அந்தச் சனங்களைப் பற்றி இயேசுநாதர் வயல் வெளிகள் அறுப்புக்கு வெண்மையாயிருக்கிறது என்றார். அந்த ஸ்திரி இயேசுவின் ஞானத்தையும் சர்வ அறிவையும் பட்சத்தையும் ஆவியிலும், உண்மையிலும் பிதாவைப் பணிந்துகொள்வதைப் பற்றி அவர் சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்குத் தெரிவித்தவுடனே அவரைப் பார்க்க ஓடிவந்தார்கள். இதனால் நாம் உணர்ந்தறிய வேண்டியதென்ன? பிறரால் இரட்சகரைப் பற்றிக் கேள்விப்படுகிறது போதாது, கர்த்தர் நமக்குத் தெரிவித்ததைப் போய்க் கண்ணாரப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, இயேசுவைப் பார்க்கப் போனால் தான் அவர் நம்மை இரட்சிப்பார். பெற்றோர்களுடைய விசுவாசம் பிள்ளைகளை இரட்சிக்காது. அவர்களே விசுவாசிக்கவேண்டும். ஒரு குரு தன் விசுவாசத்தினால் சபையாரை இரட்சிக்க முடியாது. சபையாரே விசுவாசிக்கவேண்டும். நீ பிறருடைய விசுவாசத்தை நம்பாதே. உன்னை உன் விசுவாசம் மாத்திரம் இரட்சிக்கும். நீ இயேசுநாதருடைய கிருபையைப் பற்றிக்

கேள்விப்பட்டவுடனே அது உனக்கும் கிடைக்கும்படியாய்ப் பிரயாசைப்படு. பவுல் அப்போஸ்தலன் பெரேயா ஊரிலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்து முடித்த பின், ஊரார் அவனை உடனே நம்பாமல் அவன் சொன்னது உண்மையோ பொய்யோ என்று அறிவதற்கு வேத புஸ்தகத்தை எடுத்து அதை ஆராய்ந்து பார்த்தார்கள். அவ்வாறே லூத்தர் ரோமாபுரிப் பாப்பு ஏற்படுத்தின போதகங்களை நம்பாமல் வேத புஸ்தகத்தை வாசித்துப் பார்த்தார். அப்போது பாப்புச் செய்த மோசமெல்லாம் வெளிக்கு வந்தது. ஆகலால் நீயும் நேரே போய்ப் பார். நீயே வேத புஸ்தகத்தைக் கையில் எடுத்து உனக்காக வந்த இரட்சகரை அறிவோடே தேடிப் பிடி.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! எத்தனையோ தரம் நாங்கள் உம்மைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். எத்தனையோ முறை உமது சுவிசேஷத்தைக் கேட்டு உமது அதிசயமான ஞானத்தை அறிந்திருக்கிறோம். ஆ, கர்த்தாவே, நாங்கள் சீக்கிரம் உம்மண்டை வந்து உம்மை நேரே கண்டு உம்மிடத்தில் தரித்திருக்க எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 7, 1-24 அல்லது யோவேல் 2, 1-17 வாசிக்கவும்.

மகி. விள. பண். பி. ஆறாம் வாரம், புதன்.

பி. 104, 11. 12.

கர்த்தர் ஆவியாயிருக்கிறார்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் உண்டு. நாமோ எல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோல் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையாய் மறுரூபப்படுகிறோம். 2 கொரி. 3, 17. 18.

கர்த்தராகிய இயேசுவும் பரிசுத்தாவியானவரும் அதேவிதமாக ஏழைப் பாவிகளை இரட்சிக்கப் பிரயாசைப்படுகிறார்கள். ஆகையால் பரிசுத்தாவியானவர் கர்த்தருடைய ஆவி என்னப்படுகிறார். இயேசுநாதர் நமக்குச் சம்பாதித்ததைப் பரிசுத்தாவியானவர் நமக்குச் சொந்தமாக்குவார். எல்லாப் பாவங்களுமற நம்மைச் சுத்திகரிக்கக் கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தினார். பரிசுத்தாவியானவரோ வசனத்தையும் ஞான திரவியங்களையும் கொண்டு இயேசுவைப் பற்றும் விசுவாசத்தை உண்டுபண்ணி நமக்குப் பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்று உணர்த்துகிறார். மனுஷனுடைய ஆத்துமா அழுக்குக் கண்ணாடியைப்போலிருக்கி

றது. ஆத்துமத்தின் ஒளி மங்கிப்போகும்படி பாவம் அதைக் கறைப்படுத்திற்று. ஆவியானவர் உன்னை இயேசுவண்டை கூட்டிக்கொண்டு போவதற்கு அவருக்கு இடம் கொடு. அப்போது உன் ஆத்துமம் சுத்தமாகும். தேவசாயலின் பிரகாசம் உன்னில் பட்டு நீ தேவனுடைய பிள்ளையாவாய்.

பரிசுத்தாவியானவர் உன்னைத் தேவனுடைய பிள்ளையாக ஆண்டுநடத்துவார். கர்த்தருடைய ஆவி எங்கே இருக்கிறதோ அங்கே பாவத்திற்கும் அநியாயத்திற்கும் நீங்கலாகும் விடுதலையுண்டு. அவருடைய ஆளுகைக்கு இடம் கொடுக்கிறவனெல்லாம் இனிமேல் பாவத்திற்கு ஊழியம் செய்யமாட்டான். பாவம் வாசலுக்கு முன் தங்கி, உள்ளே வரவும் நம்மை ஆளவு மாட்டாது. நாம் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவோம். நாம் அடிமையைப்போல் பெருமூச்சோடு அல்ல, நன்றியறிந்த அன்பினால் ஏவப்பட்டு, உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடும் அவருக்கு ஊழியம் செய்வோம். தேவ குமாரன் யாரை விடுதலையாக்கினாரோ அவர்கள் மெய்யாய் விடுதலையானவர்கள். அவர்கள் மென்மேலும் இயேசுவுக்கு ஒப்பாகி அவருடைய சாயலை அடைவார்கள். அவர்கள் இருதயத்தின் ஆழத்திலே இருக்கிற இயேசுவின் சாயல் அவர்கள் முகத்திலும் வார்த்தைகளிலும் நடக்கையிலும் பிரதி பிம்பிக்கும்.

ஜெபம். பரம பிதாவே! உமது ஆவியினால் பூமியெங்கும் ஒரு சபையைக் கூட்டிச் சேர்த்து அதில் உமது திருவசனத்தைப் பிரசங்கிக்கச் செய்கிறீர். நாங்கள் அந்த வசனத்தினாலே மென்மேலும் உமது சாயலுக்கு ஒப்பாகிப் பரிசுத்தத்தோடே நடந்துகொள்ள எங்களைப் போதிவித்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 7, 25-53 அல்லது யோவேல் 3, 1-26 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஆறாம் வாரம், வியாழன்.

ஏ. 104, 13-15.

ஏனென்றால் அதி சீக்கிரமாய் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மேன்மைக்கு மேன்மையாயிருக்கும் நித்தியமான கனமகிமையை நமக்கு உண்டாக்குகிறது. காணப்படுகிறவைகளை அல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்குத் தானே. ஏனென்றால், காணப்படுகிறவைகள் அநித்தியம், காணப்படாதவைகளோ நித்தியமாயிருக்கிறது. 2 கொரி. 4, 17. 18.

விசுவாசிகளின் உபத்திரவம் சீக்கிரத்தில் நீங்கிப்போகிறதினால் கிறிஸ்து மார்க்கத்தின் அருமை வெளியாகிறது. துன்பம் இவ்வுலகத்தில் மாத்திரம் வாசம்பண்ண அதிகாரம் பெற்றது. சரீரமாகிய கூடாரம் அழிந்துபோகும்போது உபத்திரவமும் முடிந்துபோம். எப்படிப் பாவம் மறு உலகத்திற்குள் நுழைய முடியாதோ அப்படியே பாவத்தினால் உண்டான உபத்திரவமும் அங்கே வரக்கூடாது. நம்முடைய உபத்திரவம் சீக்கிரம் ஒழிந்து போகிறதென்பது நமக்குப் பெரிய ஆறுதல்.

இன்னும் அப்போஸ்தலன் உபத்திரவத்தை இலேசானது என்று சொல்லுகிறதெப்படி? மரணம் நமக்கு அருமையானவர்களை நம்மைவிட்டு வாரிக்கொண்டு போகும்போது நமக்கு எவ்வளவு வேதனை! தரித்திரத்தினால் உண்டாகும் வியாகுலம் எவ்வளவு? நெடுநாள் வியாதிப்பட்டுத் தேகம் மெலிந்துபோய் வீட்டிலேயே அடைபட்டிருப்பது யாருக்கு இலேசு? பாடுகளால் எவ்வளவு பெருமூச்சு, அங்கலாய்ப்பு, கண்ணீர் உண்டாகும். இதெல்லாம் அப்போஸ்தலனுக்குத் தெரியும். அவனுக்கு உபத்திரவம் அழுத்திக் குனுக்கிச் சரிந்து விழும் அளவாக அளக்கப்பட்டது. அவன் பாடுகளில் அநுபோகமடைந்தவனாய் இப்படிப் பேசுகிறான். தேவ கிருபையை அசட்டை பண்ணினவர்களை வாதிக்கப்போகிற சாகாத பூச்சியோடும் அவியாத அக்கினியோடும், நமது உபத்திரவத்தை ஒத்துப் பார்த்தால் நமது உபத்திரவம் இலேசுதான். பிதாவின் இராச்சியத்தில் நமக்குக் கிடைக்கும் மகிமையை இந்த உபத்திரவத்தோடே ஒத்துப் பார்த்தால் அது இலேசுதான். நமது சிலுவை நமக்குப் பாரமாய்த் தோன்றுங் காலத்தில், மகிமையின் கிரீடத்தைநோக்கிப் பார்க்கிறோம். பராபரன் தமது நித்திய இராச்சியத்திலே எல்லாக் கண்ணீரையும் நமது கண்களில் இருந்து துடைத்து நாம் இங்கே அநுபவித்த பாடுகளை நித்திய சந்தோஷமாக மாற்றிவிடுவார். எல்லா உணர்வுக்கும் மேலான மகிமையான பாக்கியத்தை நமக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். இந்த வாக்குத்தத்தத்தை நம்புவோருக்கு எல்லா உபத்திரவமும் இலேசாய்த் தோன்றும்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பிதாவே! உமது பிள்ளைகளாகிய எங்களை, இரக்கமாய்க் கண்ணோக்கிப் பார்த்து, எங்கள் பெருமூச்சையும் கண்ணீரையும் கவனிக்கிறீர். ஆ, கர்த்தாவே, நாங்கள் ஒருபோதும் நம்பிக்கையற்றுப் போகாமல் உமது பிள்ளைகளுக்கு ஏற்றபடி எல்லா இக்கட்டிலேயும் உம்மை நோக்கிக் கூப்பிட எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 8, 1-27 அல்லது ஆமோ. 1, 1-15 வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஆறாம் வாரம், வெள்ளி.

சங். 100, 1. 2.

நிலைநிற்கிற பட்டணம் நமக்கு இங்கேயில்லை, வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம். எபி. 13, 14.

நாம் வரப்போகிற மகிமைக்குக் காத்திருக்கிறோம். இங்கே நாம் அந்நியதேசிகளும் பரதேசிகளுமாய் அலைந்து, பல வித அநியாயத்தையும் தொந்தரவையும் சகிக்க வேண்டியது. இப்பூமி நமக்குச் சத்திரம். அதை விட்டுப் புறப்படவேண்டிய வேளை கிட்டிச் சேருகிறது. நாம் இதைக் கொஞ்சமாகிலும் கவனிக்காமல் போவது என்ன பரிதாபம்! நாம் சதாகாலமாய் இங்கே தங்கியிருப்போம் என்று நினைத்து, எப்போதும் இருக்கிறவர்களைப் போல் இருக்கிறோம். தாவீது இராசாவோ, தனக்கு ஒரு முடிவு உண்டாகும் என்றும், தன் சீவனுக்கு ஒரு இலக்கு இருக்கிறது, அது நிறைவேறினவுடன், தான் இவ்வுலகத்தை விட்டுப் புறப்பட வேண்டும் என்றும் அறிந்து ஜெபிக்கிறான். நம்முடைய முடிவை நாம் எப்போதும் நினைக்காதேபோனால் நம்முடைய நாட்களை வீணாய்க் கழிப்போம். நாம் அப்போஸ்தலனோடு பிரிந்துபோய்க் கிறிஸ்துவுடனே இருக்க எனக்கு ஆசை என்று சொல்வோமானால் நம்முடைய நாட்களை வீணாய்க் கழிக்கமாட்டோம்.

நிலைநிற்கிற பட்டணத்தைத் தேடுகிறோம். தானியேல் அந்நிய தேசத்திலிருக்கையில் அவன் வீட்டில் எருசலேமை நோக்கித் திறக்கப்பட்ட பலகணி இருந்தது. அங்கே அவன் அநுதினமும் தேவனை நோக்கிச் செபம் பண்ணுவான். நாமும் அப்படிப் பரம எருசலேமை நோக்கிக் கொண்டிருந்தால் நல்லது. பரம எருசலேம் நமக்குச் சொந்த ஊர். அதை வந்தடைந்தவர்கள் அதை மறுபடியும் விட்டுப் புறப்படப்போகிறதில்லை. பவுல் அப்போஸ்தலனைப்போல் நாம் பின்னானதை மறந்து முன்னானதை நாடித் தேடுவோமாக. மேலானதைத் தேடுங்கள் என்று சொல்லுகிறான். தேடுங்கள், அப்போது கண்டுபிடிப்பீர்கள் என்று கர்த்தர் கூறுகிறார். சொந்த வீட்டை நினைத்து வருந்துகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் வீட்டுக்குச் சேருவார்கள். அங்கே சேர்ந்தவுடனே, இரட்சகருடைய சாயலுக்கு ஒப்பாகிப் பேதுருவைப்போல், ஆண்டவரே, இங்கே இருக்கிறது நல்லது என்று சொல்வார்கள்.

ஜெபம். எங்கள் அன்புள்ள இரட்சகரே! எங்களுக்கு நித்திய மோட்சத்தைச் சம்பாதிக்க இவ்வுலகத்தில் பரதேசியானீர். நாங்கள் நிலை-

நிற்கிற பட்டணமாகிய பரம எருசலேமைச் சேர்ந்தடைந்து, உம்மோடு ஐக்கியப்பட எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி, ஆமேன்.

யோவா. 8, 28-59. அல்லது ஆமோஸ் 3, 1-15. வாசிக்கவும்.

மகி. விள. பண். பிந். ஆறாம் வாரம், சனி.

சங். 100, 3. 4.

எட்டாம் கற்பனையாவது. *பிறத்தியானுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.*

இதின் அர்த்தம் என்ன? நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு பிறத்தியானுக்குப் பொய் சொல்லாமலும் இரண்டகம் பண்ணாமலும் அவனுக்கு அபகீர்த்தி வரப்பண்ணாமலும் அவனுக்காகப் பரிந்துபேசி நல்லவைகளைச் சொல்லி எல்லாவற்றையும் நன்மையாக்க வேண்டும்.

பராபரன் எட்டாம் கற்பனையினால் நம்முடைய நற்கீர்த்தியைச் சுற்றிலும் ஒரு காவலை ஏற்படுத்தி இருக்கிறார். நல்ல பேரால் மதிப்பும், சிநேகமும், உத்தியோகமும், வேலையும் இலேசாய்க் கிடைக்கும். ஆதலால் அதைக் கெடுக்கிற எல்லாரையும் தேவன் தண்டிப்பார். உண்மையல்லாத யாதொன்றையும் உனக்குக் கெடுத்தவனைப் பற்றி நீ சொல்லவேண்டாம். வேதம் பொய்யை ஓர் அவலட்சணமான கறை என்கிறது. பொய் சொல்லுகிறவன் தன்னைக் கறைப்படுத்தித் தனக்குக் கெடுத்தவனைச் சேதப்படுத்துவான். உண்மையற்ற பேச்சுக்கு உன் செவியைச் சாய்க்காதே. உன் நாவு அப்பேர்ப்பட்ட பேச்சைப் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருப்பதாக. திருடனைப் பார்க்கத் திருடின பொருளை மறைத்து வைப்பவன் நல்லவன் அல்ல. அப்படிப்போல, பொய் சொல்லுகிறவனைப் பார்க்கப் பொய்யைப் பரம்பப்பண்ணுகிறவன் நல்லவன் அல்ல. வீண் அலப்புதலுக்கு விலக்கமாயிருந்து பின்புறணிக்காரரைக் கடிந்துகொள். பொய், பின்புறணி, அவகீர்த்தி பண்ணுதல் ஆகிய இவைகளைக் கர்த்தர் விலக்குகிறார்.

நாம் பிறத்தியானுக்காகப் பரிந்துபேசி நல்லவைகளைச் சொல்லி எல்லாவற்றையும் நன்மையாக்கவேண்டும் என்று கர்த்தர் கற்பிக்கிறார். நாம் பிறத்தியானுடைய பாவத்தைப் புண்ணியம் என்று சொல்லவும் அதை மறைக்கவும் கூடாது என்பது மெய்யே. ஆயினும் நாம் அதைப்பற்றிச் சந்தோஷப்படாமல் அதைக் கூடியமட்டும் பிறருக்கு மறைத்து வைப்பதே நமது கடமை. அவனுக்குச் சிபாரிசாகச் சொல்லக் கூடியதெல்லாம்

சொல்லு. உன் கை மாத்திரமல்ல, உன் நாவும் இரக்கமுள்ளதா யிருக்கவேண்டும்.

தீயினுற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினுற் சுட்ட வடு.

நாம் நாவினால் செய்யும் பாவங்களை மிக அற்பமென்று எண்ணுகிறோம். பராபரனுடைய தராசிலேயோ அவை மிகப் பளுவாயிருக்கும். நாவானது அசுத்தத்தனம், பொய், பொல்லாப்புக்குச் சந்தோஷப்படுதல் முதலிய கேடுகள் நிறைந்த அநீதி யுலகமும், சாவுக்கேதுவான விஷமும் என்று யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லுகிறான். சாத்தான் ஒரு பொய்யினால் முதல் மனிதரையும், நம்மெல்லாரையும் பாவத்திற்குட்படுத்தினான். பொய்யர் எல்லாரும் அவனைச் சேர்ந்தவர்கள் தான். இயேசுவே சத்தியம். அவரைத் தன் கர்த்தரும், தன் இரட்சகரும் என்று சொல்லுகிறவனெல்லாம் சத்தியவான்.

ஜெபம். சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்க இந்த உலகத்தில் பிறந்து வந்த யேசுவே! நாங்கள் எங்கள் இருதயங்களில் பொய்மையை அகற்றி உண்மையைப் பேசவும் தேவரீர் எங்கள் பிறத்தியானுக்கு அருளின உத்தியோகத்தைக் காப்பாற்றவும், எங்களுக்குத் தயை செய்தருளும், சுவாமி, ஆமேன்.

யோவ. 9, 1-17. அல்லது [illegible] 8, 1-12. வாசிக்கவும்.

எழுபதாம் நாள் என்கிற ஞாயிறு.

அ. 100, 5-7.

வான இராச்சியம் வீட்டெஜமானுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் தன் திராட்சத் தோட்டத்துக்கு வேலை ஆட்களைக் கூலிபொருத்தி அழைக்க அதிகாலையில் புறப்பட்டுப் போனான். மத். 20, 1.

கர்த்தராகிய இயேசு இவ்வுலகத்தில் வானராச்சியத்தை இவ்வுலகத்தில் கொண்டுவந்தார். முன்னாளையில் பதித்திருந்த பிள்ளை வானராச்சியத்தைப் பூமியிலே கொண்டுவந்தவர் என்பதற்கு அடையாளமாகவும் சாட்சியாகவும் தேவனுடைய இரக்கத்தைக் குறித்துத் தோத்திரம் பாடினார்கள். இதின் நன்மைச் சேர்க்கவா என் அவருடைய இராச்சியத்தின் குடிகள். நீயும் அதற்கு ஞானஸ்நானத்தின் மூலமாய் அழைக்கப்பட்டிருக்கிறாய். நீ பிறந்த

நாள் முதல்கொண்டு பரம வீட்டெஜமான் உன்னை அழைத்துக் கொண்டேயிருக்கிறார். நீயும் அவருடைய திராட்சத் தோட்டத்தில் வேலை செய்யவேண்டும். திராட்சச் செடிகள் நன்றாய்த் தழைத்தோங்குவதற்குக் களைகளைப் பிடுங்கி வெளியே எறிந்து விடுவதும், இலத்தைக நன்றாய் வெட்டுவதும், தோட்டக்காரருடைய வேலை. உன் சொந்த இருதயமே திராட்சத் தோட்டம். அதிலே ஓங்கி வளரும் பகை, அசுத்தம், பொய் ஆகிய களைகளைப் பிடுங்கி நேசம், சமாதானம், சந்தோஷம், பொறுமை, பட்சம், தயவு, விசுவாசம், மெத்தனவு, இச்சையடக்கம் ஆகிய ஆவியின் கனிகளைக் கொடுக்கும் நல்ல செடிகளை நட்டு வை.

உன்னுடைய இருதயத்திற்கு மாத்திரமல்ல, பிறத்தியானுடைய இருதயத்துக்கும் கர்த்தர் உன்னைத் தோட்டக்காரனாக வைத்திருக்கிறார். உன்னோடு பிரயாணம் பண்ணுகிறவர்களும், உன் பிள்ளைகளும் உன் பெந்துக்களும், உன் அயலகத்தாரும், உன் உடன் வேலையாட்களும் பரம வீட்டெஜமானுடைய சத்தத்தைக் கேட்டு, சந்தோஷமாய் வேலைக்குச் சேரும்படி உன் முன்மாதிரியினால் அவர்களுக்கு உதவியாயிரு. நீ இந்த வேலையை உண்மையாய்ச் செய்தால் வேலையாட்களுக்குக் கிடைக்கும் கூலியாகிய இளைப்பாறுதலும், நித்திய சந்தோஷமும் உன் பங்காகும். ஆனால் உன் சொந்த வேலையினால் அதைச் சம்பாதித்ததாக நினைக்காதே. அது கர்த்தர் உனக்கு இலவசமாகக் கொடுக்கிற கூலி என்று நினை.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உமது திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்ய எங்களையும் அழைத்தீர். நாங்கள் சந்தோஷத்தோடு உமது சத்தத்தைக் கேட்டு, உமக்கிடத்தில் வேலைசெய்து, நித்திய இளைப்பாறுதலை அடைய எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி, ஆமேன்.

யோவ. 9, 18-41. அல்லது சங். 80. வாசிக்கவும்.

எழுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின திங்கள்.

அ. 113, 1. 2.

ஓடுகிற சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடினாலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுகிறான் என்று அறியீர்களோ. அப்படியே நீங்கள் அதைப் பெறும்படியாய் ஓடுங்கள். போராடுகிற எவனும் எல்லாவற்றிலும் இச்சையடக்கமாயிருக்கிறான்; அவர்கள் அழிவுள்ள கிரீடத்தையும், நாமோ அழிவற்றதையும் பெறும்படிக்குத்தானே. 1. கொரி. 9, 24. 25.

கிரேக்கர் தங்கள் புஜ பலபராக்கிரமத்தின்பேரில் வெகு பெருமை பாராட்டுவார்கள். வருஷா வருஷம் சனம் எல்லாம் கூடி, பலசாலிகளுடைய பந்தய யுத்தங்களைப் பார்ப்பார்கள். ஓட்டமோ மல்லாட்டமோ, தாண்டுதலோ இவைகளில் வெற்றி சிறந்தவன் ஒரு மாலை சூட்டப்படுவான். அந்த மாலை சூட்டப்பட்டவன் அவ்வருஷத்துக்கு இராஜாக்களிலும் கீர்த்தி பெற்றவன். அந்த மாலைக்காக அளவிறந்த அப்பியாசங்களைச் செய்துத் தங்கள் சரீரங்களைப் பலவிதமாய் ஒடுக்கி, பசியையும் தாகத்தையும் பொறுத்து, நல்ல ஆயத்தமாகி, ஓடும் சாலைக்கு வருவார்கள். இது எல்லாம் வாடிப்போகும் கிரீடத்துக்காகத்தான்.

வாடிப்போகாததும் நம்மைவிட்டு எடுபடாததுமான ஒரு கிரீடம் கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கொடுக்கப்படும். அது, நித்திய சீவ கிரீடம்தான். நாம் இதை அடையவேண்டுமானால், நாமும் நம்முடைய ஓட்டத்தைச் சரியாய் முடிக்கவேண்டும். நாம் அநுதினமும் குணப்படுதலிலும் சந்தோஷமான நம்பிக்கையிலும் வளர்ந்து, அவபக்தியையும், மாமிச இச்சைகளையும் வெறுத்து, மனச் சொஸ்தமும் நீதியும் தேவபக்தியுமாய் இப்பிரபஞ்சத்தில் சீவனம் பண்ணுவது கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யவேண்டிய அப்பியாசம். அந்தக் கிரேக்க பந்தய ஓட்டக்காரர் தங்கள் ஓட்டத்துக்கு இடையூறான எல்லாவற்றையும் தள்ளிவிட்டது போல, நாமும் பரம இராச்சியத்தில் சேரக்கூடாத காரியங்களை எல்லாம் கிறிஸ்துவின் நிமித்தமாய்ச் சந்தோஷமாய் விட்டுவிட மனதாயிருப்போமாக. அழைக்கப்பட்டவர்கள் அநேகர்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ கொஞ்சம். பயந்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பை நடப்பியுங்கள் என்று அப்போஸ்தலன் நம்மை எச்சரிக்கிறார்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! எங்களை இரட்சிக்க உம்முடைய மகிமையை விட்டு, எங்கள் ஏழைச் சென்மத்தை எடுத்துக்கொண்டீர். ஆ, கர்த்தாவே, நாங்கள் உமது நிமித்தம் எங்கள் சரீரத்தைப் பகைத்து நல்ல போராட்டத்தைப் போராடி, நித்திய கிரீடத்தை அடைய எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 10, 1-21. அல்லது ஆமோஸ் 9, 11-15. வாசிக்கவும்.

எழுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின செவ்வாய்.

பி. 113, 3. 4.

ஆனால் அவர்கள் வழியிலே போகையில் சம்பவித்ததேதென்றால், ஒருத்தன் அவருடனே: ஆண்டவரே, நீர் போகிற எவ்விடத்திலும் உம்மைப் பின்செல்லுவேன் என்றான். இயேசு அவனுடனே: நரிகளுக்குக் குழி

களும் ஆகாசத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷனுடைய குமாரனுக்கோ தலைசாய்க்க இடம் இல்லை என்றார். லூக். 9, 57. 58.

நீர் எங்கேபோனாலும் உம்மைப் பின்செல்லுவேன் என்று ஒரு சமயத்தில் ஒருவன் இரட்சகருக்குச் சொன்னான். இவன் இயேசுவின் வார்த்தையினாலே பிடிபட்டு, இந்த வார்த்தை வேறு எங்கும் கண்டுபிடிக்கக்கூடாத ஒரு பொருளைத் தன் இருதயத்துக்குத் தரும் என்று உணர்ந்து நம்பினான். ஆகையால் எப்போதும் இயேசுவோடிருக்க ஆசையாயிருந்தான். மற்றச் சீஷரைப் போல் தானும் இயேசுவின் புத்தி போதனைகளையும் சில வசனத்தையும் கேட்பதற்கு அவர் கிட்ட இருக்க விரும்பினான். இயேசுவோ இதற்குச் சொன்ன உத்தரவு என்ன? என்னைப் பின்செல்லுவது இலேசு என்று நினைக்கிறாயா? வீடுவாசலையும் பெண்சாதி பிள்ளைகளையும் விட்டுவிட்டு என்னைப்போல் தரித்திரத்தை அநுபவிக்க உனக்கு மனதுண்டோ என்றார். அம்மனிதன் அப்போது செய்தது இன்னது என்று நமக்குத் தெரியாது. உனக்குண்டானதை விற்று ஏழைகளுக்குக் கொடு என்று இயேசுநாதர் சொல்லும்போது, துக்கப்பட்டுப் போய்விட்ட அந்த வாலிபனைப்போல் இந்த மனுஷன் ஒருவேளை போயிருப்பான்.

கிறிஸ்துவைப் பின்சென்று அவர் வழியில் நடப்பதற்கு நமக்குள்ளதெல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தரித்திரராக அலைவது அவசியமா? ஒரு காலத்தில் மனிதர் இயேசுவின் வார்த்தையை இவ்விதமாக அர்த்தம் பண்ணினதினாலே, அநேக பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் ஆஸ்திபாஸ்திகளை ஒழித்துவிட்டு உபவாசத்தினால் தங்கள் சரீரத்தை ஒடுக்கி வனாந்தரத்தில் வாசம்பண்ணினார்கள். அவர்கள் செய்தது பிசகு. இயேசுநாதர் அந்த ஐசுவரியமுள்ள வாலிபனிடத்திலும், இந்த மனுஷனிடத்திலும், நம்மிடத்திலும் கேட்கிறதென்ன? இவ்வுலகத்தில் அவரைத் தவிர நம்மை வேறொன்றும் வசப்படுத்தக்கூடாதென்பதையே. அவர் நம்மை அழைத்தால் நாம் தாமதம் பண்ணாமல் உடனே போகவேண்டும். ஆதலால், நீ பணக்காரனானாலும் சரி, நீ ஏழையானாலும் சரி, உன் இருதயத்தை அவருக்குக் கொடு. அப்போது உன் ஆஸ்தியும் உன் தாய்தகப்பன்மாரும் உன் சிநேகிதரும் உன்னை, அவரைவிட்டுப் பிரிக்கமாட்டார்கள்.

ஜெபம். எங்கள் பரம இராசாவே! எங்கள் நிமித்தம் மகா கொடூரமான பாடுகளையும் மரணத்தையும் அநுபவித்து, நித்திய மோட்சத்தை எங்களுக்குச் சம்பாதித்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள், உமக்கு நன்றியறிந்தவர்களாய் ஊழியம் செய்து இவ்வுலகத்தின் பொருளைக் குப்பையாக எண்ணி உம்மை மனதாரப் பின்பற்ற எங்களுக்கு மனதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 10, 22-42. அல்லது ஒபதி 1-21. வாசிக்கவும்.

எழுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின புதன்.

ஸ. 113, 5. 6.

நீங்கள் லோகத்தின் வெளிச்சமாயிருக்கிறீர்கள். மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கக் கூடாது. விளக்கைக் கொளுத்திப் பறையின் கீழ் வைக்கிறதும் இல்லை, விளக்குத் தண்டின்மேலே வைப்பார்கள்; அப்போது வீட்டிலே இருக்கிறவர்கள் எல்லாருக்கும் பிரகாசிக்கும். இப்படியே மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதற்காக உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது. மத். 5, 14-16.

நாம் கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்யும் தோட்டக்காரர். மனிதரிடத்தில் அவர் தேடுகிற விசுவாசம் சிநேகம் என்ற கனியை அவர் கண்டுபிடிப்பதற்கும் அவர்கள் இருதயங்களில் தேவனின் திராட்சத் தோட்டம் நாட்டப்படுவதற்கும் நாம் ஒத்தாசையாயிருக்கவேண்டும். எப்படியென்றால் கிறிஸ்தவர்களாகிய நாம் மலையின்மேல் கட்டப்பட்டு எங்கும் தெரியக் கூடிய ஒரு பட்டணத்திற்கும், விளக்குத் தண்டின்மேல் வைக்கப்பட்டு வெகுதூரம் பிரகாசிக்கிற தீபத்திற்கும் ஒப்பு. எல்லாரும் நம்மைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நாம் நமக்கென்றல்ல, கர்த்தருடைய இராச்சியத்திற்கென்றே அவருக்கு மகிமையுண்டாக நடப்பது நம்முடைய கடமை.

கிறிஸ்துவின் நாமத்தைப் பூண்ட நாம், அவருடைய சித்தத்திற்கும் வசனத்திற்கும் விரோதமாக நடக்கும்போதும் சனங்கள் நம்மிடத்தில் உலோபித்தனத்தையும், பகையையும், பெருமையையும் பார்க்கும்போதும் இவர்கள் கிறிஸ்தவர்களாய் நடக்க விரும்பிக் கிறிஸ்துவுக்கு ஏற்காத விதமாய்ச் சீவிக்கிறார்கள் என்றும், சுவிசேஷம் தன்னைச் சார்ந்தவர்களை மாற்றிக் குணப்படுத்தாததினால், அதற்கு யாதொரு வல்லமையும் இல்லை என்றும் சொல்லுவார்கள். ஆனால் அவர்கள் நமது சிநேகத்தையும் இச்சையடக்கத்தையும் பொறுமையையும் பார்த்தால் சுவிசேஷம் இப்பேர்ப்பட்ட கனிகளைக் கொடுப்பதினால் அதற்கு ஏதோ ஒரு வல்லமை இருக்கும் என்று நினைப்பார்கள். இப்படி அவர்கள் நமது நற்கிரியைகளைக் கண்டு பரமண்டலங்களிலிருக்கிற பிதாவை மகிமைப்படுத்துவார்கள். நாம் ஒரே ஆத்துமத்திற்கு மோட்ச வழியைக் காண்பித்தால் போதும். ஆனால் ஒரு ஆத்துமா நம்மால் இடறலபட்டு, கெட்டுப்போகுமானால் நமக்கு ஐயோ.

ஜெபம். உலகத்தின் வெளிச்சமானவரே! உம்மிடத்தில் நாங்கள் பிரகாசம் பெற்ற உலகத்தாருக்கு மோட்ச வழியைக் காண்பிக்க வேண்டுமென்று எங்களுக்குக் கற்பித்தீர். ஆ, கர்த்தாவே, உமக்கும் உமது

பிதாவுக்கும் மகிமையுண்டாக நாங்கள் இவ்வுலகில் நன்னடக்கையாய் நடந்துகொள்ள எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

மத். 16, 13-28. அல்லது யோவா 1, 1-2, 11. வாசிக்கவும்.

எழுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின வியாழன்.

ஸ. 109, 1. 2.

பகல் காலம் இருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியைகளைச் செய்யக்கூடாத இராக்காலம் வரும், நான் லோகத்தில் இருக்கக்கொள்ள, லோகத்தின் வெளிச்சமாயிருக்கிறேன் என்றார். யோ. 8, 4. 5.

கர்த்தராகிய கிறிஸ்து உலகத்திற்கு வெளிச்சம். அவர் தமது வசனம் என்ற தீபத்தினால் நமது இருதயங்களைப் பிரகாசிப்பித்து இருளின் வல்லமையைத் துரத்திவிடுகிறார். நாம் இனி அந்தகாரத்தினால் உண்டாகும் திகிலுக்கும் மனச் சோர்வுக்கும் ஆள் ஆகாமல் நம்முடைய பாவங்களை எல்லாம் மன்னித்து நம்முடைய நோக்காட்டை எல்லாம் குணமாக்குகிற கிருபையுள்ள பராபரன் நம்முடைய தேவன் என்று அறியும்படி அவர் நமது மனச்சாட்சியை வெளிச்சமாக்குகிறார். நாம் இருண்ட பாவ வழியை விட்டு விட்டு வெளிச்சத்தில் நடந்துகொள்ளுவதற்கு அவர் தமது வசனத்தை நமக்கு அருளிச்செய்தார். அவர் தமது அன்பின் ஜோதியை நமது பாடுகளிலும் மரண நேரத்திலும் வீசச் செய்வார்.

அவர் உலகத்தின் வெளிச்சமானவர். அவரில்லாமல் நாம் இருட்டில் இருக்கவேண்டும். அவர் வெளிச்சம் என்று ஒரு சமயத்தில் மனுப்புத்திரர் கண்ணாரக் கண்டார்கள். அவர் பூமியில் சஞ்சரித்துச் சில வசனத்தைப் போதித்து, பிதா தமக்கு ஒப்புவித்த கிரியைகளைச் செய்து, எளியவருக்குச் சகாயம்பண்ணி வியாதிக்காரரைச் சொஸ்தப்படுத்தித் துக்கமுள்ளவர்களை ஆற்றித் தேற்றித் தேசமெங்கும் திரிந்தபோது எல்லாருக்கும் வெளிச்சமாயிருந்தார். அப்போது அவர் உலகத்தையும், இருண்ட புத்தியுள்ள மனிதரையும் பிரகாசிப்பித்தார். தாம் இம்மாதிரி வெளிச்சமாய் வெகுகாலமிருக்க முடியாதென்றும் சீக்கிரம் உழைக்கக் கூடாத மரண இரவு வரும் என்றும் அவர் அறிந்தார்.

அவர் உலகத்தில் உழைத்த காலம் முடிந்துபோயிற்று. அவர் உயிர்த்துப் பரத்துக்கேறி இப்போதும் நம்மோடிருக்கிறார்.

நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள் ஆகும்படி இவர் நம்மைத் தமது வார்த்தையினாலும் ஆவியினாலும் பிரகாசிப்பிக்கிறார். அவர் நம்மில் மூட்டின விசுவாசம் பிறருக்கும் இரட்சகரைக் காண்பிக்கும். தேவன் நமக்குக் கட்டளையிட்ட வேலை இதுதான். இதை நாம் மரண இரவு வருமட்டும் நடப்பிக்கவேண்டியது. பிறரும் கிறிஸ்துவின் வெளிச்சத்தைத் தேடுவதற்கு நாம் நல்நடக்கையினாலும் அன்பினாலும் பொறுமையினாலும் நமது விசுவாசத்தைக் காட்டுவோமாக.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! நாங்கள் உம்மிடத்தில் மெய்யான வெளிச்சத்தைக் கண்டு இருளை விட்டுச் செம்மையான வழியில் நடக்க எங்களுக்குக் கிருபை செய்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் காலமிருக்கக்கொள்ள உமக்காக உழைத்து, எங்கள் சகோதரர்களையும் உமது வெளிச்சத்தண்டை அழைக்க எங்களை ஏவி எழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

மத். 17, 1-27. அல்லது யோனா 3, 1-4, 11. வாசிக்கவும்.

எழுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின வெள்ளி.

பி. 109, 3. 4.

பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பை நடப்பியுங்கள். ஏனெனில் இதயமாய் மனதையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவர் பராபரன். பிலி. 2, 12. 13.

இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்கிற நீ இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். சமாதானத்துக்கும் பாக்கியமான உயிர்த்தெழுதலுக்கும் நீ வரக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு வழி கிடையாது. இதை விசுவாசிக்கிறாயா? நீங்கள் விசுவாசத்தில் இருக்கிறீர்களோ என்று உங்களைச் சோதித்துப் பாருங்கள் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். நாம் கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாகி இந்த ஆவிக்கும் அவருடைய சிந்தைக்கும் ஏற்றபடி நடந்தால் நம்முடைய விசுவாசம் உயிருள்ளது. வானராச்சியத்துக்குப் போகும் வழி விசுவாசமே; ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் கிறிஸ்துவினால் நமக்குக் கிடைக்கும் தேவ இரக்கத்தின்பேரில் உறுதியாய் நம்பும் விசுவாசம் [illegible]ப்படுதலிலும் நமது பாவக் குற்றங்களை அறியும் அறிவிலும் அபிப்பிராயப்பட்டு நின்று அனுதினமும் பாவத்தோடு போராட நம்மை ஏவி எழுப்பும். இப்படி

நாம் நாளுக்குநாள் புதிதாகிப் பொல்லாப்போடு போர் புரிந்து, கர்த்தருடைய கற்பனையைக் கைக்கொள்ளப் பிரயாசைப்பட்டால் நம்முடைய விசுவாசம் சரியான விசுவாசம் என்று நம்பலாம். இப்பேர்ப்பட்ட விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பை அடையலாம்.

ஆகிலும் இந்த விசுவாசத்திற்கு அநேகஞ் சோதனைகளும் மோசங்களும் நேரிடக்கூடியது. உலகத்தின் நய வஞ்சகமும் பொல்லாத சத்துருவின் மோசமும் அதிக பலம் உள்ளவை. என் மாமிசத்தின் பெலவீனமும் என்னுடன் பிறந்து என் இருதயத்தில் வசிக்கும் பொல்லாப்பும் அதிகம். அரிய பொருளாகிய விசுவாசத்தைக் காப்பாற்றிக்கொள்ள என் சுய பலத்தால் முடியாது. நானே அதைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், என் பொக்கிஷத்தை நான் இப்போது இழந்துவிடக் கூடும். என் இரட்சிப்பை இழந்துபோவேனோ என்று எப்போதும் நடுங்கிப் பயந்திருக்கவேண்டும். ஆனால் எனக்கு நல்ல தைரியம் உண்டு. உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேனென்று இரட்சகர் எனக்கும் சொல்லுகிறார். அவர் மாத்திரம் எனக்குள் மனதையும், செய்கையையும் உண்டாக்குகிறவர்.

ஜெபம். ஆண்டவரே! பிசாசையும் நரகத்தையும் மேற்கொண்ட போர் வீரரே, நானும் விசுவாசத்தினால் என் சத்துராதிகளை மேற்கொண்டு நித்திய பாக்கியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள எனக்குப் பக்கத்துணையாய் நின்றருளும், சுவாமி, ஆமென்.

மத். 13, 1-14. அல்லது மீகா 1; 1-6. வாசிக்கவும்

எழுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின சனி.

பி. 109, 5. 6.

ஒன்பதாம் கற்பனை என்ன? பிறத்தியானுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக.

இதற்கர்த்தமென்ன? நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு பிறத்தியானுடைய வீட்டையும் சுதந்தரத்தையும் அடைகிறதற்கு உபாய தந்திரங்களைச் செய்யாமலும், அநியாயத்தை நியாயம்போல் காண்பிக்கிறதினால் அவைகளை அபகரித்துக் கொள்ளாமலும் அவைகள் அவனிடமே இருக்கும்படியாய்ச் சகாயமும் உபகாரமுஞ் செய்யவேண்டும்.

சர்வ வல்லமையுள்ள தேவன் பிறத்தியானுடைய வீட்டை இச்சிக்கவேண்டாமென்று இந்தக் கற்பனையில் மனுஷருக்

குக் கட்டளையிடுகிறார். மனுஷனுடைய உள்ளம் ஆசையிச்சைகளால் நிறைந்திருக்கிறது. அவன் ஆசிக்காமலிருக்கமாட்டான். அந்த ஆசையிலிருந்துதான் வார்த்தைகளும் செய்கைகளும் உற்பத்தியாகும். ஆதலால் மனுஷனுடைய இருதயத்தையும் ஆட்கொண்டு அது தமதுபேரில் ஆசையாயிருக்கச் செய்வதற்கு தேவன் பிரயாசைப்படுகிறார். அவர் நமக்கு வீட்டையும் எல்லா ஆதரவையும் கொடுத்தார். இதற்காக நாம் அவருக்கு ஸ்தோத்திரஞ் சொல்லி இது போதும் என்று எண்ணுவது தகுதி.

தேவனை அறியாதவர்களும் அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தாதவர்களும் தங்கள் இருதயத்தின் ஆசைகளை அடக்கமாட்டார்கள். வயிறு நிரம்பினாலும் கண் நிரம்பாது. அவர்கள் பலவித உபாய தந்திரங்களைச் செய்து அநியாயத்தை நியாயம்போல் காண்பித்துப் பிறத்தியானுடைய சொத்தை அபகரிக்கப் பார்க்கிறார்கள். அவர்களுடைய வீடு பாழாகி அவர்களுடைய சுதந்தரம் அந்நியருடையதாகும். தேவனுக்கு அஞ்சிப் பிறத்தியானுடைய சொத்து அவனிடம் இருக்கும்படியாய்ச் சகாயமும் உபகாரமுஞ் செய்கிறவர்களோ தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சமாதானத்தோடிருப்பார்கள். தேவன் தாமே அவர்களைக் காப்பாற்றி அவர்களுடைய சொத்தும் சுதந்தரமும் அதிகரிக்கப்பண்ணுவார். அவருடைய ஆசீர்வாதம் உனக்கு வேண்டுமானால் உன் இருதயத்தின் ஆசையிச்சைகளை அடக்கு.

ஜெபம். அன்புள்ள பிதாவே! எங்களுக்கும் எங்கள் பிறத்தியானுக்கும் போதுமான சொத்தையும் சுதந்தரத்தையும் கொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். தேவரீர் அருளிச்செய்த இந்தச் சொத்தை நாங்கள் காப்பாற்றிப் பிறத்தியானுக்கு எங்களால் ஆனமட்டும் உதவிபண்ண எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

மத். 18, 15-35. அல்லது மீகா 2, 1-13. வாசிக்கவும்.

அறுபதாம் நாள் என்கிற ஞாயிறு.

பி. 109, 7. 8.

விதைக்கிறவன் தன் விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்து மிதியுண்டது. ஆகாசத்தின் பறவைகளும் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. வேறே சில விதை கற்பாறையின்மேல் விழுந்தது. அது முளைத்தபின் அதற்கு ஈரமில்லாததினால், உலர்ந்துபோயிற்று. வேறே சில விதை முள்ளுகளின் நடுவே விழுந்தது. முள்ளுகளும் கூட முளைத்து, அதை நெருக்கிப்போட்டது. வேறே சில விதை நல்ல நிலத்திலே விழுந்தது. அது முளைத்து, ஒன்று நூறாய்ப் பலன் தந்ததென்றார். இவைகளைச் சொல்லி, கேட்கக் காதுள்ளவன் கேட்கக் கடவான் என்று கூப்பிட்டார். லூக். 8, 5-8.

நிலம் நாலு விதம்: உன் இருதயம் எவ்விதம்? அது தேவ வசனம் என்கிற விதை முளைத்து விளைந்து முற்றிக் கனிகொடுக்கக் கூடிய பயிர் நிலமா? தானியத்துக்குச் சீவன் இருக்கிறதுபோல தேவ வசனத்துக்கும் சீவன் உண்டு. தானியத்தில் இனி உண்டாகப் போகிற முளை மறைந்திருக்கிறது. அதற்கு நல்ல நிலமும் மழையும் வெயிலும் தேவை. இவ்விதமாய்க் கர்த்தருடைய வசனத்தில் விசுவாசம், சிநேகம், புதிய சீவன் என்றவைகளை யுண்டுபண்ணும் சக்தி மறைந்திருக்கிறது. இந்த வசனத்திற்குச் சரியான நிலமாகிய நல்ல இருதயம் கிடைத்தால் அது உயிராயிருந்து, கிருபை என்னும் பனியினால் திரளான கனிகொடுக்கும்.

நமது இருதயமோ ஒன்றும் முளைத்து வளராத, மிதியுண்டு கடினப்பட்ட வழி நிலத்துக்கு ஒப்பு. நாம் கர்த்தருடைய வசனத்தைக் கவனிப்பது அபூர்வம். அடிக்கடி நமது இருதயம் கற்பாறை நிலத்துக்கு ஒப்பு; வெளிக்கு அது அசைவுற்று எழுப்பப்பட்டதுபோல் தோன்றினாலும் உள்ளே நொறுங்காத பழைய இருதயம் தங்கிவிட்டது. அது கர்த்தருடைய வசனத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுக்க மனசு அற்றது. முள் நிலத்துக்கு ஒப்பான இருதயங்களுக்கும் குறைவில்லை. ஒருவன் கர்த்தருடைய வசனத்துக்குத் தன் இருதயத்தைத் திறந்தாலும் அசுத்தமும் உலகக் கவலையும் என்ற முள் விதையை இரகசியமாய் உள்ளே வைத்து வைக்கிறான். தேவ வசனம் கனிகொடுக்கா வண்ணம் இதுதான் தடை. சுத்த இருதயத்தை எனக்குள் சிருஷ்டியும் பராபரனே, என்று நாம் எல்லாரும் மன்றாடவேண்டியது.

ஜெபம். அன்புள்ள பிதாவே! நாங்கள் உமது வசனத்தைக் கேட்டு எங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளத் தகுந்தவர்கள் அல்ல. தேவரீர் எங்கள் இருதயங்களை உமதாவியின் வல்லமையினால் நொறுக்கி, உமது வசனத்தைத் திரும்பத் திரும்ப அதிலே விதைத்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 9, 51-62. அல்லது சக். 1. வாசிக்கவும்.

அறுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின திங்கள்.

பி. 109, 9. 10.

நம்முடைய கிருபை உனக்குப் போதும்; ஏனென்றால் பலவீனத்திலே நம்முடைய பலம் நிறைவேறுகிறது. 2 கொரி. 12, 9.

கர்த்தர் எனக்கொத்தாசை செய்யவேண்டும், இந்த வியாதியைச் சொஸ்தமாக்கவேண்டும், அந்தக் கவலையை நீக்கவேண்டும், இந்த நஷ்டத்துக்கு என்னை விலக்கித் தற்காக்கவேண்டும் என்று எவ்வளவாய் வேண்டிக்கொண்டேன். தேவன் என் ஜெபத்தைக் கேட்கமாட்டாரா என்று அநேகர் முறையிடுகிறார்கள். நீ அப்படி முறையிட்டால், இரட்சகர் பவுலுக்குச் சொன்ன, நம்முடைய கிருபை உனக்குப் போதும் என்கிற வார்த்தையை நினைத்துக்கொள். நமக்கு நன்மையானதைக் கருதி, நம்மை எல்லா இக்கட்டிலும் கைவிடாமலிருந்து, நம்மைத் தம்மண்டைக் கிழுக்கச் சித்தமாயிருக்கிற கிருபையுள்ள தேவனாகிய இரக்கமும் உண்மையுமுள்ள பரம தகப்பன் நமக்கு இருக்கிறார் என்று நாம் உறுதியாய் நம்பினால் நமக்கு வேண்டியதெல்லாம் கிடைத்துப் போம். நமது தேவனின் கிருபையைத் தவிர வேறொன்றும் நமக்குத் தேவையில்லை. அதினால் நாம் எல்லாப் பாடுகளையும் மேற்கொள்ளலாம். அவர் நம்மைப் பெலசாலிகளாக்குவார். இது பவுலினிடத்தில் விளங்கிற்று. இவன் மெலிந்த கட்டை மனிதன். நெட்டை உடம்புடைய பர்னபாவைப் பார்க்க, உலகத்தால் பகைத்துத் துன்பப்படுத்தப்பட்டவன். பாடுகள் நிறைந்தவன். உள்ளே பயம், புறம்பே போராட்டம்; சாத்தானால் குட்டப்பட்டவன். என்றாலும் அவன் கர்த்தருடைய கிருபையினால் பெலன்கொண்டு, சுவிசேஷத்தை எருசலேமிலிருந்து ரோமாபுரிமட்டும் பிரசங்கித்தான்.

கிறிஸ்துவின் வல்லமை உன்னில் காணப்படுகிறதா? அது பெலவீனரிடத்திலும், தங்கள் பெலவீனத்தையறிந்து பெலத்துக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுகிறவர்களிடத்திலும் காணப்படும். கர்த்தரிடத்தில் வல்லமையைப் பெற்ற நீ, விசுவாசத்தைத் தடுக்கும் எல்லாவற்றையும் தூரத்தி, சகல சோதனைகளையும் சோர்வையும் உலகத்தினால் உண்டாகும் நிந்தையும் நெருக்கத்தையும், ஆம், மரண வேளையையும் மேற்கொள்ளலாம். இப்பேர்ப்பட்ட வல்லமை அவரது வசனத்திலிருந்து உற்பத்தியாகும். வெளிப்பார்வைக்கு அது மென்மையும் சிறப்பும் அற்றது. ஆனாலும் அதில் நித்திய ஜீவ வல்லமைகள் மறைந்திருக்கின்றன. அதிலிருந்து நாம் கிருபையின்மேல் கிருபையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! எங்களுடைய பெலவீனங்களை எடுத்துக்கொண்டு எங்கள் நோவுகளைச் சுமந்த தேவாட்டுக்குட்டியானவரே, உம்முடைய தழும்புகளால் குணம் ஆனோம். உம்முடைய பெலத்தினால் பொல்லாதவனை மேற்கொண்டு கடைசியாய்ச் செயத்தையடைய எங்களுக்குமது கிருபையைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

லூக். 10, 1-22. அல்லது மீகா 4, 1-14. வாசிக்கவும்.

அறுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின செவ்வாய்.

பி. 109, 11. 12.

அப்போது இயேசு தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னதாவது: ஒருவன் என் பிறகே வரவேண்டும் என்றால், தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்செல்லக் கடவான். ஏனென்றால் தன் சீவனை இரட்சிக்கவேண்டுமென்றிருக்கிறவன் அதை இழந்து போவான். என் நிமித்தமாகத் தன் சீவனை இழந்துபோகிறவனே அதைக் கண்டடைவான். ஏனெனில் மனுஷன் லோகத்தையெல்லாம் ஆதாயப்படுத்திக்கொண்டு தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால், அவனுக்கு லாபமென்ன. அல்லது மனுஷன் தன் ஆத்துமத்தை மீட்கிறதற்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான். மத். 16, 24-26.

சரீரத்தின் சுகம் எல்லாத்திலும் முக்கியம் என்று அநேகர் சொல்லுவார்கள். அதிலே ஒரு உண்மையுண்டு. சரீரத்தின் சுகம் மேலான ஆஸ்தி என்பது மெய்யே. ஆதலால் அநேகர் அதற்காக அதிகக் கவலைப்பட்டுத் தங்கள் சரீரத்தையும் சீவனையும் காப்பாற்றுவதைத் தவிர மேலானதொன்றையும் அறியாதிருப்பார்கள். இவர்கள் தங்கள் சீவனை இழந்துபோகிறவர்கள். சாகும் வேளையில் இவர்களுக்குச் சகாயம் ஒன்றும் கிடையாது. அவர்கள் திரும்பி வரக்கூடாத இடத்துக்குப் போய் விடுவார்கள். இவர்கள் இப்பூமியில் இச்சீவனைப் பார்க்கிலும் மேலானதொன்றையும் தேடாததினால் மறுமையில் எல்லாத்தையும் இழப்பார்கள்.

சரீரத்தைப் பார்க்க அருமையானதொன்றுண்டு. உனக்குச் சீவனைக் கொடுத்தவரை நீ நேசிக்கிறதைப் பார்க்கிலும், உன் சீவனை நீ அதிகமாய் நேசிக்காவண்ணம் சாக்கிரதையாயிரு. மரணமும் அழிக்காத நித்திய சீவனாகிய மெய்யான ஆஸ்தியைக் கண்டடைவதற்கு அவரைத் தேடி, அவர் மாதிரியைப் பின்பற்று. நமது சரீரத்தின் சுகத்தை விட நமது ஆத்துமத்தின் சுகம் அதிக முக்கியம். நமது ஆத்துமம் வியாதிப்பட்டு நமது மனச்சாட்சி காயமாய்க் கிடந்தால் இவ்வுலகத்தின் ஆஸ்தியினால் நமக்குப் பிரயோசனம் இல்லை. நம் எல்லாருக்குள்ளும் ஒரு கொள்ளைநோய் இருக்கிறது. அதற்குப் பாவம் என்று பேர். இந்த நோயை நீக்க நாம் ஏதாகிலும் கொடுக்கக் கூடுமா? பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக நாம் என்ன ஈடு செலுத்துவோம். இதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லையே. தேவாட்டுக்குட்டியின் இரத்தம் ஒன்றே நம்மைச் சொஸ்தப்படுத்தக் கூடியது. இதை நாம் விசுவாசத்தினால் பற்றிப் பிடித்து தேவனுக்கு முன்பாகக் கொண்டு வந்தால் அவர் நம்மை நித்திய மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கமாட்டார். இதுதான் நாம் நமது பாவங்களுக்காக செலுத்தவேண்டிய ஈடு.

ஜெபம். பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டி! அடியார் மேலிரங்கும்; பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டி, அடியார் மேலிரங்கும்; பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டி, நீர் சமாதானந் தாரும், சுவாமி, ஆமேன்.

லூக். 10, 23-42. அல்லது மீகா 1, 1-14. வாசிக்கவும்.

அறுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின புதன்.

பி. 99, 1. 2.

நீங்கள் சத்தியத்துக்குக் கீழ்ப்படிகிறதினாலே உங்கள் ஆத்துமாக்களை, ஆவியைக்கொண்டு மாயமற்ற சகோதர சிநேகத்துக்கென்று சுத்தமாக்கி, அழிவுள்ள வித்தினால் அல்ல, என்றென்றைக்கும் நிற்கிற சீவனுள்ள தேவவசனம் என்ற அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் செனிப்பித்தவர்களாய் ஒருவரை ஒருவர் சுத்த இருதயத்தால் கருத்தாய்ச் சிநேகியுங்கள். ஏனென்றால் மாமிசம் எல்லாம் புல்லைப்போலவும், மனுஷனுடைய மகிமை எல்லாம் புல்லின் பூவைப்போலவும் இருக்கிறது. புல் உலர்ந்து அதின் பூ உதிர்ந்தது. ஆனால் கர்த்தருடைய வசனம் என்றென்றைக்கும் நிற்கும்; இதுவே உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்ட வசனந்தானே. 1 பேது. 1, 22-25.

இப்பூமிக்குரியவைகளெல்லாம் ஒழிந்துபோம். எல்லாம் அழிவாகிய மாய்கைக்குக் கீழானது. கோடை வெப்பத்தில் வயலின் புல் உலர்ந்துபோவதுபோல், இவ்வுலகத்தின் மகிமை ஒழிந்துபோம். நீயும் ஒரு உதிர்ந்த இலைக்கொப்பு. நீ செய்வதெல்லாம் குப்பையாகும். உனக்குள்ளதை எல்லாம் மரணம் கொள்ளையிடும். இவ்வாறு இப்பூமியில் சமாதானமும் நிலைப்பாடுமற்றவர்களாய்க் கொஞ்சக்காலம் ஜீவிக்கிற நாம் ஒருவர்பின் ஒருவராய்க் கடைசித் தூக்கத்துக்குட் படுகிறோம். நமது பூமி ஒரு பெரிய பிரேதக் குழியாயிருந்தும், அழிவு நிறைந்த இப்பூமியில் அழியாத ஒரு பொருள் உண்டு. அது நமது தேவனுடைய வசனந்தான். இந்த வசனம் நித்தியம். நம்மை நித்தியத்துக்கு வழி நடத்திக் கொண்டுபோகும். மரணத்தினால் அழியாத ஒரு புது சீவனை நமக்குள் உண்டாக்கும். இந்த வசனம் மறுபிறப்புக்கு வித்து, நம்மைப் புதிதாக்கும் வல்லமை. பாவிகளாகிய நம்மைத் தேவபிள்ளைகளாக்கும் சத்தியம்.

இந்தச் சீவ வசனத்தை ஏற்றுக்கொண்டோமா? பரிசுத்த ஞானஸ்நானத்தில் தண்ணீரோடே கூடிய வசனம் புதிய சீவனின் துவக்கத்தை நம்மில் உண்டுபண்ணிற்று. அதற்குப் பிற்பாடு நாம் இதிலது இயேசுவில் பூரண புருஷ பிராயத்தை அடைந்திருக்கி-

றோமா? அழியாத இந்த விதை உன்னிலும் விதைக்கப்பட்டது. அதை நன்றும் சற்குணமுமான இருதயத்தில் காத்துக்கொள்ளுகிறவனுக்கு இயேசுநாதர் மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒருவன் என் வசனத்தைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காணான் என்று சொல்லுகிறார்.

ஜெபம். என் பரம பிதாவே! உம்முடைய வார்த்தைகள் எனக்கு எத்தனை தித்திப்பானவை. என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமானது. உம்முடைய கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆனபடியால் எல்லாக் கள்ள வழியையும் பகைக்கிறேன். உம்முடைய வசனத்தை என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாக்கியருளும், சுவாமி, ஆமேன். சங். 119, 103-105.

லூக். 11, 1-28. அல்லது மீகா 6, 1-14. வாசிக்கவும்.

அறுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின வியாழன்.

பி. 99, 3. 4.

பராபரனுடைய வார்த்தை சீவனுள்ளதும், பலமுள்ளதும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்தையும் பார்க்கக் கருக்கானதும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கும் மட்டாக உருவிப்போகிறதும், இருதயத்தின் சிந்தனைகளையும் நினைவுகளையும் நியாயந்தீர்க்கிறதுமாயிருக்கிறது. எபி. 4, 12.

தேவ வசனம் உயிர் உள்ளது. அது ஒரு விதை. மனித இருதயம் என்ற நிலத்தில் அது விதைக்கப்படும். இது கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தையும் புதிய சீவனையும் முளைப்பிக்கும். இப்பேர்ப்பட்ட அழியாத சீவனை உண்டாக்கும் நித்திய சீவ விதையாக அது இன்றைக்கும் கணக்கிலடங்காத இருதயங்களில் தன் பலனைக் காட்டுகிறது. தேவ வசனம் வேண்டாம், கோயிலும் ஆராதனையும் வேண்டாம் என்று உலகத்தார் தள்ளினாலும், தேவ வசனம் எப்போதும் சீவனும் பெலனுமுள்ளதாகவே விளங்கி வருகிறது. முன்னொரு காலத்தில் அது எப்படி மனுஷரை வசப்படுத்தி அவர்களை இயேசுவண்டை யிழுத்துக்கொண்டு வரும் வல்லமையாயிருந்ததோ அப்படியே அது இன்றைக்கும் வல்லமையுள்ளதாயிருக்கிறது. அது மனிதனை முழுவதுமாய்ப் புதிதாக்கக்கூடிய அதிசய வசனம் என்பதை நாளைக்கும் பார்க்கலாம். அது கெட்ட குமாரனைக் குணப்படுத்தி அவனை நன்றியறிந்த பிள்ளையாக்கக் கூடியது. அது இருபுறமும் தீட்டிய, இரு-

புறமும் கருக்குள்ள பட்டயத்தைப்போல் இருப்பதால் அதற்கு இந்த வல்லமையுண்டு; போர்வீரன் கையினால் சுழற்றப்படும் இரு பட்டயம் எப்படிச் சரீரத்தை வெட்டிச் சின்னபின்னமாக்குமோ அப்படி அது தேவ கிருபையினால் அசைவுண்டு, ஆத்துமத்தை ஊடுருவிச் சென்று, அதில் மறைந்து கிடக்கும் பாவங்களை வெளியாக்கி, பழைய மனிதனை அதன் ஆசை இச்சைகளோடு சாகும்படி காயப்படுத்தும். அப்போது மனித உள்ளத்தில் புதிய மனுஷன் பிறந்து வளரும். இவ்வாறே தேவ கிருபை உன்னை தேவ பிள்ளையாக்கி மென்மேலும் தேவ சாயலடையச் செய்து வளர்க்கும். ஆதலால் ஆவியின் பட்டயமாகிய வசனம் உன் இருதயத்தில் முளைத்த களையை வெட்டும்போது, நீ சும்மாயிரு. உனக்கு அருமையான ஆசைகளை அவர் வசனத்தால் வெட்டினாலன்றி, உன் இருதயம் களை மண்டிக் கெட்டுப்போம். அவரே வந்து உனது இருதயத்தைச் சுத்திகரிக்கவேண்டும்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! உமது வேதம் குறையற்றதும் ஆத்துமத்தை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. உமது கற்பனை துய்யதும் கண்களை வெளிச்சம் ஆக்குகிறதுமாயிருக்கிறது. (சங். 19.) உமது திரு நாமத்திற்கு என்றென்றைக்கும் துதியும் மகிமையும் உண்டாவதாக. சுவாமி, ஆமென்.

லூக். 11, 29-54. அல்லது மீகா 7, 1-20. வாசிக்கவும்.

அறுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின வெள்ளி.

ம. 260, 1. 2.

நம்முடைய வார்த்தை அக்கினியைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்க இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே. 23, 29.

கர்த்தருடைய வசனம் அக்கினியைப்போலிருக்கிறது. நடு இராத்திரியில் ஒரு வீடு தீப்பற்றினால் இரவும் பட்டப்பகல் போலாகும். நெருப்பின் சோதி இருட்டான மூலை முடுக்கை எல்லாம் பிரகாசிப்பித்து, முந்தி இருளால் மறைந்திருந்ததை எல்லாம் கண்ணுக்குத் தெரியச் செய்கிறது. இவ்வண்ணம் தேவவசனம், மனிதரின் இருண்ட இருதயங்களை வெளிச்சமாக்குகிறது. இந்த அக்கினியின் சோதியினால் உன் இருதயத்தின் தன்மையை நீ அறிந்துகொள்ளலாம். இந்த வெளிச்சத்தில் உன் இருதயமாகிய ஆலயம் எவ்வளவு பழுதும் ஓட்டையும், குப்பை

யும் நிறைந்திருக்கிறதென்று காண்பாய். நீ மனம் திரும்பாவிட்டால், உனக்குக் காத்திருக்கும் நிர்ப்பந்த முடிவையும் இந்த வெளிச்சம் உனக்குக் காட்டும்.

கர்த்தருடைய வசனம் அக்கினியைப்போலிருக்கிறது. அக்கினிக்கு அழிக்கும் வல்லமையுண்டு. வருஷா வருஷம் அது எத்தனையோ கட்டடங்களைச் சாம்பல் மேடாக்கிவிடுகிறது. வேத வசனம் நம்முடைய இருதயங்களில் இவ்வித வேலைசெய்யும் அக்கினியாகவும் விளங்கும். அது பெருமையான சிந்தனைகளையும், பொல்லாத அசுத்த இச்சைகளையும், எல்லா மாறுபாடுகளையும், சாம்பலாம்படி பட்சித்துப்போடும். அது உன் மனச்சாட்சியில் மனஸ்தாபமென்ற தீயை மூட்டி, எல்லா வேஷத்தையும் உன்னை விட்டு அகற்றிவிடும்.

தேவ வசனம் நெருப்பைப்போல, அனலையும் கொடுக்கும். உலகம் எவ்வளவு குளிர்ந்துபோய்க் கிடக்கிறது. அதற்கு அனலான சிநேகமும் உண்மையான சந்தோஷமும் கிடையாது. இந்தக் குளிர்ந்த உலகத்திலே இருதயம் பனிக்கட்டிபோல் கடினப்பட்டு உறைந்து இருக்கிறது. ஆகிலும் கர்த்தருடைய வசனம் அதை உருக்கி அனலான சிநேகத்தை அதிலே மூட்டிவிடும்.

கர்த்தருடைய வசனம் மலைகளை நொறுக்கும் ஒரு சம்மட்டியைப்போலவும் இருக்கிறது. நம்முடைய இருதயம் உடைக்கக் கூடாத கெட்டியான மலைக்கு ஒப்பு. ஆனால் அதை உடைத்து நொறுக்க தேவ வசனத்துக்கு வல்லமை உண்டு. நொறுங்குண்ட இருதயந்தான் கர்த்தருக்குப் பிரியம். அதுதான் கர்த்தருடைய சகாயம் பெறும். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தைப் பராபரன் புறக்கணிக்கமாட்டார். அதை அவர் தமக்கு வாசஸ்தலமாகத் தெரிந்துகொண்டு, அதிலே தமது பரிபூரண ஆசீர்வாதங்களோடும் வரங்களோடும் ஆளுவார்.

ஜெபம். எங்கள் அன்புள்ள பிதாவே! எங்கள் இருதயங்களில் உமது திரு வசன வெளிச்சத்தால் எங்களுக்கு அனுதினமும் மோட்ச வழியைக் காண்பித்து வருகிறீர். நாங்கள் உமது வசனத்துக்குப் பயந்து, குணப்பட்டு, அதற்கு ஏற்ற கனிகளைத் தர, எங்களுக்குக் கிருபைசெய்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 12, 1-34. அல்லது நாகூம் 1, 1-14. வாசிக்கவும்.

அறுபதாம் ஞாயிறுக்குப் பிந்தின சனி.

பி. 260, 3. 4.

பத்தாங் கற்பனை என்ன? பிறத்தியானுடைய பெண்சாதியை யாகிலும் அவனுடைய வேலைக்காரன் வேலைக்காரியையாகிலும் அவனுடைய ஆடு மாடு கழுதையையென்கிலும் மற்றும் அவனுக்குண்டான எதையாகிலும் இச்சியாதிருப்பாயாக.

இதற்கர்த்தமென்ன? நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு பிறத்தியானுடைய மனைவியையாகிலும் பணிவிடைக்காரர்களையாகிலும் மிருகங்களையென்கிலும் பிரியப்பண்ணுமலும் பிடுங்கிக்கொள்ளாமலும் பேதலிக்கப்பண்ணுமலும் எல்லாம் அவனிடமாய் நிலைத்திருந்து செய்யவேண்டியவைகளைச் செய்யும்படியாய்ப் பிரயாசைப்பட்டு வரவேண்டும்.

ஏவாள் கெட்ட ஆசையால் மோசம்போனுள். ஆகான் தன் இச்சையை அடக்காமையால் அதனுல் மேற்கொள்ளப்பட்டான். பிசாசுக்குச் சின்ன விரலைக் கொடுத்தால் அவன் முழுக் கையையும் பிடிப்பான். ஆதலால் நாம் எதையாகிலும் இச்சிக்கலாகாது. பிறத்தியானுடைய வாழ்வைப் பொறுமையோடு பார்க்கலாகாது. அதைப் பார்த்துச் சந்தோஷப்படவேண்டும். அவனுக்கு நல்ல பெண்சாதியும் வேலைக்காரரும் ஆடுமாடும் இருந்தால் அதை இச்சிக்காமல் அது அவனிடத்தில் இருக்கும்படி பிரயாசைப்படவேண்டும். ஏனென்றால் அவனுக்கும் உனக்கும் ஒரே தகப்பனுண்டு. உன் பிறத்தியானையும் உன்னையும் ஆசீர்வதித்தவர் அவரே. ஆகையால் நீ பிறத்தியானுடைய சொத்தை இச்சித்தால் சர்வ வல்லமையுள்ள தேவன் உன்பேரில் கோபங்கொள்ளுவார். அவர் உன்னை மென்மேலும் ஆசீர்வதிக்கவேண்டுமானுல் அவர் உனக்குக் கொடுத்தது போதும் என்று சொல்லு. அவர் உன் பிரயாசங்களை வாய்க்கப்பண்ண ஆசையாயிருக்கிறார். நீ அவரைப்போல் உன் பிறத்தியானைச் சிநேகித்தால் அவர் எல்லா விஷயங்களிலும் உனக்குத் துணை செய்வார். எல்லாக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்து மார்க்கத்தின் உண்மையை அறிந்து அதன்படி நடந்தால் உலகத்தில் சிறைச்சாலையே யிருக்காது. எல்லாரும் சகோதர ஐக்கியமாயும் சமாதானமாயும் இருக்கவேண்டுமென்பது பரம தகப்பனுடைய சித்தமாம்.

ஜெபம். சாதுவ தயவுள்ள பிதாவே! நாங்கள் உமது கற்பனைகளைக்கொண்டு தேவரீர் எங்கள் பிறத்தியானுக்கு அருளின வாழ்வைப் பொறுமையின்றிப்பார்த்து அதை அபகரிக்கப்பண்ணுமல் அவனேடு உம்மை ஆவியிலும் உண்மையிலும் எங்கள் தகப்பனுகப் பணிந்துகொள்ள எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 2, 35-59. அல்லது ஆபக். 1, 1-2, 4. வாசிக்கவும்.

ஐம்பதாம் நாள் என்கிற ஞாயிறு.

பி. 99, 5. 6.

அவர் பன்னிருவரைச் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனே சொன்னதாவது: இதோ, எருசலேமுக்குப் போய் ஏறுகிறோம்; அங்கே மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டது எல்லாம் நிறைவேறும், ஏனெனில் புறசாதிகளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிகாசமும் நிந்தையுமடைந்து, துப்பப்படுவார். அவரை வாரினல் அடித்துக் கொன்றுபோடுவார்கள், மூன்றும் நாளிலோ திரும்ப எழுந்திருப்பார் என்றார். அவர்கள் இவைகளில் ஒன்றையும் உணர்ந்ததில்லை. இந்த வார்த்தை அவர்களுக்கு மறைபொருளாயிருந்தது; சொல்லப்பட்டவைகளை அறியாதேபோனார்கள். லூக். 18, 31-34.

கர்த்தர் வெகு தெளிவாய்ப் பேசியும் சீஷர் அவர் சொன்னதை உணர்ந்துகொள்ளவில்லை. அவர்கள் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களைப் படித்து, மூன்று வருஷம் இயேசுவோடு இருந்து, அவருடைய வசனத்தைக் கேட்டவர்களாயிருந்தும் அவர் உலகத்தில் வந்த நோக்கம் அவர்களுக்கு விளங்கினதேயில்லை. அவர் பாடுபடவேண்டும் என்றும், பாடுகளினுல் மாத்திரம் அவர் உலகத்தை மீட்கக் கூடும் என்றும் அவர்களுக்குப் புலப்படவில்லை. அவர்கள் பரிசுத்தாவியினுல் பெந்தெகொஸ்தே நாளில் நிரப்பப்பட்டபோது மாத்திரம் கிறிஸ்துவின் பாடுகளுடைய இரகசியத்தை யுணர்ந்தார்கள்.

கிறிஸ்துவின் சீஷரைப்போல் அநேக கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். கிறிஸ்தவ விசுவாசத்தையும் தேவ வசனத்தையும் படித்திருக்கிற அவர்களுக்கும் அவருடைய பாடுகளும் சிலுவையும் இன்னும் மறைபொருளாயிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் முக்கியமான பாடத்தை இன்னும் படிக்கவேண்டும். நாம் எவ்வளவு [illegible]ளாய் [illegible]க்கப்பட்டோம் என்பதும், நமது இரட்சகரின் சிநேகம் எவ்வளவு பெரியதென்பதும், நமது பாவம் எவ்வளவு பருமை என்பதுமே அந்தப் பாடம். இதை நாம் தியானித்துச் சரியாய் உணர்ந்துகொள்வதற்கு, வரப்போகிற தவசுகாலம் தகுந்த காலமாம். நாம் எருசலேமுக்கு ஏறிப்போகிற இரட்சகரின் அடிச்சுவடுகளை ஆவியில் பின்தொடர்ந்துபோய் அவர் பாடுபட்ட அந்தந்த இடங்களில் நின்று, அவர் பாடுகளுக்குக் காரணம் இன்னதென்று தியானிக்கவேண்டும். அப்போது நம்முடைய கண்கள் திறவுண்டு, இந்தப் பாடுகளுக்குக் காரணம் நமது பாவமே என்று உணர்வோம். இவ்வித தியானம் நமது ஆத்தும இரட்சிப்புக்கு உதவியாய்ப் பலிக்கும்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! நாங்கள் உம்மோடு எருசலேமுக்குப்போய் உமது பாடுகளையும் மரணத்தையும் தியானித்து,

எங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, தேவரீரைப்போல் எங்கள் சிலுவையைச் சுமந்து, உம்மைப் பின்செல்ல, எங்களுக்குமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 13, 1-21. அல்லது சங். 40. வாசிக்கவும்.

ஐம்பதாம் ஞாயிறுக்குப் பிந்தின திங்கள்.

பி. 99, 7. 8.

அப்போது பிரதான ஆசாரியர்களும் பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தைக்கூட்டி, என்ன செய்வோம், இந்த மனுஷன் அநேகம் அடையாளங்களைச் செய்கிறான், நாம் இவனை இப்படி விட்டு வைத்தால், எல்லாரும் அவன்பேரில் விசுவாசிப்பார்கள்; அப்போது ரோமர் வந்து, நம்முடைய இடத்தையும் ஜாதியையும் எடுத்துக்கொள்வார்கள் என்றார்கள். ஆனால் அவர்களில் ஒருவனாகிய காய்பா அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாயிருந்து அவர்களுடனே: நீங்கள் ஒன்றும் அறியீர்கள்; சாதி அனைத்துங் கெட்டுப்போகாதபடி ஒரே மனுஷன் சனத்துக்காக மரிப்பது நமக்கு நலம் என்கிற சிந்தனையும் உங்களுக்கு இல்லை என்றான். யோவா. 11, 47-50.

காய்பாவும் ஆலோசனைச் சங்கமும், கிறிஸ்து செய்த அதிசயங்களை மறுக்கக் கூடாதிருந்தும் அவரை விசுவாசிக்கவும் அவர்களுக்கு மனதில்லை. ஆகையினால் அவர்கள் அவரைப் பகைத்து, சனமெல்லாம் அவரை விசுவாசிக்குமோ என்று அஞ்சினார்கள். ஜனம் அவரை விசுவாசித்தால் அவர்கள் தங்கள் மேன்மையையும் வல்லமையையும் இழந்துவிட நேரிடும். இதுதான் அவர்கள் கிறிஸ்துவைக் கொலைசெய்ய அவர்களை ஏவின காரணம். இந்த எண்ணத்தை வெளியிடாமல், அவர்கள் சனத்துக்காகக் கவலைப்படுகிறதாகக் காட்டினார்கள். ருமம், சனமும் கிறிஸ்துவைப் பின்சென்று, அவரை இராசாவாக்கினால், நமக்கு ரோமரோடு யுத்தமுண்டாகும். அப்போது, தேசம் எல்லாம் பாழாகும். சாதி எல்லாம் சிதறிப்போம். ஆகையால் சனம் கெட்டுப்போகாதபடி இந்த நாசரேத்தானாகிய இயேசு சாகவேண்டும் என்று சொன்னார்கள்.

கிறிஸ்துவின்பேரில் அன்பில்லாத உலகத்தார் எப்போதும் இப்படிப் பேசுவார்கள். பூமியில் கர்த்தர் இன்றைக்கும் தம்முடைய வசனத்தைக்கொண்டு அதிசயங்களைச் செய்கிறார். அவர் தமது வசனத்தினால், செத்த இருதயங்களை உயிர்ப்பித்து மனிதரைப் பாவத்தின் அடிமைத்தனத்துக்கு நீங்கலாக்கித் தம்மண்டைக்குத் திருப்புகிறார். இது லோகத்தாருக்குப் பிரியமில்லை. ஆகையால், உடனே இதை நிறுத்திவிட வேண்டும், எல்லாம்

அவரைச் சேர்ந்தால் காரியம் என்னமாய் முடியும் என்பார்கள். கிறிஸ்துவை உலகத்தார் இப்போது கொல்ல முடியாது. ஆகையால் இருதயத்தில் அப்படிப்பட்ட அதிசயங்களுக்கு ஏதுவான கிறிஸ்துவின் வசனத்தை ஒடுக்க முயலுகிறார்கள். ஆத்துமாவே! கர்த்தர் செய்த எல்லா அதிசயங்களுக்காகவும் அவரைத் தோத்திரி. நாம் நித்தியமாய்ப் பிழைக்க அவர் தமது மரணத்தினாலே, நமக்குச் சீவனைச் சம்பாதித்த பெரிய அதிசயத்துக்காக அவரைத் தோத்திரி.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! உமது அளவற்ற அன்பினால் உம்மை எங்களுக்காகப் பலியிட்டீர். தேவரீர் எங்கள் நிமித்தம் மரித்ததுபோல், நாங்கள் உமது நிமித்தம் உலகத்துக்கு மரித்து, நவமான சீவனில் நடந்துகொள்ள, எங்களை ஆவி எழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

லூக். 13, 22-35. அல்லது செப். 3, 1-20. வாசிக்கவும்.

ஐம்பதாம் ஞாயிறுக்குப் பிந்தின செவ்வாய்.

பி. 99, 9. 10.

அவர் பெத்தானியாவில் குஷ்டரோக சீமோன் வீட்டிலே பந்தியிருக்கையில், விலையேறப்பெற்ற உத்தமமான நளதைலத்தின் பரணியையுடைய ஒரு ஸ்திரீ வந்து, பரணியை உடைத்து, அவர் சிரசின்மேல் வார்த்தாள். அதனால் சிலர் தங்களுக்குள்ளே தாங்கலடைந்து: இந்தத் தைல அழிம்பு எதற்கு உண்டாயிற்று. இதை முந்நூறு பணத்துக்கு அதிகமாய் விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லி, அ[illegible]ரில் சினந்தார்கள். மாற். 14, 3-5.

கர்த்த[illegible] விசை எருசலேமில் பிரவேசிக்குமுன் பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவரது அருமையான சிநேகிதனாகிய லாசருவும் அவன் சகோதரிகள் மார்த்தாள், மரியாளும் குடியிருந்தார்கள். குஷ்டரோக சீமோன் வீட்டில் எல்லாரும் கூடிவந்தார்கள். இவனைச் சுத்தமாக்கின கர்த்தருக்கு மகிமையாக இவன் குஷ்டரோக சீமோன் என்னப்பட்டான். பெத்தானியா எருசலேமுக்குச் சமீபம். அங்கே இருந்த இயேசுவின் சிநேகிதர், ஆலோசனைச் சங்கத்தார் அவரைப் பற்றிச் செய்திருந்த தீர்மானத்தை அறிந்து அவருக்கு என்ன சம்பவிக்குமோவென்று பயந்திருந்தார்கள்.

மரியாளோ, தன் போதகரைப் பார்ப்பதில் இதுதான் கடைசி சமயமாயிருக்குமோ என்றெண்ணி அவருக்கு இன்னொரு தரம் தன் நன்றியறிந்த சிநேகத்தைக் காட்ட ஆசையாயிருந்

தாள். அப்படி அவள் அவருக்கு நன்றிசெலுத்த அநேகங் காரணங்கள் இருந்தன. அவர் அவளுடைய சகோதரனை உயிரோடு எழுப்பியிருந்தார். அவள் அவரிடத்தில் தனக்குத் தேவையான அந்த ஒன்றைக் கண்டுபிடித்தாள். இந்த நன்மைகளையெல்லாம் விடக் கர்த்தரே அவள் இருதயத்துக்கு அருமையிலும் அருமையானவராயிருந்தார். மனத்தாழ்மையோடும், உள் அன்போடும், போதகரை நேசித்த அவள், விலையேறப்பெற்ற ஒரு பரணி நற்றைலத்தைத் தன் அன்புக்கு ஓர் அற்ப அறிகுறியாக அவருக்குப் படைத்தாள்.

நீயும் கர்த்தரை இவ்விதமாக உட்கருத்தாய் நேசிக்கிறாயா? நீயும் உன் இரட்சகருக்காகவும் அவருடைய இராச்சியத்துக்காகவும், விலையுயர்ந்த ஒரு காணிக்கையைச் செலுத்தி உன் அன்பைக் காட்டுவாயா? மரியாள் செய்ததைக் குறித்துச் சீஷர் கடினமாய்த் தீர்ப்பிட்டதுபோல, உன்னைப்பற்றியும் மனிதர் அநியாயமாயும் பரிகாசமாயும் பேசுவார்கள். ஆனால் நீ வருத்தப்படாதே. கர்த்தர் மரணம் மட்டும் உன்னை நேசித்தார். ஆகலால், அவமானத்தையும் தூஷணத்தையும் பொறுத்து அவருக்கு உன் முழு இருதயத்தையும் தா.

ஜெபம். இரக்கமுள்ள இரட்சகரே! உம்மையன்றி எங்களுக்கு வேறே பொக்கிஷம் இந்த உலகத்தில் இல்லை. நாங்கள் எங்களுக்கு அருமையானதையும் உமக்குக் காணிக்கையாகப் படைக்க எங்களுக்கு உற்சாகத்தையும், நன்றியறிந்த மனதையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 14, 1-24. அல்லது ஆகாய். 2, 1-10. வாசிக்கவும்.

ஐம்பதாம் ஞாயிறுக்குப் பிந்தின சாம்பல் புதன்.

பி. 200, 1.

இயேசு சொன்னதாவது: அவளை விடுங்கள்; ஏன் அவளை வருத்தப்படுத்துகிறீர்கள்; என்னில் நற்கிரியையைச் செய்தாள். ஏனெனில் உங்களிடத்தில் எப்போதும் தரித்திரர் இருக்கிறார்கள், உங்களுக்கு மனதுண்டானால், நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்யலாம். நானோ உங்களிடத்தில் எப்போதும் இரேன். இவள் தனக்குள்ளபடி செய்தாள்; பிரேத அலங்காரத்துக்காக என் சரீரத்தைத் தைலம் பூச முந்திக்கொண்டாள். மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்தச் சுவிசேஷம் லோகமெங்கும் எங்கே பிரசங்கிக்கப்படுமோ, அங்கே அவள் செய்ததும் அவளை நினைப்பதற்காகச் சொல்லப்படும் என்றார். மாற். 14, 6-9.

சீஷர் சொன்ன வார்த்தை மரியாளுக்குண்டாக்கின மனநோவைப் பார்க்கிலும் அதிகமான வருத்தத்தைக் கர்த்தருக்குண்டாக்கிற்று. மரியாள் தங்கள் போதகருக்குச் செய்த கனத்தைச் சீஷர் சகிக்க மனமற்றிருந்தார்கள். ஆனால் அவர் தமது வருத்தத்தை நினைக்காமல் சீஷருடைய முறுமுறுப்பினால் துக்கம் அடைந்த மரியாளுக்காகப் பேசி, அவளை விடுங்கள், அவள் என்னிடத்தில் நற்கிரியையைச் செய்தாள். அவள் தன்னால் கூடியதைச் செய்தாள் என்று பரிந்து கூறினார். இயேசுவின் வாயால் இப்படிப்பட்ட தீர்ப்பைப் பெற்ற மரியாள் பாக்கியவதி. அவள் கிறிஸ்துவின் மேல் உள்ள அன்பினால் தான் அறிந்ததற்கு அதிகமாய்ச் செய்தாள். அவள் அறியாமலே அவருடைய சரீரத்தைப் பிரேத அலங்காரம் செய்ய முந்திக்கொண்டாள்.

தேவனுடைய பிள்ளைகள் செய்யுங் கிரியைகளில் அவர்களுக்கே தெரியாத இரகசியங்கள் உண்டு. நாம் நம்மால் கூடியதைத் தேவ கிருபையை முன்னிட்டுச் செய்யும்போது நாம் நினைத்ததற்கு அதிகமான பலனை அளிப்பார்.

அவள் தன்னால் கூடியதைச் செய்தாள் என்று கர்த்தர் நம்மை எச்சரித்துச் சொல்லுகிறார். உன்னால் கூடியதை நீ செய்தாயா? உலகத்துக்கு முன் பிரகாசிக்கும் பெரிய கிரியைகளைச் செய்வதல்ல, உன்னால் கூடியதையே செய்வது முக்கியம். இதற்கு அதிகமாய்க் கர்த்தர் ஒன்றையும் கேட்பதில்லை. தமக்குச் செய்த எல்லாவற்றையும் அவர் ஆசீர்வதித்து, நித்திய ஜீவனுக்குக் கனிகொடுக்கச் செய்வார். தம்மை உலகத்துக்கு முன் அறிக்கையிடுகிறவர்களைத் தமது பரம பிதாவுக்கு முன் அறிக்கையிடுவார். அவர் தமக்குச் செய்த உபகாரத்தை ஒருபோதும் மறக்கமாட்டார். என் நாமத்தினிமித்தம் வீட்டையாகிலும், சகோதரரையாகிலும், சகோதரிகளையாகிலும், தகப்பனையாகிலும், தாயையாகிலும், பெண்சாதியையாகிலும், பிள்ளைகளையாகிலும், நிலங்களையாகிலும் விட்டவன் எவனும் நூறு அத்தனையாக அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்வான் என்கிறார்.

ஜெபம். உம்மை நம்பி இருக்கிற சகலரையும் காப்பாற்றும் சர்வ வல்லமையுள்ள பராபரனே! உமது கிருபையின்றி நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் உமது கிருபையால், எங்களால் ஆனமட்டும் உமது மகிமைக்கென்று பிரயாசைப்பட்டு நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள, எங்களுக்கு உமது ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 14, 25-35. அல்லது சகரி. 1, 1-6. வாசிக்கவும்.

ஐம்பதாம் ஞாயிறுக்குப் பிந்தின வியாழன்.

ஷ. 222, 1. 2.

பன்னிருவர் தொகைக்குள்ளான ஸ்காரியோத்து என்று மறுபேர் கொண்ட யூதாவுக்குள் சாத்தான் புகுந்தது, அவன் போய்: நான் அவரை இன்னின்னபடி உங்களுக்குக் காட்டிக்கொடுப்பேன் என்று பிரதான ஆசாரியர்களோடேயும் சேர்வைக்காரரோடேயும் பேசிக்கொண்டான். அவர்கள் சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணம் கொடுக்கத் தீர்மானித்தார்கள். அவன் வார்த்தை கொடுத்து, அவரைச் சந்தடியில்லாமல் அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கச் சமயந்தேடினான். லூக். 22, 3-6.

யூதா மிகவும் அற்பக் கூலியாகிய முப்பது வெள்ளிக்காசுக்காகக் கர்த்தரைக் காட்டிக்கொடுத்து உலகம் பார்த்திராத இந்தக் கொடிய பாதகத்தைச் செய்ததெப்படி; அவன் அப்போஸ்தல கூட்டத்தைச் சேர்ந்திருந்து, இயேசுவின் நாமத்தில் பிரசங்கம் பண்ணி அற்புதஞ் செய்து, மூன்று வருஷமாக இரட்சகரின் அன்பை அநுபவித்திருந்தான். சாத்தான் யூதாவுக்குள் புகுந்தது என்று லூக்கா எழுதுகிறான். இதுவே யூதாவின் துரோகத்துக்குக் காரணம் சொல்லியிருக்கிறதேயன்றி அதற்குச் சாக்குப்போக்குச் சொல்லியிருக்கிறதில்லை. யூதா பணப் பிசாசைச் சிநேகித்து அதற்கடிமையாகி அதின் ஆளுகையில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள மனமற்று இருந்தபடியினாலே, பிசாசு அவனை முற்றிலும் ஆண்டுகொண்டான். அவன் ஆண்டவனண்டை வரும்போதே அவன் இருதயம் பொருளாசையால் நிறைந்திருந்தது. அவன் இந்தப் பாவத்தை விட்டு முற்றும் சிந்தை மாறவில்லை. பொருளாசையோ, எல்லாப் பொல்லாப்புக்கும் வேர். பொருளாசையினாலே அவன் முதல் முதல் தன் வசத்திலிருந்த பொதுப் பணத்தைத் திருடத் துணிந்தான். அவன் இயேசுவின்மேலும் அவர் இராச்சியத்தின்மேலும் வைத்திருந்த தப்பான நம்பிக்கை நிறைவேறாமல் அவத்தமாய்ப் போனபோது, சாத்தான் அவனை முற்றிலும் ஆட்கொள்ளச் சமயம் வந்தது.

எல்லாப் பாவங்களையும் விட்டு மனந்திரும்பியும், ஒரே பாவத்தை விடாமல் அதற்கு இருதயத்தில் இடந்தரும் கிறிஸ்தவனுக்கு யூதாவின் துரோகம் பயங்கரமான எச்சரிப்பு. பொருளாசை மாத்திரமல்ல, வீண் பெருமை, விபசாரம் முதலிய பாவங்களும் உன்னை இப்படி மோசப்படுத்தும். உன் இருதயத்தில் ஒரே பாவத்தைமாத்திரம் விட்டுவைப்பாயானால் சாத்தான் உன்னை நித்திய மோசத்துக்குட்படுத்துவான். கர்த்தருடைய பெலத்தினால் பாவத்தை முழுதும் விட்டுவிடுகிறவனே, எந்த மோசத்துக்கும் தப்பிக்கொள்வான்.

ஜெபம். கர்த்தராகிய இயேசுவே! நாங்கள் எல்லாப் பாவத்தையும் விட்டுவிட்டு, உறுதியான விசுவாசத்தினால் உம்மைப் பற்றிக்கொண்டு, பூரண அன்பினால் எங்களை உமக்கு ஒப்புக்கொடுத்து, எல்லா மோசங்களுக்கும் நித்திய மரணத்துக்கும் தப்பிக்கொள்ள எங்களுக்குக் கொத்தாசை புரியும், சுவாமி, ஆமேன்.

லூக். 15, 1-32. அல்லது சகரி. 7, 8-8, 23. வாசிக்கவும்.

ஐம்பதாம் ஞாயிறுக்குப் பிந்தின வெள்ளி.

ஷ. 200, 2.

அவர்கள் போய், அவர் தங்களுடனே சொன்னபிரகாரமாகக் கண்டுபிடித்து, பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள். வேளை வந்தபோது அவரும் அவருடனே கூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியமர்ந்தார்கள். அப்போது அவர் இவர்களுடனே: நான் பாடுபடுகிறதற்கு முன்னே இந்தப் பஸ்காவை உங்களுடனே புசிக்க மிகவும் வாஞ்சையாயிருந்தேன் என்றார். லூக். 22, 13-15.

கர்த்தர் இந்தப் பஸ்கா விருந்தின்பேரில் மிகவும் வாஞ்சையாயிருந்தார். இது அவருடைய கடைசிப் பஸ்கா. இதுவரைக்கும் ஆசரிக்கப்பட்ட பஸ்காவிலெல்லாம் இதுவே கடைசியான மெய்ப் பஸ்கா. சங்கார தூதன் எகிப்திலுள்ள தலைச்சன்களைச் சங்கரித்தபோது இஸ்ரவேலர் சங்காரத்துக்குத் தப்பி எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையானதை நினைவுகூர இஸ்ரவேலர் இப்பண்டிகையை ஆசரித்தார்கள்.

அந்த மீட்பு இனிச் சம்பவிக்கப்போகிற ஒரு பெரிய மகிமையான மீட்புக்கு முன்னடையாளமும் அச்சாரமுமாம். அது முழு உலகமும் பாவம் மரணம் என்னும் அடிமைத்தனத்தினின்று அடையப்போகிற மீட்புத்தான். எண்ணிறந்த விசை இஸ்ரவேலர் பஸ்காவைக் கொண்டாடினார்கள். இப்பொழுதோ அந்தப் பஸ்காவில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி முன்குறித்துக் காட்டிய தேவாட்டுக்குட்டியானவர் வந்துவிட்டார். இனி அந்தப் பஸ்காவைக் கொண்டாட அவசியமில்லை.

பஸ்காவானது இராப்போசனத்துக்கு முன்னடையாளம். கர்த்தர் சீஷரோடு பஸ்காவைப் புசிக்க எப்படி வாஞ்சையாயிருந்தாரோ அப்படி நம்மோடு இராப்போசனம் பண்ணவும் ஆவலாயிருக்கிறார். இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என்னுடைய சத்தங்கேட்டுக் கதவைத் திறந்தால் அவனண்டை நாம் உட்பிரவேசித்து, அவனோடே இராப்போசனம் பண்ணுவோம் என்கிறார். ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்று யோவான் வேதத்தின் கடைசி ஆகமத்தில் சொல்லுகிறான். எல்லாம் ஆயத்த

மாயிற்று கலியாணத்திற்கு வாருங்கள் என்று ஆட்டுக்குட்டியானவர் நம்மையும் அழைக்கிறார். அவிரோதி இராப்போசனம் பண்ண உனக்கு ஆசையுண்டா அல்லது இவ்வுலகப் பொருளால் திருப்தியடையப் பார்க்கிறாயா? மோசம் போகாதே. உன் ஆத்துமத்துக்குப் பூரண திருப்தியைக் கொடுக்கக்கூடியது இரட்சகருடைய இரத்தம் ஒன்றே.

ஜெபம். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி, வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பலத்தையும் கனத்தையும் மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளப் பாத்திரமாயிருக்கிறது. ஆசனத்தின்மேல் உட்கார்ந்தவருக்கும் ஆட்டுக்குட்டிக்கும், ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உண்டாவதாக, வாமி, ஆமேன். (அபி. 5, 12. 13.)

லூக். 16, 1-13. அல்லது சகரி. 9, 9.17 வாசிக்கவும்.

ஐம்பதாம் ஞாயிறக்குப் பிந்தின சனி.

பி. 200, 3. 4.

இந்தப் பத்துக் கற்பனைகளுக்காகவும் கர்த்தர் திருவுளம்பற்றின வார்த்தைகள் என்ன? உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிவுள்ள தேவனாயிருந்து, நம்மைப் பகைக்கிறவர்களுக்குள்ளே பிதாக்கள் செய்த அக்கிரமத்தை பிள்ளைகள் இடத்தில் மூன்று நாலு தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறோம். ஆனால் நம்மைச் சிநேகித்துக் கொண்டு, நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரந் தலைமுறைமட்டும் தயவை செய்துகொண்டு வருகிறோம் என்று திருவுளம்பற்றினார்.

இதற்கர்த்தமென்ன? பராபரன் தாம் அருளிச்செய்த இந்தப் பத்துக் கற்பனைகளையும் மீறி நடக்கிற எல்லாரையும் தண்டிப்போமென்று பயமுறுத்துகிறார்; ஆனபடியினாலே நாம் அவருடைய கோபத்திற்குப் பயந்து, இந்தக் கற்பனைகளுக்கு விரோதமாக நடவாமலிருக்கக் கடவோம். ஆனால் இந்தக் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற எல்லாருக்கும் அவர் கிருபையும் சகல நன்மையுஞ் செய்வோமென்று வாக்குத்தத்தம் பண்ணுகிறார்; ஆகையால் நாம் அவரைச் சிநேகித்துக்கொண்டு, அவர்பேரில் நம்பிக்கையாயிருந்து, சந்தோஷமாக அவருடைய கற்பனைகளின்படியே நடக்கக் கடவோம்.

தேவகோபம் பயங்கரமானது. கர்த்தர் பெற்றோருடைய பாவத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் விசாரிப்பார். இதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். பெற்றோர் தங்கள் சொத்தை வீணாய்ச் செலவழித்தால் பிள்ளைகளும் வறுமையை அடையவேண்டும். தகப்பன் துன்மார்க்கமாய் நடந்தால் அவன் பிள்ளைகளும் பாடுபடுவார்கள். இதனால் தேவன் பிள்ளைகளையல்ல, பெற்றோரைத் தண்டிக்கப் பார்க்கிறார். என் பாவத்தினால் நான் மாத்திரம் அல்ல, என் பிள்ளைகளும்

தீர்ப்பாக்கப்படுகிறார்கள் என்று அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் மனவேதனை அடைவார்கள். ஆயினும் பிள்ளைகள் இந்தத் தண்டனைக்குத் தப்பலாம். எப்படியென்றால், அவர்கள் மனஸ்தாபப்பட்டு, தேவனுக்குக் கீழ்ப்படிந்து வேறு வழியாய்ச் செல்வார்களானால் அவர்களுக்கு அந்தப்பாடு, தண்டனையாயிராமல் அவர்களைப் பிதாவண்டை நடத்தும் சிட்சையாகும்.

தேவ கோபத்தைப் பார்க்க அவருடைய இரக்கம் பெரியது. அவருடைய கோபம் மூன்றும், நாலாம், தலைமுறை மட்டும் போகிறது. அவருடைய இரக்கமோ ஆயிரம் தலைமுறை மட்டும் செல்லுகிறது. பராபரனை உறுதியாய் நம்பின ஆபிரகாமின் வித்து, தலைமுறை தலைமுறையாக ஆசீர்வதிக்கப்படுகிறது. இதில் அவர்களாகிய நாம் அதற்குச் சாட்சி. அவனைப்போல் தேவனை நம்புவோர் எல்லாரும், ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர் வாசம்பண்ணும் வீடும் குடும்பமும் பாக்கியம் நிறைந்திருக்கும். அங்கே பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் தேவனை நன்னடக்கையால் மகிமைப்படுத்துவார்கள்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! உமது பத்துக் கற்பனைகளையும் எங்களுக்கருளிச்செய்து, அவைகளினால் சன்மார்க்கத்தையும் மோட்ச வழியையும் காண்பித்து, உமக்குக் கீழ்ப்படியாதவர்களைத் தண்டித்து, உமக்குக் கீழ்ப்படிந்தவர்களை ஆசீர்வதித்து வருகிறீர். நாங்கள் எல்லாவற்றையும் பார்க்க உம்மைச் சிநேகித்து உமக்குப்பயந்து, உம்மை நம்பிப் பிழைக்க எங்களை எவி எழுப்பியருளும், சுவாமி, ஆமேன்.

லூக். 16, 14-31. அல்லது சகரி. 11, 1-17. வாசிக்கவும்.

ஒருசந்தியின் முதலாம் ஞாயிறு.

பி. 200, 5. 6.

அவர்களுடைய கால்களைக் கழுவின பிற்பாடு, அவர் தம்முடைய வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு திரும்ப உட்கார்ந்து, அவர்களுக்குச் சொன்னதாவது: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா. நீங்கள் என்னைப் போதகர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கிறீர்கள், நிதானமுமாய்ச் சொல்லுகிறீர்கள்; ஏனெனில் நான் அவர்தான். இப்போதும் ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருக்கொருவர் கால்களைக் கழுவக்கடவீர்கள். ஏனெனில் நான் உங்களுக்குச் செய்ததுபோல, நீங்களுஞ் செய்வதற்கு, உங்களுக்கு மாதிரியைக் கொடுத்தேன். யோ. 13, 12-15.

கர்த்தர், மனத்தாழ்மையாய் ஊழியஞ் செய்வதற்கான ஒரு திருஷ்டாந்தத்தைத் தமது சீஷருக்கு முன் வைத்தார். அவர் அவர்களுடைய கால்களைக் கழுவினார். தெருவிலிருந்து

வீட்டுக்கு வந்தவர்களுடைய அழுக்குப் படிந்த பாதங்களை ஒரு வேலைக்காரன் கழுவுவது அந்த நாட்டு வழக்கம். ஆனால் இயேசுவின் பாதங்களைக் கழுவிவிட அப்போது வேலைக்காரன் ஒருவனுமில்லை. சீஷரோ இந்த வேலையைத் தங்களுக்கு இழிவாக நினைத்தார்கள். ஆதலால் கர்த்தர் தாமே அதைச் செய்து அவர்களை நோக்கி, ஒரு மாதிரியை உங்களுக்குக் கொடுத்தேன் என்கிறார்.

அவர் செய்ததற்கு இன்னொரு அர்த்தம் உண்டு. அவர் தமது வசனத்தின் பிரசங்கத்தினாலும், பாவ சங்கீர்த்தனத்தினாலும் நம்மைப் பாவங்களறக் கழுவிச் சுத்திகரிக்கிறார். பாவமாகிய தூசியும் அழுக்கும் நம்மில் ஒட்டிக்கொள்வதற்கிடமான இவ்வுலகில் அவர் நமக்குச் சுத்த சலத்தைக் கொண்டுவருகிறார். தன் கால்களைக் கழுவவேண்டாம் என்று பேதுரு கர்த்தரைத் தடுக்கும்போது அவர் தாம் செய்கிறதற்கு வேறே அர்த்தமுண்டு என்கிறார். அவரால் சுத்தமானவர்கள் பரம வீட்டில் சேரப் பாத்தியமுடையவர்கள். அவர் உன்னைக் கழுவி ஏற்றுக்கொண்டபின் பிதாவின் வீட்டிலிருந்து ஒருவனும் உன்னைத் துரத்த முடியாது.

அவரால் சுத்தமானவர்களோ அவர் கொடுத்த மாதிரியைப் பின்பற்றக் கடமைப்பட்டவர்கள். உனக்கடுத்தவனுக்கு உன் ஊழியமும் உதாசையும் எத்தனைமுறை தேவையோ, அத்தனைமுறை அவனுக்கு எல்லாத் தாழ்மையோடும் அன்போடும் துணை செய். அது அரிது என்றால் நானே முன் போறேன், கூட வாறேன் என்று இரட்சகர் சொல்லுகிறார். அவருடைய அன்பையும் இரக்கத்தையும் பார்க்கிற நாம் நமது சகோதரருக்கு இரங்கவேண்டாமா? வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவராகிய சர்வ வல்லவர் பாவிகளாகிய நமக்கு ஊழியம் செய்து, இப்படிப்பட்ட ஊழியத்தினால் நம்மைப் பாவ அழுக்கு அறக் கழுவி நமக்குத் தமது குணத்தையும் தரத் தயாராயிருக்கிறார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! எங்கள் அசுத்தங்களைக் கண்டு எங்களைத் தள்ளிவிடாமல் எங்களை எல்லா நிர்ப்பந்தத்தினின்றும் இரட்சிக்க இந்த உலகத்தில் அவதரித்தீர். நாங்கள் நன்றியறிந்தவர்களாய் உமது முன் மாதிரியைப் பின்தொடர எங்களுக்குத் துணை செய்தருளும், சுவாமி, ஆமேன்.

லூக். 17, 1-19. அல்லது சங். 91. வாசிக்கவும்.

திருச்சந்தியின் முதலாம் வாரம், திங்கள்.

ஞ. 200, 7. 8.

அவர்கள் பந்தியிருந்து புசிக்கையில் இயேசு: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்களில் என்னுடனே புசிக்கிற ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்றார். அப்போது அவர்கள் துக்கப்பட்டு, ஒருவன் ஒருவனாய் அவருடனே: நானோ என்றும், மற்றொருவன்: நானோ என்றுஞ் சொல்லத்தலைப்பட்டார்கள். அவரோ பிரத்தியுத்தாரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: என்னுடனே கூடத் தாலத்தில் கை தோய்க்கிறவனே பன்னிருவரில் ஒருவன்தானே. மெய்தான், மனுஷனுடைய குமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார், ஆனால் எவனால் மனுஷனுடைய குமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார். மாற். 14, 18-21.

உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று இயேசுநாதர் சீஷரை நோக்கிச் சொன்னார். ஒரு மனுஷன் இயேசுவோடு பந்தியில் உட்கார்ந்து அவரோடு இராப்போசனம் புசித்து, அப்போஸ்தல ஊழியத்தைச் செய்தவனாயிருந்தும், அவன் பொல்லாத மாயக்காரனும் துரோகியுமாயிருக்கக்கூடுமென்று யூதா நமக்குக் காட்டுகிறான். பன்னிரு சீஷரில் ஒவ்வொருவனும் திகிலும் துக்கமும் அடைந்து, நானோ, நானோ என்று கேட்கிறான். சீஷனும் அப்போஸ்தலனுமாகிய ஒருவன் இயேசுவைக் காட்டிக்கொடுக்கக் கூடியதானால் ஒவ்வொருவனும் அப்பேர்ப்பட்ட துரோகியாவது சாத்தியமே. இப்படிப்பட்ட பாவத்தை நான் செய்யமாட்டேன் என்று ஒருவனும் சொல்லவேண்டாம்.

கிறிஸ்தவர்கள் செய்யும் பாவங்களைப்பற்றி நாம் கேள்விப்படுகையில் நாமும் உண்மையோடு "நானோ" என்று கேட்போமாக. இப்படிப்பட்டதொன்றையும் நான் செய்யமாட்டேன் என்று நினைக்காதே. ஒவ்வொரு மனிதன் இருதயத்திலும் ஒவ்வொரு பாவத்தின் விதை புதைந்திருக்கிறது. நீ மற்றவர்களுடைய பாவத்தைக் குறித்துக் கேள்விப்படும்போது உன்னிலும் இந்தப் பாவத்துக்கு ஏதுவான இச்சை உண்டோவென்று பரிசோதனை பண்ணு. நீ, மிதக்கு கெண்டை பிடிப்பவன்போல் செய்யாமல் உள்ளத்தின் ஆழத்தைப் பரிசோதனை செய்து, கர்த்தருடைய முகத்துக்குமுன்பாக அவருடைய வார்த்தையின் படியே உண்மையாய் உன்னைப் பரிசோதி. இந்தப் பரிசோதனையினால் உன் ஆத்துமத்தில் மறைந்திருக்கும் யோசனைகள் வெளிப்படும். நீ கர்த்தருடைய பந்திக்குப் போகும்போது விசேஷமாக உன்னைச் சோதித்துப்பார். நீ உண்மையோடு

இராப்போசனத்தில் சேராவிட்டால், நீ துர்ப்பாக்கியனாகி யூதாவைப்போல் கெடுவாய். சாத்தான் உன்னை முற்றிலும் பேரிசப் படுத்தாதபடிக்குச் சாக்கிரதையாயிரு.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! நாங்கள் உம்மை மாயமற உண்மையோடே சிநேகிக்க எங்களுக்குக் கிருபை செய்யும். நாங்கள் எங்கள் இருதயங்களில் எந்தப் பாவத்தையும் மறைத்து வைத்து அதற்காக மன்னிப்பைக் கேளாமல் இருந்தால் அதை நாங்கள் உணர எங்களை எழுப்பிப் பயமுறுத்தியருளும், எங்களை நித்திய கேட்டுக்கு ஒப்புக்கொடாதேயும், சுவாமி, ஆமென்.

லூக். 17, 20-37. அல்லது சகரி. 12, 1-11. வாசிக்கவும்.

ஒருசந்தியின் முதலாம் வாரம், செவ்வாய்.

தி. 46, 1. 2.

அவர் அப்பத்தை எடுத்துக்கொண்டு, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. இதை என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்கள் என்றார். அந்தப்படியே இராப்போசனம் பண்ணின பிற்பாடு, அவர் பாத்திரத்தையுங் கொடுத்துச் சொன்னதாவது: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தில் புது உடன்படிக்கையாயிருக்கிறது. லூக். 22, 19. 20.

கர்த்தர் தமது சீஷரை விட்டுப்போகுமுன் பரிசுத்த இராப்போசனத்தை ஏற்படுத்தினார். அவர் தமது பாடுகள் மரணத்தினால் உண்டாகும் எல்லா நன்மைகளையும் ஒப்புவிக்கச் சாதனமாக ஏற்படுத்தின புதிய ஏற்பாடு இதுதான். அவருடைய பாடுகள் மரணத்தினால் வரும் பயன் பாவ மன்னிப்பும் ஜீவனும் மோட்சமுந்தான், அவர் சுவிசேஷப் பிரசங்கத்தைக் கொண்டு இதை நமக்குக் கொடுக்கிறார் என்பது மெய்யே. ஆகிலும் மனிதர்களுடைய இருதயம் இருக்கும் பெருமையுமுள்ளதென்று அவர் அறிந்திருக்கிறார். நான் கலக்கமும் திகிலும் அடையும் காலத்தில், சுவிசேஷப் பிரசங்கம் எனக்கும் செல்லுமா பாவமன்னிப்பு எனக்கும் கிடைக்குமா என்று பயத்தோடும் சந்தேகத்தோடும், என் மனச்சாட்சி கேட்கும். என்னுடைய கடனும் தீர்க்கப்பட்டு நானும் மீட்கப்பட்டேன் என்கிற பாக்கியமான நிச்சயத்திற்கு நான் வரவேண்டும். ஆகையால் தான் கர்த்தர் பரிசுத்த இராப்போசனத்தை ஏற்படுத்தினார். அதில் அவர் தாமே தம்முடைய பாடுகளின் பலனைக் கொண்டுவந்து மீட்கப்

பட்டவர்களில் நீயும் சேர்ந்தவன் என்கிற நிச்சயத்தை உனக்குத் தருகிறார். ஏனெனில் அவர் தமது சரீரத்தை உனக்குக் கொடுத்து இது உனக்காகக் கொடுக்கப்பட்ட என் சரீரம் என்கிறார். அவர் தமது இரத்தத்தை உனக்குக் கொடுத்து, இது பாவமன்னிப்புக்கென்று உனக்காகச் சிந்தப்பட்ட என் இரத்தம் என்கிறார். சீஷர் வாங்கின இந்த இராப்போசனத்தினால் அந்த இராத்திரியிலும் அப்பாலும் தங்களுக்கு வந்த துன்பத்தில் தாங்கப்பட்டார்கள். அவர்கள் தங்கள் அருமையான குருவை இழந்துபோய் முற்றிலும் கெடாவண்ணம் இந்த இராப்போசனத்தினால் ஆற்றித்தேற்றப்பட்டார்கள்.

இதற்காக இயேசுநாதர் அதை நமக்குக் கட்டளையிட்டார். நாம் அவரைக் காணாவிட்டாலும் அவரை நம்புவதற்கும் நாம் மரணப்பள்ளத்தாக்கிலும், அவர் கையைக் கெட்டியாய்ப் பிடிப்பதற்கும் அவருடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் வாங்குகிறோம். இனிமேல் நாம் விசுவாசம் தளர்ந்து தடுமாறிப்போக வேண்டியதில்லை.

ஜெபம். அளவற்ற அன்பினால் நிறைந்த மீட்பரே! நாங்கள் உமது திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் [illegible] குடித்து, எங்கள் ஆத்துமத்தை ஆற்றித் தேற்றிக்கொண்டு எங்கள் விசுவாசம் பெலப்பட்டு உம்மோடு ஐக்கியப்பட எங்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 18, 1-14. அல்லது சகரி. 13, 1-9. வாசிக்கவும்.

ஒருசந்தியின் முதலாம் வாரம், புதன்.

தி. 46, 3. 4.

அவர்கள் ஸ்தோத்திரம் பாடினபின்பு ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள். அப்போது இயேசு அவர்களுக்குச் சொன்னதாவது: இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் இடறல் படுவீர்கள். ஏனென்றால், மேய்ப்பனை வெட்டுவேன், அப்போது மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படுமென்று எழுதியிருக்கிறது. ஆனால் நான் எழுந்திருந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்கு ஏகுவேன் என்றார். பேதுரு அவருக்குப் பிரத்தியுத்தரமாக: உம்மிடத்தில் எல்லாரும் இடறல்பட்டாலும், நான் ஒருக்காலும் இடறல் படேனென்றான். இயேசு அவனுடனே: மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன் மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என்றார். பேதுரு அவருடனே: நான் உம்மோடே சாகவேண்டியதாயிருந்தாலும், உம்மை மறுதலியேனென்றான். அந்தப்படியே சீஷரெல்லாருஞ் சொன்னார்கள். மத். 26, 30-35.

பேதுரு வெகு தைரியத்தோடே பேசினான்: அவன் கர்த்தர்மேல் எவ்வளவு அன்பும் தன்மேல் எவ்வளவு நம்பிக்கையு முள்ளவனெனக் காணுகிறான். எல்லாச் சோதனைகளையும் மேற்கொண்டு கர்த்தருக்கு உண்மையான ஒத்தாசை பண்ணத் தன்னால் முடியும் என்று நம்பினான். இப்படிச் சொல்ல அவன் மதிகெட்டு இருந்ததினால், சோதனை வந்த காலத்தில் வெட்கம் அடைந்தான்.

அவனைப்போல் நீயும் வெட்கம் அடையாமல் சோதனையில் ஜெயம்பெற வேண்டுமானால், உன்மேல் நம்பிக்கை வைக்காமல் கர்த்தரை முழு மனதோடும் நம்பு. உனக்கு வேண்டிய பெலத்துக்காகவும் உயர இருந்துவரும் சத்துவத்துக்காகவும் ஜெபி. உன் பெலவீனத்துக்காகவும் உன் வேண்டிதனத்துக்காகவும் வெட்கப்படாதே. கர்த்தருடைய ஒத்தாசை தேவையில்லை. ஜெபம் செய்கிறவர்கள் மதியீனர் என்று அநேகர் நினைத்தாலும், கிறிஸ்தவனாகிய உனக்கு ஜெயமே ஆகுதம். யார் கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து அவரிடத்தில் ஒத்தாசையையும் பெலத்தையும் கேட்டுப் பெற்றுக்கொள்வாரோ, அவன் சோதனையில் ஜெயம் அடைவான். அவர் பெலவான்களை ஆசனங்களை விட்டுத் தள்ளித் தாழ்மையுள்ளவர்களை உயர்த்துவார். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப் பெலம் அடைந்து, கழுகுகளைப்போல் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடியும் விடாய்க்கார்கள். நடந்தும் இளைக்கார்கள்.

ஜெபம். எங்கள் அன்புள்ள இயேசுவே! உமது சீஷரை ஆபத்து நேரத்தில் எச்சரித்துக் காப்பாற்றினதுபோல் எங்களையும் காப்பாற்றியருளும். வீண் பெருமைக்கும் தப்பான நம்பிக்கைக்கும், எங்களை விலக்கிக் காரும்; உம்மையன்றி எங்களுக்கு வேறே அடைக்கலமில்லை, சுவாமி, ஆமேன்.

மாற். 10, 1-16. அல்லது சகரி. 14, 1-21. வாசிக்கவும்.

ஒருசந்தியின் முதலாம் வாரம், வியாழன்.

ஏ. 46, 5. 6.

அப்போது இயேசு அவர்களுடனே கெத்செமனே என்னப்பட்ட இடத்துக்குவந்து, சீஷருடனே: நான் போய் அங்கே ஜெபம்பண்ணுமளவும் இவ்விடத்தில் உட்கார்ந்திருங்களென்று சொல்லி, பேதுருவையும் செபெதேயுவின் இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு, துக்கமடையவும் மிகவும் வியாகுலப்படவுந் தொடங்கினார். அப்போது அவர்களுடனே: என் ஆத்துமம் மரணபரியந்தம் துக்கமாயிருக்கிறது; நீங்கள் இங்கே

தரித்து, என்னோடேகூட விழித்திருங்களென்று சொல்லி, சற்று அப்புறம் போய், முகங்குப்புற விழுந்து, ஜெபம்பண்ணி: என் பிதாவே, கூடுமானால் இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கடவது; எனக்கோ அல்ல, உமக்கே சித்தமாயிருக்கிறபடி ஆவதாக என்றார். அவர் சீஷர்களிடத்தில் வந்து அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவுடனே: இப்படி நீங்கள் ஒரு மணிநேரமாகிலும் என்னோடேகூட விழித்திருக்கக் கூடாதிருந்ததோ நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி மனதுள்ளதுதான் மாம்சமோ பெலனற்றிருக்கிறது என்றார். மத். 26, 36 41.

கெத்சேமனே தோட்டத்தில் உன் இரட்சகர் பண்ணின போராட்டமும் அநுபவித்த பாடுகளும் இவ்வளவு என்று நீயாகிலும், அல்லது வேறொரு மனுஷனாகிலும் ஒருபோதும் அளவிட முடியாது. உன் இரட்சிப்பு அங்கேதான் சம்பாதிக்கப்பட்டது. பாவம் அறியாத அவரைப் பராபரன் அங்கே நமக்காகப் பாவமாக்கினார். எல்லாருடைய பாவத்தையும் அவர்மேல் சுமத்தினார். இப்படி இரட்சகர் நமக்காகச் சாபமானார். நம்மை மீட்க வேறே வழி இருந்ததில்லை. அந்தப் போராட்டத்தைப்பார். லோகத்தின் பாவத்தைச் சுமக்கவராய்ப் பாவத்துக்கும் மரணத்துக்கும் எதிராகக் கொண்டு, தனியே இந்த வழியில் செல்ல அவருடைய ஆத்துமா நடுங்கிப் பின்வாங்கிற்று. பிதாவே, கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கடவது என்று அவர் ஜெபித்தார். ஆகிலும் எனக்கு அல்ல, உமக்கே சித்தமாயிருக்கிறபடி ஆவதாக என்ற வார்த்தைகளைச் சேர்த்துச்சொன்னார். ஆகையால், ஜெபத்தினால் அவருடைய சித்தம் பரம பிதாவின் சித்தத்தோடே ஒன்றுபட்டது. இப்படி அவர் உற்சாகமாய்க் கீழ்ப்படிந்து உலகத்தின் பாவத்தையும் நித்திய கோபாக்கினையையும் தமதுமேல் சுமந்துகொண்டார். இவ்விதமாக அவர் நமக்கு உத்தம பிரதான ஆசாரியரும், நமது பாவங்களுக்கு வேண்டிய ஈடுசெலுத்தின பிணையாளியுமானார். இனிச் சாத்தானுக்கு நம்மேல் பாத்தியமில்லை. அவன் நம்மைப் பயமுறுத்தினாலும் நாம் தேவாட்டுக்குட்டியானவரைப் போயடைந்து, அடைக்கலம் புகுந்து, சுகபத்திரமாயிருப்போம்.

ஜெபம். இவ்வன்பைச் சிந்தையினின்று நான் எல்லாம் மறக்கமாட்டேன் - இதனால் ஒழிய வேறொன்றால் இனி என் நெஞ்சை ஆற்றேன் நீர் என் வெளிச்சம், என் பலம் - நான் மாளும்போது என் இடம் - என் கன்மலையும் பங்கும். ஆ, என் மனமகிழ்ச்சியே - நான் உமக்குப் பிழைக்கவே ஒத்தாசை செய்திருக்கும், சுவாமி, ஆமேன்.

மாற். 10, 11-31. அல்லது மல்கி. 1, 1-11 வாசிக்கவும்.

ஒருசந்தியின் முதலாம் வாரம், வெள்ளி.

பி. 46, 7. 8.

அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து, அவருக்குத் தோன்றி, அவரைப் பெலப்படுத்தினான். அவர் மரண அவஸ்தையாகி, அதிக உக்கிரத்துடனே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. லூக். 22, 43. 44.

பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரத்தை என்னை விட்டு நீங்கப்பண்ணும் என்று கர்த்தர் மும்முறை ஜெபித்தார். என்றாலும் அவர் இந்தப் பாத்திரத்தைக் குடிக்க வேண்டியது அவசியம். ஏனெனில் நம்மை மீட்க வேறே வழியில்லை. ஆகிலும் அவர் செய்த ஜெபம் வீணாய்ப்போகாமல், கேட்கப்பட்டது. வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து அவரைப் பலப்படுத்தினான். இப்படிப் புதுப்பெலனடைந்து அவர் பிதாவின் கரத்திலிருந்து இந்தக் கசப்பான பாத்திரத்தை உற்சாகத்தோடு வாங்கிக்கொண்டார்.

அப்பொழுது பிதா தமது பிள்ளையின் ஜெபத்தை எப்படிக் கேட்டாரோ அப்படியே இன்றைக்கும் சிலுவையின் கீழ்த் தவித்துத் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற தமது பிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்கிறார். அவர் அடிக்கடி அவர்கள் ஜெபத்தைக் கேட்கவில்லைபோல் தோன்றும். அவர்கள் விசனத்தோடு திரும்பத்திரும்ப ஜெபித்தாலும் சில சமயங்களில் சுமையை அவர்கள் தோள்களினின்று அவர் எடுக்கமாட்டார். சிலுவை தமது ஆத்துமங்களுக்கு ஆரோக்கியம் என்று அவர் தமது ஞானத்தினாலும் அன்பினாலுமறிந்து, சிலுவையை நமதுமேல் சுமத்தி, அதைப் பெரிய பாரமாயிருக்கவும் செய்வார். ஆனால் அத்தோடு அவர் நம்மைப் பெலப்படுத்துவார். அவர் இந்த ஆத்துமத்திற்குப் புதுப் பெலத்தையும் பொறுமையையும் அருளி, வீண் கவலைகளையும் பயத்தையும் நீக்கி, நமக்குச் சமாதானத்தையுண்டாக்கித் தமது கிருபையைக் குறித்து நிச்சயமடையச் செய்வார். இப்படி அவர் நமது ஜெபத்தைக் கேட்டு, நமது விசுவாசத்திற்கு வேண்டிய பரிபூரண நன்மைகள் கிடைக்கும்படியாய் நமது சிலுவையை ஆசீர்வதிப்பார். பராபரனுடைய பிள்ளைகளில் அநேகர் கர்த்தரால் பெலப்படுத்தப்பட்டுத் தங்கள் சீவிய காலம் எல்லாம் பாரமான சுமையைச் சுமந்துகொண்டு, துவக்கத்தில் மனம் கலங்கியும், கடைசியாய் ஸ்தோத்திரத்தோடு சுமக்கிறார்கள். என் கிருபை உனக்குப் போதும்; ஏனெனில் பெலவீனத்திலே என்னுடைய பெலன் பூரணமாய் விளங்குகிறது என்று உனக்கும் கர்த்தர் சொல்லுகிறார். அவர் கெத்செமனே தோட்டத்தில் அடைந்த ஜெயத்தை உனக்குக் கொடுக்கிறார். உன் சிலுவை எவ்வளவு பாரமாயிருந்தாலும் நீ இனிமேல் மலைத்துப் போகவேண்டாம்.

ஜெபம். உண்மையுள்ள பராபரனே! உம்முடைய ஞானத்தின்படி தேவரீர் எங்கள்மேல் சிலுவையைச் சுமத்தினாலும், நாங்கள் அதைப் பொறுமையோடு சுமக்கக் கிருபை புரியும். நாங்கள் எல்லாத் துன்பங்களிலும் உம்மை நம்பி, உம்மை நோக்கிக் கூப்பிட்டு, உம்மிடத்தில் சகாயத்தையும் கிருபையையும் பெற எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும், சுவாமி, ஆமென்.

யோ. 11, 1-27. அல்லது மல்கி. 3, 1-18. வாசிக்கவும்.

ஒருசந்தியின் முதலாம் வாரம், சனி.

பி. 46, 9. 10.

இயேசு பேசுகையில் பன்னிருவரில் ஒருவனாகிய யூதா வந்தான். அவனோடேகூடப் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சனத்தின் மூப்பரிடத்திலுமிருந்து திரளான கூட்டம் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்து வந்தது. ஆனால் அவரைக் காட்டிக்கொடுக்கிறவன் அவர்களுக்கு: எவனை முத்தமிடுவேனோ அவன் தான்; அவனைப் பிடியுங்கள் என்று அடையாளஞ் சொல்லியிருந்தான். உடனே இயேசுவண்டை சென்று: வாழ்க, ரபீ என்று அவரை முத்தமிட்டான். இயேசு அவனுடனே: சிநேகிதனே, எதுக்கு வந்திருக்கிறாய் என்றார். அப்பொழுது அவர்கள் சேர்ந்து வந்து, இயேசுவின் பேரில் கைகளைப் போட்டு அவரைப் பிடித்தார்கள். மத். 26, 47-50.

இயேசுவைப் பிடிக்க வந்தவர்களுக்கு துரோகியாகிய யூதா ஒரு அடையாளம் சொல்லியிருந்தான். அவர்கள் இருட்டிலே தாங்கள் தேடி வந்தவருக்குப் பதிலாக அவருடைய சீஷரில் ஒருவனைப் பிடிக்காதபடி இந்த அடையாளத்தைச் சொல்லியிருந்தான். பட்சத்தின் வேஷத்தினால் அவன் தன் துரோகத்தை மறைக்க நினைத்தான். ஆகையால் அவன் இயேசுவண்டை சேர்ந்து வாழ்க, ரபீ என்று அவரை முத்தமிட்டான். ஒரு சீஷன் தன் குருவைக் காட்டிக்கொடுப்பது பயங்கரமானது. அன்புக்கும் சமாதானத்துக்கும் அடையாளமாகிய முத்தத்தினால் அவரைக் காட்டிக்கொடுத்ததினால் அவன் பிசாசினால் ஏவப்பட்டவன் என்று தெரிகிறது.

கர்த்தர் தமது வாயிலிருந்து வரும் அக்கினியால் அவனை அழிக்காமல், யூதாவின் மாய்மாலத்தையும் துரோகத்தையும் சகித்தார். அவர் இன்றைக்கும் தம்மைக் காட்டிக்கொடுக்கிற கிறிஸ்தவர்களையும் பொறுத்திருக்கிறார். இப்படிப்பட்ட மாய்

பாவத்தையும் துரோகத்தையும் செய்கிறவர்கள் யார் என்றால், கிறிஸ்தவர்களாய்க் காணப்பட விரும்பி, உள்ளே கர்த்தரை விரோதிக்கிறவர்களும், அவரை வாயினால் கனம்பண்ணி, இருதயத்தில் அசட்டை செய்கிறவர்களும், கர்த்தரைச் சிநேகிக்கிறோம் என்று வாயினால் சொல்லி உள்ளத்தில் அவரைப் பகைக்கிறவர்களும், இராப்போசனத்தில் மாய்மால உதட்டினால் அவரை முத்தமிட்டு மனதிலே அவருக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களும் தான். கர்த்தர் இவர்களைச் சகித்துச் சிலகாலம் பொறுத்தாலும் நித்தியமாய்ப் பொறுக்கமாட்டார். ஒருநாள் அவர் நியாயந் தீர்க்க வருவார். அப்பொழுது அவர் சகல மாய்மாலத்தையும் வெளியாக்குவார். அவர் வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, எல்லாச் சத்துருக்களையும் இப்போது தங்கள் பகைமையைப் பக்தியுள்ள வார்த்தைகளினால் மறைக்கிறவர்களையும் பட்சித்துப்போடும்.

ஜெபம். எங்கள் அன்புள்ள இரட்சகரே, உமக்குத் துரோகம் பண்ணுகிறவர்களையும், தயவாய்ப் பொறுத்துக் கடைசி நேரத்திலும் அவர்களைக் குணப்படுத்தப் பார்க்கிறீர். ஆண்டவரே, நாங்கள் உமக்குத் துரோகம் பண்ணாமல் உமக்குத்தான் உண்மை சேவித்து மரணபரியந்தம் உம்மிடத்தில் நிலைத்திருக்க எங்களுக்கு உமது கிருபையைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

(யோ. 11, 25-57. அல்லது மல்கி. 4, 1-6. வாசிக்கவும்.

ஒருசந்தியின் இரண்டாம் வாரம், ஞாயிறு.

பா. 51.

உன் பாவங்களினாலே நம்மைப் பிரயாசப்படுத்தி, உன் அக்கிரமங்களினாலே நம்மை வருத்தப்படுத்தினாய். ஏசா. 43, 24.

அநேகம் கிறிஸ்தவர்கள், பாவமன்னிப்பை ஒரு அற்ப விஷயமாக நினைக்கிறார்கள். அது அவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கிறபடியினாலே, அதற்காக வார்த்தையினாலும் நடத்தையினாலும் பரமபரனை மனதார ஸ்தோத்திரிக்க அவர்களுக்கு மனமில்லை; அவர்கள் பாவத்தின்பேரில் எப்படித் துக்கப்படமாட்டார்களோ, அப்படிப் பாவத்திற்குத் தங்களை விலக்கிக்காக்கவும் மாட்டார்கள். பாவம் தங்களுக்குத் திரும்பத் திரும்ப மன்னிக்கப்படும் என்று நினைக்கிறார்கள். இந்த நிர்விசாரத்துக்குக் காரணம் என்னவென்றால், நம்முடைய மீட்பு எவ்வளவு விலையுயர்ந்தது என்று அறியாமைதான். நம்முடைய பாவம் ஒரு பெரும்

சுமையைப்போல் கர்த்தர்மேல் சுமந்து அவருக்குப் பிரயாசத்தையும் வருத்தத்தையும் உண்டுபண்ணிற்று என்று அவர்கள் உணர்ந்தறியார்கள்.

பாவத்தையும் பாவமன்னிப்பையும் இவ்வளவு இலேசாய் எண்ணுகிற நீ, உன் பாவமும் முழுலோகத்தின் பாவமும் கர்த்தரின் பாடுகளுக்குக் காரணம் என்பதை மறக்கிறாய். அவர் கெத்சேமனேயிலும் சிலுவையிலும் அநுபவித்த பாடெல்லாம், உன் பாவத்துக்காகவும் என் பாவத்துக்காகவும் அநுபவித்தார். ஆ, இதைச் செய்தோன் நானும் என் அக்கிரமங்கள் தானும், கடற்கரைமணல் அத்தனையாய்க் குவிந்த, என் பாதகங்கள் இந்த வதைப்புக்காரணங்கள் என்று நாம் பாடுவது தகுதியே. உன்னுடைய பாவங்களினாலே நம்மைப் பிரயாசப்படுத்தினாய் என்று கர்த்தர் நம்மெல்லாரையும் நோக்கிச் சொல்லுகிறார். இந்த வார்த்தை நமது மனசிலே குத்தினால் நிர்விசாரம் நீங்கி நாம் ஆவலோடு சந்தோஷ செய்தியாகிய சுவிசேஷத்தைக் கேட்டுச் சீக்கிரம் மன்னிப்படையத் தேடுவோம். இவ்வளவு பாடுகளினால் நம்மை மீட்ட தேவகுமாரன் நம்மைத் தமது பிதாவுக்கு முன்பாக நிறுத்தி, இதோ பிதாவே! என் இரத்த வேர்வையினால் மீட்கப்பட்டவர்கள் என்று சொல்வார்.

ஜெபம். எங்கள் பாவ இரட்சகரே! தேவரீர் எங்களுக்காக அநுபவித்த பாடுகளையும் மரணத்தையும் நாங்கள் எப்போதும் மனதில் வைத்துத் தியானித்து, பாவத்திற்கு விலகிப் பரிசுத்தமாய் நடந்துகொள்ள எங்களுக்கு உமதன்பை நினைப்பூட்டியருளும், சுவாமி, ஆமேன்.

மாற். 10, 32-45. அல்லது சங். 25. வாசிக்கவும்.

ஒருசந்தியின் இரண்டாம் வாரம், திங்கள்.

பா. 45, 1, 2.

இயேசுவானவர் தம்முடையமேல் வரப்போகிற எல்லாவற்றையும் அறிந்திருந்து, வெளியே வந்து, அவர்களுடனே: யாரைத் தேடுகிறீர்கள் என்றார். அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: இயேசு நாசரேத்தூரானையே என்றார்கள். இயேசு அவர்களுடனே: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாவும் அவர்களுடனேகூட நின்றுகொண்டிருந்தான். நான்தான் என்று அவர் இவர்களுடனே சொன்னபோது, இவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அப்போது மறுபடியும் அவர்களை: யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள்: இயேசு நாசரேத்தூரானையே என்றார்கள், இயேசு பிரத்தியுத்தரமாக நான்தான் என்று

உங்களுக்குச் சொன்னேனே; இப்போதும் என்னைத் தேடினீர்களானால் இவர்கள் போகட்டும் என்றார். யோ. 18, 4-8.

ஆண்டவர் தமது சத்துராதிகளைப் பார்த்து, நான்தான் என்று சொன்னவுடனே: அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அவருடைய நித்திய தெய்வத்துவத்தின் பிரகாசம் அவர்கள் கண்களைக் கூசப்பண்ணினவுடனே, அவர்களுடைய தைரியமும் பெலனும் பறந்துவிட்டது. இப்பேர்ப்பட்ட வல்லமையை இரட்சகர் தமது தாழ்மையில் காண்பித்தார். அவர் பரம மகிமையில் வந்து, மனித குமாரனுடைய அடையாளம் பூமியின் மீதெங்கும் காணப்படும்போது மறுபடியும் நான்தான் என்று சத்தமிட்டுச் சொல்லுவார். அப்போது எல்லோரும் தாழ விழுவார்கள். சிலர் பயத்தோடும் நடுக்கத்தோடும், வேறு சிலர் பயபக்தியோடும் அன்போடும் வணங்கிக் கீழே விழுவார்கள். அவர் இன்றைக்கும் தமது சத்துருக்கள் மீதே ஆளுகை செய்து, நான்தான் என்ற வார்த்தையினால் தமது இராச்சியத்தையும் சபையையும் தொலைத்துப்போட வருகிறவர்களைத் தரையில் விழத்தள்ளுகிறார்.

நான்தான் என்ற வார்த்தையினால் கர்த்தர் தமது சீஷரைக் காப்பாற்று மனதாய் நீங்கள் என்னைத் தேடினீர்களானால் இவர்கள் போகட்டும் என்கிறார். உலகமெல்லாம் நம்மைப் போகவிடாமல் எழும்பி வந்தாலும், ஆண்டவர் பக்கத்தில் நின்று இவர்கள் போகட்டும் என்று சொல்லுவார். இந்த வார்த்தைக்கு உலகமும் கீழ்ப்படியவேண்டும். சாத்தான் நம்மை விழுங்கவந்தாலும் இவர்கள் போகட்டும் என்று சொல்லுவார். அவர் தமது பிதாவை நோக்கி, பரிசுத்த பிதாவே! நீர் எனக்குக் கொடுத்தவர்கள் நம்மைப்போல் ஒன்றாயிருக்கும்படிக்கு அவர்களை உம்முடைய நாமத்தில் தற்காத்தருளும். நான் அவர்களுடனே கூட லோகத்திலிருக்கையில் நான் அவர்களை உம்முடைய நாமத்திலே தற்காத்துக்கொண்டேன், நீர் எனக்குக் கொடுத்தவர்களைக் காத்துக்கொண்டேன். பிதாவே, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே நீர் எனக்குக் கொடுத்தவர்களும் என்னுடனே கூட இருக்க வேண்டுமென்றிருக்கிறேன் என்று சீஷருக்காக மன்றாடுகிறார்.

செபம். நித்திய தேவ சுதனே! நாங்கள் பொல்லாத சத்துருக்களுக்குத் தப்பும்படி தேவரீர் உம்மைச் சத்துராதிகள் கைக்கு ஒப்புக்கொடுத்தீர். உமது இருதயத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரம் உண்டாவதாக, சுவாமி, ஆமென்.

லூக். 18, 31-19, 10. அல்லது யோபு 1, 1-22. வாசிக்கவும்.

ஒருசந்தியின் இரண்டாம் வாரம், செவ்வாய்.

பி. 45, 3. 4.

பிரதான ஆசாரியன் இயேசுவை, அவர் சீஷரையும் அவர் போதகத்தையுங் குறித்துக் கேட்டான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் லோகத்துடனே பேசினேன்; நான் எப்போதும் யூதர் எங்கும் இருந்து வந்து கூடுகிற ஆலயத்திலும் தெய்வாலயத்திலும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசினதில்லை. நீர் என்னைக் கேட்பானேன்; என்னிடத்தில் கேள்வியானவர்களை நான் அவர்களுக்கு என்ன சொன்னேன் என்று கேளும். இதோ, நான் பேசினவைகளை இவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்றார். யோ. 18, 19-21.

அன்னா, இயேசுவின் சுவிசேஷத்தையும் அவருடைய போதகத்தையும் குறித்து அவரைக் கேட்டான். கிறீஸ்து போதித்தது அவனுக்குத் தெரியாதா? இக்காலத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப்பற்றி உலகத்தார் கேள்விப்படுவதுபோல் அவனும் அதைப்பற்றி அறிந்தவனும் அறியாதவனுமாயிருந்தான். தேவாலயத்திலும் மற்றெல்லா இடங்களிலும் கர்த்தர் ஜனங்களை வெளியரங்கமாய்ப் போதித்ததுபோல் இன்றைக்கும் சுவிசேஷம் வெளியரங்கமாய்ப் பூமி எங்கும் அறிவிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் போதகம் இரகசிய போதகமல்ல, கிறிஸ்துவின் சீஷர் கூட்டமும் ஒரு இரகசியக் கூட்டம் அல்ல. அக்காலத்தில் இஸ்ரவேலில் கிறிஸ்துவைப் பற்றி ஒவ்வொருவனும் ஏதோ கொஞ்சம் அறிந்திருந்ததுபோல் இக்காலத்திலும் ஒவ்வொருவனும் கிறிஸ்து மார்க்கத்தைக் குறித்து ஏதாகிலும் அறிந்திருப்பான். கிறிஸ்துவண்டை வந்து அவரைத் தங்கள் இரட்சகராகக் கண்டறிவதற்கு அன்னாவுக்கும் உலகத்தாருக்கும் போதுமான அறிவுண்டு. அவர்கள் இரட்சகரைக் கண்டுபிடிக்காமல் போவதும் கிறிஸ்துவின் போதகத்தில் அவர்களுக்கு அநேக காரியங்கள் விளங்காமல் இருப்பதும் அவர்கள் குற்றம். ஏனெனில் அவரைப் பற்றி இன்னம் அதிகமாய் விசாரிக்க அவர்களுக்கு மனதில்லை. அவர்கள் தங்கள் இருளையும் அதன் கிரியைகளையும் விட்டு விடமாட்டார்கள்.

சுவிசேஷத்தைப்பற்றி உனக்கு எவ்வளவு தெரியும்? நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாவற்றையும் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள் என்று ஆண்டவர் சொன்னபடி உன் தாய் தகப்பன்மார் உனக்குச் சிறுபிராயமுதற்கொண்டு இயேசுவின் ஜீவிய சரித்திரத்தையும் போதகத்தையும் சொல்லிக் கொடுத்தார்கள். படித்ததெல்லாம் உனக்கு விளங்கிற்று என்று உன் நடக்கையினால் காட்டுகிறாயா? தம்மைப்பற்றிச் சனங்களைக்

கேட்கலாம் என்று ஆண்டவர் அன்னாவுக்குச் சொன்னதைப் போல் அவரைப்பற்றிச் சனங்கள் நம்மைக் கேட்கலாமா? இயேசு நாதர் அன்னாவுக்கு முன்பாக நிற்கும்போது சிலர் பேதுருவைக் கேட்டார்கள். அவனோ, அந்த மனுஷனை அறியேன் என்று சொன்னான். உலகம் தினந்தோறும் நம்மை ஆண்டவரைப் பற்றிக் கேட்கிறது. நாம் எந்நேரமும் அவரைத் தைரியத்தோடு அறிக்கையிடுகிறோமா?

ஜெபம். பரம தகப்பனே! உமது நேச குமாரன் எங்களுக்குச் சம்பாதித்த இரட்சிப்பை நாங்கள் சிறு பிராயமுதற்கொண்டு, கேட்டுப் படிப்பதற்கு தேவரீர் ஏற்பாடு பண்ணினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் அதை உலகத்துக்கு முன்பாக உற்சாகத்தோடு அறிக்கையிட எங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

லூக். 19, 11-28. அல்லது யோபு. 2, 1-13. வாசிக்கவும்.

ஒருசந்தியின் இரண்டாம் வாரம், புதன்.

பி. 45, 5. 6.

இதுகளை அவர் சொன்னபோதோவென்றால், வேலைக்காரரில் அண்டையிலே நின்ற ஒருவன்: இப்படியோ பிரதான ஆசாரியனுக்கு உத்தரவு சொல்லுகிறாய் என்று இயேசுவை ஒரு அறை போட்டான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: ஆகாதபடி சொன்னேனானால், ஆகாததை ஒப்புவி; நிதானமாய்ச் சொன்னேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார். அன்னாவோ அவரைப் பிரதான ஆசாரியனான காய்பாவண்டை கட்டுண்டவராக அனுப்பியிருந்தான். யோ. 18, 22-24.

ஒரு சமயத்தில் எரோபெயாம் இராசா கர்த்தருடைய தீர்க்கதரிசிக்கு விரோதமாகத் தன் கையை நீட்டினபோது அவன் கை மடக்கக்கூடாமல் மரத்துப்போயிற்று. (1 இராசா. 13, 4) இயேசுவோ தம்மை அடித்த வேலைக்காரனைத் தண்டிக்கவில்லை. அவன் செய்த கொடுமையை அவர் சகித்துக்கொண்டதோடு மெத்தனவாய், அவன் செய்த அநியாயத்தையும் அவனுக்குக் காட்டுகிறார்.

ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், இடது கன்னத்தையும் அவனுக்குக் காட்டு என்று தாம் போதித்த போதகத்தைத் தாமே சரியானபடி கைக்கொண்டார். இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுவது நமக்கு அரிது. நாம் அநுபவிக்கும் அநியாயத்தைப் பொறுக்க நம்மாலாகாமல் நமது கையும் நாவும் பதிலுக்குப் பதில் செய்யத் துரிதப்படுகின்றன. அப்போதும் கர்த்

தரை நோக்கி உனக்கு வேண்டிய பொறுமையையும் மெத்தனவையும் கேட்டு வாங்கிக்கொள். மெத்தனவோடு உத்தரவு சொல்ல முடியாதிருக்கும் நேரங்களில் மௌனமாய் எல்லா அநியாயத்தையும் பரிகாசத்தையும் பொறுத்த இரட்சகரை நினைத்துக் கொள்.

அந்தியோகியாவில் வயதுசென்ற ஓர் கிறிஸ்தவன் ஒரு அஞ்ஞானியால் அடிபடும்போது, நான் கிறிஸ்தவனாயிருப்பதற்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் சொல்லு என்று சொன்னான். இவர்கள் கிறிஸ்தவர்களென்றும் பழிக்குப் பழிவாங்கமாட்டார்களென்றும் நம்மைப்பார்க்கிற உலகத்தார் சொல்லி, நமது பிதாவை மகிமைப்படுத்தும்படியாய் அவர்களுக்குப் பட்சத்தையும் பொறுமையையும் காட்டுவோமாக. இயேசுநாதர் வையப்படுகிறபோது பதிலுக்கு வையாமலும் பாடுபடுகிறபோது மிரட்டாமலும், நீதியாய் நியாயம் தீர்க்கிறவருக்கு அதை ஒப்புக்கொடுத்தார் (1 பேது. 2, 23).

ஜெபம். பொறுமையுள்ள இயேசுவே! சத்துராதிகளுடைய தூஷணத்தையும் நிந்தையையும் சகித்து, எல்லாத்தையும் உமது பிதாவுக்கு ஒப்புவித்தீர். ஆ, கர்த்தாவே! நாங்கள் உம்மைப்போல் சாந்தமும், பொறுமையும் உள்ளவர்களாக இவ்வுலகில் நடந்து உமக்கு மகிமையுண்டாக எல்லாருக்கும் பட்சத்தையும் அன்பையும் காட்ட எங்களுக்குக் கிருபைசெய்யும், சுவாமி, ஆமேன்.

யோ. 12, 1-11. அல்லது யோபு 3, 1-26. வாசிக்கவும்.

ஒருசந்தியின் இரண்டாம் வாரம், வியாழன்.

பி. 45, 7. 8.

பேதுரு அரண்மனையில் வெளியே உட்கார்ந்திருந்தான்; அப்போது ஒரு வேலைக்காரி அவனண்டை வந்து: நீயும் கலிலேயனாகிய இயேசுவோடிருந்தாய் என்றாள். அவனோ எல்லாருக்கு முன்பாக மறுதலித்து: நீ சொல்லுகிறது இன்னதென்று அறியேனென்றான். அவன் முற்றத்திலே புறப்பட்டபின், வேறொருத்தி அவனைக்கண்டு, அங்கே இருந்தவர்களுடனே: இவனும் நாசரேத்தானாகிய இயேசுவோடே கூட இருந்தான் என்றாள். அவன் மீண்டும்: அந்த மனுஷனை அறியேனென்று ஆணையிட்டு மறுதலித்தான். சற்று நேரத்திற்குப் பின்பு அங்கே நின்றவர்கள் சேர்ந்துவந்து, பேதுருவுடனே: மெய்யாக நீயும் அவர்களில் ஒருவன்; ஏனெனில் உன் பேச்சும் உன்னை வெளிப்படுத்துகிறதென்றார்கள். அப்போது அந்த மனுஷனை அறியேனென்று அவன் சபித்துக்கொள்ளவும் சத்தியம்பண்ணவும் துவக்கினான். உடனே சேவல் கூவிற்று. மத். 26, 69-74.

பேதுரு ஆண்டவரை மறுதலித்ததைப்பார்த்து, நம்முடைய இருதயம் நடுங்கவில்லையா? நீர் ஜீவனுள்ள பராபரனுடைய குமாரனான கிறிஸ்து என்று அறிக்கையிட்ட சீஷன் இவன்தான். இங்கே இவன் ஆணையிட்டுக் கிறிஸ்துவை மறுதலிக்கிறான். யூதருக்குப் பயந்து பொய்ச்சத்தியம் பண்ணுகிறான். இப்படிப்பட்ட பாவம் எவ்வளவு பயங்கரமானது. அதைச் செய்தவனுக்கு வரும் ஆக்கினை எத்தனை பெரிது. அவன் தன் இரட்சகரையும், தன் ஆத்தும இரட்சிப்பையும் இழக்கும்படியாய் நேரிடும்.

மனுஷர் பெலவீனத்தை நாம் இங்கே பார்க்கிறோம். நாங்கள் அப்படிச் செய்யமாட்டோம், நாங்கள் உண்மையுள்ளவர்களாயிருப்போம் என்று நம்பிச் சொல்லுபவன் ஆர்? ஆண்டவரே, உம்மைத் தவிர வேறொருவனுக்கும் ஊழியம் செய்யமாட்டோம். பராபரனுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் நீர் எங்கள் கர்த்தர் என்றும் நாங்கள் உம்முடைய ஊழியக்காரர் என்றும் எப்பொழுதும் அறிக்கையிடுவோம் என்று வாக்குக் கொடுத்தோமல்லவா? நாம் ஞானஸ்நானத்திலே நமது ஞானத்தாய் தகப்பன்மாராலும், திடப்படுத்தப்படும்போது நம்முடைய சொந்தவாயினாலும் இந்த வாக்கைக் கொடுத்தோம். மனுஷருக்குப் பயந்து, மாமிச இச்சைகளினால் ஏமாற்றப்பட்டோ இந்த வாக்கை எத்தனையோ தரம் மீறினோம். நாமும் ஆறாம் மன்றாட்டை அர்த்தத்தோடு ஜெபிப்போமாக: எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாதிரும். பராபரன் ஒருவனையும் சோதிக்கிறதில்லை. ஆனால் பிசாசு, லோகம், மாமிசம் என்றவைகள் அவிசுவாசம், அவநம்பிக்கை முதலான கன பாவதோஷங்களிலேயும் துன்மார்க்கங்களிலேயும் நம்மை உட்படுத்தி மோசம் போக்காதபடிக்கும், நாம் அவைகளால் சோதிக்கப்பட்டாலும் வெல்லப்படாமல் முடிவில் அவைகளை ஜெயிக்கும்படிக்கும் அவர் நம்மைக் காத்து நடத்தவேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடிக் கொள்ளுகிறோம்.

ஜெபம். இரக்கமுள்ள பிதாவே! எங்களால் தாங்க முடியாத சோதனைகளை எங்களுக்கு அனுப்பமாட்டீர். அதை நம்பி நாங்கள் உம்மிடத்தில் பெலனையும் ஜெயத்தையும் கேட்கிறோம். நாங்கள் ஒருபோதும் உம்மையும் உமது ஏக குமாரனையும் மறுதலிக்காவண்ணம் எங்களைக் காத்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 19, 29-48. அல்லது யோபு 14, 1-22. வாசிக்கவும்.

ஒருசந்தியின் இரண்டாம் வாரம், வெள்ளி.

கீ. 44, 1. 2.

அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்குமுன் மூன்றுதரம் என்னை மறுதலிப்பாயென்று இயேசு தன்னுடனே சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு வெளியே புறப்பட்டு, மனங்கசந்து அழுதான். மத். 26, 75.

பேதுருவுக்கு ஆண்டவர் மன்னித்தார். அது நமக்கு எச்சரிப்பாகவும் ஆறுதலாகவும் இருக்கிறது. நாம் கர்த்தரை விட்டு விலகிப் பாவ வழியில் நடக்கும்போது இந்த ஆறுதல் நமக்கு அதிக அவசியம். நாம் செய்ததைப் பார்த்தால் நம்முடைய இருதயம் நடுங்குகிறது. [illegible]டைந்த நமது மனச்சாட்சி எனக்கும் மன்னிப்புண்டோ என்று கேட்கிறது. எத்தனையோபேர் இப்படிக் கேட்டுத் தங்கள் தலையை அசைத்து, நான் மன்னிப்பைப் போக்கடித்தேன் என்று புலம்புகிறார்கள். ஆகிலும் கர்த்தருடைய வசனம் நமக்குச் சொல்லுகிறது வேறு. பேதுரு பாதாளமட்டும் விழுந்தான். அவன் கர்த்தரை மறுதலித்தான். என்றாலும் அவன் பராபரனுடைய பிள்ளையாக மறுபடி ஏற்றுக் கொள்ளப்பட்டான். ஒவ்வொரு பாவியும் தன் மனதிலே துக்கப்படும்போது, மன்னிப்பை அடைந்த பேதுருவை நினைக்கக்கடவான்.

ஆறுதலுக்காக மாத்திரமல்ல, எச்சரிப்புக்காகவும் பேதுருவின் சரித்திரம் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. என் பாவம் எனக்கொன்றும் செய்யாது, அது எனக்கு மன்னிக்கப்படும் என்று எண்ணாதே. இப்படி நினைக்கிறவன் நியாயத்தீர்ப்பின் நாளில் தேவகோபத்தைக் குவித்துக்கொள்ளுகிறான். இங்கே எழுதியிருக்கிறதை நன்றாய்க் கவனி. இயேசு சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைத்தபோது என்று எழுதியிருக்கிறது. இதனாலே அவன் தன் பாவத்தின் அகோரத்தை எல்லாம் அறிந்துகொண்டானென்று பார்க்கிறோம். ஆண்டவர் அவனை எச்சரித்தார். எச்சரித்தும் அவன் இந்தப் பாவத்தைச் செய்தான். அவன் மனச்சாட்சி அவனைக் கொடுமையாய்க் குற்றப்படுத்திற்று. ஆண்டவருக்கு விரோதமாகத்தான் நான் பாவம் செய்தேன் என்று புலம்பி அழுகிறான். அநேகர் பாவத்தால் தங்களுக்குண்டாகும் அவமானத்தையும் நஷ்டத்தையுமாத்திரம் நினைக்கிறார்கள். பேதுருவோ, தான் ஆண்டவரை விசனப்படுத்தினதின்பேரில் துக்கப்படுகிறான். இப்பேர்ப்பட்ட துக்கம் உண்மையான துக்கம். அதினாலே உண்மையான மனஸ்தாபம் பிறக்கும்.

ஜெபம். அளவற்ற கிருபை நிறைந்த இரட்சகரே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் எத்தனை தரம் பாவத்தில் விழுந்தாலும் எங்களைத் திரும்பத்திரும்ப இரட்சியும். எங்களுக்குள் உண்மையான மனஸ்தாபத்தையுண்டாக்கி, நாங்கள் செய்த பாவத்தைப்பற்றி மனங்கசந்து அழுது, உம்மிடத்தில் மன்னிப்பையும் சகாயத்தையும் தேட எந்நேரமும் மதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 12, 20-36. அல்லது யோபு 19, 1-29. வாசிக்கவும்.

ஒருசந்தியின் இரண்டாம் வாரம், சனி.

பி. 44, 3. 4.

பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஆலோசனைக் கூட்டமனைத்தும் இயேசுவுக்கு விரோதமாக அவரைக் கொலை செய்யும்படி பொய்ச்சாட்சி தேடினார்கள். ஆனாலும் அகப்பட இல்லை. அநேகம் பொய்ச்சாட்சிகள் சேர்ந்து வந்தும் அகப்படவில்லை. கடைசியிலோ இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து: பராபரனுடைய தேவாலயத்தைத் தகர்க்கவும் மூன்று நாளைக்குள்ளே கட்டவும் என்னாலே ஆம் என்று இவன் சொன்னான் என்றார்கள். பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவருடனே: நீ பிரத்தியுத்தாரம் ஒன்றுஞ் சொல்லாயோ; இவர்கள் உன் பேரிலே என்ன சாட்சி சொல்லுகிறார்கள் என்றான். ஆனால் இயேசுவோ மௌனமாயிருந்தார். மத். 26, 59-63.

இரட்சகர் குற்றம் சாட்டப்படுகிறார். முழு உலகத்தையும் நியாயம் தீர்க்க வருகிறவர் நியாயந்தீர்க்கப்படுவது அதிசயமே. இது அவருக்குக் கசப்பான பாடு. அவர் அவ்வளவு தாழ்ந்து பிரதான ஆசாரியனுக்கு முன்பாக நிற்கவேண்டியது அவருக்குப் பாடல்ல. அவர் எந்த நியாயாதிபதிக்கும் முன் நின்று பயமின்றி உத்தரவு சொல்லுவார். இங்கேயோ பொய்ச் சாட்சிகள் வந்து தங்கள் பொய்யினால் அவரைக் கறைப்படுத்த முயல்வதே அவர் சகிக்கவேண்டிய கசப்பான வேதனை. அவரைக் குற்றம் சாட்டினவர்கள், கூசாமல் பயங்கரமான பொய் சொல்லி, அவரைக் கெடுக்கப் பார்க்கிறார்கள். இதுதான் அவருக்கு வேதனையை உண்டாக்குகிறது.

இப்பேர்ப்பட்ட அவமானம் நமக்கும் வருத்தத்தையுண்டு பண்ணும். மனிதர் பொய்யினால் நமது நல்ல பேரைக் கெடுத்தால் நமது வயிறு எரியாதா? அச்சமயங்களில் எப்படி பொறுமையாயிருப்பதென்று நமது ஆண்டவரிடத்தில் படிக்கக் கடவோம். அவர்கள் அவர்மேல் பொய்க்குற்றம் சாட்டினபோது அவர் மௌனமாயிருந்தார். அவருக்கு விரோதமாகச் சொன்ன குற்றங்களெல்லாம் பொய். இவற்றுக்கெல்லாம் அவர் ஒரு

வார்த்தையும் பதில் சொல்லவில்லை. மனிதர் நம்மை அநியாயமாய்க் குற்றம் சாட்டும்போது நாம் கர்த்தரைப்போல் பொய்யையும் பொறுமையாய்ச் சகிப்போமாக. என் நிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தித் தீது மொழியெல்லாம் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொன்னார்களானால் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள் என்று இரட்சகர் சொல்லுகிறார். நம்முடைய உள்ளத்தைப் பார்க்கிற பராபரன் நமது பக்கத்தில் இருந்தால் மனுஷர் நமக்கு என்ன செய்யக்கூடும்?

ஜெபம். அன்புள்ள இயேசுவே! எங்கள் நிமித்தம் இந்தப் பாடுகளை எல்லாம் பொறுமையாய்ச் சகித்தீர். நாங்கள் நன்றியறிந்தவர்களாய் உம்மைப்போல் உபத்திரவருடைய பொய்யையும் பரிகாசத்தையும் பொறுத்து, எங்கள் நம்பிக்கையை எல்லாம் உமதுபேரில் வைக்க எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

யோ 12, 37-5 அல்லது யோ. 42, 1-17. வாசிக்கவும்.

ஒருசந்தியின் மூன்றாம் வாரம், ஞாயிறு.

பி. 44, 5. 6.

ஏனெனில் நாம் அவருக்குள் பராபரனுடைய நீதியாகும்படி, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2 கொரி. 5, 21.

முன்னொரு சமயத்தில் இயேசுநாதர் சத்துராதிகளை நோக்கி, என்னில் ஒரு பாவம் உண்டென்று உங்களில் ஆர் என்னைக் குற்றம் பிடிப்பானென்று கேட்டிருந்தார். அப்போது ஒருவரும் அவரைக் குற்றம்பிடிக்கத் துணியவில்லை. அவர்கள் எல்லாரும் மௌனமாய் நின்றார்கள். அவர் உள்ளத்தில் கூட ஒரு பாவமான எண்ணமும் உண்டானதில்லை. தம்மைச் சோதிக்க வந்த பிசாசை அவர் துவக்கத்திலே எப்படித் துரத்திவிட்டார் என்று நாம் அறிவோம். அவர் ஒரு பாவத்தையும் அறியாதிருந்தும், பெரும் பாவி அடையவேண்டிய மரணத்தை அவர் அடைவதும், தேவ கோபம் அவரைச் சூழ்ந்து கொள்வதும் எவ்வளவு அதிசயம். இதின் முகாந்தரம் உனக்குத் தெரியுமா? பராபரன் அவரை நமக்காகப் பாவமாக்கினார் என்பதுதான் அதற்கு முகாந்தரம். அவர் பராபரனால் எல்லாரிலும் பெரிய பாவியாக எண்ணப்பட்டு, எல்லாரும் அநுபவிக்கவேண்டிய பாடுகளை அநுபவித்து எல்லாரையும் நித்திய கோபாக்கினைக்கு விலக்கிவிட்டார். பராபரன் ஒப்புக்கொள்ளக் கூடிய நீதி அவரால் நமக்கு இப்போது கிடைக்கும்.

இந்த நீதி உனக்குக் கிடைக்கவேண்டுமானால் நீ விசுவாசத்தினால் அவரைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள். பராபரன் பரிசுத்தர் என்றும், பாவிகளைத் தம்மண்டை வரவொட்டாமல் அவர்களைத் தம் முகத்தை விட்டுத் தள்ளிவிடுவார் என்றும் நீ நினைக்கும்போது உன் இருதயம் கலங்கும். ஆகிலும் உன் நிமித்தம் மரணத்தை அனுபவித்தவரை நினைத்துக்கொண்டு, அவருடைய திருமுகத்தைப் பார்த்துப் பராபரன் எல்லாப் பாவங்களையும் மன்னித்து உன்னைத் தமது பிரியமான பிள்ளையாக ஏற்றுக்கொள்வார் என்று நம்பு. இந்த நம்பிக்கையை நீ மரண அவஸ்தையிலும் இழந்து போகாதபடி சாக்கிரதையாயிரு.

நீ இனியும் பாவத்துக்கு ஊழியம் செய்ய விரும்பினால் பாவம் நீங்கிய அவரோடு எப்படி ஐக்கியம் பண்ணக்கூடும்? ஆகையால், நீ பரிசுத்தமாவதற்குப் பிரயாசப்படு. பரிசுத்தமாகுதல் இன்றி ஒருவனும் கர்த்தரைத் தரிசிக்கக்கூடாது. நமது பிரதான ஆசாரியராகிய இயேசுநாதர் ஒரே விசை தம்முடைய சுய இரத்தத்தால் பரிசுத்த ஸ்தலத்திலே நித்திய மீட்பை உண்டுபண்ணி உட்பிரவேசித்தார். பரிசுத்த ஸ்தலமாகிய அந்த இடத்துக்கு அவர் நம்மையும் அழைக்கிறார்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல் ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறீர். உம்முடைய ஒரே பேறான குமாரனை அவர்பேரில் விசுவாசிக்கிறவனெவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவதற்காகத் தந்தீர். இந்த உம்முடைய அளவிறந்த அன்பை நாங்கள் சதா காலங்களிலும் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம், சுவாமி, ஆமென்.

மத். 21, 18-46. அல்லது சங். 17. வாசிக்கவும்.

ஒருசந்தியின் மூன்றாம் வாரம், திங்கள்.

மி. 44, 7. 8.

பிரதான ஆசாரியன் மறு உத்தாரமாக அவனுடனே: நீ பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானோ என்று எங்களுக்குச் சொல்ல, ஜீவனுள்ள பராபரன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். இயேசு அவனுடனே: நீர் சொன்னபடியே; பின்னையும் உங்களுக்குச் சொல்லுகிறேன், இது முதற்கொண்டு மனுஷனுடைய குமாரனை வல்லமையின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கவும், வானத்தின் மேகங்கள்மேல் வரவுங் காண்பீர்கள் என்றார். மத். 26, 63. 64.

தாம் தேவனுடைய குமாரன் என்று நமது ஆண்டவர் அறிக்கையிட்டதினால் இக்காலத்தில் நமக்கு என்ன பிரயோசனம் என்று கேட்பாய், இவ்வறிக்கையிலேதான் எல்லாம் அடங்கி

யிருக்கிறது. நமது பாவம் எவ்வளவு பெரிதான சுமை என்று இங்கே கவனித்துப்பார். அதைச் சுமந்துதீர்க்க தேவகுமாரன் தாமே வரவேண்டியதவசியம். வேறொருவரும் அதற்கு உதவாது. இனி என்றென்றைக்கும் அழியாமல் உயிரோடிருக்கும்படிக்கு அவர்களில் யாரும் தன் சகோதரனை மீட்கவும், அவனை மீட்கும் பொருளைப் பராபரனுக்குக் கொடுக்கவுமாட்டான். ஏனெனில் அவர்கள் ஆத்தும மீட்பு என்றென்றைக்கும் நடவாதபடிக்கு விலையுயர்ந்ததாயிருக்கிறது. (சங். 49, 9. 10.) பாவம் அவ்வளவு பெரிதல்ல என்று சொல்லுகிறவர்கள் இதைக் கவனித்தால் நல்லது. வேறெந்தச் சிருஷ்டியும் நம்மை மீட்க முடியாது. தேவ குமாரன் ஒருவரே பாடுபட்டு மரித்து நம்மை மீட்கக் கூடியவர்.

இயேசுநாதர் அசட்டை பண்ணப்பட்டவரும் மனுஷரில் ஈனமானவருமானார். ஆகிலும் அவர் திரும்பவும் வந்து, தம்மை நித்திய தேவகுமாரனென வெளிப்படுத்துவார். ஒரு நாளில் மனுப்புத்திரர் எல்லாரும் கால்களிலும் கைகளிலும் ஆணிகளின் அச்சு உடையவரைக் காண்பார்கள். அவரை வானத்தின் மேகங்களில் நித்திய வல்லமையும் மகிமையும் உள்ளவராய் வரக் காண்பார்கள். அப்போது எல்லாரும் இவர்தான் பாவிகளுக்காகப் பாடுபட்டு மரித்தவர் என்று அறிந்துகொள்ளுவார்கள். இம்மையில் அவரை நம்பி அவரைத் தங்கள் இரட்சகராய் ஏற்றுக்கொண்டவர்கள் கெம்பீரித்து மகிழுவார்கள். அவரை இங்கே பரிகாசம் பண்ணின காய்பாவைப் போலொத்தவர்கள் திகிலினால் அழிந்துபோவார்கள். அவர்களுக்குத் தேவகுமாரனுடைய வாயிலிருந்து வரும் பயங்கரமான தீர்ப்பையன்றி வேறொன்றுங் கிடையாது. அவரை நம்புகிறவர்கள் இவ்வுலகில் அநியாயமாய்த் துன்பப்பட்டாலும் பிதாவின் இராச்சியத்தில் சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள்.

ஜெபம். சுவாமி, என் பேர் அக்காலமே ஜீவாகமத்தில் காண நீர் பட்ட காயங்களிலே ஒதுங்கிப் பக்தியான, விண்ணப்பத்துடனே கேட்கிறேன். ஆ, சுவாமி, உம்மைப் பற்றினேன், நீர் என்னைத் தள்ளமாட்டீர். சுவாமி, ஆமென்.

மத். 22, 1-22. அல்லது மாற். 1, 1-33. வாசிக்கவும்.

ஒருசந்தியின் மூன்றாம் வாரம், செவ்வாய்.

மி. 48, 1. 2.

அப்போது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான், இனிச் சாட்சிகள் நமக்குத் தேவையாயிருக்கிறதென்ன; இதோ, இவன் தூஷணிப்பை இப்

போது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்க் காணுகிறது என்றான். அதற்கு அவர்கள்: மரணத்துக்கு ஏதுவாயிருக்கிறானென்று பிரத்தியுத்தாரஞ் சொன்னார்கள். அப்போது அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள். சிலர் அவரை அறைந்து: கிறீஸ்துவே, உம்மை அடித்தவன் ஆர் என்று ஞானதிருஷ்டியால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். மத். 26, 65-68.

ஆ! உம்மைப் பட்சமான கர்த்தா! இத்தன்மையான வதைப்பாய் வாதித்தான் என்று நாம் கேட்கிறது நியாயம். நம்முடைய பாவங்களினால் அவர் இந்தப் பாடுகளின் பாதையில் செல்லவேண்டியதாயிற்று. தாம் சீவனுள்ள தேவனுடைய மெய்யான குமாரனென்பதைக் கர்த்தர் பரிசுத்த ஆணையினால் திட்டமாய்த் தெரிவித்தார். நம்முடைய இரட்சிப்புக்கு ஆதாரமான இந்தச் சத்தியத்திற்காக அவர் தம்முடைய சீவனைக் கொடுக்க மனதாயிருந்தார். அவர் சொன்னது தெய்வதூஷணம் என்று சங்கத்தார் தீர்த்தார்கள். கை கால் கட்டுண்ட இந்த மனுஷன் தெய்வ குமாரனா? ஒரு போதும் அல்ல என்று அவர்கள் நினைத்தார்கள். பிரதான ஆசாரியன் மாய்மால கோபங்கொண்டு தன் வஸ்திரத்தைக் கிழித்தான். ஆலோசனைச் சங்கத்தார் அவரை மரணத்திற்குள்ளாகத் தீர்த்தார்கள். எல்லாரும் அவர் முகத்தில் துப்பி அவரை அடித்தார்கள்.

அகசியா இராசாவின் சேவகர் எலியாவைப் பிடிக்க வந்த போது, வானத்திலிருந்து அக்கினி விழுந்து அவர்களைப் பட்சித்தது. இங்கே வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர்தாமே அடிமையுடைய சாயலை எடுத்து நிற்கிறார். அவர் எண்ணிறந்த அற்புதங்களினால் தாம் இவ்வுலகத்தைச் சேர்ந்தவரல்லவென்று காண்பித்தார். இப்போது மனிதர் அவருக்குக் காண்பித்த அவமரியாதையைச் சகித்தார். மறுரூபப்பட்ட மலையில் சூரியனைப்போல் பிரகாசித்த அவருடைய திருமுகத்தை அவர்கள் உமிழ் நீரினால் அவமானப்படுத்திக் கைகளினால் அடிக்க அவர் மௌனமாயிருந்தார். இந்தப் பாதகரைத் தண்டிக்க வானத்திலிருந்து ஒரு இடியாகிலும் விழவில்லை. அவர் பட்ட அவமானத்தைப் பார்க்கிற நாம், மனிதர் நமக்குச் செய்யும் அவமானத்தை இலேசு என்று நினைக்கவேண்டுமல்லவா? நாம் நித்திய அவமானத்திற்குத் தப்பிப் போவதற்கு, தேவகுமாரன் உலகம் பார்த்திராத அவமானத்தைச் சகிக்கவேண்டியதானால் நமக்கு நேரிடும் அவமானம் எவ்வளவு அற்பமென்றெண்ணவேண்டும். நாம் வையப்படும்போது பதிலுக்கு வையாமலும், பாடுபடும்போது மிரட்டாமலுமிருந்து, அவருடைய நாமத்தினிமித்தம் வரும் துன்பத்திலும் நிந்தையிலும் நமது சிறுமையைப் பொறுமையாகச் சுமந்து, அவரைப் பின்செல்லுவதினால் நமது நன்றியறிதலை அவருக்குக் காட்டுவோமாக.

ஜெபம். அருமை தேவகுமாரனே! உமது சத்துருக்களுக்குப் பயப்படாமல் நல்ல அறிக்கையைச் செய்தீர். நீர் தேவனுடைய ஒன்றான குமாரன் என்று எல்லா உலகத்தாரும் ஒப்புக்கொள்ளுவதற்குச் சீவனுள்ள பராபரன்மேல் ஆணையிட்டீர். நாங்கள் உம்மை விசுவாசித்து, நித்திய கோபாக்கினைக்குத் தப்பிக்கொள்ள எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி, ஆமென்.

மத். 22, 2[illegible]-46. அல்லது லூக். 3, 1-12. வாசிக்கவும்.

ஒருசந்தியின் மூன்றாம் வாரம், புதன்.

பி. 48, 3. 4.

அப்போது அவரைக் காட்டிக்கொடுத்த யூதா அவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக் காசைப் பிரதான ஆசாரியருக்கும் மூப்பருக்கும் திரும்பக் கொண்டுவந்து: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவம் செய்தேன் என்றான். அவர்களோ: எங்களுக்கென்ன, நீயே பார் என்றார்கள். அப்போது அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்தில் எறிந்து புறப்பட்டுப் போய் நான்றுகொண்டான். மத். 27, 3-5.

இயேசுநாதர் குற்றமற்றவர் என்று துரோகியாகிய யூதாவும் அறிக்கையிடவேண்டியது. ஆனால் இந்த அறிக்கை அவன் இரட்சிப்புக்கென்றல்ல ஆக்கினைக்கென்றே பலித்தது. அவன் குற்றமற்ற தன் குரு மரணத்துக்குள்ளாகத் தீர்க்கப்படக் கண்டு மலைத்துப்போனான். அவன் தன் பாவந் தீரக் கர்த்தரண்டை வரமாட்டான். தன்னை இரட்சிக்கக் கூடிய அவரை விட்டுத் தன்னைக் கெடுத்த பிசாசைத் தேடிப் போகிறான்.

தான் காட்டிக்கொடுத்த ஆண்டவருக்கு நேரிட்டது இன்னது என்று பார்த்தபோது, தன்னை ஆண்டவருக்கு முன்பாகத் தாழ்த்தாமல் தன்னைத்தானே இரட்சிக்கப் போகிறான். அவன் பணத்தைத் திரும்பக் கொண்டுவந்து, அநியாயக் கூலியைத் திரும்பக் கொடுத்துவிட்டால் குற்றம் நீங்கிவிடும் என்றும் கூலியைக் கொடுத்த பரிசேயர்மேல் அது சுமரும் என்று நினைத்தான். அவர்களோ அவனைப் பார்த்து நகைத்தார்கள். அப்போது அவன் ஆத்துமத்தின் வேதனையைப் பொறுக்க முடியாமலும் மறுபடி ஆண்டவரிடத்தில் சகாயத்தைத் தேடி வராமலும் பிசாசைத் தேடிப் போகிறான். உயிரோடிருந்து இனி என்ன பிரயோசனம் என்று சொல்லி அதை எறிந்துவிட்டான். ஐயோ! கண் கெட்ட மூடன்; பக்கத்தில் நிற்கிற இரட்சகரைக் கண்டு பிடிக்காமல் நித்திய அந்தகாரத்திற்குள் சாடி விழுகிறான்.

யார் தன் பாவத்தோடே கர்த்தரண்டை வராமலும் மன்னிப்பைக் கேட்காமலும் தன்னைத்தானே இரட்சிக்கப் பார்க்கிறானோ, அவன் யூதா சென்ற வழியில் செல்லுகிறான். உலகத்தில் ஒத்தாசை கிடைக்காத வேளையில் எத்தனையோ பேர் தற்கொலை செய்து ஜீவனுள்ள பராபரனுக்குத் தப்பிப் போகப் பார்க்கிறார்கள். இதற்குக் கிருபையுள்ள பராபரன் நம்மை விலக்கிக் காப்பாராக.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! உமது குமாரனைக் காட்டிக் கொடுத்தவனுடைய முடிவினால் எங்களை எச்சரித்து உமது நீதியையும் கோபத்தையும் காண்பித்தருளும். நாங்கள் உமது தண்டனைக்கு அஞ்சிச் சீக்கிரம் குணப்பட்டு நித்திய அழிவுக்குட்படாதபடி எங்களைக் காத்தருளும், சுவாமி, ஆமேன்.

மத். 23, 1-22. அல்லது லூக். 3, 13-35. வாசிக்கவும்.

ஒருசந்தியின் மூன்றாம் வாரம், வியாழன்.

பி. 48, 5, 6.

அப்பொழுது பிலாத்து அவர்களண்டை வெளியே வந்து: இந்த மனுஷன்பேரில் என்ன குற்றம் சாட்டிக்கொண்டு வருகிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: இவன் பொல்லாங்கு செய்தவனாயிராவிட்டால், இவனை உமக்கு ஒப்புக்கொடோம் என்றார்கள். அப்பொழுது பிலாத்து அவர்களுடனே: இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி இவனை நியாயந்தீருங்கள் என்றான். அப்பொழுது யூதர் அவனுடனே: ஒருத்தனையுங் கொல்ல எங்களுக்கு அடாது என்றார்கள். யோவான் 18, 29-31.

மனிதனுடைய குமாரன் புறச்சாதிகளுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்ற வார்த்தை இங்கே நிறைவேறிற்று. இஸ்ரவேலர் தங்கள் மேசியாவும் இராசாவுமானவரை வேண்டாம் என்று தள்ளிவிட்டுத் தங்களை ஆண்ட புறஜாதியாராகிய ரோமர் கையில் ஒப்புக்கொடுத்தார்கள். இவன் பொல்லாப்புச் செய்தவனாயிராவிட்டால் நாங்கள் இவனை உமக்கு ஒப்புக்கொடுத்திருக்கமாட்டோம் என்று ஜனத்தின் தலைவர் சொல்லிப் பிலாத்துவுக்குமுன் கர்த்தரை நிறுத்தி, அவரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்றிருந்தார்கள். அவர்கள் உண்மையுள்ளவர்களாயிருந்தால், நாங்கள் அவ்வளவு பொல்லாதவர்களாயிராதிருந்தால் அவரை ஒப்புக்கொடுத்திருக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லியிருப்பார்கள்.

இயேசு நாதர் பொல்லாங்கு செய்தவரா? அவர் சுகமாக்கின சப்பாணிகளும், குருடரும், குஷ்டரோகிகளும், வியாதியஸ்

தரும், அவர் ஆற்றித்தேற்றின துக்கப்பட்டவர்களுமாகிய எல்லாரும் எங்கே. எல்லாத்தையும் நன்றாக்கினார் என்று கூப்பிட்ட நீங்கள் எங்கே, என் ஜனமே! நான் உனக்குச் செய்ததென்ன, எதினாலே நான் உன்னை வருத்தப்படுத்தினேன். இதை எனக்குச் சொல்லு என்று பூர்வத்தில் ஒரு தீர்க்கதரிசி கேட்ட கேள்வியை இப்பொழுதும் கேட்கலாம். உலகம் முடிவுமட்டாக இயேசு நாதர்பேரில் உலகத்தார் பல விதமான குற்றங்களைச் சாட்டுவார்கள். அவர்கள் தங்களைக் கடிந்துகொள்ளுவதாகவும் வீணாய்ப் பயமுறுத்துவதாகவும் சொல்லி அவரை எப்படியோ போக்கிவிடப் பார்ப்பார்கள். அவர்மேல் சொன்ன குற்றங்களை எல்லாம் அவர்கள் கிறிஸ்தவர்கள் மேலும் சொல்லுவார்கள். கிறிஸ்தவர்கள் இயேசு நாதரைப் போல உலகத்தாரை அழிவுக்குப் போகும் வழியில் செல்லவொட்டாமல், அவர்களை எச்சரித்துக் கடிந்து கொள்வார்கள். இதின் நிமித்தம் உலகத்தார் கிறிஸ்தவர்களுக்கு இந்த உலகத்தில் இடம் கொடுக்கமாட்டார்கள். அஞ்ஞானிகளில் இருந்து வந்த நாமோ அவரை மறுபடி விடமாட்டோம். அவர் நமக்குச் சதாகாலங்களிலும் மேசியாவாகவும் இரட்சகராகவும் இருப்பாராக.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உம்மை விசாரித்த எல்லாரும் உம்மில் ஒரு குற்றமுமில்லை என்று ஒப்புக்கொண்டார்களே. பரிசுத்தரே! எங்கள் பாவங்களை மன்னித்து எங்களைக் குணப்படுத்திப் பரிசுத்தமாக்கியருளும், சுவாமி, ஆமேன்.

மத். 23, 23-39. அல்லது லூக். 6, 6-23. வாசிக்கவும்.

ஒருசந்தியின் மூன்றாம் வாரம், வெள்ளி.

பி. 48, 7. 8.

அப்பொழுது பிலாத்து மறுபடியும் அதிகாரவீட்டுக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்து, அவருடனே: நீ யூதருடைய இராசாவோ என்றான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: இதை நீராய்ச் சொல்லுகிறீரோ, அல்லது வேறே பேர்கள் என்னைக் குறித்து இதை உமக்குச் சொன்னார்களோ என்றார். பிலாத்து பிரத்தியுத்தாரமாக: நான் யூதனோ; உன் சாதியாரும் பிரதான ஆசாரியர்களும் உன்னை எனக்கு ஒப்புக்கொடுத்தார்கள்; என்ன செய்தாய் என்றான். இயேசு பிரத்தியுத்தாரமாக: என் இராச்சியம் இந்த லோகத்தினுடையதல்ல; என் இராச்சியம் இந்த லோகத்தினுடையதானால், நான் யூதருக்கு ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு, என் பணிவிடைக்காரர் போராடியிருப்பார்களே. இப்பொழுதோ என் இராச்சியம் இவ்விடத்தது அல்ல என்றார். யோ. 18, 33-36.

இயேசுவின் இராச்சியம் இவ்வுலகத்துக்கு அடுத்ததல்ல. அது பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ஸ்தாபிக்கப்படாமல் அதின் இராசனினுடைய பாடுகளினாலும் மரணத்தினாலும் ஸ்தாபிக்கப்பட்டது. அது வல்லமையினாலும் புஜ பல பராக்கிரமத்தினாலும் ஏற்படாமல் கிருபையின் எத்தனங்களாகிய வசனத்தினாலும் ஞானதிரவியங்களினாலும் ஏற்பட்டு விர்த்தியாகிறது. அது அழிந்துபோகும் ஆஸ்தியைக் கொடுக்காமல் பரம வரங்களாகிய நீதி, சமாதானம், சந்தோஷம் ஆகிய ஆவியின் கனிகளைக் கொடுக்கும். அது உலக கனத்தையும் புகழ்ச்சியையும் தருவதாகச் சொல்லாமல் எல்லாத்திற்கும் மேலான நித்திய மகிமையைத் தருவதாக வாக்களிக்கும்.

இயேசுவின் இராச்சியம் இவ்வுலகத்துக்கடுத்ததல்ல. என்றாலும் அது இவ்வுலகத்தின் நடுவில் இருக்கிறது. அது கண்ணுறக் காணவாராது. அது விசுவாசத்தின் மூலமாய் நமக்குள் இருக்கிறது. ஆகையால் அது உலக ராச்சியத்தைப்போல் அழிந்து போகாது. இவ்வுலகத்தின் பெலசாலிகள் ஏற்படுத்தின பெரிய இராச்சியங்கள் எங்கே? பொந்திய பிலாத்துவை எருசலேமில் துரையாக வைத்த ரோமருடைய இராச்சியம் எங்கே? அவை ஒழிந்துபோயின. இன்னம் வரப்போகிற இராச்சியங்களும் ஒழிந்துபோம். கிறிஸ்துவின் இராச்சியமோ நிலைநிற்கும். அது மற்ற இராச்சியங்களை எல்லாம் தன் வசமாக்கிக்கொள்ளும். அப்போது தானியேல் தீர்க்கதரிசியின் சொற்பனம் நிறைவேறும்.

இயேசு இராசா, ஒருநாள் எல்லாரும் காணக்கூடிய மகிமையோடு தோன்றுவார். அப்போது உலகத்தின் சகல இராச்சியங்களும் அவருடைய பாதத்தின் கீழ்க்கிடக்கும். அப்போது எல்லா மனிதரும் நியாயாதிபதியாகிய அவருக்குமுன் நிற்பார்கள். இப்போது அவரைப்பற்றி விசாரணை நடத்தின பிலாத்துவை அவருக்கு முன்பாக நிற்க வேண்டியது. இவ்வுலகத்துக்கடுத்தவர்களெல்லாரும் அந்த நாளை நினைத்து நடுங்கவேண்டும். இயேசுவின் இராச்சியத்தின்பேரில் பிரியம் வைக்கிறவர்கள் அந்த நாளை ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். இங்கே அவருடைய செங்கோலுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் அங்கே அவரைச் சந்தோஷத்தோடு இராசாவாக வாழ்த்துவார்கள்.

ஜெபம். மகிமையின் இராசாவே! தேவரீர், சத்தியத்துக்குச் சாட்சி பகர இவ்வுலகத்தில் வந்தீர். நாங்கள் உம்மையும் உமது இராச்சியத்தையும் நேசித்து அதில் பிரவேசிக்கப் பிரயாசைப்படுவதற்கு எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும்., சுவாமி, ஆமென்.

லூக். 21, 1-19. அல்லது லூக். 10, 1-32. வாசிக்கவும்.

ஒருசந்தியின் மூன்றாம் வாரம், சனி.

பி. 54, 1. 2.

அப்போது பிலாத்து அவருடனே: ஆனால் நீ இராசாவோ என்றான். இயேசு பிரத்தியுத்தாரமாக: நீர் சொல்லுகிறபடி நான் இராசாதான். சத்தியத்துக்குச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காக இந்த உலகத்திலே வந்தேன்; சத்தியவான் எல்லாம் என் சத்தங்கேட்கிறான் என்றார். பிலாத்து அவருடனே: சத்தியம் என்ன என்று சொல்லி, மறுபடியும் யூதரண்டை புறப்பட்டுப்போய், அவர்களுடனே: "நான் அவனில் ஒரு குற்றமுங் காணேன்" என்றான். யோ. 18, 37. 38.

இயேசுநாதர் குற்றம் இல்லாதவர் என்பதற்குப் பொந்திய பிலாத்துவும் சாட்சி பகருகிறான். அவன் அவரைப் பற்றித் தீர்ப்புச் சொல்லும்படி யூதர்கள் அவரை, அவன் முன்பாக நிறுத்தினார்கள். அவனோ, அவனில் நான் ஒரு குற்றமுங் காணேன் என்று தீர்க்கிறான். அப்படித் தீர்த்தும், அவரைச் சிலுவையில் அறையும்படியாய் உத்தரவு செய்தான். காரணம் என்ன? அவன் இவ்வுலகத்தில் சுகமாய் வாழ விரும்பினான். அவன் தன் ஆத்துமத்தை விடுதலையாக்கும் சத்தியத்தைக்குறித்து விசாரியாமல் போனபடியினால் தனக்குத் தெரிந்த சத்தியத்தையும் அநுசரியாமல் பொய்த் தீர்ப்புச் சொல்லும்படியாய் நேரிட்டது. அவன் மனிதருக்குப் பயந்து அவரைச் சனங்கள் கையிலே ஒப்புக்கொடுத்தான். பிலாத்து இரட்சிப்புக்கு வெகு சமீபமாயிருந்தான். அவனில் ஒரு குற்றத்தையும் காணேன் என்று அவன் சொன்னபோது, இரட்சகர் அவன் இருதயத்தைத் தட்டவில்லையா? ஆனால் அவன் மனச்சாட்சியின் சத்தத்தைக்கேளாமல், வலிய இரட்சிப்பைத் தள்ளிவிட்டான்.

இயேசுநாதர் உனக்கு முன்பாகவும் நின்று உன்னுடைய ஆத்துமத்தையும் இரட்சிக்கப் பார்க்கிறார். நீ என்னைப்பற்றி என்ன நினைக்கிறாய்? நீ என்னைத் தள்ளிவிடுகிறாயா அல்லது ஏற்றுக்கொள்ளுகிறாயா என்ற கேள்வியினால் அவர் உன்னை ஒரு தீர்ப்புச்சொல்லச் சொல்லுகிறார். நீ உண்மையுடையவனாய் மனஸ்தாபத்தோடு, உமது மரணத்திற்கு என் பாவமும் அக்கிரமமுந்தான் காரணம் என்று தீர்ப்பாயானால், நீ அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய பாதத்தில் விழுந்து, அவரை இராசாவும் கர்த்தருமாக வணங்கி ஆராதித்து, அவருடைய கசப்பான பாடுகளில் பங்கு பெற்று, நியாயத்தீர்ப்பின் நாளிலே, அவனில் ஒரு குற்றமுங் காணேன் என்கிற தீர்ப்பைக் கேட்பாய். அந்தத் தீர்ப்பைக் கேட்பவர்கள் பாக்கியவான்கள்.

ஜெபம். குற்றம் அற்ற இயேசுவே! தேவரீர் எங்கள் நிமித்தம் பாவிகளின் சகல நிந்தையையும், சிலுவை மரணத்தையும் அநுபவித்

தீர். எங்களுக்குப் பரம இராச்சியத்தைச் சம்பாதிக்க மரித்தீர். உமது திரு நாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக, ஆமேன்.

லூக். 21, 20-38. அல்லது லூக். 11, 1-31. வாசிக்கவும்.

ஒருசந்தியின் நாலாம் வாரம், ஞாயிறு.

பி. 54, 3. 4.

மெய்யாகவே நம்முடைய பலவீனங்களை அவர் ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோவுகளைச் சுமந்தார்; நாமோவெனில் அவர் பரமபரனால் அடிபட்டு தேவனால் வாதிக்கப்பட்டாரென்று எண்ணினோம். ஆனால் அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசா. 53, 4. 5.

நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் காயப்பட்டு, நம்முடைய பாவங்களினிமித்தம் நொறுக்கப்பட்டார். நாம், நாமே நம்முடைய பாவங்களினால் அவரைப் பிரயாசப்படுத்தினோம். ஆ! நம்முடைய குற்றம் எவ்வளவு பெரியது! நம்மால் மரணத்தை அடைந்த இரட்சகர் நமக்கு நன்றுள ஆறுதல். இனி நாம் சாத்தானால் காயப்பட்டு, நொறுக்கப்படமாட்டோம். அவருடைய தழும்புகளால் குணமானோம். இனி நாம் பாவத்தால் வியாதிப்படாமல் பூரண சுகத்தை அடைவோம். வாருங்கள், பிரயாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களாகிய நீங்களெல்லாரும் வந்து உங்களை முசிப்பாற்றக் கூடியவரைப் பாருங்கள். இனி நீங்கள் நம்பிக்கையற்றுப் போகவேண்டாம். மரண வேதனையையும் அமர்த்தி, நித்திய ஜீவனை உங்களுக்குக் கொடுக்கக் கூடியவரைப் பாருங்கள். இனிக் கடைசிநாளுக்குப் பயப்படவேணுமோ? இனிப் பிசாசுக்கு உங்கள்மேல் பாத்தியம் இல்லை. பூரண ஈடு செலுத்தினவர் உங்களுக்கு அடைக்கலமானவர். ஆ! இந்த அன்பை அளவிடக் கூடுமானார்? இந்த இரக்கத்தைப்பார்த்து, மனதுருகாதவர்? நீங்கள் இனித் தாமதம்பண்ணி, நின்று விழிப்பீர்களா? இனி லோகத்தில் உங்கள் ஆத்துமத்துக்காகத் திருப்தியைத் தேடுவீர்களா? மோசம் போகாதிருங்கள். வாருங்கள்! வாருங்கள்! உங்களை மீட்டவர் உங்களுக்குக் காத்திருக்கிறார். உங்களுக்கு நித்திய சமாதானம் வேண்டுமானால் அவர்மேல் இறங்கின ஆக்கினையைப் பாருங்கள். இப்பேர்ப்பட்ட ஆக்கினைக்குத் தப்பிப்போக உங்களுக்கு மனதில்லையா? எப்படித் தப்பிப்போகலாம் என்று கேட்கிறீர்களோ? அவருடைய ஆக்கினையை உங்கள் ஆக்கினையாக எண்ணிக்கொள்ளுங்கள். அவருடைய

ஆக்கினையால் உங்களுக்குப் பாவமன்னிப்பும் சமாதானமும் கிடைத்துப்போச்சுது. ஆதலால் இவ்வசமாய் நித்திய பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள ஓடி வாருங்கள்.

ஜெபம். சமாதானப்பிரபுவே! நாங்கள் உம்மைப் பணிந்துகொண்டு உமது வேதனைகளுக்காகவும் கசப்பான மரணத்திற்காகவும் உம்மைப் புகழுகிறோம். தேவரீர் உமது திரு இரத்தத்தால் மீட்ட எங்களுக்கு நித்திய சமாதானத்தைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

மத். 24, 1-28. அல்லது சங். 145. வாசிக்கவும்.

ஒருசந்தியின் நாலாம் வாரம், திங்கள்.

பி. 54, 5. 6.

அவர் ஏரோதேயின் அதிகாரத்துக்கு உள்ளானவர் என்று அறிந்து, அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதே அண்டை அவரை அனுப்பினான். ஆனால் ஏரோதே இயேசுவைக் கண்டபோது மிகுதியுஞ் சந்தோஷப்பட்டான்; ஏனெனில் அவரைக்குறித்து அவன் அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்தபடியினாலே, வெகுநாளாய் அவரைக்காண ஆசையாயிருந்து, அவராலே செய்யப்படும் யாதொரு அடையாளத்தைப் பார்க்கலாமென்று நம்பினான். அநேக வார்த்தைகளினாலே அவரைக் கேட்டான்; அவரோ அவனுக்குப் பிரத்தியுத்தரம் ஒன்றும் சொல்லாதிருந்தார். லூக். 23, 7-9.

கர்த்தர் அநேகருக்காக நிந்தைப் பாடுபட்டார். இதுதான் எல்லா வேதனைகளையும் பார்க்க அவருக்குப் பெரியவேதனை. ஏரோது இராசா இரட்சிக்கப்படாதவர்களில் ஒருவன். இயேசுவைப்பார்த்தபொழுது நிரம்பவும் சந்தோஷப்பட்டான். அவன் அவரைக்குறித்து அநேககாரியங்களைக் கேள்விப்பட்டிருந்தான். இயேசுநாதரைப்பற்றிக் கேள்விப்படுவதே இரட்சிப்பின் துவக்கம். ஆனால் ஏரோதுவின் சந்தோஷம் வேறே. அவனுடைய ஆசையும் சகேயுவின் ஆசையும் வேறே. ஏதோ ஒரு வேடிக்கையைப்பார்க்கவும், பிரபுக்களின் கூட்டத்தைச் சந்தோஷிப்பிக்கும்படியான ஒரு பெரிய அடையாளத்தை அவரிடத்தில் கேட்கவும் நினைத்தான். இயேசுநாதர் அவனிஷ்டப்படி செய்திருந்தால் ஒருவேளை அவன் அவரை விடுதலையாக்கியிருப்பான்.

ஆ, இரத்தப்பழி நிறைந்த இந்த அக்கிரமக்காரனுக்கு இந்நேரத்தில் இரட்சிப்பு சமீபித்திருந்தது. அவன் புத்தியீனமாய் அந்த நேரத்தை வீணாய்ப் போக்கிவிட்டான். இயேசுநாதரோ மௌனமாய் ஒரு உத்தரவும் சொல்லாதிருந்தார். இப்படிப்பட்ட பக்தியற்ற பரிகாசக்காரருக்கும், அசட்டைக்காரருக்கும்,

தேவன் ஒரு வார்த்தையும் சொல்லமாட்டார். பிற்பாடு ஒரு நாளில் அவர்களோடே கோபமாய்ப் பேசுவார். அந்நாளில் அவர் கேட்கும் ஆயிரம் கேள்விகளுக்கு ஒரு வார்த்தையும் அவர்கள் பதில் சொல்லமாட்டார்கள். நாமோ இப்போது அவருடைய சத்தத்தைக்கேட்டு அதற்குச் செவிகொடுத்து இந்த உலகத்தின் வீண் ஆடம்பரத்தைவிட்டு அவரைப் பின்செல்வோமாக.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உமது சத்துருக்களுக்கு முன்பாக நின்று, அவர்கள் பரிகாசத்தைச் சகித்து, மௌனமாயிருந்தீர். ஆ! கர்த்தாவே, நாங்கள் இரட்சிப்பின் நாளை, வீணாய்க் கழிக்காமல் சீக்கிரம் குணப்படுவதற்கு எங்களை வழி நடப்பியருளும், சுவாமி, ஆமென்.

மத். 24, 29-51. அல்லது லூக். 12, 1-28. வாசிக்கவும்.

ஒருசந்தியின் நாலாம் வாரம், செவ்வாய்.

ஏ. 48, 9. 10.

அவர்கள் கூடியிருக்கையில், பிலாத்து அவர்களுடனே: நான் எவனை உங்களுக்கு விடுதலை பண்ணவேண்டுமென்றிருக்கிறீர்கள்; பரபாவையோ அல்லது கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ என்றான். அதேனெனில் பொறாமையினாலே அவரை ஒப்புக் கொடுத்தார்கள் என்று அறிந்தான். அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய பெண்சாதி அவனுக்கு ஆளனுப்பி: உமக்கும் அந்த நீதிமானுக்கும் ஒன்றும் வேண்டாம்; ஏனென்றால் இன்று சொற்பனத்தில் அவர் நிமித்தம் வெகு பாடுபட்டேனென்று சொல்லச் சொன்னாள். பிரதான ஆசாரியர்களும் மூப்பரும், பரபாவை விடக்கேட்பதற்கும் இயேசுவையோ கொல்லுவதற்கும் கும்புகளைச் சம்மதப்படுத்தினார்கள். தேசாதிபதி உத்தரமாக அவர்களுடனே: இந்த இருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலைபண்ண வேண்டுமென்றான். அவர்கள்: பரபாவை என்றார்கள். மத். 27, 17-21.

ஜனங்கள் இயேசுவைப் புறக்கணித்துக் கொலைபாதகனாகிய பரபாவை விடுதலைபண்ணக் கேட்டார்கள். ஒரு ஜாதி இப்படி மதிகெட்டு, மாட்டுமையைத் தள்ளி, அக்கிரமக்காரனைத் தெரிந்து கொண்டதுண்டா? அவ்வளவு புத்திகெட்ட ஜனங்கள் இக்காலத்திலுமுண்டு. கிறிஸ்தவர்கள் பக்திருடைய சுவிசேஷத்தை விட்டு அக்கிரமக்காரரால் ஏவப்பட்டுத் துன்மார்க்கமாய் நடப்பது இப்போதும் உண்டு. உனக்குருமையான தோழர் யார்? அவர்கள் தேவபக்தியுள்ளவர்களா? அல்லது தேவவசனத்தையும் ஜெபத்தையும் அசட்டைபண்ணுகிறவர்களா? வீட்டிலே உன் தோழர் ஆர்? நீ, நல்ல புத்தகங்களைச் சந்தோஷமாய் வாசிக்கிறாயா? அல்லது

அருவருப்பான அசுத்த காரியங்கள் நிறைந்த புத்தகங்களை வாசிக்கிறாயா? உன் இருதயத்தில் நல்ல எண்ணங்களா? அல்லது தேவனுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் உன்னை வெட்கப்படுத்தத் தக்க எண்ணங்களா? நீ துன்மார்க்கரோடு சேர்ந்து துன்மார்க்கத்தைத் தெரிந்துகொண்டால், எருசலேம் பட்டணத்தார் செய்த தீர்ப்பைப்பார்.

நாம் இங்கே பார்க்கிற அதிசயம் என்ன? ஜனங்கள் தீர்த்ததுபோல் பராபரனும் தீர்த்தார். அவருடைய சிம்மாசனத்துக்கு முன்பாகப் பாவத்தின்மேல் பாவத்தைக் குவித்த மானிட ஜாதியும், அவருடைய அருமையான பரிசுத்த குமாரனும் நின்றார்கள். அப்போது அவர் தமது குமாரனைப் பிடித்து மரணத்திற்கு ஒப்புக்கொடுத்துப் பாவத்தினால் கெட்டழிய வேண்டிய நம்மை விடுதலையாக்கினார். நீ இதைத் தியானிக்கும்போது தேவ இரக்கத்தின் ஆழத்தைக் கவனித்துப் பார். அவர் நம்முடைய பாவத்தையெல்லாம் தமது பிள்ளைமேல் சுமத்தினார். உன்னை அவ்வளவாகச் சிநேகித்த அவரை நீ தாழ விழுந்து வணங்கு; கொலைபாதகமும் மற்ற எல்லாப் பாவங்களும் நிறைந்த உன் இருதயத்தை அவர் சுத்திகரிப்பதற்கு அவருக்குத் தா. புத்தி தெளிந்து, உன் கேட்டை அறிந்து அவரிடத்தில் சகாயத்தைத் தேடி வா.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! உமது நேச குமாரனை எங்கள் பாவங்களின் நிமித்தம் மரணத்துக்கொப்புக் கொடுத்து, எங்களைப் பாவத்திற்கும், மரணத்திற்கும், பிசாசின் வல்லமைக்கும் விடுதலையாக்கினதற்காக உமக்குஸ்தோத்திரம். தேவரீர், நாங்கள் எங்கள் பாவங்களை வெறுத்து, உமது குமாரனை எங்கள் இரட்சகராகத் தெரிந்து கொள்ள எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

மத். 25, 1-30. அல்லது லூக். 13, 1-25. வாசிக்கவும்.

ஒருசந்தியின் நாலாம் வாரம், புதன்.

ஏ. 48, 11 12.

பிலாத்து ஒன்றும் ஆகாமல், கலகம் அதிகப்படுகிறதென்று கண்டு, தண்ணீரை அள்ளி, கும்புக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தத்திற்கு நான் குற்றமற்றவன்; நீங்களே பாருங்களென்றான். சனம் எல்லாம் பிரத்தியுத்தரமாக: அவனுடைய இரத்தம் எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்றார்கள். அப்போது அவன் பரபாவை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தான். மத். 27, 24-26.

தன்மேல் வரும் குற்றத்தை நீக்கப் பிலாத்து வெகு ஆவலாயிருந்தான். அதை லேசாய் நீக்கலாம் என்று நினைக்கிறான். அவன் தன் கைகளைக் கழுவினால் தன் மனச்சாட்சியும் சுத்தமாகும் என்று எண்ணுகிறான். இவன் மோசம்போன பேதை. உலகத்திலுள்ள தண்ணீரெல்லாம் அவனைப் பாவமறக் கழுவப் போதாது. அவனுக்கிருந்த தப்பான நம்பிக்கை அநேகருக்குண்டு. அவர்கள் தாங்கள் செய்த குற்றத்தைப் பிறர்மேல் சாட்டிவிட்டுத் தங்களைக் குற்றமற்றவர்கள் என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆதாம் ஏவாளைக் குற்றப்படுத்தினதுபோல புருஷன் தன் பெண்சாதியையும், பிள்ளைகள் தங்கள் பெற்றோரையும், சிநேகிதன் தன் சிநேகிதனையும் குற்றப்படுத்துவார்கள். ஜனங்கள் பிலாத்துவை இந்த அநியாயத் தீர்ப்புக்கு ஏவினது மெய்தான்; ஆகிலும் அவன் அவர்களுக்குச் செவிகொடுக்க அவசியமில்லை. ஆனால் பாவத்தின் கட்டு அதிபலமுள்ளது. அதை அவிழ்க்க யாரால் கூடும்?

தங்கள் பாவங்களில் மேன்மைபாராட்டி, தேவனுடைய நியாயத்தீர்ப்பை நகைத்து, யூதருடைத்தைப்போல், பிடிவாதமுள்ள முரட்டுப் பாவிகள் இக்காலத்திலும் உண்டு. அவர்களுக்கு விலகிப்போ, எருசலேம் பட்டணத்தார் மதிகெட்டுத் தங்கள்மேல் வருவித்துக் கொண்ட இயேசுவின் இரத்தப்பழி, காற்பது வருஷங்களுக்குப் பிறகு அவர்கள்மேல் இறங்கிற்று. அவ்வாறே கர்த்தருடைய ஏனில் பரிகாசக்காரர்மேல் இரக்கமற்ற நியாயத்தீர்ப்பு இறங்கும்.

அவருடைய இரத்தம் எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் வருவதாக என்று நீ வேறே கருத்தில் வேண்டிக்கொள். ஆண்டவரே, நீர் உம்முடைய இரத்தத்தை எனக்காகச் சிந்தினீர். எனக்குச் சமாதானம் உண்டாக நீர் தண்டனைப் பட்டீர். ஆகையால் நியாயத்தீர்ப்பின் நாளில் நான் குற்றமற்றவனாக நிற்கவும், உமது இராச்சியத்தில் நித்தியமாய் வாழவும், என் பெரிய குற்றங்களிலிருந்து உமது அருமையான இரத்தத்தினால் என்னைக் கழுவிச் சுத்திகரியும் என்று ஜெபி.

ஜெபம்: அன்புள்ள இயேசுவே! உமது குற்றமற்ற பாடுகளினாலும் மரணத்தினாலும் மீட்கப்பட்ட நாங்கள் உம்மைப் பணிந்துகொள்ளுகிறோம், உமது திரு இரத்தத்தினால் எங்களுக்கு நித்திய ஆறுதலையும் சமாதானத்தையும் தந்தருளும், தயவாய், ஆமேன்.

மத். 25, 31-46. அல்லது லூக். 14, 1-35. வாசிக்கவும்.

ஒருசந்தியின் நாலாம் வாரம், வியாழன்.

பி. 48, 13. 14.

அப்போது துரையின் சேவகர் இயேசுவை அதிகாரச்சாலையிலே கொண்டுபோய், சேர்வையை எல்லாம் அவரைச்சூழக்கூட்டி, அவர் வஸ்திரங்களைக்களைந்து, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுக்களால் ஒரு முடியைப்பின்னி அவர் சிரசின்மேல் வைத்தார்கள். மத். 27, 27-29.

முண்முடி சூடுண்ட இயேசுவைப் பார். இந்தக் காட்சி அலங்கோலமாயிருந்தும் நம்மை ஆற்றித்தேற்றுகிறது. அளவற்ற நிந்தைக்கு அடையாளமாகிய முள்முடியைப் பார்க்கிற நாம் வெட்கப்படுவது நியாயம். அப்படி முண்முடி சூடி நிற்க வேண்டியவர்கள் நாமே. ஆனால் தமது முள்கிரீடத்தினால் நமக்கு நித்திய ஜீவகிரீடத்தை அவர் சம்பாதித்தார் என்று நாம் நம்பி ஆறுதலடைகிறோம்.

மேலும் நாமும் இவ்வுலகில் முள்கிரீடத்தைத் தரித்திருக்க வேண்டும். உண்மையான கிறிஸ்தவனுக்குத் துன்பமேயன்றி, இன்பம் இங்கே கிடையாது; முள்கிரீடத்தைத் தரித்த நம்மைப் பராபரன் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டுவார் என்று அறிவோம். நீ எல்லார் மேலும் அன்புகூர ஆசையாயிருக்கிறாய். ஆனால் அவர்கள் உன் அன்புவேண்டாம் என்று சொல்லுகிறார்கள். உன் அன்பு கடின நெஞ்சை உருகப்பண்ணாத நேரத்திலும், நீ செய்த நன்மைக்கு உலகத்தார் நன்றி கேட்டைச் செய்யும்போதும், உன் நல்ல நோக்கங்களுக்குக் கெட்ட அர்த்தம் சொல்லுகையிலும் நீ கிறிஸ்துவை நோக்கிப்பார். அவர் லோகத்தை எவ்வளவு நேசித்தார். அவருக்கு முள் கிரீடம்தான் கிடைத்தது. உன் பாதையிலும் ரோசாப் புஷ்பம் தெளித்திருக்கிறதில்லை. உன் பாதத்தைப் புண்படுத்தும் முட்களே கிடக்கின்றன. உன் நிலத்தில், நல்ல பயிருக்குப் பதிலாக முள்ளும் நெரிஞ்சிலும் முளைத்துத் துன்மார்க்கரும் பொறுமையும், மனதைப் புண்ணாக்கும் தூஷணவார்த்தைகளும், உன் கீர்த்தியையும் பேரையும் கெடுத்தால், முண்முடி தரித்த இயேசுவை நோக்கிப் பார். முன்னணை துவக்கிச் சிலுவை பரியந்தம் அவருடைய பாதை முள் நிறைந்த பாதையாயிருந்தது. இவ்வுலகப் பாடுகளினால் நீ கல்லறை மட்டும் கண்ணீர்விட்டு, வியாதியினால் உபத்திரவப்பட்டு, எல்லா நம்பிக்கையும் அற்றுப் போகநேரிட்டாலும் முண்முடி சூடுண்ட இயேசுவை நோக்கிப்பார். அவர் பாடுகளின் வழியாய் மகிமைக்குள் பிரவேசித்தார். இதுவே உனக்கும் வழி. அவரோடு கூடப் பாடுபடுகிறவர்கள் அவரோடு கூடக் கிரீடம் தரித்து வாழ்வார்கள்.

செபம். முண்முடி சூடின இயேசுவே! நாங்கள் உமது பாதத்தில் விழுந்து உம்மைப் பணிந்து கொள்ளுகிறோம். உமது முள்கிரீடத்தினால் தேவரீர் சம்பாதித்த மகிமையின் கிரீடத்தை எங்களுக்குத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

மத். 26, 1-29. அல்லது வாச். 16, 1-33. வாசிக்கவும்.

ஒருசந்தியின் நாலாம் வாரம், வெள்ளி.

பி. 42, 1. 2.

அப்போது மறுபடியும் பிலாத்து வெளியே வந்து, அவர்களுடனே: இதோ, நான் அவனில் ஒரு குற்றத்தையுங் காணேனென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்களுக்கு அவனை வெளியே கொண்டு வருகிறேன் என்றான். அப்படியே இயேசு முண்முடியுஞ் சிவப்புச்சட்டையுந் தரிக்கப்பட்டவராக வெளியே வந்தார். அப்போது அவர்களுடனே: இதோ, இந்த மனுஷன் என்றான். யோ. 19, 4. 5.

இதோ, இந்த மனுஷன் என்று பிலாத்து சொன்னபோது, தன் விரோதத்தையும் பகையையும் காட்டினது அல்ல, இயேசுவை யூதருடைய கையிலிருந்து இரட்சிப்பதே அவனுடைய நோக்கம். ஆயினும், இவர் குற்றம் அற்றவரோ உள்ளவரோ என்றறிய மனமற்று, இரத்தப்பிரியமுள்ள ஞாயையொத்து, அவர்கள் இந்த ஆட்டுக்குட்டியை விழுங்கிவிடமனதாய் அவரைச் சிலுவையிலறையும் சிலுவையிலறையும் என்று கூப்பிட்டார்கள். இதற்குப் பிலாத்து ஒன்றுஞ் செய்யமுடியாமல் அவர்கள் கேட்டபடி அவர்களுக்கு இயேசுவை ஒப்புக்கொடுக்க வேண்டியவனானான்.

இதோ, இந்த மனுஷன் என்கிற சத்தம் நம்முடைய செவியிலும் இருதயத்திலும் ஓயாமல் தொனிப்பது நல்லது. நாம் லோகத்தோடு உல்லாசமாய் ஒட்டிக்கொள்ளுகிறோம்; அவரோ பாடுபடுகிறார். நாம் ரோசா புஷ்பங்களுக்கிடையில் விளையாடுகிறோம். அவரோ முட்களால் குத்தப்பட்டு இரத்தம் ஒழுக நிற்கிறார். நாம் கீர்த்திப் பிரியராய் வெற்றிமாலை சூட ஆசைப்படுகிறோம். அவர் சிரசோ முட்களால் அழுத்தப்படுகிறது. நாம் நம்முடைய ஆபரணங்களோடும் வஸ்திரங்களோடும் மாயைக்கு அடிமையாயிருக்கிறோம். அவரோ பரிகாச வஸ்திரத்தைத் தரித்து நிற்கிறார். பிலாத்து சொன்ன வார்த்தை நம்மைக் குணப்படுதலுக்கும் விசுவாசத்திற்கும் ஏவுகிறதில்லையா? அவர் குற்றம் இல்லாதவராய் என் குற்றத்திற்காக ஈடு செலுத்தினார். அவர் சிவப்பு அங்கியைத் தரித்ததினால் நீதியின் அங்கியை எனக்குச்

சம்பாதித்தார். நான் கடைசிநாளில் பிதாவுக்கு முன்பாக வெட்கத்தோடு நிற்காதபடி அவர் இப்போது சொல்லி முடியாத வெட்கத்தோடும் அவமானத்தோடும் நிற்கிறார்.

இதோ, இந்த மனுஷன் என்று நியாயத்தீர்ப்பின் நாளில் என்னைச் சுட்டிக்காட்டி ஒருவனும் சொல்லாவண்ணம் எல்லாரும் இப்போது அவரைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

செபம். மெய்யான தேவனும் மனுஷனுமாகிய இரட்சகரே! உமது பாடுகளினாலும் மரணத்தினாலும் உம்மைப் பலியிட்டு மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தீர். நாங்கள் உமது மூலமாய்ப் பிதாவுக்குமுன் நீதியாக வெளிப்பட எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி, ஆமேன்.

லூக். 22, 1-38. அல்லது வாச். 17, 1-28. வாசிக்கவும்.

ஒருசந்தியின் நாலாம் வாரம், சனி.

பி. 42, 3. 4.

அப்போது பிலாத்து அவருடனே: எனக்குச் சொல்லாயோ; உன்னைச் சிலுவையிலறைய எனக்கு அதிகாரம் உண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரம் உண்டென்றும் அறியாயோ என்றான். இயேசு பிரத்தியுத்தாரமாக: மேலே இருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என் பேரில் உமக்கு அதிகாரம் ஒன்றும் இல்லை; ஆனபடியினாலே, என்னை உமக்கு ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார். யோ. 19, 10-11.

இயேசுவைச் சிலுவையில் அறைவதா அல்லது விடுதலை பண்ணுவதா என்று பிலாத்து தீர்க்கப்போகிறபோது, இரண்டில் ஒன்று செய்யத் தனக்கு அதிகாரமுண்டு என்று நினைத்தான். அவனைப்போல் அநேகர், நன்மையையாவது தீமையையாவது செய்யத் தங்களுக்கு அதிகாரமுண்டென்று நினைக்கிறார்கள். இவர்கள் பாவத்தின் வல்லமையையும் தங்கள் அடிமைத்தனத்தையும் அறியாதவர்கள். ஜனத்துக்கு அவ்வளவு தூரம் செவிகொடுத்த பிலாத்து இன்னமும் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இப்படி அற்பகாரியத்துக்காக ஒருவன் செம்மையான வழியை விட்டு ஓரடி விலகிப் போவானானால், அவன் சேற்றிலும் உளையிலும் சரிந்து விழுந்து ஒருபடி எழுந்திருக்கமாட்டான். ஒரு விசை மாத்திரம் மற்றவர்களைப்போல் இச்சைக்கு இடங்கொடுத்தால் என்ன என்று சொல்லுகிறவன் சீக்கிரம் தன்னால் முறிக்க முடியாத சங்கிலியில், தான் அகப்பட்டிருப்

தை உணர்வான். ஓர் ஆபத்திற்குப் பொய் சொன்னால் என்ன என்று சொல்லுகிறவன் ஒரு பொய்க்கு ஐம்பது பொய் சொல்ல அஞ்சாமல் அநேக மோசங்களில் சிக்கிக் கொள்வான். ஆகையால் பிலாத்துவைப்போல் நீ பாவத்தோடு விளையாடாதே. அவனுக்குப் பாவத்தின் பேரில் அதிகாரம் இல்லாமல், பாவம் அவன் மேல் அதிகாரம் செலுத்தினது. பாவமோ இப்போதும் சர்வ வல்லமையுள்ள பராபரனுக்கு ஊழியம் செய்து அவருடைய இரட்சிப்பின் ஆலோசனையை நிறைவேற்ற உதவியாயிருக்க வேண்டும். இதனாலே கிறிஸ்தவர்களாகிய நாம் பெரிய ஆறுதலை அடையலாம். பாவக் கட்டில் சிக்கிக்கொண்ட உலகமானது நம்முடைய இரட்சிப்பையும் விசுவாசத்தையும் கெடுக்கமுடியாது. ஜாதிகள் கொந்தளித்து, பூமியின் இராசாக்கள் எழும்பினாலும், பரமண்டலங்களில் வாசமாயிருக்கிறவர் நகைக்கிறார்.

ஜெபம். சர்வவல்லமையுள்ள பராபரனே! தேவரீர் உமது பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் உமது இராசாவை அபிஷேகம் பண்ணினீர், நாங்கள் பயத்துடனே உமக்கு ஊழியம் செய்து அவரை எங்கள் இராசாவாக அண்டிக்கொள்ள எங்களுக்குமது ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 13, 1-17. அல்லது லூக். 19, 9-29. வாசிக்கவும்.

ஒருசந்தியின் ஐந்தாம் வாரம், ஞாயிறு.

பி. 42, 5. 6.

விசுவாசத்தைத் தொடங்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கிப் பார்க்கக் கடவோம். அவர் தமக்கு முன்பாக வைத்திருந்த சந்தோஷத்துக்காக இலச்சையை எண்ணாமல், சிலுவையைச் சகித்துப் பராபரனுடைய ஆசனத்தின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். ஆகையால் உங்கள் ஆத்துமங்களில் நீங்கள் இளைத்துப்போய் விடாதபடி, நீங்கள், தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் உண்டான இப்படிக்கொத்த எதிர்ப்பேச்சைச் சகித்தவரைத் தியானித்துக் கொள்ளுங்கள். எபி. 12, 2. 3.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்போல், எதிர்ப்பேச்சைச் சகிக்கவேண்டும். அவரிடத்தில் நன்மை பெற்ற பாவிகள் அவரோடு எதிர்த்துப் பேசும்போது அவருக்கு வெகு மனவருத்தம் உண்டாகும். அவர் வியாதியஸ்தரைச் சுகமாக்கினார். ஜனங்களோ எதிர்த்துப் பேசி அவன் பிசாசுகளின் தலைவனைக்கொண்டு பிசாசுகளைத் துரத்திவிடுகிறான் என்று சொன்னார்கள். அவர் கெட்டுப்போனவர்களைத் தேடிப்போனார். பரிசேயரோ எதிர்த்

துப்பேசி, இவன் பாவிகளைச் சேர்த்துக்கொண்டு அவர்களோடு புசிக்கிறான் என்றார்கள். தாம் புறச்சாதியாருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, சிலுவையில் சாகவேணுமென்று அவர் சீஷருக்குத் தெரிவிக்கும்போது அவர்கள் எதிர்த்துப்பேசி, ஆண்டவரே அப்படி உமக்கு வராதிருப்பதாக என்றார்கள்.

கிறிஸ்தவர்களுக்கும் இவ்வுலகத்தில் எதிர்ப்பேச்சு அதிகம். ஒரு வாலிபன் விசுவாசத்தில் உறுதியாயிருக்க விரும்புவான். அவன் தோழரோ எதிர்த்துப்பேசி, நீ மூடன் என்று பரிகாசம் பண்ணுகிறார்கள். ஒரு வேலைக்காரன் தன் வேலையைச் சுத்த மனதோடே கர்த்தருக்குப் பயந்து செய்ய விரும்புகிறான். மற்ற வேலைக்காரரோ எதிர்த்துப் பேசி, நீ செய்கிறது முட்டாள்தனம், அவ்வளவு உண்மையாயிருந்தால் பிற்காலத்தில் உன் கதி என்ன என்கிறார்கள். ஒரு குடும்பத்தில் எல்லாரும் தேவ வசனத்தைப் படித்து, கர்த்தருடைய பந்தியில் அடிக்கடி சேருகிறார்கள். அயல்வீட்டுக்காரரோ எதிர்த்துப் பேசி, இந்த மாயக்காரரையும் வேத பக்திக்காரரையும் பாருங்கள் என்பார்கள்.

இப்படி மனுஷருக்குப் பயப்படாமல், உலக சிநேகத்தை வெறுத்து எல்லா எதிர்ப்பேச்சையும் சகிக்க நமக்குத் தைரியம் வேண்டுமானால் இயேசுவை நோக்கிப் பார்ப்போமாக. அவர் நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமானவர். உலகத்தின் பரிகாசம் எதிர்ப்பேச்சை அவர் நன்றாய் அறிந்து, நமது விசுவாசத்தைப் பெலப்படுத்தக் கூடியவர்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! எங்கள் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமானவர் நீரே. இந்த விசுவாசத்தை உலகத்தார் தங்கள் பரிகாசத்தினால் கெடுக்கப் பார்க்கையில், தேவரீர் எங்களுக்குப் பக்கத்துணையாயிருந்து அதைக் காப்பாற்றியருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 13, 18-38. அல்லது சங். 43. வாசிக்கவும்.

ஒருசந்தியின் ஐந்தாம் வாரம், திங்கள்.

பி. 42, 7. 8.

அவன் யூதருடனே: இதோ, உங்கள் இராசா என்றான். அவர்களோ: எடுத்துப்போடும், எடுத்துப்போடும், சிலுவையில் அவனை அறையும் என்று கூப்பிட்டார்கள். பிலாத்து அவர்களுடனே: உங்கள் இராசாவைச் சிலுவையில் அறையவோ என்றான். பிரதான ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக இராயன் தவிர எங்களுக்கு வேறே இராசா இல்லை என்றார்கள். யோ. 19, 14-15.

இதோ, உங்கள் இராசா! ஆம் இவர் மெய்யாகவே ஒரு இராசாதான். அவர் விடுதலை அடைவதற்கு ஒரு வார்த்தைமாத்திரம் பேசினால் போதும். அந்த வார்த்தையினால் அவர்மேல் சுமத்தின குற்றம் நீங்கி, சிம்மாசனத்தின்மேல் அவருக்குள்ள பாத்தியம் தெரியவரும். ஆனால் இப்பேர்ப்பட்ட எண்ணம் அவர் மனதில் வரவில்லை. நம்மை மீட்க வாக்களித்த அவர் அந்த வாக்கை நிறைவேற்றுகிறார்.

நீர் சொன்னபடி நான் இராசாதான் என்று முந்தி இயேசுநாதர் பிலாத்துவுக்குச் சொல்லியிருந்தார். அவர் எப்படி இராஜ பட்டத்துக்கு வந்தார். தமது வல்லமையினாலாவது, பிறப்பினாலாவது, தம்மைச் சேர்ந்தவர்களுடைய வைராக்கியத்தினாலாவது அவர் இராசாவாகவில்லை. அவர் பாவிகளை மனந்திருப்பி, துக்கப்படுகிறவர்களை ஆற்றித்தேற்றி, விழுந்தவர்களைத் தூக்கி நிமிர்த்தி, தமது வசனத்தின் வல்லமையினால் இராசாவானார். தமது அன்பினால், குளிர்ந்துபோன இருதயங்களை இளகச்செய்து, முழு உலகத்தையும் பிரகாசிப்பித்து அனலாக்கி, இருண்ட மரண பள்ளத்தாக்கிலே அலைந்து திரிந்தவர்களுக்கு நித்திய ஜீவவெளிச்சத்தைக் தந்ததினால் அவர் சிம்மாசனத்தில் ஏறப்பாத்தியம் உள்ளவர் ஆனார். அவருடைய மகிமையும், இராசாவுக்குரிய மகிமையாம். குடிகள்மேல் தயவு பாராட்டுவதே இராசாவுக்கு மேன்மை. இயேசு இராசா தமது சனத்தின்பேரில் சுமையைச் சுமத்தாமல் தாமே அந்தச் சுமையைச் சுமந்துகொண்டார். அவர் உலகத்தில் மகிமையான ஒரு இராச்சியத்தை ஏற்படுத்த விரும்பாமல், கிருபையும் உண்மையும் நிறைந்த வானராச்சியத்தை நமக்காக ஏற்படுத்தினார். உலகமும் பேயும் இந்த இராச்சியத்தோடு போர் புரியும். ஆனால் அதை மேற்கொள்ள முடியாது. அது எல்லை இல்லாமல் லோகமெங்கும் பரவி, முடிவு இல்லாமல் சதாகாலமும் நீடித்திருக்கும்.

ஜெபம். கர்த்தராகிய இயேசுவே! சிலுவையில் அறையுண்ட இராசாவே, எங்களையும் உமது இராச்சியத்தில் சேர்த்து, வேண்டிய நன்மைகளைச் செய்து வருகிறீர். நாங்கள் உமக்குச் சீஷராக உமது இராச்சியத்தில் பிழைத்து, நித்திய நீதியிலும் கபடற்ற உண்மையிலும் உமக்கு ஊழியம் செய்வதற்கு எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும். சுவாமி, ஆமென்.

யோ. 14, 1-31. அல்லது லூக். 20, 1-30 வாசிக்கவும்.

ஒருசந்தியின் ஐந்தாம் வாரம், செவ்வாய்.

பி. 42, 9. 10.

அவரைப் பரிகாசம் பண்ணின பின்பு சிவப்பான சட்டையைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி அவரைச் சிலுவையில் அறைய வெளியே கொண்டு போனார்கள். வயலிலிருந்து வந்து கடந்துபோகிற அலெக்சாந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனான சிரேனே ஊராகிய சீமோன் என்கிற ஒருவனை அவருடைய சிலுவையைச் சுமக்கப் பலவந்தம் பண்ணினார்கள். மாற். 15, 20-21.

செத்தவர்களுக்கு உயிரையும், பெலவீனருக்குப் பெலத்தையும், வியாதியஸ்தருக்குச் சுகத்தையும் கொடுத்தவர் இங்கே சிலுவையின் பாரத்தைச் சுமக்க மாட்டாமல் கீழே விழுகிறார். சிரேனே ஊராகிய சீமோனைச் சிலுவையைச் சுமக்கக் கட்டாயம் பண்ணினார்கள். அந்தச் சமயத்தில் சிலுவையைச் சுமக்க அவனுக்கு வெறுப்பாயிருந்தது. ஆனால் பிற்பாடு அவன் சபையில் சேர்ந்து இயேசுவைத் தன் இரட்சகராக அறிந்துகொண்டான். தான் சிலுவையை அவர் பிறகே சுமந்துகொண்டு வந்ததின் நினைவு பிற்காலத்தில் அவனுக்கு அதிக அருமையாய் இருந்திருக்கும். அவனுக்கும் அவன் முழு வீட்டிற்கும் சிலுவையினால் இரட்சிப்பு உதித்தது. அவன் பிள்ளைகளாகிய அலெக்சாந்தர், ரூப்பு என்பவர்கள் தங்கள் தகப்பன் ஆண்டவர் சிலுவையைச் சுமந்து அவருக்கு உதவி செய்ததின் பொருட்டுச் சபையில் நல்ல கீர்த்தி பெற்றிருந்தார்கள்.

நாம் சிலுவைக்குப் பயந்து நமதுமேல் வைக்கப்பட்ட சுமையை உதறிப்போட ஆசையாயிருக்கிறோம். ஆனால் கர்த்தர் நமது மேல் சுமத்துவதை நாம் பொறுமையோடு சுமப்போமானால் நமது பாடுகள் நமக்குப் பிரியமான சிலுவையாகும். அப்போது இரட்சகரைப் பின்செல்லப் பெலனை அடைவோம்.

கர்த்தர் இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறார். நம்முடைய ஒத்தாசை அவருக்குத் தேவை அல்ல. ஆனால் நீங்கள், எல்லாரிலும் சிறியவரான இந்த என்னுடைய சகோதரரில் ஒருவனுக்கு என்ன செய்தீர்களோ, அதை எனக்குச் செய்தீர்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார். நம்மைச் சுற்றிலும் இரைக்க இரைக்கத் தங்கள் சுமையைத் தூக்கிக் கொண்டுபோகிற மனுஷர் எத்தனை பேரிருக்கிறார்கள். நீ அவர்களுடைய அவஸ்தையை உன்னுடைய அவஸ்தையாய் எண்ணினால், சிரேனே ஊராகிய சீமோனைப்போல் கர்த்தருடைய சிலுவையைச் சுமக்கிறவனாவாய். தான் படுமெல்லாம் கசப்புத்தான்; பாடெல்லாம் வருத்தந்தான். சுமையெல்லாம் பாரந்தான். ஆயினும் இதெல்லாம் கர்த்தருடைய

சிலுவை என்று நீ அறிந்தால் கசப்பெல்லாம் நீங்கிப் பாரம் இலேசாகும். சிலுவையில் உனக்கு இரட்சிப்புச் சம்பாதிக்கப்பட்டது. ஆகையால் சிலுவையில் ஒரு ஆசீர்வாதம் மறைந்திருக்கிறதென்றெண்ணிச் சிலுவையின் வழியில் செல்பவர்கள் கிரீடத்தை அடைவார்கள்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உமது சிலுவையினால் தேவரீர் எங்களுக்குச் சம்பாதித்த ஆசீர்வாதத்தில் நாங்களும் பங்கு பெறுவதற்கு நாங்கள் எங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு உம்மைப் பின்செல்லவேண்டும். நாங்கள் சிலுவைக்கு அஞ்சாமல் உற்சாகத்தோடு அதைச் சுமக்க எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி; ஆமென்.

யோ. 15, 1-27. அல்லது வாக். 23, 6-35. வாசிக்கவும்.

ஒருசந்தியின் ஐந்தாம் வாரம், புதன்.

பி. 41, 1. 2.

வெகு திரள் சனமும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவரைப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பிச் சொன்னதாவது: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காய் அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். ஏனெனில் பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்னசெய்யப்படும் என்றார். லூக். 23, 27. 28. 31.

இவ்வுலகத்தில் சிந்துண்ட கண்ணீரை எண்ணமுடியாது. எல்லாவற்றிலும் பெரிய பரிதாபம் என்னவெனில், மனிதர் தங்களையும் தங்களுக்கருமையானவர்களையும் தங்கள் சொந்தக் குற்றத்தினால் நிர்ப்பந்தமாக்குவதே. கர்த்தர் நமது பேரில் சிலுவையைச் சுமத்தினதினால் பாடுண்டானால் நல்ல மனச்சாட்சியோடும் இருதய சமாதானத்தோடும் அதைப் பட்டனுபவிக்கலாம். ஆனால் நானே, இந்தப் பரிதாபத்தையுண்டாக்கினவன் என்று நீ உன்னைக் குற்றப்படுத்திக்கொள்ள இடமிருந்தால் உன் சிலுவை உனக்கு அதிக பாரமாயிருக்கும். இதை ஆண்டவர் கொல்கதா மலைக்குப் போகும் வழியில் ஸ்திரீகளுக்கு நினைப்பூட்டினார். தமக்காக அழவேண்டாம் என்கிறார். பச்சை மரத்தைச் சுட்டெரிக்கும் நெருப்பு, பட்டமரத்தை எவ்வளவு சீக்கிரம் பட்சித்துப்போடும். குற்றமற்றவர் நரகவேதனையை அனுபவிக்கவேண்டுமானால், குற்றமுள்ளவர்களாகிய நாம் எவ்வித வேதனையை அனுபவிக்கவேண்டும். பரிசுத்தரை அழிக்கப்போகிற பாவம் அசுத்தராகிய நம்மை என்ன செய்யாது. கிறிஸ்துவின் சாவினால்

பாவமானது நமக்கு வெறுப்பாகாமலும் அவரால் நம்மில் புது ஜீவன் பிறவாமலும் போனால் இப்படிப்பட்ட ஆக்கினைக்குத் தப்ப முடியாது.

எருசலேமின் தாய்மார் மனஸ்தாபத்தோடும் கண்ணீரோடும் தங்கள் பிள்ளைகளுக்கு, அவர்கள் தகப்பன்மார், இப்போது [illegible]ரை வணங்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். தேவபக்தியுள்ள தாய் விதைத்தது நாலு அத்தனையான பலனைக் கொடுக்கும். அநேக தாய்மார் பிள்ளைகள் ஆத்துமத்தில் இயேசுவின் [illegible] வயசிலேயே பதியப்பண்ணாததால் பிறகு அவர்களுக்காகக் கசப்பான கண்ணீர் விடவேண்டிநேரிடுவதுண்டு. பிள்ளைகள் சிலுவையில் அறையுண்டவரை விசுவாசிக்கக் கற்றுக்கொள்ளாவிட்டால் அவர்கள் பிற்பாடு பெற்றோர்களுக்குப் பாரமான சிலுவை ஆவார்கள். பிள்ளைகளின் இருதயத்தை முள்முடி தரித்தவர் ஆண்டு கொள்ளாவிட்டால் அவர்கள் பெற்றோர்களுக்குப் பாரமான சிலுவையாவார்கள்.

ஜெபம். எங்கள் பரம இராசாவே! எருசலேமுக்காக தேவரீர் கண்ணீர் விட்டதைப்போல் எங்களுக்காகவும் கண்ணீர் விடுவது நியாயம். ஏனெனில் நாங்கள் பட்டுப்போனமரம். கர்த்தாவே! நாங்கள் எங்களுக்காகக் கண்ணீர்விட்டு மனஸ்தாபத்தோடு உம்மண்டை திரும்புவதற்கு எங்களை ஏவி எழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

யோ. 16, 1-33. அல்லது வாக். 25, 1-28. வாசிக்கவும்.

ஒருசந்தியின் ஐந்தாம் வாரம், வியாழன்.

பி. 41, 3-4.

குற்றவாளிகளாகிய வேறே இரண்டுபேரும் அவரோடேகூடக் கொலை செய்யப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். தலையோட்டிடம் என்று சொல்லப்பட்ட இடத்துக்கு அவர்கள் வந்தபோது, அங்கே அவரையும் அந்தக் குற்றவாளிகளையும் ஒருவனை வலதுபக்கத்திலும் ஒருவனை இடதுபக்கத்திலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள். லூக். 23, 32. 33.

மூன்று சிலுவைகள் கொல்கதாமலையில் நிற்கின்றன. அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார் என்கிற தீர்க்கதரிசனம் இங்கே நிறைவேறிற்று.

அக்கிரமக்காரர் நடுவிலுள்ள கிறிஸ்துவின் சிலுவை அளவிறந்த அன்பை நமக்குப் பிரசங்கிக்கிறது. இந்த அன்பு எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ளுகிறது. எல்லாவற்றையும் நம்புகிறது, எல்லாவற்றையும் சகிக்கிறது. இயேசுவின் சிலுவையினால் பெ

பாவிகளும் இரட்சிக்கப்படுவார்கள் என[illegible] ழிந்துப்போன வன்பிதாவண்டை திரும்பலாம் என[illegible] அன்பு நம்புகிறது. கெட்டுப்போனவர்களுக்காக ப[illegible] கன்னிகேட்டையும் அசட்டையையும் சகிக்கிறது.

இடதுபக்கத்திலுள்ள சிலுவை நமக்கு பாவத்தின் சாபத்தைத் தெரிவிக்கிறது. சாகும்வேளையிலும் மேய்ப்பனுடைய சத்தத்தைக்கேட்டு வரமாட்டேன் என்று சொல்லுகிற ஒரு பாவியை அதில் தொங்கப்பார்க்கிறோம். [illegible] நடுநடுங்கப்பண்ணுதே என்று அந்தச் சிலுவை நம்மை [illegible]ச்சரிக்கையாய்க் கூப்பிடுகிறது. நான் எந்நேரமும் மனந்திரும்பி [illegible] பிடிக்கலாம் என்ற தப்பெண்ணத்தை விட்டுவிடு. கிறிஸ்துவை விசுவாசியாமல் பாவத்துக்கு ஊழியம் செய்துகொண்டே [illegible]இருக்கிறவன் ஒருநாளில் இயேசுவை நித்தியகாலத்துக்கும் [illegible]வண்டாமென்று தள்ளிவிடுவான்.

வலதுபக்கத்திலுள்ள சிலுவை குணப்படுதல் என்று பிரசங்கிக்கிறது. பராபரனே, உம்முடைய [illegible] பேரில் இருதயமுள்ளவராகும் என்று இதில் உள்ள ஆவியோடு நொறுங்குண்ட இருதயத்தோடும் மன்றாடுகிறவர்களை தேவன் கேட்பார். இதற்கு அந்தச் சிலுவை சாட்சி. [illegible] பாவத்தில் விழுந்தவர்களை நோக்கிப் பராபரனை [illegible]பாருங்கள் என்று வேண்டிக்கொள்ளுகிறது. பதினோராம் மணிவேளையில் வருகிறவர்களையும் இரட்சகர் தள்ளிவிடமாட்டார். அவர்கள் இம்மட்டும் செய்ததை எல்லாம் அவர் நினைக்காமல் தமது புண்ணியத்தினால் மூடி மறைப்பார். மனுஷர் சிலுவையில் அறைந்தவர்களைக்கூட அவர் பரதீசில் சேர்த்துக்கொள்வார். உலகத்தார் தள்ளிப்போடுகிறவர்களையும் அவர் தேடிக் கண்டுபிடித்துத் தமது பரம வீட்டிற்குக் கொண்டுபோவார்.

ஜெபம். எங்கள் அன்புள்ள இயேசுவே! எங்கள் நிமித்தம் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டுக் கள்ளர் நடுவில் சிலுவையில் தொங்கினீர். எங்கள் அக்கிரமங்களை எல்லாம் தீர்த்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரே, நாங்கள் உமக்கு உண்மையோடு நன்றி செலுத்தி எங்கள் அக்கிரமங்களை விட்டு உம்மைப் பின்தொடர எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

யோ. 17, 1-26. அல்லது ஏசா. 30, 1-9. வாசிக்கவும்.

ஒருசந்தியின் ஐந்தாம் வாரம், வெள்ளி.

[illegible] 41, 5-6.

இயேசுவோவென்றால்: பிதாவே, அவர்களுக்கு மன்னியும்; ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள் என்றார். லூக்கா 23, 34.

துன்பகாலத்தில் ஆண்டவரே, இந்தச் சிலுவையை என்னை விட்டு எடுத்துக்கொள்ளும் என்று நாம் ஜெபிப்போம். இயேசுநாதரின் [illegible]த்திலோ பிதாவின் சித்தத்துக்கு விலகிப்போக வேண்டுமென்கிற எண்ணம் கொஞ்சங்கூட உண்டாகவில்லை. அவர் தமது சொல்லி முடியாத உபத்திரவத்தை நினைத்ததில்லை. அவர் தமக்காக [illegible] கொஞ்சமும் [illegible]டாமல் முதல்முதல் தமது சத்துருக்களுக்காக வேண்டுதல் செய்கிறார். அவர்கள்மேல் சர்வவல்லவருடைய நியா[illegible]ப்பு வந்து இறங்கும்படி வேண்ட அவருக்குப் போதுமான [illegible]யம் இருந்தும் அவர்களுக்கு மன்னிக்க வேண்டுமென்று ஜெ[illegible]கிறார். [illegible]தலால் தன் பாவத்துக்கு மன்னிப்பில்லை என்று [illegible]ருவனும் நினைக்கவேண்டாம். குமாரனுடைய வேண்டுதலைக் கேட்டுப் பி[illegible] நமக்கும் மன்னிப்பார்.

மேலும் எம்மைக் [illegible]த்தஞ்சாட்டித் துன்பப்படுத்துகிறவர்களுக்காக நாமும் மன்றாடுவதற்கு இந்த ஜெபம் நம்மை ஏவிவிடுகிறது. பொல்லாப்புக்குப் பொல்லாப்பைச் சரிக்கட்டாவிட்டால் தங்கள் கனத்துக்குப் பங்கமுண்டாகுமென்று அநேகர் சொல்லிப், பிரத்தியாளி[illegible]த்தில் பழிவாங்கவும் அவன் இருதயத்தைப் புண்படுத்தவும் வகை தேடுகிறார்கள். இது கிறிஸ்தவர்களுக்கு அடாது. கிறிஸ்து சிலுவையில் சொன்ன முதலாம் வார்த்தை அவர்கள் இருதயத்தில் எல்லாக் கோபத்தையும் பகையையும் அடக்கப் பெலன்தரும்.

தங்கள் குற்றத்தை நன்றாய் அறிந்திருந்த சத்துருக்களுக்காகக் கர்த்தர் பரிந்துபேசுகிறார். தாங்கள் குற்றம் அற்றவரைக் கொன்று பெரிய அநியாயஞ்செய்தது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆகிலும் தாங்கள் சிலுவையிலறைந்தவர் மகிமையின் கர்த்தரென்றும் அவரைத் தள்ளிவிட்டதில் தங்கள் ஒன்றான இரட்சகரைத் தள்ளிவிட்டோம் என்றும் அறியாமல் போனார்கள். இதனிமித்தம் கர்த்தர் தமது சத்துருக்கள்மேல் மனமிரங்கினார். நாம் கிறிஸ்துவின் சீஷராயிருக்க வேண்டுமானால் நமக்கடுத்தவர்களுக்காகப் பரிந்துபேசி அவர்கள் குற்றத்தைக் கூடியமட்டும் பாராட்டாதிருப்போமாக. நன்மையைச்செய்த உனக்குத் தீமையைச் செய்தவன், தேவகோபத்தைத் தன்மேல் இறங்கப்பண்ணுகிற ஒரு எளியபாவி என்று நினைத்து நீ அவன்மேல் மனதுருகினால் அவனுக்காகப் பிதாவைநோக்கி, பிதாவே அவனுக்கு மன்னியுமென்று ஜெபிப்பாய்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமதளவற்ற பொறுமையால் உமது சத்துருக்களுக்குங்கூட மன்னித்து அவர்களையும் பரதீசில் சேர்க்கப் பிரயாசைப்பட்டீர், கர்த்தாவே, நாங்கள் உம்மைப்போல் எங்க

லைப் பகைக்கிறவர்களுக்கும் மன்னிக்க எப்போதும் ஆயத்தமாயிருப்பதற்கு எங்களுக்குமனதிலைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

யோ. 18, 1-27. அல்லது. லூக். 3[illegible] 1-31. வாசிக்கவும்.

ஒருசந்தியின் ஐந்தாம் வாரம், சனி.

[illegible]. 41, 7.

அவருக்கு மேலாக: இவன் யூதருடைய இராசா என்று கிரேக்க லத்தீன் எபிரேய எழுத்துக்களால் ஒரு மேல்வாசகமும் எழுதப்பட்டிருந்தது. லூக். 23, 38.

யூதருடைய இராசா என்று சிலுவையிலே எழுதப்பட்டிருந்தது. இயேசுவைப் பரிகாசம்பண்ணவே அப்படி எழுதியிருந்தார்கள். ஆனால் பரமண்டலங்களிலிருக்கிறவர் நகைக்கிறார். கர்த்தர் அவர்களைப் பரிகாசம் பண்ணுகிறார். அந்த இராசா விரோதிகளிடத்திலும் அந்நியர்களிடத்திலும் தமது இராச்சியத்தைத் தடையின்றி ஸ்தாபித்துப் பூமி எங்கும் பரம்பப்பண்ணுகிறார். யூதருடைய இராசா என்ற பரிகாசவார்த்தை மூன்று பாஷைகளில் உலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. இன்றைக்கோ இயேசு ராசாவைப்பற்றிய சுவிசேஷம் [illegible] பாஷைகளில் ஜாதிகளுக்குப் பிரசங்கிக்கப்படுகிறது. அச்சமயத்தில் மகா அவமானத்திற்கு அடையாளமாகிய சிலுவை இப்போது இந்த யூத இராசாவுக்குச் சிம்மாசனமாயிற்று. அந்த ரூபத்தில் சிலுவையானது அவருக்கு ஜெயசின்னமாகி அது காட்டப்படும் இடமெல்லாம் ஜாதிகள் அவருடைய செங்கோலுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய திருவசனத்திற்குச் செவிகொடுக்கிறார்கள்.

அவர் உனக்கும் இராசா. அவருக்கொப்பான இராசா இல்லை. அவரைப்போல பேர்பெற்ற ஒரு மனுஷனுமில்லை. என் இராசாவே, என் பலமானவனே, என் இருதயத்தை உமது வசப்படுத்திக்கொள்ளும் என்று அவரை வாழ்த்தி வணங்கு. வேறொரு இராசா உனக்கு வேண்டுமோ? பாவமா உன்னை ஆளவேண்டும், அது உன்னை அநேகமுறை மோசம் போக்கவில்லையா? அது உனக்குப் பெரிய வாக்குத்தத்தங்களைக் கொடுத்து, பிற்பாடு உனக்குத் துன்பத்தையும் மனவேதனையையும் உண்டுபண்ணிற்றே. உலகம் தன் இச்சையோடே ஒழிந்துபோம். அதன்பேரில் நம்பிக்கை வைப்பவர்கள் வெட்கம் அடைவார்கள். இயேசு ஒருவரே உண்மையுள்ளவர். அவர் உன்னைச் சிநேகித்ததினால் எல்லாத்திலும் இழிவான மரணத்தை அடைந்தார். அவர்பேரில் நீ

பூரண நம்பிக்கையை வைக்கலாம். அவருடைய செங்கோல் உன்னைக் காப்பாற்றும். உலகத்தார் அவரைப் பரிகாசம் பண்ணினாலும், நீ, அவரை விட்டுவிடாதே. அப்போது அவரும் உன்னைக் கைவிடார்.

செபம். மகிமையின் இராசாவே! தாவீதின் குமாரனே, எங்கள்மேல் இரக்கமும், எங்கள் இருதயங்களில் பிரவேசித்து அங்கே உமது இராச்சியத்தை ஸ்தாபித்தருளும், நாங்கள் உம்மைப் பரிகாசம்பண்ணாமல் பயத்தோடேயும் சந்தோஷத்தோடும் வணங்கி, ஊழியஞ்செய்து உமக்குக் கீழ்ப்படிந்து நித்திய இராச்சியத்தில் உமது மகிமையைக் காண எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும், சுவாமி, ஆமென்.

மத். 26, 30-75. அல்லது பிர. 1, 1-18. வாசிக்கவும்.

பரிசுத்த வாரம், ஞாயிறு.

[illegible]. 41, 9. 10.

விசுவாசத்தின் நற்போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பிடித்துக்கொள்; அதற்கு நீ அழைக்கப்பட்டவனும் அநேகம் சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கையை அறிக்கை பண்ணினவனுமாமே. 1 தீமோத். 6, 12.

நாம் திடப்படுத்தப்பட்ட நாளில் இந்த வாக்கியம் நமக்கு எச்சரிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது நாம் அநேக சாட்சிகளுக்கு முன்பாகவும் கர்த்தருடைய சபைக்கு முன்பாகவும் நல்ல அறிக்கையைப் பண்ணினோம். சிலுவைப்பாதையில் சென்று, நம்மை உண்மையாய் மரணபரியந்தம் சிநேகித்தவருக்கு நாமும் மரணபரியந்தம் உண்மையாயிருக்க வாக்களித்து அவருக்குக் குருத்தோலைகளைப் பிடித்து, அவர் தமது சமாதானத்தோடு நமது இருதயத்தில் வந்து வாசம்பண்ண அதை அவருக்கு ஒப்புக்கொடுத்தோம்.

ஆயினும் நாம் அந்த நாள் முதற்கொண்டு விசுவாசத்தின் நற்போராட்டத்தைப் போராடினோமா; அந்தக் காலத்தைப் பார்க்க இக்காலத்தில் சோதனை அதிகமாகி, ஆவியின் உற்சாகம் குறைந்து, உலக சிநேகம் வளர்ந்து, விசுவாசம் தளர்ந்துவிட்டதே. நாம் அறிக்கைபண்ணவேண்டிய இடத்தில் மௌனமாயிருந்தோம். நாம் பாவத்தோடு போராடவேண்டிய காலத்தில் அதனோடு விளையாடினோம். மாம்ச இச்சையோடு எதிர்த்து நிற்கவேண்டிய சமயத்தில் அதற்கு இருதயத்தில் இடம்கொடுத்தோம். நாம் திடப்படுத்தப்பட்ட நாளை நினைவுகூர்ந்து, சிலுவையில் மரிக்க

எருசலேமில் பிரவேசிக்கிற மேசியாவை இந்தப் பரிசுத்தவாரத்தின் முதலாம் கிழமையில் கண்ணோக்கிப்பார்த்து, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு என்கிற கட்டளையின்படி செய்வோமாக. அதேதெனனில், பின்வாங்கினோர் கிரீடம் அடையாதவர்.

நாம் பரிசுத்த ஞானஸ்நானத்தில் நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்டோம். இயேசுவினிடத்தில் வைப்பதாகும் விசுவாசத்தினால் அந்த ஜீவன் இப்பூமியிலும் நமக்குக் கிடைக்கும். நாம் உண்மையாய்ப் போராடி நமது இரட்சிப்பை உறுதியாய்ப் பிடித்துக்கொள்ளாத பட்சத்தில் அதை இழந்துபோவோம். இந்தப் போராட்டத்தில் நாம் மலைத்துப்போகத் தேவையில்லை. இருளின் பிரபு சீறியும் அது வெல்லப்பட்ட பேய் தன்னுடைய தீர்க்கத்தே ஓர் சொல்லினால் முறியும். ஜெயசீலராகிய இயேசுவினின்று நமக்காக இந்த லோகத்தின் பிரபுவை வென்றுவிட்டதால் நமக்கு ஜெயம் இலேசாய்க் கிடைக்கும்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! ஏழைப்பாவிகளாகிய எங்களையும் நித்திய ஜீவனுக்கு அழைத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் எங்கள் கிரீடத்தை இழந்து போகாதபடி, உற்சாகமாய்ப் பொல்லாத சத்துருவோடே போர் புரிய எங்கள் விசுவாசத்தைத் திடப்படுத்தியருளும், சுவாமி, ஆமென்.

லூக். 22, 39-71. அல்லது சங். 69. வாசிக்கவும்

பரிசுத்த வாரம், திங்கள்.

தி. 41, 11. 12.

இயேசுவுடனே: ஆண்டவரே, நீர் உம்முடைய இராச்சியத்திலே வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனுடனே: மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், இன்றைக்கு என்னோடேகூடப் பரதீசிலே இருப்பாய் என்றார். லூக். 23, 42-43.

சிலுவையில் மரிக்கிறவரைப் பார். மனிதர்களுடைய பாவத்தைச் சுமந்த உலக ரட்சகரை நோக்கு. தன் பாவத்தை அறியாமலும் அறிக்கையிடாமலும் சாகிற இடது பக்கத்துக் கள்ளனைக் கவனி. மனஸ்தாபத்தோடும் விசுவாசத்தோடும் தன் இரட்சகரைக் கண்டுபிடித்த வலது பக்கத்துக் கள்ளனையுங் கண்ணோக்கிப் பார். சாகும்போது மனிதர் எவ்வளவு வித்தியாசப்படுகிறார்கள். சாகும்வேளையில் ஒருவன், என்மேல் குற்றம் சொல்லக்கூடியவன் ஆர் என்று தன்னைப் புகழுகிறான். இன்னொருவன் இந்த வியாதியைத் தீர்க்க ஒரு தேவன் உண்டானால் அவர் இந்த நிர்ப்பந்தத்திலிருந்து என்னை இரட்சிக்க மாட்டாரா என்று சொல்லித் தூஷணிக்கிறான். இன்னொருவன் ஆண்டவர் இப்படி என்னைத் தண்டிப்பதற்கு நான் என்ன பொல்லாப்புச் செய்தேன் என்று முறுமுறுக்கிறான். இவர்கள் பாக்கியமாய் மரிக்கிறார்கள் என்று சொல்லக் கூடாது. ஆண்டவர் நமக்குப் பாடுகளை அனுப்பினாலும் அவர் நமது மேல் சமாதான எண்ணம் உடையவர் என்று அறியாதவன், கடைசி வேளையிலும் பராபரனுடைய இராச்சியத்துக்கு ஆயத்தமாயிருக்கமாட்டான். பாக்கியமான மரணம் கிறிஸ்துவின் மூலமாய் மாத்திரம் நமக்குக் கிடைக்கும். ஏனெனில் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை அவர் குலைத்துப்போட்டார். ஆகலால் ஆண்டவரே, அடியேனை நினைத்தருளும் என்று ஒருவன் சொல்வானானால் அவன் நித்தியத்தின் வாசலண்டை நின்று, இயேசுவின் மகிமையைக் காண்பான். ஒரு மனுஷனும் உன்னை இரட்சிக்க முடியாவிட்டாலும், கர்த்தர் தமது கரத்தை நீட்டி, உன்னைக் கெட்டியாய்ப் பிடிப்பார். அவரிடத்தில் சேர்ந்தால் பெருமூச்சுமில்லை, கண்ணீருமில்லை; ஏதேன் தோட்டத்தில் ஆதி மனுஷர் அனுபவித்த பாக்கியத்தை இந்த இரண்டாம் ஆதாம் நமக்கு மறுபடியும் கொடுப்பார். ஆகையால் இன்னும் மீதியாயிருக்கிற காலத்தை நாம் வீணாய்க் கழியவொட்டாமல் குணப்படுவதற்கு உபயோகிப்போமாக.

ஜெபம். எங்கள் அருமையான மீட்பரே! உமது சாவினால் வானத்தைத் திறந்து நித்திய பாக்கியத்தை எங்களுக்குக் கொடுக்க மனதாயிருக்கிறீர். கர்த்தாவே, நாங்கள் எங்கள் மோசமான நிலைமையை அறிந்துகொண்டு உம்மண்டை வோடிவந்து சகாயத்தைத் தேட எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி, ஆமென்.

மத். 27, 1-31. அல்லது பிரச. 4, 17-5, 11. வாசிக்கவும்.

பரிசுத்த வாரம், செவ்வாய்.

தி. 41, 13. 14.

அப்போது இயேசு தாயையும் அவளருகே தாம் நேசித்த சீஷனையும் நிற்கக் கண்டு, தம்முடைய தாயுடனே: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பிற்பாடு சீஷனுடனே: அதோ, உன் தாய் என்றார். அந்நேரம் முதல் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான். யோவா. 19, 26. 27.

கர்த்தர் சிலுவையில் தொங்கும்போதும் நமக்கு அருமையானவர்களுக்காக எவ்வளவு கவலைப்படுகிறார். சிலுவையின் கீழ்த் தனிமையாய் நிற்கிற தமது தாயையும் முன்னே தமது மார்பில் சாய்ந்திருந்து இப்போது துக்கப்பட்டுக்கொண்டு நிற்கிற

தமது சேனையும் கண்டு அவர்கள் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளச் செய்தார்.

அன்பினால் ஏவப்பட்டுச் சிலுவையில் அறையுண்ட கர்த்தர் அன்பின் ஐக்கியத்தை ஏற்படுத்தினார். இந்த ஐக்கியம் மாமிசத்தினாலும், இரத்தத்தினாலும் உண்டான எல்லாக் கட்டுகளுக்கும் மேலான கட்டு. திருச்சபையில் பிறந்த எல்லாத் தர்ம சிநேகங்களுக்கும் இதுதான் சிறந்த முன்மாதிரி. இயேசு நாதர் ஆத்துமாக்களைத் தம்மிடம் இழுக்கும் வல்லமைக்கு இதுதான் நல்ல சாட்சி. எத்தனையோ அனாதப் பிள்ளைகள் இந்த அன்பினால் நிறைந்தவர்களால் பராமரிக்கப்பட்டுத் தகப்பனும் தாயும் என்னைக் கைவிட்டார்கள், கர்த்தரோ என்னை ஏற்றுக் கொள்ளுகிறார் என்று சொல்லுகிறார்கள். இந்த அன்பினால் எத்தனையோ வைத்தியசாலைகளும் தர்மப் பள்ளிக்கூடங்களும் கட்டப்படுகின்றன. இந்த அன்பினால் முக்தித் தாரமானவர்கள் சிநேகிதராகிறார்கள். நீ தனிமையாயிருந்தால் பயப்படாதே. உன் இரட்சகரை விசுவாசத்தோடும் அன்போடும் தேடி வா. அவர் உன்னை அநாதியாய் விடாமல் உனக்கு ஒரு சிநேகிதனைக் கண்டுபிடித்துத் தருவார். அவரே எல்லாரையும் பார்க்க உத்தம சிநேகிதர். உன் குறைவுகள் அவருக்கு நன்றாய்த் தெரியும். அவர் ஒருவரே உன்னை ஆற்றித் தேற்றக் கூடியவர். அவர் மரணநேரத்திலும், உனக்குப் பக்கத் துணையாக நின்று உன் கஸ்திகளை நீக்கித் தம்மிடத்தில் நித்திய வாழ்வைக் கொடுப்பார், ஏனென்றால் நீ நித்தியமாய்ப் பிழைக்க அவர் மரித்தார், மரித்துத் தம்மை நம்புகிறவர்களெல்லாரையும் ஒன்றாகக் கூட்டி, தான் உங்களைச் சிநேகித்ததுபோல் நீங்களும் ஒருவரையொருவர் சிநேகியுங்கள் என்ற கட்டளையைக் கொடுத்தார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! மரணப்பியந்தம் உம்முடையவர்களுக்காகக் கவலைப்பட்டு அவர்களுடைய துக்கத்தையும் கஷ்டத்தையும் நீக்கப் பிரயாசைப்பட்டீர். நாங்கள் உமது முன்மாதிரியைப் பின்பற்றி உம்மையும் எங்களுக்கடுத்தவர்களையும் முழு மனதோடும் சிநேகிக்க எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும், சுவாமி, ஆமென்.

லூக். 23, 1-33. அல்லது பிரச. 7, 1-30. வாசிக்கவும்.

பரிசுத்த வாரம், புதன்.

சங். 41, 15. 16.

ஒன்பதாம் மணிவேளையிலே இயேசு மகா சத்தமாய்: ஏலி, ஏலி, லாமா சபக்தானி என்று கூப்பிட்டார். அது: என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டதென்ன என்கிற அர்த்தமாயிருக்கிறது. மத். 27, 46.

ஆண்டவர் சிலுவையில் சொன்ன இந்த வார்த்தை தேவனுடைய நியாயத்தீர்ப்பின் இரகசியத்தையும், நமது இரட்சிப்பின் இரகசியத்தையும் நமக்கு உணர்த்துகிறது. அவ்வேளையில் அவர் நமக்குப் பதிலாகப் பாவத்தின் சம்பளமாகிய பயங்கர மரணத்தை அநுபவிக்க நேரிட்டது. அவர் தனியே சகாயமற்று முழுவதும் கைவிடப்பட்டுத் தேவ கோபத்தில் பாய்கிறார். பிதாவின் சந்நிதத்தைக் கோபமதும் அவருடைய ஐக்கியத்தின் ஆறுதலை உணராமலும் மரண அவஸ்தைப்படுகிறார். அவருடைய ஆத்துமா நரகத்திற்குப் போகிறவர்களின் ஆத்துமத்துக்கு ஒப்பாகும்படி அந்த நரகம் ஒரு பெரிய வெள்ளத்தைப்போல் அவர்மேல் புரண்டு வருகிறது.

இந்த வெள்ளத்தின் ஆழத்தை உணர யாரால் கூடும்? தேவனோடு ஒப்புரவாகாமல் எல்லாத்திற்கும் புறம்பான இருளில் நித்திய ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஆத்துமாக்களைத் தவிர ஒருவனும் அதை உணர்ந்துகொள்ள முடியாது. நம்முடைய பாவத்திற்கு வரவேண்டிய தண்டனை இதுதான். நாம் பராபரனைவிட்டுப் பிரிந்துபோனோம். ஆகாத பிடிவாதத்தினால் அவரைத் தள்ளி மறுதலித்தோம். அவருடைய கனத்தை அகடியம்பண்ணி, அவருடைய பரிசுத்தத்தைப் பரிகாசம்செய்து, அவருடைய அளவற்ற அன்பை நிந்தித்து அவமதித்தோம். இதற்காக அவருடைய வைராக்கியம் அக்கிரமக்காரர் தலையில் விழுந்து அவர்களை நசுக்கும் இடிமுழக்கமாகும். நீங்கள் என்னை விட்டபடியால் நான் உங்களைக் கைவிடுவேன். நீங்கள் என்னைப் புறக்கணித்தபடியால், நான் உங்களைப் புறக்கணித்துவிடுவேன். நீங்கள் என்னைத் தேடிக் கண்டுபிடிக்காவண்ணம், நீங்கள் என்னை நோக்கிக் கூப்பிட்டாலும் நான் உங்களைக் கேட்கமாட்டேன். என் முகத்தைவிட்டு உங்களைத் தள்ளிவிடுவேன். நீங்கள் வெட்கம் அடைந்து நித்திய காலமாய் அழிவீர்கள் என்று தேவன் சொல்லுவார். பரிசுத்தரானவர் நமக்குப் பிணையாளாகி நமது கடனுக்கு ஈடு செலுத்தினபடியால், நாம் தப்பினோம். தாம் கைவிட்ட குமாரனின் முகத்தைப் பார்த்து நம்மைக் கைவிடாமல் ஏற்றுக்கொள்வார்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! எங்கள் நிமித்தம் உமது சொந்தக்குமாரனைத் தள்ளி அந்தகாரத்தின் வல்லமைக்கு ஒப்புவித்தீர். இந்த அளவிறந்த இரக்கத்துக்காக நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இரக்கமுள்ள பிதாவே! உமது குமாரன் முகத்தைப் பார்த்து, எங்களைத் தள்ளாதேயும், சுவாமி, ஆமென்.

யோ. 19, 1-16. அல்லது பிரசங். 11, 1-10. வாசிக்கவும்.

பெரிய வியாழன்.

பி. 50, 1-2.

இயேசு காடியை வாங்கின போது: முடிந்தது என்று சொன்னார். யோவா. 19, 30.

முடிந்தது என்று ஆண்டவர் சொல்லுகிறார். மூன்று வகையான கிரியையை முடித்துவிட்டார். அவர் தீர்க்கதரிசியாகவும், பிரதான ஆசாரியனாகவும், இராசாவாகவும் செய்யவேண்டிய வேலையை முடித்துவிட்டார்.

தீர்க்கதரிசியாக அவர் தமது வேலையை எப்படி முடித்துவிட்டார்; அவர் நமக்கு அறிவித்த சத்தியம் தாம் சிலுவையில் அடைந்த மரணத்தினால் உண்மை என்று முத்திரை போட்டு ருசிப்பித்தார். இனிப் பராபரனோடு ஒப்புரவாகுங்கள் என்கிற சுவிசேஷத்தை நமக்குப் பிரசங்கிக்கிறார்.

பிரதான ஆசாரியனாக அவர் தமது கிரியையை எப்படி முடித்துவிட்டார்; அவருடைய சிலுவை பாவத்தின் வல்லமையையும் அதற்கு வரவேண்டிய தண்டனையையும் காட்டி, அவர் செலுத்தின பலியை உணர்த்தி, நம்மை ஆற்றித் தேற்றுகிறது. இதுவரையில் பிரதான ஆசாரியர் ஆடுகளுடைய இரத்தத்தையும் கடாய்களுடைய இரத்தத்தையும் சிந்தினதுபோல் அல்ல, தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார். இப்படி அவர் பூரண இரட்சிப்பைச் சம்பாதித்தார்.

இராசாவாக அவர் தமது கிரியையை எப்படி முடித்துவிட்டார்? அவர் தமது சத்துருவாகிய சாத்தானை வென்று, அவனுக்கு அடிமைப்பட்டிருந்த மானிட ஜாதியை மீட்டுக்கொண்டார். இனி, மீட்கப்பட்டவர்கள் அவருக்குச் சுதந்தரமும் ஊழியம் பண்ணுவோர்கள். தாவீதின் குமாரனாகிய அவர் என்றும் அழியாத இராச்சியத்தை ஸ்தாபித்தவர். சமாதானம் என்பது அவருடைய செங்கோலின் பெயர்.

இந்த மூன்று வகையான கிரியையை முடித்தவருடைய சிலுவை மரத்தடியில் நிற்கிற நாம், மூன்று தீர்மானங்களைச் செய்வோம். நமது விசுவாசத்தைக் கெடுக்கும் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்குச் செவிகொடுக்காமல், நமது அருமையான மேய்ப்பருடைய சத்தத்தைக் கேட்போம். பரிசுத்த பராபரனுக்கு முன்பாக, நாம் நமது சுய நீதியை நம்பாமல் இயேசுநாதர் சம்பாதித்த புண்ணியத்தையே நம்புவோம். நாம் இனிமேல் உலகத்திற்கும் நமது கெட்ட ஆசை இச்சைகளுக்கும் அடிமைப்படாமல் இயேசு இராஜாவுக்கே ஊழியம் செய்வோம். இந்த மூன்று தீர்மானங்களின்படி நாம் நமது ஜீவகாலத்தைக் கழித்து

வருவோமானால் நாமும் கடைசி நாளில் முடிந்தது என்று சொல்லுவோம்.

ஜெபம். உமது திரு இரத்தத்தினால் எங்களை மீட்ட தேவ குமாரனே! உமது அடியாராகிய எங்களை உமது அன்பிலும் மெய் விசுவாசத்திலும் காப்பாற்றியருளும். நாங்களும் கடைசி நாளில் முடிந்தது என்று சொல்லி உமது நித்திய மகிமையில் பிரவேசிக்க எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 23, 34-56. அல்லது பிர. 12, 1-14. வாசிக்கவும்.

பெரிய வெள்ளி.

பி. 50, 3-5.

இயேசு மகா சத்தமிட்டு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று கூப்பிட்டார், இவைகளைச் சொல்லி ஜீவனை விட்டார். லூக். 23, 46.

பெரிய வெள்ளிக்கிழமையாகிய இன்றைக்கு நாம் தேவனுடைய சந்நிதானத்தில் மௌனமாயிருக்கக் கடவோம். சர்வ வல்லமையுள்ளவர் பேசும்போது மனிதர் மௌனமாகிக் கேட்க வேண்டும். கொல்கதா மலையைவிட வேறு எந்த இடத்திலும் அவர் அவ்வளவு வல்லமையோடும் பயங்கரத்தோடும் பேசினதில்லை. பரிசுத்தத்திற்குப் பரிசுத்த ஸ்தலத்தை மூடின திரை இரண்[illegible] கிழிந்ததென்றும், சூரியன் இருண்டுபோயிற்றென்றும், பூமி [illegible]திர்ந்ததென்றும், கன்மலைகள் பிளந்துபோயின என்றும், ஆம், [illegible]ல் தேவகுமாரன் மரித்தார் என்றும் பார்க்கிற நாம் [illegible] சர்வ வல்லவருடைய சத்தத்தைக் கேட்கிறதில்லையா?

இதோ! தேவகுமாரன் தமது ஜீவனைப் பலியாகக் கொடுக்கிறார். இ[illegible]ன்ன[illegible]த்துக்குப் பலி? உனக்காகத்தான். நீ பரிசுத்த தேவனைக் [illegible]க்கிறாய். அவர் கோபித்தால் நித்திய வேதனை உன் பங்காகும். அவரைக் கோபம் ஆற்ற நீ யாதொரு காணிக்கையும் செலுத்த முடியாது. ஏனெனில் நீ செலுத்தும் காணிக்கை ஒரு பாவி செலுத்தும் காணிக்கைதான். அதைத் தேவன் ஒப்புக்கொள்ளமாட்டார். இஸ்ரவேலர் செலுத்தின பலிகள் எல்லாம் ஒரு பெரிய பலிக்கு முன் அடையாளம். அந்தப் பலியைத் தேவ மனுஷனாகிய பாவமற்ற இயேசு செலுத்தி முடித்தார். பொன்னினாலும் அல்ல, வெள்ளியினாலும் அல்ல, விலைமதிக்கக்கூடாத தமது பரிசுத்த இரத்தத்தினாலும், குற்றமில்லாமல் பட்டபாடுகளினாலும், நம்மைத் தமக்குச் சம்பாதித்தார்.

உன் பாவம் எவ்வளவு பெரியதென்று இங்கே பார்; ஒரு சிருஷ்டியாகிலும் ஒரு தேவதூதனாகிலும் ஒரு மனுஷனாகிலும் அதைத் தீர்க்க முடியாது. மனிதனுகிய தேவ குமாரனே உன் பாவத்துக்காகச் சாவைச் சகித்து உன் கடனைத் தீர்க்கவேண்டியதவசியம். இதை நீ நம்பினால் நீ உன் கடைசி இக்கட்டில் உன் ஆவியைப் பிதாவின் கையில் ஒப்புவிக்கலாம். இதை நம்பாதவர்களோ தங்கள் ஆத்துமத்திற்குச் சமாதானத்தைக் கண்டுபிடிக்காமல் போவார்கள்; இந்தப் பலியை ஏற்றுக்கொள்ளாதவர்களைத் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

ஜெபம். மாசற்ற ஆட்டுக்குட்டியே! நீர் சிலுவையில் தொங்கி-வல்லார் கடன்செலுத்தி இக்கதரிலே தொங்கி பொல்லாப்பைச் சாதல் வென்றீர் பொல்லாருக்காகச் சென்றீர்-அடியார்மேல் இரங்கும். நீர் சமாதானம் தாரும், சுவாமி, ஆமேன்.

யோவா. 19, 19-42. அல்லது சங். 22, 1-22. வாசிக்கவும்.

பரிசுத்த வாரம், சனி.

ஏ. 56, 1. 3.

அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு, யூதர் பிரேத அலங்காரம்பண்ணுகிற முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே கூடச் சீலைகளில் சுற்றினார்கள். அவர் சிலுவையில் அறையுண்ட இடத்திலே ஒரு தோட்டமும், தோட்டத்தில் ஒருவனும் ஒருபோதும் வைக்கப்படாத ஒரு புதிய கல்லறையும் இருந்தது. யூதருடைய ஆயத்த நாளானபடியினாலும் அந்தக் கல்லறை சமீபமானபடியினாலும், அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள். யோவா. 19, 40-42.

நாம் நமக்கு அருமையான ஒருவனைப் பூமியில் புதைத்த பிற்பாடு அவன் கல்லறையைப் பார்க்கப் போவோம். அவன் வைக்கப்பட்ட இடத்தைப் பார்க்க ஆசைதான் [illegible]வோம். அப்படியே இன்றைக்கும் நமது அருமையான இரட்சகர் கல்லறையண்டைக்குப் போவோம், வாருங்கள். அவர் கல்லறையில் இறங்கினதால் நமது கல்லறையைப் பரிசுத்தமாக்கி அதைச் சயன அறையாக மாற்றிவிட்டார். நமக்கு அருமையானவர்களுடைய கல்லறையண்டையில் நின்று அவர்கள் நமக்குச் செய்த [illegible] நன்மைகளையும் நினைக்கிறோம். அதுபோல இந்தச் சனிக்கிழமையில் நமது இரட்சகர் நமது மரணத்தினால் பாவிகளாகிய நமக்குச் செய்த பெரிய நன்மையும் அவர் பூமியில் சஞ்சரித்த காலத்தில் சொன்ன அதிசயமான வார்த்தைகளை

யும் தம்மைத் தேவகுமாரனென்று ரூபிப்பதற்குச் செய்த அற்புதங்களையும் நினைவுகூருவோமாக.

மரித்தவர்களுடைய கல்லறையண்டை நிற்கிற நாம், அவர்களை எவ்வளவாய் அசட்டை பண்ணினோம் நாம் அவர்களைக் கடுத்த சிநேகத்தால் சிநேகிக்காமல் அவர்களை அடிக்கடி வருத்தப்படுத்தினோம் என்பதையும் மறக்கக்கூடாது. அப்படிப்போல நாம் இயேசுவின் அன்பை அசட்டைபண்ணி அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமல் நிர்விசாரமாய் நன்றிகெட்டு நடந்ததையும் அவருடைய கல்லறையண்டை நிற்கிற நாம் நினைக்கவேண்டும். ஆ, இயேசுவுக்குக் கல்லறையை வெட்டினவர்கள் நாமே. நமது நிமித்தம் ஆண்டவர் அந்த இருளான இடத்தில் இறங்கினர். ஆயினும் நாம் புலம்பத் தேவையில்லை. அந்தகாரமானது அவரால் வெளிச்சமாகும். நாம் இனிக் கல்லறைக்குப் பயப்படவேண்டியதில்லை. அது நமக்குத் தூங்கும் அறையாகும். அங்கே நாம் கடைசி நாள்மட்டும் இளைப்பாறுவோம். நமக்கு அருமையானவர்களையும் நாம் கண்ணீரோடல்ல, உற்சாகமான நம்பிக்கையோடு பூமியில் [illegible]க்கலாம். அங்கே அவர்களும் தங்கள் வேலையை விட்டு இளைப்பாறுவார்கள்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உமது மரணத்தினால் எங்கள் மரணத்தை அமர்த்தமாக்கி நித்திய இளைப்பாறுதலைச் சம்பாதித்ததற்காக உமக்குத் ஸ்தோத்திரம். நாங்கள் நல்ல ஆயத்தத்தோடு எங்கள் கல்லறையில் இறங்கிக் கடைசி நாள்மட்டாக இளைப்பாறி நித்திய பாக்கியத்துக்குக் காத்திருக்க எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமேன்.

மத். [illegible] 32-66. அல்லது சங். 22, 23-32. வாசிக்கவும்.

கர்த். உயிர்த். பண்டி. முதலாம் நாள்.

ஏ. 59, 1. 2.

அவன் அவர்களுக்குச் சொன்னதாவது: திகையாதிருங்கள்; சிலுவையிலறையுண்ட நசரேத்தூரானாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் எழுந்தார், அவர் இங்கே இல்லை; இதோ, அவரை வைத்த இடம். மாற். 16, 6.

அவர் எழுந்தார் என்று தூதன் அந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் அக்கூறுள்ள ஸ்திரீகளுக்கு அறிவித்தான். இந்தப் பெரிய அதிசயத்தை அவர்கள் துவக்கத்தில் கிரகித்துக்கொள்ளவில்லை. சீக்கிரத்தில் இந்தச்செய்தி அவர்கள் முகத்தையும் இருதயத்தையும் சந்தோஷத்தால் பிரகாசிக்கச் செய்தது. உயிர்த்தெ

ழுந்தவர் ஆர்? நமது ஆத்துமத்தை நேசித்து நமக்கு எல்லா மாய் நின்று நமது நிமித்தம் அக்கிரமக்காரரைப்போல் சிலுவையில் மரித்தவர்தான். இவரே உயிர்த்தெழுந்தார்; அவரோடே நமது பாக்கியமும் நம்பிக்கையும் போயிற்றென்று நினைத்தோம். ஆனால் அவர் மெய்யாகவே நமது பாக்கியமும் நம்பிக்கையுமாகப் பிழைத்திருக்கிறார். இப்படிப் பெரிய வெள்ளிக் கிழமையின் துக்கம் உயிர்த்தெழுந்த பண்டிகையில் சந்தோஷமாக மாறுகிறது.

அவர் எழுந்தார் என்ற ஜெயசெய்தி இன்றைக்குத் தேசம் எங்கும் தொனிக்கிறது. பண்டிகை கொண்டாடும் சபை களிகூர்ந்து, என் அடைக்கலமும் என் இரட்சிப்புமான இயேசு உயிரோடிருக்கிறாரென்று அறிவிக்கிறது. மனுஷபுத்திரர் அடைந்த ஜெயங்களில் எல்லாம் இதுவே பெரிய ஜெயம். மரணம் ஜீவனின் சத்துருவோடே தேவகுமாரன் போர்புரிந்து அதினை நிர்மூலமாக்கிவிட்டார். அவன் ஆயுதமாகிய பாவம் முறிந்துபோயிற்று. பாவத்தின் சம்பளமாகிய மரணம் தொலைக்கப்பட்டது. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு ஜெயங்கொடுத்த பரமபரனுக்கு ஸ்தோத்திரம்.

நாமும் சந்தோஷப்படுகிறோமா? நம் உயிர்த்தெழுந்தவரைக் கண்டுபிடித்தால் சந்தோஷம் அடையவேண்டுமானால் சிலுவையில் அறையுண்டவரை அந்த ஸ்திரீகள் தேடினதுபோல் தேடவேண்டும். பெரிய வெள்ளிக்கிழமையில் துக்கித்தவனே அவனே அவர் உயிர்த்தெழுந்த பண்டிகையில் சந்தோஷிப்பான். இரட்சகர் நீக்கிப்போட்ட பாவம் உனக்கு வெறுப்பாயிருந்தாலொழிய அவர் சம்பாதித்த நித்திய ஜீவன் உனக்கு விருப்பமிராது.

இயேசுவைப்போல நாமும் உயிர்த்தெழுந்திருப்போம். மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயமெங்கே என்று நாமும் கூப்பிடுவோம். தலைமானவராகிய அவர் அவயவங்களாகிய நம்மை விடமாட்டார்.

ஜெபம். கர்த்தரே உமது மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் நித்திய ஜீவனையும் [illegible] எங்களுக்குச் சம்பாதித்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நீர் மரித்தவரும் பின்னரும் உயிருள்ளவருமாயிருக்கிறீர், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறீர் (அபி. 1, 17.) உமது நாமத்துக்குத் துதியும் புகழ்ச்சியும் உண்டாவதாக, ஆமென்.

மத். 28, 1-8 அல்லது சக. 10, வாசிக்கவும்.

கர்த். உயிர்த். பண்டி. இரண்டாம் நாள்.

[illegible] 59, 3. 4.

அப்பொழுது அவர் இவர்களோடே: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்கு அறிவில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இப்பாடுகளை உத்தரிக்கிறதும் தம்முடைய மகிமைக்குள் பிரவேசிக்கவும் வேண்டியதாயிருக்கவில்லையோ என்று சொன்னார். லூக். 24, 25. 26.

கர்த்தர் உயிர்த்தெழுந்த நாளில் எம்மாவுக்குப்போன இந்த இரண்டு சீஷருக்கும் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று தெரியாதிருந்தது. ஆதலால் சந்தோஷ நாளிலே அவர்கள் துக்கமுகமாய்ப் போகிறார்கள். இந்த துக்கம் எப்படி உண்டாயிற்று? அவர்களுடைய அவிசுவாசமான மந்த இருதயத்தால் உண்டாயிற்று. அவர்களுக்குச் சரியான உணர்வு இல்லை. எல்லாச் சந்தேகத்தையும் விட்டுச் சத்தியமாய் விசுவாசிப்பதற்கு அவர்களுக்கு உற்சாகம் இல்லை. ஸ்திரீகள் கல்லறை வெறுமையாயிருக்கக் கண்டதும் அவர் உயிர்த்தாரெனத் தேவதூதன் தங்களுக்குத் தெரிவித்ததும் [illegible] சொல்லியும் அவர்கள் நம்பவில்லை. உணர்வு, உற்சாகம் என்ற இவ்விரண்டையும் கர்த்தர் தேவ வசனத்தைக்கொண்டு அவர்களுக்குப் புகட்டுகிறார். உலகத்தோற்றத்துக்குமுன் தேவன் செய்த ஆலோசனையைத் தீர்க்கதரிசிகள் அறிவித்தார்கள் என்று இரட்சகர் அவர்களுக்குக் காட்டுகிறார். இப்படி கிறிஸ்து இப்படிப் பாடுகளை உத்தரித்து மகிமைக்குள் பிரவேசிக்க வேண்டியதாயிருந்தது. நமது பாவங்களுக்காக வரவேண்டிய பாடுகளை நாமே அநுபவிக்கவேண்டியது, அல்லது அவர் நமக்காகப் பாடுபடவேண்டியது. இதை அறிந்துகொள்ள ஆண்டவர் சீஷருடைய கண்களைத் திறந்தார். அதினால் அவர்களுடைய இருதயத்தில் விசுவாசத்தின் தீ மூண்டது. உயிர்த்தெழுந்தவர்மேல் வைத்த விசுவாசத்தினால் அவர்கள் இருதயம் பற்றியெரிய ஆரம்பித்தார்கள்.

கர்த்தர் எழுந்தார் என்று அநேகர் நம்பமாட்டார்கள். அவர்கள் இன்றைக்கு உயிர்த்தெழுந்த பண்டிகையைச் சரியாய்க் கொண்டாடமாட்டார்கள். அந்தச் சீஷரைப்போல தங்கள் சந்தேகங்களினால் துக்கப்பட்டு, உயிர்த்தெழுந்தவரால் வரும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் வாஞ்சிக்கிறவர்களுக்கெல்லாம் கர்த்தர் ஆதரவை புரிவார். நமது மதியீனத்தையும் மந்த இருதயத்தையும் நீக்குவதற்கு வேத வசனத்தை அல்லாமல் வேறே மருந்து கிடையாது. அது பிரசங்கிக்கப்படும் இடங்களில் நமது இருதயத்தைப் பிரகாசிப்பிக்கும். அப்பொழுது கர்த்தர் மறைந்துபோனாலும் நமது சந்தோஷம் அற்றுப்போகாது.

நமது கண்கள் அவரைப் பார்க்காவிட்டாலும் நமது விசுவாசம் அவரைக் கெட்டியாய்ப் பிடிக்கும்.

செபம். சர்வ வல்லமையுள்ள சருவேசுரனே! உமது சேசுநாதரைக் கல்லறையிலிருந்து எழுப்பி உலகத்திற்கு நித்திய உயிரைத் தந்தருளினீர். ஆண்டவரே, நாங்கள் இந்த [illegible] செய்திகளைக் கேட்டு ஒழியாத ஆனந்தமும் உற்சாகமும் அடை[illegible]ங்களுக்கு கிருபை செய்யும், சுவாமி, ஆமென்.

யோ. 20, 1-10. அல்லது சே. 1, 1-12. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். செவ்வாய்.

தி. 62, 1, 2.

அவர்களுடனே அவர் சொன்னதாவது: இந்தப் பிரகாரமாக எழுதியிருக்கிறது, இந்தப் பிரகாரமாகவும் கிறீஸ்து பாடுபட்டு, மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும், எருசலேம் துவக்கி சகல சாதிகளிடத்திலும் குணப்படுதலும் பாவமன்னிப்பும் அவர் நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது. லூக். 24, 46. 47.

உயிர்த்தெழுந்த இரட்சகர் பரத்துக்கு எழும்புமுன் தமது சீஷரோடு பேசின யாவையும் நமக்கு இங்கே அறிவிக்கச் சொல்லுகிறார். அவர் வேத எழுத்தை அவர்களுக்கு விவரித்து அவர்கள் கண்ணாரக் கண்ட பெரிய அதிசயங்களை அவர்களுக்கு விளக்கப்பண்ணினார். இதின் அர்த்தம் இன்னதென்று பேதுரு சொன்ன வார்த்தைகளினாலே நமக்கும் தெரியும். இயேசுநாதர் இவ்வுலகத்தில் பிறந்து மரித்து உயிர்த்தெழுந்தாரென்பது வென்று எல்லாச் சாதிகளும் பாவமன்னிப்படையப் பெறுவதே. இதற்காகவே இயேசு முன்னாளிலே கிடந்து இறுதியில் தோன்றிக் கல்லறையிலிருந்து அதை விட்டு எழுந்தார். அவருடைய பிரமாணங்களெல்லாம் வாய்த்தது என்றும் அவர் சம்பாதித்த பாவமன்னிப்பு நிறைவேறிற்று என்றும் நாம் இந்தக் கல்லறையிலிருந்து கொள்ளுகிறோம்.

அவர் எல்லா மனிதருக்கும் கல்லறையிலிருந்து கொண்டுவந்த கொண்டுபோகும் பாவமன்னிப்பே. இது மனிதருக்கு எல்லாவற்றிலும் அவசியமான பொருள். அதில்லாவிடில் மற்ற எல்லா நன்மைகளும் அவர்களுக்குப் பயன்படாது. அவர்களுடைய ஆத்துமமும் நாசமாய்ப் போய்விடும். பாவமன்னிப்புள்ளவர்களுக்கோ அங்கே ஜீவனும் மோட்சமும் உண்டு. அதைப் பெற்றவர்கள் எல்லா நன்மைகளையும் பெற்றவர்கள். ஆயினும்

ஒரு வார்த்தையை மறக்கக்கூடாது. அந்த வார்த்தை இந்தப் பொக்கிஷத்துக்கு வாசலாயிருக்கிறது. அது குணப்படுதல் என்கிற வார்த்தைதான்; குணப்படாதவர்களுக்குப் பாவமன்னிப்பு இல்லை. அவர்கள் இரட்சகர் உயிர்த்தார் என்று நம்பவும் மாட்டார்கள். மனஸ்தாபப்பட்ட இச் சிஷ்யருக்கோ ஆண்டவர் ஒத்தாசை பண்ணி அவர்களை விசுவாசத்தைத் திடப்படுத்துவார்.

செபம். பரம பிதாவே! உமது ஏகசுதனாகிய குமாரனை எங்கள் பாவங்களினிமித்தம் ஒப்புக்கொடுத்து நாங்கள் நீதிமான்களாகும்பொருட்டு உயிரோடெழுப்பினதற்காக உம்மைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம். அன்புள்ள பிதாவே, செத்த எங்கள் இருதயங்களை எல்லாம் உயிரோடெழுப்பி, உறுதியான நம்பிக்கையால் நிரப்பி ஜீவாதிபதியாகிய எங்கள் இரட்சகரோடு ஐக்கியப்படுத்தியருளும், சுவாமி, ஆமென்.

யோ. 20, 11-31. அல்லது சே. 11, 13-25. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். புதன்.

தி. 62, 3. 4.

கிறீஸ்து எழுந்திராமற் போனாரானால், உங்கள் விசுவாசமும் வீணாயிருக்கிறது; இன்னம் உங்கள் பாவங்களில் இருக்கிறீர்கள். கிறீஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்களும் கெட்டார்கள். நாம் இம்மைக்காக மாத்திரம் கிறீஸ்துவின் பேரில் நம்பிக்கையாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருக்கிறோம். இப்போதோ கிறீஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற் பலனானார். 1 கொரி. 15, 17-20.

கிறீஸ்து இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது நமது விசுவாசத்திற்கு அஸ்திபாரமும் கொடுமுடியுமாயிருக்கிறது. இந்த அஸ்திபாரம் விட்டால் நமது விசுவாசத்தின் முழுக் கட்டடமும் விழுந்து விடும். சேசுவன் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழப்படாவிட்டால், நாம் முதலாம் பிரிவில் வாசிக்கையில் அவருடைய சர்வ வல்லமை எங்கே? கிறீஸ்து பிரசங்கத்தில் விலைகொண்டிருந்தாரானால் இரண்டாம் பிரிவில் சொல்லப்பட்ட அவருடைய ஜீவியத்திலும் மரணத்திலும் என்ன பிரயோசனம்? அவர் பரத்துக்கேறித் திரும்பி வராவிட்டால், அவர் உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனும் உண்டென்று அறிக்கையிடுகிற நமக்குப் பயன் என்ன? கிறீஸ்து பட்ட மனக்கலக்கம் ஆத்துமத்திற்கு ஆறுதலில்லை. கிறீஸ்து மரணத்தில் நிலைகொண்டிருந்தால் அவர் நமது

சொந்தப் பாவத்தின் சம்பளத்தை வாங்கினவராயிருப்பார். நாமும் நமது பாவங்களுக்கு ஈடு செலுத்த வேண்டியவர்களாயிருப்போம். அவர் உயிர்த்தது நிச்சயமில்லையானால் நாம் மரிக்கும்போது நம்பிக்கையற்றவர்களாய் மரிப்போம். அவர் உயிர்த்தெழாவிட்டால் நாமும் உயிர்த்தெழமாட்டோம். அப்போது நாம் எல்லா மனிதரையும் பார்க்க அதிக நிர்ப்பாக்கியர்.

ஆகிலும் தேவ வல்லமையினால் கர்த்தர் எழுந்தார். அவருடைய மரணத்தினால் நமது பாவத்தின் வேர் அறுந்தது. அவருடைய உயிர்த்தெழுதலினால் ஜீவனும் அழியாமையும் வெளிச்சத்துக்கு வந்தது. அப்போஸ்தலர் உயிர்த்தெழுந்தவரைத் தங்கள் சரீரக் கண்களால் கண்டு அதற்குச் சாட்சி பகர்ந்தார்கள். எக்காலத்திலும் விசுவாசிகள் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அநுபவித்து உணருகிறார்கள். தாங்கள் இப்படி உணர்ந்திருந்தது உண்மை என்று வாழ்விலும் தாழ்விலும் ரூபிக்கிறார்கள். நமது விசுவாசத்தின் அஸ்திபாரமும் கோடிக்கல்லும் அசையாமல் உறுதியாய் நிற்கிறது.

ஜெயம், எங்கள் பரம இராசாவே! தேவரீர் மரணத்தை வென்று மூன்றாம் நாளில் உயிர்த்து நித்திய பாக்கியத்தை எங்களுக்கு அருளினீர். கர்த்தாவே, எங்கள் அவிசுவாசத்தை நீக்கி எங்களுக்கு உறுதியான நம்பிக்கையைத் தந்து உமது மோட்ச இராச்சியத்தில் எங்களைப் பங்காளிகளாக்கியருளும், சுவாமி, ஆமேன்.

மத். 28, 1-15. அல்லது கொ. 2, 1-16. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். வியாழன்.

பி. 62, 5. 6.

ஆகிலும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்போது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னைச் சிநேகித்து, எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த பரமனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். கலா. 2, 20.

கிறிஸ்து உயிரோடிருக்கிறார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் மிக உறுதியாய் நம்புகிறான். உயிர்த்தெழுந்தவர் மற்ற அப்போஸ்தலருக்குக் காணப்பட்டதுபோல் இவனுக்கும் மகிமையான சரீரத்தில் காணப்பட்டார். பவுல் தமஸ்குவுக்குப் போகும் வழியில் தன் சரீரக்கண்களால் அவரைப் பார்த்தான். ஆகிலும் உயிர்த்தெழுந்தவரை நம்புவதற்கு அப்போஸ்தலனுக்கு

இன்னொரு ஆதாரம் உண்டு. கிறிஸ்து பிழைத்திருக்கிறார் என்பதை அவன் அநுதினமும் தன் இருதயத்தில் உணர்ந்தான். கிறிஸ்து அவனுக்குள் பிழைத்திருந்தார். முந்தி அவன் குணப்படாத சவுலாய்ப் பெருமையையும் சுயநீதியையும் தன் இருதயத்தில் கொண்டு கிறிஸ்தவர்களைப் பகைத்து வந்தான். பழைய ஜென்ம சுபாவமானது அவனை முற்றிலும் ஆண்டது. அவனைச் சிநேகித்து அவனுக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்தவர் மேலுள்ள நம்பிக்கையினாலோ ஜீவனுள்ள இரட்சகர் அவனை வசப்படுத்திப் பழைய மனிதனை அதன் பாவங்களோடு கொன்றார். இப்படி அவன் தன்னில் கிறிஸ்து எழுந்தாரென்றுணர்ந்திருந்தான்.

அப்போஸ்தலர் உயிர்த்தெழுந்தவரைத் தங்கள் கண்களால் காணப்பெற்றது அவர்கள் சிலாக்கியந்தான். ஆனால் அவர் பிழைத்திருக்கிறாரென்பதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் அநுபவத்தால் அறியவேண்டும். இப்படியறிந்து தன் உள்ளத்தில் நிச்சயிக்கவேண்டும். கிறிஸ்துயிர்த்ததை மெய்யென்றொப்புக்கொள்வது வேறே. உயிர்த்த அவர்மேல் நம்பிக்கை வைப்பது வேறே. நாம் அவருடைய பலத்தைக்கொண்டு நமது பாவத்தின் கல்லறையை விட்டு வெளியேறிப் பொல்லாப்பு[illegible] என்ற புளித்தமாவை அகற்றி அவருடைய ஜீவனை நமது இருதயத்தில் உணர்ந்து அவர் நம்மில் பிழைக்கப் பெற்றால்தான் நாம் அவரை நம்புகிறவர்கள் என்று சொல்லலாம். அவர் நமது புதிய ஜீவனாயிருக்கிறாரோ அங்கே பாவமென்பது விலகி ஓடி எல்லாம் புதிதாகும். நீயும் அவரால் புதிதாகு. அப்போது என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று நீயும் களிகூரலாம்.

ஜெயம், உயிர்த்தெழுந்த இரட்சகரே! நாங்கள் உமது ஜெயத்தைப்பற்றிக் களிகூர்ந்து பாடுகிறோம். உமது ஜெயம் எங்கள் ஜெயமாகும். உமது வல்லமையினால் எங்களுக்கு நித்திய ஜீவனைச் சம்பாதித்தீர். ஆண்டவரே, நாங்கள் இதை நிச்சயித்துக்கொண்டு இந்த விசுவாசத்தினால் அழியாத சந்தோஷத்தை அடைய எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி, ஆமேன்.

லூக். 24, 13-35. அல்லது கொ. 2, 17-29. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். வெள்ளி.

பி. 62, 7. 8.

இயேசு அவர்களை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்பேரில் விசுவாசிக்கிறவன் மரித்தும் பிழைப்பான். உயி

ரோடிருந்து என்பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாம் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயோ என்றார். யோவா. 11, 25. 26.

உயிர்த்தெழுந்த கிறீஸ்து என்கிற சூரியன் நமது இருட்டான கல்லறையில் மகிமையாய்ப் பிரகாசிக்கிறது. ஒருவன் தன் சிநேகிதனைப் பூமியில் புதைத்து அவன் சவப்பெட்டியின்மேல் மண் விழுவதைக் கேட்கும்போது அவன் அந்தச் சரீரம் எப்படி அழிய ஆரம்பிக்கும் என்றும் தன்னையும் இப்படி ஒருநாள் பூமியில் புதைப்பார்கள் என்றும் நினைப்பான். உன் சரீரம் அழிந்து பூச்சிகளுக்கு இரையாகும். இதை அறிந்தவனுக்கு மரணம் பயங்கரமானது. இது மாத்திரமல்ல, மனுஷன் மரித்த பிறகு சகலவற்றையுமறிந்த பரிசுத்தமும் நீதியுமுள்ள பராபரனுக்கு முன்பாக நியாயத்தீர்க்கப்படுவதே மரணத்திலும் அதிக பயங்கரமானது.

ஆ! இவ்வளவு பயங்கரமாயிருந்தாலும், கிறீஸ்தவர்களாகிய நாம் இறந்துபோன நம்முடையவர்களைத் துக்கத்தோடும் புலம்பலோடும் அடக்கம்பண்ணுமளவும் நம்முடைய மரணத்தைத் திகிலோடும் ஐயத்தோடும் நினைக்காமலும் இருந்து, நம்முடைய கல்லறைகளண்டையில் நமது நம்பிக்கையையும் ஜெயத்தையும் விளக்கும் பாடல்களைப் பாடுகிறோம்.

இயேசு மரணத்தை விட்டு எழுந்திருந்த அதினால் நம்முடைய மரணத்தையும் ஜெயித்த காரணத்தினாலே இப்படிப்பட்ட பாடல்களினால் மரணத்தில் நமக்கிருக்கும் நம்பிக்கையை அறிவிக்கிறோம்; நம்முடைய தாழ்மையான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பான மறுரூபமாக்குகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறீஸ்துவின் மூலமாய் நித்திய ஜீவனுக்கென்று உயிர்த்தெழுவோம் என்ற திடநம்பிக்கையில் நாம் நிலைத்திருக்கிறோம். என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் என்னைப் பூமியிலிருந்து உயிரோடெழுப்புவார் என்றும் அறிந்திருக்கிறேன் என்கிற வார்த்தைகள் நம்மை ஆற்றித் தேற்றும். இதைக் குறித்து கல்லறையின்மேல் ஒரு சிலுவையை வைக்கிறோம். நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று சொன்னவருடைய அடையாளம் இதுதான். இப்படி மரித்தோர் வைக்கப்படுமிடம் நித்திய ஜீவனுக்கு வாசற்கால். இதை நீ விசுவாசித்தால் உயிர்த்தெழுந்தவருடைய வெளிச்சம் உன் கல்லறையையும் பிரகாசிப்பிக்கும்.

ஜெபம். உயிர்த்தெழுந்த ஜீவாதிபதியே! நாங்கள் மரண அவஸ்தையிலும் சந்தோஷ நம்பிக்கையுள்ளவர்களாய் உம்மைப் பற்றிக்கொள்ள எங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தி எங்களுக்கு உமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்செய்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 24, 36-53. அல்லது ரோ. 3, 1-20. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். சனி.

ஏ. 62, 9. 10.

முதலாம் பிரிவு. பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த பிதாவாகிய பராபரனை விசுவாசிக்கிறேன்.

இதற்கர்த்தமென்ன: பராபரன் என்னையும் சகல வஸ்துக்களையும் உண்டாக்கி எனக்குச் சரீரத்தையும் ஆத்துமாவையும் கண் காது முதலான சகல அவயவங்களையும் புத்தியையும் சகல இந்திரியங்களையும் அளித்து இன்னைவரைக்கும் காத்து நடத்திவருகிறார் என்று விசுவாசிக்கிறேன். அல்லாமலும் என் சரீரத்துக்கு ஜீவனுக்கும் வேண்டிய சகல ஆகாரமாகிய அன்னவஸ்திரம், பிழைப்புத்தொழில், பெண்சாதி பிள்ளை, வீடு வாசல், ஆடு மாடு, நிலமுதலிய சகல ஆஸ்திகளையும் அவர் எனக்குக் கட்டளையிட்டு, என்னை அநுதினமும் பரிபூரணமாய்ப் பராமரித்து வருகிறார் என்று விசுவாசிக்கிறேன்.

பத்துக் கற்பனைகளின்படி நமக்குச் சன்மார்க்கத்தைக் கற்பித்த தேவனைத்தவிர நமக்கு வேறே தேவன் இல்லை. இந்த மெய்யான தேவனைப்பற்றி நமக்கு என்ன தெரியும்? அவர் பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தவர். நாம் நமது கண்களை எடுத்து எங்கே பார்த்தாலும் நாம் காண்பதெல்லாம் அவருடைய சிருஷ்டிதான். நம்மையே நாம் பார்த்தால் நமது சரீரமும் ஆத்துமாவும் கண் காது முதலிய அவயவங்களும் புத்தி முதலான இந்திரியங்களும் எல்லாம் அவராலேயே நமக்குக் கிடைத்தது. நமக்கு உள்ளது உரியது எல்லாம் அவர் கொடுத்த உபகாரமே. அவருடைய உபகாரங்களில் சிலதை லூத்தர் சாஸ்திரியார் மேலே எழுதிய அர்த்தத்தில் சொல்லுகிறார்.

தேவனுடைய உபகாரங்களாலேயே தினம் பிழைக்கிறோம். அப்படியிருக்க நாம் பெருமைபாராட்டுவதற்கு இடம் இல்லை. நமது தேவனையன்றி நாம் ஒன்றுமல்லோம். அவராலே பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். எல்லாக் கனமும் மகிமையும் அவருக்கே உரியது.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தாவே, உமது கிரியைகள் எத்தனை திரள். அவைகளை எல்லாம் ஞானமாய்ப் படைத்தீர். பூமி உமது பொருட்களால் நிறைந்திருக்கிறது. அதிலுள்ள சிருஷ்டிகள் யாவும் நீர் கொடுக்க வாங்கிச்

கொள்ளும். நீர் உம்முடைய கையைத் திறக்கும் தன்மையால் திருப்தியாகும். நீர் உமது முகத்தை மறைக்கத் திகைக்கும். நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள அவைகள் மாண்டு தங்கள் மண்ணுக்குத் திரும்பும். நீர் உமது ஆவியை அனுப்பும்போது சிருஷ்டிக்கப்படும். பூமியின் முகத்தையும் புதிதாக்குவீர். நான் இருக்குமட்டும் உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன், சுவாமி, ஆமேன்.

யோ. 21, 1-4. அல்லது கொ. 3, 21-31. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். முதலாம் வாரம், ஞாயிறு.

ஞ. 62, 11. 12.

வாரத்தின் முதல் திருமையான அன்றையத்தினம் அந்திமனவேளையிலே, சீஷர் கூடியிருந்த இடத்தில் யூதருக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று, அவர்களோடு: உங்களுக்குச் சமாதானம் என்றார். இதைச்சொல்லி, தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். அப்போது சீஷர் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். யோவா. 20, 19. 20.

முக்கிய அக்கிரமம் ஏற்படும் அடைந்திருந்த சீஷர் ஆண்டவர் உயிர்த்தெழுந்த காலே சாயங்காலம் அவரைப் பார்த்ததினால் சந்தோஷமடைந்தார்கள். அவர்கள் அடைந்த சந்தோஷம் அளவிறந்தது. அந்தச் சந்தோஷம் நாம் அவரை முகமுகமாகப் பரலோகத்தில் பார்த்து அடையும் சந்தோஷத்துக்குச் சரி.

உங்களுக்குச் சமாதானம் என்று ஆண்டவர் அவர்களை வாழ்த்தினதுபோல நம்மை வாழ்த்தினால் அதே சந்தோஷத்தை நாமும் அடைவோம். அவருடைய நாமத்திலே, எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர் தமது வாக்கின்படி அவர்கள் நடுவே இருப்பார். கூடியிருக்கும் சபைக்கு முன்பாக அவருடைய வசனம் அறிவிக்கப்படும்போதும், ஒரு குடும்பத்தார் ஜெபத்திற்கும் தியானத்திற்கும் கூடிவரும்போதும், ஒரு தனிக்கிறிஸ்தவன் தன் அறையில் தியானத்திற்கென்று தன் வேதபுஸ்தகத்தைத் திறந்து வாசிக்கும்போதும் அவர் உட்பிரவேசித்துத் தம்முடையவர்களை வாழ்த்துகிறார். அப்போது அவர் சகல பயத்தையும் திகிலையும் நீக்கித் தமது சமாதானத்தை அவர்களிருதயத்தில் கொடுக்கிறார்.

அப்போது நாம் அவருடைய கைகளிலும் விலாவிலும் அவர் நமக்காகப் பட்ட காயங்களைப் பார்ப்போம். இந்தக் காயங்கள் உயிர்த்தெழுந்த அவருடைய சரீரத்தில் அவர் நமக்காகப் போராடி முடித்த யுத்தத்தின் அடையாளங்களாம். நமது அக்கிர

மங்களின் நிமித்தம் காயப்பட்டு நமது பாவங்களின் நிமித்தம் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று என்று இந்தக் காயங்கள் நமக்குச் சொல்லுகின்றன. இயேசுவின் காயங்களினால் உண்டான இந்தச் சமாதானத்தைத் தவிர வேறெதுவும் [illegible] இருதயத்தைச் சந்தோஷிப்பிக்காது. நாம் இப்படி விசுவாசத்தினால் நீதிமான்களானபடியால் இயேசுவின் மூலமாய் நமக்குப் பராபரனிடத்தில் சமாதானம் உண்டென்கிற நிச்சயத்தைத் தவிர வேறெதுவும் நம்மைச் சந்தோஷப்படுத்த முடியாது. இப்படி விசுவாசிக்கிறவர்கள் ஆண்டவரைக் கண்ணாரக் காண்பார்கள். அப்போது அவர்கள் சந்தோஷம் நிறைவாகும். அவர்கள் ஆண்டவரோடு எப்போதும் இருப்பார்கள்.

ஜெபம். ஜீவாதிபதியே! உமது சிலுவையின் [illegible] உமக்குக் காத்திருக்கிறோம். உம்மை வாஞ்சையோடு எதிர்பார்க்கிறோம். [illegible] எங்கள் மீட்பரே, உமது நித்திய சமாதானத்தை எங்கள் இருதயங்களில் [illegible] வைத்தருளும். உமது அன்பின் அடையாளங்களை எங்களுக்குக் காண்பித்தருளும், சுவாமி, ஆமேன்.

யோ. 21, 15-25. அல்லது சங். 95. வாசிக்கவும்.

1125621

உயிர்த். பண்டி. பின். முதலாம் வாரம், திங்கள்.

ஞ. 182, 1.

பின்பு தோமாவுடனே: நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார்த்து, உன் கையை நீட்டி என் விலாவிலே போட்டு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரத்தியுத்தரமாக: என் ஆண்டவரே, என் பராபரனே என்றான். இயேசு அவனுடனே: தோமாவே, நீ என்னைக் கண்டபடியினாலே விசுவாசித்தாய்; காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். யோவா. 20, 27-29.

என் ஆண்டவரே, என் பராபரனே என்று தோமா அறிக்கையிடுமட்டும் இரட்சகர் எத்தனை அன்போடு அவனிடம் பேசுகிறார் என்பதைக் கவனி. அவர் நம்மை மெய்யான விசுவாசத்துக்கு வழிநடத்தாவிட்டால் நாம் ஒருபோதும் அவரை நமது ஆண்டவர் என்று அறிக்கையிடமாட்டோம். அவர் நம்மை இப்படி வழிநடத்தச் சித்தமாயிருக்கிறார். அவர் நம்மண்டைக்கும் அன்போடு வருகிறார். அவர் இப்பூமியில் நம்மை நடத்தும் சகல ஆச்சரியமான வழிகளிலும் இதுவே அவருடைய நோக்கம்.

ஒரு சமயத்தில் அவர் நம்மை அதிக சந்தோஷப்படுத்துவார். இன்னொரு சமயத்தில் இருண்ட துன்பத்தின் பள்ளத்தாக்கில் நம்மை நடத்துவார். இன்னொரு சமயத்தில் நம்மைப் பட்சமாய்க் கூப்பிட்டுத் தமது அன்பைத் தெளிவாய் விளங்கப் பண்ணுவார். இன்னொரு சமயத்தில் அவர் தமது கோபத்திலே நம்மைக் கடிந்துகொண்டு தமது பரிசுத்த பிரமாணத்தின் இடியினால் நமது மனச்சாட்சியைத் திகிலடையச் செய்வார். இதினால் நாமும் அவர் பாதத்தில் விழுந்து என் ஆண்டவரே, என் பராபரனே என்று அதிசயிக்கையிட நம்மை ஏவி எழுப்பச் சித்தமாயிருக்கிறார். இப்படி அவரை அதிசயிக்கையிடுவதற்கு நாம் நமது சரீரக் கண்ணினால் அவரைப் பார்க்க வேண்டியது அவசியம் அல்ல. அவர் காணப்படாத விதமாயும் தம்மை வெளிப்படுத்துவார். பார்க்காமல் விசுவாசிக்கிறவர்களே பாக்கியவான்கள் என்று அவர், தோமா பரத்துக்கேறின நாள் முதல் திரும்பி வரும் மட்டும் நமக்குச் சொல்லுகிறார். தமது முழு ஜீவியத்திலும் பரலோகத்திலும் அவர் நம்முடையவர். அவர் நமக்காகப் பிறந்து பாடுபட்டவர். முன்னணை துவக்கிக் கல்லறை மட்டும் அவர் பாவிகளாகிய நமக்குச் சகோதரராய் இருந்தார். அவர் நம்முடையவராய் இருக்கும்போது நாம் அவருடையவர்களாயிருக்க வேண்டும். நமது இருதயமும் ஜீவனும் அவருக்குச் சொந்தமாயிருக்க வேண்டும். நாம் அவருடைய சத்தத்தைக் கேட்டு அவருக்கு நமது இருதயத்தில் இடங்கொடுத்தால் அதைத் தமது வாசஸ்தலமாக ஆண்டு நடத்துவார்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! எங்கள் மந்த இருதயத்தின் மேல் இரங்கி உமது ஆவியைக்கொண்டு நீர் விசுவாசத்தை எங்களுக்கு அருளிச்செய்யும். உமது ஆதித்தருள் இல்லாமல் நாங்கள் உம்மை நம்ப முடியாது. எங்களுக்கு உமது மகிமையை வெளிப்படுத்தியருளும். சுவாமி, ஆமென்.

மத். 28, 16-20. அல்லது ரோ. 4, 1-13. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். முதலாம் வாரம், செவ்வாய்.

ஆ. 182, 3. 4.

பராபரனில் பிறந்ததெல்லாம் லோகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே லோகத்தை ஜெயித்த ஜெயம். இயேசு பராபரனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவனே ஒழிய, பின்னை ஆர் லோகத்தை ஜெயிக்கிறவன்; 1 யோவா. 5, 4. 5.

லோகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆகிலும் திடன்கொள்ளுங்கள். நான் லோகத்தை ஜெயித்தேன் என்று ஆண்டவர் தமது சீஷருக்குச் சொல்லுகிறார். அவர் உலகத்தை

ஜெயித்தார். உயிர்த்தெழுந்த பண்டிகையிலே நாம் அவருடைய ஜெயத்தைக் கொண்டாடினோம். கர்த்தருடைய வலது கரம் ஜெயத்தைக் காப்பாற்றுகிறது. கர்த்தருடைய வலது கரம் உயர்த்தப்பட்டது என்று சந்தோஷித்துப் பாடினோம். நீயும் கூடச் சந்தோஷப்பட்டாயானால் அவருடைய ஜெயம் உன்னுடைய ஜெயமாகவேண்டும். நீயும் உலகத்தை ஜெயிக்கவேண்டும். இயேசுவின் இராச்சியத்துக்கும் உன் இரட்சிப்புக்கும் விரோதமாயிருக்கிற சகலத்தையும் நீ மேற்கொள்ளவேண்டும். அப்போஸ்தலன் இதைத்தான் நீ ஜெயிக்கவேண்டிய உலகம் என்கிறான். அது உன்னைச் சுற்றிலும் மாத்திரமல்ல, உனக்குள்ளேயுமிருக்கிறது. வடஜெர்மானியா தேசத்தைச் சேர்ந்த ஒரு பட்டணத்திலுள்ள தேவாலயத்தில் ஒரு படம் தொங்குகிறது. அது டென்மார்க்கு தேசத்து இராஜாவின் சாயல். அவன் தன் கையில் வெற்றிக்கொடியைப் பிடித்துக்கொண்டு தன் வலது காலைத் தான் ஜெயித்த தன் சத்துருவின் தலைமேல் வைத்துக்கொண்டிருக்கிறான். ஆகிலும் சரியாய்க் கவனித்துப் பார்த்தால் ஜெயித்தவனுடைய முகக்குறிகளும் ஜெயிக்கப்பட்டுக் கீழே கிடக்கிறவனுடைய முகக்குறிகளும் ஒன்றாயிருக்கின்றன. ஜெயித்தவனும் ஜெயிக்கப்பட்டவனும் ஒரே ஆள். அந்த இராஜன் தன்னையே வென்ற ஜெயசீலன். இவ்வாறே நீ உன்னையும் உன்னிலுள்ள உலகத்தையும் உன் கெட்ட இருதயத்தையும் மேற்கொள்ளவேண்டும். இதைச் செய்யக்கூடியவன் ஆர்? பராபரனில் பிறந்ததெல்லாம் லோகத்தை ஜெயிக்கும். நீ இந்த ஜெயத்தை அடைய விரும்பினால் நீ பராபரனில் பிறந்து அவருடைய பிள்ளையாகவேண்டும். நீ பராபரனுடைய பிள்ளையாவதற்குக் கருவியாகிய விசுவாசமே உன்னை, உன்னிலுள்ள உலகத்தை ஜெயிக்கும் ஜெயசீலனாக்கும். இந்த விசுவாசம் இயேசு பராபரனுடைய குமாரன் என்று நம்புவதைத் தவிர வேறல்ல. தேவகுமாரன் உயிர்த்தார் என்பது இந்த விசுவாசத்தின் பொருள். இந்த விசுவாசத்தினால் அப்போஸ்தலர் உலகத்தை மேற்கொண்டார்கள். இந்த விசுவாசத்தினால்தான் தற்காலத்தில் மிஷியோனரிகள் அஞ்ஞான தேசங்களில் பிசாசோடே போர் புரிந்து ஜெயமடைகிறார்கள்.

ஜெபம். ஜெயசீலரே! உம்மை நம்புவோர் உமது ஜெயத்தில் பங்கு பெறுவார்கள். அவர்களை மேற்கொள்ள உலகத்தாரால் முடியாது. அவர்களே உலகத்தை மேற்கொள்ளுவார்கள். தேவரீர் ஒருவரே தேவகுமாரன் என்றும் எங்களை மீட்டவர் என்றும் நம்ப எங்களுக்கு பெலனையும் புத்தியையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

நடபடி 1, 1-14. அல்லது ரோ. 4, 14-25. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிக். முதலாம் வாரம், புதன்.

ஏ. 182, 5-9.

இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினால் நம்மை, தம்முடைய மிகுந்த இரக்கத்தின்படியே, அழிவும் தீட்டும் வதக்கமுமற்ற சுதந்தரத்தின் ஜீவனுள்ள நம்பிக்கைக்கு மறுபடியும் ஜெனிப்பித்த பராபரனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். 1 பேது. 1, 3. 4.

இயல்பில் மனுஷருக்கு நம்பிக்கையே இல்லை. உலகமக்களுடைய பாக்கியம் நாசமாய்ப் போகையில் அவர்கள் ஆறுதலற்றவர்களாயும் மரணம் வருகையில் நம்பிக்கையற்றவர்களாயுமிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கருமையானவர்களைப் பூமியில் புதைக்கும்போது அவர்களைத் திரும்பப் பார்க்கும் நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. அவர்களுடைய நம்பிக்கை சோதனை வருங்காலத்தில் ஒடிந்துபோகும். அது துன்ப காலத்தில் நிலைநிற்காது. உலகத்தின் பரிகாசத்தைச் சகிக்காது. பிறத்தியாரால் வரும் நிந்தையைப் பொறுக்காது. அது மரண அவஸ்தையைத் தாங்காது. மனச்சாட்சி எழும்பி நியாயத்தீர்ப்பை நமக்கு நினைப்பூட்டுங்காலத்தில் அந்த நம்பிக்கை பயமும் திகிலுமாய் மாறும்.

ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவானவர் தமது இரக்கத்தின்படியே மறுபடியும் ஜெனிப்பித்தவர்களுடைய நம்பிக்கைக்கு ஜீவனும் பெலனுமுண்டு. [illegible] எதிர்பார்க்கிறது இன்னதென்று அவன் நிச்சயமாய் அறிந்திருக்கிறான். அவனுக்கு மரணம் பயமாயிராமல் தன் சொந்த வீட்டுக்குள் நுழையும் வாசல்போலிருக்கும். நாம் தேவனுடைய பிள்ளைகளானால் அவருடைய சுதந்தரருமாயிருக்கிறோம். நமது பிறப்பின் சுதந்தரம் நமக்கு ஏற்கனவே ஆயத்தமாயிருக்கிறது. அது நமக்கு மோட்சத்தில் காக்கப்பட்டிருக்கிறது. நாம் இப்போதே அதை நம்முடையதென்று சொல்லலாம். நாம் அப்படிச் சொல்லக்கூடாமல் நமக்குக் குறைவு ஒன்றுமில்லை. நாம் சொந்தக் குற்றத்தினால் இந்த ஒன்றான சுதந்தரத்தை இழந்துபோகாதபடிக்கு இதை ஜாக்கிரதையாகக் காத்துக்கொள்வோமாக. ஒருவன் அந்நிய தேசத்திலிருக்கும்போது தன் சொந்த தேசத்திற்காகவும் சொந்த வீட்டுக்காகவும் கவலைப்படாதிருந்தால் தன் சுதந்தரத்தை இழந்துபோவான். அதுபோல் உனக்கும் கேடடையாதபடி ஜாக்கிரதையாயிரு.

ஜெபம். எங்கள் நாதர் இயேசுகிறிஸ்துவின் பிதாவே! உமது நேசகுமாரனைக்கொண்டு எங்களுக்கு அழியாத சுதந்தரத்தை ஆயத்தமாக்கினதற்காக உமக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். ஆண்டவரே, நாங்கள் இந்தச் சுதந்தரத்துக்காக அதிசமதிசமாய்ப் பிரயாசைப்பட்டு அதைப் பெற்றுக்கொள்வதற்கு எங்களைக் குணப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

அப். 1, 15-26. அல்லது ரோ. 5, 1-21. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிக். முதலாம் வாரம், வியாழன்.

ஏ. 182, 7. 8.

பருவதங்கள் விலகிக் குன்றுகள் சாய்ந்தாலும், என்னுடைய கிருபை உன்னை விட்டு விலகாமலும், என்னுடைய சமாதானத்தின் உடன்படிக்கை சாயாமலுமிருக்குமென்று உன் மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். ஏசா. 54, [illegible].

பருவதங்களையும் குன்றுகளையும் பார்க்க அதிக உறுதியாய் நிற்பதொன்றுமில்லை. தேவனுடைய கட்டடங்களாகிய பருவதங்களும் குன்றுகளும் ஆயிரம் ஆயிரம் வருஷங்களாக நின்றாலும் இவைகளும் புசல் காற்றினாலும் மழையினாலும் இடிந்து பூமியதிர்ச்சியினால் கிடுகிடுத்து அசைகின்றன. ஒரு காலத்தில் சகலமும் விலகி அழிந்துபோம். நித்தியமாயிருக்கிறது உலகத்தில் ஒன்றுமில்லை. கன்மலையைப்போல் உறுதியானதெல்லாம் காலம் செல்லச் செல்ல அழிந்து போகிறது. ஆகிலும் பருவதங்களும் குன்றுகளும் விலகிக் கிடுகிடுத்தாலும் உறுதியான ஒரு அஸ்திபாரம் நமக்குண்டு. நம்முடைய கிருபை உன்னை விட்டு விலகாமலும், நம்முடைய சமாதானத்தின் உடன்படிக்கை உன்னைவிட்டுச் சாயாமலுமிருக்குமென்று உன் பேரில் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். சகலமும் ஆட்டங்கண்டு அழிந்துபோகிற இவ்வுலகத்தில் அவர் ஒரு கிருபையின் கன்மலையை அஸ்திபாரப்படுத்தி அதன்மேல் நாம் பத்திரமாய்த் தங்கும்படியான ஒரு சமாதானக் கோட்டையைக் கட்டியிருக்கிறார்.

உயிர்த்தெழுந்தவர், உயிர்த்தெழுந்த நாளின் அஸ்தமன வேளையில் சமாதான வாழ்த்துதல் கூறித் தம்முடைய சீஷரண்டை வந்தபோது, இந்த உறுதியான கட்டடம் கட்டி முடிந்தது. நமக்குங் கூட அவர் இந்தக் கோட்டையின் வாசலைத் திறந்திருக்கிறார். சமாதான உடன்படிக்கையில், ஞானஸ்நானத்தின் மூலமாய் அவர் நம்மை ஏற்றுக்கொண்டு, நாம் பரிசுத்த இராப்போசனத்துக்குப் போகும் ஒவ்வொரு சமயத்திலும் நாம் சமாதானத்தில் தங்கும்படி வாசலின் தாழ்ப்பாள்களைத் திறந்து வைக்கிறார்.

அவருடைய கிருபையின் கன்மலை ஆட்டங்கண்டு விலகிப்போகிறதில்லை. நாமோ அவரைவிட்டு விலகாமலும் அவரோடு பண்ணின உடன்படிக்கையை விட்டுச் சாயாமலும் இருக்கக் கவலையாயிருப்போமாக. அப்போது அவநம்பிக்கையினால் உண்டாகும் உபத்திரவத்தில் பருவதங்களுடனே எங்கள்மேல் விழுங்களென்றும் குன்றுகளுடனே எங்களை மூடிப்போடுங்களென்றும் சொல்லுகிறவர்களோடே நாம் சேராதிருப்போம். சூரியனும் சந்திரனும் தங்கள் ஒளியை இழந்து, சமுத்திர அலைகள் கொந்தளித்துப் பருவதங்கள் பெயர்ந்து சமுத்திரத்தில் விழுந்தாலும் சமாதானப் பிரபுவாகிய இயேசுகிறிஸ்து தமது செட்டைகளால் நம்மை மறைப்பார். அவருடைய சிறகுகளின் கீழ் நாம் அடைக்கலம் புகுவோம்.

ஜெபம். உண்மையுள்ள இயேசுவே! நீர் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் எங்களுக்குச் சம்பாதித்த சமாதான உடன்படிக்கையில் எங்களை நிறுத்திக்கொண்டு காப்பாற்றி எங்கள் விசுவாசத்தைத் திடப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி 2, 1-21. அல்லது ரோ. 6, 1-23. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். முதலாம் வாரம், வெள்ளி.

ஏ. 116, 1. 2.

சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைக் கூறி, சீயோனுடனே: உன் பராபரன் இராசரீகம் பண்ணுகிறார் என்று சொல்லுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின்மேல் எத்தனை அழகானவை. ஏசா. 52, 7.

பிதா என்னை அனுப்பினதுபோல் நான் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி உயிர்த்தெழுந்த இயேசுநாதர் தமது சீஷரைச் சுவிசேஷ ஸ்தானாபதிகளாக நியமித்தார். அவர் அவர்களுக்குக் கொண்டுவந்த சமாதானத்தை அவர்கள் தங்கள் உள்ளத்தில் அடைத்து வைக்கக்கூடாது. அது உலகமெங்கும் பரம்பவேண்டும். இயேசு தமது ஜெயத்தினால் சமாதானமற்ற இந்த உலகத்தில், சமாதானத்தைக் கொண்டுவந்தார் என்பதை மானிடசாதியார் எல்லாரும் அறியவேண்டும். அவர்கள் மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் விரைவாய்க் கடந்து தேசங்களையும் சமுத்திரங்களையும் தாண்டி, உன் பராபரன் இராசரீகம் பண்ணுகிறார் என்கிற சமாதானசெய்தியைப் பரப்புகிறார்கள். கிரேக்கருடைய

சேனை ஒரு சமயத்தில் பெரிய ஜெயம் அடைந்தபோது, ஒரு ஆள் சில மயில் தூரமான ஒரு பட்டணத்திற்கு அதிக வேகமாய் ஓடி வந்து, சந்தைவெளியில் நின்று, நாங்கள் ஜெயித்தோம் என்று உரத்துக் கூறிவிட்டு உயிரைவிட்டானாம்.

அவனைப்போல் அப்போஸ்தலரும் அவர்களுக்குப் பின் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களும் இப்படிச் செய்தார்கள். அவர்களும் தங்கள் ஜீவனை அற்பமாக எண்ணி, உன் பராபரன் இராசரீகம் பண்ணுகிறார் என்று எங்கும் அறிவித்தார்கள். பராபரன் இராசரீகம் பண்ணுகிறார் என்றால் ஜாதிகளை விடுதலையாக்குவதற்காகச் செய்த பெரிய போராட்டத்தில் ஜெயித்தார் என்று அர்த்தமாம்.

இந்த இரட்சிப்பின் செய்தி நமக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்களுடைய கோவில் கோபுரம் காணப்பட்டு மணிச்சத்தம் கேட்கிற இடமெங்கும் உன் இராசாவினுடைய செய்தி சொல்லப்படும். அங்கே சமாதானம், இரட்சிப்பு, பாக்கியம் என்கிற கொள்ளைப்பொருள் பங்கிடப்படும். நாம் அவைகளில் பங்குபெற்று மற்றவர்களுக்கும் அவைகளைப் பகிர்ந்துகொடுக்கும்படி நாமும் ஸ்தானாபதிகளாகக்கடவோம். சமாதானத்தை அறியாமலும் இரட்சிப்படையாமலும் இருக்கிறவர்கள் அநேகர் நம்மைச் சுற்றிலுமிருக்கிறார்கள். இயேசுவையும் அவருடைய ஜெயத்தையும் அறியாத அஞ்ஞானிகளுக்குக் கணக்கில்லை.

அவர்களும் இந்தச் சமாதானசெய்தியைக் கேட்பதற்கு நாம் இதுவரைக்கும் என்ன செய்தோம்?

ஜெபம். சமாதானப்பிரபுவே! தேவரீர் உமது வல்லமையினால் பொல்லாத சத்துருவை வென்று அவன் இராச்சியத்தை அவத்தமாக்கினீர். எங்களுக்கும் இந்த ஜெயத்தில் பங்கருள மனதாயிருக்கிறீர். ஆண்டவரே! எங்களுக்கு உமது நித்திய சமாதானத்தைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

நட. 2, 22-36. அல்லது ரோ. 7, 1-6. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். முதலாம் வாரம், சனி.

ஏ. 288, 3. 4.

முதலாம் பிரிவு, தொடர்ச்சி.

அவர் சகல மோசங்களுக்கும் என்னை மறைத்துச் சகல பொல்லாங்குகளுக்கும் தற்காத்து இரட்சித்து வருகிறாரென்று விசுவாசிக்கிறேன். அவர் இவை எல்லாவற்றையும் பிதாவுடைய கிருபாகடாட்சத் திருவேலையுஞ் சுத்த தயவினாலேயும் யாதொரு புண்ணியமும் பாத்திரமு

யில்லாத எனக்குச் செய்துகொண்டுவருகிறீர். ஆகையினால் இவை எல்லாவற்றிற்காகவும் நன்றியறிந்தவனாய் அவரைத் தோத்திரிக்கவும் அவருக்கு ஊழியஞ்செய்துக் கீழ்ப்படிந்து நடக்கவும் கடனாளியாயிருக்கிறேன். இது உண்மையான வார்த்தை.

நம்முடைய தேவன் சர்வத்திற்கும் வல்ல பிதா; வல்லமையுள்ள பரம தகப்பன்; தகப்பனைப்போல நமக்காகக் கவலைப்பட்டு வல்லமையாய் நம்மைக் காப்பாற்றுகிறவர்; நாம் அல்லும் பகலும் பல மோசங்களுக்குட்படக் கூடியவர்கள். நான் என் காலை எங்கே வைத்தாலும் என் பிராணனுக்கு மோசமாம். சீவனின் நடுவிலே மரணத்தால் சூழப்பட்டிருக்கிறோம். நாம் இத்தனை மோசங்களுக்குத் தப்பி இத்தனை நாளாய்ப் பிழைத்திருப்பது நம் பரம தகப்பனுடைய கவலையினாலேயே. அவர் நம்மைச் சகல மோசங்களுக்கும் மறைத்துச் சகல பொல்லாங்குகளுக்கும் தற்காத்து இரட்சித்து வந்ததினாலேயே இன்னம் உயிரோடிருக்கிறோம். அவர் இனியும் அப்படிச் செய்வாரென்று நாம் நம்பி இருப்பது நியாயம். ஆபத்து எத்தனை பெருகினாலும் அவர் தம்மை நம்பினவனைக் காப்பாற்றி அவனை நல்ல முடிவுக்குக் கொண்டுவருவார்.

நன்றிகெட்ட சின்னவனாகிய நமக்கு இவ்வளவு நன்மை செய்துகொண்டுவருகிறீரே; அதற்காக நாம் அவரை ஸ்தோத்திரிக்கவும் பத்துக் கற்பனைகளின்படி அவருக்கு ஊழியஞ்செய்து கீழ்ப்படிந்து நடக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம் அல்லவா?

ஜெபம். கர்த்தாவே! உமது கிரியைகள் எத்தனை பெரியவைகள். உமது சிந்தனைகள் மகா ஆழமானவைகள். தேவரீர், என்றென்றைக்கும் உயர்ந்தவர், சுவாமி, ஆமேன்.

நட. 2, 37-47. அல்லது ரோ. 7, 7-25. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். இரண்டாம் வாரம், ஞாயிறு.

ச. 120, 1. 2.

நானே நல்ல மேய்ப்பனானவர். நல்ல மேய்ப்பனானவர் தம்முடைய ஜீவனை ஆடுகளுக்காகக் கொடுக்கிறார். ஆனால் மேய்ப்பனல்லாதவனும் ஆடுகள் தனக்குச் சொந்தம் என்று இராதவனுமான கூலியாள் ஓநாய் வரக் கண்டு, ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான். அப்போது ஓநாய் ஆடுகளைப் பிடித்து அவைகளைச் சிதறடிக்கும். யோவா. 10, 11. 12.

தானே நல்ல மேய்ப்பனென்று ஆண்டவர் சொல்லுகிறார். அவர் தம்மை ஒப்பிட்டுப்பேசும் அநேக உவமைகள் சவிசேஷத்

தில் உண்டு. ஆகிலும் இவை எல்லாவற்றிலும் இரட்சகரின் உண்மையான சிநேகத்தையும் பாவிகளைத்தேடும் இரக்கத்தையும் காட்டுவதற்கு நல்ல மேய்ப்பனின் இந்த உவமையைவிடச் சிறந்தது வேறொன்றுமில்லை. ஒரு மேய்ப்பன் வழி தப்பிப்போன ஆட்டைப்பின்தொடர்ந்துபோய்த் தேடுகிறதுபோல நல்ல மேய்ப்பனாகிய நமது இரட்சகரும் இடைவிடாமல் நம்மைத் தேடுகிறார். அவர் இப்பூமியில் சஞ்சரிக்கும் மட்டும் அப்படிச்செய்தார். இப்போதும் அவர் மோசத்தில் அகப்பட்டுக் கெட்டுப்போன மனுஷ ஆத்துமத்தைத் திருப்பி அழிவுக்கு விலக்கி இரட்சிக்க வெகு கருத்தாய்ப் பிரயாசைப்படுகிறார். இப்படி அவர் ஒரு மனுஷனை இரட்சிப்பதை விடப் பெரிய சந்தோஷம் அவருக்கு இல்லை.

அவர் கெட்டுப்போனவர்களை உயர்ந்த விலை கொடுத்து வாங்கினார். நல்ல மேய்ப்பன் தன் ஜீவனை ஆடுகளுக்காகக் கொடுக்கிறான். இயேசு அப்படிச்செய்தார். தம்மைவிட்டு வழிதப்பிப்போய் ஓநாய்க்கு இரையாகும் ஆடுகள்மேல் அவர் மனதுருகினார். ஆடுகளுக்காக அவர் துக்கப்பட்டார். அவர் மோட்சத்தைவிட்டுத் தமது மந்தைக்காக இவ்வுலகில் வந்து ஓநாயோடு யுத்தம் பண்ணினார். அவர் ஜீவனைக் கொடுக்கும்படி நேரிட்ட அந்த யுத்தம் வெகு கொடுமையானதாயிருந்தும் ஓநாயை ஜெயித்து மந்தையை மீட்கும் மட்டும் அவர் இளைப்பாறவில்லை.

உனக்காகவும் இந்த நல்ல மேய்ப்பர் தமது ஜீவனைக் கொடுத்தார். உன் ஆத்துமத்தையும் அவர் பொல்லாத சத்துருவின் கையினின்று பிடுங்கி விடுவித்தார். நீ உயிரோடிருக்கும் மட்டும் இதை ஒருபோதும் மறவாதே. அவருக்கு உன் பேரில் ஒரு பாத்தியம் உண்டு. நீ உன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்து நன்றியறிந்த இருதயத்தோடு நீர் என்னுடையவர், நான் உம்முடையவன், நம்மை ஒன்றும் பிரிக்கக் கூடாது என்று சொல்லு.

ஜெபம். எங்கள் நல்ல மேய்ப்பரே! உமது ஆடுகளாகிய எங்கள் பொருட்டு உமது உயிரை விட்டதற்காக உம்மைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம். கர்த்தாவே, நாங்கள் உண்மையோடு உம்மைப் பின்சென்று உமது சத்தத்திற்குச் செவிகொடுத்து இவ்வுலகத்தின் மோசங்களுக்குத் தப்பிப்போக எங்களுக்கு அனுக்கிரகம் பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி 3, 1-11. அல்லது சங். 23. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். இரண்டாம் வாரம், திங்கள்.

பா. 120, 3. 4.

நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைக்க, நம்முடைய பாவங்களைத் தாமே தம்முடைய சரீரத்தில் எடுத்துக்கொண்டு, மரத்தில் ஏறினார். அவர் தழும்புகளால் குணமானீர்கள். எனெனில் சிதறுண்ட ஆடு களைப்போல் இருந்தீர்கள்; ஆனால் இப்போது உங்கள் ஆத்துமாக்களுடைய மேய்ப்பரும் கண்காணியுமானவரண்டைக்குத் திரும்பினீர்கள். 1 பேது. 2, 24. 25.

நீங்கள் சிதறுண்ட ஆடுகளைப்போல் இருந்தீர்களென்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். மனுஷன் நல்ல மேய்ப்பனை அறியாதிருந்து பட்டிப் மந்தையை விட்டுப்பிரிந்து இங்குமங்கும் தடுமாறித்திரியும் இளைப்பாறுதல் சிதறுண்ட ஆட்டைப்போலி ருக்கிறான். கர்த்தரையின்றிக் கழித்த காலம் பாக்கியமான காலமாய் இருந்ததில்லை. அந்தக் காலத்தை நீ நினைக்கும்போது உனக்குத் திருப்தியுண்டா? நீ முந்தின காலத்தை நினைக்கும்போது பழைய பாவங்கள் உனக்கு வருத்தத்தை உண்டுபண்ணவில்லையா? இயேசுவையன்றிப் பிழைக்கிற மனுஷன் அதிக நிர்ப்பாக்கியன் என்றறி. அவனுக்கு ஒருபோதும் சமாதானமும் இளைப்பாறுதலும் கிடையாது.

நல்ல மேய்ப்பனைக் கண்டுபிடித்து அவரண்டை மன திரும்பின மனுஷனே பாக்கியவான். அவன் ஆறுதலடைந்து தங்க இடமற்று வழிதப்பித் திரியாமல் சுகமாய் நடந்து மேலே தன் இலக்கை நோக்கிப் போகிறான். அவன் தன் இருதயத்தை உலக காரியங்களின்மேல் சாயவிடாமல் தன் சிந்தையை எல்லாம் நித்திய ஜீவனின்மேல் செலுத்துகிறான். அவன் உலகத்துக்கும் அதின் இச்சைக்கும் வழிப்படுசெய்யாமல் அதிகமதிகமாய்ப் பாவத்துக்குச்செத்து நீதிக்குப் பிழைக்கிறான்.

கிறிஸ்தவனே! நீ உன் ஆத்துமத்தின் மேய்ப்பரும் கண்காணியுமானவரண்டைக்கு மெய்யாய்த் திரும்பினாயோ என்று உன்னைச் சோதித்துப்பார். இது உனக்கு அதிக முக்கியமான கேள்வியாய் இருக்கவேண்டும், இதிலே உன் நித்திய இரட்சிப்பு அடங்கியிருக்கிறது. உன் சிந்தையும் எண்ணமும் இந்த நிர்ப்பந்த உலக காரியங்களில் வேர் பற்றியிருந்தால் நீ உண்மையான மேய்ப்பரண்டை இன்னம் திரும்பினவனல்ல. நீ அவரண்டை சரியாய்த் திரும்பும்படி அவர் உனக்கு இவ்வுலகில் கொடுத்த கிருபையின் காலத்தை உண்மையாய்ப் பிரயோசனப்படுத்திக்கொள்.

ஜெபம். இரக்கமுள்ள இரட்சகரே! அடிக்கடிபோகிற சகல இச்சைகளுக்கும் என்னை நீங்கலாக்கி உமக்கு இப்போதும் எப்போதும் சமாதானத்தையும் கண்டுபிடிக்க ஒத்தாசை செய்யும். எனெனில் வழி தப்பின

என்னைத் தேவரீர் கண்டுபிடித்து உமது மந்தையில் சேர்த்துக்கொண்டீர். உமது திருநாமத்துக்கு என்றென்றைக்கும் துதியும் கனமும் உண்டாவதாக, சுவாமி, ஆமென்.

நடபடி. 3, 12-26. அல்லது யோ. 8, 1-11. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். இரண்டாம் வாரம், செவ்வாய்.

பா. 263, 11. 12.

என்னுடைய ஆடுகள் என் சத்தம் கேட்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் என்னைப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைத் தருகிறேன். அவைகள் என்றென்றைக்கும் கெட்டுப்போகாதிருக்கும். ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்ளான். யோவா. 10, 27. 28.

நல்ல மேய்ப்பன் ஆடுகள் கேட்கும்படி உரத்த சத்தமாய்க் கூப்பிடுறான். நமது ஞானஸ்நான சமயத்தில் நாம் உன்னை மீட்டோம், நாம் உன்னைப் பேர் சொல்லி அழைத்தோம் என்று அவர் சொன்னபோது நாம் நமது மேய்ப்பருடைய சத்தத்தைக் கேட்டோம். அக்காலம் துவக்கி இந்நாள் பரியந்தம் அவருடைய சத்தத்தைத் திரும்பத் திரும்பக் கேட்டு வருகிறோம். நன்னாட்களிலும் துன்னாட்களிலும், சந்தோஷத்திலும் துக்கத்திலும் இந்தச் சத்தம் நமது காதில் தொனித்து நமது ஆத்துமத்தை வசப்படுத்தப்பார்க்கிறது. இந்தச் சத்தம் உன் மனச்சாட்சியில் உன்னோடு வல்லமையாய்ப் பேசி உன் பாவத்திற்காக உன்னைக் கடிந்துகொண்டு உன்னை மனந்திரும்பப் பார்க்கிறதென்று நீ அநேகமுறை உணர்ந்திருப்பாய். ஆனால் நீ எப்போதும் நல்ல மேய்ப்பனின் சத்தத்தைக் கவனத்தோடு கேட்கிறாயா? இக் கேள்வியை இன்றைக்குப் பயத்தோடு உன்னையே கேட்டுப் பார்.

நீ அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுத்து அவரைப் பின் சென்றாயா? என் ஆடுகள் என் சத்தத்தைக் கேட்டு என்னைப் பின் செல்லும் என்று இரட்சகர் சொல்லுகிறார். கேட்டது மட்டும் போதாது. அவருடைய வசனம் உன் நினைவுகளுக்கும் உன் நடக்கைக்கும் நூலாயிருக்கும்படி நீ அவருடைய சத்தத்தைக் கேட்டு அதின்படி நடக்கவும் வேண்டும். இவ்வுலகில் நல்ல மேய்ப்பனின் சத்தம் தவிர வேறுபேருடைய சத்தங்களையும் கேட்கிறாய். அவை உன் காதில் விழுந்து உன்னைத் தடுமாறப் பண்ணுகின்றன. அவை உனக்கு அநேக நன்மைகளையும் இன்பங்களையும் வாக்களிக்கின்றன. நீ அவைகளைப் பின் சென்றுபோ அவை உன்னை

மயக்கிக் கெடுக்கும். இந்தச் சத்தங்களுக்கு இடங் கொடுக்கக் கூடிய சோதனை உனக்கடிக்கடி வரும். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து உலகத்திலுள்ள எதினாலும் உன் நல்ல மேய்ப்பரின் பக்கத்தை விட்டுப் போகாதே. நீ அவருடைய சத்தத்தை எப்போதும் கேட்டுப் பின்சென்றால் பத்திரமாயிருப்பாய். அப்போது ஒருவனும் உன்னை அவர் கையிலிருந்து பிடுங்க முடியாது.

ஜெபம். எங்கள் அன்புள்ள இரட்சகரே! உமது மந்தையின் ஆடுகளாகிய நாங்கள் உம்மை நம்பிப் பின்செல்லுகிறோம். நாங்கள் மரண நிழலின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படோம்; ஏனெனில் தேவரீர் எங்களோடு கூட இருக்கிறீர். உம்முடைய கோலும் உம்முடைய தடியும் எங்களைத் தேற்றுகிறது. சுவாமி, ஆமென்.

நடபடி 4, 1-12. அல்லது ரோ. 8, 12-27. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். இரண்டாம் வாரம், புதன்.

பி. 120, 5.

நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மறுபடியும் மரித்தோரிலிருந்து வரவழைத்த சமாதானத்தின் பராபரன், தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நடப்பித்து, உங்களைத் தம்முடைய சித்தத்தின்படி செய்யச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்கக் கடவார்; அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. எபிரே. 13, 20. 21.

பெரிய மேய்ப்பரின் மந்தையில் ஒரு ஆடாயிருக்க விரும்புகிறவன் உண்மையோடு அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்செல்லக்கடவான். நாம் அவருடைய சத்தத்தை எப்போதோ ஒருமுறை கவனிப்பது போதாது. நாம் அவருடைய ஐக்கியத்தில் பிழைத்துப் பரிசுத்தமாய் நடந்து அவருக்கு ஊழியஞ்செய்ய வேண்டும். இந்த உண்மையான ஊழியம் நம்மிடத்தில் அடிக்கடி குறைவுபடுகிறது. நாம் நமது பழைய மனிதனை இன்னம் சுமக்கிறோம். நம்முடைய பாவ எண்ணங்களையும் பிழைகளையும் பெலவீனங்களையும் எதிர்த்து அவைகளோடு போராட மனதில்லாதிருக்கிறோம். நமது இரட்சிப்புக்காக அத்தனை பிரயாசைப்பட நமக்குப் பிரியமில்லை. நாம் இயேசுவின் ஆட்டுக்குட்டிகளாயிருக்க விரும்புகிறோம். அத்தோடேகூட உலகின் இச்சைகளுக்கு இடங் கொடுக்கவும் ஆசிக்கிறோம். இப்படி நாம் உறுதியின்றி அங்குமிங்கும் அலைகிறோம்.

ஆனால் இரண்டு நினைவால் குழம்பி அலைவது சரியல்ல. ஆடுகளின் பெரிய மேய்ப்பர் உனக்கு முன் நின்று உன் ஆத்துமத்தை வசப்படுத்தப் பிரயாசப்படுகையில் நீ யாருக்கு ஊழியஞ்செய்ய மனதாயிருக்கிறாய் என்று தீர்மானம் பண்ணவேண்டும். அவருக்கோ? உலகத்துக்கோ? இரண்டில் ஒன்றைச்சொல்லு. நீ அவருடையவனாயிருக்கத் தீர்மானம் பண்ணினால் கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிறவன் அநியாயத்தை விட்டு விலகக்கடவான் என்கிற வார்த்தையைக் கவனி. அவர் சித்தம் அப்போது உனக்குப் பிரமாணமாயிருக்கவேண்டும். அவருடைய சித்தத்தை நிறைவேற்ற நீ முழு வைராக்கியத்தோடும் பிரயாசப்படவேண்டும். பிரயாசமும் போராட்டமுமின்றி இது நடவாது. நீ முன் இச்சித்த சந்தோஷத்தை வெறுக்கவேண்டும். பாவங்களோடு வல்லமையாய் எதிர்த்து நிற்கவேண்டும். நீ கிறிஸ்துவின் மந்தையைச் சேர விரும்பினால் இந்தப் போராட்டத்தில் பின்வாங்கலாகாது.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! உமது மிகுந்த கிருபையினால் வழிதப்பினவர்களாகிய எங்களையும் உமது மந்தையில் சேர்த்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் இந்தப் பாக்கியத்தை அறிந்துகொண்டு எங்கள் முடிவுமட்டும் உமது மகிமையில் நிலைத்திருந்து கடைசியாக உம்மை முகமுகமாகப் பார்க்க எங்களுக்குக் கிருபைசெய்யும், சுவாமி, ஆமென்.

நட. 4, 13-30. அல்லது ரோ. 8, 28-39. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். இரண்டாம் வாரம், வியாழன்.

பி. 263, 1. 2.

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சி அடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, என்னை அமர்ந்த தண்ணீர்களண்டை கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமத்தைக் குளிர்ப்பண்ணி, என்னைத் தம்முடைய நாமத்தின் நிமித்தமாக நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நான் மரண நிழலின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; ஏனெனில் தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர். உம்முடைய கோலும் உம்முடைய தடியும் என்னைத் தேற்றுகிறது. சங். 23, 1-4.

நல்ல மேய்ப்பருடைய மந்தையில் சேர்ந்தவர்களுடைய பாக்கிய நிலைமையைச் சங்கீதக்காரன் இங்கே கீர்த்தியாய் வர்ணித்துச் சொல்லுகிறான். கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் என்பதை உண்மையாய்ச் சொல்லுகிறவன் நான் தாழ்ச்சி அடை

பேன் என்றும் சொல்லுவான். கிறீஸ்துவின் அடைக்கலத்தில் நாம் ஒதுங்கியிருக்கிறோம். உண்மையுள்ள மேய்ப்பர் நமக்காகக் கவலைப்படுவதால் நம்முடைய ஆத்துமத்தைக் கைவிட்டோடார். அவர் நாடோறும் நம்மைத் திருப்பத்திருப்ப தேவவசனமென்ற பச்சைப்புல் நிறைந்த ஸ்தலத்துக்கு நடத்திச் சென்று அமர்ந்த ஜீவ தண்ணீரண்டைக்கு நம்மைக் கொண்டுபோய் விடுகிறார். நாம் நமது முழு ஜீவியத்தையும் உற்சாகத்தோடு அவர் கையில் ஒப்புவிக்கலாம். அவர் தமது நாமத்தினிமித்தம் நம்மை நீதியின் பாதையில் நடத்துகிறார்.

இனிச் சில குறைவுகளும் கவலைகளும் நீங்கும் என்றும் யாதொரு பாடும் உபத்திரவமும் நமக்கு வராதென்றும் நாம் நினைக்க ஒண்ணாது. பராபரனுடைய பிள்ளைகளாகிய நாம் இங்கே இருக்கும் மட்டும் இவ்வுலகுக்குரிய சோதனையும் அழிவையும் அனுபவிக்கவேண்டும். ஆயினும் அவர் நம்மை நடத்துகிற வழி சரியான வழி என்றும் நமக்கு நேரிடுவதெல்லாம் நமது நன்மைக்கென்றே பலிக்கும் என்றும் அறிந்திருக்கிறோம்.

நாம் அதிகம் பாரமான சுமைகளையும் அதிகம் பெருத்த நஷ்டங்களையும் சகிக்க வேண்டியதாயிருந்தாலும் நல்ல மேய்ப்பர் நமது ஆத்துமத்தை [illegible] அதைத் தமது அருகினில் சேர்ப்புவார். நாம் இருண்ட பள்ளத்தாக்குகளின் வழியாய் நடக்க வேண்டியதாயிருந்தாலும் அங்கேயும் அவர் நம்முடனே இருப்பார். அவருடைய வெளிச்சம் இருளை நீக்கி சகலத்தையும் பிரகாசிப்பிக்கும். நாம் எல்லாரும் கடைசியில் ஒருமுறை மரணமென்ற இருண்ட பள்ளத்தாக்கிலே போனாலும் நீர் என்னோடே இருக்கிறீர், உம்முடைய கோலும் உம்முடைய தடியும் என்னைத் தேற்றுகிறது என்று நிச்சயமாய் நம்பலாம்.

ஜெபம். உண்மையுள்ள மேய்ப்பரே! எங்களை உயர இருக்கும் நித்திய சோபனமான வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோம். இவ்வுலகத்தில் எங்கள் ஆத்துமா திருப்தியடையாது. நாங்கள் இங்கிருக்குமளவும் உமது திருவசன மேய்ச்சலால் எங்களைத் திருப்தியாக்கியருளும், [illegible], ஆமென்.

நட. 4, 31-37. அல்லது சேர. 9, 1-8. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். இரண்டாம் வாரம், வெள்ளி.

கீ. 268, 3.4.

பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரை ஆர்ப்பரியுங்கள். கர்த்தருக்கு மகிழ்ச்சியோடே ஆராதனை செய்து, கம்பீர சத்தத்தோடே அவர் முன்பாக வாருங்கள். கர்த்தரே பராபரன் என்று அறியுங்கள்; நாம்

அல்ல, அவரே நம்மைத் தமக்குச் சனமும் தமது மேய்ச்சலின் ஆடுகளுமாக்கினார். அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். ஏனெனில் கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது. சங். 100, 1-5.

முழு உலகமும் கர்த்தரை ஆர்ப்பரிப்போடு பாடிக் கம்பீர சத்தத்தோடே அவருக்கு முன்பாக வரவேண்டும். இந்தச் சங்கீத வாக்கியம் எவ்வளவு மகிமையையும் பாக்கியத்தையும் நமக்குக் காண்பிக்கிறது. பழைய உடன்படிக்கைக்குட்பட்ட இஸ்ரவேல் மாத்திரமல்ல, கர்த்தராகிய கிறிஸ்துவை இன்னுமறியாத அஞ்ஞானிகளும் கூட நல்ல மேய்ப்பரின் மந்தையில் சேர வேண்டும். கடந்த ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷ வாக்கியத்தில் கர்த்தர்: இந்தத் தொழுவத்திலல்லாத வேறே ஆடுகளும் எனக்குண்டு, அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தம் கேட்கும். ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாம் என்றார் என்று கேட்டோம். எல்லாச் சாதிகளினும் பாஷைகளினுமிருந்து ஆண்டவர் தமது மந்தையைக் கூட்டிச் சேர்ப்பார். அவர் தமது மேய்ப்ப ஊழியத்தில் எப்போதும் அலுவலாயிருந்து ஜாதிக்குப் பின் ஜாதியையும் தேசத்திற்குப் பின் தேசத்தையும் தமது இராச்சியத்துக்கென்று சம்பாதிக்கிறார். தற்காலத்தில் இருளிலும் மரண நிழலிலும் இருந்து தவித்துக்கொண்டிருக்கிற ஏழைப் புறச்சாதிகளை எல்லாம் தமது மந்தைக்கு வரவழைக்கச் சித்தமாயிருக்கிறார். ஆகையால் தூரத்திலிருக்கும் சாதிகளும் அவருடைய மேய்ப்ப சத்தத்தைக் கேட்கும்படிக்கு அவர் தமது தூதரை அனுப்புகிறார். இந்தச் சத்தத்தைத் தன் இருதயத்தில் வைத்துக்கொள்ளுகிறவன் நல்ல மேய்ப்பருடைய மந்தையில் சேர்க்கப்படுவான். உலகத்தின் சகல இராச்சியங்களும் ஜாதிகளும் கர்த்தருடையவைகள் ஆகுமட்டும் இந்த வேலை நடந்தேறும்.

ஒரே மேய்ப்பருக்காக மோட்சத்தில் ஒரே மந்தை சேர்க்கப்பட்டிருக்கும். ஒருவனும் எண்ணிமுடியாத இரட்சிக்கப்பட்டவர்களின் பெருங் கூட்டம் ஆட்டுக்குட்டியின் ஆசனத்தைச் சுற்றி நிற்கும். ஆட்டுக்குட்டியானவர் அவர்களை மேய்த்து ஜீவனின் நீரூற்றுகளண்டை கூட்டிக்கொண்டு போவார். இது மகிழ்ச்சியைத் தரும் காட்சியல்லவா? நீ அப்போது அங்கே இருக்கக் கவலையாயிரு.

ஜெபம். பரிசுத்த ஞானஸ்நானத்தினால் உம்முடைய ஜனமாக்கி எங்களை உமது மேய்ச்சலின் ஆடுகளாக ஆட்கொண்ட இரக்கமுள்ள கர்த்தரும் இரட்சகருமானவரே! நாங்கள் இரட்சிப்பின் நித்திய

வாசலில் தோத்திரத்தோடும் புகழ்ச்சியோடும் பிரவேசித்து உமக்கு ஆராதனை செய்து உமது மகிமையைக் காண எங்களுக்கு அனுக்கிரகம் செய்தருளும், சுவாமி, ஆமென்.

நடபடி. 5, 1-16. அல்லது ரோ. 9, 14-33. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். இரண்டாம் வாரம், சனி.

ம. 362.

இரண்டாம் பிரிவு என்ன? அவருடைய ஒன்றான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறீஸ்துவை விசுவாசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாக உற்பவித்துக் கன்னிமரியாளிடத்தில் பிறந்து பொந்தியுப்பிலாத்து என்கிறவன் கீழ்ப் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கப்பட்டார். பாதாளங்களில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினார், பரமண்டலங்களுக்கு ஏறிச் சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார். அவ்விடத்திலிருந்து ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவார்.

இரண்டாம் பிரிவின் பொருளைக் காட்டும்படி முதல் அதிலே நம்முடைய நாதர் என்கிற வார்த்தையை எடுத்து விஸ்தரிக்கிறார். இயேசுகிறீஸ்து என் நாதர் (கர்த்தர்) என்று விசுவாசிக்கிறேன் என்கிறார். நாதர் என்றால் திக்கற்றவனை இரட்சித்துக் காப்பாற்றுகிறவர் என்பது அர்த்தம். மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலிருக்கிறவர்களுக்கு மேய்ப்பரானவர் அந்த இயேசுதான். நானே நல்ல மேய்ப்பரானவர் என்று இயேசு சொல்லுகிறார். காணாமல் போன ஆடுகளைப்போல் கெட்டுப்போய் இருக்கிறவர்களுக்கு மேய்ப்பராக அவர் வந்திருக்கிறார். தங் குற்றத்தால் கெட்டுப்போய்த் தேவ நீதியால் சபிக்கப்பட்டவர்களை இரட்சிக்க வந்திருக்கிறார்.

அவர் பிதாவிடத்தில் அநாதியாய்ப் பிறந்த மெய்யான தேவன். மனதில் வார்த்தை பிறப்பது போல தேவனில் பிறந்த நித்திய தேவ வார்த்தையானவர் பிதாவோடு உறவான குமாரன். ஆகையால் அவர் நமக்கு நாதராயிருக்கக் கூடியவர். அவர் கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனுஷனுமானவர். நம்மைப்போல் கஷ்டப்பட்டவர், நம்மைப்போல் சோதிக்கப்பட்டவர். ஆகையால் அவர், நமக்கு இரங்கக் கூடியவர்.

ஜெபம். எங்கள் பராபரனும் ஆண்டவருமாகிய இயேசுகிறீஸ்துவே! தேவ குமாரனாகிய நீர் எங்களை இரட்சிக்க மனுஷனாகப் பிறந்து சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த

தற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே, நாங்கள் உமது அன்பை எப்போதும் மனதில் வைத்து உமக்கு உண்மையோடு ஊழியஞ்செய்து உமது பரம இராச்சியத்தில் சேருவதற்கு எங்களுக்குத் துணை செய்தருளும், சுவாமி, ஆமென்.

நடபடி. 5, 17-33. அல்லது ரோ. 10, 1-21. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். மூன்றாம் வாரம், ஞாயிறு.

ம. 29, 1. 2.

அப்போது இயேசு தம்மை அவர்கள் கேட்க மனதாயிருக்கிறார்கள் என்றறிந்து, அவர்களுடனே சொன்னதாவது: கொஞ்சப்போதிலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சப்போதிலே என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைக் குறித்து ஒருவரை ஒருவர் கேட்கிறீர்களோ? மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் அழுது புலம்புவீர்கள், லோகமோ சந்தோஷப்படும்; நீங்களோ துக்கிப்பீர்கள், ஆனால் உங்கள் துக்கம் சந்தோஷமாகும் என்றார். யோவா. 16, 19. 20.

கர்த்தர் இன்றையத்தினத்துச் சுவிசேஷ வாக்கியத்தில் சந்தோஷத்தைக் குறித்துப் பேசுகிறார். அது எப்பேர்ப்பட்ட சந்தோஷம்? நாம் ஆண்டவரைப் பார்க்கவும் அவருடைய ஐக்கியத்தை அனுபவிக்கவும் ஒரு நாள் அவரண்டை சேர்ந்து முகமுகமாய் அவரைத் தரிசிப்போம் என்கிற நம்பிக்கையே அச்சந்தோஷம். நாம் அவரைப் பார்க்காமலும் அவருடைய கிருபையுள்ள ஐக்கியத்தை உணராமலும் போனால் சகல சந்தோஷமும் போய் துக்கம் நமது இருதயத்தை நிரப்பும்.

சீஷர்கள் ஆண்டவரை இனிக் காணாமலும் அவரோடு இராமலும் போனபோது அவர்கள் இருதயம் கலங்கித் துக்கித்தது. அவர்கள் தங்கள் வழிகாட்டியையும் தலைவரையும் இழந்து போனபோது அவர்கள் இருதயம் ஆறுதலற்றுத் தவித்தது. அவரை ஒழித்துவிட்டோம் என்று உலகத்தார் சந்தோஷப்பட்டார்கள். சீஷரோ துக்க சாகரத்தில் அமிழ்ந்தார்கள். ஆகிலும் ஆண்டவர் ஞாயிற்றுக் கிழமையில் உயிரோடெழுந்து சமாதானப் பிரபுவாகத் தமது சீஷருக்குத் தரிசனையானபோதும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்ட நாளில் அவர்களுடைய இருதயங்களை அவர் தமக்கு வாசஸ்தலமாக்கிக் கொண்டபோதும் துக்கம் நீங்கி ஒருவனும் கொள்ளையிடக்கூடாத பாக்கியமான சந்தோஷத்தை அடைந்தார்கள்.

கர்த்தரையும் அவருடைய கிருபையுள்ள முகத்தையு
மின்றி இந்த மெய்ச் சந்தோஷத்தில் உனக்கு யாதொரு பங்கு
மில்லை. அவர் உனக்குச் சொந்தமாயிருக்கிறார் என்று அவரு
டைய ஐக்கியத்தைப் பற்றி உனக்கு நிச்சயமிருந்தால் உன் இரு
தயத்தில் பாக்கியமான சந்தோஷம் உண்டாகும். அப்பேர்ப்
பட்ட சந்தோஷத்தை உலகம் அறியாது. கிறிஸ்தவர்கள் துக்கிக்க
உலகத்தார் சந்தோஷிப்பார்கள். கிறிஸ்தவர்கள் சந்தோஷிக்க
உலகத்தார் துக்கிப்பார்கள்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! நாங்கள் உமது
ஐக்கியத்தை அநுபவித்துத் திருப்தியாயிருக்கிறோம். ஆண்டவரே, எப்
போதும் எங்களோடு இருந்து எங்கள் ஆத்துமாக்களைத் தேற்றியருளும்.
உம்மையன்றி வேறே ஆறுதல் எங்களுக்கு இல்லை, சுவாமி, ஆமென்.

நடபடி. 5, 34-42. அல்லது சங். 66. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். மூன்றும் வாரம், திங்கள்.

ஆ. 29, 3. 4.

பிரியமானவர்களே, ஆத்துமத்துக்கு விரோதமாகப் போர் செய்
யும் மாம்ச இச்சைகளுக்கு நீங்கள் விலகியிருக்கவும், புறச்சாதியார் உங்
களை எதிலே அக்கிரமக்காரரென்று பிசை சொல்லுகிறார்களோ, அதிலே
உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, கண்சாணிப்பின் நாளிலே பராபரனை
மகிமைப்படுத்தும்படி, நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையாய் நடக்க
வும், அந்நியரும் பரதேசிகளுமாகிய உங்களுக்குப் புத்திசொல்லுகி
றேன். 1 பேது. 2, 11. 12.

அப்போஸ்தலன் நம்மை அந்நியர்களும் பரதேசிகளு
மென்றழைத்து இங்கே நிலைநிற்கிற பட்டணம் நமக்கில்லை, வரப்
போகிறதையே நாடியிருக்கிறோம் என்று சொல்லுகிறான். இவ்
வுலகம் நமக்குப் பயணக்காரர் தங்கும் சத்திரம்போலிருக்கிற
தென்றும், நமது சொந்த தேசம் வேறே இருக்கிறதென்றும்
ஒவ்வொரு நாளும் நாம் நினைக்கவேண்டும். நாமோ இந்தச்
சொந்த தேசத்தை உண்மையாய் நாடுவதும் இந்த நித்திய இலக்
கை நமது கண்களுக்கு முன்பாக வைப்பதும் நமது கடமை.

நமது சொந்த தேசத்தை நாடுகிற நம்மைத் தடுக்கப்
பார்க்கிற பொல்லாத சத்துரு நமது மாம்ச இச்சைதான். ஆகை
யால் அப்போஸ்தலன் ஆத்துமத்துக்கு விரோதமாகப் போர்செய்
யும் மாம்ச இச்சைகளுக்கு நீங்கள் விலகி இருங்களென்று அவ்
வளவு கண்டிப்பாய்ப் புத்திசொல்லுகிறான். நமது ஆத்துமம்
பராபரனாலும் பராபரனுக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அது

மோட்சத்திற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறது. வேசித்தனம்,
பெருந்தீனி, வெறி, கோபம், சண்டை, பெருமை என்கிற மா
ம்ச இச்சைகள் ஆத்துமத்தை அதின் மோட்ச இலக்கை விட்டுக்
கீழே இழுத்து உலகத்தின் பாவ அழுக்கில் சிக்கப்பண்ணி விடு
கிறது. "மோட்சத்தை நாடுவதை விட்டுவிடு, இங்கேயுள்ள சந்
தோஷத்தைத் தேடு, நீ உயிரோடிருக்கும்பட்டும் உலகத்தை அநு
பவி" என்று இந்த இச்சைகள் ஆத்துமத்துக்குத் துர்ப்போதனை
கொடுக்கின்றன. ஒருவன் மாம்ச இச்சைகளுக்கு இடங்கொடுக்
கும்போதெல்லாம் தேவவசனத்தின் மேலுள்ள ஆசை ஒழிந்து
போகும். ஏனெனில் தேவ வசனம் இப்படிப்பட்ட மாம்ச
இச்சையைக் கடிந்துகொள்ளுகிறது. ஜெபம் செய்வதற்குரிய
சந்தோஷமும் நீங்கிப்போகும். ஏனெனில் தேவனண்டை வர
அப்போது பயமாயிருக்கும். இப்படி மாம்ச இச்சைகள் ஆத்
துமத்துக்கு விரோதமாய்ப் போராடி ஜெபத்தின் மேலுள்ள
ஆவலை அகற்றிப்போட்டு நாம் நித்திய மோட்சம் என்ற வீட்டை
நாடாதபடி நம்மைத் தடுக்கின்றன.

தங்கள் மாம்ச இச்சைகளினால் தங்கள் நல்ல பேரையும்
பாக்கியத்தையும் இரட்சிப்பையும் இழந்து விடுகிற அநேகங் கிறி
ஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் அப்போஸ்தலனுடைய
புத்திமதியை உன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு சதாகாலமும்
பாவத்துக்குச் சாகும்படி உன் பொல்லாத ஆசை இச்சைகளை
எல்லாம் சிலுவையில் அறையும் என்று உன் இரக்ஷகரை வேண்
டிக்கொள்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! தேவரீர், மகா கசப்பான
பாடுகளினாலும் மரணத்தினாலும் எங்களை மீட்டுக்கொண்டீர். நாங்கள்
இதை ஒருபோதும் மறவாமல் எங்கள் ஆசை இச்சைகளோடு போர்
செய்து பயத்தோடும் நடுக்கத்தோடும் எங்கள் இரட்சிப்பைத் தேடுவதற்கு
எங்களை எவி யெழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

நடபடி. 6, 1-7. அல்லது கொ. 11, 1-24. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். மூன்றும் வாரம், செவ்வாய்.

ஆ. 186, 1. 2.

இதோ, நீங்கள் அவனவன் தன் தன் இடத்துக்குச் சிதறுண்டு
போய், என்னைத் தனித்துவிடும் வேளை வருகிறது, இப்போதும் வந்திருக்கி
றது. ஆனால் நான் தனித்திரேன்; ஏனெனில் பிதா என்னுடனேகூட
இருக்கிறார். உங்களுக்கு என்னில் சமாதானம் உண்டாயிருக்கும்படி,

இவைகளை உங்களுக்குச் சொன்னேன். லோகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனால் திடன்கொள்ளுங்கள். நான் லோகத்தை ஜெயித்தேன் என்றார். யோவா. 16, 32. 33.

உங்களுக்கு என்னில் சமாதானம் உண்டாகும்படி இவைகளை உங்களுக்குச் சொன்னேன் என்று இயேசுநாதர் சொல்லுகிறார். நமது இருதயத்துக்கு உண்மையான சந்தோஷம் வேண்டுமானால் கிறிஸ்துவிலே சமாதானத்தைக் கண்டுபிடிப்பது அவசியம். சமாதானமில்லையானால் சந்தோஷமுமில்லை. சமாதானமற்ற மனிதன் கொஞ்சக்காலம் சந்தோஷம் உள்ளவனாகத் தோன்றலாம். ஆகிலும் வாஸ்தவத்தில் அவன் இருதயம் வறண்டு ஆறுதலற்று இருக்கும். மனிதராகிய நமது சமாதானத்தைக் கெடுக்கிற சத்துரு பாவமென்று நமக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் எல்லாத்துக்கும் முந்தி நாம பாவ தோஷத்திற்கு நீங்கித் தேவனோடு ஒப்புரவாகவேண்டும். பாவமன்னிப்பைப் பற்றி நாம் நிச்சயம் அடைந்தால் மாத்திரம் நமது இருதயத்துக்குச் சமாதானம் வரும். இந்தச் சமாதானத்தை நாம் கிறிஸ்துவினிடத்தில் கண்டுபிடிக்கவேண்டும். அவரே நம்மைத் தேவனோடே ஒப்புரவாக்குகிறவர். அவர் மூலமாய் நமது புத்திர சுவிகாரத்தைப் பற்றிய நிச்சயம் அடைவோம். நாம் தேவனுடைய பிள்ளைகளானால் நம் இருதயத்தின் சமாதானத்தைக் கொள்ளையிடக்கூடியதொன்றுமில்லை. துன்பமும் கவலையும் வந்தால் நமது பரம தகப்பனண்டையில் ஓடி அவரில் அடைக்கலம் புகுந்திருப்போம். உபத்திரவ வெள்ளம் நமதுமேல் மோதிப் புரண்டாலும் நமது சமாதானத்தைக் காத்துக்கொள்வோம். இச்சமாதானத்திற்குச் சமாதானப் பிரபு என்று பேர்கொண்ட நமது ஆண்டவராகிய கிறிஸ்துவே ஆதாரம். உலகத்தினாலும் அதின் ஆடம்பரத்தினாலும் மனம் பூரிக்க விரும்புவோரைப்போல நாம் மோசம்போகாதிருப்போமாக. இயேசுநாதர் கொடுக்கும் சமாதானம் மாத்திரம் ஒருவரையும் ஏமாறிப் போகவிடாமல் என்றென்றைக்கும் காக்கும்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உமது அளவிறந்த அன்பினால் ஏவப்பட்டு இவ்வுலகத்தில் இறங்கி நித்திய சமாதானத்தைக் கொண்டுவந்தீர். கர்த்தாவே, நாங்கள் லோகத்தின் போராட்டத்தையும் கலக்கத்தையும் விட்டு உம்மிடத்தில் ஒழியாத ஆறுதலைத் தேட எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

நடபடி 6, 8-15. அல்லது ரோ. 11, 25-36. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். மூன்றும் வாரம், புதன்.

ஓ. 186, 3. 4.

ஆனால் யூதர் அவனைச் சூழ்ந்துகொள்ளுகையில் அவன் எழுந்திருந்து பட்டணத்துக்குள் பிரவேசித்து மறுநாளிலே பர்னபாவுடனே கூடத் தெர்பேக்குப் புறப்பட்டுப் போனான். அந்தப் பட்டணத்துக்கு அவர்கள் சுவிசேஷத்தை அறிவித்து அநேகரைச் சீஷராக்கின பிற்பாடு அவர்கள் லீஸ்திராவுக்கும் இக்கோனிக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி, சீஷருடைய ஆத்துமாக்களைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருங்கள் என்றும், அநேக உபத்திரவங்களின் வழியாய் நாம் பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்கவேண்டியதென்றும் புத்தி சொன்னான். நடபடி. 14, 20-22.

ஆண்டவர் துக்கத்தின் வழியாய் நித்திய சந்தோஷத்துக்குள் எப்படிச் செல்லவேண்டியதாயிருந்ததோ அப்படி நாமும் அநேகம் உபத்திரவங்கள் வழியாய்ப் பராபரனுடைய இராச்சியத்துக்குச் செல்லவேண்டியது. நாம் இங்கே அடிக்கடி பெருமூச்சு விடுகிறோம். இவ்வுலக பாடுகளில் நாம் இதை மறக்கக்கூடாது. அவைகள் தேவ கரத்திலிருந்து வருகின்றன. அவைகள் நம்மைத் தேவனுடைய இராச்சியத்துக்கு ஏற்றவர்களாக்க, நம்மை ஜெபத்துக்கு ஏவி தேவ வசனத்தைக் கவனிக்கப் போதிக்கின்றன. நாம் விசுவாசத்தில் பொறுமையுள்ளவர்களாகிச் சோதனையில் அனல் அடைந்து நம்பிக்கையில் உறுதியாயிருக்க அந்த உபத்திரவங்கள் நம்மைப் பக்குவமாக்கும். அவை உலகத்தை நமக்கு வெறுப்பாக்கி மோட்சத்தை நாடித்தேடும் வாஞ்சையை நமக்குள் உண்டாக்கவே, நம்மிடத்தில் நீதியின் கனிகள் வெளியாகும். தேவனுக்கேற்ற துக்கம் பாவமன்னிப்பினால் உண்டாகும் சமாதானத்தைத் தேட நம்மை ஆயத்தப்படுத்தும், மனஸ்தாபத்தின் மூலமாய் நாம் உண்மையான சந்தோஷத்திற்குப் போகிறோம். இதற்கு எதிரிடையாக உலகத்தார் போம்பாதை உண்டு. அது சந்தோஷத்திலிருந்து துக்கத்துக்குப்போகிறது. முந்திச் சந்தோஷத்தையும் இன்பத்தையும் காட்டிப் பிறகு துக்கத்தையும் மனவேதனையையும் கொடுக்கும். ஐயோ, பரிதாபம்! அநேகர் போகிற பாவ வழி இதுதான். இந்த வழிக்கு எச்சரிக்கையாய் இரு.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! நீர் பாடுகள் வழியாய் உமது இராச்சியத்தில் பிரவேசித்து நாங்கள் போக வேண்டிய வழியை எங்களுக்குக் காண்பித்தீர். கர்த்தாவே, நாங்கள் இந்த வழிக்குப் பயப்படாமல் உற்சாகத்தோடு உம்மைப் பின்சென்று உமது மகிமையில் பங்கு அடைவதற்கு எங்களுக்கு உமது ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

நடபடி. 7, 1-16. அல்லது ரோ. 12, 1-21. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். மூன்றும் வாரம், வியாழன்.

பி. 186, 5-7.

ஏனென்றால் நம்பிக்கையிலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஏனெனில் ஒருவன் தான் காண்கிறதை நம்புகிறதும் ஏது; நாம் காணாததை நம்புகிறோமேயாகில், பொறுமையாய் அதற்குக் காத்திருக்கிறோம். ரோம. 8, 24. 25.

நம்பிக்கையிலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோமென்று விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களை அப்போஸ்தலனாகிய சொல்வது அவர்களுக்கு எவ்வளவு இலாபகரம். அவர்களுக்கு இரட்சிப்பு வருங்காலத்துக்கு மாத்திரம் உரிய நிச்சயமற்ற காரியம் அல்ல. அவர்கள் இவ்வுலகத்திலே ஏற்கனவே இரட்சிப்படைந்து நித்திய இரட்சிப்பின் நம்பிக்கையை உடையவர்கள். அவர்கள் கிறிஸ்துவின் மூலமாய் தேவனுடைய பிள்ளைகளானபடியால் இங்கே இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கர்த்தருடைய பெரிய நாளில் தங்களுக்குக் கிடைக்கும் பூரண இரட்சிப்புக்கு அவர்கள் திட நம்பிக்கையாய்க் காத்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட உறுதியான நம்பிக்கைக்கு நம்மைக் கொண்டு வந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். விசுவாசமுள்ள ஒரு கிறிஸ்தவன் தன் இரட்சிப்பைப்பற்றிச் சந்தேகிக்கத் தேவை இல்லை. தேவனுடைய ஜனத்திற்கு ஒரு இளைப்பாறுதல் வைத்திருக்கிறது. அதற்கு நீயும் வரவேண்டுமென்று தேவ வசனம் சொல்லுகிறது. இது சத்தியமென்று தேவாவியானவர் சாட்சி கூறுகிறார். இவ்வுலகில் இந்த நிச்சயத்திற்கும் பலவித தடைகள் உண்டு. பாவம் நம்மை மேற்கொண்டு தன் வலையில் சிக்கிக் கொள்ளப்பண்ணும். அப்போது நாம் தேவ இராச்சியத்திற்குத் தக்கவர்களா என்று சந்தேகித்துக் கலக்கத்திற்கும் இடுக்கணுக்கும் உள்ளாவோம். ஆகிலும் நாம் இயேசுவின் இரத்தத்தில் கிருபையையும் பாவமன்னிப்பையும் தேடினால் அந்தப் பாக்கியமான நிச்சயத்தை மறுபடி அடைவோம். கொஞ்சப்போதிலே குறைவு நிறைவாகிவிடும். நாம் இந்த நம்பிக்கையோடிருக்கும்போது பாவம் நம்மை ஆண்டுகொள்ளாது. கொஞ்சப்போதிலே நாம் மோட்சத்தில் ஆண்டவரோடு இருந்து அவரை முகமுகமாய்ப் பார்ப்போம். அப்போது அவர் நமது சந்தேகங்களையும் கலக்கங்களையும் நீக்கி நமது ஆத்துமங்களைத் திருப்தியாக்குவார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! நாங்கள் பொறுமையும் நம்பிக்கையுமாய் உமக்குக் காத்திருக்க எங்களுக்கு உத்தாசையாயிரும். நாங்கள் சோதனைகளிலும் துன்பங்களிலும் நம்பிக்கையற்றுப் போ-

காமல் உம்மைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ள உமது கரத்தை நீட்டி எங்களைப் பிடித்தருளும், சுவாமி, ஆமென்.

நடபடி. 7, 17-20. அல்லது ரோம. 13, 1-14. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். மூன்றும் வாரம், வெள்ளி.

பி. 265, 1. 2.

இப்போதும் இவைகளுக்கு என்ன சொல்லுவோம்; பராபரன் நமக்கு அனுகூலமாயிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் ஆர். அவர் தம்முடைய சொந்தக் குமாரனையும் பாராமல் அவரை நம்மெல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத்தாரே. அவர் அவரோடேகூட யாவையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி. பராபரன் தெரிந்துகொண்டவர்களைக் குற்றஞ்சாட்டுகிறவன் ஆர். பராபரன் தான் நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பவன் ஆர், கிறிஸ்து தான் மரித்தவர், இதிலும் அதிசயமாக அவர் எழுந்தவருமாமே, அவர் பராபரனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறாரே, அவர் நமக்காக வேண்டுதலுஞ் செய்கிறாரே. ரோமர் 8, 31-34.

பராபரன் நமக்கு அனுகூலமாய் இருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் ஆர் என்று அப்போஸ்தலன் சொன்ன வார்த்தை ஜெயபேரிகைபோல் முழங்குகிறது. மரணமானாலும் ஜீவனானாலும் நிகழ் காரியமானாலும் வருங் காரியங்களானாலும் நம்மைக் கிறிஸ்து இயேசுவின் உள்ள தேவனுடைய அன்பைவிட்டுப் பிரிக்கமுடியாதென்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். அவன் இம்மையில் தேவனுடைய நேசத்தில் இளைப்பாறி மறுமையிலும் நித்தியமாய் அதில் இளைப்பாறுவதாக நம்புகிறான்.

இப்படிப்பட்ட நிச்சயம் அடையக்கூடியவன் பாக்கியவான். நாமும் இந்த நிச்சயம் அடையலாம். நாம் நம்மை நன்றாய்ச் சோதித்தறிய ஆண்டவருடைய முகத்துக்கு முன் நம்மை நிறுத்தினால் நமக்கு விரோதமாகச் சாட்சி பகருகிற அநேக காரியங்களைக் கண்டுபிடிப்போம். பலவித பாவங்களும் தேவவசனத்தைப்பற்றி நாம் காட்டிய நிர்விசாரமும் ஜெபம் செய்வதில் சோம்பலும் பரிசுத்தமாகுதலில் நாம் காட்டிய அசமந்தமும் நம்மைக் குற்றப்படுத்தும். இப்படிப்பட்ட சோதனையை எவ்வளவுக் கதிகமாய்ச் செய்கிறோமோ அவ்வளவுக் கதிகமாய் நம்முடைய கேடு வெளியாகும். இந்தக் கேட்டை நாம் பார்க்கும்போது நாம் மலைத்துப்போகக் கூடாது. நம்மை ஆக்கினைக்குள் தீர்ப்பவன் ஆர்? பராபரனின் வலது பாரிசத்திலிருந்து நமக்காக வேண்டுதல் செய்கிற கிறிஸ்து இங்கே இருக்கிறார்.

கிருபாசனத்துக்கு முன் நமக்காக விண்ணப்பம் பண்ணிப் பரிந்துபேசுகிறவர் ஒருத்தர் நமக்கு உண்டு. அவர் நிமித்தம் தேவன் நம்மைக் கிருபையாய் ஏற்றுக்கொள்ளுகிறார். நீ உன் மத்தியஸ்தருடைய புண்ணியத்தில் திரும்பத்திரும்ப அடைக்கலம் புகுந்தால் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகிய நீயும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவதில்லை.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது நேச குமாரன் சம்பாதித்த புண்ணியத்தை எங்கள் புண்ணியமாக எண்ணி அவரை நம்புகிற எங்கள் மேல் ஒரு குற்றமும் சொல்லமாட்டீர். கர்த்தாவே, நாங்கள் அவரை ஒரே உறுதியாய்ப் பற்றிக்கொண்டு கடைசி நியாயத்தீர்ப்புக்குத் தப்பித்துக்கொள்ள எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

டபடி. 7, 31-43. அல்லது சோ. 17, 1-13. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பி. மூன்றும் வாரம், சனி.

பி. 265, 3. 4.

இரண்டாம் பிரிவின் தொடர்ச்சி: ஏனெனில் கெட்டுப்போய்ச் சபிக்கப்பட்ட என்னை அவர் பொன்னினாலுமல்ல வெள்ளியினாலுமல்ல விலைமதிக்கக்கூடாத தமது பரிசுத்த இரத்தத்தினாலும் குற்றமில்லாமற் பட்டபாடுகளினாலும் மரணத்தினாலும், எல்லாப்பாவங்களினாலும் மரணத்தினாலும் பிசாசினுடைய வல்லமையினுமிருந்து மீட்டு இரட்சித்துத் தமக்குச் சம்பாதித்துக் கொண்டார். அதினால் நான் அவருக்குச் சொந்தமாயிருந்து அவருக்குக் கீழாக அவருடைய இராச்சியத்திலே பிழைத்து நித்திய நீதியிலும் பரிசுத்த உண்மையிலும் மோட்சானந்தத்திலும் அவருக்கு ஊழியஞ் செய்வதற்கு அவர் மரணத்திலிருந்தெழுந்து என்றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிறார். இது உண்மையான வார்த்தை.

இந்த லோகம் பாவமும் மரணமும் ஆளும் லோகம் பாவத்தைக்கொண்டும் மரணத்தைக்கொண்டும் இந்த லோகத்தின் பிரபு ஆளுகிறான். பாவம், மரணம், பிசாசின் வல்லமை என்றவைகள் நமக்குக்கொடிய எசமான்கள். நம்மை இந்தக் கொடிய எசமான்களின் ஆளுகையிலிருந்து மீட்டு இரட்சிக்கும்படி கிறிஸ்துநாதர் நம்மைத் தமக்குச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். பொன்னையாவது வெள்ளியையாவது கொடுத்து அல்ல தம்மையேகொடுத்து நம்மைச் சம்பாதித்தார், நாம் அந்தக் கொடிய எசமான்களின் அதிகாரத்துக்கு நியாயமாய் ஒப்புக்கொடுக்கப்பட்ட குற்றவாளிகள். கிறிஸ்துநாதரோ அப்படி நியாயமாய் ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களை நியாயமாய் மீட்டிருக்கிறார்.

அவர் உன்னை மீட்டு என்றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிற உன் மேய்ப்பர். கர்த்தர் என் மேய்ப்பர், நான் தாழ்ச்சி அடையேன் என்று சொல்லி விசுவாசித்தால் அவருக்குக் கீழாக அவருடைய இராச்சியத்திலே பிழைக்க உனக்குப் பாத்தியமுண்டு. இந்த விசுவாசமே உன்னுடைய நித்திய நீதி.

ஜெபம்: எங்கள் [illegible] ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவே! பொன்னினாலுமல்ல வெள்ளியினாலுமல்ல, விலைமதிக்கக் கூடாத உமது பரிசுத்த இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாங்கள் உம்மைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம். நாங்கள் உமது இராச்சியத்தில் பிழைத்து உமக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களை ஏவி எழுப்பியருளும், சுவாமி, ஆமேன்.

டபடி 7, 54-60 அல்லது சோ. 14, 14-23. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பி. நாலாம் வாரம், ஞாயிறு.

பி. 265, 5. 6.

[illegible]ப்போதோ என்னை அனுப்பினவரண்டைக்குப் போகிறேன்; எங்கே [illegible]போகிறீர் என்று உங்களில் ஒருவனும் என்னைக் கேளாமல், நான் இவைக[illegible] உங்களுக்குச் சொன்னதினால், துக்கம் உங்கள் இருதயத்தை நிரப்பிற்[illegible]. ஆனால் நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிற[illegible] உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கிறது; ஏனெனில் நான் போகா[illegible]திருந்தால், தேற்றரவாளன் உங்களண்டை வரார்; நான் போவேனேயா[illegible]ல் அவரை உங்களண்டைக்கு அநுப்புவேன். யோவா. 16, 5-7.

[illegible]ர்த்தர் தங்களைக் கைவிடுவார் என்று சீஷர் துக்கம் அடைந்தார்[illegible] இவ்வுலகில் ஆற்றித்தேற்றுகிறவர் இல்லையானால் தாங்கள் பாடும் துன்பமும் நிறைந்தவர்களாயிருக்கவேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் அவர் நான் போகிறது உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கிறதென்று அவர்களுக்குச் சொன்னார். எதற்காகத் துக்கப்பட்டார்களோ அதற்காக அவர்கள் சந்தோஷப்படவேண்டும். அவர் வானத்துக்கு உயர்த்தப்பட்டால் மாத்திரம் அவர்கள் இருதயத்தை எப்போதும் சந்தோஷப்படுத்திச் சகல பாடுகளிலும் அவர்களை ஆற்றித்தேற்றக்கூடிய பரிசுத்தாவியாகிய *தேற்றரவாளனை அவர் அவர்களுக்கு அநுப்பக்கூடும்.

நான் போகிறது உங்களுக்குப் பிரயோசனமாய் இருக்கிறதென்று ஆண்டவர் சொல்லுகிறார். அவர் செய்கிறதெல்லாம் உனக்கும் பிரயோசனமாய் இருக்கிறது. கவலையிலும் வியாதியிலும் மரணத்திலும் சிலுவை உன்மேல் பாரமாயிருந்து உன்னை

வருத்தினால் உன் இருதயமும் துக்கத்தினால் நிறைந்து ஆறுதலற்றுத் தவிக்கும். அப்போது உன் இரட்சகர் உன்னண்டை வந்து அது உனக்குப் பிரயோசனம் என்று சொல்லுகிறார். பருப்பின் தோல் கசப்பாயிருந்தும் பருப்பேட்டு ருசிகரமாயிருப்பதுபோலப் பாடுகள் வருத்தமாகத் தோன்றினாலும் அவை மெய்யாய் ஆசீர்வாதமேயாம். பரம பிதா அதினால் உன்னைத் தம்மண்டை இழுத்து, உன் விசுவாசத்தைச் சோதித்துப் பலப்படுத்தி உன்னைப் பொறுமையில் பழக்குவித்து நீ உலகத்தை நம்பாமல் பரத்துக்கு உன் கண்களை ஏறெடுத்து மோட்சத்தை எதிர்பார்க்கச் செய்வார் என்பதை நம்பு. ஜெபத்தில் தரித்திரு. உன் நம்பிக்கையை விட்டுவிடாதே. அப்போது உபத்திரவமும் உனக்குப் பிரயோசனமென்றும் தேவனைச் சிநேகிக்கிறவர்களுக்கு எல்லாக் காரியங்களும் நன்மையாய்ப் பலிக்கும் என்றும் அநுபோகத்தினால் அறிந்து மகிழ்ந்திருப்பாய்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது பிதாவண்டை போய் வானத்திலும் பூமியிலும் அதிகாரத்தைப் பெற்று உமது சபையை உமது ஆவியினால் ஆண்டு நடத்துகிறீர். ஆண்டவரே, உமது சபையில் சேர்ந்த எங்களையும் கிருபையாய்க் கண்ணோக்கிப் பார்த்து எல்லா மோசங்களுக்கும் காப்பாற்றியருளும், சுவாமி, ஆமென்.

நடபடி 8, 1-13. அல்லது சங். 98. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். நாலாம் வாரம், திங்கள்.

கீ. 265, 7. 8.

சகல நல்ல ஈவும் குறையற்ற சகல வரமும் உயர இருந்துண்டாகி, ஒரு மாறுதலாகிலும் ஒரு வேற்றுமையின் நிழலாகிலும் இல்லாத வெளிச்சங்களின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவர் தாம் சித்தமாய் நம்மைத் தம்முடைய சிருஷ்டிகளில் நாம் ஒரு முதல் விளைவாய் இருக்கத்தக்கதாக, சத்தியத்தின் வசனத்தினாலே ஜெனிப்பித்தார். யாக். 1, 17. 18.

தேவனிடத்தில் ஒரு மாறுதலாகிலும் ஒரு வேற்றுமையின் நிழலாகிலுமில்லை. அவர் எப்போதும் ஒரே விதமாய் இருக்கிற தேவன். அவர் தமது அன்பிலும் இரக்கத்திலும் வல்லமையிலும் கிருபையிலும் மாறுதல் இல்லாதவர். அவர் இரட்சிக்கவும் மனுஷருக்கு நன்மைசெய்யவும் அளவற்ற செல்வம் உடையவர். சகல நல்ல ஈவும் குறையற்ற வரங்களும் வெளிச்சங்களுடைய பிதாவினிடத்திலிருந்து வருகிறது. நீ அவரிடத்தில் உயிரையும்

சுகத்தையும் புத்தியையும் பெலத்தையும் உனக்குத் தேவையான சகலத்தையும் பெற்றுக்கொண்டாய். ஆண்டவருடைய அன்பு உண்மை வைராக்கியம் இவைகள் ஒருபோதும் மாறா.

அவருடைய சிறந்ததும் குறையற்றதுமான ஈவுகளில் அவருடைய வசனம் ஒன்று. நீ தேவனுடைய பிள்ளை என்றும் தேவன் உனக்குப் பிதா என்றும் அந்த வசனத்தினால் அறிந்துகொண்டு எந்தத் துன்பத்திற்கும் பயப்படமாட்டாய். தேவனுடைய பிள்ளையாயிருப்பது மனுஷன் சம்பாதிக்கக் கூடியதெல்லாவற்றையும் விடப் பெரிய கனம். நான் பாவியாயிருந்தாலும் நான் பரம பிதாவின் பிள்ளை, ஏனெனில் கிறிஸ்துவின் இரத்தத்தால் என் பாவம் கழுவப்பட்டது.

சத்தியத்தின் வசனத்தைக்கொண்டும் ஞானஸ்நானத்தோடு கூடிய வசனத்தைக்கொண்டும் அவர் உன்னைத் தமக்குப் பிள்ளையாக்கிக்கொள்வார். ஞானஸ்நானம் உன்னிடத்தில் வீணாகாதபடி விசுவாசம் அவசியம். தேவ வசனமின்றி விசுவாசம் பிறக்காது. தேவ வசனத்தை எல்லாத்திலும் சிறந்த ஈவாக எண்ணி அதைச் சிநேகித்து வா.

ஜெபம். தயாபரராகிய பிதாவே! ஒருவரும் சேரக்கூடாத வெளிச்சத்தில் வாசமாயிருக்கிறவரே, நாங்கள் அநுதினமும் பற்பல நன்மைகளை உம்மிடத்தில் பெற்றுவருகிறோம். தேவரீர் ஒருவரே எங்களுக்குத் தகப்பன். உமது அளவற்ற இரக்கத்திற்காக உமக்குச் சதாகாலங்களிலும் தோத்திரம் உண்டாவதாக, சுவாமி, ஆமென்.

நடபடி 8, 14-25. அல்லது கொ. 15, 1-13. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். நாலாம் வாரம், செவ்வாய்.

கீ. 251, 1. 2.

ஆகையால் நீங்கள் எல்லா ஊத்தையையும் மிஞ்சுகிற துர்க்குணத்தையும் போட்டுவிட்டு, உள்ளே நடப்பட்டதும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லதுமான வசனத்தை மெத்தனவுடனே ஏற்றுக்கொள்ளுங்கள். யாக். 1, 21.

தேவ வசனம் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லது என்று அப்போஸ்தலன் எல்லா மனுஷருக்கும் சொல்லியும் விசுவாசிகள் மாத்திரம் இதை அநுபவமாய் அறிவார்கள். விசுவாசிக்கிறவன் இம்மையில் தேவ பிள்ளை. மறுமையில் தேவனின் சுதந்தரவாளி. இப்போது விசுவாசம் பிரசங்கத்தினாலும் பிரசங்கம்

தேவ வசனத்தினாலும் உண்டாகிறது. இப்படித் தேவவசனம் நமது ஆத்துமங்களை இரட்சிக்கிறது. இதற்காக தேவன் அதைக் கொடுத்தார். இதுதான் அவருடைய நன்மையும் பிரியமுமான சித்தம்.

இந்தச் சித்தம் எல்லாரிடத்திலும் நிறைவேறிவருகிறதா என்று கேட்டால் ஐயோ, இல்லை என்று சொல்லவேண்டும். தேவன் ஒவ்வொருவரையும் இரட்சிப்புக்கென்று அழைத்துப் பாவத்தினின்று சுத்திகரித்து விசுவாசிப்பதற்கு ஒத்தாசை செய்தும் அவர் ஒருவனையும் கட்டாயப்பண்ணுகிறதில்லை. அநேகர் அவருக்கு விலகிப்போவதினால் வசனமானது அவர்களில் விசுவாசத்தை உண்டுபண்ணி இரட்சிக்கும் வல்லமையைக் காட்ட முடியாது. இன்னம் சிலர் அதைக் கேட்டாலும் அது அவர்களிடத்தில் தரிக்கிறதில்லை. அவர்கள் இருதயம் செம்மையானதல்ல. அவர்கள் சத்தியத்தை அறிந்தும், அதின்படி செய்கிறதில்லை. அவர்கள் ஊத்தைக்கும் துர்க்குணத்துக்கும் நீங்கினவர்களாயிராமல் மனச்சாட்சியைக் கறைப்படுத்தும் காரியங்களில் சந்தோஷம் அடைகிறார்கள். தேவ வசனம் உன்னை விசுவாசத்துக்குக் கொண்டுவந்து இரட்சிக்கவேண்டுமானால் நீ சகல ஊத்தையையும் துர்க்குணத்தையும் போட்டுவிட்டு மெத்தனவோடு அதை ஏற்றுக்கொள். அது அறிவிக்கும் சத்தியத்தை நன்குமதித்து அது உன்னைக் கடிந்துகொள்ள இடங்கொடு.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது திருவசனத்தைக்கொண்டு எங்களுக்கு மோட்சவழியைத் தெளிவாய்க் காட்டிவருகிற உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் இந்தப் பொக்கிஷத்தை நன்றும் சுத்தமுமான இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அதின்படி நடப்பதற்கு எங்களுக்கு உமது கிருபையைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

லூ. 8, 26-40. அல்லது கொ. 15, 14-33. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். நாலாம் வாரம், புதன்.

ஞ. 251, 3. 4.

மனத்தரித்திரர் பாக்கியவான்கள், அதேனென்றால் வானராச்சியம் அவர்களுடையதாயிருக்கிறது. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அதேனென்றால் அவர்கள் தேற்றப்படுவார்கள். மெத்தனவுள்ளவர்கள் பாக்கியவான்கள், அதேனென்றால் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். நீதியின்பேரில் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அதேனென்றால் அவர்கள் திருப்தி அடைவார்கள். மத். 5, 3-6.

நாம் பாக்கியமுள்ளவர்கள் ஆகவேண்டுமென்பது ஆண்டவருடைய சித்தம். அவர் நம்மைப் பாக்கியவான்கள் ஆக்க விரும்புகிறார். நம்மை நிர்ப்பந்தப்படுத்தும் எல்லா மோசங்களிலிருந்தும் நம்மை மீட்டுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறார். வேறொருவர் செய்யமுடியாத எந்த நன்மையையும் அவர் செய்யக்கூடும். நீ பாக்கியவானாக விரும்பினால் இவ்வுலக ஆசைகளுக்குச் செவிகொடாதே. இவ்வுலகத்தின் செல்வத்தைச் சம்பாதித்தவர்களும் பாடனுபவிக்காதவர்களும் இவ்வுலக இன்பத்தை அனுபவிக்கிறவர்களும் பாக்கியவான்கள் என்று எண்ணாதே. அவர்கள் நெடுநாளாய்த் தங்கள் பாக்கியத்தை அனுபவிக்கப் போகிறதில்லை. அவர்கள் கவலைகளுக்கும் வியாதிகளுக்கும் மரணத்துக்கும் விலகிப் பத்திரமாயிருக்கமாட்டார்கள். சமாதானத்திலும் நம்பிக்கையிலும் உறுதிபெற்ற இருதயம் அவர்களுக்கில்லை.

நீ பாக்கியத்தை அனுபவிக்கவேண்டுமானால் கர்த்தர் சொல்வதைக் கேட்டுக் கற்றுக்கொள். மனத்தரித்திரர் பாக்கியவான்கள் என்கிறார். தங்கள் எளிமைத்தனத்தையும் அபாத்திரத்தன்மையையும் ஆண்டவருக்குத் தாழ்மையோடு அறிக்கையிடுகிறவர்கள் பாக்கியவான்கள். வானராச்சியம் அவர்களுடையதென்று அதின் இராசா சொல்லுகிறார். அவர்களே கிருபையையும் ஆறுதலையும் பராபரனிடத்தில் பெறத்தக்கவர்கள். தங்கள் பாவத்துக்காகத் துயரப்படுகிறவர்கள் விசுவாசத்தினால் மன்னிப்புப் பெற்றுத் தேறக்கூடியவர்கள்.

மெத்தனவுள்ளவர்களுக்கு இப்பூமியில் யாதொன்றும் குறைவுபடாமல் எல்லாம் போதுமென்றமட்டும் கிடைக்கும். புதுப் பூமியை அவர்கள்மாத்திரம் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். இவ்விரண்டு காரணங்களினால் அவர்களும் பாக்கியர் என்பது தின்னம். நீதியின்பேரில் பசிதாகமுள்ளவர்கள் கிறிஸ்துவின் நீதியினால், நீங்காத திருப்தியை அடைவார்கள்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! எங்கள் பழைய குணத்தை மாற்றிப் பரலோகத்துக்கு ஏற்ற புதுக்குணத்தை எங்களுக்குத் தந்தருளும். நாங்கள் உமது ஆவியைக்கொண்டு தேவரீரைப்போல் சாந்தமும் மெத்தனவுமுள்ளவர்களாவதற்கு எங்களுக்குத் துணை செய்தருளும், சுவாமி, ஆமென்.

லூ. 9, 1-16. அல்லது கொ. 16, 1-16. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். நாலாம் வாரம், வியாழன்.

ஞ. 251, 5. 6.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அதேனென்றால் அவர்கள் இரக்கம் பெறுவார்கள். இருதயத்தில் சுத்தமானவர்கள் பாக்கியவான்கள், அதேனென்றால் அவர்கள் பராபரனைத் தரிசிப்பார்கள். சமாதானத்தை நடப்பிக்கிறவர்கள் பாக்கியவான்கள், அதேனென்றால் அவர்கள் பராபரனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். மத். 5, 7-9.

இவ்வுலகில் பாடுகளும் குறைவும் அதிகமானதால் இரக்கம் காட்டுவதற்கு அநேக சமயங்களுண்டு. உன்னிருதயம் விரிய வேண்டும். உன் கை திறந்திருக்கவேண்டும். கொடுக்கிறவன் தன்னை ஏழையாக்காமல் செல்வனாக்குகிறான். நீ பிறரிடத்தில் சகித்துப் பொறுத்துக் கொள்ள வேண்டிய பெலவீனமும் மாறுபாடும் பாவங்களும் உண்டு. நீ சிநேகமற்றவனும் அவைகளை நியாயம் தீர்த்து ஆக்கினைக்குள்ளாக்காமல் அவைகளைப் பொறுமையாய்ச் சகித்துச் சீரடைய அவர்களுக்கு உதவிசெய்யும் படியாக இரக்கம் உனக்குத் தேவை. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அவர்கள் இரக்கம் பெறுவார்கள். தேவனிடத்திலும் மனுஷரிடத்திலும் அவர்கள் இரக்கமுள்ள தீர்ப்பையும் இரக்கமுள்ள ஒத்தாசையையும் பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமானவர்கள் பாக்கியவான்கள். சுத்த இருதயத்தை எனக்குள் சிருஷ்டியும் பராபரனே என்று நாம் எல்லாரும் ஜெபிக்க வேண்டியது. தேவ வசனத்தின் பேரில் நீ மகிழ்ந்திரு. அப்போதுன் இருதயம் அதிகம் அதிகமாய்ச் சுத்தமாகும். இருதயத்தில் சுத்தமானவர்கள் இங்கே விசுவாசத்தினாலும் அங்கே முகமுகமாயும் பராபரனைத் தரிசிப்பதினால் பாக்கியவான்கள். நீ இங்கே அவருடைய வசனத்தைக் கேட்டுப்படித்து அதினால் அவரை உன் இரட்சிப்பின் பராபரனும் உன் ஆத்துமத்தின் இரட்சகருமாக அறிந்துகொள்வாய். நீ அவருடைய கிருபையினால் உண்டாகும் ஆறுதலை உன் ஆத்துமத்திலே ருசித்துப் பார்ப்பாய். அதிலே நீ அவருடைய மகிமையைக் காண்பாய். பரிசுத்தமாகுதல் இன்றி ஒருவனும் தேவனைத் தரிசிக்கமாட்டான். நேர்மையில்லாத பொல்லாத இருதயத்திற்குத் தேவ வசனம் கருகலும் அவர் மகிமை மறைபொருளுமாம்.

தேவன் சமாதானத்தின் தேவனாகையால் அவருடைய பிள்ளைகளும் சமாதானத்தின் பிள்ளைகள், சமாதானம் அவர்களுடைய இருதயத்தில் இருப்பதுமல்லாமல் அவர்கள் அதைப் பிறரிடத்திலும் காத்துக்கொள்ளுகிறார்கள். இவ்வாறு சமாதானத்

தை நடப்பிக்கிறவர்களை இயேசுநாதர் பாக்கியவான்களென்றும் பராபரனுடைய புத்திரர் என்றும் கூறுகிறார்.

ஜெபம். சர்வ ஜீவ தயவுள்ள பிதாவே! தேவரீர், நீர் உமது சாயலாக உண்டாக்கின நாங்கள் பாவத்தினால் இந்தச் சாயலை இழந்து மறுபடி அதை அடைவதற்கு உமது நேச குமாரனை எங்களண்டை அனுப்பினீர். கர்த்தரே, நாங்கள் இவருடைய சொல்லைக் கேட்டு உமக்கேற்றபடி இவ்வுலகில் நடப்பதற்கு எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி 9, 17-30. அல்லது சேர். 17-27. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். நாலாம் வாரம், வெள்ளி.

ஞ. 186, 5. 6.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அதேனென்றால் வானராச்சியம் அவர்களுடையதாயிருக்கிறது. என் நிமித்தம் உங்களைத் தூஷணித்துத் துன்பப்படுத்தி, தீது மொழியெல்லாம் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொன்னார்களானால் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள். சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள், ஏனென்றால் உங்கள் பலன் பரமண்டலங்களில் திரளாயிருக்கும். எனெனில் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளை இப்படியே துன்பப்படுத்தினார்கள். மத். 5, 10-12.

பாக்கியவான்களாயிருக்கிறீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார். கிறிஸ்தவர்கள் பாக்கியமான ஜனம். அவர்கள் மறுமையில் தான் முதல் முதல் பாக்கியவான்களாவார்களென்பதில்லை, அவர்கள் இவ்வுலகத்திலும் பாக்கியவான்கள். நாம் இங்கே நல் நாட்களையே எதிர்பார்க்கவேண்டுமென்பதில்லை. நீ உன் விசுவாசத்தை உலகத்துக்கு முன் வார்த்தையிலும் கிரியையிலும் எவ்வளவு உண்மையாய் அறிக்கையிடுகிறாயோ அவ்வளவுக்கதிகமாய் உலகத்தின் பகையையும் பொல்லாத பின்புறணியையும் தூஷணத்தையும் துன்பத்தையும் அனுபவிப்பாய். இதற்காக ஆச்சரியப்படாதே. சீஷன் தன் போதகனுக்கு மேற்பட்டவனல்ல. உன் இரட்சகரையும் அவருடைய குற்றமற்ற பாடுகளையும் நினைத்துக்கொள். தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலரையும் அவர்கள் பட்ட பாட்டையும் நினைத்துக்கொள். சத்தியமானது உலகத்தின் பாவத்தைக் கடிந்துகொள்ளுகிறபடியால் உலகம் சத்தியத்தைப் பொறுக்காது. ஆகையால் அது உண்மையுள்ள கிறிஸ்தவனையும் சகிக்காது. நீ உன் விசுவாசத்தினிமித்தமும் நீதியின் நிமித்தமும் உன் இரட்சகர் நிமித்தமும் அவமானத்தை

அடைந்தால் நீ ஆச்சரியப்படாதே. பின்வாங்கித் தவறிப்போகாதே. இதினால் சந்தோஷப்பட்டு, அதை மேன்மையாக எண்ணிக்கொள். விசுவாசம் உன்னைக் கிறீஸ்தவனுக்குகிறது. சிநேகம் உன்னைக் கிறீஸ்தவனெனக் காட்டுகிறது. பாடுகள் உன்னைக் கிறீஸ்தவனென்று உறுதிப்படுத்துகின்றன. இப்படிப்பட்ட துன்பங்களில் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள், வான இராச்சியம் இப்படிப்பட்டவர்களுடையது என்று கர்த்தர் சொல்லுகிறார். உலகம் நம்மை வேண்டாமென்று தள்ளினால் கர்த்தர் நம்மை வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளுகிறார். பூமியில் நமது நிலைமை நெருக்கம். மோட்சத்திலோ நமக்குத் தாராளம். கிறீஸ்துவுக்காக இங்கே பாடுபட்ட நமக்கு அங்கே பலனளிக்கப்படும். இவ்வுலகத்தின் சகல பகைக்கும் நஷ்டத்துக்கும் ஈடாக அங்கே தேவ அன்பினால் மோட்சம் ஆயிரமடங்கு நமக்குக் கொடுக்கப்படும். உலகத்தார் நமது பிதாவையும் இரட்சகரையும் அறியாதபடியால் நமக்கு ஆகாததைச் செய்கிறார்கள். நீ ஸ்தேவானைப்போல் ஆண்டவரே, அவர்களுடைய பாவத்தை அவர்கள்மேல் சுமத்தாதேயும் என்று ஜெபம் செய்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! நீர் நித்திய பரலோகத்தை விட்டு எங்களிடத்தில் இறங்கி வந்தீர். நாங்கள் உம்மைப்போல் பொறுமையோடே பாடுகளை அநுபவித்து நித்தியத்தைப் பெற எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி 9, 31-43. அல்லது 1 கொரி. 1, 1-17. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். நாலாம் வாரம், சனி.

ஏ. 87, 1. 2.

மூன்றாம் பிரிவு. பரிசுத்தாவியானவரை விசுவாசிக்கிறேன். பொதுவான பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், மாமிச உயிர்த்தெழுதலும், நித்திய சீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

இதற்கர்த்தமென்ன? நான் என் சுயபுத்தியினாலும் பலத்தினாலும் என் கர்த்தராயிருக்கிற இயேசுகிறீஸ்துவை விசுவாசிக்கவும் அவரைச் சேர்ந்து அண்டிக்கொள்ளவும் கூடாது. ஆகையால் பரிசுத்தாவியானவர் சுவிசேஷத்தைக்கொண்டு என்னை வரவழைத்து, தம்முடைய வரங்களால் என்னைப் பிரகாசிப்பித்து, மெய்யான விசுவாசத்தினால் என்னைப் பரிசுத்தமாக்கிக் காப்பாற்றி வருகிறாரென்று விசுவாசிக்கிறேன்.

சிலுவையிலறையுண்ட இயேசுகிறீஸ்து என் இரட்சகர் என்பதும், பராபரனுடைய ஆசனத்திலுட்கார்ந்திருக்கிற இயேசுகிறீஸ்து என் கர்த்தர் என்பதும், இயேசுகிறீஸ்து சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கும் நியாயாதிபதி என்பதும் இரண்டாம் பிரிவின் பொருள். அவரண்டை வந்து அவரை விசுவாசிப்பது நீ உலகத்தில் படிக்கிற எல்லா ஞானத்திலும் சிறந்தது. இச்சீவியத்தில் நீ கண்டுபிடிக்கக்கூடிய பெரிய ஆறுதல் இதுதான். அவரைப்பற்றும் விசுவாசம் உன்னைப் பராபரனுக்கு முன் நீதிமானாக்கி உனக்கு நித்திய பாக்கியத்தைத் தரும்.

அப்படியிருக்க, விசுவாசிப்பது ஏன் அநேகருக்கு அவ்வளவு கஷ்டமாயிருக்கிறது. மனிதனுடைய சுயமேன்மை கிறீஸ்துவின் சிலுவைக்கு முன் மனஸ்தாபத்தினால் தாழமாட்டாது. உலக சிந்தைக்கு இந்தச் சிலுவை இடறலாயிருக்கிறது. சுயபுத்தியினாலும் பலத்தினாலும் ஒருவனும் இயேசுகிறீஸ்துவை விசுவாசிக்கவும் அவரைச் சேர்ந்து அண்டிக்கொள்ளவும் முடியவே முடியாது.

விண்ணிலிருந்து இறங்கிவந்த தேவ வல்லமையாகிய பரிசுத்தாவிதான் இதைச் செய்து முடிப்பார். அவர் பிதாவிடத்திலிருந்தும் குமாரனிடத்திலுமிருந்தும் புறப்படுகிறவர். அவர் பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு திருச்சபையின் எத்தனங்களாகிய தேவ வசனத்தையும் ஞான திரவியங்களையும் கொண்டு மனிதரிடத்தில் தமது கிரியையை நடப்பிக்கிறார். அவர் சுவிசேஷம் என்ற நற்செய்தியைக்கொண்டு நம்மையும் வரவழைக்கிறார். பாவத்தையும் பாவிகளின் இரட்சகரையும் அறியும் அறிவினால் நம்மைப் பிரகாசிப்பிக்கிறார். நமது நம்பிக்கையை எல்லாச் சந்தேகங்களும் அறத் திடப்படுத்தி நம்மிடத்தில் மெய்யான விசுவாசத்தை உண்டுபண்ணுகிறார். அவர் கிறீஸ்துவின் நீதியை நமது நீதியாக்கி விசுவாசத்தைக் காட்டும் சிநேகத்தை நமக்குள் மூட்டிப் பாவத்தின்மேல் வெறுப்பை உண்டாக்கி நற்கிரியைகளைச் செய்ய ஆசையையும் பலத்தையும் கொடுக்கிறார்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! உமது இரட்சிப்பின் ஆலோசனையை முடித்துக் கிறீஸ்துவின் மீட்பை எங்களுக்குப் புகட்ட உமது பரிசுத்தாவியை அனுப்பினீர். கிருபையுள்ள பிதாவே, அவர் எங்கள் இருதயத்தில் உமது குமாரனைப்பற்றிச் சொல்லும் சாட்சியை நாங்கள் கேட்டு எங்கள் இரட்சகரைத் திட விசுவாசத்தோடே பற்றிக்கொள்ள எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி 16, 1-23. அல்லது 1 கொரி. 1, 17-31 வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். ஐந்தாம் வாரம், ஞாயிறு.

பி. 84, 1. 2.

மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்திலே பிதாவைக் கேட்பதெதுவோ அதையும் உங்களுக்குக் கொடுப்பார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்திலே ஒன்றுங் கேட்டதில்லை; உங்கள் சந்தோஷம் நிறைந்ததாயிருக்கக் கேளுங்கள், அப்போது வாங்குவீர்கள். யோ. 16, 23. 24.

நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபித்தால் நமது ஜெபம் தேவனுக்கு உகந்ததாயிருக்கும். அப்படிப்பட்ட ஜெபம் பண்ணுவதற்கு இயேசுநாதர் தமது நாமத்தை நமக்குத் தெரிவித்தார். அவர் மரித்து உயிர்த்தெழுந்து பரத்துக்கேறிப் பரிசுத்த ஆவியை அனுப்பின பிற்பாடே அவ்வாவியானவர் அவருடைய நாமத்தை நமக்குப் போதிக்கிறார். இப்போது பரிசுத்த ஆவியானவரால் அதை அறிந்து இயேசுவின் நாமத்தின்மேல் விசுவாசமடைந்தவர்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பார்கள். அவர்கள் தேவனுடைய முகத்துக்குமுன் தங்கள் பாவ உடையைத் தரித்துவராமல் கிறிஸ்து நமக்காய்ச் சம்பாதித்த நீதியின் வஸ்திரத்தைத் தரித்தவர்களாய் வருகிறார்கள். இப்படி அவர்கள் கர்த்தருக்குப் பிரியமானவர்கள். அவர்கள் ஜெபத்தையும் அவர் கேட்பார்.

இயேசு என்கிற நாமத்திற்கு இரட்சகர் என்கிற அர்த்தமுண்டு. தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நம்மை நித்தியமாய் இரட்சிக்க விரும்புகிறார். அவர் நாமமும் அவர் கிருபையும் மாத்திரம் உன் இருதயத்தின் ஆழத்தில் பிரகாசித்தால் போதும். கர்த்தர், கேளுங்கள், அப்போது வாங்குவீர்கள் என்று சொன்னதால் ஜெபிப்பதற்கு நமக்கு அதிகாரம் கொடுக்கிறார்.

ஜெபத்தினால் நாம் பூரண சந்தோஷத்தை அடைவோம். கர்த்தர் நமது ஜெபத்தைக் கேட்டு இக்கட்டிலிருந்து நம்மை மீட்டு இரட்சித்து வியாதி கொண்ட நமது சரீரத்திற்குச் சுகத்தையும் பலத்தையும் கொடுத்து நமக்கருமையானவர்களையும் மரண உபாதைக்கு நீங்கலாக்கினால் நமது சந்தோஷம் நிறைவாகும்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! நாங்கள் உமது வாக்குத்தத்தத்தின்படி உமது நாமத்தில் உமது பிதாவண்டைச் சேர்ந்து மன்றாடுகிறோம். உம்மால் அவர் எங்களுக்கும் பிதாவானார். உமது திருநாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரம் உண்டாவதாக, சுவாமி, ஆமென்.

லூ. 10, 24-28. அல்லது [illegible] 28. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். ஐந்தாம் வாரம், திங்கள்.

பி. 84. 3. 4.

உங்களில் ஒருவனுக்கு ஞானம் குறைவாயிருந்தேயாகில், உதம்பாதலரும் உண்மையாய் எல்லாருக்கும் கொடுக்கிறவருமான பராபரனிடத்தில் கேட்கக்கடவன், அப்போது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனால் ஒன்றுஞ் சந்தேகப்படாமல், விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; ஏனென்றால் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு மோதுண்ட கடல் அலைக்குச் சமானமானவன். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்திலே ஏதாகிலும் பெறுவானென்று நினைக்கவேண்டாம். யாக். 1, 5-7.

கேளுங்கள், அப்போது வாங்குவீர்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். நமக்கு முக்கியமாய்த் தேவையானது ஞானமென்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். மனுஷர் ஞானமென்று சொல்வதைப்பற்றி அப்போஸ்தலன் பேசவில்லை. உயர இருந்து வரும் ஞானம் ஒன்றுண்டு. அதைப்பற்றிப் பேசுகிறான். அது கற்புள்ளதாய் இருப்பதுமல்லாமல் சமாதானம், சாந்தம், இணக்கமுள்ளதும் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததும் பாரபட்சம் அற்றதுமாம். நீ தேவ பிள்ளைக்கொத்த பயமாய்ப் பயப்பட்டால் நீயும் இந்த ஞானத்தை அடையலாம். ஏனெனில் தேவ பயமே சகல ஞானத்துக்கும் துவக்கம். நீயே அதை உனக்குக் கொடுக்க முடியாது. ஆனால் உன் பரம தகப்பன் அதை உனக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார். ஆகையால் அவரை வேண்டிக்கொள். இந்த ஞானம் உன்னை மெய்ப்பாக்கியத்துக்குக் கொண்டுவருவதால் உன் இருதயத்தைத் திருப்திப்படுத்தும். உன்னை இரட்சிக்கப்போகிற பராபரனுடைய வழியை உணர்ந்து கொள்ள அது உன்னைப் போதித்து அந்த வழியில் செல்வதற்கு உனக்குப் பெலனைக் கொடுக்கும். ஆகையால் இந்த ஞானத்துக்காக மன்றாடு. விசுவாசத்தோடு மன்றாடு, சந்தேகப்படாதே, அவர் உன்னைக் கேட்பார் என்கிற நம்பிக்கை உன்னில் தளர்ந்து போனால் நீ நிற்கக் கூடிய உறுதியான கன்மலை உனக்கு இல்லை. அப்போது உன் இருதயம் காற்றினால் இங்குமங்கும் மோதப்படும் கடலலைக்கு ஒப்பாயிருக்கும். உன் பரம தகப்பன்பேரில் உனக்குத் திடநம்பிக்கை இருக்குமானால் அவர் நீ விரும்புவதை உனக்குத் தருவார்.

ஜெபம். பரம பிதாவே! சகல நல்ல ஈவும் குறைவற்ற சகல வரமும் உம்மிடத்திலிருந்து உண்டாகி எங்களுக்குக் கொடுக்கப்படும். அந்தகாரத்தில் வசிக்கின்ற நாங்கள் உம்மிடத்தில் வந்து எங்களுக்கு வெளிச்சத்தையும் ஞானத்தையும் தரவேண்டுமென்று கெஞ்சி மன்றாடி

றோம். உமது நேச குமாரனின் திருமுகத்தைப்பார்த்து எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும், சுவாமி, ஆமென்.

நட. 11, 1-18. அல்லது 1 கொரி. 2, 1-16. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். ஐந்தாம் வாரம், செவ்வாய்.

தி. 211, 1. 2.

நீங்கள் ஜெபம் பண்ணுகிறபோது அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். அவர்கள் தங்கள் வெகு வசனிப்பினாலே கேட்கப்படுவோமென்று நினைக்கிறார்கள். ஆனதுகொண்டு அவர்கள் சாயலாயிராதேயுங்கள். ஏனென்றால் உங்கள் பிதா உங்களுக்கு இன்னது தேவை என்று நீங்கள் தம்மை வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னே அறிந்திருக்கிறார். மத். 6, 7. 8.

காலையிலும் மாலையிலும் சாப்பிடு முன்னும் பின்னும் ஜெபம் செய்துவிட்டால் தாங்கள் நல்ல கிறிஸ்தவர்களென்றும் பராபரன் தங்கள்மேல் பிரியப்படவேண்டுமென்றும் அநேகர் பாவித்துக்கொள்ளுகிறார்கள். ஆனாலு மனிதர் ஜெபம் என்று சொல்லுகிறதெல்லாம் ஜெபமல்ல. ஜெபம் வாயிலிருந்து மாத்திரமல்ல, இருதயத்திலிருந்தும் புறப்படவேண்டும். நீ கர்த்தரண்டை போய் அவரோடு பேசும்போது உன் வாக்கும் மனமும் ஒத்திருக்கவேண்டும். இல்லாவிடில் நீ ஜெபம் என்று சொல்வது வீண் அலப்புதல் அன்றி வேறல்ல. நீ ஜெபத்தில் உபயோகித்த வார்த்தைகள் வெகு அலங்காரமானதாயிருந்தாலும் வெகு வசனிப்புகளைச் செய்தாலும் அவை எல்லாம் வீண் அலப்புதல்தான். இப்படி அஞ்ஞானிகளும் செய்வார்கள். வாயினால் செய்யும் இப்படிப்பட்ட அலப்புதல் ஒன்றுக்கும் உதவாது. அது பரிசுத்த தேவனுக்கு வெறுப்பாயிருக்கிறது. உன் இருதயம் உண்மையும் செம்மையுமாயிருந்து உன் பேச்சும் உன் சிந்தையும் அருளும் ஒன்றுபட்டிருந்தல் முக்கியம். உன் மனதை அவர் நன்றாய் அறிவார். அவர் உன் இருதயத்துக்குள்ளானதைப் பார்க்கிறார். உன் இருதயத்தை அறிந்திருக்கிறார். ஒருவன் மனுஷனை ஏமாற்றினாலும் ஏமாற்றலாம், எல்லாவற்றையுமறிந்த தேவனையோ ஏமாற்ற முடியாது. ஆகையால் ஜெபத்துக்கு உன் முழங்காலை மடக்கும்போது நீ உண்மையாய் ஜெபி. நீ ஜெபத்தினால் பராபரனுக்கு ஏதோ ஒரு நன்மை செய்கிறதாக நினையாதே. உன் ஜெபம் அவருக்குத் தேவையில்லை. அதினாலே நீ உனக்கே நன்மை செய்கிறாய். உனக்குத் தேவையானது இன்

னதென்று நீ நினைப்பதற்கும் அதைக் கேட்பதற்கும் முன்னமே அவர் உனக்குத் தேவையானது இன்னதென்று அறிந்திருக்கிறார். நீ இப்படி அவரண்டை வந்தால் அவர் கொடுப்பதை நன்றியறிதலோடு பெற்றுக்கொள்வாய். நீ விரும்பினதை ஒருவேளை அவர் கொடாவிட்டாலும் நீ திருப்தியாய் இரு.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் உமது அன்பையும் பட்சத்தையும் நம்பி உம்மை நோக்கி மன்றாடுகிறோம். தேவரீர் எங்களை எப்போதும் கேட்பீர். நீர் எங்களுக்கு உமது குமாரனைக் கொடுத்திருக்க அவரோடு எங்களுக்கு எல்லாவற்றையும் கொடாதிருப்பதெப்படி? உமக்கு இன்றும் என்றும் மகிமையும் சீர்மும் உண்டாவதாக, சுவாமி, ஆமென்.

நடபடி. 11, 19-30. அல்லது 1 கொரி. 3, 1-15. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். ஐந்தாம் வாரம், புதன்.

தி. 74, 1-3.

அவர் இவர்களைப் பெத்தானியாமட்டும் வெளியே அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய கைகளை எழுப்பி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் சம்பவித்ததேதென்றால், அவர்களை விட்டுப் பிரிந்து, பரமண்டலத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்களோ அவரைப் பணிந்துகொண்டு, மகா சந்தோஷத்துடனே எருசலேமுக்குத் திரும்பி, எப்போதும் தேவாலயத்திலே பராபரனைத் துதித்தும் புகழ்ந்தும் இருந்தார்கள். லூக். 24, 50-53.

கர்த்தர் உயிர்த்தெழுந்த பின் இன்னும் நாற்பது நாள் தமது சீஷருடனேகூட இருந்தார். அக்காலத்தில் தமது சீஷரும் தமது உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகளாகும்படி தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அப்புறம் அவர்களை ஒலிவமலைக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவ்விடத்தில் தமது கையை நீட்டி அவர்களை ஆசீர்வதிக்கிறவராய் அவர்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் மரித்தபோது அவர்கள் வெகுவாய்த் துக்கப்பட்டிருந்தார்களே. அவர்களை அவர் விட்டுப் பிரிந்த இப்போதோ பெரிய சந்தோஷமடைந்து இரட்சகரை வாயினாலும் இருதயத்தாலும் புகழ்ந்துகொள்ளுகிறார்கள். தங்களை நேசித்த கர்த்தர் லோகத்தோற்றத்திற்கு முன் தமக்குப் பிதாவிடமிருந்த தமது மகிமைக்குத் திரும்பினார் என்று அவர்கள் அறிந்தார்கள். சிலுவையில் அறையுண்டு உயிர்த்தெழுந்தவர் காணப்படாத விதமாய்த் தங்களிடமிருந்து

ஆசீர்வதிக்கும் தமது கைகளை எப்போதும் அவர்கள்மேல் நீட்டுவார் என்று அறிந்தார்கள். ஆசீர்வதிப்பதற்காக அவர் இவ்வுலகில் வந்தார், ஆசீர்வதிக்கிறவராய் அவர் ஏறினார். தாம் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்ததால் சம்பாதித்த பலனைப் பரத்துக்கேறிச் சீஷருக்குக் கொடுக்கிறார். இந்த ஆசீர்வாதத்தை நமக்கும் பெயித்துத் தமது வசனத்தையும் சாக்கிரமெந்துகளையுங்கொண்டு பூமியில் இப்போதும் பகிர்ந்து கொடுக்கிறார். இதினால் நமது இருதயம் சந்தோஷமடைந்து புகழ்ச்சிக்கும் ஸ்தோத்திரத்துக்கும் ஏவப்படவேண்டியது. நாம் அவர் ஆசீர்வாதத்தை விசுவாசத்தினாலே பற்றிக்கொண்டோமானால் அந்தப் பலன் நமக்குங் கிடைக்கும். அவர் போன வழியில் நாமும் போவோம். நம்மைக் கல்லறையை விட்டு வெளியே அழைக்கும் உலகமுடிவிலே நாம் சரீரமுடையவர்களாய் அவருடைய நித்திய இராச்சியத்தின் பங்காளர்களாவோம். அங்கே நமக்கு முந்திப்போன விசுவாசிகள் யாவரோடும் அவரை முகமுகமாய்ப் பார்ப்போம்.

ஜெபம். வெற்றிவேந்தரே! உமது சத்துராதிகளை எல்லாம் மேற்கொண்டு இந்தப் பூமியை விட்டு உமது பரம பிதாவண்டை திரும்பி அவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறீர். உம்மை நம்புகிற எங்களை இந்த உலகத்தில் விட்டுவிடாமல் உமது பிறகாலே இழுத்துக்கொள்ளும். தேவரீர் ஒருவரே எங்கள் நம்பிக்கையும் சந்தோஷமுமானவர். சுவாமி, ஆமென்.

நடபடி. 12, 1-11. அல்லது 1 கொரி. 3, 16-23. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். ஐந்தாம் வாரம், வியாழன்.

கர்த்தர் பரத்துக்கு ஏறின பண்டிகை.

ஷ. 76, 1-3.

கர்த்தர் அவர்களுடனே பேசினதற்குப் பிற்பாடு, பரமண்டலத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுப் பராபரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டு எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள், கர்த்தரோ துணையாய்க் கிரியையை நடப்பித்து, பின்செல்லும் அடையாளங்களினால் வசனத்தை ஸ்திரப்படுத்தினார். மாற். 16, 19. 20.

பராபரன் மகிழ்ச்சியோடும் கர்த்தர் எக்காள சத்தத்தோடும் ஏறினார். கர்த்தர் பரத்துக்கேறின இன்றையத் தினத்தில் நாம் பாடும் சங்கீதப் பாட்டு இது தான். இயேசுவின் பரமேறுதல் உலக இரட்சிப்பின் முத்திரையாம். அவர் தமது பிதாவின் மகிமைக்குத் திரும்பி அங்கே அவர் இராசாவாகப் பராபரனின்

வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். பராபரனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்றால் அவர் எங்கும் வியாபித்திருந்து சர்வ வல்லமையுள்ளவராய் உலகத்தை ஆளுகிறார் என்பது அர்த்தம். தமது மனுஷீக சுபாவத்தின்படியேயும் அத்தேவ மகிமையில் பங்கு பெற்றார். நமது பாவத்துக்காகச் சிலுவையில் அறையப்பட்டு நமது நீதிக்காக உயிரோடெழுந்த நமது சகோதரர் பராபரனின் வலது பாரிசத்தில் சர்வ வல்லமையுள்ளவரும் எங்கும் நிறைந்தவருமாய் வீற்றிருக்கிறார். அவர் உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கக் காணப்படும் விதமாய்த் திரும்ப வருமட்டும் அவர் நமக்குத் தென்படாமல் நமக்குத் தூரமாயிருக்கிறார். ஆயினும் காணப்படாதவிதமாய் இப்போது நமக்குக் கிட்ட வந்திருக்கிறார். தாம் வாக்குக் கொடுத்தபடி சகல நாட்களிலும் தமது வல்லமையோடும் ஒத்தாசையோடும் தமது ஆறுதலோடும் சமாதானத்தோடும் நம்முடனே இருக்கிறார்.

இப்படிப்பட்ட பரம நன்மைகளை நமக்குக் கொண்டுவருவதற்குச் சுவிசேஷம் கருவியாம். பரத்துக்கேறின கர்த்தர் தமது தாறுபதிகள் இந்தச் சுவிசேஷத்தை உலகமெங்குங் கொண்டு தமது இராச்சியத்தைப் பூமியின் கடைசிமட்டும் பரம்பப்பண்ண அவர்களுக்குக் கட்டளை தந்தார். தங்கள் பரம இராசாவுக்குக் கீழ்ப்படிந்து சீஷர்கள் போனார்கள். இன்றைக்கும் அவருடைய ஊழியர் போகிறார்கள். அவர் தங்களுக்கு வழியில் நேரிடும் பெரிய மோசங்களுக்குத் தங்களை விலக்குவாரென்றும் நரகத்தின் முகவாசல் திருச்சபையை மேற்கொள்ளாதபடி அதைக் காப்பாரென்றும் அவர்கள் அநுபோகத்தால் அறிந்திருக்கிறார்கள். உலகத்தின் சகல வல்லமையையும் அதின் பிரபுக்களையும் பார்க்க அவர் வல்லமையுள்ளவராயிருப்பதால் அவர் தமது தாறுபதிகளோடும் அவர்களைக்கொண்டும் தமது நோக்கத்தை நிறைவேற்றுகிறார்.

ஜெபம். பரம ஜெயவீரரே! வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் வாங்கிக் கொண்டு உமது திருச்சபையை ஆண்டு நடத்தி வருகிறீர். ஆண்டவரே, எங்களும் இந்தச் சபையில் சேர்ந்தோம். எங்களையும் உமது ஆசீர்வாதத்தாலும் ஆறுதலாலும் நிரப்பி உறுதியான நம்பிக்கையைத் தந்தருளும். சுவாமி, ஆமென்.

நடபடி. 12, 12-25. அல்லது சங். 47. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிக். ஐந்தாம் வாரம், வெள்ளி.

ஏ. 74, 4. 5.

இப்போதும் நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்திருந்தீர்களானால், கிறிஸ்து பராபரனுடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியின் மேலுள்ளவைகளை அல்ல, மேலானவைகளைச் சிந்தியுங்கள். கொலோ. 3, 1. 2.

நாம் கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகையை கொண்டாடுகிறோம். இயேசு ஏறெடுத்துக் கொள்ளப்பட்டுப் பராபரனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார். மேலானவைகளைத் தேடுங்கள் என்று இப்போது கர்த்தருடைய வசனம் நமக்குச் சொல்லுகிறது. வானம்பாடி மேலே எழும்பிப் பாடிக்கொண்டே தன் இருப்பிடங்களைத் தேடுவதையும், புஷ்பங்கள் பூமியினின்று முளைத்துச் சூரியனுக்கு எதிராகத் தம் இதழ்களை மலரச் செய்கிறதையும் கவனித்துப் பார். இரட்சிக்கப்பட்ட மனுப்புத்திரனாகிய நீ பூமியோடொட்டிக்கொண்டு அதின் சிற்றின்பத்திலே திருப்தியைத் தேடாதே. அது மரணத்தையும் அழிவையும் வருவிக்குமே தவிர பின்னொன்றையும் கொடாது. உன் இருதயத்தையும் கண்ணையும் ஏறெடு. நம்மை ஞானஸ்நானத்தின் மூலமாய் ஆட்கொண்டவர் மேலே இருக்கிறார். தாயையும் தகப்பனையும் பார்க்க உன்னை அதிகமாய்ச் நேசிக்கிறவர் உயர இருக்கிறார்.

அமைதான கூடாரமும் வெளிச்சத்திலுள்ள பரிசுத்தவான்கள் சுதந்தரமும் அங்கேதான் இருக்கிறது. விசுவாசத்தின் முடிவை அடைந்தவர்களுடைய அழியாத நித்திய ஐக்கியம் மேலே இருக்கிறது. நமது சகோதரனாகிய இயேசு மேலே இராவிட்டால் நாம் நாடவேண்டியதும் அங்கே இராது. சிரசாகிய கிறிஸ்து நமக்கு முந்தி உயரப் போயிருப்பதால் அவருடைய அவயவங்களாகிய நாமும் அவரை நோக்குவதுமாத்திரமல்ல, அவரை நாடி அவரைப் பின்தொடர்வதும் அவசியம்.

நீ நித்தியமாயிருக்க விரும்பும் இடத்தை உன் இருதயம் நாடவேண்டுமே. நாம் உலகில் பிழைத்திருப்பதால் உலகவேலையும் நமக்கு உண்டு என்பது மெய். ஆகிலும் நாம் பரம சிந்தையுடையவர்களாய்க் கர்த்தரை எப்போதும் நோக்கிப் பார்த்து இம்மைக்குரிய நமது வேலையையும் செய்வோமாக. நாம் பரம சிந்தையுள்ளவர்களாய்ச் சகல பாவ இச்சையோடும் அனுதினந் தோறும் போராடக்கடவோம். உயிர்த்தெழுந்தவர் பரத்துக்கேறினார் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். கிறிஸ்துவுடனே கூடப் பாவமாகிய கல்லறையைவிட்டு எழுந்து அவருடைய

உயிர்த்தெழுதற் பலத்தினால் புது ஜீவியம்பண்ணி மேலானவைகளைத் தேடுகிறவர்கள் தாங்கள் தேடுவதைக் கண்டுபிடிப்பார்கள்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! உமது பரம பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து எங்களை உம்மண்டைக்கழைக்கிறீர். நாங்கள் உமது வசனத்தைக்கேட்டு எங்கள் பரம சுதந்தரத்துக்கு ஏற்றபடி நடக்க எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி, ஆமென்.

... 13, 1-12. அல்லது 1 கொரி. 4, 1-13. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிக். ஐந்தாம் வாரம், சனி.

ஏ. 74, 4. 5.

மூன்றாம் பிரிவின் தொடர்ச்சி: இப்படியே அவர் பூமியிலுள்ள எல்லாத் திருச்சபையையும் வரவழைத்துக் கூட்டிச்சேர்த்துப் பரிசுத்தமாக்கி மெய்யான ஏக விசுவாசத்திலே இயேசுகிறிஸ்துவினிடத்திலே காப்பாற்றிக்கொண்டுவருகிறார்.

நீ தேவனுடைய பிள்ளையாகி விசுவாசத்தைக்கொண்டு உன் இரட்சகரில் நிலைத்திருக்கப் பரிசுத்தாவியானவர் உன்னையும் இன்னும் அநேகரையும் அழைத்துவருகிறார். அவரால் விசுவாசத்தை அருளப்பெற்று விசுவாசத்தில் காப்பாற்றப்படுகிற எல்லாரும் ஒரு பெரிய பரிசுத்த சபை ஆகிறார்கள். இச்சபை பூமியிலுள்ள மெய்யான திருச்சபையும் இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் பாவமன்னிப்பைப் பெற்று இதினால் நீதிமான்களும் பரிசுத்தவான்களுமாய் இருக்கிறவர்களின் கூட்டமுமாம். ஆண்டவர் தம்முடையவர்களை அறிகிறவரும் அவர்களால் அறியப்பட்டவருமாயிருக்கிறார். அவருடைய சபையை உண்மையாய்ச் சேர்ந்தவன் இன்னானென்றுசொல்ல நம்மால் முடியாது. ஏனெனில் விசுவாசம் இருதயத்திலிருக்கிறது. ஆகிலும் உன்னைப்பற்றி உனக்கு நிச்சயம் தெரியவேண்டும். நீ நேர்மையுள்ள இருதயத்தோடு நான் யார்போல் விசுவாசமாயிருக்கிறேன் என்று அறிவேன் என்று சொல்லக்கூடுமானால் நீ, விசுவாசிகளும் விசுவாசத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுமாகிய அந்தப் பெரிய சபையில் சேர்ந்திருக்கிறாய். அவர்கள் இப்போது இங்கும் அங்கும் சிதறுண்டவர்களாய்ப் பூமி எங்கும் வசித்தாலும் அவர்கள் எல்லாரும் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் மேய்ப்பராகவும் இரட்சகராகவும் வணங்கிக்கொள்ளுகிறார்கள். இப்படியிருக்க விசுவாசிக்கிற நாம் தனியாயும் ஒண்டியாயும் இருக்கிறோம் என்று முறையிடத் தேவையில்லை. நாம் எல்லாரும் இயேசுகிறிஸ்துவினுடைய சரீரத்

தின் அவயவங்கள், தமது சகோதரராகிய விசுவாசிகள் தம்மோடு விசுவாசித்துப் போராடிப் பரத்துக்கு வருவதைக் காத்திருக்கிறார்கள். நம்மெல்லாருடைய ஜீவியமும் இயேசுவோடு பராபரனில் மறைந்திருக்கிறது. நமது மேய்ப்பர், முழு உலகத்திலும் சிதறுண்டு கிடக்கும் தேவனுடைய பிள்ளைகள் அனைவரையும் புதிய பூமியில் ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாயிருக்கும் படி காணப்படும் விதமாய்க் கூட்டிச்சேர்ப்பார்.

ஜெபம். எங்களைத் திருச்சபையில் கூட்டிச்சேர்த்த தேற்றரவாளனே! [illegible] இயேசுவினிடத்தை எங்கள் இரட்சகரை அண்டிக்கொள்ளவும் அவரிடத்தில் சேரவும் முடியாது. உமது வெளிச்சத்தினால் எங்கள் இருதயங்களைப் பிரகாசிப்பித்து எங்கள் இரட்சகரின் மகிமையை எங்களுக்குக் காண்பித்துத் திருச்சபையின் ஐக்கியத்தை எங்களுக்குத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

லூ. 18, 13-43. அல்லது 1 கொரி. 4, 14-21. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். ஆறும் வாரம், ஞாயிறு.

ஞ. 87, 5. 6.

பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்தியத்தினுடைய ஆவி என்கிற தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் சாட்சி கொடுப்பீர்கள்; ஏனெனில் ஆதிமுதலாய் என்னுடனே கூட இருந்தீர்கள். யோவா. 15, 26. 27.

பரத்துக்கேறினதோடு இயேசு இரட்சகரின் வேலை முடிந்து போகவில்லை. அவர் சிலுவையில் அறையப்பட்டவரும் உயிர்த்தெழுந்தவருமாய் உலகத்திலுள்ள சகல பாவிகளுக்கும் செய்ததை இப்போது உயர்த்தப்பட்டவராய் முழு உலகத்தாரிடத்திலும் ஒவ்வொரு மனிதனிடத்திலும் வல்லமையாய் நடப்பிக்கிறார். இதினாலே, தாம் இரட்சகரென்று எல்லாப் பாவிகளுக்கும் விளங்கப்பண்ணச் சித்தமாயிருக்கிறார். தேவவசனப் பிரசங்கத்தை விசுவாசத்தோடு கேட்கிறவர்களை அவர் தமது பாக்கியமான வாசஸ்தலத்திற்குக் கூட்டிக்கொண்டு போவார். உயர்த்தப்பட்ட கர்த்தர் தமது இரட்சிப்பின் வேலையை நிறைவேற்றக் கருவியாகக் கொண்டது சுவிசேஷப் பிரசங்கமே. துவக்க முதற்கொண்டு என்னிடத்திலிருந்தவர்களாகிய நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்களென்று அவர் தமது சீஷருக்குச் சொன்னார்.

சிலுவையைப் பற்றிய சுவிசேஷ செய்தி மனித கட்டுப்பாடல்ல. அது அநேக கண்கண்ட சாட்சிகள் நடுவில் நடந்த சம்பவங்களின் சரித்திரமாகும். அது எவனும் மறுக்கக்கூடாத சம்பவம். இதைத் தெரிவிக்கும் செய்தி உண்மையுள்ள மனுஷர் மூலமாய் எழுதப்பட்டு, தெரிய வருவதுமல்லாமல் நமது இருதயத்தில் அதின் தெய்வீக பெலன் விளங்குகிறது. மனுஷ வார்த்தையைக்கொண்டு சத்தியத்தின் ஆவியாகிய தேற்றரவாளன் சாட்சி பகருகிறார். இவ்வாவியானவர் நமது மனதையும் ஆவியையும் விடப் பெரியவர். தங்கள் புத்தியை நம்பி இந்த வசனத்தோடு எதிர்த்து நிற்கிற மனுஷரின் எல்லா தடைகளையும் நீக்க அவர் வல்லவர். பாவி பராபரனுடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதபடி தன் இருதயத்தை அடைத்துக்கொள்ளும் இருப்புத்தாழ்ப்பாள்களை எல்லாம் உடைக்க அவருக்குச் சக்தியுண்டு. இப்படிச் சுவிசேஷப் பிரசங்கம் இரட்சிப்புக்குத் தகுந்த சாதனம் என்பதற்குச் சந்தேகம் இல்லை. இதற்கெதிராக அவிசுவாசியின் சாக்குப்போக்கு நிலைக்காது. உன்னிடத்திலும் உண்மையுள்ள கர்த்தர் உன் சிறுவ முதல் வல்லமையுள்ள தமது வசனத்தைக் கொண்டு வேலை செய்து வந்திருக்கிறார். அவருடைய கிருபை உன்னிடத்தில் வீணாய்ப் போகாதபடிக்குப் பார்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! நாங்கள் உம்மைச் சரியாய் அறிவதற்குப் பரிசுத்தாவியை எங்களிடத்தில் அனுப்பினீர். நாங்கள் அவருடைய சாட்சிக்குச் செவிகொடுத்து உம்மை உண்மையாய் விசுவாசித்து நித்திய ஜீவனை அடைய எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி, ஆமென்.

மத். 13, 44-52. அல்லது சங். 20. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பின். ஆறும் வாரம், திங்கள்.

ஞ. 76, 5. 6.

அப்போது இயேசு சேர்ந்து அவர்களுடனே பேசிச்சொன்னதாவது: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போய், சகல சாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கற்பித்தவைகளையெல்லாம் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள். இதோ, நான் லோகமுடிவுபரியந்தம் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். மத். 28, 18-20.

கர்த்தர் தமது சீஷருக்குத் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியில் நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்களென்று சொல்லியிருந்தார். இன்றைக்கு அவர் தமது சீஷ

ருக்கு ஒரு உத்தியோகத்தைக் கொடுக்கிறார். அது எத்தனை பணி வையான உத்தியோகம் பாருங்கள். இந்த உத்தியோகத்தை அவர்கள் எங்கும் செய்துமுடிக்க வேண்டும். அதினால் உலகத்தின் சகல சாதிகளும் ஆண்டவரைத்தேடி அவரிடம் வரவேண்டும். ஆகிலும் கர்த்தர் இப்பெரிய ஊழியத்தைக் கல்லாத அற்ப செம்படவருக்குக் கொடுத்தார். யாவராலும் அவமதிக்கப்பட்ட இந்தச் செம்படவரான சீடர் உயிர்த்தெழுந்த நாளிலும்கூட மனந் சோர்ந்து அற்ப விசுவாசிகளாயிருந்தார்கள். இவர்களுக்கு உயிர்த்தெழுந்த இரட்சகர் தரிசனையாகி யூதருக்கு இடறலும் புறச்சாதியாருக்குப் பைத்தியமுமான சுவிசேஷத்தை உலகத்தை ஜெயிக்கும் ஆயுதமாகக் கையில் கொடுத்தார். இவ்வாறு இவ்வூழியம் பெலவீன மனிதர் கையில் ஒப்புவிக்கப்பட்டிருந்தும், அதற்குப் பெலனும் சித்தியும் மனுஷ பெலத்தினாலும் ஞானத்தினாலும் உண்டாகிறதில்லை. இதோ, நானே சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று வாக்களித்தவரது பலத்தை நம்பிச் சீஷர் தங்கள் வேலையை ஆரம்பிக்கலாம். இவ்வாக்கை யளித்த இயேசுகிறிஸ்துவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த வாக்கை நம்பிச் சாக்ஷி பகருகிறவர்களைக்கொண்டு ஜாதிகளின் இருதயக் கதவுகளைத் தட்டுகிறார். இப்படி அவருடைய வல்லமை தமது பெலவீன ஊழியர் மூலமாய் மனுஷரை ஆத்துமத்தில் வேலைசெய்கிறது.

நீங்கள் போங்கள் என்ற கட்டளை இயேசு ராஜாவின் ஜனமும் வீட்டாருமாயிருக்கிற எல்லாருக்கும் அடுத்தது. கர்த்தருடைய பெரிய நாள் சீக்கிரம் வரும்படியாக நம்மில் ஒவ்வொருவனும் ஜெபம்பண்ணித் தன் நிலைமைக்கும் வரங்களுக்கும் ஏற்றபடி உழைக்கக் கடவான்.

ஜெபம். எங்கள் பரம இராசாவே! உமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உமது சீஷர்போய்ப் பூமி எங்கும் உமது சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருகிறார்கள். அவர்கள் சத்தம் எங்கும் கேட்கிறது. கர்த்தாவே, சீக்கிரம் முழுவுலகமும் உம்மைப்பணிந்து உமக்கு ஊழியம் செய்வதற்குக் கிருபை புரிந்தருளும், சுவாமி, ஆமேன்.

லூ. 14, 1-28, அல்லது 1 கொரி. 5, 1-13, வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிக். ஆறும் வாரம், செவ்வாய்.

ப. 87, 8, 9.

ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவன் அல்ல என்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்

படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்களுடையதையும் கைக்கொள்ளுவார்கள். ஆனால் அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியால் என் நாமத்தின் நிமித்தமே இவைகளை எல்லாம் உங்களுக்குச் செய்வார்கள். யோவா. 15, 20. 21.

கிறிஸ்துவின் இராச்சியம் இவ்வுலகை மேற்கொண்டே வருகிறது. இப்படிக் கர்த்தர்தாமே வாக்களித்தார். அதை நாளது பரியந்தம் நிறைவேற்றி வருகிறார். கிறிஸ்துவின் இராச்சியம் அவர் சிலுவையில் பாடுபட்டதினால் ஸ்தாபகமாயிற்று. அது இரத்த சாட்சிகளின் கல்லறையின்மேல் அஸ்திவாரப்பட்டு விருத்தியாகி வருகிறது. அது நாளதுபரியந்தம் புறச்சாதிகள் வசிக்கும் தேசங்களிலும் பெருகி வருகிறது. உலகத்தாரால் விரோதிக்கப்பட்டாலும், அது அநேகம் ஆத்துமாக்களைப் பரம்பிக்கொண்டே வருகிறது. அதற்கு நேரிடும் துன்பங்கள் நம்மை அதைரியப்படுத்துமாறு ஒருபோதுமில்லை. சபைக்கு நேரிடும் துன்பங்கள் நமக்கு ஆச்சரியமாகத் தோன்றுது. கர்த்தர் அதை நமக்கு முந்தியே சொன்னார். இது நமக்கு விபரீதமும் அல்ல. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. கர்த்தராகிய இயேசு பிதாவினால் அனுப்பப்பட்டவர். உலகம் இவரை அனுப்பினவரை அறியாது. அவரைத் துன்பப்படுத்தினவர்கள் அவருடைய தூதரையும் துன்பப்படுத்துவார்கள். லோகத்தின் பிரபு தன் சிம்மாசனத்தையும் இராச்சியத்தையும் கொள்ளையிட மனதாயிருக்கிறவர்களுக்கு விரோதமாகத் தன் சேனையை எல்லாம் கூட்டிச்சேர்ப்பது இயல்புதான். ஆதலால் போராட்டமும் துன்பமும் ஆண்டவருடைய சபைக்கு இவ்வுலகில் உண்டாவது தேவ நியமம்.

இத்துன்பம் பலவீனத்தின் அடையாளமென்றும் அது கர்த்தருடைய ஜெயத்தைச் சந்தேகத்துக்குட்படுத்துகிறதென்றும் நாம் நினைக்கக் கூடாது. சிலுவையிலே அல்லவா ஆண்டவர் பிசாசையும் உலகத்தையும் மரணத்தையும் ஜெயித்தார். அவருடைய சிலுவை இன்றைக்கும் ஜாதிகளை மேற்கொள்ளும். இயேசுவின் சபையும் நாமும் சுமக்கவேண்டிய எல்லாச் சிலுவையையும் பற்றி அப்படியே சொல்லலாம். சிலுவையிலே நமக்கும் பெலன் இருக்கிறது. சிலுவையைச் சுமந்து உலகத்தை ஜெயித்தவரை நாம் பின்பற்றுகிறபடியால் துன்ப வழி சிம்மாசனத்திற்குப் போகும் வழி என்று நாமும் களிகூர்ந்து [illegible] நாள் வரும்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! உம்மை [illegible] கிற நாங்கள் உலகத்தில் பல துன்பங்களை அனுபவிப்பது [illegible] ஆண்டவரே, நாங்கள் நம்பிக்கையற்றுப்போகாமல் உம்மைக் கெட்டியாய்ப்

பிடித்துப் பின்தொடர எங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

நட. 15, 1-35. அல்லது 1 கொரி. 6, 1-20. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். ஆறும் வாரம், புதன்.

ஞ. 211, 5. 6.

நீங்களோ இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். இதோ, நான் என் பிதாவின் வாக்குத்தத்தத்தை உங்கள்மேல் அனுப்புகிறேன்; நீங்களோ உன்னதத்திலிருந்து இறங்கும் பலத்தால் தரிப்பிக்கப்படுமட்டும் எருசலேம் பட்டணத்தில் தங்கியிருங்கள் என்றார். லூக். 24, 48. 49.

கர்த்தர் சீஷருக்குக் கொடுத்த பெரிய வேலைக்கென்று வானத்திலிருந்து இறங்கும் பெலனை அவர்கள் பெறுமட்டும் எருசலேமில் காத்திருக்கவேண்டும். அவர்கள் ஒருமனப்பட்டு ஆண்டவரின் வசனத்தினாலும் ஜெபத்தினாலும் தங்களைப் பெலப்படுத்திக்கொண்டு காத்திருந்தார்கள். அவர்களுடைய நம்பிக்கைக்கு ஏற்ற மகிமையான பலன் அவர்களுக்குக் கிடைத்தது. எந்த வழியிலும் எந்த வேலையிலும் ஆண்டவருக்குக் காத்திருப்பதும், விசுவாசக் கண்களால் அவருடைய வாக்குத்தத்தங்களைப் பார்ப்பதும் இடைவிடாது ஜெபத்தில் கைகளை அவருக்கு நேராக எடுப்பதும், அவரிடத்திலிருந்து மாத்திரம் பலத்தையும் ஜெயத்தையும் பெற்றுக்கொள்வதும் கிறிஸ்தவர்களுடைய கடமையும் சிலாக்கியமுமாம்.

ஆகிலும் கண்ணுறக் காணாமல் இருதயத்தில் விசுவாசிக்க வேண்டியது அவசியம். கர்த்தர் தமது வசனத்தை நம்பச்சொல்லுகிறார், அவர் அதிககாலம் உன்னைக் காத்திருக்க வைத்தாலும் சந்தேகம் அடைய வேண்டாம். அவர் நம்மைச் சோதித்து நாம் வேண்டிக்கொண்டதைக் கொடாமல் வேறொன்றை நமக்குச் செய்தாலும், நாம் நம்பிக்கையற்றுப் போகக்கூடாது. நமது பொல்லாத இருதயம் அவருடைய சித்தத்திற்கு அடங்கும்படியாக நாம் பின்வாங்காமல் போராடவேண்டியது. கர்த்தர் உண்மையாயிருந்து தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுகிறபடியால் [illegible]னே ஜெயமடையாவிட்டாலும், அவருடைய ஒத்தா[illegible]த்திருக்கவேண்டும். துன்பத்தில் அவருக்குக் க[illegible]னுக்கு அவர் நித்திய ஜீவ கிரீடத்தைக் கொடுப்பார். [illegible]ருடைய ஒத்தாசைக்குக் காத்திருந்து ஒருவனும் வெட்கப்பட்டுப் போனதில்லை. தன் வருத்தத்தைக் கர்த்தருக்கு

ஒப்புக்கொடுத்த ஒவ்வொருவனும் அவரால் நன்மை பெற்றதேயன்றி ஏமாந்துபோனதில்லை. நமது நினைவுகளையும் வழிகளையும் பார்க்கக் கர்த்தருடைய நினைவுகளும் வழிகளும் வித்தியாசமாயிருந்தாலும், கர்த்தருடைய நினைவுகள் சுத்த சிநேகமும் சமாதானமுமாயிருக்கிறதென்று நாம் அறிந்துகொள்வோம்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது சீஷரை ஆற்றித் தேற்றப் பிதாவினிடத்திலிருந்து பரிசுத்தாவியானவரை அனுப்பித் தேவரீர் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினீர். எங்களுக்கும் இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். சுவாமி, ஆமேன்.

நடபடி. 15, 36; 16, 10. அல்லது 1 கொரி. 7, 10-17. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். ஆறும் வாரம், வியாழன்.

ஞ. 211, 7. 8.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து என் மீறுதல்களை எல்லாம் நீக்கும். சுத்த இருதயத்தை எனக்குச் சிருஷ்டியும், பராபரனே; நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதிதாய் உண்டாக்கும். உம்முடைய முகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலிரும். உம்முடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை எனக்குத் திரும்பக் கட்டளையிடும்; உற்சாகமான ஆவி என்னைத் தாங்கட்டும். சங். 51, 11-14.

பரிசுத்தாவியின் பண்டிகை சமீபமாயிருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளில் சீஷருடைய நம்பிக்கை நிறைவேறிற்று. தேவாவியானவர் நம்மண்டைக்கும் வந்து நம்மை அளவற்ற ஆறுதலினாலும் சமாதானத்தினாலும் சந்தோஷத்தினாலும் நிரப்பச் சித்தமாயிருக்கிறார். இந்த மேன்மையான விருந்தாளிக்கு உன் இருதயத்தின் வாசல்கள் திறந்திருக்கிறதா? எல்லா வரங்களுக்கும் ஊற்றாகிய பரிசுத்தாவி என்கிற பெரிய வரத்தைப் பெற நீ வாஞ்சித்தால் உன் இருதயத்தை அவருக்குத் திற. பாவமன்னிப்பினால் உண்டாகும் சமாதானமே அவரளிக்கும் வரம். தேவனுடைய பிள்ளைகள் மாத்திரம் தங்கள் பிதாவை நம்பி எல்லாப் பாடுகளையும் சந்தோஷத்தோடு சகித்து அவருடைய வெளிச்சத்தில் நடக்கக் கூடியவர்கள். ஆகையால் பரிசுத்தாவி உன்னிடத்திலும் வரவேண்டுமானால் தாவீதைப் போல் நீ உன்னையே சோதித்துப் பார். உன் பாவம் எவ்வளவு பெரிதென்றும் உன் இருதயமும் கைகளும் எவ்வளவு கறைப்பட்டிருக்கிறதென்றும் அறிந்துகொள். தாவீ

னைப் போல் நீ உன் முழங்கால்களை முடக்கி, ஆண்டவரே, என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து என் மீறுதல்களையெல்லாம் நீக்கும் என்று மனஸ்தாபத்தோடே வேண்டு. அப்போது உன் இருதயமும் பெந்தெக்கொஸ்தே விருந்தாளிக்கும் அவர் அருளும் கிருபைக்கும் திறந்து இருக்கும். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை அவர் புறக்கணிக்க மாட்டார்.

ஜெபம். எங்களைப் பரிசுத்தமாக்கி ஆற்றித் தேற்றும் தேவாவியானவரே! உம்மால் திருச்சபையில் சேர்ந்த நாங்கள் உமக்காக எங்கள் இருதயங்களைச் சோதித்துச் சுத்திகரிக்க எங்களுக்கு ஒத்தாசை புரியும். எங்கள் இருதயமும் உமக்கு ஆலயமாயிருக்க அதை உமது வெளிச்சத்தால் பிரகாசிப்பித்தருளும், சுவாமி, ஆமென்.

நடபடி. 16, 11-40. அல்லது 1 கொரி. 7, 23-40. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். ஆறும் வாரம், வெள்ளி.

ச. 122, 1. 2.

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டுக் கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டுச் சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே நம்முடைய ஆவியைத் தந்து உங்களை நமது கட்டளைகளில் நடக்கவும் நமது நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவோம். எசே. 36, 26. 27.

பரிசுத்தாவியின் பண்டிகை சமீபமாயிருக்கிறது. மேற்சொன்ன தீர்க்கதரிசன வாக்கியம் பெந்தெக்கொஸ்தே நாளில் நமக்குக் கிடைக்கும் மேன்மையான அநுக்கிரகத்தைக் குறித்துச் சந்தோஷமுண்டாக நம்மை ஏவுகிறது. நாம் நமது ஆவியை உங்களுக்குத் தருவோம் என்று நமது வாக்கியம் சொல்லுகிறது. தேவாவியானவர் ஏற்கனவே பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்தார். தீர்க்கதரிசிகள் தேவ வசனத்தை மனுஷருக்குச் சொல்லவும், வரப்போகிற இரட்சகரைக் குறித்து அவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி தீர்க்கதரிசிகளைப் பிரகாசிப்பித்தவர் இந்த ஆவியானவர்தான். அந்த காலத்தில் தேவ கற்பனைகளையும் முறைகளையும் செம்மையாய்க் காப்பாற்றுகிறதற்கும் இப்படி இரட்சகருக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறதற்கும் அந்தப் பரிசுத்த மனிதருக்குப் பெலத்தையும் தைரியத்தையும் கொடுத்தவர் இந்த ஆவிதான். ஆகிலும் அவர் அக்காலத்தில் காலையில் உதித்து மலையின் உச்சியை மாத்திரம் பிரகா

சிக்கும் சூரியனைப் போலிருந்தார். பெந்தெக்கொஸ்தே நாள் முதல் பராபரனுடைய ஆவியென்ற சூரியன் வானத்தின் மத்தியிலிருந்து, சகல பள்ளத்தாக்குகளிலும் இருளடைந்த மூலைகளிலும் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு இருதயத்திலும் பிரகாசிக்கிறார். உனக்கும் ஞானஸ்நான நாள் இப்படிப்பட்ட பெந்தெக்கொஸ்தே நாளாயிருந்தது. நீ உன் இரட்சகரை அறிந்து விசுவாசித்தால் அவரைப் பற்றிக்கொள்ளும்படி அப்போது கர்த்தருடைய ஆவி உன் ஆவியைப் புதிதாக்குகிறார். நீ தேவனுடைய பிள்ளை. அவருடைய கட்டளைகளில் நடந்து அவர் நியாயங்களைக் கைக்கொண்டு அவற்றின்படி செய்ய அவர் அப்போது உன் இருதயத்தையும் புதிதாக்குகிறார். உன்னிடத்திலும் பெந்தெக்கொஸ்தே ஆவி தங்கி உன்னை நீதியின் பாதையில் நடத்தச் சித்தமாயிருக்கிறார். ஆதலால் அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சத்தத்தைக் கேட்டுப் பின்தொடர்ந்து வா.

ஜெபம். மெய்யான தெய்வமாகிய பரிசுத்தாவியானவரே! உம்மாலே வானமும் பூமியும் பிழைக்கிறது. தேவரீர், உமது சுவாசத்தினால் எல்லாவற்றையும் தாங்குகிறீர். ஆண்டவரே, எங்களையும் ஆட்கொண்டு உமது சித்தத்தின்படி நடத்தியருளும், சுவாமி, ஆமென்.

நடபடி. 17, 1-34. அல்லது 1 கொரி. 8, 1-13. வாசிக்கவும்.

உயிர்த். பண்டி. பிந். ஆறும் வாரம், சனி.

ச. 122, 3. 4.

மூன்றாம் பிரிவின் தொடர்ச்சி: அவர் இந்தத் திருச்சபையில் எனக்கும் விசுவாசமுள்ள யாவருக்கும் தினந்தோறும் சகல பாவங்களையும் ஐசுவரியமாய் மன்னித்துக்கொண்டு கடைசி நாளிலே என்னையும் இறந்துபோன யாவரையும் எழுப்பி எனக்கும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற யாவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுப்பார். இது உண்மையான வார்த்தை.

விசுவாசிகளின் கூட்டத்தைச் சேர்ந்திருப்பது எவ்வளவு மேன்மை! இக்கூட்டம் பொட்டும் குறையும் அறியாத ஆஸ்தியால் நிரப்பப்பட்ட பொக்கிஷசாலைபோல் இருக்கிறது. இப்பொக்கிஷசாலைக்கு எசமான் பரிசுத்தாவியானவர்தான். இவர் லோபித்தனம் பண்ணாமல் நம்மில் ஒவ்வொருவனுக்கும் என்றும் அழியாத செல்வத்தைக் கொடுக்க விரும்புகிறார். அவர் அளிக்கும் ஆஸ்தி பாவமன்னிப்பு, ஜீவன், மோட்சம் என்பவைகளே.

இந்த ஆஸ்தியில் பாவமன்னிப்பு முதன்மையானதும் மகா முக்கியமானதுமாம். தினந்தோறும் அநேகம் பாவங்களைச் செய்து, ஆக்கினைக்கே பாத்திரராயிருக்கிற நமக்குப் பாவமன்

னிப்பைவிட அதிக தேவையானதொன்றுமில்லை. பாவமன்னிப்புண்டென்பது நமக்குப் பெரிய ஆறுதலும் நம்பிக்கையுமாயிருக்கிறது. நாம் விசுவாசித்தால் பரிசுத்தாவியின் மூலமாக இந்தப் பாவமன்னிப்பு நமக்குத் தினந்தோறும் கிடைக்கும். விசுவாசத்தினால் கிறிஸ்து நமது இரட்சகரும் பரிசுத்தாவியானவர் நமக்குப் பரிந்து பேசுகிறவரும் ஆவார்கள். குமாரன் தமது இரத்தத்தினால் கழுவிப் பரிசுத்தாவியானவரால் பரிந்து பேசப்பெற்றவர்களைப் பராபரன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கமாட்டார்.

மன்னிப்பு எங்கேயோ அங்கே ஜீவனுமுண்டு. ஜீவனாயிருக்கிறவரும் ஜீவனைக் கொடுக்கிறவருமாகிய பராபரனை விட்டு நம்மைப் பிரிக்கிறது இன்னமும் மன்னிக்கப்படாத பாவம் தான். பாவம் மன்னிக்கப்படும்போது நமக்கும் பராபரனுக்கும் நடுவிலுள்ள தடுப்புச் சுவர் விழுந்துபோகும். நாம் அவருடையவர்களும் அவர் நம்முடையவருமாயிருப்பதால் அவர் ஜீவன் நமது ஜீவன் ஆகும். நாம் சரீரத்தின்படி செத்தாலும் நமது மரணம் நித்திரையாக மாற்றப்படுகிறது. நாம் பிதாவின் கையில் படுத்துத் தூங்கி மரித்தோர் எழுந்திருக்கும்போது பிதாவின் வீட்டில் நிறைந்திருக்கக் கடைசி நாளில் எழுந்திருப்போம் என்கிற திடநம்பிக்கையோடு கர்த்தருக்குள் நித்திரையடைவோம்.

நித்திய ஜீவனுக்கென்று எழுந்திருந்து நாம் அவருடைய பாக்கியமான ஐக்கியத்தில் பங்குபெறுவோம். இப்பேர்ப்பட்ட [illegible] செல்வத்தைப் பரிசுத்தாவியானவர் நமக்குக் கொடுக்க வேண்டுமானாலும் நாம் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும்.

ஜெபம். பரமபிதாவே! எங்களை உமது பரிசுத்தாவியால் பரிசுத்தமாக்கி மெய்யான விசுவாசத்தில் காப்பாற்றி வருகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே, நாங்கள் இந்த விசுவாசத்தில் மரணபரியந்தம் நிலைத்திருந்து எல்லாப் பரிசுத்தவான்களோடும், நித்திய ஜீவனுக்கென்று எழுந்திருக்க எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமேன்.

நடபடி. 18, 1-17, அல்லது 1 கொரி. 9, 1-14. வாசிக்கவும்.

பரிசுத்தாவியின் பண்டிகை, முதல் நாள்.

சங். 80, 1, 2.

பெந்தெகொஸ்தே நாள் நிறைவேறுகையில், எல்லாரும் ஏகமனதாய் ஒருமித்திருந்தார்கள். அப்பொழுது அடித்து வருகிற பலத்த காற்றைப் போல ஒரு முழக்கம் வானத்திலிருந்துண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீட்டை முழுதும் நிரப்பிற்று. அப்பொழுது அக்கினியின் நாக்குகள் போலான பிரிக்கப்பட்ட நாக்குகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்களில் ஒவ்வொருவன் மேலும் வந்திருந்தது, எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்

பட்டு, ஆவி தங்களுக்கு விளம்பக் கொடுத்தபடி மறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். நடபடி. 2, 1-4.

இன்றைக்குப் பெந்தெகொஸ்தே பண்டிகை. இது ஒரு பெரிய சந்தோஷத் திருநாள். கர்த்தர் தம்முடையவர்களுக்குக் கொடுத்த வாக்கை இந்நாளில் நிறைவேற்றினார். விசுவாசத்தோடு அவருக்காகக் காத்திருக்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட மாட்டார்கள் என்றும், உண்மையுள்ள ஆண்டவர் நமக்குத் தூரமானவர் அல்ல என்றும் இப்பண்டிகை நமக்குத் தெரிவிக்கிறது. நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடாமல் உங்களண்டைக்குத் திரும்ப வருவேன் என்று ஆண்டவர் தம்முடைய சீஷர்களை ஆற்றித்தேற்றுகிறார். பெந்தெகொஸ்தே ஆவியைக் கொண்டு அவர் தாமே வந்து லோகமுடிவு மட்டாகச் சகல நாட்களிலும் நம்முடனே கூட இருக்கிறார். அவர் வரும்போது வெறுங்கையோடு வருகிறதில்லை. முதல் பெந்தெகொஸ்தே நாளில் அவருடைய வருகையோடு சம்பந்தப்பட்ட அடையாளங்களைப் பார். ஜீவனுக்கு அடையாளமான காற்று முழக்கத்தைக் கவனி. மரணம் ஒருபோதும் தொடாத நித்திய ஜீவனை இயேசு தமது ஆவியைக்கொண்டு உலகத்திற்கு அருளிச்செய்கிறார். சீஷர் தலைமேல் தோன்றும் அக்கினிக் கொழுந்தைப் பார். அவர் பாவிகளுக்கு வானத்திலிருந்து வெளிச்சம் கொண்டுவருகிறார். இந்த வெளிச்சம் இருளடைந்த இருதயங்களைச் சத்தியத்தினால் பிரகாசிப்பித்துக் குளிர்ந்துபோன இருதயங்களைச் சிநேகத்தினால் அனலாக்கிப் பரிசுத்த அக்கினிபோல அசுத்த இருதயங்களைச் சுத்திகரித்துப் பாவமென்ற அழுக்கை நம்மை விட்டு நீக்குகிறது.

ஆண்டவர் இவ்வாறு ஏற்படுத்தின அவர் சபையை நரகவாசல்கள் மேற்கொள்ளா. இதுவே நமக்குப் பெந்தெகொஸ்தே சந்தோஷம். அவருடைய உண்மை நமது அடைக்கலம். அவருடைய ஜீவன் நமது ஜீவன்.

ஜெபம். பரிசுத்தாவியானவரே! உமது வல்லமையினால் இந்த உலகத்தில் தேவ குமாரனுக்காக ஒரு சபையைக் கூட்டிச் சேர்த்து எங்களையும் அதற்கு வரவழைத்தீர். ஆண்டவரே, உம்மை அண்டின நாங்கள் எங்கள் இரட்சகரை நன்றாய் அறிந்துகொண்டு அவரை உறுதியாய் நம்புவதற்கு எங்கள் இருதயங்களைப் பிரகாசிப்பித்தருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி. 18, 18-28. அல்லது சங். 87 வாசிக்கவும்.

பரி. ஆவியின் பண்டிகை, இரண்டாம் நாள்.

சங். 80. 3. 4.

பராபரன் தம்முடைய ஒரேபேறான குமாரனை, அவர் பேரில் விசுவாசிக்கிறவன் எவனும் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடைய

தற்காக, தந்த அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார். பராபரன் தம்முடைய குமாரனை லோகத்தில், லோகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அனுப்பாமல், அவரால் லோகம் இரட்சிக்கப்படுவதற்காக அனுப்பினார். அவர் பேரில் விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ பராபரனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசியாமல் போனபடியினாலே, அப்போதே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறான், யோவா. 3, 16-18.

மேற்படி வாக்கியம் பெந்தெகொஸ்தே பண்டிகை நாள் முதல்கொண்டு பூமியின் எல்லைகள் பரியந்தம் பரிசுத்தாவியின் வல்லமையால் பிரசங்கிக்கப்படுகிறது. அக்காலத்தில் செய்தது போல் அது இப்போதும் பாவிகளின் இருதயத்தை மேற்கொண்டு கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்தித் தேவ இராச்சியத்தை மென்மேலும் கட்டுகிறது. பராபரன் பாவிகளைச் சிநேகிக்கிறார் என்பதே திகில் அடைந்த மனச்சாட்சியை அமர்த்திப் பிரயாசப்பட்டுப் பாரம் சுமந்த இருதயங்களை ஆற்றித்தேற்றக் கூடிய செய்தி இதுதான். நீ கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையவேண்டுமென்று அந்தப் பிரசங்கம் சொல்லுகிறது. கல்லறைக்கும் நரகத்துக்கும் அஞ்சும் சஞ்சலத்துள்ள ஆத்துமங்களை அமர்த்தி மரணபயத்தை நீக்கிச் சமாதானப்படுத்தக் கூடியது இதுதான். இரட்சிப்புக்காகவும் நித்திய பாக்கியத்திற்காகவும் உண்மையாய்க் கவலைப்படுகிறவர்கள் இப்பிரசங்கத்தைக் கேட்டு விசுவாசிக்க வேண்டும்.

இந்தப் பிரசங்கத்தால் ஆறுதல் மாத்திரமல்ல நம்பிக்கையும் உண்டாகிறது. பராபரன் தமது குமாரனைக் கொடுப்பதாக ஆதியிலே வாக்களித்து அந்த வாக்கை இப்போது நிறைவேற்றிப் பரிசுத்தாவியைக் கொண்டு இரட்சிப்பின் ஆலோசனையை உலகத்தில் நிறைவேற்றுகிறார். இப்பிரசங்கத்தைக் கேட்கும்போது நீ சாக்குப்போக்குச் சொல்லாதே. இப்பிரசங்கத்தை விசுவாசியாதவன் அப்போதே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டான். இப்பிரசங்கத்தைத் தள்ளுகிறவன் தேவ சிநேகத்தைக் காலால் மிதித்துத் தேவ சத்தியத்தைப் பொய்யாக்கி அதினால் தனக்குத் தானே நியாயத்தீர்ப்பைக் குவித்துக்கொள்ளுகிறான். ஆகையால் நீ இப்பிரசங்கத்தைக் கேட்கும் போதெல்லாம் பரிசுத்தாவிக்காக ஜெபித்துக்கொள்.

ஜெபம். பரம வெளிச்சமே! நாங்கள் இயேசு கிறிஸ்துவை அறிந்து உண்மையுள்ள இரட்சகராகிய அவரிலே நிலைத்திருக்க எங்களைப் போதியும். நாங்கள் நித்திய ஆக்கினைக்குத் தப்பும்படி எங்களைக் குணப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி. 9, 1-22. அல்லது 1 கொரி. 9, 15-27, வாசிக்கவும்.

பெந். பண்டி. பிந். செவ்வாய்.

ஆ. 80, 5. 6.

வேறுஅநேக வார்த்தைகளாலும்: இந்த மாறுபாடான சந்ததியை விட்டு உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்று திடச்சாட்சியாய் எச்சரித்துப் புத்திசொன்னான். ஆகையால் அவன் வார்த்தையை நல்மனதாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்று, ஏறக்குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள் அன்றையத்தினம் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அன்னியோன்னியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். ஆத்துமா யாவருக்கும் பயம் உண்டாயிற்று. அநேகம் அற்புதங்களும் அடையாளங்களும் அப்போஸ்தலராலே செய்யப்பட்டது. ஆனால் எல்லா விசுவாசிகளும் ஒருமித்திருந்து, எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். நடபடி. 2, 40-44.

அப்போஸ்தலனது பிரசங்கமும் புத்திமதியும் வேண்டுதலும் அநேகருடைய இரட்சிப்புக்கென்று பலித்தது. மூவாயிரம் ஆத்துமாக்கள் அடங்கிய ஒரு கிறிஸ்தவ சபை சேர்க்கப்பட்டது. எருசலேமில் ஏற்பட்ட இந்த முதல் சபை எல்லாக் காலத்திலும் உள்ள கிறிஸ்தவ சபைகளுக்கு நல்ல முன்மாதிரி. அவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் தேவ வசனத்தைக் கேட்டு ஏற்றுக்கொண்டு அதில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அது மாத்திரமல்ல, அவர்கள் கர்த்தருடைய பந்திக்கும் சேர்ந்து கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் சிநேகத்திற்கும் வேண்டிய பலனை வானத்திலிருந்து பெற்றுக்கொண்டு, ஒருவருக்காக ஒருவரும் ஜெபித்தார்கள். தற்காலத்திலிருப்பது போல் பேர்க்கிறிஸ்தவர்களும் வழக்கக் கிறிஸ்தவர்களும் அக்காலத்தில் அதிகம் இல்லை. தேவ பயம் எல்லா ஆத்துமாக்களையும் பிடித்தது. சகோதர சிநேகம் என்ற பரிசுத்த அக்கினி எல்லா இருதயத்திலும் மூண்டது. விசுவாச ஒருமையும் ஐக்கியமும் சிநேகமும் சபையின் பரிசுத்த அலங்காரமாய் இருந்தது.

இந்த அலங்காரத்தை இப்பொழுது காண்பதரிது. அந்த ஆதிச் சபையின் மகிமையான நிலைமையைப் பார்த்து நாம் வெட்கப்பட்டால் தாவிலை. இப்படிப்பட்ட வெட்கம் நமது இருதயங்களையும் நமது வீடுகளையும் சீர்ப்படுத்த நம்மை ஏவி எழுப்பி விட்டால் நல்லது.

ஜெபம். ஆண்டவரே! ஆதிச் சபை பெற்ற விசுவாசத்தையும் சிநேகத்தையும் எங்களுக்கும் அருளிச் செய்யும். உமதாவியை ஏராளமாய் எங்கள் மேல் ஊற்றி உமது அனலான அன்பை எங்களிருதயங்களில் மூட்டியருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி. 19, 23-40. அல்லது 1. கொரி. 10, 1-13. வாசிக்கவும்.

பெந். பண்டி. பின். புதன்.

அ. 80, 7. 8.

ஜனத்துக்குப் பிரசங்கிக்கவும், தாம் உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோருக்கும் பராபரனால் குறிக்கப்பட்ட நியாயாதிபதி என்று திடச் சாட்சியாய் ஒப்புவிக்கவும் அவர் எங்களுக்குக் கற்பித்தார். இவர் பேரிலே விசுவாசிக்கிறவன் எவனும் இவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுகிறான் என்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் இவருக்குச் சாட்சி கொடுக்கிறார்கள் என்றான். பேதுரு இன்னம் இந்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கையில், அந்த வசனத்தைக் கேட்ட எல்லார் மேலும் பரிசுத்த ஆவி இறங்கினார். நடபடி. 10, 42-44.

கொர்நேலியு வீட்டில் பேதுரு பேசுகையில் பரிசுத்தாவியானவர் இறங்கினார். பெந்தெகொஸ்தே ஆவியானவரும் அவர் மூலமாய் நமது கர்த்தரும், பூமியெங்கும் நிறைந்திருக்கும் பெரிய சபைகளில் மாத்திரமல்ல, ஒவ்வொரு வீட்டிலும், சிறு சபைகளிலும், வாசம்பண்ணப் பிரிய சித்தமாயிருக்கிறார். கொர்நேலியு வீட்டில் அவர் வந்தது போல் தேவ வசனத்தைக் கொண்டு தான் உன் வீட்டுக்கும் வருவார். இந்த வசனத்தைச் சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கக் கர்த்தர் கட்டளையிட்டார். இந்த வசனத்திலே அவர் ஜீவனுள்ளோருக்கும் மரித்தோருக்கும் நியாயாதிபதியாக அறிவிக்கப்படுகிறார். அவர் தமது இரத்தத்தைக் கொண்டு பாவிகளை நியாயத்தீர்ப்புக்கு நீங்கலாக விடுதலையாக்குகிறார். எல்லாச் சத்தியத்துக்குள்ளும் வழி நடத்துகிற பெந்தெகொஸ்தே ஆவியானவர் இந்த வசனத்தை வாகனமாகக் கொண்டு வருகிறார். இந்த வசனத்தினாலே கர்த்தர் தாமே உன்னண்டை வந்து உன்னோடு பேசுகிறபடியால் நீ அதற்குச் செவிகொடு.

நீ இந்த வசனத்திற்கு உன் வீட்டின் கதவைத் திறந்து விடு. தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலரும் சொன்னதைக் கேட்டு நீயும் உன் வீட்டிலுள்ள பெரியோரும் சிறியோரும் ஒன்றாய்க் கூடி ஆசையோடு அதைப் படித்து வந்தால், ஆண்டவர் உனக்கும் உன் வீட்டாருக்கும் பரிசுத்தாவியை அளிப்பார். அவர் தமது ஆவியோடு வந்து வழிதப்பிப் போனதைத் தேடிக் காயங் கட்டித் துக்கப்படுகிறவர்களைத் தேற்றி எல்லாக் கவலையையும் நீக்குவார். அவர் இவ்வாறு உன் வீட்டுக்கும் உன் இருதயத்துக்கும் வரும்போது அவருடைய சமாதானம் உன்னை நிரப்பும். நீயும் உன்னுடையவர்களும் ஒருவருடைய தப்பிதத்தை ஒருவர் பொறுத்து மன்னிக்கவும், சிறுமையைப் பொறுமையாய்ச் சகிக்கவும், கண்ணீர் விட்டாலும் சந்தோஷமாயிருக்கவும், கல்லறையண்டை நின்றாலும் நம்பிக்கையாயிருக்கவும் கற்றுக்கொள்வீர்கள்.

ஜெபம். தேவாவியானவரே! உமது வெளிச்சத்தினால் கிறிஸ்துவின் மகிமையை எங்களுக்குக் காட்டி எங்களை அவரண்டை இழுத்து வருகிறீர். தேவரீர், எங்கள் கல்நெஞ்சைக் கரைத்து மெய்யான விசுவாசத்தை எங்களுக்குள் மூட்டியருளும், சுவாமீ, ஆமென்.

நடபடி. 20, 1-5. அல்லது 1 கொரி. 10, 14-33 வாசிக்கவும்.

பெந். பண்டி. பின். வியாழன்.

அ. 78, 1. 2.

பண்டிகையின் பெரிதான கடைசி நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டுச் சொன்னதாவது: ஒருவன் தாகமாயிருந்தால், என்னண்டை வந்து குடிக்கக் கடவான். வேத எழுத்து சொன்னபடி, எவன் என்பேரில் விசுவாசிக்கிறானோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவனுள்ள தண்ணீர் நதிகள் ஓடும் என்றார். யோவா. 7, 37. 38.

பெந்தெகொஸ்தே பண்டிகை முதற்கொண்டு ஜீவ தண்ணீரூற்று இவ்வுலகில் திறந்தது. இயேசு கிறிஸ்துவே இவ்வூற்று. இவரே ஜீவனுயிருந்து ஜீவனைக் கொடுக்கிறார். அவருடைய வசனத்தைக் கேட்டு விசுவாசிப்பதினால் மனிதர் அவ்வூற்றிலே குடிக்கிறார்கள். அவர் தமது வசனத்தைக் கொண்டு நமக்குள் வருகிறார். ஆகையால் நீ வந்து இந்த ஜீவ ஊற்றில் குடி. இதற்கு உனக்கு உத்தரவு உண்டு. தாகமுள்ளவன் வரக்கடவான் என்று அவர் அவ்வளவு பட்சமாய்க் கூப்பிடும்போது உன்னையும் நினைக்கிறார். உன் ஆத்துமா கர்த்தருக்கென்றும் நித்திய ஜீவனுக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டதால் அது தேவன் மேலும் ஜீவன் மேலும் தாகமாயிருக்கிறது. நீ லோகமாகிய வனாந்தரத்தில், தாகத்தினால் சாகாமல் உன் ஆத்துமா நித்திய ஜீவனுக்கென்று பிழைப்பதற்கு ஜீவ தண்ணீரில் குடி. யார் என்மேல் விசுவாசிக்கிறானோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவனுள்ள தண்ணீர் நதிகள் ஓடும் என்ற வாக்குத்தத்தத்தை உன்னிடம் நிறைவேறும்படிக்கு அவரண்டை போ. கர்த்தர் தம்முடையோரை ஆசீர்வதிக்க மாத்திரமல்ல, அவர்கள் தங்கள் சகோதரருக்கு ஆசீர்வாதமாக இருக்கவும் சித்தமாயிருக்கிறார். அவர் ஜீவ ஊற்றாயிருந்தது போல் அவர்களும் இவ்வுலகில் ஜீவ ஊற்றுக்களாகவேண்டும். வற்றாத ஜீவ ஊற்றாகிய இயேசுவண்டை வந்து நாம் திரும்பத் திரும்ப மொண்டு குடிப்போமாக. பெற்றோரே, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கும், எஜமான்களே, நீங்கள் உங்கள் வீட்டாருக்கும் வேலைக்காரருக்கும் ஆசீர்வாதமாயிருக்கவேண்டுமானால் இயேசுவின் வசனத்தை அவர்களுக்குச் சொல்லுங்கள்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! உமது சத்தியத்தில் எங்களைப் பரிசுத்தமாக்கும், உமது வசனமே சத்தியம், ஆண்டவரே, நாங்கள் உமது நித்திய ஜீவ வழியில் மென்மேலும் பிரமாணமும் திருப்தியாக்குவதற்கு எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி. 20, 16-38. அல்லது 1 கொரி. 11, 17-34. வாசிக்கவும்.

பெந். பண்டி. பிந். வெள்ளி.

கீ. 78, 3. 4.

அவர்கள் ஜெபம் பண்ணினபிற்பாடு அவர்கள் கூடி இருந்த ஸ்தலம் அசைந்தது, எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, பராபரனுடைய வசனத்தைத் தைரியத்தோடே சொன்னார்கள். விசுவாசிகளுடைய திரள் ஒரே இருதயமும் ஆத்துமாவுமாயிருந்தது. ஒருவனாகிலுந் தனக்குள்ளவைகளில் ஒன்றையுந் தன்னுடையதென்று சொன்னதில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. அப்போஸ்தலர் மகா பலத்துடனே கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகொடுத்தார்கள். அவர்கள் எல்லார் மீதிலும் மகா கிருபை உண்டாயிருந்தது. நட. 4, [illegible]

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் பெற்றுக்கொண்ட ஒரு ஆண்டவர் நமக்குண்டு. பரத்துக்கேறின இந்தத் தங்கள் ஆண்டவரை நோக்கிக் கைகளை ஏறெடுத்து ஜெபம் பண்ணின ஆதிச்சபையார் இதைக் கண்ணாரப் பார்த்தார்கள். அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிறைந்தார்கள். ஆவியின் வல்லமையினால் தைரியங்கொண்டு சத்துருக்களைப் பார்க்காமல் மனிதரை விட பராபரனுக்கு அதிகமாய்க் கீழ்ப்படிந்து இயேசுவை அறிவித்தார்கள். சகல துன்பத்திலும் [illegible] லும் அவர்கள் ஒருமித்திருந்து, விசுவாசத்திலும் [illegible] திலும் நிலைத்திருந்தார்கள். தேவ வல்லமையும் கிருபையும் அவர்களுக்குள் வாசம்பண்ணிக் காணப்படும் விதமாய் அவர்களை ஆண்டுகொண்டது. அவர்கள் ஜெபம் பண்ணுஞ் சபையாராயிருந்தார்கள்.

நாமும் அப்படி இருந்தால் நலம். நமது சபையில் உண்டாயிருக்கும் தீமைகளைப்பற்றி முறையிடுகிறோம். போதக ஊழியம் அற்பம், சகோதர சிநேகம் குளிர்ந்து, சுவிசேஷத்தை அறிவிக்கும் உற்சாகம் தணிந்து, தேவ கிருபை குறைந்து, தேவ ஊழியருடைய பிரயாசைகள் வீணாய்ப்போகிறது போல் தோன்றுகிறது. எருசலேமிலிருந்த ஆதிக் கிறிஸ்தவர்களைப்போல நமது சபைகளும் வீடுகளும் நமது இருதயங்களும் தேவ ஆவியினால் திரும்ப ஆளப்படவில்லை. அப்படி ஆளப்படுவதற்கு நாமுந்

தேவையானதை மனிதர் உண்டுபண்ண முடியாது. இருதயத்தை நடத்துகிறவரே அதைக் கொடுக்கக் கூடியவர். அவர் அக்காலத்தில் அதைத் தேவ வசனத்தைக்கொண்டு கொடுத்தது போலவே இக்காலத்திலும் கொடுப்பார்.

ஜெபம். பரிசுத்தாவியானவரே! ஆதிச்சபையை உமது வரங்களினால் நிரப்பி உமது ஒளியினால் பிரகாசிப்பித்ததுபோல் எங்கள்மேலும் இரங்கி உமது பரிபூரண வரங்களோடு எங்களண்டை வாரும். எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை எங்களுக்குக் காண்பித்தருளும், சுவாமி, ஆமேன்.

நடபடி. 21, 1-40. அல்லது 1 கொரி. 12, 1-11. வாசிக்கவும்.

பெந். பண்டி. பிந். சனி.

கீ. 78, 7. 8.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் பராபரனுடைய சிநேகமும் பரிசுத்தாவியின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங் கூட இருக்கக்கடவது. ஆமேன். 2 கொரி. 13, 13.

நாம் இன்றோடு திருச்சபையின் பண்டிகைக் காலத்தை முடிக்கிறோம். நாம் மனத்தாழ்மையோடும் சந்தோஷத்தோடும் நன்றியறிதல் செலுத்தி இதை முடிக்கிறோம். திருச்சபையின் பெரிய பண்டிகைப் பிரசங்கங்களில் பராபரனுடைய பெரிய கிருபைகளைக் குறித்துக் கேட்டோம். முன்னணையையும் சிலுவையையும் கிறிஸ்துவின் கல்லறையையும் பெந்தெகொஸ்தே நாளில் நடந்த அதிசயத்தையும் பற்றிக்கேட்டுத் தியானித்தோம். நம்மோடு பராபரனைத் துதிக்கிற ஒரு பெரிய சபை எப்போதுமுண்டு என்று கண்டோம். இதனால் நமது விசுவாசம் பெலப்பட்டு வந்தது. கர்த்தர் பிறந்த பண்டிகை இவ்வாறு உனக்கும்: பாவிகளை இரட்சிக்கத் தமது ஒன்றான குமாரனை உலகத்தில் அனுப்பின பிதாவினுடைய சிநேகத்தில் உனக்கும் பங்குண்டு என்று சொல்லுகிறது. ஏழைப்பாவிகளாகிய நமக்கும் குமாரனின் சிலுவையைக்கொண்டு கிருபையின் இராச்சியம் திறந்திருக்கிறது என்று உயிர்த்தெழுந்த பண்டிகை உனக்கும் எனக்கும் திரும்பத் திரும்பச் சொல்லுகிறது. பரிசுத்தாவியின் பண்டிகையோ, தேவ ஆவி தமது வேலையை நமக்குள் நடப்பிக்கிறார் என்று நம்மெல்லாருக்குஞ் சாட்சியிடுகிறது. நீ யாராயிருந்தாலும் நீயும் பராபரனோடே ஐக்கியமாயிருக்க அழைக்கப்பட்டாய்.

கர்த்தருடைய வசனம் பண்டிகைக் காலத்தின் முடிவாகிய, இன்றைக்கு நமக்குச் சொல்லும் ஆசீர்வாதம் நம்மெல்லாரிடத்திலும் பலிப்பதாக. பிதாவின் அன்பு எல்லா வழியிலும் நமக்குப் பிரகாசம் தரும் வெளிச்சமாயிருப்பதாக. குமாரனின் கிருபை எல்லா நேரத்திலும் நமது ஆறுதலும் பங்குமாயிருப்பதாக. பெந்தெக்கொஸ்தே ஆவியானவர் பராபரனோடே சமாதானம் பெற்றுப் பராபரனில் சந்தோஷமடைந்து பராபரனிடத்தில் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறவர்களின் ஐக்கியத்தில் நம்மைக் காப்பாற்றுவாராக.

நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் பராபரனுடைய சிநேகமும் பரிசுத்தாவியானவருடைய ஐக்கியமும் நம்மனைவரோடேயிருப்பதாக.

ஜெபம். திரியேக பராபரனே! உமது உண்மையையும் அன்பையும் இரக்கத்தையும் துதித்துப் பாடுகிறோம். ஆண்டவரே, உமது திருவசனத்தை எங்களிடத்தில் காப்பாற்றி நாங்கள் அதனால் உமது திருச்சித்தத்தையும் கரையேறும் வழியையும் அறிந்துகொள்ள எங்களுக்குத் துணைசெய்யும், சுவாமி, ஆமேன்.

லூ. 22, 1-30. அல்லது 1 கொரி. 12, 12-26. வாசிக்கவும்.

திரித்துவப் பண்டிகை.

கீ. 122, 10.

யூதரின் அதிகாரிகளில் நிக்கொதேமு என்னு பேர்கொண்ட ஒரு மனுஷன் பரிசேயரில் இருந்தான். இவன் இராத்திரியிலே இயேசுவண்டை வந்து, அவரிடத்தில்: ரபீ, நீர் பராபரனாலே வந்த போதகர் என்று அறிவோம்; ஏனெனில் ஒருவனும் தன்னுடனே பராபரன் இருந்தால் ஒழிய நீர் செய்கிற இந்த அடையாளங்களைச் செய்யக் கூடாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தாரமாக: மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருவன் மறுபடியும் பிறந்தாலே ஒழிய, பராபரனுடைய இராச்சியத்தைக் காணக்கூடாது என்றார். யோவா. 3, 1-3.

தன் தோழராகிய பரிசேயர் தன்னை இயேசுவோடே இருக்கப் பார்த்தால் தன்னைப் பரிகாசம் பண்ணுவார்கள் என்று பயந்தாலும், நிக்கொதேமு அவரண்டையில் போகாமலிருக்க முடியவில்லை. மோட்சத்தை அடையும் வழி என்ன என்கிற முக்கியமான கேள்விக்குப் பதில் சொல்லக் கூடியவர் இயேசு ஒருவரே என்று அவனுக்குத் தெரியும். ஆகையால் இராத்திரியிலே

இயேசு நாதரண்டை வந்தான். இப்போதும் ஆண்டவரையன்றி வேறொருத்தரும் மோட்ச வழியை நமக்குக் காண்பிக்க முடியாது.

நிக்கொதேமு வந்த காரணம் ஆண்டவருக்குத் தெரிந்தது. அவன் தன் மனதில் இருந்த கேள்வியை வெளியிட்டுக் கேட்குமுன் அவர் அதற்குப் பதில் சொன்னார். உன் இருதயத்தில் இருக்கும் எண்ணங்களும் அவருக்குத் தெரியும். ஒருவன் மறுபடியும் பிறந்தாலொழிய தேவனுடைய இராச்சியத்தைக் காணக்கூடாது என்று ஆண்டவர் சொல்லுகிறார். மனிதன் பாவங்களைச் செய்யாமல் அவைகளை மென்மேலும் விலக்கித் தேவ கற்பனையின் படி ஜீவனம் பண்ணப் பிரயாசப்பட்டால், மோட்சத்தை அடையலாமென்று அநேகர் நினைக்கிறது போல நிக்கொதேமும் நினைத்திருப்பான். ஆகிலும் இது நித்திய ஜீவனுக்குப் போகும் வழியல்லவே. நாம் எவ்வளவு பிரயாசப்பட்டாலும், நாம் எப்போதும் பாவிகளாகவே இருப்போம். நாம் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் நாம் முற்றிலும் புதிய சிருஷ்டிகளாய்ப் புதிதாய்ப் பிறக்கவேண்டும்.

மறுபிறப்பின் இரகசியத்தை நாம் ஒருபோதும் முற்றிலும் உணர்ந்துகொள்ள மாட்டோம். தானிய மணியிலிருந்து தாள் முளையும் விதத்தையும், முட்டையிலிருந்து குஞ்சு வருகிற விதத்தையும் புத்தியினால் விவரிக்க நம்மால் ஆகாது. அதுபோல மறுபிறப்பைப் புத்தியினால் அல்ல அநுபோகத்தினாலே அறிந்துகொள்வது அவசியம். நீ புது ஜீவனைப் பெற்று அதின் பெலத்தால் நவமான ஜீவனில் நட.

ஜெபம். இரக்கமுள்ள பிதாவே! தேவரீர் திரு ஞானஸ்நானத்தால் எங்களை மறுபடியும் ஜெனிப்பித்து உம்முடைய பிள்ளைகள் ஆக்கினீர். தேவரீர் எங்களுக்குள் உண்டாக்கின புது ஜீவனை நாங்கள் அநுபவித்து அதை எங்கள் ஜீவியத்தில் காட்ட எங்களுக்கு உமதாவியின் பெலத்தைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

லூக். 23, 1-35 அல்லது சங். 50 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். திங்கள்.

கீ. 211, 1-7.

ஆ, பராபரனுடைய ஞானம் அறிவு என்பவைகளின் ஐசுவரியம் எவ்வளவு ஆழம்; அவருடைய நியாயத்தீர்ப்புகள் எவ்வளவாய் அளவறுக்கப்படாதவைகளும் அவருடைய வழிகள் எவ்வளவாய் ஆராயப்படாதவைகளுமாயிருக்கிறது. ரோம. 11, 33.

தேவன் செய்கிறது இன்னதென்று எத்தனையோ தரம் நமக்கு விளங்காமல் போகிறது. நீ வசிக்கும் பூமியை நோக்கிப்

பார். எத்தனைபோ விசை பஞ்சம் வருகிறது. குடியானவனுக்கு நல்ல விளைச்சலை அருளுவது ஆண்டவருக்கு இலேசான காரியம். ஆனால் அவர் ஏன் அதை அருளவில்லை? மானிடசாதியின் சரித்திரத்தைப் பார்த்தால் தேவன் அந்தந்த ஜாதியை நடத்தும் வழிகள் அடிக்கடி நமக்கு விளங்குவதில்லை. உலகத்தில் ஏறக்குறைய நூறுகோடி ஜனங்கள் கிறிஸ்துமார்க்கத்தில் சேராதிருக்கிறார்கள். மிஷியோன் வேலைக்காகத் திருச்சபை அதிக வைராக்கியம் காட்டவும் தமது இராச்சியம் பரம்பவும் தேவன் அதை ஏன் அருளினதில்லை? ஒரு வீட்டிலே திடீரென்று மரணம் ஒரு வாலிபனை வாரிக்கொண்டு போக, அயல் வீட்டிலே ஒரு கிழவன் விருத்தாப்பியமுற்றுக் கிடந்து தவித்து மரணத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். ஒருவேளை தேவன் உன்னை நடத்துகிற வழிகளும் உனக்கு விளங்குகிறதில்லை. அவர் உனக்கருமையானவர்களை ஏன் எடுத்துக்கொண்டார்? அவர் உன்னை ஏன் இந்த மனுஷனோடே அல்லது அந்த மனுஷியோடே சம்பந்தப்படுத்தினார். இந்த வியாதியையும் அந்தத் துன்பத்தையும் உனக்கு ஏன் அனுப்பினார் என்கிற இவ்விதக் கேள்விகளுக்குத் தகுந்த பதில் தெரியாது. அவருடைய நியாயத்தீர்ப்புகள் எவ்வளவாய் அளவிடப்படாதவைகளும், அவருடைய வழிகள் எவ்வளவாய் ஆராயப்படாதவைகளுமாய் இருக்கின்றன!

இதைப் பார்க்கிற நாம் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கக் கூடாது. தேவன் செய்கிறதெல்லாம் நலமென்று நமக்குத் தெரியும். இப்பூமியில் அநேக விஷயங்கள் நமக்கு மறைக்கப்பட்டிருந்தாலும் பரலோகத்தில் எல்லாம் வெளிச்சமும் தெளிவுமாயிருக்கும்.

ஜெபம். கிருபையுள்ள பிதாவே! உமது வழிகள் எங்களுக்கு அடிக்கடி விளங்காவிட்டாலும் நாங்கள் தாழ்மையாய் உமக்கு முன்பாக விழுந்து, தேவரீர் எங்கள் கையைப் பிடித்து எங்களை உமது ஆலோசனையின்படி நடத்தி இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் ஏற்றுக்கொள்ளும் என்று கெஞ்சிக் கேட்கிறோம், சுவாமி, ஆமேன்.

நடபடி. 24, 1-27 அல்லது 1 கொரி. 12, 27-31 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். செவ்வாய்.

ஞ. 211, 3. 4.

ஜென்ம சுபாவமான மனுஷன் பராபரனுடைய ஆவியின் விஷயங்களை ஏற்றுக்கொள்ளான்; ஏனெனில் அவைகள் அவனுக்குப் பைத்தியமாயிருக்கிறது; அவைகள் ஞானப்பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறபடியினாலே, அவன் அவைகளை அறியமாட்டான். 1 கொரி. 2, 14.

ஜென்ம சுபாவ மனுஷன் பரிசுத்த ஆவியானவரால் அல்ல, தன் சுய புத்தியினாலே நடத்தப்படுகிறான். அவன் ஆவியின் விஷயங்களை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. மனிதர் பாவிகள் என்றும், கிறிஸ்து நமக்காக மரித்தார் என்றும் ஒருக்கால் படித்திருப்பான். ஆனால் தன் சொந்த பாவக்குற்றத்தை அவன் அறிந்துகொள்ளாமையினால் கிறிஸ்து சிலுவையில் மரண அவஸ்தைப்பட்ட காரணம் அவனுக்கு விளங்காது. இயேசுமாத்திரம் இருதயத்துக்குச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கக் கூடுமென்று அவன் ஒருவேளை கேள்விப்பட்டாலும் அதை நம்பமாட்டான். அதைப் பார்க்கிலும் இப்பூமியின் இன்பமே இன்பம் என்று எண்ணுவான். ஒருவன் ஆத்துமத்தின் நிமித்தம் உலக இன்பங்களைத் தள்ளிவிடக்கூடும் என்பதை உணரமாட்டான்.

ஒருவன் தன் சொந்த தேசத்தையும் நல்ல அந்தஸ்தையும் உத்தியோகத்தையும் விட்டுவிட்டுத் தேவ ஊழியனாக அஞ்ஞானிகளண்டை போய் அநேகம் மோசங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகி ஜீவனம்பண்ணுவது சாத்தியம் என்பதும் அவனுக்கு விளங்கவில்லை. தேவ இராச்சியத்துக்கு அடுத்தவைகளெல்லாம் ஞானப்பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படும். இப்படி நிதானிக்க ஜென்ம சுபாவமான மனுஷனால் முடியாது. நீ இப்பேர்ப்பட்ட குருட்டாட்டத்தில் அலைந்து திரியாதிருக்க ஆண்டவர் உன்னைப் பிரகாசிப்பிக்கும்படி அவரை வேண்டிக்கொள். அந்த காலத்திலிருக்கிறவர்கள் பைத்தியம் என்று எண்ணினது மெய்ஞானமென்றும், ஞானமென்று எண்ணினது பைத்தியமென்றும் அவர்கள் அறிந்துகொள்வதற்கு ஆண்டவர் தமது பரிசுத்தாவியானவரை அனுப்பி அவர்களைத் தமது வரங்களினால் பிரகாசிப்பிக்க வேண்டுமென்று அவர்கள் எல்லாருக்காகவும் வேண்டிக்கொள்.

ஜெபம். தயாபராகிய பிதாவே! உமது இரக்கத்தினால் எங்களை உமது திருச்சபையில் சேர்த்து, பரிசுத்தாவியின் வெளிச்சத்தை எங்களுக்கு வீசப்பண்ணினீர். இந்த வெளிச்சத்தைக்கொண்டு நாங்கள் உமது வழியில் நடந்து உம்மைத் தேடிக் கண்டுபிடிக்கவும் எங்களைச் சுற்றி இருக்கிறவர்களுக்கும் மோட்ச வழியைக் காட்டவும் எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமேன்.

நடபடி. 25, 1-12. அல்லது 1 கொரி. 13, 1-13. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். புதன்.

ஞ. 211, 5. 6.

இயேசு பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். ஒருவன் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலே ஒழிய, பரமனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்கக் கூடாது. மாம்சத்தினால் பிறந்தது மாம்சமாயிருக்கிறது. ஆவியினால் பிறந்தது ஆவியாயிருக்கிறது. யோவா. 3, 5. 6.

நாம் பாவத்தில் உற்பவித்துப் பிறக்கிறோம். ஜென்மப் பாவம் இல்லாதவன் ஒருவனாகிலும் இல்லை. மாம்சத்தினால் பிறந்தது மாம்சந்தான். நாம் நமது பிள்ளைகளைப் பார்த்தால் ஜென்மப் பாவத்தின் வல்லமை நமக்கு நன்றாய் விளங்கும். பாவஞ் செய்ய அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. பிடிவாதம், கீழ்ப்படியாமை, பொய் இவைகள் எவ்வளவு சீக்கிரம் அவர்களில் துளிர்க்கிறது. வயது செல்லச்செல்ல ஜென்மப்பாவமும் துர் இச்சையும் ஓங்கி வளர்ந்து வருகிறது. ஜென்மப் பாவத்தினால் கர்மப் பாவம் பிறந்து மோட்ச வழியை முற்றிலும் அடைத்து விடுகிறது.

நாம் ஞானஸ்நானம் பெற்றதற்காக ஆண்டவருக்குத் தோத்திரம். நாம் ஆவியினாலும் தண்ணீரினாலும் மறுபடி பிறந்தவர்கள். ஞானஸ்நானம் பெற்ற நாம் ஆவியின் பெலத்தை உடையவர்கள். அந்த ஆவியானவர் நமது இருதயங்களில் உறைய மனதுள்ளவர். நீ அவருடைய வேலையைத் தடுக்காதே. தடுத்தால் புதிய ஜீவன் உன்னில் செத்து மாம்சம் உன்னை மேற்கொள்ளும். தேவ வசனத்தைச் சுறுசுறுப்பாய்க் கேட்டுப் படித்து அடிக்கடி ஆண்டவருடைய இராப்போசனத்தைப் புசி. ஞான திரவியங்களில் பரிசுத்தாவியானவர் உன்னண்டைக்கு வருகிறார். அவருடைய பலத்தைக்கொண்டு இடைவிடாமல் மாம்சத்தோடு போராடு. அப்போது புதிய ஜீவன் உன்னில் மென்மேலும் வலிமை அடையும். நீ தண்ணீரினாலும் ஆவியினாலும் புதிதாய்ப் பிறந்தபோது பெற்றுக்கொண்ட திவ்விய ஜீவனின் வாக்குத்தத்தம் உன்னில் நிறைவேறும்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! உமது கிருபையினால் எங்களை மீட்டு இரட்சித்து, இந்த மீட்பில் ஞானஸ்நானத்தினால் எங்களுக்குப் பங்கு கொடுத்ததற்காக உம்மை முழுமனதாலும் துதிக்கிறோம். கர்த்தாவே, தேவரீர் எங்களுக்கு அருளின பாக்கியம் இன்னதென்று நாங்கள் உணர்ந்து நன்றி அறிதலோடு உமது மகிமைக்கென்று இவ்வுலகில் ஜீவனம்பண்ண எங்களுக்கு உத்தாசை செய்யும், சுவாமி, ஆமென்.

மத். 25, 13-27. அல்லது 1 கொரி. 14, 1-19. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். வியாழன்.

ஞ. 211, 7. 8.

நாம் அனைவரும் கிறிஸ்துவின் நிறைவான வளர்த்தியின் அளவாய்த் தேறின ஒரு புருஷனாகி, ஏக விசுவாசத்திற்கும் பராபரனுடைய குமாரனை அறிகிற ஏக அறிவுக்கும் வந்து சேருமட்டும், அவரே பரிசுத்தவான்களின் சீர்பொருந்துதலுக்கும் கிறிஸ்துவினுடைய சரீரம் ஊன்றக்கட்டப்படும் ஊழியத்தின் கிரியைக்கும், சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் சிலரைச் சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் கட்டளையிட்டார். எபே. 4, 11-13.

அநேகம் பேர் தேவ ஊழியத்தை அற்பமாகவும் அநாவசியமென்றும் கருதுகிறார்கள். மெய்க் கிறிஸ்தவனோ அதைப்பற்றி வேறு விதமாய் எண்ணுகிறான். குருத்தொழிலைத் திருச்சபைக்கு அருளினவர் ஆண்டவர் என்று அவன் அறிந்து அவருக்கு மனதார ஸ்தோத்திரம் செலுத்துகிறான். தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலரும் இப்போது இல்லை. அவர்களுக்குப் பதிலாகச் சுவிசேஷ[illegible]ய பிரசங்கிமார்களும் மேய்ப்பராகிய குருக்களும் உபாத்திமாரும் தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள்.

இந்த உத்தியோகம் எவ்வளவோ அவசியம். திருச்சபையில் அநேகர் அவிசுவாசத்திலும் உலக சிந்தையிலும் மூழ்கிக் கிடக்கிறார்கள். ஆண்டவர் காணாமல் போன ஆட்டைத் தேடின மேய்ப்பனுக்குத் தம்மை ஒப்பிட்டுத், திருச்சபைக்கு மேய்ப்பராக நியமிக்கப்பட்டவர்கள் வழிதப்பிப் போனவர்களைப் பரம மேய்ப்பரண்டைத் திருப்ப வேண்டுமென்று கற்பித்தார். விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்களிடத்தும் தேவ ஊழியர் திருப்பணி செய்வது அவசியம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் பூரண சற்குணனாகவேண்டும். பவுல் அப்போஸ்தலன் கூட நான் இன்னம் அதைப் பிடித்தவன் அல்ல, இன்னம் முற்றிலும் தேறினவன் அல்ல என்று ஒப்புக்கொள்ள வேண்டுமானால் நான் சற்குணன் என்று சொல்ல ஒருவனாலும் முடியாது. ஆகையால் நீயும் வசனத்தின் ஊழியத்தால், மென்மேலும் தேறப் பார். வசனத்தின் ஊழியக்காரருக்காகவும் விசேஷமாக உன் குருவுக்காகவும் தேவனை நோக்கி ஜெபம் செய். சபையார் தங்கள் குருவுக்காக ஊக்கத்தோடு ஜெபம்செய்தால் எவ்வளவு ஆசீர்வாதத்தை அவர் மூலமாகப் பெறுவார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைகளும் மென்மேலும் ஊன்றக்கட்டப்படுவதுடன் அவைகளின் அவயவங்களாகிய சபையார் ஏக விசுவாசத்திற்கும் தேவகுமாரனை அறிகிற ஏக அறிவுக்கும் வந்து சேருவார்கள்.

ஜெபம். பரமபிதாவே! உமது சபையின்மேல் இரங்கி அதற்கு உமது ஞானத்தையும் சிநேகத்தையும் தாரும். நாங்கள் உம்மையும் தேவரீர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் அறிந்து விசுவாசத்திலும், பரிசுத்

தத்திலும் தேறி உமது சாயலுக்கு அதிகம் அதிகமாய் ஒப்பாவதற்கு எங்களுக்கு உண்மையான வழியைக் காட்டியருளும், சுவாமி, ஆமேன்.

கட. 26, 1-32. அல்லது 1 கொரி. 14, 20-40. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். வெள்ளி.

சி. 91, 1.

நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் பேசிச்சொல்ல வேண்டியதேதெனில், நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்க அவர்களுக்குச் சொல்ல வேண்டியதாவது: கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து உன்னைக் காக்கக் கடவார். கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரகாசிக்கப் பண்ணி, உன் மேலே கிருபையாயிருக்கக் கடவார். கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி உனக்குச் சமாதானம் கட்டளையிடக் கடவார் என்பது தானே. இப்படி நம்முடைய நாமத்தை இஸ்ரவேல் புத்திரர் மேல் வைப்பார்களாக. நாம் அவர்களை ஆசீர்வதிப்போம் என்று சொல் என்றார். 4 மோ. 6, 23-27.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் இந்த ஆசீர்வாத வார்த்தைகளைத் தேவனிடத்தில் பெற்றுக்கொண்ட காலமுதல் ஆயிரக்கணக்கான வருஷங்களாய்ப் பழைய ஏற்பாட்டின் காலத்திலும் புதிய ஏற்பாட்டின் காலத்திலும் தேவனுடைய ஜனம் இந்த வார்த்தைகளினாலே ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறது. மூன்று தரம் கர்த்தரானவர் என்பதில் தேவ திரித்துவத்தின் இரகசியம் குறிக்கப்படுகிறது.

கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து உன்னைக் காக்கக் கடவார் என்பது முதல் ஆசீர்வாதம். நம்மை உண்டாக்கி இற்றைவரைக்கும் காத்து நடத்திச் சகல மோசங்களுக்கும் மறைத்துச் சகல பொல்லாங்குகளுக்கும் தப்புவித்து இரட்சிக்கிறவர் பிதாவாகிய பராபரனே.

கர்த்தரானவர் தமது திரு முகத்தை உன்பேரில் பிரகாசிக்கப்பண்ணி உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார் என்றால் கிறிஸ்து இயேசுவைக்கொண்டு பிதாவானவர் தம்மை நமக்கு வெளிப்படுத்தித் தமது முகத்தை நமக்கு நேராகத் திருப்புவார் என்பது அர்த்தம்.

கர்த்தரானவர் தம்முடைய திரு முகத்தை உன்பேரில் ஏறெடுத்து உனக்குச் சமாதானங் கட்டளையிடக்கடவார் என்பதில் பரிசுத்தாவியானவருடைய [illegible] குறிக்கப்பட்டிருக்கிறது. நமக்குக் கிருபையைச் சம்பாதித்த இயேசுகிறிஸ்துவை நமக்குச் சொந்தமாக்கி, அவரை விசுவாசிக்கும் விதத்தைப் போதித்துத் தேவ சமாதானத்தை உணர்த்துகிறவர் அவர் தான்.

கொல்கதாவிலிருக்கிற சிலுவையினால் நமக்குச் சமாதானம் சம்பாதிக்கப்பட்டிருப்பதால் சமாதானம் என்கிற வார்த்தையைச் சொல்லும்போது, குரு சிலுவையின் அடையாளத்தைப் போடுவது வழக்கம்.

ஜெபம். திரியேக பராபரனே! தேவரீர் உமது சொந்த ஜனமாகிய இஸ்ரவேலரை ஆசீர்வதித்ததுபோல, எங்களையும் ஆசீர்வதியும். உமது காவலும் கிருபையும் சமாதானமும் எங்களுக்கிருந்தால் போதும். உமது திருநாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரம் உண்டாவதாக, சுவாமி, ஆமேன்.

கட. 27, 1-44. அல்லது 1. கொரி. 15, 1-28. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். சனி.

சி. 281, 1. 2.

கர்த்தருடைய செபத்தைத் துவக்குகிற வார்த்தை என்ன? பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே!

இந்த வார்த்தைக்கு அர்த்தம் என்ன? பராபரன் நமக்கு மெய்யான பிதாவென்றும் நாம் அவருக்கு மெய்யான பிள்ளைகளென்றும் நாம் விசுவாசித்துப் பிரியமுள்ள பிள்ளைகள் தங்கள் பட்சமுள்ள பிதாவை மன்றாடுகிறதுபோல் நாம் சந்தோஷத்தோடும் முழு நம்பிக்கையோடும் அவரைச் சேர்ந்து மன்றாடும்படிக்கு அவர் இந்த வார்த்தையினால் நம்மை நயம் பண்ணி இழுக்கப் பிரிய சித்தமாயிருக்கிறார்.

தம்மைப் பிதா என்று சொல்லும்படியான அதிகாரத்தைப் பராபரன் நமக்குக் கொடுத்ததினாலே நமக்கு ஆச்சரியமான அன்பைக் காட்டினார். நமது காலின் கீழ் அகப்பட்டு நசுங்கிப் போகும் ஒரு பூச்சிக்கும் நமக்கும் இருக்கிற வித்தியாசத்தைப் பார்க்கத் தேவனுக்கும் ஏழைப் பாவிகளாகிய நமக்கும் இருக்கிற வித்தியாசம் பெரிது. என்றாலும், அவர் நம்மோடு நயமாகப் பேசி, நம்மைக் கூப்பிடுகிறபடியினால், பிள்ளைகள் தங்கள் தகப்பனண்டை வருவதுபோல நாமும் நமது சுகதுக்கங்களை எல்லாம் சொல்வதற்கு அவரண்டை சேரக்கூடும்.

தங்கள் பிள்ளைகள் [illegible] மேல் நல்ல நம்பிக்கை வைப்பதினால் எப்படிச் சந்தோஷப்படுகிறார்களோ, அப்படிப் பராபரனும் தம்மைச் சேர்ந்து மன்றாடுகிறவர்கள் மேல் சந்தோஷப்படுகிறார். இந்தப் பிதா வானத்தில் இருப்பதால் அவர் பெற்றோரைப் பார்க்க வல்லவர். ஒரு தகப்பன் எத்தனையோ தரம் தன் பெலவீனத்தை உணருவான். பிள்ளைகள் வியாதிகண்டு பாயும் படுக்கையுமாய்க்

கிடக்கையில் தகப்பன் அடிக்கடி யாதொரு உதவியும் செய்ய முடியாதிருக்கிறதுண்டு. நமது பரம பிதாவோ நம்மை ஆற்றித் தேற்றி உதவி புரியக் கூடாதபடிக்கு நமக்கு வரக்கூடிய துன்பம் ஒன்றாயில்லை.

பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகியும் துன்ப காலத்தில் பெற்றோருடைய வீட்டை வாஞ்சிக்கிறார்கள். அங்கே போகிறதற்கோ அடிக்கடி சாத்தியப்படவில்லை. நமது பரம பிதாவோ எங்கும் எப்போதும் சமீபமாய் இருக்கிறார். நாம் எங்கே இருந்தாலும் அவர் நமக்கு உதவி செய்வார். இதை அறிந்த நீ இப்பொழுதே பரம வீட்டை நாடித் தேடு.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது அன்புக்கும் இரக்கத்திற்கும் அளவில்லை. ஏழைப் பாவிகளாகிய நாங்களும் உம்மண்டை சேர்ந்து உம்மை நோக்கி மன்றாட எங்களுக்குக் கட்டளையிட்டதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். பரம தகப்பனே, நாங்கள் இந்த அன்பை அறிந்து உமது பிள்ளைகளாய் இவ்வுலகில் ஜீவனம் பண்ண எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

அப்போ. 28, 1-31. அல்லது 1 கொரி. 15, 29-49. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். முதலாம் வாரம், ஞாயிறு.

சி. 381, 1. 2.

ஐசுவரியமுள்ள ஒரு மனிதன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற பட்டையும் தரித்துக்கொண்டு, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்திருந்தான். ஆனால் லாசரு என்ற நாமமுள்ள தரித்திரன் ஒருவனும் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய் அவன் வாசலண்டையிலே கிடந்து, ஐசுவரியவானுடைய பந்தியிலிருந்து விழும் துணிக்கைகளினால் தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான். அல்லாமல் நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. அப்புறம் சம்பவித்ததென்னவென்றால், தரித்திரன் மரித்துத் தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான். அன்றியும் ஐசுவரியவானும் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டான். லூக். 16, 19-22.

செல்வம் பெரிய பாக்கியம் என்றும் தரித்திரம் பெரிய நிர்ப்பாக்கியமென்றும் எண்ணுகிறவர்களுக்குக் குறைவில்லை. அவர்கள் இந்தச் செல்வனைப் போல் அநுதினமும் சம்பிரமமாய் வாழ்க்கூடியவர்கள் மேல் பொறாமை அடைகிறார்கள். அப்படி வாழத் தங்களுக்கு வழி இல்லாமையினாலே முறுமுறுத்து முறையிடுவார்கள். ஆகிலும் நீ நரகத்தில் கிடக்கிற அந்த ஐசுவரிய

முள்ள மனுஷனை நோக்கி, “நீ இன்னும் செல்வத்தைப் பெரிய பாக்கியமென்று எண்ணுகிறாயோ” வென்று கேட்டுப் பார். அவன் இல்லை என்றே சொல்லுவான். நான் இப்பூமியில் சில வருஷக் காலம் சுகமாய் ஜீவனம் பண்ணினதினாலே எனக்கு என்ன லாபம். ஏழை லாசருவைப் போல நான் இப்போது பரலோகத்தில் பாக்கியத்தை அநுபவிக்கக் கூடுமானால் நான் அவனைப் போல சந்தோஷத்தோடு தரித்திரத்தை அநுபவிப்பேனே என்று சொல்லுவான். ஆகையால் ஆஸ்திபாஸ்தியை நாடுவது புத்தியீனம். நீ முந்த தேவ இராச்சியத்தையும் அதின் நீதியையும் தேடு. தேவன் உனக்குச் செல்வத்தைக் கொடுக்காமலிருந்தால் விசனப்படாதே. கொடுத்திருந்தால் ஒருவேளை நீ அதின் சோதனைகளினால் மேற்கொள்ளப்பட்டு அந்தச் செல்வன் போல அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து, அழிந்து போகும் சிற்றின்பங்களில் மூழ்கி உன் தேவனை மறந்துவிட நேரிட்டிருக்கும். நீ ஏழையானாலும் முறுமுறுக்காமல் லாசருவைப்போல் ஆண்டவர் பேரில் நம்பிக்கை வை. இக்காலத்துப் பாடுகள் நம்மில் வெளிப்படப்போகிற மகிமைக்குப் பாத்திரமானவைகள் அல்ல.

ஜெபம். கர ஜீவ தயவுள்ள பிதாவே! செல்வத்தையும் தரித்திரத்தையும் எனக்குக் கொடாமல், நான் பரிபூரணம் அடைகிறதினாலே மறுதலித்துக் கர்த்தர் ஆர் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினாலே திருடி என் பராபரனுடைய நாமத்தை அவமானப்படுத்தாதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷியும், சுவாமி, ஆமென்.

1 கொரி. 11, 26-12, 8. அல்லது சங். 73. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். முதலாம் வாரம், திங்கள்.

சி. 381, 3. 4.

பராபரனுக்கு நம்மேலுள்ள சிநேகத்தை நாம் அறிந்து விசுவாசித்தோம். பராபரன் சிநேகமாயிருக்கிறார், சிநேகத்தில் நிலைத்திருக்கிறவன் பராபரனில் நிலைத்திருக்கிறான், பராபரன் அவனிலும் நிலைத்திருக்கிறார். நியாயத்தீர்ப்பின் நாளிலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கும்படி இதிலே சிநேகம் நம்மிடத்தில் நிறைவேறுகிறது; ஏனெனில் அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். சிநேகத்திலே பயம் இல்லை; நிறைந்த சிநேகம் பயத்தைப் புறம்பே தள்ளும், ஏனெனில் பயம் வாதிப்புள்ளது. பயப்படுகிறவனோ சிநேகத்திலே தேறினவன் அல்ல. நாம் அவரைச் சிநேகிக்கக் கடவோம், ஏனெனில் அவர் நம்மை முந்திச் சிநேகித்தார். 1 யோவா. 4, 16-19.

நாம் அவரைச் சிநேகிக்கக் கடவோம், ஏனெனில் அவர் நம்மை முந்திச் சிநேகித்தார் என்று யோவான் சொல்லுகிறான். நாம் தேவனைச் சிநேகிப்பதற்கு, அவருடைய சிநேகம் மூலமும் ஆதாரமுமாம். தாங்கள் அவரை முழு இருதயத்தாலும் சிநேகிக்கிறதாக அநேகர் எண்ணினாலும் அவரைத் தவிரத் தங்களையும் பணத்தையும் இந்த லோகத்தின் சிற்றின்பங்களையும் சிநேகிக்கிறார்கள். நீ ஒருவனைச் சிநேகித்தால் அவனோடே பேசுவது உனக்குப் பிரியம். உனக்கடுத்தவர்களோடே நீ ஒருநாளும் பேசாமல் இருக்கமாட்டாய். நீ ஆண்டவரை உண்மையாய்ச் சிநேகித்தால் அநுதின ஜெபத்தை மறப்பது அசாத்தியம். உனக்கு அருமையானவர்கள் உனக்கு ஒரு காயிதம் எழுதினால் நீ அதை வெகுநாள் வாசிக்காமல் வைத்திருக்கமாட்டாய். உன் ஆண்டவர் சத்திய வேதமென்கிற நிருபத்தை உனக்கு எழுதி அனுப்பினார். அதைத் திரும்பத் திரும்ப வாசிக்க நீ ஆசையாயிருக்கவேண்டும். நீ சிநேகித்தவர்களைச் சந்தோஷப்படுத்தப் பிரயாசப்படுவாய். தேவன் உன்மேல் பிரியப்பட அவரைப் பாவங்களினால் துக்கப்படுத்தாதிரு.

முழு மனதாலும் ஆண்டவரைச் சிநேகிக்கிறேன் என்று சொல்லக் கூடியவன் ஒருவனுமில்லை. ஆண்டவருடைய அன்பை ஆராய்ந்து பார்த்தால் நாம் வெட்கமும் துக்கமும் அடையவேண்டும். நமது அன்பு உண்மையில்லாத அன்பு. அவருடைய அன்பின் ஆழத்தை அறிந்தால் தான் நாம் அவரை உண்மையாய்ச் சிநேகிப்போம்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமதன்பினால் எங்கள் குளிர்ந்த இருதயங்களை அனலாக்கியருளும். நாங்கள் நன்றி அறிந்தவர்களாக உமது பிள்ளைகளுக்கு ஏற்றபடி உம்மையும் எங்கள் பிறத்தியாரையும் உண்மையோடே சிநேகித்துக் கடைசி நாளில் உமது பாக்கியமான இராச்சியத்தில் சேருவதற்கு எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமென்.

1 மோ. 13, 2-18; அல்லது 1 கொரி. 15, 50-58. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிச். முதலாம் வாரம், செவ்வாய்.

அ. 38[illegible] 5. 6[illegible]

[illegible]

அவர்களுக்கு ஒரு உவமையைச் [illegible] சொன்னது: ஐசுவரியமுள்ள ஒரு மனுஷனுடைய காணி பூமி நன்றாய் விளைந்தது. அவன் தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டு சொன்னதாவது என்ன செய்வேன்; என் தானியங்களைச் சேர்த்து வைக்க எனக்கு இடம் இல்லையே. நான்

ஒன்று செய்வேன்; என் களஞ்சியங்களை இடித்துப்போட்டுப் பெரிதாய்க் கட்டி, எனக்கு விளைந்ததெல்லாவற்றையும் என்னுடைய நல்ல வஸ்துக்களையும் அங்கே சேர்த்து வைத்து, என் ஆத்துமத்துடனே ஆத்துமமே, உனக்கு அநேக வருஷங்களுக்கு வெகு நல்ல வஸ்துக்கள் வைத்திருக்கிறது. இளைப்பாறு, புசி, குடி, பூரிப்பாயிரு என்பேன் என்று சொன்னான். ஆனால் பராபரன் அவனுடனே: மதியற்றவனே! இந்த இராத்திரியிலே உன் ஆத்துமம் உன்னிடத்தில் கேட்டு வாங்கப்படும்; அப்போது நீ ஆயத்தம் பண்ணினவைகள் ஆருடையதாகும் என்றார். பராபரனுக்குள் ஐசுவரியவானாயிராமல், தனக்குத்தான் பொக்கிஷங்களைச் சேர்க்கிறவன் அப்படியிருக்கிறான் என்றார். லூக். 12, 16-21.

எந்த தினமும் உன் கடைசி தினமாக இருக்கலாம் என்பதை நீ மறவாதே. உன்னை நோக்கி ஆண்டவர், இந்த இராத்திரியிலே உன் ஆத்துமம் உன்னிடத்தில் கேட்டு வாங்கப்படும் என்று இன்றைக்கே சொன்னாலும் சொல்லுவார். அந்தப் பணக்காரனாகிய குடியானவனுக்குச் சொன்னதுபோல் உனக்கும் மதியற்றவனே என்று சொல்ல வேண்டுமோ? இம்மையில் மாத்திரம் சுகித்திருக்கக் கவலைப்படாதே. புத்தியற்ற கன்னியாஸ்திரிகளைப்போல் அல்ல, புத்தியுள்ள கன்னியாஸ்திரிகளைப்போல் இரு. இப்பூமியின் செல்வத்தைத் தேடாமல் பராபரனுக்குள் ஐசுவரியவானாகப் பிரயாசப்படு. ஆண்டவர் தம்முடையவர்களுக்குக் கொடுக்கப்போகிற பாவமன்னிப்பு ஜீவன் மோட்சம் என்றவைகளாகிய மகிமையான பொக்கிஷங்கள் உனக்குத் தெரியும். இந்தக் கிருபையின் பொக்கிஷங்களை விசுவாசத்தினால் பிடித்து அவைகள் உன்னிடத்தில் நிலைத்திருந்து அதிகரிக்கும்படி பார். மரணத்தினாலும் அழியாத திரவியங்கள் எவ்வளவு விலையேறப் பெற்றவை என்று அப்போதுதான் தெரிய வரும். உலகப் பொருளில் மாத்திரம் செல்வனாயிருப்பவனுக்கு ஐயோ! அவன் சம்பாதித்தது சாகும் வேளையிலே போய்விடும். ஆத்துமமே, உனக்கு அநேக வருஷங்களுக்கு நல்ல வஸ்துக்கள் வைத்திருக்கிறது. இளைப்பாறு, புசி, குடி, பூரிப்பாயிரு என்று தாங்களும் சொல்லிக்கொள்ளும்படி, அநேகர் ஆஸ்திபாஸ்தியை நாடுகிறார்கள். நீ இப்பேர்ப்பட்ட மதியற்றவனாயிராதே. நாங்கள் ஞானமுள்ள இருதயத்தைத் தரித்துக் கொள்ளும்படியாக எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குக் கட்டளையிடும் என்று ஜெபி. அப்போது உலகப் பொருள் அற்பமென்று அறிந்து அதற்காகப் படுகிற கவலையில் அமிழ்ந்திப்போகாமல் இருப்பாய்.

ஜெபம். பரமபிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் இவ்வுலகின் பொருளை நாடாமல் உம்மையும் உம்முடைய இராச்சியத்தையும் தேடும்படி எங்களை எழுப்பியருளும். நாங்கள் லோகத்துக்கடுத்தவர்கள் அல்ல, நாங்கள் பரலோகத்துக்கு அடுத்தவர்களே. ஆதலால் எங்கள்

பரம சுதந்தரத்தை நாங்கள் அடைவதற்கு எங்களுக்குத் தயை செய்தருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 14, 8-24. அல்லது 1 கொரி. 16, 1-24. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். முதலாம் வாரம் புதன்.

ஞா. 381, 7. 8.

ஆகையால் நான் எப்போதும் உம்மண்டையிலே தரிப்பேன், என் வலது கையைப் பிடித்துத் தாங்குவீர். உம்முடைய யோசனையின்படி என்னை நடத்தி, கடைசியிலே என்னை மகிமையிலே ஏற்றுக்கொள்வீராக. பின்னை ஆர் எனக்குப் பரமண்டலங்களில் இருக்கிறார்: உம்மோடே நான் இருக்கையில், பூமியில் எனக்கு வேறே விருப்பம் இல்லை. என் மாமிசமும் என் இருதயமும் மாறும்போது பராபரன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார். சங். 73, 23-26.

இந்த வார்த்தையில் வெளிப்படுகிற விசுவாசத்தைப் பார். இப்படிப் பேசக்கூடியவர்கள் வெகு கொஞ்சம் பேர். அநேகருக்கு ஆஸ்திபாஸ்தியும் வாழ்வும் பலமும் சுகமும் சந்தோஷமும் கிடையாத பட்சத்தில் திருப்தி இன்றிப் புலம்புவார்கள். அப்போது ஆற்றித்தேற்றி உதவி செய்யக்கூடிய பராபரன் வானத்தில் இல்லை என்கிறதுபோல் தவிப்பார்கள். எனக்குப் பணமிருந்தால் வானத்திலும் பூமியிலும் நான் விரும்புகிறது வேறொன்றுமில்லை என்று சொல்லிக் கர்த்தராகிய பராபரனை அவமதித்து உலகப் பொருளைத் தங்கள் தெய்வமாக்குகிறவர்கள் எத்தனை பேர். இவர்களுக்கும் தங்கள் கைகளினால் விக்கிரகங்களை உண்டாக்குகிற அஞ்ஞானிகளுக்கும் ஒரு வித்தியாசமுமில்லை. அவர்களுக்குப் பணம் எந்த வியாதியிலும் துன்பத்திலும் உதவிசெய்யவும் அவர்கள் இருதயத்துக்குச் சமாதானத்தைக் கொடுக்கவும் முடியாது. அது இவர்களை நரக வேதனைக்கு விலக்கிக் காப்பாற்றி மோட்சத்தில் சேர்க்க முடியாது. பார்க்கவும் கேட்கவும் இரட்சிக்கவும் ஆற்றித் தேற்றவும் முடியாத அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்களைப்போல பணமும் சக்தியற்றது. கிருபையும் சர்வ வல்லமையுமுள்ள பராபரன்மேல் நம்பிக்கை வைக்கிறவனே பாக்கியவான். அவன்: கர்த்தர் என் மேய்ப்பர் நான் தாழ்ச்சி அடையேன் என்று சொல்லக்கூடியவன். பராபரன் எங்கேயோ அங்கே எந்தப்பொருளுமிருக்கும். எந்தத் துன்பத்திலும் ஆற்றித்தேற்றி உதவிசெய்யக்கூடிய சக்தி பராபரனுக்கு உண்டு. சாகும் வேளையிலும் கர்த்தர் அவனைக் கைவிடமாட்டார். என் மாமிசமும் இருதயமும் மாறும்போது

பராபரன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார் என்று அவனைக்கொண்டு சொல்லக் கூடும். சாகும் வேளையில் விக்கிரகங்களெல்லாம் சுத்த சூனியமாகும். ஆகையால் நீ எப்போதும் உன் பராபரனிடத்திலே நிலைத்திரு. அப்போது மரணத்திற்குப் பயப்படாமல் உனக்குச் சாகும் வேளை சமீபிக்கும்போது கடைசியில் என்னை மகிமையிலே ஏற்றுக்கொள்வீர் என்று சொல்லக் கூடும்.

ஜெபம். தயாபரராகிய பிதாவே! உம்மிடத்தில் எங்களுக்குப் பூரண திருப்தியுண்டு. தேவரீர் ஒருவரே எங்கள் இருதயங்களை ஆற்றித் தேற்றக்கூடியவர், உமது அன்பினாலும் உமது இரக்கத்தினாலும் எங்களைக் காத்தருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 15, 1-26. அல்லது 2 கொ. 1, 1-14. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். முதலாம் வாரம், வியாழன்.

ஞா. 382, 1. 2.

ஆபிரகாம் அவனுடனே: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு; அவர்களை அவர்கள் கேட்கட்டும் என்றான். அவனோ, அப்படியல்ல தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களண்டை போனால், குணப்படுவார்கள் என்றான். லூக். 16, 29. 30.

ஐசுவரியமுள்ள மனுஷன் நரகத்தில் ஒன்றை அறிந்துகொண்டான். அது மோட்சத்தை அடைவதற்குக் குணப்படுதல் வேண்டுமென்பது. அவன் ஏற்கனவே பூமியில் அதை உணர்ந்திருந்தால் எவ்வளவு நன்மை. குணப்படுதலுக்கு ஏவுகிற மோசேயும் தீர்க்கதரிசிகளும் அவனுக்கு இருந்தார்கள். ஆயினும் இப்போது சமயம் தவறிப் போயிற்று. கிருபைக்காலம் கழிந்துவிட்டது. நீ ஏழையானாலும் சரி பணக்காரனானாலும் சரி, நீ மோட்சத்தை அடைய வேண்டுமானால் குணப்படவேண்டும். நாம் எல்லாரும் பாவஞ்செய்து பராபரனுடைய மகிமையற்றவர்களாயிருக்கிறோம் என்று உனக்குத் தெரியும். ஆகையால் குணப்படக் காலதாமதம் செய்யாதே. மரணம் வருங் காலம் யாருக்கும் தெரியாது. காலம் கடந்துபோயிற்று என்று உனக்குச் சொல்லக் கேட்டால் அது எவ்வளவு பயங்கரம். குணப்படுதலாவது என்ன? பாவங்களை விட்டுவிட்டு மனஸ்தாபமும் விசுவாசமுமுள்ள இருதயத்தோடு பராபரனுடைய கிருபையைத் திரும்பத் தேடுகிறது தான். உன்னை விசனப்படுத்தி மனஸ்தாபத்துக்கு ஏவ வேண்டிய பாவங்கள் உனக்கும் உண்டு. அவைகளை விட்டு

விடத் தீர்மானம் செய். உன் கர்த்தரும் இரட்சகருமானவரை விசுவாசித்து மன்னிப்பைத் தேடினால் உனக்கும் பராபரனுடைய கிருபை கிடைக்கும். இந்தக் குணப்படுதல் புறம்பான அற்புதங்களினால் உண்டாகாது. கர்த்தர் உயிர்த்தெழுந்த பின்னும் பரிசேயர் குணப்படவில்லை. லாசரு தங்களுக்குத் தோன்றியிருந்தாலும் ஐசுவரியமுள்ள மனுஷனுடைய சகோதரர் குணப்படவில்லை. தேவ வசனமே குணப்படுத்தக் கூடும். அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளுமுண்டு. அவர்களை அவர்கள் கேட்கட்டும் என்று ஆபிரகாம் சொன்னான். உனக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் மாத்திரமல்ல, கிறிஸ்துவும் அப்போஸ்தலருங்கூட உண்டு. அவர்களைக் கேள். உன் ஆத்துமத்தை இரட்சிக்கும்படியான வல்லமை தேவ வசனத்திற்கு உண்டு என்று நீ அறிந்துகொள்வாய். அது உன் பாவங்களை உனக்குக் காட்டி, உன்னைக் குணப்படுத்தி, உன் இரட்சகரண்டை கொண்டுபோம். அவராலே நீ நியாயத்தீர்ப்பில் ஜெயமடைவாய்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பிதாவே! மோட்சத்தையும் நரகத்தையும் மனிதருக்கு விதிக்கிற நியாயாதிபதியே! உமது திரு வசனத்தைக் கேட்டுப் படித்த நாங்கள் அதைக்கொண்டு மோட்ச வழியைத் தேடிக் கண்டுபிடிக்க எங்களுக்கு ஒத்தாசை பண்ணும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 17, 1-8. அல்லது 2 கொரி. 1, 15 24. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். முதலாம் வாரம், வெள்ளி.

பி. 382, 3. 4.

ஒரே விசை மரிக்கிறதும், அதற்குப் பிற்பாடே நியாயத்தீர்ப்பும் எந்தப் பிரகாரமாக மனுஷருக்குக் குறிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்து அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க ஒரே விசை பலியான பின்பு, இரண்டாம் விசை தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு இரட்சிப்பாகப் பாவமில்லாமல் தரிசனையாவார். எபி. 9, 27. 28.

பின் வரும் காலம் நமக்கு மறைவாயிருந்தாலும் ஒன்று நிச்சயம். அது நாம் சாக வேண்டுமென்பதுதான். சாக வேண்டிய காலமும் நேரமும் மாத்திரம் தெரியாது. ஒரே விசை மரிக்கிறது மனுஷருக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது. அப்புறம் என்ன? அநேகர் அப்புறம் ஒன்றுமில்லை என்றும், மனுஷனுடைய சரீரம் ஒழிந்துபோய் அவன் ஆவி புகைபோல் ஆகாயத்தில் கலந்துபோகிறது என்றும் சொல்லுகிறார்கள். அப்படிப் பேசுகிறவர்களில் மிச்சமானவர்கள் அதை நம்புகிறதில்லை. மரணத்திற்குப் பிற்பாடு

நியாயத்தீர்ப்பு என்று அவர்கள் மனச்சாட்சி அவர்களுக்குத் தெரிவிக்கிறது. இப்பூமியில் எல்லாம் நீதி நியாயப்படி நடக்கிறதில்லை. அநேகர் பாவங்களுக்காகவும் பாதகங்களுக்காகவும் தண்டிக்கப்படாமல் போகிறார்கள். சம்பிரமமாய் வாழ்ந்து வருகிற மனிதர்களைப் பார்க்கிலும் எப்போதுந் துன்பத்தையும் கவலைகளையும் அநுபவிக்க வேண்டியவர்கள் கெட்டவர்கள் என்று சொல்ல வேண்டாம். ஏழை லாசருவைப் பார்க்கிலும் ஐசுவரியமுள்ள மனுஷன் நல்லவனென்று நினைக்கமாட்டோம். தேவன் நீதியாயிருந்தால் ஒரு நாளில் நியாயந்தீர்க்க வரவேண்டும். அவருடைய நியாயஸ்தலத்துக்கு நீயும் வரவேண்டும். அதை நினைக்கும்போது உனக்கு மலைப்பில்லையா? நீ பாவங்களால் நிறைந்து தேவன் கேட்கப் போகிற கேள்விகளிலே ஆயிரத்தில் ஒன்றுக்காகிலும் பதில் சொல்லக் கூடாமல் போவாய் என்று உனக்குத் தெரியுமல்லவா?

நமது ஆண்டவரும் இரட்சகருமானவர் நம்மோடிருப்பதினாலே நாம் பாக்கியவான்கள். அவர் அநேகருடைய பாவங்களைத் தொலைக்கும்படி பலியிடப்பட்டவர். உனக்காகவும் மரித்தார். நீ பராபரனுக்கு முன்பாக நிற்கும்படியாக அவர் உனக்கும் தம்முடைய நீதி வஸ்திரமாகிய பாவமன்னிப்பைக் கொடுப்பார். இரட்சகரை மெய்யாய் விசுவாசிக்கிறவன் அவரைச் சிநேகிக்கிறான். அவரைச் சிநேகிக்கிறவன் அவரைப் பார்க்கவும் அவரோடே எப்போதும் இருக்கவும் ஆசித்து அவரை எதிர்பார்க்கிறான். நீயும் அப்படிச் செய்தால் மரணத்திற்கும் அஞ்ச மாட்டாய். தம்மை எதிர்பார்த்துத் தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு கிறிஸ்து காணப்படுவார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! கடைசி நாளிலே எல்லா ஜாதிகளும் உமக்கு முன்பாக நின்று உமது தீர்ப்பைக் கேட்க வேண்டியது. ஆண்டவரே, நாங்கள் அப்போது பயமின்றித் தைரியத்தோடு உமது புண்ணியத்தைச் சுட்டி உமது ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு எங்களைச் சீக்கிரம் குணப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 18, 1-15. அல்லது 2 கொரி. 2. 1-17. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். முதலாம் வாரம், சனி.

பி. 375, 1. 2.

முதலாம் மன்றாட்டேதென்ன? உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக.

நாம் இப்படி மன்றாடுவதற்கு அர்த்தம் என்ன? பராபரனுடைய நாமம் தன்னிலே தானே அர்ச்சியசிஷ்ட நாமமாயிருக்கிறது. ஆனால் அது நம்மிடத்திலேயும் அர்ச்சிக்கப்பட வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக என்பது முதலாம் மன்றாட்டு. பராபரனுடைய நாமம் தன்னில்தானே அர்ச்சிய இஷ்ட நாமமாயிருக்கிறது. சேற்றை வாரி ஒருவன் சூரியனுக்கு நேரே இறைத்தால் சூரியனுக்கு எப்படி ஒரு சேதமும் வராதோ அப்படி மனிதர் பராபரனுடைய நாமத்தைப் பரிகாசம் பண்ணுவதினாலே அதற்கு ஒரு சேதமும் உண்டாகாது. ஆனால் அது நம்மிடத்திலும் அர்ச்சிக்கப்படவேண்டுமென்று இந்த மன்றாட்டில் மன்றாடிக்கொள்ளுகிறோம். தேவதூதர்கள் கர்த்தருடைய நாமத்தைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறார்கள். சர்வ சிருஷ்டியும் தன்னை உண்டாக்கினவரைப் போற்றி மகிமைப்படுத்துகிறது. மனிதனிடத்தில் மாத்திரம் பராபரனுடைய நாமம் அர்ச்சிக்கப்படாமல் தூஷணிக்கப்படுகிறது. கர்த்தரைப் புகழ்வதற்கு நமக்கு அதிக முகாந்தரம் உண்டு. மனிதனாகிய நமக்காக இயேசு மரணம் அடைந்தார். மனிதராகிய நம்மைப் பராபரன் தமது பிள்ளைகளாக்கினார். பராபரனுடைய திரு வசனத்திற்கு [illegible] நடந்தால் பராபரனுடைய நாமம் அர்ச்சிக்கப்படாமல் தூஷணிக்கப்படும். அப்படிச் செய்கிறவர்கள் வார்த்தையிலும் நடக்கையிலும் பராபரனுடைய வாக்குத்தத்தமும் பயமுறுத்தலும் பொய் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பாவத்துக்குக் கர்த்தர் நம்மை எப்போதும் விலக்கிக் காப்பாராக. பராபரனுடைய வசனம் தப்பிதமில்லாமல் நம்மிடத்தில் சுத்தமாய்ப் போதிக்கப்படும்படிக்கும் நாம் பராபரனுடைய பிள்ளைகளுக்கேற்ற ஞான நடத்தையாய் நடக்கும்படிக்கும் ஜெபம் செய்வோமாக. இது எங்கே நடக்கிறதோ அங்கே பராபரனுடைய நாமம் அர்ச்சிக்கப்படுகிறது. அங்கே உங்களை அந்தகாரத்தைவிட்டு அந்த ஆச்சரியமான வெளிச்சத்துக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்கள் அறிவிக்கப்படும்.

ஜெபம். பரமபிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் உமது திருநாமத்தை வீணிலே வழங்காமல் அதை எல்லா இக்கட்டிலேயும் துதித்து, [illegible] நேசிக்க எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 கொ. 13, 16-[illegible] அல்லது 2 கொரி. 3, 1-11. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இரண்டாம் வாரம், ஞாயிறு.

லூ. 14, 1-3.

அவனோ அவனுக்குச் சொன்னது: ஒரு மனுஷன் பெரிய விருந்தைப்பண்ணி அநேகரை அழைத்து விருந்து வேளையில், வாருங்கள்

எல்லாம் ஆயத்தமாயிற்று என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லத் தன் ஊழியக்காரரை அனுப்பினான். லூக். 14, 16. 17.

இந்த விருந்துக்கும் போக நம்மெல்லாருக்கும் உத்தரவுண்டு. பராபரன் நம்முடைய ஆத்துமத்தை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் நித்திய ஜீவனுக்கென்று போஷிக்கப் பிரிய சித்தமாயிருக்கிறார். நமக்காகச் சிலுவையில் அறையுண்டு உயிர்த்தெழுந்த இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவில் நமக்கு முசிப்பாறுதல் ஏராளமாய்க் கிடைக்கிறது. அவரிடத்தில் நீ ஆறுதலையும் சமாதானத்தையும் வெளிச்சத்தையும் ஜீவனையும் உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் பெலனையும் கண்டுபிடிப்பாய். அவர் சிலுவையில் தொங்கி, முடிந்தது என்கிற ஜெய மொழியை மொழிந்தது முதல் எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. அவர் உன் பாவங்களைச் சுமந்து தீர்த்தார். அதைப் பராபரன் அவரை மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுப்பினதினாலே மெய்ப்பித்து உனக்குப் புது ஜீவியத்துக்கு வேண்டிய சத்துவத்தையும் தந்தார். உன்னுடைய இரட்சிப்புக்கென்று இனி ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. நாம் இரட்சிப்பைக் கிரியைகளினால் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டியதில்லை; பராபரன் அதைக் கிறிஸ்துவில் உண்டுபண்ணி நமக்கு ஆயத்தப்படுத்தினார். நீயோ விசுவாசக் கையினாலே பராபரன் உனக்கு உண்டுபண்ணினதை வாங்கு. நீ இன்னும் வாருங்கள் என்ற சத்தத்தைக் கேட்டதில்லையா? நீ வந்து அவருடைய பரிபூரணத்தினாலே கிருபையின்மேல் கிருபை பெற்றுக்கொள். தினந்தோறும் திரும்பத் திரும்ப வா. இது உனக்கு மிகவும் தேவை. உன் பாவ நிர்ப்பந்தத்தையும் உன் பெலவீனத்தையும் பார், வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது என்று சொல்லி உன்னை அழைக்கிற கர்த்தர் மிகவும் அன்புள்ளவர் என்று நன்றியறிந்த மனதோடே ஒப்புக்கொள். நீ பள்ளிக்கூடத்தில் படித்த தேவ வசனம் உன்னை ஞாயிற்றுக்கிழமைதோறும் கூப்பிடுகிறது. இச்சீவனில் நேரிடும் சகல துக்கங்கள் பராபரன் உன்னிடத்துக்கு அனுப்புகிற தூதர்கள். உன் இரட்சிப்பை இழந்து, அவரை மறந்தபடி அவை உன்னை எச்சரிக்கும். அவர் கோபம், நியாயத்தீர்ப்பின் நாளிலே உன்மேல் பற்றி எரியாதபடிக்கும், ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்கிற வாக்குத்தத்தம் உன்னிடம் நிறைவேறும்படிக்கும், அவருடைய சத்தத்தைக் கேள்.

ஜெபம். எங்கள் பரம [illegible] ஆட்டுக்குட்டியானவரே! உமது அன்பினால் ஏற்பட்ட திரு [illegible] போசனத்தில் உம்மையே எங்களுக்குக் கொடுத்து உமது இரட்சிப்பில் எங்களுக்குப் பங்கு கிடைக்கச்

பாவி பண்ணினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே! நாங்கள் உமது விருந்தில் அடிக்கடி சேர்ந்து உமது ஆசீர்வாதத்தைப் பெற எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமென்.

1 மோ. 19, 1-29. அல்லது சங். 84. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இரண்டாம் வாரம், திங்கள்.

பி. 141, 4. 5.

என் பிள்ளைகளே, வசனத்தினாலும் அல்ல நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மையினாலுமே நேசிக்கக் கடவோம். 1 யோவா. 3, 18.

தேவ இராச்சியத்திற்கு அழைக்கப்பட்ட நாம் ஆண்டவருடைய சித்தத்தைக் கேட்டுச் செய்வோமானால் நமக்கு ஜீவனும் பூரண திருப்தியும் கிடைக்கும். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின. இதோ, எல்லாம் புதிதாயிற்று, என்று எழுதி இருக்கிறது. ஒழிந்துபோனது என்ன? புதிதானது என்ன? தன்னுடையதைத் தேடித் தன்னயம் பாராட்டும் பழைய ஜீவியம் ஒழிந்துபோய்ச் சிநேகத்தோடே கூடிய பரிசுத்த நடக்கை துவக்குகிறது. ஆகையால் நாம் கேட்ட வசனத்துக்கு முந்தின வசனத்தில் யோவான் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்கிறதை நாம் அறிவோம். ஏனெனில் சகோதரரைச் சிநேகிக்கிறோம் என்கிறார். சகோதர சிநேகம் புது ஜீவனை அறியும் அறிகுறி. ஆகிலும் இந்தச் சிநேக நடக்கை கட்டாயமும் உண்மையுள்ளதுமாயிருக்க வேண்டும். பராபரனுடைய இராச்சியம் வசனிப்பிலே அல்ல பெலத்திலும் கிரியையிலும் இருக்கிறது. (1 கொரி. 4, 20.) அப்போஸ்தலன் அன்பாய்ப்பேசுகிறவர்களை நம்முடைய வாயின் இனிமையான வார்த்தைகளினால் ஆதரித்துத் தேற்ற வேண்டாமென்று சொல்கிறதில்லை. அன்பான வார்த்தைகளைப் பேச அவன் தடைசெய்யவில்லை. அமைதியினாலும் அன்பினாலும் புண்பட்டவர்களின் காயங்களை ஆற்றத் தகுந்த தைலமாம். என்றாலும் அன்பான வார்த்தைகளுடனே செய்கையும் வரவேண்டும். சகோதர சிநேகத்தைக் கிரியைகளினால் காட்டுவதற்கு நல்ல சமயங்கள் நமக்குண்டு. சந்தோஷமாய்க் கொடுப்பதினாலே நீ கிறிஸ்துவின் சீஷன் என்பதின் உண்மையைக் காண்பி. நீ அதிகமாகக் கொடுக்கக் கூடாமலிருந்தால் ஒரு சின்னப் போதும் என்று நினைக்காமல் பயமில்லாமல் அப்போஸ்தலன் சொன்னபடி ஆதாரணமாய்க் கொடு. திரப்பந்தமும் அன்பாயிருக்கும் வீட்டிற்குப் போய் உதவிசெய். அது உன் கர்த்தருடைய சித்தம், அவரே அப்படிச் செய்தார்.

இரக்கமுள்ள சமாரியனைப் பற்றிய உவமையில் நீ கிரியையினால் சிநேகிக்க வேண்டிய விதத்தை உனக்குக் காண்பித்தார். நீ போய் அப்படிச்செய். நம்மெல்லாருக்கும் மனமிரங்கும் சமாரியனாகிய இயேசுவிடத்திலிருந்து விசுவாசத்தினாலும் ஜெபத்தினாலும் அப்படிச் செய்வதற்குப் பெலனைப் பெற்றுக்கொள்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! உமதன்பின் தீயை எங்களுக்குள் மூட்டியருளும். தேவரீர் எங்களைச் சிநேகித்ததுபோல நாங்களும் ஒருவரையொருவர் சிநேகிக்க எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 மோ. 21, 1-21. அல்லது 2 கொரி. 3, 12-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இரண்டாம் வாரம், செவ்வாய்.

பி. 141, 6. 7.

பின்னையுஞ் சம்பவித்ததென்னவென்றால் அவர்கள் பயணம் போகையில், அவர் ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்று பேர்கொண்ட ஒரு ஸ்திரி அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தண்டை உட்கார்ந்துகொண்டிருந்து, அவருடைய வசனத்தைக் கேட்டாள். மார்த்தாளோ வெகு பணிவிடைசெய்ய அலுவலாயிருந்தாள். அவள் வந்து நின்று: ஆண்டவரே, என் சகோதரி என்னை மாத்திரம் வேலைசெய்ய விட்டிருக்கிறது உமக்குக் கவலையில்லையோ; அவள் எனக்கு ஒத்தாசைபண்ண அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் ஒன்றே தேவை; மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். லூக். 10, 38-42.

ஒன்றே தேவை என்று கிறிஸ்து சொன்னது என்ன? மரியாள் செய்தபடி இயேசுவின் பாதத்தண்டை உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்பதே. மார்த்தாளைப்போல இயேசுவுக்காக உழைக்கிறதைப் பார்க்கிலும் இது முக்கியம். நாம் கிறிஸ்துவைச் சிநேகித்துச் செய்யுங் கிரியையினால் அல்ல, கிறிஸ்து நம்மை நேசித்துச் செய்த கிரியையினாலே இரட்சிக்கப்படுகிறோம். கர்த்தரையும், அவர் தமது கசப்பான பாடுகளினாலும் மரணத்தினாலும் நமக்காகச் சம்பாதித்ததையும் நமக்குக் காண்பிக்கிற வசனத்தைக் கவனிப்பது, இப்பூமிக்குரிய உழைப்பதைப் பார்க்க அதிக முக்கியம். அநேகர் முன்னுக்கு வருவதையும் தங்களுடையவர்களுக்கு ஆஸ்தி சம்பாதிப்பதையும் தவிர வேறொன்றும் தேவை

இல்லை என்று கருதுகிறார்கள். இது முடிந்தால் தான் தேவ வசனத்தைக் கேட்பதற்குச் சாவகாசம் இருக்குமென்று நினைக்கிறார்கள். நீ அப்படி நினைக்காதே. இப்பூமிக்கான கவலைகளிலும் பிரயாசைகளிலும் உன் மனதைச் செல்ல விடாதே. அவைகள் ஆராதனைக்கும் வீட்டு ஜெபத்திற்கும் தடையாயிருக்க வேண்டாம். நமக்குத் தேவையானது ஒன்றுண்டு. அது தேவ வசனத்தைக் கேட்டுப் படித்து நமது இரட்சிப்புக்காகக் கவலைப்படுவது தான். மற்றதெல்லாம் இதற்குப் பிந்தி வரவேண்டும். இப்பூமிக்காகப் பட்ட எல்லாக் கவலையும் பிரயாசையும் சாகும் வேளையில் என்ன பிரயோசனத்தைத் தரும்? நீ மரியாள்போல் செய்தால் நீ உற்சாகத்தோடும் பாக்கியத்தோடும் சாகவும், நீ உன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாய் என்று அப்போது அறியவும் கூடும்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது போதகமும் அன்பும் எல்லாவற்றிலும் முக்கியம் என்று எங்களுக்கு உணர்த்தும், நாங்கள் இவ்வுலக ஞானத்தையும் இன்பத்தையும் தள்ளி உம்மையே தெரிந்துகொள்ள எங்கள் இருதயங்களைப் பிரகாசிப்பித்தருளும், சுவாமி, ஆமென்.

1 மோ. 22, 1-19. அல்லது 2 கொரி. 4, 1-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இரண்டாம் வாரம், புதன்.

பி. 383, 1. 2.

சகோதரரே, நாங்கள் எப்போதும் உங்களுக்காகப் பராபரனை ஸ்தோத்திரிக்க வேண்டியது; அது காரியத்துக்கு ஏற்றிருக்கிறது. ஏனென்றால் உங்கள் விசுவாசம் மிகவும் வளருகிறது, உங்கள் அனைவரிலும் ஒருவன்மேல் ஒருவனுக்குள்ள அவனவனுடைய சிநேகமும் பெருகுகிறது. 2 தெச. 1, 3.

அப்போஸ்தலன் இங்கே தெசலோனிக்கே ஊரில் இருக்கிற கிறிஸ்தவர்களைக் குறித்து நற்சாட்சி பகருகிறான். வாருங்கள் எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, என்கிற சத்தத்தைக் கேட்டு அவர்கள் வந்திருந்தார்கள். ஒன்றே தேவை என்று அவர்கள் அறிந்துகொண்டிருந்தார்கள். இதிலே அவர்களுடைய விசுவாசம் வளர்ந்து ஒருவரை யொருவர் சிநேகிக்கும் சிநேகம் பெருகிற்று. நமது சபைகளில் தேவ வசனம் செம்மையும் சுத்தமுமாய்ப் பிரசங்கிக்கப்பட்டு ஞான திரவியங்களும் தேவ கட்டளைப்படி பரிமாறப்படுகிறது. இந்தப் பெரிய கிருபைக்கு நாம் ஏற்றபடி ஸ்தோத்திரம் செலுத்த முடியாது. உங்கள் விசுவாசம்

வளர்ந்து உங்கள் சிநேகம் பெருகுகிறது என்று நம்மையும் நோக்கி அப்போஸ்தலன் சொல்லக் கூடுமானால் நல்லது. ஆழ வேர் விடாமலும் கிளைகளைப் பரப்பிக் கனிகளை மிகுதியாய்க் கொடாமலுமிருக்கும் மரம் ஒன்றுக்கும் உதவாது. அதுபோல் அநுதினமும் தேவ வசனத்திலிருந்து புதிய பெலனையும் சத்துவத்தையும் பெறாமலும் சோதனைகளோடு போராடி ஜெயம் கொள்ளாமலும் சிநேகமென்ற கனியை மிகுதியாய்க் கொடாமலும் இருக்கிற கிறிஸ்தவன் சரியான கிறிஸ்தவனல்ல. நாம் வளர்ந்து பெருகுவதற்குத் தேவையானதெல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. நாம் கனி கொடாத அத்திமரத்துக்கு ஒத்தவர்களாகி ஆக்கினைக்குட்படாதபடிக்குத் தேவ வசனத்தையும் ஞான திரவியங்களையும் சுறுசுறுப்பாய் அநுபவிப்போமாக. பவுல் சொல்லுவதுபோல் ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவாய்த் தேறின புருஷனாவது நம்முடைய இலக்கு. நாம் எல்லாவற்றிலும் ஆண்டவரைப்போல் ஆகுமட்டும் ஓய்ந்து இளைப்பாறக் கூடாது.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமதன்பில் நாங்கள் தேறி, உம்மைப் பற்றும் விசுவாசத்தில் வளர்ந்து நம்பிக்கையில் உறுதியாய் நிலைத்திருக்க எங்களுக்கு உமதாவியைத் தந்து உமதன்பை எங்கள் இருதயங்களில் ஊற்றியருளும், சுவாமி, ஆமென்.

1 மோசே 24, 1-21. அல்லது 2 கொரி. 5, 1-21. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இரண்டாம் வாரம், வியாழன்.

பி. 383, 3-5.

அவன் நீதியையும் இச்சையடக்கத்தையும் வரப்போகிற நியாயத்தீர்ப்பையுங் குறித்துப் பேசுகிறபோது, பேலிக்ஸ் பயம் அடைந்து: இப்போது நீ போ, எனக்குச் சமயமானபோது உன்னை வரவழைப்பேன் என்று பிரத்தியுத்தாரஞ் சொன்னான். நடபடி. 24, 25.

பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து பேலிக்ஸ் துரையோடு பேசிக்கொண்டிருந்தான். இதை அந்த ரோமன் ஒரளவாய்ச் சந்தோஷத்தோடு கேட்டும் அந்த மார்க்கத்தை அங்கீகரிக்க அவனுக்கு மனதில்லை. அவன் ஒரு யூதப் பெண்ணை விவாகம் பண்ணியிருந்தான். அவன் சுவிசேஷத்திற்குச் சத்துருவல்ல. தெய்வீக அன்பைப் பற்றிய பிரசங்கத்தை உலக சிந்தையுள்ள மனிதரும் தடையின்றிக் கேட்பார்கள். பாவத்தைக் கண்டித்துப் பரிசுத்தமாய் நடக்க வேண்டுமென்றாலோ,

பழைய மனிதன் இடறலப்பட்டுத் தூக்கத்தை விட்டு விழித்தெழுந்திருப்பான், அப்போது தேவ வசனத்தை இனிமேல் கேட்க வேண்டாமென்று பழைய துர்ச்சுபாவம் தடுக்கும். போக் கிறிஸ்தவர்கள் அந்தத் துரைபோல் சமயாசமயங்களில் தேவ வசனத்தைக் கேட்பார்கள், பழைய அநியாய நடக்கையை விட்டு ஓய்ந்து நமது ஆத்துமாக்களை இரட்சிக்கக் கூடிய சத்தியத்துக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது ஆண்டவருடைய கட்டளை. பரிசுத்தமாகுதலின்றி ஒருவனும் பராபரனைத் தரிசிப்பதில்லை என்றும், நான் ஒரு நாளில் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டும் என்றும், பராபரனுடைய வீட்டாரிடத்தில் நியாயத்தீர்ப்பு முந்தித் துவக்கும் என்றும் ஒவ்வொருவனும் நினைக்க வேண்டும். ஆட்டுக் குட்டியின் இரத்தத்தில் தன் அங்கியை வெளுப்பவன் பாக்கியவான். குணப்படத் தாமதம் பண்ணுகிறவர்களோ கடைசியாக மோசம் போவார்கள். நியாயாதிபதி தங்களை அழைக்கும் வேளை அவர்களுக்குத் தெரியாது. ஆகையால் உடனே குணப்பட்டால் நல்லது.

ஜெபம். பரிசுத்த பிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் உம்மைப்போல் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று கற்பித்தீர். ஆண்டவரே, நாங்கள் எங்கள் துர்க்குணத்தினால் எங்கள் பரம சுதந்தரத்தை இழந்துபோகாதபடி எங்களைக் குணப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 24, 22–51. அல்லது 2 கொரி. 6, 1-10. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். இரண்டாம் வாரம், வெள்ளி.

ஞ. 385. 1-3.

பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு லோகத்திலே வந்தார் என்கிறது உண்மையும் சகல அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமான வார்த்தை; அவர்களில் நான் பிரதான பாவியானவன். ஆகிலும் நித்திய ஜீவனை அடைய இயேசுகிறிஸ்துவின் பேரிலே விசுவாசிக்கப் போகிறவர்களுக்குத் திருஷ்டாந்தமுண்டாக, அவர் பிரதான பாவியாகிய என்னிடத்திலே நீண்ட பொறுமையை எல்லாம் காண்பிக்கும்படி இரக்கம் பெற்றேன். 1 தீமோ. 1, 15. 16.

நான் பாவிகளில் பிரதானமானவன் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் இடைவிடாமல் துன்பப்படுத்தின தன்னைப் போன்ற ஒரு மனுஷனை ஆண்டவர் தமக்கு ஊழியனாகத் தெரிந்துகொண்டதைப் பற்றி அவன் ஆச்சரியப்படுகிறான். இரட்சகர் காணமல்

போன ஆட்டுக்குட்டிக்குப் பாராட்டின இரக்கத்தையும் நீண்ட சாந்தத்தையும் தன்னில் அநுபவித்த கிறிஸ்தவன், தான் முன் நடப்பித்த மீறுதல்களை எப்போதும் நினைத்து மனஸ்தாபப்படுவான். அவன் உணர்ந்திருந்த கிருபை, தான் செய்த பாவத்தைக் குறித்து வெட்கத்தை அவனில் உண்டுபண்ணும். பழைய பாவங்களை நினைவுகூருகிறது கிறிஸ்தவனுக்கு வருத்தமாயிருக்கிறது. என்றாலும், இந்த நினைவு நமக்கு அதிக அவசியம். அது இயல்பான மனுஷனுடைய பொல்லாப்பைக் கண்களுக்கு முன்பாக நிறுத்தி, நம்மைத் தாழ்மையில் நிலைத்திருக்கச் செய்கிறது. அப்போஸ்தலன், தான் சரீரத்திலும் ஆத்துமத்திலும் அபாத்திரனும் கிறிஸ்துவுக்குக் கடனாளியும் என்று அறிவான். அவருடைய இராச்சியத்துக்காக அவனுக்கிருந்த பக்திவைராக்கியம் பூமியையும் கடலையும் ஓயாமல் கடந்து செல்லும்படி அவனை ஏவிற்று. இந்தப் பரிசுத்த வைராக்கியத்தில் கொஞ்சமாகிலும் நம்மிடத்தில் காணப்பட்டால் கிறிஸ்து நமக்குக் காண்பித்த உண்மைக்கும் நீண்ட சாந்தத்துக்கும் நாம் நன்றி செலுத்துகிறவர்களாயிருப்போம். அவருடைய வீட்டுக்காக நாமும் வைராக்கியமாகி நம்மையும் நமக்குண்டானதெல்லாவற்றையும் ஒப்புக்கொடுக்கக் கடவோம்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! ஏழைப் பாவிகளாகிய எங்களையும் உம்முடைய ஊழியத்துக்கென்று அழைத்ததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். கர்த்தாவே, நாங்கள் எங்கள் பாவங்களை அறிந்து மனஸ்தாபப்பட்டு உமக்கு வைராக்கியத்தோடு ஊழியம் செய்வதற்கு எங்களை எழுப்பியருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 24, 52-67. அல்லது 2 கொரி. 6, 11-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். இரண்டாம் வாரம், சனி.

ஞ. 117, 1-3.

இரண்டாம் மன்றாட்டு: உம்முடைய இராச்சியம் வருவதாக.

நாம் இப்படி மன்றாடுவதற்கு அர்த்தமென்ன? பராபரனுடைய இராச்சியம் நம்முடைய மன்றாட்டில்லாமல் வரும், ஆகிலும் அது நம்மிடத்திலேயும் வரவேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

அவருடைய இராச்சியம் நம்மிடத்தில் வருவதெப்படி? நாம் அவருடைய கிருபையினாலே அவருடைய பரிசுத்த வசனத்தை விசுவாசித்து இம்மையிலும் மறுமையிலும் தேவ சாயலாய்ப் பிழைத்து நடக்கும்படி பரம பிதா தமது பரிசுத்த ஆவியை நமக்குக் கொடுத்தால் அவருடைய இராச்சியம் நம்மிடத்தில் வரும்.

தேவ கிருபை கிறிஸ்தவர்களுடைய முழு ஜீவியத்தையும் ஆண்டுகொள்ளுகிறது. அவர்கள் கிருபையின் இராச்சியத்துக் குட்பட்டவர்கள். இயேசுநாதர் இந்தக் கிருபையின் இராச்சியத்துக்கு தேவ இராச்சியம் என்று பேரிட்டார். இது நம்மிடத்திலிருந்து உற்பத்தியானதல்ல. அதைப் பரிசுத்தாவியானவர் ஏற்படுத்தினார். அவரைக்கொண்டு, கிறிஸ்து வசனத்தினும் ஞான திரவியங்களினும் நிரம்பத் திரும்ப வந்து உலகத்தை இரட்சித்து, எல்லாரையும் பரிசுத்தமாக்கி ஆசீர்வதிக்கிறார்.

மனிதனே! உன்னுடைய முயற்சியினாலும் பிரயாசையினாலும் அல்ல, தேவ இரக்கத்தினாலும் கிருபையாய் ஆண்டுகொள்ளுகிற பரிசுத்த ஆவியினாலும் காரியம் ஆகும். ஆகிலும் நீயும் செய்யவேண்டியதொன்று மீந்திருக்கிறது. அதென்னவென்றால் இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதேயுங்கள் என்கிற வார்த்தையைக் கவனிப்பது தான்.

பரிசுத்தாவியானவர் நம்மைச் செம்மையான விசுவாசவழியில் நடத்தி நற்கிரியைக்கெல்லாம் ஏற்ற சித்தமுள்ளவர்களாக்கி இந்தப் பூமியில் தேவ பக்தியாய் ஜீவனம் பண்ணுவதற்கு நமக்கு ஒத்தாசை செய்கிறார். அவரால் ஏவப்பட்டவர்கள் மாத்திரம் தேவனுடைய உண்மையான பிள்ளைகளாகத் தேவ இராச்சியத்தில் வசித்து அந்த இராச்சியம் தன் நீதியோடும் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் அதிகம் அதிகமாய்த் தங்களிடத்தில் வருவதற்குப் பிரயாசப்படுவார்கள்.

ஜெபம்: எங்கள் பரம இராசாவாகிய இயேசு கிறிஸ்துவே! உமது இராச்சியத்தை இவ்வுலகில் ஸ்தாபிக்க உமது பரம மகிமையை விட்டு எங்களிடத்தில் இறங்கி வந்தீர், ஆண்டவரே, நாங்கள் உமது இராச்சியத்தின் மகிமையை அறிந்து அதிலே உமக்கேற்றபடி ஜீவனம் பண்ண எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 25, 27-34. அல்லது 2 சாமு. 7, 1-16. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். மூன்றும் வாரம், ஞாயிறு.

வி. 384, 1. 2.

சகல ஆயக்காரரும் பாவிகளும் அவர் வசனங்களைக் கேட்க அவரண்டை சேருகிறவர்களாயிருந்தார்கள். அப்போது பரிசேயரும் வேதபாரகரும்: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு, அவர்களுடனே சாப்பிடுகிறார் என்று முறுமுறுத்தார்கள். லூக். 15, 1. 2.

பாவிகள் இயேசுவின் வசனத்தைக் கேட்க அவரண்டை ஓடி வந்தார்கள். வேதப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிற பரிசேயர் இடறல்பட்டுத் தூஷிக்கின்றார்கள். ஏழைப் பாவிகளும் மாயக்காரரும் உள்ளமட்டும் காரியம் இப்படித்தான் இருக்கும். உலக இரட்சகரிடம் வரவேண்டிய அவசியத்தை எல்லாப் பாவிகளும் உணரவில்லையென்பது மெய்தான். ஆகிலும் பாவத்தில் முற்றிலும் சிக்கிக்கொண்டவன் பாவத்தின் வல்லமையையும் இரட்சகர் அவசியமென்பதையும் ஒரு பரிசேயனைப் பார்க்க இலேசாய் உணருவான். கெட்டுப் போன குமாரனைப் பற்றிய உவமை இதற்குச் சாட்சி.

பிதாவானவர்தாமே இப்பேர்ப்பட்டவர்களைக் குமாரனண்டை இழுக்கிறார். குமாரன் போய் அவர்களைத் தேடி அவர்களைத் தைரியப்படுத்தும்படிக்கு: கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்போது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்போது உங்களுக்குத் திறக்கப்படும் என்கிறார். சுய புண்ணியத்தைக் குறித்துப் பெருமைபாராட்டுகிற உன்னை நோக்கி நீ குணப்படுவது அசாத்தியம் என்று சொன்னால், உனக்குப் பெரிய இடறல் உண்டாகக்கூடும். என்றபோதிலும் இடங்கொள். ஆரோக்கியவான்களுக்கு வைத்தியன் தேவையாயிராமல் நோயாளிகளுக்கே தேவையாயிருக்கிறான் மனுஷகுமாரன் கெட்டுப்போனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்தார். நான் கெட்டுப்போனவன், எனக்கு இவ்வுலகில் இரட்சிப்பு இல்லை என்று நீ ஒப்புக்கொண்டால் இரட்சகர் உனக்குச் சமீபமாயிருக்கிறார். நீ அவருடைய கையைப் பிடித்துக்கொள். நீ அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். நீ எந்த நிலைமையிலிருந்தாலும் தேவ குமாரன் உன்னைப்பற்றி வெட்கப்படமாட்டார். நீ அவரை அழைத்தால் அவர் உன் வீட்டுக்கு வந்து உன்னோடு சாப்பிடுவார்.

ஜெபம். எங்கள் பரம மேய்ப்பரே! உமது இரத்தத்தினால் ஈடுபட்டு எங்களை இரட்சிக்க ஏழைப்பிள்ளையாய்ப் பிறந்து, கள்ளனைப் போல் மரித்தீர். கர்த்தரே, நாங்கள் எங்கள் பெருமையை விட்டுவிட்டு, எங்கள் பரிதாபமான நிலைமை இன்னதென்று அறிந்து உம்மண்டை ஓடி வர எங்களை இழுத்தருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 27, 1-30. அல்லது சங். 103. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். மூன்றாம் வாரம், திங்கள்.

ஞ. 384, 3. 4.

ஆனபடியினாலே பராபரன் ஏற்ற காலத்தில் உங்களை உயர்த்தும்படி, அவருடைய வல்லமையான கைக்குக் கீழாகத் தாழுங்கள். 1 பேதுரு 5, 6.

கிறிஸ்தவர்கள் தாங்கள் அநுபவிக்கும் துன்பங்களைப் பார்த்து ஆச்சரியப்படாதபடி பேதுரு அப்போஸ்தலன் இதை எழுதுகிறான். இந்த உலகத்தில் தேவ பக்தியாய் ஜீவனம்பண்ணுகிறவன் துன்பப்படுவது அவசியம் என்று வேதம் கூறுகிறது. கிறிஸ்தவர்களுடைய துன்பங்களுக்கோ இயேசுநாதர் சிலுவை என்னும் பேர் கொடுக்கிறார். சிலுவையானது நமக்கு அதிக அவசியமும் பிரயோசனமுமாயிருக்கிறது. கர்த்தருடைய சிலுவைகள் தீமைக்கென்றல்ல, சமாதானத்துக்கென்றே பலிக்கும். மாறுபாடான மனிதராகிய நாம் சௌக்கியத்தை மாத்திரம் பார்த்துத் துன்பத்தைக் கசப்பும் நமக்கு விரோதமும் என்று எண்ணுகிறோம். எப்போதும் நன்னாட்களைக் கண்டு எந்நேரமும் சந்தோஷத்தையும் இன்பத்தையும் களிப்பையும் அநுபவிக்க விரும்பும் பழைய மனிதனுக்குத் துன்பம் என்பது பிடிக்காது.

ஆண்டவர் துன்பத்தை அனுப்பும் காரணம் இன்னதென்று பேதுரு தெளிவாய்ச் சொல்லுகிறான். நம்மைத் தாழ்மைப்படுத்துவதே ஆண்டவருடைய நோக்கம். மற்றப்படி கிருபையின் இராச்சியத்திலே நாம் பெருமை பாராட்ட இடமிருக்கும். அந்தத் தாழ்மையை நாம் துன்பத்தினால் தான் படிப்போம். நீர் என்னைச் சிறுமைப்படுத்துகிறதினால் என்னைப் பெரியவனாக்குகிறீர் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். தேவ கிருபை நம்மைக் கண்டிக்கக் கண்டிக்கத் தாழ்மை நம்மில் அதிகமாகிறது. பெரிய கிரியைகளைச் செய்வதல்ல, பொறுமையோடு துன்பங்களைச் சகிப்பதே கிறிஸ்தவர்களுடைய மேன்மை. இதுதான் பாடுகளைச் சகித்த இரட்சகரைப் பின்செல்லும் வழி. இயேசுவே நீர் என் சந்தோஷம் என்று நீ துன்பகாலத்திலும் சொல்லக்கூடுமானால் நீ பாக்கியவான். நீங்கள் பலவித சோதனைகளில் விழும்போது அதைச் சுத்த சந்தோஷமாக எண்ணுங்கள் என்றும், சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான், ஏனெனில் அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மை நேசிக்கிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் என்றும் யாக்கோபு சொல்வதை நீ உணர்ந்தறிவாய்.

ஜெபம். என் அருமை இரட்சகரே! உமது கசப்பான பாடுகளையும் குற்றமில்லாத மரணத்தையும் உமது பிதா பார்த்து எல்லாவற்

றிற்கும் மேலான ஒரு நாமத்தை உமக்குக் கொடுத்தார். தேவரீர், உமது அடியாராகிய நாங்கள் இவ்விதமாக எங்கள் பாடுகளைச் சகித்து உமது மகிமையில் பங்கடைய எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 மோ. 27, 31-46. அல்லது 2 கொரி. 8, 1-15. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். மூன்றாம் வாரம், செவ்வாய்.

ஞ. 374, 5. 6.

அவன் தன்னை உணர்ந்தபோதோவெனில், அவன் சொன்னதாவது: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனை பேருக்கு அப்பம் திரட்சியாயிருக்கிறது, நானோ பசியினால் கெட்டுப் போகிறேன். நான் எழுந்து புறப்பட்டு, என் தகப்பனண்டைக்குப் போய், அவரை நோக்கி: தகப்பனே, வானத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று அழைக்கப்பட நான் பாத்திரனல்ல. உம்முடைய கூலிக்காரரில் ஒருவனைப்போல என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொன்னான். லூக். 15, 17-19.

கிருபை நிலைமையை விட்டுப் பிரிந்தும், மறுபடியும் உண்மையாய்க் குணப்படுபவர்களுக்கு கெட்ட குமாரன் ஒர் திருஷ்டாந்தமாகிறான். ஞானஸ்நான உடன்படிக்கையாகிய விசுவாசத்தின் இரகசியத்தை நல்ல மனச்சாட்சியோடு பிராயமுதல் காப்பாற்றுகிறவர்கள் வெகு கொஞ்சம் பேர். சிற்றின்பத்தினாலும், துர் ஆசை இச்சைகளினாலும், உலக சிற்றின்பங்களினாலும், நாம் பாதையை விட்டு விலகிப்போகும்படியாக நேரிட்டது. ஆயினும் அந்தப் பாதையை நாம் மறக்கமாட்டோம். ஆத்துமத்தையும் சரீரத்தையும் கெடுக்கிற பாவத்தின் கசப்பையும், நம்மைத் துன்பத்துக்கும் அவமானத்துக்கும் கொண்டுவந்து அப்புறம் நம்மைத் தள்ளுகிற லோகத்தின் வஞ்சனையையும் உணர்ந்ததினால் அந்தப் பாதையை வாஞ்சிப்போம். இப்படி வர வர மனஸ்தாபம் நமது இருதயத்தை நிரப்பும். இந்த மனஸ்தாபம் பின்னாலே உண்மையான சந்தோஷமாய் மாறிப்போகும். உலகமும் மனஸ்தாபப்படுகிறதுண்டு. அது மரணத்துக்கான மனஸ்தாபம். அது யூதாஸ்காரியோத் அடைந்த மனஸ்தாபம். நித்திய சந்தோஷத்துக்கு ஏதுவான மனஸ்தாபமோ தேவ கிருபையினால் நம்மில் உண்டாகிறது. நான் பாவம் செய்தேன், உம்முடைய குமாரன் என்று அழைக்கப்படுகிறதற்கு நான் பாத்திரவான் அல்ல என்று அறிக்கையிட்டாலன்றி ஒன்றும் ஆகாது. தேவனுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் நாம் நமது பாவத்தை அறிக்கையிட்

டால்தான் அதைத் தள்ளிவிடக் கூடும். பரமண்டலங்களிலிருக்கிற பிதாவை ஏமாற்ற முடியாது. அவர் நம்மைத் தமது பிள்ளையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், நாம் நமது இருதயங்களை அவருக்குத் திறந்து அதிலிருக்கிறதெல்லாவற்றையும் காண்பிக்க வேண்டும். கர்த்தர் செம்மையானவர்களுக்கு இரங்கி கிருபை செய்வார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! கெட்டுப்போனவைகளைத் தேடிப் பரம மகிமைக்குக் கொண்டுவரச் சித்தமாயிருக்கிறீர். ஆண்டவரே, நாங்கள் உமது சத்தத்தைக் கேட்டு இவ்வுலகத்தின் வஞ்சனையை அறிந்து எங்கள் ஆத்தும இரட்சிப்பை நாட எங்களுக்கு ஒத்தாசைபண்ணியருளும், சுவாமி, ஆமென்.

1 மோ. 28, 1-22. அல்லது 2 கொரி. 8, 16-24. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். மூன்றும் வாரம், புதன்.

ஞ. 384, 7. 8.

இப்படியே குணப்படுதல் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப் பார்க்கிலும் குணப்படுகிற ஒரே பாவியின்பேரிலே பரமண்டலத்தில் அதிக சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். லூக். 15, 7.

கெட்ட குமாரன் திரும்பி வந்தபோது தகப்பனுடைய வீடு முழுவதும் சந்தோஷமாய் இருந்தது. நம்மெல்லாருக்கும் பிதாவும் வானலோகத்தான். ஒரு ஆத்துமா குணப்பட்டுப் பரம பிதாவண்டைக்குத் திரும்பும்போது பரலோகம் எங்கும் சந்தோஷமுண்டாகும்.

ஆண்டவருக்கு அவ்வளவு வேதனையையும் துக்கத்தையும் உண்டாக்கின அவருடைய பிள்ளைகளாகிய நாம், நம்மை அழைக்க வந்த அவரைத் தள்ளிவிடலாகாது. பாவிகளுக்காக அழுது புலம்பித் திவ்வியமான மரணபரியந்தம் அவர்களுக்காகத் துன்பப்பட்ட இயேசுநாதருக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுத்து அவருக்கு அனேக சந்தோஷத்தை உண்டாக்குவோமாக. இயேசு பிறக்கும்போது ஸ்தோத்திரம் பாடின தேவதூதர், அவருடைய மரணத்தால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவிக்காக மிகவும் களிகூருவார்கள்.

இதோ, சாத்தானும் அவன் சேனையும் உன்னைப் பிடித்து நித்திய அழிவுக்குக் கொண்டுபோகச் சதிநினைக்கிறார்கள். இயேசுநாதரோ தமது சேனைகளோடு நின்று உன்னைக் காப்பாற்றப் பார்க்கிறார். நீ யார் பக்கத்தில் சேருவாய். உன்னை உலகத்தோற்றத்துக்குமுன் நேசித்துத் தமது உயிரை உனக்காகப் பலியிட்ட

தேவ குமாரனைத் தள்ளிவிடாதே. உலகத்தின் வஞ்சகத்தையும் சதியையும் நம்பாதே. நீ மேய்ப்பருடைய சத்தத்தைக் கேட்டு அவரைப் பின்சென்றால் அழியாத சந்தோஷம் உன் கதியாகும். நீ இவ்வுலகின் பிரபுவை நம்பி அவனைப் பின்சென்றால் உன் கதி அதோகதி தான். இந்த இரண்டில் ஒன்றைத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். தாமதம்பண்ணாதே. இயேசுநாதர் உன்னைத் தேடத் தாமதம்பண்ணமாட்டார். இவ்வுலகின் பிரபுவும் உன்னைப் பிடிக்கத் தாமதம்பண்ணான். நீ விழித்து உன் ஆத்துமத்தைத் தப்புவித்துக்கொள்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! உமது திரு இரத்தத்தினால் மீட்ட எங்களை ஓயாமல் தேடி, உமதுமந்தைக்குக் கொண்டுவர இடைவிடாமல் பிரயாசைப்படுகிறீர். ஆண்டவரே, நாங்கள் உமது இரக்கத்தைத் தள்ளாமலும் எங்கள் பரம சுதந்தரத்தை இழந்துபோகாமலுமிருக்க எங்கள் நிர்விசாரத்தை நீக்கி எங்களை [illegible]ப்படுத்தியருளும், சுவாமி, ஆமென்.

1 மோ. 29, 1-20. அல்லது ௨ கொரி. 9, 1-15. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். மூன்றும் வாரம், வியாழன்.

ஞ. 361, 1-3.

இயேசு அவனுடனே: இன்று இந்த வீட்டுக்கு இரட்சிப்பு உண்டாயிற்று; ஏனென்றால் இவனும் ஆபிரகாமுடைய குமாரனாயிருக்கிறான், ஏனெனில் இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுஷகுமாரன் வந்தார் என்றார். லூக். 19, 9. 10.

ஆயக்காரரோடும் பாவிகளோடும் சேர்ந்து அவர்களோடு சாப்பிட இயேசுநாதர் வெட்கப்பட்டதில்லை. ஆயக்காரருக்குத் தலைவனாகிய சகேயுவின் வீட்டுக்கு வந்து "கெட்டுப்போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுஷகுமாரன் வந்தார்" என்றார். இந்த வார்த்தை நம்மையும் அதிக தாழ்மைக்கு ஏவுகிறது. நாம் கெட்டுப்போனவர்களென்றும், நம்மைக் கெடுத்து அழிக்கிறது நமது பாவந்தான் என்றும், நமக்கு இதனால் தெரிய வருகிறது. பாவியான மனுஷன் தேவனையும் தேவ வசனத்தையும் விட்டுத் தன்னை மாய்கையான உலகத்துக்கும் அதின் சிற்றின்பத்துக்கும் ஒப்புக்கொடுத்திருக்கிறான். தேவனையும் அவருடைய அன்பையும் விட்டவனுடைய கதி நித்திய அழிவு தான். நம்மெல்லாருக்கும் பாவத்தினால் வரவேண்டிய சம்பளம் இதுதான். அக்கிரமம் புரிந்து சிறைச்சாலையில் அடைபட்ட கைதிகள் மாத்திரம்

அல்ல, புறம்பாக யோக்கிய ஜீவனம் பண்ணுகிறவர்களும் இரட்சகர் இல்லாவிட்டால் கெட்டுப்போவார்கள். இத்தீர்ப்பைக் கேட்கிற நாம் நம்மைத் தாழ்த்த வேண்டும். இயேசு பாவி சேர்நாம் என்கிற வார்த்தையையன்றி நம்மை வேறொன்றும் ஆற்றித் தேற்ற முடியாது. பாவிகளை இரட்சிக்கவும் கெட்டுப்போனவர்களைத் தேடி மீட்கவும் அவர் வானத்தை விட்டு, பூமியில் இறங்கி, நமது சரீரத்தை எடுத்து, மனுஷனாகப் பிறந்து நமது பாவங்களுக்காக மரித்தார். நல்ல மேய்ப்பனானவர் உன்னைத் தேடுகிறார் என்றும் உனக்கு நித்திய மோட்சத்தைக் கொடுக்க விரும்புகிறார் என்றும் மறக்காதே, அவரை விட்டால் உனக்கும் இரட்சிப்பில்லை.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது பின்னே சென்ற [illegible] சாக்கள் உமக்கு முன்பாக விழு [illegible] திருவையும் பொறுமையையும் தேடி வருகிறோம், நாங் [illegible] கிறதும் காலிதம் [illegible] விதமான பாவங்களைப் [illegible] றுகொண்டு அறிக்கையிடுகிறோம். தயவுள்ள சுவாமி, நாங்கள் செய்த [illegible]களையெல்லாம் மன்னித்து எங்களை இரட்சியும், சுவாமி, ஆமென்.

1 மோ. 32, 1-12. அல்லது 2 கொரி. 10, 1-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். மூன்றாம் வாரம், வெள்ளி.

ஞ. 361, 4-6.

என்னுடைய ஆடுகளை நான் மேய்த்து அவைகளை நான் மடக்குவேனென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நான் காணாமற்போனதைத் தேடித் துரத்துண்டதைத் திரும்பக் கொண்டுவந்து, நசுக்கப்பட்டதைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்தி, கொழுப்பும் பெலனுமாயிருக்கிறதையோ அழிப்பேன், நியாயமாய் அவைகளை மேய்ப்பேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். எசே. 34, 15. 16.

கிறிஸ்து இயேசுவில் இந்த வாக்குத்தத்தம் மகிமையான வண்ணமாக நிறைவேறிற்று. அவர் தம்முடையவர்களைத் தமது ஊழியத்தின் நாட்களிலே எப்படித் தேடி வந்தாரோ அப்படி இப்போதும் பரம பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து அவர்களைத் தேடி மேய்க்கிறார். பரிசுத்த ஞானஸ்நானத்தால் நம்மைத் தமக்குச் சொந்தமும் தம் மேய்ச்சலின் ஆடுகளுமாக்குகிறார். நம்மை எச்சரித்து ஆற்றித் தேற்றும் தேவ வசனமும் இராப்போஜனமும் அவருடைய புல்லுள்ள ஸ்தலங்களாம்.

ஆகிலும் ஞானஸ்நானம் பெற்ற நாம் எத்தனையோ தரம் நல்ல மேய்ப்பரை விட்டு உலக சிந்தைகொண்டு ஆகாத வழிகளுக்

குத் திரும்பி மறுபடியும் காயப்பட்டோம். தெறிபட்டுப்போனது தன்னைத்தான் தேட மாட்டாது. வழிதப்பிப்போனது, தானே சரியான வழியைக் கண்டுபிடித்துத் திரும்ப முடியாது. நசுக்கப்பட்டது தன்னைத்தான் காயங் கட்டாது. நல்ல மேய்ப்பராகிய இயேசுவோ தமது ஆட்டுக்குட்டியை மறவாமல் இடைவிடாது பின்சென்று தேடுகிறார். தன்னைக் கெடுத்து வருகிற பாவக்கேட்டையும் இரட்சிக்கும் சிலுவையையும் அது காண்பதற்கு அதின் கண்ணைத் திறந்து சாத்தானுடைய கண்ணிகளிலிருந்து மீட்டுக் காயப்பட்ட மனச்சாட்சியைச் சுகப்படுத்துகிறார்.

உன்னைத் திரும்பக் கண்டுபிடித்துத் தமது மந்தைக்குக் கொண்டுவந்த நல்ல மேய்ப்பராகிய அவரை விட்டு அலைந்து திரியாதபடி பயந்திரு. திகிலுள்ள இருதயமே, நசல்கொண்டதைத் திடப்படுத்துவோம் என்கிற அவருடைய வாக்குத்தத்தத்தைக் கெட்டியாய் நம்பு. நீ பெலவீனனென்று அறிந்துகொள். அப்போது கிறிஸ்துவின் பெலத்துக்கு உன்னில் இடமிருக்கும். அவருடைய பெலன் நமது பெலவீனத்திலே நிறைவேறுகிறது. ஒருவனும் அவர் ஆடுகளை அவர் கையிலிருந்து பிடுங்கிக்கொள்ளான்.

ஜெபம், எங்கள் பரம மேய்ப்பரே! எங்கள் ஆத்துமங்கள் இவ்வுலகின் இன்பங்களிலேயும் மோசங்களிலேயும் காயப்பட்டுக் குற்றுயிராய்க் கிடக்கிறதைப் பாரும். எங்கள் காயங்களைக் கட்ட ஒருவருமில்லை. உமதாடுகளைத் தேடும். எங்கள் காயங்களைக் கட்டி எங்களைச் சுகப்படுத்தியருளும், சுவாமி, ஆமென்.

1 மோ. 32, 13-30. அல்லது 2 கொரி. 11, 1-15- வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். மூன்றாம் வாரம், சனி.

ஞ. 110, 1. 2.

மூன்றாம் மன்றாட்டென்ன? உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

நாம் இப்படி மன்றாடுவதற்கு அர்த்தமென்ன? பராபரனுடைய நன்மையும் கிருபையுமுள்ள சித்தம் நமது மன்றாட்டில்லாமல் செய்யப்படும், ஆகிலும் அது நம்மிடத்திலேயும் செய்யப்பட வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

அவருடைய சித்தம் நம்மிடத்தில் செய்யப்படுவதெப்படி? பராபரன் தம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படவும் தம்முடைய இராச்சியம் வரவும் ஒட்டாதிருக்கிற பிசாசு லோகம் மாம்சம் என்றவைகளின் துர் ஆலோசனையையும் சித்தத்தையும் மறுத்துத் தடுத்து நம்மைத் தம்முடைய

வசனத்திலேயும் விசுவாசத்திலேயும் மரணபரியந்தம் நிலைப்படுத்திக் காப்பாற்றினால் அவருடைய நன்மையும் கிருபையுமுள்ள சித்தம் நடப்பிக்கத்தில் செய்யப்படும்.

நமது தேவனுடைய சித்தம் நன்மையும் கிருபையுமுள்ளது. அவருடைய சித்தத்தைப்போல் அவர் நம்மை நடத்தும் வழிகளும் நியாயம். அவர் நீதியும் செம்மையுமானவர். தேவ இராச்சியம் ஒவ்வொரு ஜாதியினிடத்திலும் ஒவ்வொரு மனிதனிடத்திலும் வரவேண்டுமென்பது அவருடைய சித்தம். தேவனற்ற உலகமும் அதின் தம்பிரானும் அவருடைய இராச்சியம் பிரபல்லியமாகாதபடி பிரயாசப்பட்டாலும், அவர்களால் ஒன்றும் ஆகாது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட்டுச் சத்தியத்தின் அறிவுக்கு வரப் பராபரன் சித்தமாயிருக்கிறார். அந்தச் சித்தத்தைத் தடுக்க ஒருவனாலும் முடியாது.

அவருடைய இராச்சியத்தின் மகிமை உதிக்கும் காலமும் இடமும் நமக்குத் தெரியாது. என்றாலும், பலவழி வகையும் உம்மாலே ஏற்படும், நீர் செய்வது இசையும் நீர் சொன்னது வரும், நீர் வாக்குத்தத்தம் பண்ணி மொழிந்தது எல்லாம், உம்மால் தடையுமின்றி நற்காலத்தில் உண்டாம் என்று பாடுகிறோம். தாவீது இதை உணர்ந்திருந்து என்ன சொல்லுகிறான்: உமது கிரியைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள். அவைகளின் தொகை எத்தனை திரட்சி என்று சங்கீதாவுத்தேதாதி களிகூருகிறான்.

உனக்கு எல்லாவற்றிலும் கொடுமையான சத்துரு உன் சுயசித்தம் தான். அதைத் தள்ளிப்போட்டுத் தேவசித்தத்திற்குக் கீழ் அடங்கினால் எல்லாரிலும் பாக்கியமுள்ளவனாவாய்.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! உமது இராச்சியம் பூமி எங்கும் பரம்பி எல்லா ஜாதிகளிடத்திலும் பிரசங்கிக்கப்படுவதற்கு ஒத்தாசை பண்ணும், இந்த இராச்சியத்தில் சேர்ந்த நாங்கள் உமது சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்கு உதவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 33, 1-20. அல்லது 2 கொரி. 11, 16-33. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். நாலாம் வாரம், ஞாயிறு.

ஷ. 104, 1. 2.

ஆனபடியினாலே உங்கள் பிதா இரக்கமுள்ளவராய் இருக்கிறது போல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாகுங்கள். குற்றமாய்த் தீர்மானிக்காதேயுங்கள், அப்போது குற்றமாய்த் தீர்மானிக்கப்படாதிருப்பீர்கள். ஆக்கினைக்

குள்ளாகத் தீர்க்காதேயுங்கள், அப்போது ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள். விடுதலைபண்ணுங்கள், அப்போது விடுதலைபண்ணப்படுவீர்கள். லூக். 6, 36. 37.

இரக்கம் என்பது மன உருக்கந்தான். இரக்கமுள்ளவர்களாயிருங்களென்பதற்கு மனதுருகுங்கள் என்பது அர்த்தம். தேவனுடைய பிள்ளைகளுக்கு இப்பேர்ப்பட்ட உருகும் இருதயங்கள் உண்டு. தேவன் இரக்கமும் கிருபையுமுள்ளவரென்று மோசே அவரைப் புகழ்ந்து சொல்லுகிறான். ஆகையால் இயேசுநாதர் தமது சீஷர்களை நோக்கி, உங்கள் பிதா இரக்கமுள்ளவராய் இருக்கிறதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாகுங்கள் என்கிறார். நீ தேவனுக்குப் பிள்ளையாய் இருக்க விரும்புகிறாய் அல்லவா? அவருடைய பிதாவடைவான கிருபை உனக்கு வேண்டும். அப்படி இருந்தால் தேவனுடைய பிள்ளை என்பதற்கு இரக்கமே அடையாளம் என்றறி.

அநேகம் ஏழைகளுக்குத் தர்மம் கொடுத்தேன், அநேக நிர்ப்பந்தர்களுக்கு உதவி செய்தேன், ஒரு பிச்சைக்காரனும் பிச்சை பெறாமல் என் வீட்டைவிட்டுப் போனதில்லை என்கிறாய். இது இரக்கத்தில் ஒரு பாகம். கொடுங்கள் என்கிற வார்த்தையினாலே ஆண்டவர் இதைக் குறிக்கிறார். அதற்கு முந்தி என்ன சொல்லுகிறார், குற்றமாய்த் தீர்மானிக்காதேயுங்கள், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயுங்கள், விடுதலைபண்ணுங்கள் என்கிறார். இந்த வார்த்தை சுயநயம் பாராட்டும் கடுமையான இருதயத்தைக் குறிக்கிறது. உன் பிறத்தியானைப் பற்றிப் பொல்லாததை நினைத்துப் பேசுவது உனக்குப் பிரியமாயிருந்தால் அது குற்றமாய்த் தீர்மானித்தல் என்று ஆண்டவர் சொல்லுகிறார். நீ உன் பிறத்தியானைப் பாவியும் கெட்டவனுமென்று சொன்னால் இது ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தலாம். உன் பிறத்தியார் உனக்குச் செய்த தீமையை நீ மனதார மன்னித்து மறந்துவிடு. சந்தோஷத்தோடு கொடு. பராபரனிடத்திலும் மனிதரிடத்திலும் இரக்கத்தைக் கண்டுபிடிப்பீர்களென்பது இரக்கம் உள்ளவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம்.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! எங்கள் கடினமான இருதயங்களை உருக்கி, உமதன்பின் தீயை அதிலே மூட்டியருளும். நாங்களும் உம்மைப்போல் இரக்கமுள்ளவர்களாய் எல்லா மனிதருக்கும் இரங்கி எங்களைப்போல் எங்கள் பிறத்தியாரைச் சிநேகிக்க எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 27, 1-36. அல்லது சங். 51. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். நாலாம் வாரம், திங்கள்.

ஞ. 104, 3. 4.

ஏனென்றால் இக்காலத்துப் பாடுகள் நம்மில் வெளிப்படப்போகிற மகிமைக்குப் பாத்திரமானவைகள் அல்ல என்று எண்ணுகிறேன். ரோ. 8, 18.

அப்போஸ்தலன் ஒரு வியாபாரியைப்போல், கிறிஸ்தவனுடைய கஷ்டலாபங்களை ஒத்துப் பார்க்கிறான். ஒரு பக்கத்தில் இக்காலத்துப் பாடுகள் எழுதி இருக்கிறது. அது இரத்தத்தினாலும் கண்ணீரினாலும் நிறைந்த பரிதாபமான பக்கம். சரீரத்தின் பாடுகளாகிய வியாதியும் மரணமும், ஆத்துமத்தின் வேதனைகளாகிய துக்கமும் அவமானமும் இழிவும் நிர்ப்பாக்கியமும் இழந்துபோன சிநேகமும், பிறருடைய துரோகமும், நாமே செய்த தப்பிதங்களும், அவைகளுக்கு வர வேண்டிய தண்டனையும் ஆகிய இவைகளால் இந்தப் பக்கம் நிறைந்திருக்கிறது.

இன்னொரு பக்கத்தில் நாம் அடையப்போகும் ஒன்றான லாபம் பதியப்பட்டிருக்கிறது; அது நம்மில் வெளிப்படப்போகிற மகிமை தான். அது இன்னும் நமக்குச் சொந்தமாகவில்லை. என்றாலும், இக்காலத்துப் பாடுகள் அந்த மகிமைக்குப் பாத்திரமானவையல்ல என்பது அப்போஸ்தலனுடைய துணிவு. அது இவ்வளவென்று மதிக்கப்படாது. ஒருவன் சத்திரம் பண்ணப்படும்பொழுது அதினால் உண்டாகும் வலியை ஒரு பொருட்டாக எண்ணமாட்டான். ஏனெனில் சத்திரம் பண்ணுவதினால் நல்ல சுகம் உண்டாகுமென்று நம்புகிறான். அப்போஸ்தலனுடைய கணக்கும் இவ்வாறு தான். இந்தக் கணக்கு உலகத்திற்கு விளங்காது. ஏனெனில் உலகம் காணக்கூடிய பொருட்களை மாத்திரம் மதிக்கிறது. காணப்படாத மறுமையின் இன்பங்களை மதிக்க அதற்குத் தெரியாது. மறுமையில் இன்பம் உண்டென்று யாருக்குத் தெரியும் என்கிறது? ஆனால் நமது இருதயங்களில் ஊற்றப்பட்ட இயேசுவின் ஆவியானவர் வரப்போகிற மகிமைக்கு முத்திரையும் அச்சாரமுமாயிருக்கிறார். பாவமன்னிப்போடு உள்ள பாக்கியமும் மனச்சாட்சியின் சமாதானமும் ஆத்துமத்தின் அமைதலும் இருதயத்தின் திருப்தியுமாகிய இவை நாம் எதிர்பார்க்கிற பாக்கியத்தின் முன்ருசி. தேவ வசனம் இம்மைக்காக வாக்களித்ததை நாம் இப்பொழுது வாங்கினால் மறுமைக்காக வாக்களித்ததையும் வாங்குவோம்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது இரக்கத்தினால் எங்களை நம்மண்டை அழைத்துப் பரலோகத்தின் இன்பங்களை இப்பொழுதே எங்களை உணரச் செய்தீர். நாங்கள் இவ்வுலகின் பாடுகளுக்கு அஞ்சாமல்

எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக் கடைசியாய் உமது மகிமையின் பங்கடைவதற்குத் தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 39, 1 23 அல்லது 2 கொரி. 12, 1-10 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். நாலாம் வாரம், செவ்வாய்.

ஞ. 104, 5. 6.

ஏனெனில் சிருஷ்டியினுடைய ஏக்கம் பராபரனுடைய புத்திரரின் வெளிப்படுதலுக்குக் காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது கேட்டினுடைய அடிமைத்தனத்தாக்கு நீங்கலாகிப் பராபரனுடைய பிள்ளைகளின் மகிமையான தன்மைக்கு உள்ளாகுமென்கிற நம்பிக்கையாய்ச் சிருஷ்டியானது மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. தன்னிச்சையாய் அல்ல, கீழ்ப்படுத்தினவர் நிமித்தமாகத் தானே. ரோ. 8, 19-21.

மூன்று தரம் இந்த வாக்கியத்தில் சொல்லப்பட்ட சிருஷ்டி எல்லாப் புல் பூண்டு விருக்ஷங்களும் ஜீவஜெந்துக்களுந்தான். மனிதருடைய குற்றத்தினால் சிருஷ்டி கெட்டுப்போய்ப் பாவத்தினால் உற்பத்தியான நிர்ப்பந்தத்திற்குட்பட்டது. தேவன் உண்டாக்கினதெல்லாம் நன்றாயிருந்தது. பாம்பின் மோசத்தினால் தேவன் மிருகங்களையும் மற்றெல்லாவற்றையும் சபிக்க அவசியமாயிற்று. அந்த நாள் முதற்கொண்டு சிருஷ்டி பயத்தோடு தவிக்கிறது. நாய் தன் எசமானோடு பசியினால் கஷ்டப்படுகிறது. குதிரை தன் எசமானோடு வேர்வை தரையில் விழ உழைக்கிறது. நாயும் குதிரையும் மற்ற ஜீவன்களும் அடிக்கடி வீணாய் அடியும் இம்சையும் அடைகின்றன. கிறிஸ்தவனே! இதைக் கவனி. இம்சிக்கப்பட்ட ஒவ்வொரு மிருகமும் மனிதர்பேரில் குற்றம் சாட்டுகின்றது.

மாயையாகிய அநித்தியம் நித்திய ஜீவனாகவும் நித்திய விடுதலையாகவும் மாறும் காலம் வரும். சிருஷ்டிக்கும் புதிய பூமியில் பங்கு கிடைக்கும் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். சிருஷ்டி தன் சித்தமும் குற்றமுமில்லாமல் மாயைக்குக் கீழ்ப்பட்டிருப்பதால் அதிலிருந்து விடுதலையாகக் கூடும். கிறிஸ்தவனே! நீ இப்பூமியின் நிர்ப்பந்தத்திலிருந்தும் பாவத்தின் அடிமைத்தனத்தினின்றும் விடுதலை ஆவென் என்று காத்திரு. தேவனுடைய சிருஷ்டியை, உன்னோடு சம்பந்தப்பட்டதாக எண்ணி அதைச் சிநேகித்து அதன் நிர்ப்பந்தத்தை அதிகரிக்கச் செய்யாமல் அதை அன்பாய் நடத்து.

ஜெபம். காருணிய தயவுள்ள பிதாவே! உமது கரத்தினால் உண்டாக்கப்பட்ட இப்பூமி மனுஷனுடைய பாவத்தினால் சாபத்துக்குள்ளாகித் தவிக்கிறது. தேவரீரோ ஒரு இரட்சகரைக்கொண்டு எல்லாவற்றையும் முன்னிருந்த மகிமைக்குக் கொண்டுவரப் பிரியசித்தமாய் இருக்கிறீர். கர்த்தாவே! நாங்கள் இந்த மகிமையை ஆவலோடு எதிர்பார்க்க எங்களை ஏவி எழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

1 மோ. 40, 1-23. அல்லது 2 கொரி. 12, 11-21. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். நாலாம் வாரம், புதன்.

சங். 104, 7. 8.

தம்முடைய முகத்துக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய் அவருக்கு விடுதியை ஆயத்தம்பண்ணச் சமாரியருடைய ஒரு கிராமத்தில் பிரவேசித்தார்கள். அவர்களோ அவரை ஏற்றுக்கொண்டதில்லை. ஏனெனில் அவருடைய முகம் எருசலேமுக்குப் போகிறதாயிருந்தது. அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் இதைக் கண்டபோது: ஆண்டவரே, எலியா செய்ததுபோல், நாங்கள் வானத்திலிருந்து அக்கினி இறங்கவும் அவர்களை அழிக்கவும் சொல்ல உமக்குச் சித்தமுண்டோ என்றார்கள். அவரோ திரும்பி: அவர்களை அதட்டி, நீங்கள் எந்த ஆவியின் சம்பந்தம் என்று அறியீர்களோ? ஏனெனில் மனுஷனுடைய குமாரன் மனுஷருடைய ஆத்துமாக்களைக் கெடுக்க அல்ல, இரட்சிக்க வந்தார் என்றார். அப்போது வேறொரு கிராமத்திற்குப் போனார்கள். லூக். 9, 52-56.

ஆண்டவருடைய சாந்தத்தைப் பார். குமுறலின் குமாரராகிய யாக்கோபுக்கும் யோவானுக்கும் இரட்சகர், மனுஷகுமாரனாகிய தம்மால் வெளிப்பட்ட சிநேகத்தின் ஆவி இன்னதென்று காண்பிக்கிறார். அவர் மனுஷ ஆத்துமாக்களைக் கெடுக்க அல்ல, அவைகளை இரட்சிக்கவே வந்தார். சமாரியர் அவரை ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் அவர்களை முற்றிலும் தள்ளிவிடமாட்டார்.

ஆண்டவர் உன்னிடத்தில் வர மனதாயிருக்கும்போது நீ அவரை ஏற்றுக்கொண்டாயா? வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் கோவிலிலும் நீ தேவவசனத்தைக் கேட்கும்போதெல்லாம் நான் வந்து உன்னிடத்தில் வாசம்பண்ணுவேனென்கிற அவருடைய பட்சமான சத்தம் தொனிக்கிறது. ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும் என்று நீ அவரை நோக்கிச் சொன்னால், அவர் மெய்யாகவே உன்னிடத்தில் வாசம்பண்ண வருவார். அவரை ஏற்றுக்கொள்ள உன் இருதயத்தை ஆயத்தப்படுத்து.

நீ அவரை ஏற்றுக்கொண்டால் உன் மனதிலே சமாதானமும் ஆறுதலும் திண்ணமான நம்பிக்கையும் உண்டாகும். ஆண்டவர் சமாரியருக்கு எப்படி இரங்கினாரோ அப்படியே அவர் உனக்கும் இரங்குவார். அவர் உன் கதவில் வீணாய்த் தட்டாதபடி பார். இதோ நியாயத்தீர்ப்பு சமீபமாயிருக்கிறது. உனக்கு அது ஒருவேளை அதிக சமீபமாயிருக்கலாம். இயேசுநாதர் உன் இருதயத்தில் இல்லையானால் தேவ கோபத்துக்கு உன்னை விலக்கிக் காக்க ஒருவனாலும் ஆகாது.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது பொறுமையையும் நீண்ட சாந்தத்தையும் நினைத்து உம்மைத் துதிக்கிறோம். தேவரீர், எங்கள் மேலிரங்கி எங்களை உமது இராச்சியத்தில் சேர்த்துக்கொள்ளும். உமது திருநாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரம் உண்டாவதாக, சுவாமி, ஆமென்.

1 மோ. 41 1-39. அல்லது 2 கொரி. 13 1-13. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். நாலாம் வாரம், வியாழன்.

சங். 104, 9. 10.

உங்களுக்கு மனுஷர் எப்படிச்செய்ய வேண்டுமென்று இருக்கிறீர்களோ, அப்படி அவர்களுக்கு நீங்களும் செய்யுங்கள். லூக். 6, 31.

மனுஷர் உன்னோடு பட்சமாய்ப் பேசி உன்னிடத்தில் பொறுமை பாராட்டி உன் கஷ்டங்களில் உனக்கு உதவிசெய்ய வேண்டுமென்று விரும்புகிறாய் அல்லவா? உன்னை நன்குமதித்து உன் வேலையைப் புகழ்ந்து மெச்சிக்கொள்ள வேண்டுமென்கிறாயல்லவா? இதையெல்லாம் மனுஷரிடம் நீ எதிர்பார்ப்பது நியாயம்தான். உனக்கு எது சரியோ அது மற்றவர்களுக்கும் சரி. இவர்களும் உன்னைப்போல் மனுஷர், மேலும் கிறிஸ்தவர்களுமாயிருக்கிறார்கள். ஆகையால் பட்சத்தை விரும்புகிற நீ ஒவ்வொருவனுக்கும் பட்சத்தைக் காட்டு. ஜனங்கள் உனக்கு மன்னிக்க வேண்டுமானால் நீயும் அவர்களுக்கு மன்னி. உன் பிறத்தியானை உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்பது எல்லாக் கற்பனைகளின் தொகை. நமக்குள் இருக்கிற பழைய மனிதன் தற்சிநேகமும் அநியாயமுமுள்ளவனாயிருப்பதால் ஆண்டவர் இப்பேர்ப்பட்ட கட்டளை கொடுக்க நேரிட்டது. தற்சிநேகமே நமக்கு இயற்கை. பிறரானவர்களுக்குப் பட்சத்தைக் காட்டாமல் அவர்களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணிப், பிறத்தியான் செய்த தீய காரியத்

தைப் பிறருக்குத் தெரிவித்து வருவது நமது இஷ்டமாம். பிறரை அவமதித்து, நம்மையே நாம் நன்குமதிக்கிறோம். நமக்கடுத்தவனது நிலைமையில் நம்மை வைத்து அந் நிலைமையில் அவன் நமக்குச் செய்ய வேண்டுமென்று நாம் விரும்புவதை அவனுக்கும் செய்வோமாக. பிறத்தியான் எனக்குச் செய்த அளவு நானும் அவனுக்குச் செய்தேன் என்று சொல்லாதே. உன் இரட்சகருடைய அன்பைப் பார். வானத்தை விட்டு வந்து உன் நிமித்தம் நிர்ப்பந்தத்திற்குள்ளானார். உன் பாவத்தை மன்னித்து உனக்காக வேண்டிக்கொள்ளுகிறார். நீ அவருடைய சீஷனாகி அவருடைய பாக்கியத்திலும் மகிமையிலும் பங்கடைய வேண்டுமானால் அவருடைய மாதிரியைப் பின்தொடர்ந்து வா.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் மென்மேலும் உமது குணத்தை அடைந்து உம்மைப்போல் பிறத்தியானைச் சிநேகித்து அவனுக்கு மன்னித்து அவனோடு உமக்கு மகிமை உண்டாக இவ்வுலகில் ஜீவனம்பண்ண எங்களுக்கு ஒத்தாசை பண்ணும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 41, 37-57, அல்லது கலா. 1, 1-10. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். நாலாம் வாரம், வெள்ளி.

வி. 104, 11. 12.

கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது அவர் கூறினதாவது: அவர் கர்த்தர், அவர் கர்த்தர், அவர் மனஉருக்கமும் இரக்கமும் நீடிய சாந்தமும் மகா கிருபையும் உண்மையுமுள்ள பராபரன். அவர் ஆயிரம் தலைமுறைகளுக்குக் கிருபையைக் காக்கிறவர். அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர். அவர் குற்றமுள்ளவனைக் குற்றமற்று நீங்கவொட்டாமல் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும் பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றும் நாலாம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார். 2 மோ. 34, 6. 7.

ஆண்டவர் தனக்கு முன்பாகக் கடந்து போகும்போது மோசே சீனாய் என்கிற மலையில் இருந்தான். இஸ்ரவேலர் பொற்கன்றுக்குட்டியை உண்டாக்கித் தம்மை விட்டுப் பின்வாங்கின பாவத்தைக் கர்த்தர் அவர்களுக்கு மன்னித்தார். இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கையை அவர் மறுபடியும் புதுப்பிக்கப்போனார். அவ்வேளையில் மோசே: கர்த்தர் மனஉருக்கமும் இரக்கமும் நீடிய சாந்தமும் மகா கிருபையும் உண்மையுமுள்ளவரென்று அவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரித்தான்.

நமக்கு அன்னபானம் வீடு வாசல் முதலிய எண்ணிமுடியாத நன்மைகளை அருளி நமதுபேரில் அனுதினமும் இரக்கம் வைக்கிற ஆண்டவரை நாமும் புகழ்ந்து ஸ்தோத்திரிப்பது தகுதி. உன்னால் செய்ய முடியாததை அவர் செய்து நீ கைக்கொள்ளாத உடன்படிக்கையை அவர் கைக்கொள்ளுகிறார். பரிசுத்த ஞானஸ்நானத்தைப் பெறும்போதும் திடப்படுத்தப்படும்போதும் அவருடைய பிள்ளைகளாக அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வோமென்று நாம் வாக்களித்தோம். ஆயினும் இந்த வாக்கை நாம் கைக்கொள்ளவில்லை. என்றாலும், ஆண்டவர் திரும்பத் திரும்பத் தமது உடன்படிக்கையைப் புதுப்பித்து நம்மை ஏற்றுக் கொள்ளுகிறார். அவர் இப்போது நமது அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறார். அவர் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய கணக்கில்லாத நன்மைகளைச் செய்து நம்மை நித்திய மோட்சத்தில் சேர்க்க மனதாயிருக்கிறார். அவரைச் சிநேகி. நீங்கள் என்னைச் சிநேகித்தீர்களேயானால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று இரட்சகர் சொல்லுகிறார்.

ஜெபம். திரியேக பராபரனே! உமது உடன்படிக்கையைத் தேவரீர் கைக்கொண்டு வருகிறதினால் தேவரீர் உண்மையுள்ளவரென்று அறிந்திருக்கிறோம். ஆண்டவரே! நாங்கள் உமது உடன்படிக்கையை மீறிப் பின்வாங்கி எங்கள் சுதந்தரத்தை இழந்து போகாதபடி எங்களைக் காரும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 42, 1-38. அல்லது கலா. 1, 11-24. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். நாலாம் வாரம், சனி.

வி. 110, 3. 4.

நாலாம் மன்றாட்டென்ன? அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்.

நாம் இப்படி மன்றாடுவதற்கு அர்த்தமென்ன? பராபரன் சகல மனிதருக்கும் பொல்லாதவர்களுக்குங்கூட அன்றன்று வேண்டிய அப்பத்தை நம்முடைய மன்றாட்டில்லாமல் கொடுத்துக்கொண்டு வருகிறார். ஆனால் நாம் மேலும் அன்றாடக அப்பத்தை அவர் கையிலிருந்து பெற்றுக்கொண்டு நன்றியறிதலோடே சாப்பிடுவதற்கான புத்தியை நமக்குத் தந்தருள வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

அன்றன்றுள்ள அப்பமாவதென்ன? அன்னம் பானம் வஸ்திரம் வீடு வாசல் நிலம் ஆடு மாடு பணமுதலிய வஸ்துக்களும் பக்தியுள்ள சமுசாரம் பிள்ளைகள் பணிவிடைக்காரர்களும் உத்தமமும் உண்மையுமுள்ள அதிகாரிகளும் நல்ல ஆளுகையும் சமாதானமும் கால சவுக்கியமும் சரீர

சவுக்கியமும் ஒழுக்க வணக்கமும் நற்சிநேக சம்பந்தமும் அயலகத்தாருறவும் இவை முதலிய இச்சைகளுக்குத் தேவையானவைகளெல்லாம் நமது அன்றன்றுள்ள அப்பம் என்று சொல்லப்படும்.

முன்னோர்கள் இந்த மன்றாட்டை எளிதான மன்றாட்டு என்றார்கள். இது யாவருக்கும் வேண்டிய அன்னபானத்தைப் பற்றியது தான். ஆகையால் நாம் சந்தோஷத்தோடு இந்த மன்றாட்டைச் சொல்லுவோம்.

எங்கள் அப்பம் என்றால் தேவன் நமது வேலையை ஆசீர்வதித்து, நமது சம்பாத்தியமான அப்பத்தை நமக்குக் கொடுக்க வேண்டும் என்று அர்த்தம். அன்றன்றுள்ள அப்பம் என்றால் அந்த அப்பம் நமக்கு இப்பூமிக்காக மாத்திரம் அவசியம். இந்த அப்பத்திலே இன்னொரு அப்பம் குறிக்கப்பட்டிருக்கிறது. அது அசனத்தப்பமாகிய இயேசுகிறிஸ்து தான். தாரும் என்றால் நீ அதை உன் இஷ்டத்தால் உண்டாக்க முடியாது. தேவன் தமது கையைத் திறந்து அதை உனக்குக் கொடுக்கவேண்டுமென்பது கருத்து. எங்களுக்குத் தாருமென்றால் நாம் பிறருக்காகவும் ஜெபித்து நம்மால் ஆனமட்டும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று அர்த்தம். இன்று என்பதினால் நாம் அவநம்பிக்கைப்பட்டு மறுநாளை நினைத்துக் கவலைப்படமாட்டோம் என்று சொல்லுகிறோம். நாளைக்கு நாம் மறுபடியும் மன்றாடி, ஆண்டவருடைய கை திறக்கப்பட்டிருக்கும் என்பதை நம்புகிறோம்.

தேவன் ஏராளமாகக் கொடுக்கிறார். அவரை வேண்டிக்கொள்ளாமலும் அவருக்கு ஸ்தோத்திரம் சொல்லாமலும் அவருடைய ஈவுகளைக் கொள்ளைபோல் வாங்குகிற பொல்லாதவர்களுக்கொப்ப நாம் அவைகளை நியாயத்தீர்ப்புக்கென்று பெற்றுக்கொள்ளாதபடி ஜாக்கிரதையாயிருப்போமாக.

ஜெபம். தயவுள்ள பிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் தினந்தோறும் உமது கரத்திலிருந்து எண்ணிமுடியாத நன்மைகளைப் பெற்றுக்கொண்டு வருகிறோம். உமது பிதாவுடைய தயவுக்காக உமக்கு ஸ்தோத்திரம். உமது திருநாமத்திற்கு இன்றும் என்றும் துதியும் புகழ்ச்சியும் உண்டாவதாக, சுவாமி, ஆமேன்.

1 மோ. 43, 1-34. அல்லது கலா. 2, 1-21. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். ஐந்தாம் வாரம், ஞாயிறு.

ஏ. 106, 1. 2.

ஆனால் பேதுரு இதைக் கண்டு இயேசுவின் முழங்காலண்டை விழுந்து: ஆண்டவரே, என்னைவிட்டுப் புறப்படும், ஏனென்றால் பாவியான

மனுஷனாயிருக்கிறேன் என்றான். ஏனெனில் அகப்பட்ட மீன் வேட்டையினாலே அவனுக்கும் அவனுடனே கூட இருந்த யாவருக்கும் திகைப்பு உண்டாயிற்று. லூக். 5, 8. 9.

பேதுரு இயேசுவின் முழங்காலண்டை விழ அவனை ஏவினதென்ன? அவன் பாவமும் ஆண்டவருடைய தயவுந் தான். இயேசுநாதருடைய தயவைப் பார்த்தவுடனே தன் பாவத்தை உணர்ந்தான். அங்கு நிற்கிறவர் மெய்யான தேவனென்று இந்த அதிசயத்தினாலே அறிந்துகொண்டான். இயேசுநாதர் அருளின ஆசீர்வாதங்களுக்குத் தான் அபாத்திரன் என்று சந்தேகமற உணர்ந்தான். தேவனுக்கும் பாவிக்கும் ஐக்கியமிருக்கக் கூடாது என்று அவனுக்கு அப்பொழுது தெரிய வந்தது. அவ்வேளையிலே ஆண்டவர் அவனை மனிதர்களைப் பிடிக்கத் தக்கவன் என்று எண்ணினார்.

ஆண்டவர் எவ்வளவு பட்சமும் அன்புமுள்ளவரென்று பார். பயிர் நிறைந்த வயல்கள் எவ்வளவு செழிப்பு? அவற்றை உண்டாக்கினவர் உன் தேவனாகிய கர்த்தர் அல்லவா? பயிருக்கு விளைச்சலையும் வெயிலையும் மழையையும் கொடுக்கிறவர் அவரே. நான் எதைச் செய்து அவரிடம் நன்மை பெறப் பாத்திரவான் ஆனேன் என்று கேட்கவேண்டியது தான். ஆசீர்வாதமல்ல, சாபமே என் கதியானால் நியாயம் என்று சொல்லு. உன் தேவனைப் பார்க்காமலும் அவர் வசனத்தைச் சட்டைபண்ணாமலும் அவர் வழிகளில் நிலைத்திராமலும் இருந்தாய். என்றாலும், உன் தேவனானவர் உன்னைக் கைவிடாமல் உன்னை ஏராளமாக ஆசீர்வதித்தார். கிறிஸ்தவனே, நீயும் உன் அறையில் அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, ஏழைப் பாவியாகிய நான் உமக்கு முன்பாக விழுந்து உமது கிருபையையும் பொறுமையையும் தேட வருகிறேன் என்று வேண்டிக்கொள். அப்போது அவர் உன்னையும் தமது ஊழியத்துக்கென்று அழைப்பார். நீ இனிமேல் உன் சொந்தத்தில் அல்ல, அவருடைய இராச்சியத்திலே வேலை செய்வாய். ஆண்டவரால் இன்னம் ஆசீர்வதிக்கப்படாதவர்களும் அவரிடத்தில் சேருவதற்குப் பிரயாசைப்படுவாய். உன் பாக்கியத்தில் பிறரும் பங்கு அடையவேண்டுமென்பது உன் முக்கியமான நோக்கமாகும்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது தயவு எங்களைக் குணப்படுத்துவதற்கு ஏவி வருகிறது. நாங்களோ இந்தத் தயவை அசட்டைபண்ணி எங்கள் இருதயங்களைக் கடினமாக்குகிறோம். தயவுள்ள சுவாமி, எங்கள் கல் நெஞ்சை உருக்கி எங்களைக் குணப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 44, 1-34. அல்லது சங். 130. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். ஐந்தாம் வாரம், திங்கள்.

ஞ. 100, 1. 2.

எல்லாரும் ஒருமனப்பட்டவர்களும் பரதபிக்கிறவர்களும் சகோதர நேசரும் உருக்கமுள்ளவர்களும் பட்சமுள்ளவர்களுமாய் இருங்கள்; பொல்லாப்புக்குப் பொல்லாப்பையும் அல்லது உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாதேயுங்கள், அதற்கு எதிரிடையாக நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அழைக்கப்பட்டீர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள். ஏனெனில் ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் தன் நாவைப் பொல்லாப்புக்கும் தன் உதடுகளைக் கபட வசனிப்புக்கும் விலக்கி அமர்த்துவானாக. 1 பேது. 3, 8-10.

சபிக்கப்பட்ட உலகத்தாருக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார். கிறிஸ்தவனுக்கு ஒரு பேரான கதி இருந்தால் அவனுக்கு ஒரு பேரான குணமும் இருக்கவேண்டும். அவன் அதை வெளியிடவும் வேண்டும். சுபாவ மனுஷனாகிய உலகத்தான் தன் சொந்தக் காரியத்தையும் சுய மேன்மைகளையும் நாடித் தேடுகிறதினால் பிறர்மேல் இலேசாய்ப் பொறுமைகொண்டு கோபமும் இரக்கமும் அற்றுப் போவான். கிறிஸ்தவனோ பிறரைத் தன் சகோதரனென்று எண்ணி அன்பும் இரக்கமும் பட்சமுமுள்ளவனாயிருப்பான். சுபாவ மனுஷன் தனக்கு ஒருவன் செய்த பொல்லாப்பைச் சகிக்கமாட்டான். தனக்குப் பொல்லாப்புச் செய்து தன்னைத் தூஷணிக்கிறவனிடத்தில் அவன் பழிக்குப் பழி வாங்குவான். கிறிஸ்தவனோ பொல்லாப்புக்கு நன்மைசெய்து தன்னைத் தூஷணித்துச் சபித்தவனை ஆசீர்வதிப்பான். இயேசுகிறிஸ்து வையப்படுகிறபோது வையாமலும் பாடுபடுகிறபோது மிரட்டாமலும் நியாயமாய்த் தீர்க்கிறவருக்கு அதை ஒப்புக்கொடுத்தார். சீஷனோ தன் போதகனுக்கு மேலானவன் அல்ல.

சுபாவ மனுஷன் தன் நாவை அடக்காமல் பின் புறணி சொல்லிப் பொய்யும் வஞ்சனையும் பேசுவான். நாவு அடங்காத பொல்லாப்பு என்று யாக்கோபு சொல்லுகிறார். கிறிஸ்தவன் தன் நாவு பொய்யைப் பேசி வஞ்சகத்தைச் செய்யாதபடி அதை அடக்கி வைப்பான். இரட்சகர் பிலாத்துவுக்கு முன்பாக நின்று, யூதர்களால் கடுமையாய்த் தூஷணிக்கப்படும்போது ஒரு பதிலும் சொன்னதில்லை. அவருடைய குணத்தை அடையப் பிரயாசப்படு.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது முன்மாதிரிகையைப் பின்தொடர்ந்து உமது சீஷராக விளங்க எங்கள் துர்க்குணத்தை நீக்கி எங்களுக்குள் உமது குணத்தை உண்டாக்கியருளும், சுவாமி ஆமென்.

1 கொரி. 15, 1-28, அல்லது கலா. 3, 1-14. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். ஐந்தாம் வாரம், செவ்வாய்.

ஞ. 100, 3. 4.

பராபரனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கி உமது மிகுந்த இரக்கங்களின்படியே என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை மிகவும் கழுவி என் பாவமற என்னைச் சுத்திகரியும், ஏனெனில் என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன், என் பாவம் எப்போதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கு விரோதமாக நான் பாவஞ்செய்து உம்முடைய கண்களுக்கு முன்பாகப் பொல்லாப்பானதைச் செய்தேன் என்கிறதை நீர் உம்முடைய வசனங்களில் நீதி விளங்கவும் உமது நியாயத்தீர்ப்பில் சுத்தம் விளங்கவும் அறிக்கையிடுகிறேன். சங். 51, 3-6.

இது தாவீதின் தவச ஜெபம். தான் செய்த பெரிய பாவத்தை அவன் அறிந்துகொண்டபோது தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினான். கொலைசெய்யாதிருப்பாயாக, விபசாரம்பண்ணாதிருப்பாயாக என்ற கற்பனைகளை மீறி, தாவீது கொடிய பாவம் செய்திருந்தான். உன் மனச்சாட்சியைக் கறைப்படுத்தும் இப்போப்பட்ட கொடும் பாவங்கள் உன்னிடமுண்டா? ஒரு வேளை நீ வேறு கற்பனைகளை மீறி நடந்தாய். திருட்டு, கொலை இவற்றைவிட பெரிய பாவங்கள் இல்லை என்று நினையாதே. தேவனுடைய பிரமாணத்துக்கு விரோதமானதெல்லாம் பாவமே. உன் பாவம் மனுஷருக்குத் தெரியாவிட்டாலும், எல்லாவற்றையும் அறிந்திருக்கிற தேவனுக்குத் தெரியும். உன்னிடம் கெட்ட செய்கைகள் இல்லாவிட்டாலும், உன் கெட்ட எண்ணங்களையும் பகையையும் பொறாமையையும் நீ பேசின கெட்ட வார்த்தைகளையும் பொய்களையும் பின்புறணிகளையும் நினை. பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் பாவத்துக்கு சரி செலுத்தி மரணத்துக்குத் தப்பிப்போக முடியாதென்றும் உனக்குத் தெரியும். தாவீதைப்போல் நீ கண்ணீர் விட்டுப் பராபரனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும் என்று வேண்டிக்கொள். அப்படி வேண்டிக்கொள்ள உனக்கு உத்தரவு இருக்கிறது. உலகத்தின் பேரிலும் உன் பேரிலும் கிருபைகூர்வதற்குப் பராபரன் தமது குமாரனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார். இந்தக் கிருபையைப் பிடிக்கத் தாமதம் செய்யாதே. கிறிஸ்துவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்த பாவத்தின் பயங்கரத்தை உணர்ந்துகொள். உன் கெட்ட வழியை விட்டுச் செம்மையான வழியில் செல்லு.

ஜெபம். அன்புள்ள பிதாவே! எங்கள்மேல் இரக்கம் வைத்துத் திரும்பத் திரும்ப எங்களுக்கு மன்னித்து வருகிறீர். சிநேகமுள்ள கர்த்தாவே! உம்மை நம்புகிற நாங்கள் மனஸ்தாபத்தோடும் விசுவாசத்தோ

ம் மனந்திரும்பிப் பரிசுத்த நடக்கையால் உம்மை மகிமைப்படுத்த எங்களை ஏவி எழுப்பியருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 46, 1-7. அல்லது கலா. 3, 15-29. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். ஐந்தாம் வாரம், புதன்

ஓ. 100, 5. 6.

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்கள் விருதாவாய் அதில் உழைக்கிறார்கள். கர்த்தர் பட்டணத்தைக் காவாராகில் சாமக்காரன் விருதாவாய் விழித்திருக்கிறான். நீங்கள் இருட்டோடெழுந்து நேரப்பட வேலையில் தரித்து வருத்தங்களுள்ள அப்பத்தைச் சாப்பிடுகிறது விருதா. தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரையை அளிக்கிறார். சங். 127, 1. 2.

எல்லாவற்றையும் சிருஷ்டித்துக் காப்பாற்றிவருகிற கர்த்தராகிய தேவன் அடைக்கலத்துக்கென்று வீட்டையும், ஆயாசத்தில் தூக்கத்தையும் பசிக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறார். இச்சீவியத்தின் வாழ்வு ஆண்டவருடைய அன்பு. இந்த வாழ்வைக் காப்பாற்றும்படி தேவன் அளிக்கும் யாவையும் நாம் நன்றியறிதலோடு பெற்றுக்கொள்வோமாக.

கர்த்தர் நித்திரையை அளிக்கிறார். வேலைக்காரர் கைகட்டிக்கொண்டிருக்கக் கட்டடம் முடிந்துபோகும் என்றும், சோம்பேறிகளுக்குச் சோறு கிடைக்கும் என்றும் சங்கீதக்காரன் சொல்லவில்லை. உன் முகத்தின் வேர்வை தரையில் விழ உன் அப்பத்தைப் புசிப்பாயாக என்பது தேவனுடைய கட்டளை. ஆகிலும் நீ எவ்வளவு வேலைசெய்து பிரயாசைப்பட்டாலும் அதினால் வாழ்வுண்டாகாது. அவருடைய ஆசீர்வாதமிருந்தால் எல்லாம் வாய்க்கும். ஞாயிற்றுக்கிழமையிலும் மற்ற நாட்களிலும் ஓயாமல் உழைக்கிற பலருக்கு ஒன்றும் வாய்க்காது என்றும், உண்மையாய் வேலைசெய்து இளைப்பாறித் திருநாளை ஆசரித்து வருகிற இன்னொருவனுக்கு எல்லாம் வாய்க்கும் என்றும் நாம் அனுபவத்தில் பார்க்கலாம். தேவ ஆசீர்வாதம் எல்லாவற்றிற்கும் அவசியம். தமக்குப் பிரியமானவனுக்குக் கர்த்தர் நித்திரை அளிக்கிறார். நீயும் அவருக்குப் பிரியம். அவர் உன்னையும் தம்மண்டை சேர்த்துத் தமது கிருபையினால் தாங்கி வருகிறார். அவருடைய தயவை அறிந்து நீ உனக்கென்று வேலை செய்யாமல் அவருடைய மகிமைக்கென்று உழைத்து வா. அப்போது ஆண்டவர்தாமே உன் வீட்டைக் கட்டுவார். அவர்தாமே நீ குடியிருக்கிற பட்டணத்தைக் காப்பார். உன்னிமித்தம் ஊராரையும் ஆதரிப்பார்.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் உமது காவலில் சுபத்திரமாக இருக்கிறோம். நாங்கள் யாதொரு ஆபத்துக்கும் மோசத்துக்கும் பயப்படமாட்டோம். உமது திருநாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக, சுவாமி, ஆமேன்.

1 மோ. 46, 26-34. அல்லது கலா. 4, 1-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். ஐந்தாம் வாரம், வியாழன்.

பி. 99, 1. 2.

கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவையால் உனக்குப் பாக்கியமும் நன்மையுமிருக்கும். உன் பெண்சாதி உன் வீட்டு ஓரங்களில் கனிதரும் கொடிமுந்திரிகைபோலவும் உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போலவும் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயந்த மனுஷன் இப்படி ஆசீர்வதிக்கப்படுவான். சங். 128, 1-4.

இப்பூமியில் தேவ அருளால் அடையக்கூடிய சுகத்தை அடைந்து அநுபவிக்கிறவனை இந்த வாக்கியம் நமக்குக் காண்பிக்கிறது. தன் கைகளினால் வேலைசெய்து சாப்பிட்டுத் தனக்காகவும் சொந்தக்காரருக்காகவும் போதுமானதைச் சம்பாதித்து வைத்து, முறுமுறுக்காமலும் யாரிடத்திலும் உதவி கேட்காமலும் இருக்கக்கூடியவன் பாக்கியவான். சுகத்தோடு சுறுசுறுப்பாய்க் குடும்பத்துக்காகக் கவலைப்பட்டுப் புருஷன் சம்பாதிக்கிறதைக் காப்பாற்றி அதிகரிக்கச் செய்கிற பெண்சாதியையுடையவன் பாக்கியவான். நல் வளர்ப்பில் வளர்ந்த பிள்ளைகளையுடையவன் பாக்கியவான். ஆகிலும் கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவனுக்கே இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாக்கியம் உனக்குக் கிடைக்கவில்லையானால், நீ ஆண்டவருக்குப் பயப்படுகிறாயோ என்று உன்னைக் கேள். நான் இத்தனை பெரிய பொல்லாப்பைச் செய்து கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்வது எப்படி என்று சொல்லுகிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறவன். தேவனுடைய வழிகளில் நடப்பதே அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதலாம். இப்படிச் செய்து வருகிற ஜனங்களைத் தேடிப் பிடி. பராபரன் தாம் கொடுத்த வாக்குத்தத்தத்தை அவர்களில் எப்படி நிறைவேற்றுகிறார் என்று அவர்கள் மூலமாய் அறிந்துகொள்வாய். நமது பாவங்களினாலோ நாம் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களைத் தடுக்கிறோம். நாம் இவ்வுலகில் முன்னுக்கு வராவிட்டால் அது நமது

குற்றமே. நீ பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்குள் புது மனுஷனானவுடனே, இப்பூமியின் சுகத்தையும் உனக்கு அளிக்கிறார். நீ அவருக்குப் பயந்து அவருடைய வழியில் நடக்க மனதாயிருந்து தம்மோடிருந்தும் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார். நீ இதிலே நிச்சயப்பட்டு இயேசுகிறிஸ்துவை நம்பிப் பரிசுத்தமாய் நடந்தால் இப்பூமியிலும் மென்மேலும் சந்தோஷத்தையும் சுகத்தையும் பெறுவாய்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது பிள்ளைகளைத் தேவரீர் ஒருபோதும் மறவாமல் அவர்களைச் சந்தோஷத்தினாலும் சுகத்தினாலும் நிரப்பியாக்குகிறீர். தேவரீர் கிருபையுள்ளவர். உம்மை நம்பினோர் வெட்கமடைவதில்லை, சுவாமி, ஆமென்.

1 மோ. 47, 1-12. அல்லது கலா. 4, 19-31. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஐந்தாம் வாரம், வெள்ளி.

ஏ. 99, 3. 4.

சரீர அப்பியாசம் அற்ப பிரயோசனமுள்ளது. தெய்வ பக்தியோ எல்லாவற்றிற்கும் பிரயோசனமாயிருந்து, இச்சீவனுக்கும் வருஞ் சீவனுக்கும் வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறது. 1 தீமோ. 4, 8.

அநேக மனிதர் கிறிஸ்து மார்க்கமும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசமும் உண்மையோ என்றும், அவருடைய சித்தப்படி நடப்பது அவசியமோ என்றும், கோவிலில் பிரசங்கிக்கப்பட்ட வசனம் நிறைவேறுமோ என்றும் சந்தேகிக்கிறார்கள். அப்படிப் பேசுகிறவர்கள் தேவ வசனத்தை நம்பாமலும் மேற்சொன்ன பாக்கியத்தை அறியாமலும் இருக்கிறார்கள். தேவன் என் பாக்கியமும் சிலாக்கியமும் என்று சொல்லுகிறவனே தேவ பக்தன். இவன் இயேசுகிறிஸ்துவினால் தேவனுடைய பிள்ளையாகி, அவருடைய கிருபையைப் பெற்றுக்கொண்டு தன் பரம பிதாவின் சித்தப்படி செய்ய மனதாயிருக்கிறான். ஆகையால் மெய்யான கிறிஸ்தவன் தெய்வ பக்தியுள்ளவனாக இச்சீவனுக்கும் வருஞ் சீவனுக்கும் வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறான்.

இவ்விரண்டிலும் வருஞ் சீவனே முக்கியமானது. அது நித்தியமாயிருக்கிறது. இச்சீவனோ சீக்கிரம் ஒழிந்துபோகும். பராபரன் தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் கண்டதும் இல்லை, காது கேட்டதும் இல்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்துக்குள் ஏறினதுமில்லை

என்பதிலடங்கிய நன்மைகளே விசுவாசியின் பங்கு. அவருடைய சமுகத்திலே சந்தோஷங்களினுடைய பரிபூரணமும் அவருடைய வலது பாரிசத்திலே செல்வ பாக்கியங்களும் என்றென்றைக்குமிருக்கும். இது போதாதா? இது தேவ பக்திக்கு மகிமையான கிரீடம். ஆயினும், இச்சீவனுக்கும் வாக்குத்தத்தம் உண்டு. கிறிஸ்துவினால் பாவமன்னிப்பை வாங்கின நீ இங்கேயே இருதயத்தில் சமாதானத்தைப் பெற்றிருக்கக் கூடும். பாக்கியத்துக்குச் சமாதானம் அதிக அவசியம். ஆகாதவர்களுக்குச் சமாதானம் இல்லை என்று வேதம் கூறுகிறது. பெரிய துன்பத்திலும் கூட உனக்கு இங்கே பூரண ஆறுதல் கிடைக்கிறது. அதைக் கொடுக்கிற பிதா உனக்கு உண்டு. நீ இங்கே திரும்பத் திரும்ப வசனத்தினாலும் ஞான திரவியங்களினாலும், நீ இப்பூமியில் உனக்கு நியமித்திருக்கும் வழியில் நம்பிக்கையோடு சென்றால், தகுந்த பலனைப் பெற்றுக்கொள்ளக் கூடும். நித்திய மகிமையின் நம்பிக்கை உனக்கு முன்பாக எப்போதும் பிரகாசிக்கிறது. இதுவே பாக்கியம். பராபரனுடைய இராச்சியத்தைத் தேடுகிற உனக்கு எல்லாம் கிடைக்கும்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! நாங்கள் இவ்வுலகில் உமது திருவசனத்தின்படி தேவபக்தியாய் ஜீவனம்பண்ணி தேவரீர் எங்களுக்காக ஆயத்தப்படுத்தின சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ள எங்களை எழுப்பியருளும். ஆண்டவரே, ஆரண்டைக்குப் போவோம், உம்மிடம் நித்திய ஜீவ வசனங்கள் உண்டாயிருக்கிறது, சுவாமி, ஆமென்.

1 மோ. 49, 1-10. அல்லது கலா. 5, 1-15. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஐந்தாம் வாரம், சனி.

ஏ. 99, 5. 6.

ஐந்தாம் மன்றாட்டேன்ன? எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்து விடுகிறதுபோல் நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும்.

இதற்கர்த்தமென்ன? பரமண்டலங்களிலிருக்கிற பிதா நமது பாவங்களைப் பாராமலும் அவைகளின் நிமித்தம் நம்முடைய மன்றாட்டுகளை அல்லத் தட்டாமலும் எல்லாவற்றையும் கிருபையாய்க் கொடுத்தருள வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடுகிறோம். ஏனெனில் நாம் கேட்கிற மன்றாட்டுகளில் யாதொன்றுக்கும் பாத்திரராயிராமலும் அதற்குப் பாத்திரமான கிரியைகளைச் செய்யாமலும் அநுதினமும் மிகுதியாய்ப் பாவங்களைச் செய்து ஆக்கினைக்கு மாத்திரம் பாத்திரராயிருக்கிறோம். ஆகிலும் அப்படி நாமும் நமக்குப் பொல்லாங்கு செய்கிறவர்களுக்கு முழு

மனதோடே மன்னித்துக்கொண்டு, சந்தோஷத்துடனே அவர்களுக்கு நன்மை செய்யச் சித்தமாயிருக்கிறோம்.

அன்றன்றுள்ள அப்பத்தைப் பார்க்க நமக்கு ஜீவ அப்பமாகிய பாவமன்னிப்பு அதிக தேவை. நாலாம் மன்றாட்டிலே நாம் வாயைத் திறந்து சரீரத்திற்கு வேண்டியதைக் கேட்டோம். தினமும் பல பாவங்களைச் செய்கிற நாம் அந்த மன்றாட்டை உற்சாகத்தோடு ஜெபிக்க முடியாது. அதில் சொல்லிய நன்மைகளில் நாம் ஒன்றுக்கும் பாத்திரர் அல்ல. தேவன் நம்மை வெட்கத்தோடு தமது சமுகத்தை விட்டுத் துரத்திவிடாதபடி இந்த ஐந்தாம் மன்றாட்டை அதிக ஊக்கத்தோடு ஜெபிக்கவேண்டும்.

இந்த மன்றாட்டு மோசமான மன்றாட்டென்று தேவபக்தியுள்ள ஒருவன் சொன்னான். இதிலே மறைந்திருக்கிற மோசமென்ன? தேவன் நமக்கு மன்னிக்கவேண்டுமானால் நாமும் நமது பிறத்தியானுக்கு மன்னிப்பது அவசியம் என்பதே. மன்னிப்பைப் பெற்றும் பிறனுக்கு மன்னிக்கமாட்டேனென்று சொன்ன பொல்லாத பணிவிடைக்காரனை நினை. அவன் வாஸ்தவத்தில் மன்னிப்புப் பெறாமல் சிறைச்சாலைக்குப் போகவேண்டியதாயிருந்தது. கிறிஸ்துவின் முகத்தைப் பார்த்து நமக்கு மன்னித்த தேவன் கிறிஸ்துவின் இரத்தத்தை நம்மிடத்தில் தேடுகிறார். அது இல்லையானால் அவர் தாம் மன்னித்த பாவங்களைத் திரும்ப நமதுமேல் சுமத்துகிறார். ஆகையால் நாம் இந்த மன்றாட்டைச் சொல்லும்போது ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். மனுஷருக்கு அவர்கள் தப்பிதங்களை மன்னிப்பீர்களானால் உங்கள் பரம பிதா உங்களுக்கு மன்னிப்பார். மனுஷருக்கு அவர்கள் தப்பிதங்களை மன்னியாதே போவீர்களாகில், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் என்று இரட்சகர் சொல்லுகிறார்.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! உமதளவில்லாத கிருபையால் எங்களுக்கு அநுதினமும் எங்கள் பாவங்களை மன்னித்தருளுகிறதற்காக உமக்குத் தோத்திரம். கர்த்தாவே! நாங்கள் உமது பொறுமையையும் இரக்கத்தையும் உணர்ந்திருந்து எங்கள் பிறத்தியானுக்கு மனதார மன்னிக்கும்படி எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

1 மோ. 50, 1-26. அல்லது லூக். 5 16-26. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஆறும் வாரம், ஞாயிறு.

பா. 104, 13-15.

உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் நீதி வேதபாரகர் பரிசேயர் என்கிறவர்களின் நீதியைப் பார்க்க அதிகப்பட்டிருந்தாலொழிய வானராச்சியத்திற்குள் பிரவேசிக்கமாட்டீர்கள், மத். 5, 20.

நாம் மோட்ச இராச்சியத்தில் சேரவேண்டுமானால் தேவன் நம்மை நீதியுள்ளவர்களென்று எண்ணுவது அவசியம். மனிதர் நம்மை நீதியுளும் குற்றமற்றவர்களும் என்று மதிக்கிறது நமக்கு அதிகப் பிரியம். ஒருத்தரும் நமதுபேரில் குற்றம் சாட்டாதபடிக்கும் ஒரு நியாயாதிபதியும் நம்மைத் தண்டிக்காதபடிக்கும் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்கிறோம். திருடரையும் கொலைபாதகரையும் பொய்ச்சத்தியம் செய்கிறவர்களையும் உலகத்தார்களும் நீதியர் என்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள். பராபரனோ நம்முடைய இருதயங்களைப் பார்த்து அதிலிருக்கும் எண்ணங்களையும் நியாயம் தீர்க்கிறார். அவருக்கு முன்பாக நாம் குற்றமற்றவர்களாயிருக்கிறதற்குச் செய்யவேண்டியதென்ன? பரிசேயர் மனிதருக்கு முன்பாகப் பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களாகத் தோன்றும்படி அதிகப் பிரயாசைப்பட்டார்கள். அவர்கள் பத்துக்கற்பனைகளின் எழுத்தைக் கண்டிப்பாய் நிறைவேற்றி அடிக்கடி தேவாலயங்களுக்கு வந்து ஜெபம் செய்து ஏழைகளுக்குத் தர்மம் கொடுத்தார்கள். என்றாலும், அவர்களுடைய நீதியை ஆண்டவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஏனெனில் அந்த நீதி வெளிக்குமட்டும் பகட்டாயிருந்தது. நீ ஏழைகளுக்குப் பிச்சைகொடுத்து ஒழுங்காய்க் கோவிலுக்கு வந்து இராப்போசனத்திற்குச் சேர்ந்தாலும், அதெல்லாம் புறம்பான வேஷமாயிருக்கக் கூடும்.

உண்மையுள்ளவன் தன் உள்ளம் ஆகாதது என்று அறிந்து அறிக்கையிடுவான். பராபரனுக்கு முன்பாகச் செல்லும் நீதி ஒருபொழுதும் நமக்கு இல்லை. அந்த நீதியை இயேசுநாதர் சம்பாதித்தார். அது இலவசமாகக் கொடுபட்டு விசுவாசத்தினால் வாங்கப்படுகிறது. அதினாலே நமது அநீதியெல்லாம் மூடப்பட்டுத் தேவாவியானவர் புதிய ஜீவனுக்கு வேண்டிய பெலனைக் கொடுக்கிறார். கிருபைபெற்ற பாவி முற்றிலும் புது மனுஷனாகிறான். புது இருதயம் எங்கேயோ அங்கே வாய் உண்மையைப் பேசி, கை செம்மையானதைச் செய்யும்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! ஏழைப் பாவிகளாகிய எங்களுக்காகப் பரிசுத்தப் பிதா ஒப்புக்கொள்ளக் கூடிய நீதியைச் சம்பாதித்து அதைப் பாவமன்னிப்பின் வழியாய் எங்களுக்கு அளிக்கிறீர். இந்த இலவசமான கிருபைக்காக உமது திருநாமத்திற்கு என்றென்றைக்கும் தோத்திரம் உண்டாவதாக, சுவாமி, ஆமேன்.

2 மோ. 1, 1-14. அல்லது சங். 15. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந் ஆறும் வாரம், திங்கள்.

பி. 45, 1. 2.

இப்போதும் நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டபடியினாலே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்ப் பராபரனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் நின்றிருக்கிற இந்தக் கிருபைக்குள் பிரவேசத்தையும் நாம் விசுவாசத்தினாலே பெற்றிருந்து, பராபரனுடைய மகிமையின் நம்பிக்கையினால் மேன்மைபாராட்டுகிறோம். ரோ. 5, 1. 2.

விசுவாசத்தினால் உண்டான நீதியை, அப்போஸ்தலனாகிய பவுல் ஓயாமல் ரோமருக்கு எழுதின நிருபத்திலே சுயநீதியை நம்புகிறவர்களுக்குப் பிரசங்கித்து வருகிறான். விசுவாசநீதி நமது அருமை லுத்தரன் திருச்சபை தன் கொடியில் எழுதியிருக்கும் சத்தியம். இந்தச் சத்தியத்தை நாம் விடமாட்டோம்.

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவனுக்குப் பராபரனோடே சமாதானம் உண்டு. ஏனெனில் சமாதானத்துக்குத் தடையான பாவம் நீக்கப்பட்டது. தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மைச் சகல பாவங்களறும் அறச் சுத்திகரிக்கிறதினாலே நாம் உற்சாகத்தோடே பிதாவண்டை சேரலாம். எனக்குப் பிதாவோடே சமாதானம் உண்டென்று அறிந்தவர்கள் மிகவும் பாக்கியவான்கள். உலகமெனும் கடலில் பெருங்காற்று அடித்தாலும் இருதயத்துக்குள் அமைதலும் சமாதானமுமிருக்கும். அதுவுமல்லாமல் வரப்போகிற மகிமையின் பேரிலுள்ள நம்பிக்கை நமக்குள் உறுதிப்படுகிறது. இப்பூமியில் அடிக்கடி பலவிதமான துன்பத்தினாலும் துக்கத்தினாலும் நமது அமைதி கலங்கும்போதும் சிலுவையினால் கிரீடத்தையும் துன்பத்தினால் மகிமையையும் இருளினால் வெளிச்சத்தையும் அடைவோம் என்று நம்புகிறோம்.

தேவனுக்கும் நமக்குமிருக்கும் ஐக்கியத்தை இனித் தடுக்கக்கூடியதொன்றுமில்லை. இப்பிரபஞ்சத்தின் பிரபுவாகிய சாத்தான் சீறிக் கர்ச்சிக்கிற சிங்கம்போல் நம்மைச் சுற்றி அலைந்தாலும் பரமண்டலத்தில் வீற்றிருக்கிறவர் தம்முடையவர்களைக் காப்பாற்றுவார்.

ஜெபம். எங்கள் பரமபிதாவே! உமது நேச குமாரனை அனுப்பி எங்களுக்கு நீதியையும் பரிசுத்தத்தையும் சம்பாதித்ததற்காக உமக்குத் தோத்திரம். நாங்கள் உமது பிதாவண்டையான தயவை நம்பி உமது பிள்ளைகளுக்கேற்ப விசுவாசத்தோடும் சந்தோஷத்தோடும் ஜீவனம் பண்ண எங்களை ஏவி எழுப்பியருளும். சுவாமி, ஆமேன்.

2 மோ. 1, 22-2, 25. அல்லது எபே. 6, 1-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். ஆறும் வாரம், செவ்வாய்.

பி. 45, 3. 4.

கர்த்தரோ அவனுடனே சொன்னதாவது: இப்போதும் பரிசேயராகிய நீங்கள் குடிக்கிற புசிக்கிற பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தம் பண்ணுகிறீர்கள். உங்கள் உள்புறமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது: மதியற்றவர்களே! வெளிப்புறத்தைப் பண்ணினவர் உள்புறத்தையும் பண்ணினது இல்லையோ என்றார். லூக். 11, 39. 40.

ஒரு நாள் ஒரு பரிசேயன் இயேசுநாதரைத் தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தான். பரிசேயருக்குப் புறம்பான சடங்குகளும் ஸ்நானங்களும் அதிக முக்கியமாய்த் தோன்றிற்று. தெருவிலிருந்து வந்து ஸ்நானம் செய்தாலொழிய சாப்பிடக்கூடாதென்பது அவர்களுடைய சட்டம். இயேசுநாதர் அந்தச் சமயத்தில் ஒரு பிசாசைத் துரத்திய பின், விருந்துக்கு வந்திருந்தார். ஆகையினால் ஆண்டவர் ஸ்நானம் செய்யாமல் விருந்துக்கு வந்து உட்கார நேரிட்டது. இதற்குப் பரிசேயர் ஆச்சரியப்பட்டார்கள். புறம்பான எல்லாச் சடங்குகளையும் கற்பனைகளையும் நிறைவேற்றினால் போதுமென்று நினைக்கிற பரிசேயரைக் கர்த்தர் அப்போது கடிந்துகொண்டார். புறம்பாக அவர்கள் சுத்தமானவர்களாயிருந்தும், அவர்கள் உள்ளத்தில் இன்னம் அநியாயமும் அநீதியும் கேடும் மறைந்திருந்தது. உங்கள் உட்புறமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறதென்று இயேசுநாதர் சொன்னார். மனிதருக்கு முன்பாகப் பரிசேயர் தங்கள் பக்தியைப் பற்றி மேன்மை பாராட்டினாலும் தேவனுக்கு முன்பாக அவர்கள் ஒன்றுக்கும் உதவார்கள். ஒரு மனுஷன் கண்ணுக்கு முன்பாக இருக்கிறதைப் பார்க்கிறான், கடவுளோ இருதயத்தைப் பார்க்கிறார். சுத்த இருதயத்தை எனக்குள் சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதிதாய் உண்டாக்கும் என்று நாம் நாள்தோறும் மன்றாட வேண்டியது அவசியம். மதியற்றவர்களே! வெளிப்புறத்தைப் பண்ணினவர் உட்புறத்தையும் பண்ணினதில்லையோ என்று இயேசுநாதர் கேட்டார். நம்மை உண்டாக்கினவருக்கு நாம் ஒரு காரியத்தையும் மறைக்க முடியாது. நமக்குத் தெரியாத நமது இருதயத்தின் ஆழமும் அவருக்குப் பட்டப்பகல் வெளிச்சம்போல் இருக்கிறது.

ஜெபம். எங்கள் பரமபிதாவே! உமது கண்ணுக்கு முன்பாக ஒன்றும் மறைந்திருக்க முடியாது. நாங்கள் அந்தகாரத்தை விட்டு உமது ஆச்சரியமான வெளிச்சத்துக்கு வந்தோம், நாங்கள் இந்த வெளிச்சத்தில்,

உமக்கு மகிமை உண்டாக நடக்க எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

2 கொ. 3, 1-22. அல்லது எபே. 1, 1-14. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஆறாம் வாரம், புதன்.

பி. 45, 5. 6.

பாக்கியமான நம்பிக்கைக்கும் மகா பராபரனும் நம்முடைய இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்க்க நம்மை உபதேசிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமத்துக்கும் நீங்கலாக்கி மீட்கவும், நற்கிரியைகளுக்குக் கவனத்தியான சொந்தச் சனமாக்கித் தமக்குச் சுத்திகரிக்கவும் நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். தீத்து 2, 13. 14.

கிறிஸ்தவர்களாகிய நாம் ஆண்டவர் தமக்குச் சொந்தமாகத் தெரிந்துகொண்ட ஜனம். நாம் அவருடைய விலையேறப்பெற்ற பரிசுத்த இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்டுச் சகல அக்கிரமத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் பிசாசின் வல்லமையிலிருந்தும் மீட்டு இரட்சிக்கப்பட்டவர்கள். பரிசுத்த ஞானஸ்நான முழுக்கினால் பரிசுத்தமாகிப் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட நாம் தேவனுக்குப் பிரியமாக ஜீவனம்பண்ணி நற்கிரியைகளுக்குக் கவனத்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

இவ்வுலகில் இருக்குமட்டும் நமக்கு அநேகம் துன்பமும் கவலையும் விபத்தும் தரித்திரமும் வருகிறதுண்டு. பலவிதமான சோதனைகள் நம்மைச் சுற்றிக்கொள்ளுகிறது. அப்படியிருக்க நாம் பாராமல் விசுவாசிக்கிற இரட்சகரை முகமுகமாகக் காண ஆசைப்படுகிறோம். இப்படி நம்முடைய ஜீவியம் நம்பிக்கையுள்ள ஜீவியமாகிறது. பாக்கியமான நம்பிக்கைக்கும் மகா பராபரனும் நம்முடைய இரட்சகருமான இயேசுகிறிஸ்துவின் மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்க்கிறோமென்று அப்போஸ்தலன் சொன்னபடி நமது இருதயம் ஆவலும் ஆசையும் நிறைந்தானது. நான் பராபரனுடைய முகத்தைப் பார்ப்பதெப்போது என்று கேட்கிறோம். ஆனால் திடன்கொள், உன் ஆவல் நிறைவேறும். உன்னுடைய நம்பிக்கை வீணாய்ப்போகாது. நம்முடைய இரட்சகர் வரும் பெரிய நாள் கிட்டுகிறது. அப்போது அவர் பராபரனுடைய மகிமையோடும் தமது தெய்வீக மகத்துவத்தோடும் வந்து அந்த மகிமையை நமக்குக் காட்டுவார். அக்காலத்திலே நாம் இவ்வுலகில் அநுபவித்த துன்பங்களை எல்லாம் மறந்து அவருடைய இரக்கத்துக்காக அவரைத் தோத்திரிப்போம்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! உமது வருகைக்கு நாங்கள் ஆவலோடு காத்திருக்கிறோம். உமது திரு இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாங்கள் எங்கள் பரம சுதந்தரத்தை இழந்துபோகாமல் உம்மை முகமுகமாய்த் தரிசித்துத் துதிக்கும்படி எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

2 கொ. 4. 1-23. அல்லது எபே. 1, 15-23. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஆறாம் வாரம், வியாழன்.

பி. 45, 7. 8.

எதிரியானவன் உன்னை நியாயாதிபதிக்கு ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனுக்கு ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்க நீ சீக்கிரமாக உன் எதிரியோடே வழியில் இருக்கும்போதே அவனோடே நல்மனம் பொருந்து. மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நீ கடைசிக் காசைக் கொடுத்துத் தீருமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய். மத். 5, 25. 26.

மேற்படி வாக்கியத்தில் கொலைசெய்யாதிருப்பாயாக என்கிற கற்பனைக்கு இயேசுநாதர் அர்த்தம் கூறுகிறார். ஒருவனையும் கொலைசெய்யாதிருந்தால் இந்தக் கற்பனையைக் கைக்கொண்டோமென்று பரிசேயர் நினைத்தார்கள். எழுத்தின்படி நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவது போதுமென்று எண்ணுகிற கிறிஸ்தவர்களுமுண்டு. இயேசுநாதருடைய கருத்தின்படியே நாம் கற்பனையைச் சரியாய்க் கைக்கொள்ளவேண்டுமானால் மனதார மன்னிக்கத் தயாராயிருப்பது அவசியம். தேவன் தனக்கு மன்னித்த அநேக பாவங்களை நினைத்துக் கொள்ளுகிறவனே மனதார மன்னிக்கக் கூடியவன். உன் எதிரியோடே நல்மனம் பொருந்து என்று கர்த்தர் சொல்லுகிறார். உனக்குப் பொல்லாப்புச் செய்த ஒருவன் வந்து உன்னிடத்தில் மன்னிப்புக் கேட்டால் நீ இங்கே வர வேண்டாம் என்று நீ சொல்லக் கூடாது. நீ மன்னிக்காதபோனால் தேவன் உனக்கும் மன்னிக்கமாட்டார். அவர் மன்னிக்கவில்லையானால் நீ என்ன செய்வாய். உன் எதிரியோடு இன்னும் வழியில் இருக்கும்போது, அவன் உயிரோடிருக்கும்போதே மன்னி. நீங்கள் இருவரும் நியாயாதிபதியண்டை செல்லுகிறவர்களாயிருக்கிறீர்கள். இன்றைக்கு இன்னும் எதிரியோடு பேசக்கூடும், நாளைக்கு ஒருவேளை முடியாது. உன் சகோதரன் உன்னோடு ஒப்புரவாகுமுன் இறந்துபோனால் அவன் உன் பேரில் பராபரனுக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டுவான். அப்போது நீ அளந்த அளவினால் உனக்கும் அளக்கப்படும். நீ கடைசிக் காசைக் கொ

கொத்துத் திருமட்டும் சிறைச்சாலையில் வைக்கப்படுவாய். நீ ஒரு காசைக் கூடக் கொடுத்துத் தீர்க்க உன்னால் முடியாது. ஆதலால் நீ வழியில் இருக்கக்கொள்ள அவனுடனே நல் மனதாய் பொருந்து.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! உமது பின்னைகளாகிய எங்களுக்கு அனுதினமும் சானமாய் எங்கள் பாவங்களை மன்னித்துத் திரும்பத் திரும்ப எங்களை ஏற்றுக்கொண்டு வருகிறீர். கர்த்தாவே, எங்களும் எங்கள் பிறத்தியானுக்கு மன்னித்து மென்மேலும் உமது இரக்கத்தையும் பொறுமையையும் உணர்ந்தறிவதற்கு எங்களுக்குத் அனுக்கிரகஞ் செய்தருளும், சுவாமி, ஆமேன்.

2 மோ. 7, 1-25. அல்லது எபே. 2, 1-22. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஆறாம் வாரம், வெள்ளி.

சி. 34, 1. 2.

நீங்கள் கோபங் கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள். உங்கள் எரிச்சலின்மேல் சூரியன் அஸ்தமிக்க ஒட்டாதிருங்கள். எபே. 4, 26.

[illegible] கர்த்தர் [illegible] மனுஷர் [illegible] எரிச்சல் [illegible] சொல்லுகிறான். [illegible] அவர்கள் [illegible] பரிசுத்த [illegible] இது பூரவத்தின் [illegible] இருக்கவேண்டும். இந்தக் கோபம் [illegible] பரிசுத்த [illegible] இருக்கிறது. ஆகிலும் மனுஷராகிய [illegible] இருக்கிறது. ஆகையால் அப்போஸ்தலன் நீங்கள் கோபங் கொண்டாலும் பாவம் செய்யாதே யுங்கள் என்கிறான். கோபம் [illegible] சமயங்களில் [illegible] வேறு [illegible] போகக்கவேண்டும். [illegible] மேற்கொண்டு, [illegible] மனஸ்தாபப்பட்டுத் தக்க செய்கைகளுக்கும் வார்த்தைகளுக்கும் வருகிறது. இந்தக் கோபம் தேவனுக்கு முன்பாக நியாயமானதைச் செய்யாது. இந்தச் சினத்தை நீ உனக்குள் இருக்கக் கண்டால், உன் அறையில் போய் ஜெபம் செய்து அமர்ந்து [illegible] நீ இன்றைக்கு ஒருவனைக் கோபத்தினால் [illegible] சூரியன் அஸ்தமிக்குமுன் அவனோடு ஒப்புரவாகு. உங்கள் எரிச்சலின் மேல் சூரியன் அஸ்தமிக்க ஒட்டாதிருங்கள் என்று அப்

போஸ்தலன் சொல்லுகிறான். நீ படுக்கு முன் உன் இருதயம் திரும்ப அமைதலும் சமாதானமுமுள்ளதாக வேண்டும். அப்போது தேவரீர் [illegible] வந்து அதில் வாசம்பண்ணுவார்.

ஜெபம். சாந்தமுள்ள இயேசுவே! உமது சாந்தத்தையும் பொறுமையையும் எங்கள் இருதயங்களில் ஊன்றி எங்கள் கோபத்தையும் பகையையும் நீக்கியருளும். தேவரீருடைய அன்பே எங்கள் [illegible] அடைச் [illegible], சுவாமி, ஆமேன்.

2 மோ. 11, 1-10. அல்லது எபே. 3, 1-21. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஆறாம் வாரம், சனி.

சி. 34, 3. 4.

ஆறும் மன்றுடே [illegible] எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப் பண்ணாதேயும்.

இதற்கு [illegible] ஒருவனையும் சோதிக்கிறதில்லை. ஆனால் பிசாசு, லோகம், மாமிசம் என்றவைகள், அவிசுவாசம் அவநம்பிக்கை முதலான [illegible] தோஷங்களிலேயும் துன்மார்க்கங்களிலேயும் நம்மை உட்படுத்தி [illegible] நாம் அவைகளால் சோதிக்கப்பட்டாலும் [illegible] அவைகளைச் செயிக்கும் படிக்கும் அவர் நம்மைக் [illegible] இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

நாம் எங்கே இருந்தாலும் என்ன செய்தாலும் சோதனையானது கடலைப்போல் நம்மை எங்கும் சூழ்ந்திருக்கிறது. ஆனாலும் [illegible] அது நமக்கு மேலும் கீழும் எந்தப் பக்கமும் சுற்றியிருக்கிறது. [illegible] கர்ச்சிக்குந் திரிகிற சிங்கம்போல் பிசாசு [illegible] மனிதராயும் [illegible] இந்தச் சோதனைகளை மேற்கொள்ள நாம் ஆண்டவரிடத்தில் வேண்டிய உத்தாரத்தைக் கேட்பது அவசியம். நாம் நம்மையே நம்பிக் கெடாதபடிக்கு அவர் நம்மைக் காப்பாராக. நாம் நம்பிக்கையற்றுப் போனால் அவரது திவ்விய வாக்குத்தத்தங்களை நம்புவதற்கு அவர் நமக்குத் துணை செய்வாராக. நமது இருட்சகர் வனாந்தரத்தில் தேவவசனமாகிய பட்டயத்தினால் பிசாசின் உபாய தந்திரங்களோடு எதிர்த்து விதத்தை [illegible] தியானித்துப் பார்த்தால் சோதனையில் வேண்டிய பெலத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மனுஷ சோதனை அல்லாமல் வேறே சோதனை உங்களைப் பிடித்ததில்லை. பார் [illegible] உண்மையாய் இருக்கிறார். அவர் உங்கள் பெலத்துக்கு மிஞ்சி நீங்கள் சோதிக்கப்பட ஒட்டாமல் நீங்கள் உத்தரிக்கக்

கூடும்படி சோதனையுடனே கூடப் போக்கையும் உண்டாக்குவார் என்று அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எழுதின பிரகாரமாக நாமும் இந்த வார்த்தைகளைக்கொண்டு நம்மைத் தைரியப்படுத்திக் கொள்வோமாக.

ஜெபம். உண்மையுள்ள பிதாவே! எங்களை இம்மட்டும் எல்லா மோசங்களுக்கும் விக்கினங்களுக்கும் காப்பாற்றி எல்லாச் சோதனைகளிலும் எங்களுக்குத் துணையாக நின்றதுக்காக உம்மைத் துதிக்கிறோம். தேவரீர் இனிமேலும் எங்களோடிருந்து கடைசி நாளிலும் எங்களை இரட்சித்துக்கொள்ளும், சுவாமி, ஆமென்.

2 கொ. 12, 1-33. அல்லது எபே. 4, 1-16. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஏழாம் வாரம், ஞாயிறு.

மா. 29, 1[illegible]

அந்நாட்களிலே திரள் கூட்டமிருந்து [illegible] அவர்களுக்குப் புசிக்க ஒன்றுமில்லாதபோது இயேசு தம்முடைய சீஷரை [illegible] அழைத்து அவர்களுடனே: ஜனங்களின் மேல் மனதுருகுகிறேன், ஏனெனில் அவர்கள் இப்போது மூன்று நாளாய் என்னுடனே தரித்துப் புசிக்க ஒன்றுமில்லாதிருக்கிறார்கள், நான் அவர்களைப் பட்டினியாக அவர்கள் வீட்டுக்கு அனுப்பினால் வழியிலே தொய்ந்து போவார்கள்; ஏனென்றால் அவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தார்கள் என்றார். மாற். 8, 1-3.

வனாந்தரத்தில் ஜனங்களுக்கு உண்டான சங்கடத்தை ஆண்டவர் பார்க்கிறார். புசிக்க அவர்களுக்கு ஒன்றுமிருந்ததில்லை. சரீரத்துக்காகவும் கர்த்தர் கவலைப்படுகிறவராய், அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை [illegible] இன்று தாரும் என்று ஜெபிக்க நமக்குச் சொல்லிக்கொடுத்தார். அவரைச் சேர்ந்தவர்கள் வனாந்தரத்தில் பசியினால் வருந்தி மாண்டுபோவது அவருக்குப் பிரியமில்லை. பசியென்னதென்று அவருக்குத் தெரியும். நாற்பது நாள் அவர் வனாந்தரத்தில் குடிக்காமலும் புசிக்காமலுமிருந்தார். அவர் நம்முடைய துன்பத்தில் நமக்கு இரங்கக் கூடியவர். அவர் ஜனக்கூட்டத்தைக் கண்டு மனதுருகுகிறேன் என்கிறார். இந்த இரக்கத்தினால் ஏவப்பட்டு அவர் தமது பரம மகிமைச் சிம்மாசனத்தை விட்டு நம்மைப்போல் [illegible] சரீரத்தோராகிச் சிலுவையில் மரித்தார். பரமபிதாவுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து நித்தியமாய் ஆண்டுகொள்ளுகிற அவருக்[illegible] இரக்கம் நிறைந்த இருதயம் இப்போதும் உண்டு. ஆகையால் [illegible] நமக்கு மனித உதவி இல்லாதபோதும் அவர் ஒத்தாசை பண்ண [illegible] வல்லமையு

முள்ளவர். ஆண்டவரை அண்டிக்கொள்ளும் நமக்குப் பலவிதமான வியாதியும் துன்பமும் பசியும் குறைவும் சேரிடும். நாம் ஒரு வேளை வழியிலே தொய்ந்துபோய்ச் சாக வேண்டியவர்களாயிருப்போம்; ஆனால் அவருக்கு வழியும் பாதையும் தெரியும். அவர் வெகு அற்பக் காரியங்களைக்கொண்டும் உன் குறைவை நிரப்பி உதவுகிற வழி உண்டுபண்ணக் கூடும். நாம் தொய்ந்து போய்க் கெட்டுப்போக இரக்கமுள்ள அவருக்கு மனதில்லை. நம்முடைய நம்பிக்கையை நாம் விடாமல் அவரைப் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தால் கிருபையின் அதிசயங்களைப் பார்ப்போம். அப்போது அவர் வனாந்தரத்தில் அந்தச் சனத்துக்கு உதவி செய்த வண்ணம் எப்படி நமக்கும் உதவி செய்வார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது சனமாகிய எங்களுடைய துன்பங்களையும் குறைவுகளையும் அறிந்து எங்களுக்கு ஒத்தாசை பண்ண எப்போதும் தயாராயிருக்கிறீர், நாங்கள் எந்த இக்கட்டிலும் உம்மண்டை ஓடி உமது இரக்கத்தையும் ஒத்தாசையையும் தேடுவதற்கு எங்களுக்கு உபதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

2 கொ. 13, 17-22. அல்லது. சங். 42. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஏழாம் வாரம், திங்கள்.

ரோ. 22, 3. 4.

உங்கள் மாம்சத்தினுடைய பெலவீனத்தின் நிமித்தம் மனுஷீக முறைமையாய்ச் சொல்லுகிறேன்; அக்கிரமம் நடக்க நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்துக்கும் அக்கிரமத்துக்கும் ஊழியமாய் எப்படி நிறுத்தினீர்களோ அப்படியே [illegible] பரிசுத்தமுண்டாக [illegible] உங்கள் அவயவங்களை நீதிக்கு ஊழியமாய் நிறுத்துங்கள். ரோ. 6, 19.

மனம்திரும்புமுன்பாக ஒரு மனுஷன் பாவ ஊழியத்தில் நிலைத்திருப்பான். பாவமானது அவனை முற்றிலும் தன் வசமாக்கிக்கொண்டு தன் இஷ்டப்படி நடக்கும்படி அவனைக் கட்டாயப்படுத்தும். நம்முடைய சரீரத்தின் அவயவங்கள் கூடப் பாவத்துக்கு ஊழியம் செய்கின்றன. கண்கள் அசுத்தத்தையும் அசுத்தப் படங்களையும் [illegible] பார்க்கின்றன. காதுகள் மாமிசத்துக்[illegible] பிரியமான சங்கதிகளையும் பாட்டுகளையும் ஆவலோடே கேட்கின்[illegible]. [illegible]வாயானது அசுத்தங்களையும் பொய்யையும் பிறத்தியாருக்கு விரோதமானவைகளையும் பேசுகிறது. கைகள் பிறன் சொத்தை [illegible]டிக்கத் நீட்டப்படுகின்றன. கால்கள்

பொல்லாத அக்கிரம வழிகளில் செல்லுகின்றனர். எல்லா அவயவங்களும் இயற்கையாய்ப் பாவத்தின் பயங்கரமான அடிமைக்குக் கீழ்ப்படியவேண்டும். இப்போதோ இயேசுவின் இரத்தத்தால் பாவ அடிமைத்தனத்திலிருந்து நாம் மீட்கப்பட்டோம். குமாரன் நம்மை விடுதலையாக்கினார். விசுவாசத்தினால் நாம் நீதிமான்களானோம். ஆகையால் நாம் பரத்திலிருந்து [illegible]கின பெலத்தைச் சரியாய்க் கையாடி நம்முடைய அவயவங்களை நீதிக்கு ஊழியமாக விடுத்துவோமாக. எல்லா மனுப்புத்திரரிலும் அழகான அவரை நமது கண்கள் காணவும், நம்முடைய காதுகள் பராபரனுடைய வசனத்தைக் கேட்கவும், நம்முடைய வாய் ஜெபத்துக்கும் தேவ துதி ஸ்தோத்திரத்துக்கும் திறவுண்டுபோகவும், நம்முடைய கைகள் நன்மையும் உதவியும் செய்யவும், நம்முடைய கால்கள் இடுக்க வாசல்வழியாக ஜீவனுக்குப் போகும் வழியில் செல்லவும் பிரியப்படுவோமாக.

ஜெபம். பரிசுத்த பராபரனே! பரம பிதாவே, நீங்கள் பரிசுத்தராயிருங்கள், ஏனெனில் உங்கள் பராபரனாகிய நான் பரிசுத்தமாயிருக்கிறேன் என்று தேவரீர் சொன்னீரே. ஆதலால் நாங்கள் எல்லா அசுத்தத்தையும் போட்டு விட்டு உமது சாயலுக்கு ஒப்பானவர்களாய் இவ்வுலகில் நடப்பதற்கு எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

2 மோ. 14, 1-14. அல்லது எபே. 4, 17-24. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஏழாம் வாரம், செவ்வாய்.

ஏ. 29, 5. 6.

இயேசு சகல பட்டணங்களிலும் [illegible] சுற்றி நடந்து அவர்கள் ஆலயங்களில் போதகம் பண்ணி, இராச்சியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனத்திலிருந்த சகல வியாதியையும் சகல நோய்களையும் குணமாக்கினார். அவர் ஜனக்கூட்டத்தைக் காண்கையில் அவர்கள் மேலே மனதுருகினார், அதேனென்றால் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல் தொய்ந்து போனவர்களும் சிதறுண்டவர்களுமாய் இருந்தார்கள். மத். 9, 35. 36.

ஆண்டவர் கலிலேயா தேசத்திலுள்ள ஊர்களிலும் கிராமங்களிலும் சுற்றித் திரிந்து ஜெப [illegible]யங்களிலே போதகம் பண்ணி இராச்சியத்தின் சுவிசேஷத்தைப் [illegible] ஏழைகளுக்கு உதவிசெய்து வியாதிக்காரரைச் [illegible]தமாக்கித் தமது செயல்களெல்லாம் ஆசீர்வாதமாகும்படி நடந்து கொண்டார். அவர் இவ்வளவு சேவித்த ஜனம் அவ[illegible]ருக்கு [illegible]சகத்த ஜனமா

இருந்தும் அவரைக் கவனிக்காமல் அவரை அசட்டை பண்ணி இப்பேர்ப்பட்ட இரட்சகர் வேண்டாம் என்று சொன்னது. அதைப் பார்த்து அவர் ஜனத்தின் பேரில் மனதுருகினார். வனாந்தரத்தில் அவர்கள் ஆகாரமில்லாமையினால் பசி பட்டினியாயிருப்பதைப் பார்த்து மனமிரங்கினார். இப்போதோ அவர்கள் ஜீவ அப்பம் வேண்டாம் என்று அவரைத் தள்ளுவதினால் அவர்கள் ஆத்துமா தொய்ந்து போகுமென்றும், அவர்கள் மேய்ப்பனில்லாத மந்தையைப்போல் சிதறிப்போனவர்கள் என்றும் கண்டு அவர் மனதுருகினார். அவர் இப்போது நம்முடைய தேசத்தையும் ஜனத்தையும் பார்த்து மனமுருகுகிறார். நம்முடைய கோவில்களில் அவரைப் பற்றிய சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. அவருடைய ஞான திரவியங்கள் பரிமாறப்படுகிறது. தம்மிடத்தில் உதவி கேட்கிறவர்களுக்கு இப்போதும் வற்றாத அன்புள்ளவராய் நன்மை செய்கிறார். வியாதிக்காரரைச் சொஸ்தமாக்கிப் பசித்திருக்கிறவர்களைப் போஷித்துப் பாவிகளை இரட்சிக்கிறார். ஆனால் எல்லாரும் அவரை மெய்யான விசுவாசத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறார்களோ? எத்தனையோ பேர் அவர் தங்கள் நடுவில் நின்றாலும் தொய்ந்து கிடக்கிறார்கள். நீ தொய்ந்து போக வேண்டியதில்லை, நல்ல மேய்ப்பனானவர் உனக்கும் நல்ல மேய்ப்பனாக இருக்க மனதாயிருக்கிறார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உம்முடைய கோலும் உம்முடைய தடியும் எங்கள் ஆத்துமாக்களைத் தேற்றுகிறது. தேவரீர் எங்களைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து எங்களை ஜீவ தண்ணீர்களண்டை வழிநடத்துகிறீர். ஆண்டவரே, நாங்கள் உமது சத்தியத்தைக் கேட்டுப் பிழைக்க எங்களைக் காரும், சுவாமி, ஆமேன்.

2 மோ. 14, 15-31. அல்லது எபே. 4, 25 32. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஏழாம் வாரம், புதன்.

ஏ. 167, 1. 2.

இயேசு அவர்களுக்குச் சொன்னதாவது: நான் ஜீவனுடைய அப்பமாயிருக்கிறேன், என்னண்டை வருகிறவன் பசியாயிருப்பதில்லை. என் பேரில் விசுவாசிக்கிறவன் ஒருக்காலும் தாகமாயிருப்பதுமில்லை என்றார். யோ. 6, [illegible]

வனாந்[illegible]த்தி[illegible] பசியாய் இருக்கிற ஜனத்தைப் போஷித்த இயேசுநாதர் [illegible]ம்மை வானத்தின் அப்பமென்றும், இன்னொரு இடத்தில் [illegible]கத்தை என்றைக்கும் நீக்கும் ஜலம் என்றும்

சொல்லுகிறார். நான் கொடுக்கும் தண்ணீரில் குடிக்கிறவனெவ்வனும் என்றைக்கும் தாகமடையான் என்கிறார். அவர் இங்கே குறிக்கிற அப்பமும் ஜலமும் அழியாத ஆத்துமத்துக்கு அன்னமும் பானமுந்தான். அன்னபானமில்லாத சரீரம் எப்படிச் சாகவேண்டுமோ அப்படி இயேசுநாதர் குறித்த அப்பமும் ஜலமுமில்லாத ஆத்துமா சாகவேண்டும். ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் ஜீவ அப்பமும் வற்றிப்போகாத ஊற்றுமாகிய இயேசுவினிடத்தில் திருப்தியையும் ஆறுதலையும் அடைந்ததற்காக இரக்கமுள்ள பராபரனைத் துதித்துத் தோத்திரிக்கிறார்கள். தேவ வசனமே ஆத்துமத்தைப் போஷிக்கிற அப்பமும் தாகத்தைத் தீர்க்கிற ஊற்றுமாம். இந்த ஊற்றில் குடித்தவர்களெல்லாருடைய இருதயமும் நிறைவேறிப் பூரண திருப்தியை அடைவார்கள். ஞான திரவியமாகிய இராப்போசனமோ இயேசுநாதர் எல்லாருக்காகவும் கட்டளையிட்ட எல்லாவற்றிலும் சிறந்த போசனம். அதைக் கொண்டு நாம் அவரோடு நெருங்கிய ஐக்கியம் பண்ணுவோம். அந்த ஐக்கியத்தை நீக்கக்கூடியது ஒன்றுமில்லை. ஏனெனில் ஆண்டவர் தம்மைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்ற வல்லமையுள்ளவர். அவருடைய ஐக்கியத்தில் இருக்கிற நாம் முழு உலகத்தையும் ஜெயிப்போம்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே, காடாகிய இவ்வுலகில் பட்டினியாய்க் கிடக்கிற எங்களை நோக்கிப் பாரும். நாங்கள் உம்முடைய ஐக்கியத்தையும் அன்பையும் ஆசிக்கிறோம். தேவரீர் எங்கள்மேல் இரங்கி எங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தியருளும், சுவாமி, ஆமென்.

2 மோ. 15, 1-21. அல்லது எபே. 5, 1-14. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். ஏழாம் வாரம், வியாழன்.

ஏ. 113, 1. 2.

போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே பெரிய ஆதாயம். ஏனெனில் நாம் ஒன்றும் லோகத்தில் கொண்டு வந்தது இல்லை, நாம் அதிலிருந்து ஏதாகிலும் கொண்டுபோகவுங்கூடாதென்கிறது வெளியாக்கமாயிருக்கிறது. உண்ணவும் உடுக்கவும் நமக்கு இருந்தேயானால் அது போதுமென்றிருக்கக் கடவோம். 1 தீமோ. 6, 6-8.

பொட்டும் துருவும் கெடுத்துத் திருடர் கன்னமிட்டுத் திருடும் பொக்கிஷங்களை இப்பூமியில் சேர்த்துவைக்க பிச்சமான ஜனங்களுடைய ஆசையும் ஆவலுமாம். உலகப்பொருளை நாடித்

தேடுவது எவ்வளவு புத்தியீனம். நாம் இந்தப் பொக்கிஷங்களில் ஒன்றையும் கூடக் கொண்டுபோக முடியாது. சாகும் வேளையில் நாம் எல்லாவற்றையும் இங்கே விட்டுவிடவேண்டும். நாம் ஒன்றும் லோகத்தில் கொண்டுவந்ததில்லை. நாம் அதிலிருந்து ஏதாகிலும் கொண்டுபோகவும் முடியாது. நிர்வாணமாய் என் தாயின் கெர்ப்பத்திலிருந்து புறப்பட்டேன், நிர்வாணமாய் அவ்விடத்திற்குத் திரும்புவேன் என்று யோபு புலம்புகிறான். இங்கே உனக்கு வீடு வாசலும் ஏராளமான ஆஸ்தியும் அநேக விலையேறப்பெற்ற வஸ்திரமும் கிடைத்தாலும், கடைசியாய்ச் சவப்பெட்டியாகிய ஒரு சிறு மர வீட்டுக்குள் நுழைய வேண்டும்.

ஆகையால் தேவன் நமக்குக் கொடுத்தது போதும் என்று எண்ணக்கடவோம். நம்முடைய பசிக்குப் போதுமான ஆகாரமும் நம்முடைய சரீரத்திற்குப் போதுமான உடுப்பும் இருந்தால் போதுமென்று எண்ணி முறுமுறுக்காமல் இருப்போமாக. செல்வத்தைக் கட்டிவைத்துத் தாங்கள் விரும்பியபடி வாழ்ந்து களிப்பவர்களைப் பார்த்துப் பொறாமை அடையாமல், தேவன் நமக்குக் கொடுத்தது போதுமென்று நினைத்து அதை நன்றிப்பிரியத்தோடு ஏற்றுக்கொள்ளக் கடவோம்.

ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நமது நிமித்தம் ஏழையாகி இந்த உலகத்தின் பொருட்களை ஆசிக்காமலும் தமது தலைசாய்க்க இடமில்லாமலுமிருந்த இரட்சகரை நோக்கிப் பார்ப்போமாக. இவ்வுலகத்தின் மாய்கையான பொருட்களை ஆசிக்காமல் மறு உலகத்துக்கு வேண்டிய பொக்கிஷங்களைச் சேர்த்துக்கொள்வோமாக.

ஜெபம். தயவுள்ள பிதாவே! உமது இரக்கத்தினால் எல்லா மனுஷரும் தினந்தோறும் போதுமான ஆகாரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். தேவரீர் எங்களுக்குக் கொடுத்தது போதுமென்று நாங்கள் தோத்திரத்தோடு உணர்ந்தறிந்து நன்றியறிந்தவர்களாய் உமக்கு ஏற்றபடி ஜீவனம் பண்ண எங்களுக்கு உமதாவியை அளிப்பீராக, சுவாமி, ஆமென்.

2 மோ. 15, 22-16, 18. அல்லது எபே. 5, 15-21. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். ஏழாம் வாரம், வெள்ளி.

ஏ. 113, 3. 4.

ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் வேண்டாமென்கிறதை நாங்கள் உங்களிடத்தில் இருக்கும்போது உங்களுக்குக் கற்பித்திருக்கிறோமே. ஏனென்றால் உங்களில் சிலர் வேலை ஒன்

றுஞ் செய்யாமல் வீண் அலுவலாய் ஒழுக்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிக்கொத்தவர்களோ அமர்ந்திருந்து வேலை செய்து தங்களுடைய அப்பத்தைச் சாப்பிட நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறீஸ்துவினாலே அவர்களுக்குக் கற்பித்துப் புத்தி சொல்லுகிறோம். 2 தெச. 3, 10-12.

இயேசுவைப் பற்றிய சுவிசேஷம் நம்மை இப்பூமியில் சஞ்சரிக்கத் தகாதவர்கள் ஆக்குகிறது என்று அநேகர் நினைக்கிறார்கள். அப்படி நினைக்கிறவர்கள் சுவிசேஷம் இன்னதென்று அறியார்கள். சுவிசேஷத்தின்படி ஜீவனம் பண்ணுகிறவன் நல்ல தகப்பனும், கீழ்ப்படியும் பிள்ளையும், உண்மையான புருஷனும், சுறுசுறுப்பான வேலையாளுமாகிறான். செம்மையாய் நடக்காமல் காலத்தை வீணாய்ப் போக்கித் தங்களுடையவர்களைச் சரியாய் ஆதரிக்காமல் பிறருடைய சொத்தைக்கொண்டு ஜீவனம்பண்ணுகிறவர்கள் பூமிக்குத் தகுந்தவர்களல்ல. கர்த்தராகிய இயேசுகிறீஸ்துவின் பேரைச்சொல்லி அப்போஸ்தலன் நம்மை வேலைக்கு ஏவி எழுப்புகிறார். நாம் கிறீஸ்தவர்களென்று நாம் இருக்கிற இடத்தில் செய்து வருகிற வேலையினாலே தெரிய வரும். நாம் சம்பாதித்த ஆகாரத்தைச் சாப்பிட்டுப் பிறருக்கும் [illegible] பண்ண உழைப்போமாக.

மேலும் அமர்ந்திருந்து ஒரு கிறீஸ்தவன் வேலைசெய்வான். இங்குமங்கும் ஓடிப்போகாமல் செய்ய வேண்டியதைப் பொறுமையோடு செய்வது அவசியம். அந்த வேலை கையினால் செய்யப்பட்டாலும் சரி, தலையினால் செய்யப்பட்டாலும் சரி, உலகத்தார் அதை நன்குமதித்தாலும் சரி, அதை அவமதித்தாலும் சரி, எல்லாரும் அதைப் பார்த்தாலும் சரி, ஒருவனும் பார்க்காவிட்டாலும் சரி, கடவுளுக்கு முன்பாக அதினாலே ஒரு வித்தியாசமுமில்லை. ஆண்டவர் இங்கே நமக்கு அருளின காலை நன்றாய் உபயோகப்படுத்துகிறவன் மறுமைக்கு நல்ல ஆயத்தமுடையவன்.

ஜெபம். பரம பிதாவே! எல்லாருடைய கண்களும் உம்மை நோக்கிக்கொண்டு இருக்கின்றன. தேவரீர் எல்லாருக்கும் ஆகாரத்தைக் கொடுக்கிறீர். தேவரீர் ஒருவரே எங்களைக் கைவிடாத தகப்பன். உமது திருநாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரம் உண்டாவதாக, சுவாமி, ஆமென்.

2 மோ. 17, 1-16. அல்லது எபே. 5, 22-33. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். ஏழாம் வாரம், சனி.

ம. 113, 5. 6.

ஏழாம் மன்றாட்டென்ன? தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

இதற்கு அர்த்தமென்ன? பரமண்டலங்களிலிருக்கிற பிதா ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் பொருள்களுக்கும் கனத்திற்கும் விக்கினமான எல்லாத் தீமைகளிலுமிருந்தும் நம்மை இரட்சித்து, நாம் சாகும் வேளையில் நமக்குப் பாக்கியமான மரணத்தை அளித்து அழுகையின் பள்ளத்தாக்காகிய இந்த லோகத்திலிருந்து பரலோகத்திலே தம்மண்டைக்கு நம்மைக் கிருபையாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எல்லாவற்றிற்கும் தொகுப்பாய் இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

இந்த மன்றாட்டு எல்லா மன்றாட்டுகளின் தொகை. இதிலே அவையெல்லாம் அடங்கியிருக்கின்றன. இதில் இந்தப் பூமி அழுகையின் பள்ளத்தாக்கு என்பதையும், போதகத்தாலும் நடக்கையாலும் தேவ நாமம் தூஷணிக்கப்படுவதையும், அவிசுவாசம் அவபக்தி இவற்றால் அவருடைய இராச்சியத்துக்கு வரும் தடைகளையும், நம்முடைய சரீரத்திற்கு நேரிடும் வியாதி தரித்திரத்தையும் நினைக்கிறோம். நாம் தினந்தோறும் பல விசை பாவஞ்செய்து சோதனைகளுக்கு இலேசாய் இடம் கொடுக்கிறோம் என்று அறிந்து மனஸ்தாபப்படுகிறோம். சரீரத்திற்கும் ஆத்துமத்திற்கும் சொத்துக்கும் கீர்த்திக்கும் வரும் கேடுகளை எல்லாம் நினைத்து, அவைகளிலிருந்து பிதா நம்மை இரட்சிக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம். இப்படியே பூமியில் சாகும் வேளையில் இரட்சகரை நம்பிப் பாக்கியமாக மரித்தவர்களே புதுப் பூமியிலே பூரண இரட்சிப்பை அடையப்போகிறார்கள். இப்பூமியின் துன்பத்தை அனுபவித்தவர்கள் அதிலிருந்து மீட்கப்பட்டு, தேவனுடைய மோட்ச இராச்சியத்தில் சேர ஆசிக்காமல் இருக்கமாட்டார்கள். கர்த்தர் என்னை எல்லாப் பொல்லாப்பிலிருந்தும் மீட்டுத் தமது இராச்சியத்தில் சேர்த்துக்கொள்வார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் திட்டமாக நம்பினான். இயேசுகிறீஸ்துவை விசுவாசித்தால் நாமும் அப்படி நம்பலாம். நாம் இவ்விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் மண்ணுலகத்தை வெறுத்து விண்ணுலகத்தை ஆசிக்கவும் பவுல் சொன்னதுபோல் பிரிந்து போய்க் கிறீஸ்துவுடனே இருக்க எனக்கு ஆசையென்று சொல்லவும், இப்பூமியின் கேடுகளெல்லாம் நம்மை ஏவ வேண்டும்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! எல்லா நன்மைகளையும் உம்மிடத்தில் பெற்றுவருகிற எங்களைத் தேவரீர் எல்லாத் தீமைகளிலுமிருந்தும் இரட்சித்து உமது பாக்கியமான இராச்சியத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், சுவாமி, ஆமென்.

2 இரா. 19, 1-25. அல்லது எபே. 6, 1-24. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். எட்டாம் வாரம், ஞாயிறு.

சங். 120, 1. 2.

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களண்டை வருகிறார்கள். உள்ளேயோ கவ்வுகிற ஓநாய்களாய் இருக்கிறார்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்களாக. முள்ளுச் செடிகளில் திராட்சப்பழங்களையும் முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் அறுக்கிறார்களோ? மத். 7, 15. 16.

ஒரு தாய் தன் பிள்ளையைக் கடைத் தெருவுக்கு அனுப்பும்போது ஜாக்கிரதையாய் இரு என்று அதற்குச் சொல்லுவாள். பிள்ளை தாயின் வார்த்தையைக் கவனிக்காமல் போனால் அது ஏதோ ஒரு மோசத்தில் அகப்படும்.

இரட்சகர் நம்மை நம்முடைய வழியில் செல்ல விடுகிறார். சோதனைகளிலும் அருந்தங்களிலும் சிற்றின்பங்களிலும் கவலைகளிலும் நிறைந்த இப்பூமியில் நாம் பயணம் பண்ண வேண்டியது. இந்த எல்லா காட்சிகளிலும் அவர் நம்மோடு கூட இருந்து மேய்ப்பனைப்போல் உண்மையோடு நம்மைக் காப்பாற்றி வருகிறார். நாம் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்காமற் போனாலோ அவர் நம்மைக் காப்பாற்ற மாட்டார். ஆகையால் அவர் நம்மைத் தூண்டி எழுப்பி எச்சரிக்கையாயிருக்கச் சொல்லுகிறார்.

நாம் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். முதல் கள்ளத் தீர்க்கதரிசி பாம்பே. அது ஆதி மனிதரண்டை வந்து உண்மையான தேவனைப் பார்க்கிலும் தான் அவர்களுடைய நன்மையைத் தேடுகிறவனைப்போல் மெய்யான செய்தியைக் கொண்டு [illegible] அவர்களுக்குக் கொடுக்க [illegible] ஒரு [illegible] கொடுக்கிறது போல் வேஷம் போட்டது. அதுமுதற்கொண்டு கள்ளத் தீர்க்கதரிசிகள் [illegible] தேவனுடைய [illegible] கண்ணையுள்ள [illegible] தேவ பக்தியுள்ள [illegible] [illegible] செய்கிறார்கள். ஒரு [illegible] உண்மைக் [illegible] இருக்கிறதும், நீ [illegible] போனாற்போல [illegible] பிள்ளைப் பரிகாசம் பண்ணினாலும், தேவனுடைய அடியார்க்கு விரோதமாக [illegible] அவன் [illegible] எச்சரிக்கையாய் இரு. உண்மையான கள்ளத் தீர்க்கதரிசிகளினால் [illegible].

ஜெபம். உண்மையுள்ள இரட்சகரே! உமது ஆவியினால் நடத்தப்பட்டு [illegible] எங்கள் உலகத்தில் இறங்கி எங்களுக்கு மரண பரி

யத்தம் சம்பூரணஞ் செய்வீர். தேவரீர் ஒருவரே உண்மையுள்ளவர். நாங்கள் உம்மைத்தவிர வேறொருவரையும் நம்ப [illegible] எங்களை எவி எழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

2 கோ. 20, 1-21. அல்லது [illegible] 12. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். எட்டாம் வாரம், திங்கள்.

சங். 120, 3. 4.

எவனெவர்கள் பராபரனுடைய ஆவியினால் நடத்தப்பட்டு நடக்கிறார்களோ அவர்கள் பராபரனுடைய புத்திரராயிருக்கிறார்கள். எனென்றால் திரும்பப் பயம் உண்டாக நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெற்றிராமல் புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். அதனால் அப்பா, பிதாவே என்று கூப்பிடுகிறோம். பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று அந்த ஆவியே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார். ரோ. 8, 14-16.

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் பரிசுத்த ஞானஸ்நானத்தால் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறோம். அந்த ஆவியானவர் நாம் தேவனுடைய பிள்ளைகளென்றும், சர்வ வல்லமையுள்ள அதிசயமான தேவன் நம்மைக் கவனித்து ஒரு தகப்பனைப்போல் நம்மை நேசித்து நம்முடைய கவலைகளெல்லா மதித்து நம்முடைய அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து நம்முடைய நோக்காட்டை எல்லாம் குணமாக்கி நம்மைத் தமது ஐக்கியத்திலும் இராச்சியத்திலும் வீட்டிலும் பந்தியிலும் இப்போதும் எப்போதும் சேர்[illegible]ருக்கிறார் என்றும் தேவ வசனத்தினால் நமக்குத் தி[illegible]மாய் இருதயச் சாட்சி பகருகிறார். இப்படியிருக்க நாம் என் [illegible] பயப்படவேண்டும்? நாம் குறைவுக்கும் பஞ்சத்துக்கு[illegible] சேதத்திற்கும் வியாதிக்கும் மரணத்துக்கும் ஜனங்களுடைய [illegible] பேச்சுக்கும் பரிசுத்த தேவனுடைய கோபத்துக்கும் ஆக்கினை[illegible]க்கும் பயப்படுகிறோமே. ஏன்? நாம் தேவ ஆவியினாலே நடத்தப்படாமல் நம்முடைய இஷ்டத்தின்படி நடந்து நம்முடைய இயல்பான பாவ சுபாவத்தை விட்டு விடாமலும் பரிசுத்த தேவனுடைய வசனத்துக்கும் பிரமாணத்துக்கும் இடங்கொடுக்காமலுமிருக்கிறதினால் தான்.

தேவ ஆவியானவர் நமக்குள்ளிருப்பது போதாது. அவர் நம்மை எவி எழுப்பி ஆண்டுகொள்வது அவசியம். அப்போது நாம் சரியாய் ஜெபம் செய்யப் படிப்போம். புறம்பான வேஷமாகவும் வழக்கத்துக்காகவுமல்ல, உற்சாகத்தோடும் தைரியத்

நேரமே மிகவுமாக இல்லாமல் தங்கள் பட்சமுள்ள தகப்பனைக் கேட்பது போலக் கேட்கலாமென்று போவோம். ஜெபத்திலும் நாம் பயத்துக்கு [illegible] ஞானத்தைப் பெறுகிறோம். ஏனெனில் தேவாவியானவர் [illegible] உம்முடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று நமது ஆவியோடேகூடச் சாட்சி சொல்லுகிறார்.

ஜெபம். இயேசு [illegible], [illegible] இரட்சிப்பைப் பரிசுத்தாவியின் [illegible] எங்களுக்குப் [illegible] சுவாமி, ஆமென்.

2 [illegible] 24, 1-18. அல்லது லூக். 1, 1-11. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். எட்டாம் வாரம், செவ்வாய்.

ஒ. 120, 5.

ஆனபடியால் இந்த என் வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன் எவனோ அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுகிறேன். பெருமழை சொரிந்து பெருவெள்ளம் வந்து காற்றுகளும் அடித்து அந்த வீட்டின் மேல் மோதியும் அது விழுந்ததில்லை. ஏனெனில் கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. ஆனால் இந்த என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ அவன் மணலின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெருமழை சொரிந்து பெருவெள்ளம் வந்து காற்றுகளும் அடித்து அந்த வீட்டின் மேல் மோதினபோது அது விழுந்தது, அதின் விழுதல் பெரிதாயிருந்தது என்றார். மத். 7, 24-27.

இயேசுநாதர் இந்த உவமையிலே சொன்ன இரண்டு வீடுகளையும் பார். இரு வீடுகளும் [illegible], இரண்டும் விசாலமும் [illegible]. இப்படி அவைகள் அநேக [illegible] இருந்திருக்கும். ஆகிலும் [illegible] அந்த வீடுகளுக்கு அஸ்திபாரம் [illegible]. [illegible] இன்னொன்று விழுந்தது.

[illegible] வீட்டைக் கட்டின அஸ்திபாரத்தின் மேல் கட்டுகிறவர் [illegible] போகிற அந்த இரண்டு பேர்வழிகளைப் பார்; இருவரும் [illegible]. இருவரையும் பார்க்க [illegible] மனிதருடைய கண்களுக்கு முன்பாக இருவரும் மோட்ச

தில் சேருவார்களென்று தோன்றும். கர்த்தர் திரும்பி வரும் பொழுதோ, வானம் இடிந்துபோம்படி முழங்கும். அப்போது இரண்டு பேர் வயலிலிருப்பார்கள், ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான். இரண்டு பெண்கள் எந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள். ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்.

மோட்சத்தில் சேருவது இலேசல்ல. தேவ குமாரன் அதைத் தமது இரத்தத்தினால் சம்பாதித்தாலும் அதில் சேர வேண்டியவர்கள் தங்களுக்குண்டானதெல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்தொடர்வது அவசியம். நாம் தேவனுக்கும் லோகத்துக்கும் ஊழியம் செய்வது அசாத்தியம்.

ஜெபம். ஆ, இயேசுகிறிஸ்துவே! சகல மோட்சத்தை அடையும்படி எங்களுக்கு உம்முடைய வசனத்தைக் கொடுத்தீர். இந்தக் கன்மலையின் மீது எங்கள் வீட்டைக் கட்டுகிறவர்களாக இருந்து உம்முடைய வசனத்தைக் கேட்டு அதன்படி செய்வதற்கு எங்களுக்கு அநுக்கிரகம் புரிந்தருளும், சுவாமி, ஆமென்.

2 [illegible] 32, 1-26. அல்லது லூக். 1, 12-36. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். எட்டாம் வாரம், புதன்.

ஒ. 122, 1. 2.

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள், அழிவுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. இதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகம் பேர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. இதைக் கண்டுபிடிக்கிறவர்கள் கொஞ்சம் பேராயிருக்கிறார்கள். மத். 7, 13. 14.

நீ அகன்ற போகிறவர் என்ற விசால வழியில் நடக்கிறவர்களைக் கேள். அவர்கள் இந்தக் கேள்விக்கு வருத்தப்படுவார்கள். ஏனெனில் தாங்கள் போகிற இடம் இன்னதென்று அவர்கள் அறிய விரும்புகிறதில்லை. சிலர் மாத்திரம் அர்ச்சனையுள்ளவர்களாகப் பரிசுத்தமுள்ளவர் நடத்துகிறதான் போகிறோம் என்று சொல்லுவார்கள். மிச்சமானவர்கள் மற்றவர்களைப்போல நாங்களும் மோட்சத்தில் சேருவோம் என்று நம்புகிறோம் என்பார்கள். நெருக்கமான வழியில் நடக்கிறவர்களைக் கேள். நிச்சயமாய் நம்பிக்கையுடன் மோட்சத்துக்குப் போகிறோம் என்று சொல்லுவார்கள். உன்னையே நீ நினைத்தாலும் பாபாதுடைய சந்நிதியில்

சிந்தி இக்கேள்வியைக் கேளு. எல்லாவற்றிலும் முக்கியமான கேள்வி இதுதான்.

அநேகர் மோட்சத்தில் சேர விரும்பினாலும், ஜீவனுக்குக் கொண்டுபோகிற அந்த வழியில் செல்லுகிறவர்கள் கொஞ்சம் பேர் மாத்திரந்தான். விசாலமான வழியில் செல்வது அதிக இலேசு. தன்னிஷ்டப்படி நடக்கிறவர்கள் அதிலே செல்லுகிறார்கள். அதின் வாசல் விரிவாயிருக்கிறது. அவர்கள் மற்ற ஜனங்கள் செய்கிறது போலச் செய்தால் போதும் என்பார்கள். நெருக்கமான வழியில் செல்வதோ வெகு கஷ்டம். அதின் வாசல் இடுக்கமாயிருக்கிறது. மெய் கீர்த்தியையும் அகங்காரத்தையும் சிற்றின்பத்தையும் பாவத்தையும் பழைய மனிதன் விரும்புகிற எல்லாவற்றையும் விட்டு விட்டவர்தான் இதின் வாசலை பிரவேசிக்கலாம். வழி நெருக்கமாயிருக்கிறது. தேவனுடைய பத்துக் கற்பனைகளும் அதன் இருபுறத்திலும் நெருக்கி நிற்கும் முள் வேலி. அதைப் பீறுகிறவன் நெருக்கமான வழியை விட்டு விலகிப் போவான்.

விசாலமான வழியில் நடப்பது மகா மோசம். அது நரகத்துக்குத்தான் கொண்டுபோகிறது. நெருக்கமான வழியைக் கண்டு பிடிப்பது மகா பாக்கியமான காரியம். அது ஜீவனுக்குக் கொண்டுபோகிறது. இந்த வழியிலே உன்னோடு கூடப்போகிற ஒருவனைக் கண்டுபிடித்தால், அவனை நன்குமதித்து அவனை விட்ட நல்ல சிநேகிதன் கிடையாது என்று நினை.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது ஆக்கியத்தில் சேர்ந்த நாங்கள் உமது கையைப் பிடித்து நெருக்கமான வழியில் மோட்சத்துக்குச் செல்ல மனதாயிருக்கிறோம். தேவரீர் எங்களோடிருந்து எங்களை ரட்சித்து எந்நாளும் பக்கத்துணையாய் நின்றருளும், சுவாமி. ஆமென்.

2 மோ. 33, 1-23. அல்லது மத். 7, 1-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். எட்டாம் வாரம், வியாழன்.

சங். 222, 1-3.

நீ இயேசுகிறிஸ்துவினுடைய நற்சேவகனாய்த் தீங்கநுபவி. தன்னைச் சேவகம் எழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்க வேண்டுமென்று தண்டிலே சேவிக்கிற ஒருவனும் பிழைப்பின் சோலிகளில் சிக்கிக்கொள்ளான். ஒருவன் போராடினாலும் நியாயப்பிரமாணமாய்ப் போராடினாலொழிய முடிசூட்டப்படான். 2 தீமோ. 2, 3-5.

கிறிஸ்தவன் ஒரு போர்ச் சேவகன்தான். அவனது சேனாபதி இயேசுகிறிஸ்து. அவனுக்குச் சத்துருக்கள் பிசாசு, லோகம்,

சொந்த மாமிசம் என்பவை. பிழைப்பின் சோலிகளில் சிக்கிக் கொண்டு சேனாபதி யுத்தத்திற்குக் கூப்பிடும்போது யுத்தத்திற்கு வர அவகாசமில்லை என்று சொல்லுகிற ஒரு சேவகனை ஒருவனும் மதிக்கமாட்டான். இப்பூமியில் ஒரு இராஜா தன் குடிஜனங்களை யுத்தத்திற்குக் கூப்பிடும்போது அவர்கள் ஆகாரத்தைப் பற்றிய கவலைகளை விட்டு உழவையும் அறுப்பையும் நிறுத்திப் போட்டு வேலைசாலையைச் சாத்திப்போட்டு யுத்தத்திற்குப் புறப்படுவார்கள் அல்லவா? அப்போது ஒவ்வொரு நல்ல சேவகனும் தன் யுத்தாயுதத்தைப் பிடித்துக்கொள்வான். ஒருவன் யுத்தம் செய்யவேண்டுமானால் மற்ற வேலைகளுக்கும் கவலைகளுக்கும் நீங்கலாயிருக்கவேண்டும். சத்துரு நம்முடைய சாவகாசத்துக்குக் காத்திருக்கமாட்டான்.

நம்முடைய சேனாதிபதியாகிய இயேசுகிறிஸ்து வாரத்தில் ஒரே ஒரு நாளில் மாத்திரம் நம்மை வயலிலிருந்தும் வேலைசாலையிலிருந்தும் கூப்பிடுகிறார். அந்த நாளிலே நீ உன்னைப் பூமிக்கடுத்த விஷயங்களுக்கு நீங்கலாக்கிக் கொள்ளக் கூடாதா?

ஞாயிற்றுக் கிழமையிலும் கூட நாம் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கேட்கிறதை விட்டு எப்படி மோட்சத்தை யடைவேன் என்று கேட்கமாட்டாயா? மாட்டேனென்றால், நீ பரம சேனாபதிக்குப் பிரியமானவனல்ல. அன்றாடக் கஷ்டத்திலும் வேலையிலும் நாம் தேவனுடைய இராச்சியத்தையும் அதின் நீதியையும் தேடுகிறோமோவென்றும் இப்பூமியின் கவலைகளினால் நம்முடைய ஆவி தனக்குக் கட்டளையிடப்பட்ட யுத்தத்திற்கு ஆயத்தமாயிருக்கிறதோ என்றும் ஞாயிற்றுக் கிழமையிலே தெரிய வரும்.

நான் ஞாயிற்றுக்கிழமையில் ஆராதனைக்குப் போகிறேன் என்றும், இராப்போசனத்துக்குச் சேருகிறேன் என்றும், வீட்டிலே தேவ வசனத்தை வாசித்து ஜெபம் செய்ய மறக்கமாட்டேனென்றும் நீ சொல்லக்கூடுமானால், உனக்குக் கட்டளையிடப்பட்ட சண்டையில் ஜெயம் கிடைக்கும்.

ஜெபம். எங்கள் பரம சேனாதிபதியே! பிசாசு லோகம் மாமிசம் என்றவைகளோடு போராட எங்களுக்குக் கற்பித்து, எங்களுக்கு அதற்கு வேண்டிய பெலனைக் கட்டளையிடும். கடைசி நாளிலே எல்லாப் பக்திமான்களோடு எங்களுக்கும் ஜீவ கிரீடத்தைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

2 மோ. 34, 1-14. அல்லது பிலி. 3, 10-30. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். எட்டாம் வாரம், வெள்ளி.

சி. 222, 4-6.

கிறிஸ்து இயேசுவுக்குள் தெய்வபத்தியாய்ச் சீவனம் பண்ண மன தாயிருக்கிற அனைவரும் துன்பப்படுவார்கள். பொல்லாத மனுஷரும் எத் தருமோ மோசம்போக்கி மோசம்போய் வரவர அதிகக் கேடுள்ளவர்களா வார்கள். நீயோ கற்று மெய்யென்றுணர்ந்தவைகளில் நிலைத்திரு, எவனி டத்தில் ஆராய்ந்து கற்றாயென்று உனக்குத் தெரியும். 2 தீமோ. 3, 12-14.

பரிசுத்த அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளைத் தீமோத் தேயுவுக்கு எழுதின நாள் முதற்கொண்டு உலகம் சீர்ப்பட்டிருக் கிறதா? இல்லையே. இதற்கு மாறாக அது கேட்டிலே அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. நாமும் ஒரு நாளிலே பிடத்தன்மை யின்று இடம்பிடித்தப்பட்ட வேளையில் இயேசுநாதருக்கு நல்ல வாக்குக் கொடுத்தோம். பக்தியுள்ள கிறிஸ்தவர்களாகச் சஞ்சா ரித்தாலொழிய இப்பூமியில் ஜீவனம் பண்ணுவது வெகு சிறந்தது என்று எண்ணினோம். ஆகிலும் தேவபக்தியாய் ஜீவனம் பண்ணு வது அரிதிலும் அரிது என்று வெகு சீக்கிரம் உணர்ந்துகொண்டோம். எத்தனையோ விசை நாம் மோசம் போய் எத்தனையோ விசை பிறரையும் மோசம் போக்கினோம். இவ்வுலகில் ஒருவனை ஒருவன் கெடுக்கப் பார்க்கிறான். ஒருவனை ஒரு ஆடம்பர பகட்டுதியிலும் வெள்ளத்திலும் கடப்பாரின் தித் தள்ளிவிடப் பார்க்கிறான். வரு டத்தோறும் வாலிபர்களும் பெண்களும் பெற்றோருடைய வீட் டையும் பள்ளிக்கூடத்தையும் விட்டுச் சோதனையென்கிற ஆற் றில் விழுந்து அநேகமாய் முழுகிப் போகிறார்கள். தாய் தகப்பன் மார் பிரயாசைப்பட்டாலும் உதவிசெய்யக் கூடாதபடி சோ தனை அத்தனை பெரியதாய் விரிகிறது. அது நாளுக்கு நாள் அதி கரித்துக் கொண்டேயிருக்கிறது என்றும் புலம்புகிறார்கள். நீ உன்னையும் உன்னுடையவர்களையும் எப்படி இந்த ஆபத்தி லிருந்து இரட்சிக்கக் கூடும்?

நீ கற்று மெய்யென்றுணர்ந்தவைகளில் நிலைத்திரு. அநே கர் வேதவாக்கியங்களையும் பிரார்த்தனைகளையும் படித்திருக்கிறார் கள். அவை விலைமதிக்கக் கூடாத பொக்கிஷங்கள். அவைகளை நன்குமதித்து வா. இந்த வார்த்தைகளை விசுவாசமான வழியில் நடக் கும் சோதனைக்காரர் அல்ல, வேறே பேர்கள் உனக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தாய் தகப்பன்மாரும் உபாத்திமாரும் குருக்களும் உனக்கு அவைகளைக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் சோதனைக்காரர் அல்ல, மோட்சத்துக்குப் போகும் வழி யைக் காண்பிக்கிறவர்கள். ஆனால் விசேஷமாக உன் இரட்சகர் அறிவிலே உன்னிடம் பேசுகிறார். அவருடைய சத்தத்தைக் கேட்டு

அவரைப் பின் தொடர்ந்தால் சோதனைக்காரர் உனக்கு ஒன்றும் செய்ய முடியாது.

ஜெபம். எங்கள் அன்புள்ள இரட்சகரே! உமது சபையில் சேர்ந்த நாங்கள் சிறு பிராயம் முதல் உமது திருவசனத்தைக் கேட்டுப் படித்து இரட்சிப்பின் வழி இன்னதென்று அறிந்துகொள்ள தேவரீர் எங் களுக்குச் செய்த கிருபைக்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் சத்த உபதேசத்தில் நிலைத்திருந்து நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள எங்களுக்குத் துணைசெய்வீராக, சுவாமி, ஆமென்.

2 கோ. 34, 28-35. அல்லது பிலி. 3, 1-14. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். எட்டாம் வாரம், சனி.

சி. 222, 7-9.

கர்த்தருடைய ஜெபத்தை முடிக்கிற வார்த்தைகள் யாவை? அதேனெனில் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கே என்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமென்.

உலகத்தை ஆண்டுகொள்ளுகிறவனார்? பிசாசு உலகப் பொருள் பேரிலும் உன் பேரிலும் என் பேரிலும் கையை வைத்து இதெல்லாம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டது என்று சொல்லுகிறது. இதைத் தப்பான நம்முடைய இருதயம் அதை நம்பும் படியாக இருக்கிறது. ஏனெனில் தற்சிநேகம் இருதயம் சொல்லும் பொய் யை நம்பப் பண்ணுகிறது. நாம் தேவனுடைய ஆளுகை வேறே விதமாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறோம். ஆகிலும் நம்மு டைய கர்த்தராகிய கிறிஸ்து, பார்க்காமல் நம்புகிறவர்கள் பாக்கி யவான்கள் என்கிறார். நாம் பிசாசின் வல்லமையிலிருந்தாலும் பிதாவைப் பணிந்து ஸ்தோத்திரத்தோடு இராச்சியம் உம்முடை யது என்றுசொல்ல இயேசு நமக்குக் கற்பிக்கிறார்.

நாம் எவ்வளவு பெலவீனர்! இந்த அந்தப் பாவங்களை விட்டுவிடவும் நல்ல மனிதராகும் பொருட்டும் நம்முடைய பெ லனை முழுவதும் கூட்டித் தீர்மானித்திருக்கிறோம். ஆனால் நமக்குச் சித்தமானதைச் செய்யாமல் நமக்குச் சித்தமில்லாததைச் செய் தோம். கிறிஸ்து மார்க்கத்தின்படி உண்மையாய் நடக்கிறவர்கள் தகுந்த பெலனில்லாததால் மலைத்துப் போகிறார்கள். ஆகிலும் இயேசுநாதர் நமக்குப் பெலன் கிடைக்குமிடத்தைக் காண்பிக் கிறார். லோகம் அழுகையின் பள்ளத்தாக்கு, பாவமானது அதிலே ஆண்டு கொள்ளுகிறது. பாவத்துக்குச் சம்பளமோ மரணம்.

இவ்வுலகில் ஜீவனம் பண்ணுகிற காலமோ உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று இயேசுநாதர் தம்முடைய சீஷர்களுடன் சொன்னதை மறக்கவொண்ணாது. தேவனுடைய பிள்ளைகள் இங்கே தங்களுக்கு வீடு இல்லை என்றும் தாங்கள் பிதாவின் வீட்டுக்குப் போகிறவர்களென்றும் அறிவார்கள்.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் உமது குமாரன் எங்களுக்குக் கற்றுக்கொடுத்த ஜெபத்தைச் சொல்லித் தேவரீர் எங்களுக்குப் பிதாவென்றும் தேவரீரால் எங்களுக்குச் சகல நன்மைகளும் கிடைக்குமென்றும் நம்புகிறோம். உம்மையன்றி எங்களுக்கு வேறே அடைக்கலம் இல்லை, சுவாமி, ஆமேன்.

4 மோ. 11, 1-20. அல்லது பிலி. 3, 15-21. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். ஒன்பதாம் வாரம், ஞாயிறு.

ஞ. 122, 1. 2.

ஐசுவரியவானான ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான். இவன் அவனுடைய ஆஸ்திகளை அழித்துப்போடுகிறவனென்று அவனுக்கு அறிவிக்கப்பட்டான். அப்பொழுது அவனை அழைத்து, அவனுடனே: உன்பேரில் நான் இதைக் கேட்கிறதென்ன; உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி, என்னெனில் இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது என்றான். லூக். 16, 1. 2.

தேவனுடைய அளவற்ற செல்வம் அவர் நமக்கு அருளின நன்மைகளினால் தெரியும். அவைகளை நாம் அவருடைய உக்கிராணக்காரராக, அவருடைய சித்தப்படி உபயோகிக்கவேண்டும். நாமோ அவருடைய ஆஸ்திகளை அழித்துப்போட்டவர்களாக இருக்கிறோம்.

பொருட்களையும் சரீர ஆத்தும வரங்களையும் நாம் சோம்பலில் செலவிட்டுப் பாவத்துக்கு ஊழியம் செய்தோம். எல்லாவற்றையும் அறிந்த தேவனுக்கு முன்பாக நமது பாவங்கள் நம்மைக் குற்றப்படுத்துகின்றன. அவர் நம்மையும் நோக்கி: உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி, நீ இனி உக்கிராணக்காரனாக இருக்கக்கூடாது என்று சொல்லுகிறார்.

மோசம் போகாதிருப்போமாக. நமக்கும் அநீத உக்கிராணக்காரனுக்கும் ஒரு வித்தியாசமுமில்லை. அவன் தன் எசமானுடைய கடன்காரரை வசமாக்கி அவர்களோடு எத்தாடி செய்துகொண்டு, தான் இன்னும் உத்தியோகத்தில் இருக்கிறது போல நடித்தான். ஏனெனில் எசமான் செய்த தீர்ப்பு இன்னும்

நிறைவேறவுமில்லை. உக்கிராணக்காரன் இன்னும் உத்தியோகத்திலிருந்து நீக்கப்படவுமில்லை. இப்படி நம்மைப்பற்றியும் தீர்ப்புச் செய்தாயிற்று. தேவனாகிய கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்கு நாம் பாத்திரவான்களல்ல, நாம் ஜீவனையும் மற்றச் சிலாக்கியங்களையும் இழந்து விடவேண்டிய நிலைமையிலிருக்கிறோம். ஆனால் தீர்ப்பு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆண்டவர் நம்மை இவ்வுலகிலிருந்து அழைக்கும் மட்டும் நமக்கு இன்னம் கெடுகொடுத்திருக்கிறார். அவர் நாளைக்கோ இன்றைக்கோ நம்மை அழைத்தால் நாம் என்ன செய்வோம். இப்போதிருக்கும் காலத்தை வீணாய்ப் போக்கடிக்கப் போகிறோமா? நீ உயிரோடிருக்கும் இன்றையத்தினத்தில் குணப்படு. நாளையத் தினம் உன் கதி இன்னவிதமாயிருக்குமென்று உனக்குத் தெரியாது.

ஜெபம். தயாபரராகிய பிதாவே! உமது பிள்ளைகளாகிய எங்களுக்குச் சகல நன்மைகளையும் அருளிச்செய்து எங்களைப் பிதாவின் வாஞ்சை பட்சத்திலேயும் அன்பிலேயும் காப்பாற்றி வருகிறீர். நாங்களோ [illegible] உம்மை விட்டு விட்டு எங்கள் மனம்போனபோக்கில் நடக்கிறோம். கர்த்தாவே, எங்களைத் தள்ளாதேயும். எங்கள் மேல் இரக்கமாயிரும், சுவாமி, ஆமேன்.

4 மோ. 11, 21-35. அல்லது சங். 38. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். ஒன்பதாம் வாரம், திங்கள்.

ஞ. 222, 1. 2.

மனுஷ சோதனை அல்லாமல் வேறே சோதனை உங்களைப் பிடிக்கவில்லை; தேவன் உண்மையாயிருக்கிறார், அவர் உங்கள் பலத்துக்கு மிஞ்சினதாய் நீங்கள் சோதிக்கப்படவொட்டாமல், நீங்கள் உத்தரிக்கக் கூடும்படி, சோதனையுடனே கூடப் போக்கையும் உண்டாக்குவார். 1 கொரி. 10, 13.

பிசாசுக்கு மனுஷருடைய சுபாவம் நன்றாய்த் தெரியும். ஆகையால் அது அவனவன் பெலவீனத்துக்கு ஏற்ப அவனவனைச் சோதிக்கும். ஒருவன் இலேசாய்ச் சண்டைக்கும் கோபத்துக்கும் இடங்கொடுப்பான். இன்னொருவன் இயற்கையான பட்சத்தினாலே சிக்கிரம் கெட்டதை அடக்கிச் சமாதானத்துக்கு இடங்கொடுப்பான். ஒருவன் மதுபானத்துக்கு அடிமை; இன்னொருவன் போசனபானங்களில் மிதமாயிருந்தும், தன் நன்னடக்கையைக் குறித்துப் பெருமை பாராட்டுவான். ஒருவன் தன் காமத்தினால் துர் ஆசை இச்சையாகிய உளையில் புரளுகிறான்

வன். இன்னொருவன் இயல்பாகவே இந்த அழுக்கை அருவருப்பான். ஆயினும் பிறத்தியானைப் பற்றி இலேசாய்ப் பின்புறணி பேசுவான். அநேகரை அந்நிய பொருளும் வேறநேகரைப் பொய்யும் கெடுக்கிறது. அநேகர் தினம் தினம் செய்துவருகிற வேலையினால் தேவனை மறக்கிறார்கள். அநேகர் அவர் கொடுத்த வரங்களை வீணாக்குகிறார்கள்.

உனக்கு அருமையான பாவம் எது? எந்தச் சோதனையுடன் நீ போராடுகிறாய்? இவர் பிறத்தியானைப் பார்த்து அவனுக்கிருக்கிற சோதனை நமக்கு இல்லை என்று சந்தோஷப்படுவதுண்டு: ஆயினும் நம்முடைய மனச்சாட்சி நமது விசேஷித்த பாவத்துக்காக நம்மைக் குற்றஞ்சாட்டும்போது அது எனக்கு இயல்பு என்றும் வேறுவிதமாய் நடக்க முடியவில்லை என்றும் நாம் சொல்லி நம்மையே மோசம் போக்குவதுண்டு. தேவனோ உண்மையுள்ளவர். அவர் நம்முடைய பெலத்துக்கு மிஞ்சி நாம் சோதிக்கப்படவொட்டார். நாம் சோதனையினால் மேற்கொள்ளப்பட்டால் அது நமது குற்றமே.

நீ சோதனைக்குப் பயப்படுகிறாயா? முன் செய்த பாவங்களை நினைக்கிறாயா? அப்படிப்பட்ட பாவத்துக்கு இடங்கொடுப்பேனோ என்று அஞ்சுகிறாயா? அப்படியானால், இந்த வசனம் உன்னை ஆற்றித்தேற்றித் தைரியப்படுத்தக் கடவது. எவ்வளவுக்கு உன் பெலவீனம் அதிகமோ அவ்வளவுக்கு உன் தேவனைப் பிடித்துக்கொள். அவர் உண்மையுள்ளவர்.

ஜெபம். உண்மையுள்ள பிதாவே! உமது அளவற்ற அன்பினால் எங்களை எந்தச் சோதனையிலும் கைவிடாமல் எங்களுக்குத் துணையாய் நிற்கிறீர். நாங்கள் ஒருபோதும் இடறிப்போகாமல் உம்மை உறுதியாய் நம்பும்படி எங்களுக்கு உம்தாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

4 மோ. 12, 1-15. அல்லது பிலி. 4, 1-9. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். ஒன்பதாம் வாரம், செவ்வாய்.

ஞ. 222, 3. 4.

அப்போது கர்த்தர் சொன்னதாவது: இப்போதுத் தருணகாலத்தில் படி கொடுக்க, எசமான் தன் பணிவிடை சனங்கள்மேல் வைக்கும் உண்மையும் புத்தியுமுள்ள உக்கிராணக்காரன் ஆர்? எசமான் வந்து அப்படிச் செய்யக் காணும் ஊழியக்காரன் பாக்கியவான். மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், தமக்குண்டானதெல்லாவற்றின் மேலும் அவனை வைப்பார் என்றார். லூக். 12, 42-44.

போன ஞாயிற்றுக்கிழமையில் நாம் அநீத உக்கிராணக்காரனைப்பற்றிய உவமையைக் கேட்டு அவனுடைய திருஷ்டாந்தத்தால் கிருபைக் காலத்தைப் பிரயோசனப்படுத்தும் விதத்தைக் கற்றுக்கொண்டோம். இன்றைக்குக் கர்த்தர் நமக்கு ஒரு உண்மையுள்ள உக்கிராணக்காரனைக் காண்பிக்கிறார். அவன் புத்தியுள்ளவன். நமக்கு உண்மையில்லையானால் வரம், பெலன், சித்தம் இவையிருந்தும் பயனில்லை. நாம் அற்ப விஷயங்களிலும் பெரிய விஷயங்களிலும் உண்மையைக் காண்பித்தால் அதுவே போதும்.

இயேசுநாதர் கடைசி நாளில் வரும்போது நம்மிடத்தில் கணக்குக் கேட்பார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளும் வேலைக்காரரும் பசி தீரச் சாப்பிட்டமாத்திரமல்ல, அவர்கள் மோட்சத்தை அடையவும் பிரயாசப்பட்டார்களா என்றும், புருஷனுக்குப் பெண்சாதியும் பெண்சாதிக்குப் புருஷனும் வேலையிலும் ஜெபத்திலும் இடைவிடாத பக்கத் துணையாயிருந்தார்களா என்றும், சகோதரனுக்குச் சகோதரியும் சகோதரிக்குச் சகோதரனும் தேவ இராச்சியத்துக்குட் பிரவேசிக்க உதவி செய்தார்களா என்றும், ஞானத்தாய் தகப்பன்மார் பிள்ளைக்காகக் கொடுத்த வாக்கை நிறைவேற்றினார்களா என்றும் கேட்பார்.

என் தோழன் கெட்டுப்போக நான் காரணமாயிருந்தேனோ என்றும் நான் அவனைச் சீர்ப்படுத்தியிருக்க முடியாதா என்றும் யோசிக்கவேண்டும். உன் சத்துரு பகையையும் கோபத்தையும் விட்டு ஒப்புரவாகாமைக்கு நான் காரணனோ என்று உன்னைச் சோதித்துப் பார்.

நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ என்று காயீன் கேட்டதுபோல நாம் அடிக்கடி கேட்கிறோம். இயேசுநாதரோ நம்மெல்லாரையும் அன்பின் பாசத்தால் கட்டி, நீ உன் சகோதரனுக்குக் காவலாளி தான் என்கிறார்.

ஜெபம். எங்கள் அன்புள்ள பிதாவே! எங்களில் ஒவ்வொருவனுக்கும் பலவித நன்மைகளையும் வரங்களையும் அருளி அவைகளைப் பற்றிக் கணக்குக் கேட்க ஒரு நாளைக் குறித்திருக்கிறீர். ஆண்டவரே! நாங்கள் உமக்குப் பயந்து தேவரீர் எங்களுக்கு அருளிச் செய்ததை உமது சித்தத்தின்படி கையாட எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

4 மோ. 13, 18-34. அல்லது பிலி. 4, 10-23. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஒன்பதாம் வாரம், புதன்.

ஏ. 222, 5. 6.

பசியுள்ளவனுக்கு உன் அப்பத்தைப் பிட்டுக்கொடுத்து, தரித்திரரான பரதேசிகளை வீட்டிலே சேர்த்துக்கொண்டு, அம்மணமானவனைக் கண்டாயானால், அவனுக்கு வஸ்திரம் கொடுத்து, உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருந்தால், அது அல்லவோ நாம் தெரிந்துகொண்ட உபவாசம். அப்பொழுது உன் வெளிச்சம் விடியற்கால வெளுப்பைப்போல எழும்பி, உன் சுகமாகுதல் சீக்கிரமாய்த் துளிர்த்து, உன் நீதி உன் முன் நடக்கும், கர்த்தருடைய மகிமை உன் பின்புறத்தைக் காக்கும். எசா. 58, 7. 8.

பசிக்கிறவனுக்குப் பசி அற்பக்காரியமல்ல. வீடுவாசல் இல்லாதவன் வீடுவாசலை மதிப்பான். தன் நிர்வாணத்தை மூட ஒன்றுமில்லாதவன் வஸ்திரத்தை வாஞ்சையோடே வாங்குவான். வாங்கி அருமையென்று அவன் களிப்பான். நல்ல உணவை உண்டு, [illegible] உடைகளை உடுத்து, வீட்டிலே உட்கார்ந்திருக்கிறவருக்கு இருந்தால், உனக்கு வெளியே நிற்கிறவனுடைய நிர்ப்பந்தம் விளங்காது. ஆனால் பரமபிதா ஒருவரே அந்த நிர்ப்பந்தத்தை அறிந்து அதற்குப் பரிதபிக்கிறார். தமது உக்கிராணக்காரராகிய நாமும் அவரைப்போல இந்தப் பசி [illegible]த்தை உணர்ந்து தாம் சமர்ப்பித்த நன்மைகளை நிர்ப்பந்தருக்கும் உதவவேண்டுமென்று கற்பிக்கிறார். தேவன் நம்மைத் தமது அளவற்ற இரக்கத்தில் [illegible] அழைத்ததற்காக நாம் அவருக்குப் பிரமாணமாய் ஸ்தோத்திரம் செலுத்த முடியாது. அவரைப்போல் நாம் இரக்கமுள்ளவர்களானபோது அவருடைய பாக்கியத்தில் நமக்கும் பங்குண்டு. இரக்கமுள்ளவர்களுக்கு வாய்க்கும் ஆசீர்வாதத்தைப்பற்றித் தீர்க்கதரிசி உன் நீதி உன் முன் நடக்குமென்கிறான். கடைசி நாளிலே இராஜா தன் வலது பக்கத்தில் நிற்கிறவர்களை நோக்கி வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, நீங்கள் எல்லாரிலும் சிறியரான இந்த என்னுடைய சகோதரரில் ஒருவனுக்கு என்ன செய்தீர்களோ அதை எனக்கும் செய்தீர்கள் என்பார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! எங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள் என்று தேவரீர் எங்களுக்குக் கட்டளையிட்டீர். இப்படி எங்கள் பிதாவினுக்கு இரக்கம் பாராட்டுவதற்கு எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

4 இரா. 14, 1-35. அல்லது கொலொ. 1, 1-23. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். ஒன்பதாம் வாரம், வியாழன்.

ஏ. 222, 7. 8.

தன் வீட்டை நீதியின்றியும், தன் மேலறைகளை நியாயமின்றியும் கட்டி, தனக்கடுத்தவனுக்கு அவனுடைய கூலியைக் கொடாமல், அவனை வீண் வேலை கொள்ளுகிறவனுக்கு ஐயோ. எரே. 22, 14.

ஒரு உண்மையான வீட்டெசமானைப்போல நம்முடைய பரமபிதா தம்முடைய வீட்டிலிருக்கிறவர்களுடைய சரீரத்துக்காகவும் ஆத்துமத்துக்காகவும் கவலைப்படுகிறார். நீ உன் பிறத்தியானை வீண் வேலை கொள்ளுகிறாயோ அல்லது அவனுக்குத் தகுந்த காலத்தில் அவன் கூலியைக் கொடுக்கிறாயோ என்றும் பார்க்கிறார். வேலைக்காரன் பாதிக் கூலிக்காக வேலைசெய்து அதையும் பெறாமல் கூலிக்குக் காத்திருந்தால் அது அவருக்குப் பிரியமல்ல. அவருடைய உக்கிராணக்காரன் பண விஷயத்தில் நேர்மையாயிராவிட்டால், அது அவருடைய மேன்மைக்கு ஈனம். உன் பிறத்தியானை வருத்தப்படுத்துகிற அநேக அநீதியான செய்கைகள் மனுஷ நியாயாதிபதிக்குத் தெரிவிக்கப்படாவிட்டாலும், கர்த்தராகிய பராபரன் அவைகளை அறிந்திருக்கிறார். அவருடைய கற்பனைக்கு விரோதமான செல்வம் பாவம். அநியாய சொத்தால் வீட்டைக் கட்டுகிறவனுக்கு ஐயோ. உன் வீடு எவ்வளவு சேர்த்தியாயிருந்தாலும், நீ எவ்வளவு ஆஸ்தியைக் கட்டிச் சேர்த்திருந்தாலும், பராபரன் அவற்றோடு சம்பந்தப்பட்ட சகல அநியாயத்தையும் அறிவார். அநியாய சொத்து ஒரு இரகசியமான சாபம்போல் இருக்கிறது. நல்ல பழத்தில் சொத்தை [illegible]யிருந்தால் முழுப் பழமும் கெட்டுப்போகும். உன் வீடு ஒரே அநியாயத்தினிமித்தம் இடிந்துபோம். ஒரே அநியாயத்தினிமித்தம் சாபத்திடமாகாவண்ணம் நீ பிரயாசைப்படு. ஆதாயத்தில் அநேக கிறிஸ்தவர்கள் பணத்துக்கும் தேவனுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை என்று நினைக்கிறார்கள். அப்படி நினைக்கிறது சரியல்ல. நாம் நம்முடைய லாபத்தைப் பார்க்குமுன் தேவனுடைய கற்பனையைக் கவனிக்க வேண்டும். நஷ்டத்துக்கு அல்ல, பரிசுத்த தேவனுடைய கோபத்துக்கு அஞ்சக்கடவோம். அப்பொழுது சண்டையும் சினமும் இருதயங்களைப் பிரித்து வருத்தப்படுத்த இடமிராது. நாம் நம்முடைய பொருளைப் பற்றித் திருப்தியும் சந்தோஷமுமுள்ளவர்களாகவுமிருப்போம்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது அளவில்லாத இரக்கத்தின்படி எங்களில் ஒவ்வொருவனுக்கும் புதிய நன்மைகளை அருளியிருக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே, தேவரீர் எங்களுக்கு அருளி

ளதைப் பிரத்தியாளுடைய தன்மைக்காகக் கையாடி அவனை எங்களைப் போல் சிநேகிக்க எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி, ஆமென்.

4 மோ. 16, 1-35. அல்லது கொலொ. 1, 24-29. வாசிக்கவும்.

திரித். பண்டி. பி. ஒன்பதாம் வாரம், வெள்ளி.

கீ. 222, 9-11.

திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத் தனக்குண்டாகக் கைகளினால் நல்ல வேலைசெய்து உழைக்கக் கடவன். எபே. 4, 28.

கொஞ்சக் காலத்துக்கு முன் [illegible] சேர்க்க [illegible] கேட்கிற [illegible] இப்படிப் பேசினான். அவர்கள் அந்த [illegible] போது செய்ததெல்லாம் இப்போது அவர்களுக் குத் [illegible] வேண்டும். [illegible] திருட்டு [illegible] தெரியும். [illegible] வெளிக்காகக் [illegible] அவன் [illegible] [illegible] ஆதலால் [illegible] சரியாயிருக்க வேண்டும். [illegible] கொடுத்துக் [illegible] [illegible] கூலி [illegible] இருப்பது திருடுகிறான். [illegible] தேவன் [illegible] சொல்லன் [illegible] [illegible] கிறான்.

[illegible] செய்தால் நம்முடைய பாவ [illegible] இதின் [illegible] அவர்கள் எந்த [illegible] வேண்டுமென்றும், [illegible] செய்யவேண்டுமென்றும், [illegible] உன்னுடைய [illegible] உன்னையும் உன்னுடையவர்களையும் [illegible] குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத் தனக்குண்டாக வேலைசெய் என்றும் சொல்லியிருக்கிறது.

திரித்திருக்கும் [illegible] களுக்கும் [illegible] மற்ற தர்ம கிரியைகளுக்கும் வேண்டிய போதுமான மனதிருந் தால் யாவரும் சம்பாதிக்கக் கூடும்.

ஜெபம். இரக்கமுள்ள பிதாவே! நாங்கள் அனுதினமும் உமது ஆசீர்வாதத்தைப் பெற்றனுபவித்தும் [illegible] பிரத்தியாளை [illegible] படி சிநேகிக்க எங்களுக்கு அடிக்கடி மனதில்லை. ஆண்டவரே, உமதாவி யால் எங்கள் கல் நெஞ்சை உருக்கி உமது அன்பின் தீயை அதிலே மூட் டியருளும், சுவாமி, ஆமென்.

4 மோ. 17, 1-13. அல்லது கொலொ. 2, 1-15. வாசிக்கவும்.

திரித். பண்டி. பி. ஒன்பதாம் வாரம், சனி.

கீ. 222, 12. 13.

ஆமென் என்கிற வார்த்தைக்கு அர்த்தமென்ன? இந்த மன்றாட்டு கள் பரமண்டலங்களிலிருக்கிற பிதாவுக்குப் பொருத்தமானவைகள் என்றும், [illegible] அவைகளைக் கேட்டுக் கொள்கிறார் என்றும், நாம் நிச்சயித்துக்கொள் ள ஆமென் என்கிற வார்த்தையை [illegible] சொல்லுகிறோம்; ஏனென்றால் நாம் இப்படி மன்றாட அவர் தாமே நமக்குக் கற்பித்து நமது மன்றாட்டைக் கேட்பேனென்று [illegible] வாக்குத்தத்தம் பண்ணித் தந்தார். ஆமென் ஆமென் [illegible] மெய்யாகவே அப்படியாகும் என்பதாம்.

சந்தேகத்தோடு ஒருவனை வேண்டிக்கொள்வது ஒருவ னுக்கும் பிரியமல்ல. ஒருவன் இன்னொருவனை வேண்டிக்கொள் ளும்போது தன்னை அவனுக்கு [illegible] அவன் தன் வின் ணப்பத்துக்குச் செவிகொடுப்பானோ [illegible] அறியாமல் சந்தே கத்தோடு காத்திருக்க வேணும். [illegible] பார்க்க நம்மை ஒன்றும் அவ்வளவு தாழ்மைப்படுத்துகிறதில்லை. ஆகிலும் நமது விண்ணப்பம் கேட்கப்படும் [illegible] நாம் அறிந்ததால் மன்றாடு வதைப் பார்க்க நம்மை ஒன்றும் அவ்வளவு ஆற்றித் தேற்றித் தைரி யப்படுத்துவதுமில்லை. அப்போது மன்றாடுவது இலேசாயிருக் கும். ஒரு பிள்ளை தன் தகப்பனை [illegible] ஒரு பொருளைக் கேட்பது போல நாம் நமது பரம பிதாவை [illegible] மன்றாடலாம். அவர் எந்த நன்மையையும் கொடுக்கச் [illegible] அவர் ஒரு தகப்பனைப்போல நம்மை ஆதரித்து [illegible] மனதுள்ளவர் [illegible] யாகத் தம்மை வேண்டிக்கொள்ள [illegible] [illegible] ஏழு மன் றாட்டுகளிலும் அவர் தமது அன்பையும் நமது குறைகளையும் எல்லாம் காட்டி தம்மை வேண்டிக்கொண்டவுடனே இம்மைக்

க்கும் மறுமைக்கும் வேண்டியதெல்லாம் உனக்குக் கிடைக்கும் என்கிறார்.

இதை நிச்சயமாய் நம்புகிறாயா? நாம் உற்சாகத்தோடு நம்பாததால் நாம் ஆறுதல் இன்றியும் கர்த்தருடைய ஜெபத்தை அடிக்கடி பிரயோசனம் இல்லாமலும் சொல்லுகிறோம். நமது பரம பிதா மிகவும் கிருபையும் இரக்கமுமுள்ளவர். அற்ப விசுவாசிகளாகிய நம்மிடத்தில் அவர் எவ்வளவு பொறுமை பாராட்டி வருகிறார். தாம் சொல்லப்போகிற பதிலை நமது வாயில்போட்டுக் கொடுத்து ஆமென் என்கிற வார்த்தையோடு ஜெபத்தை முடிக்கச் சொல்லுகிறார்.

ஜெபம். இரக்கமும் கிருபையுமுள்ள பிதாவே! தேவரீர் எங்கள் மேல் வைத்த கிருபையை நாங்கள் நன்றியறிதலோடு உணரும்படி எங்களுக்கு ஒத்தாசை செய்யும். நாங்கள் விசுவாசிக்கிறோம் கர்த்தாவே, எங்கள் அவிசுவாசம் நீங்க ஒத்தாசை செய்யும். திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாகிய எங்கள் ஏழை இருதயம் திரும்பத் திரும்ப நம்பிக்கை அற்றுப்போகையில் உமது வார்த்தையினால் எங்களைத் தைரியப்படுத்தியருளும், ஆமென், ஆமென். அப்படியே ஆகட்டும், சுவாமி, ஆமென்.

4 மோ. 20, 1-13. அல்லது கொலொ. 2, 16-23. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பத்தாம் வாரம், ஞாயிறு.

பி. 235, 1. 2.

அவர் சமீபித்தபோது பட்டணத்தைப் பார்த்து, அதன்பேரில் அழுது: நீயும் இந்த உன் நாளிலாகிலும், உன் சமாதானத்துக்கானவைகளை அறிந்திருந்தால் நலமாம். இப்போதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. என்றார். லூக். 19, 41. 42.

கர்த்தர் தமது ஜனத்தைச் சிநேகித்த விதத்தைப் பாருங்கள். அதை இரட்சிக்கத் தமது சொந்த உயிரைப் பெரிதாக எண்ணாமல் அதைத் தமது மந்தையின் ஆடுகளுக்காக ஒப்புக்கொடுக்கிறார். இப்படிச் சிநேகித்தும், இதற்காகப் பரிகாசமும் விரோதமும் பண்ணப்படும்பொழுது கோபித்துக்கொள்ளாமல் தமது ஜனத்துக்காக அழுகிறார். இஸ்ரவேலருடைய முரட்டாட்டத்துக்காகக் கோபிக்கத் தாராளப் போதுமான காரணமிருந்தும், இயேசு ஜனத்தின் அறிவீனத்துக்காகவும் முரட்டாட்டத்துக்காகவும் அழுகிறார். அவர்களுக்குப் பார்க்க மனமிருந்தால் தேவன் அவர்களுக்குத் தமது நேச குமாரனைக்கொண்டு அருளிச்செய்த சமா

தானத்தை உணர்ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அதை அறிய மனதின்றிக் கண் கெட்டவர்களாய் அழிவுக்கு உட்படுகிறார்கள். இதை ஆவியிலே கண்ட இயேசு அழவேண்டி நேரிட்டது. பரிசுத்த பட்டணம் கல்லின் மேல் கல்லின்றி இடிந்து போவதை அப்போதே அவர் கண்டார். அவர்கள் கிடக்கட்டும். உன் சமாதானத்துக்கானவைகளை நீ அறிந்து கொண்டிருக்கிறாயா? அல்லது அது உன்னுடைய கண்களுக்கு முன்பாக மறைக்கப்பட்டிருக்கிறதா? உன் இரட்சகர் உன்னைச் சிநேகித்து, உன்னை இரட்சிக்கப் பிரயாசைப்பட்டும், நீ அவருடைய சிநேகத்தை அசட்டைபண்ணி நியாயத்தீர்ப்பும் அக்கினியும் மோட்சமும் நித்திய ஜீவனுமில்லை என்று எண்ணி போகத்தாரோடு சுகமாய் வாழ்ந்திருப்பதின் பேரில் கருத்தாயிருக்கிறாயா? அப்படியானால் அவர் உனக்காகவும் அழவேண்டும். உன் சமாதானத்துக்கானவைகளை நீ அறியாமல் போவதற்குக் காரணமென்ன? உனக்கு மனதில்லையா? சக்தி இல்லையா? உனக்கு அறிவிருந்தால் மனசும் உண்டென்று உன் இரட்சகர் நினைக்கிறார். ஆகையால் நீ அவரண்டையில் சேர்ந்து இயேசுவே, தாவீதின் குமாரனே! என்மேல் இரங்கும் என்று கெஞ்சு. அவர் உன்னை நோக்கி: நான் உனக்குச் செய்யவேண்டியதென்னவென்று கேட்பார். நீ, ஆண்டவரே, நான் பார்வை அடைய என்று சொல்.

ஜெபம். எங்கள் கிருபையுள்ள மேசியாவே! உமது சிம்மாசனத்துக்கு முன்பாக விழுந்து உமது பொறுமையையும் கிருபையையும் தேடிவருகிறோம். ஆண்டவரே எங்களை உமது திரு முகத்தை விட்டுத் தள்ளாமல் எங்கள் கண்களைத் திறந்து தேவகோபத்தையும் உமது சிநேகத்தையும் எங்களுக்குக் காண்பித்தருளும், சுவாமி, ஆமென்.

4 மோ. 21, 1-9. அல்லது சங். 102. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பத்தாம் வாரம், திங்கள்.

பி. 235. 3. 4.

இப்போதும் பராபரனுடைய ஆவியினாலே பேசுகிற ஒருவனும் இயேசுவைத் தூஷணியானவன் என்றும், பரிசுத்த ஆவியினாலேயொழிய ஒருவனும் இயேசுவைக் கர்த்தர் என்று சொல்லக் கூடாதென்றும் உங்களுக்கு அறிவிக்கிறேன். 1 கொரி. 12, 3.

இஸ்ரவேலர் தங்கள் முரட்டாட்டத்தினால் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக அறிந்துகொள்ளவில்லை. இன்றைக்கும் அவர்கள் தங்கள் அவிசுவாசத்திலே நிலைத்திருக்கிறார்.

கள். இந்தக் குருட்டாட்டத்தைப் பரிசுத்தாவியானவர் மாத்திரம் நீக்கக் கூடும். நாமும் இயற்கையாகக் கண் தெரியாதவர்களாய் நம்முடைய சொந்தப் புத்தியினாலும் பெலத்தினாலும் இயேசு கிறிஸ்துவை நமது இரட்சகராக அறிந்து விசுவசிக்க முடியாதவர்களாயிருக்கிறோம். நாம் பார்வையடைந்து விசுவசிக்கும் பொருட்டுப் பரிசுத்தாவியானவர் நம்முடைய கண்களைத் திறந்து நம்முடைய இருதயத்தைப் பிரகாசிப்பிக்க வேண்டியது அவசியம்.

கர்த்தர் நோவாவைப் பார்த்து: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை, அவன் தாலும் மாமிசம் என்று சொன்ன பிரகாரமாக நானா வகையில் உலகத்தில் நடக்கிறது. அநேகவாசம் அதிகரித்து அநேகர் தேவனுடைய கர்த்தரை விட்டு விடுகிறார்கள். தேவாவியானவர் அவர்களோடு போராடுவதில்லை. அவர்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம் நடந்து தங்கள் மாமிச இச்சைப்படி செய்ய ஆசிக்கிறார்கள். விண்ணிலும் மண்ணிலும் எங்களுக்கு ஆண்டவர் வேண்டாம்; நாங்களே எங்களுக்கு ஆண்டவர் என்று சொல்லுவார்கள். இதினாலே இவர்கள் இயேசுகிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் ஆண்டவராகத் தெரிவித்துத் துதிக்கும் பரிசுத்தாவியானவருக்கு விரோதமாகப் போராடுகிறவர்களாயிருக்கிறார்கள். இது மனஸ்தாபமானால், நாம் உட்கருத்தாய்ப் பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபிக்கவேண்டும். அவர் ஒருவரே மாமிசத்தின் சேஷ்டையையும் இச்சைகளையும் மேற்கொண்டு நம்மைப் பாவ பெலத்தாலே ரிப்பக் கூடியவர். அப்போது நாம் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து மகிமையின் ஆண்டவரென்று அறிந்து அவர் அருகில் விழுந்து, என் ஆண்டவரே, என் தேவனே, உம்முடைய வெளிச்சத்தில் வெளிச்சத்தைப் பார்க்கிறோம், நீரே ஜீவ ஊற்று என்று சொல்லுவோம்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! நாங்கள் உம்மை அறியவும் அண்டிக்கொள்ளவும் உமது ஆவியைக் கொண்டு எங்கள் உணர்த்தைப் பிரகாசிப்பித்து வருகிறீர். ஆண்டவரே, நாங்கள் இந்த வெளிச்சத்துக்கு இடம் கொடுத்து உம்மை எங்கள் இரட்சகராகவும் இராசாவாகவும் அறிந்து கொள்வதற்கு எங்களுக்கு சகாயம் செய்தருளும், சுவாமி, ஆமென்.

4 மோ. 22, 1-20. அல்லது கொலொ. 3, 1-17. வாசிக்கவும்.

திரித். பண்டி. பீங். பத்தாம் வாரம், செவ்வாய்.

ஞ. 251, 1. 2.

தீர்க்கதரிசிகளைக் கொன்று, உன்னண்டைக்கு அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிற எருசலேமே, எருசலேமே, கோழி தன் குஞ்சுகளைச் செட்டைகளின் கீழே கூட்டிச் சேர்க்கும் வண்ணமாக நான் எத்தனை தரம் உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்க்க வேண்டுமென்றிருந்தேன்; நீங்களோ மாட்டோம் என்றீர்கள். இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும். எனென்றால், பராபரனுடைய நாமத்திலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இது முதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மத். 23, 37-39.

தேவன் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல் ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறார். ஆகையால் தேவ குமாரன் இவ்வுலகத்தை ஆக்கினைத்தீர்ப்புக்குத் தீர்க்காமல் அதை உய்யும் பொருட்டு வந்தார். இஸ்ரவேலும் ஆக்கினைக்குத் தப்பிப் பிழைப்பதே அவருடைய திருச்சித்தம். இதினால்தான் அவர்கள் குணப்பட்டுத் தம்மை விசுவசிக்கும்படி திரும்பத் திரும்ப அவர்களுக்குத் தேவ சமாதானத்தைத் தெரிவித்தார். ஆனால் கடைசியாக அவர் எருசலேமுக்கு மனதில்லை என்று கண்டு புலம்பினார். கோழி தன் குஞ்சுகளைச் செட்டைகளின் கீழே கூட்டிச் சேர்க்கும் வண்ணமாக அவர் அவர்களைக் கூட்டிச்சேர்க்க வேண்டுமென்றிருந்தார். ஆனால் மாட்டோம் என்றார்கள். இதினால் ஆக்கினை வருவது அவசியமாயிற்று. ஆண்டவர் உன்னையும் இரட்சிக்க மனதாயிருக்கிறார். அவர் தமது திரு இரத்தத்தால் உனக்கும் தேவ சமாதானத்தையும் பாவ மன்னிப்பையும் சம்பாதித்தார். உனக்கு அவருடைய அன்பான சித்தம் அடிக்கடி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவரையன்றி இரட்சகரில்லை என்று அடிக்கடி கேட்டிருக்கிறாய். ஆகையால் நீ இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தம் என்று அறிந்துகொண்டிருக்கிறாய். அதற்கு [illegible], உனக்கும் மனதுண்டா? இல்லையானால் காரணம் என்ன?

இப்போது இஸ்ரவேல் இரட்சிக்கப்படக் கூடும். உனக்கும் இப்போது கிருபைக் காலம். ஆகையால் சிலுவையில் தொங்கினவரைப் பார்த்துக் கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று சொல். அப்போது கர்த்தர் உனக்காக அழ வேண்டியதில்லை. குணப்படுகிற ஒவ்வொரு பாவியின் பேரிலும் பரமண்டலத்தில் தேவ தூதர்கள் சந்தோஷப்படுகிறதுபோல உன் பேரிலும் சந்தோஷப்படுவார்கள்.

செபம். பொறுமையும் கிருபாசத்தமும் உள்ள இயேசு இரட்சகரே! உமது சொந்த சனத்தைத் திரும்பத் திரும்பக் கூப்பிட்டாலும் அவர்கள் வரமாட்டோம் என்று சொல்லி உம்மைத் தள்ளி விட்டார்கள். கர்த்தாவே! நாங்கள் அவர்களைப்போல் ஆக்கினைக்குட்படாதபடி உம்மை உறுதியாய்ப் பற்றுவதற்கு உமதாவியை எங்களுக்குத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

4 மோ. 24, 1-26 அல்லது கொலொ. 3, 18-4, 1. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பத்தாம் வாரம், புதன்.

ஏ. 251. 3. 4.

உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்? அவனவன் தன் பாவத்தின் பேரில் முறையிடுவானாக. நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து கர்த்தரிடத்திற்குத் திரும்பக் கடவோம். நாம் நம்முடைய இருதயத்தைக் கைகளோடே கூடப் பரமண்டலங்களிலிருக்கிற பராபரனண்டைக்கு ஏறெடுத்து, நாங்கள் துரோகம் செய்து கலகம் பண்ணினோம்; ஆகையால் தேவரீர் மன்னிக்காதிருந்தீர் என்று விண்ணப்பம் செய்யக் கடவோம். எரே. புலம். 3, 39-42.

இவ்வுலகில் மனுமக்கள் எக்காலத்திலும் மனக்கசப்போடு முறுமுறுப்பானவர்கள். அவர்கள் காலபேதத்து [illegible] துன்பத்தின் நிமித்தம் நுகவியவைகளைப் பற்றி முறையிடுகிறார்கள். தங்களைப் பற்றியும் தங்கள் பாவத்தைப் பற்றியும் முறையிடுகிறவர் [illegible]. அவர்கள் எண்ணப்படி காரியக்கேடுகளுக்குக் காரணம் தங்களிடத்திலல்ல, மற்றவர்களிடத்திலே இருக்கிறதென்று நினைக்கிறார்கள். தங்களையே சோதித்து ஒருவேளை தங்கள் தப்பிதம் செய்தேனென்று யோசிப்பது அபூர்வம். எல்லாரும் நல்லோராயிருந்தால் உலகம் முன்னுக்கு வருமென்று [illegible] பேசிக்கொள்ளுகிறார்கள். முதல் முதல் தாங்களே குணப்பட்டு மனமாறி கர்த்தருண்டை திரும்பவேண்டுமென்று சொன்னாலும் [illegible]. ஆதலால் அவர்கள் பாவம் அவர்கள் பேரில் நிற்கிறது. அவர்கள் பாவ விமோசனம் அருளக்கூடிய இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தத்தை அடையாததினாலே பாவ [illegible] பாக்கியத்துக்குத் தப்பமாட்டார்கள்.

அவனவன் தன் தன் பாவத்தின் மேல் முறையிடுவானாக என்று சொல்லுகிற தேவவசனம் நம்முள்ளத்தின் ஆழத்தில் மறைந்திருக்கிற கேட்டை உணரும்படி நம்மை எழுப்புகிறது. நாமே பாவம் செய்து நிற்பதுயானால் போனோம் என்று உண்மையாய் அறிக்கையிடுவோமாக. பிறரை அல்ல, உன்னையே குற்றப்படுத்து. அப

போன நீயே முதல் முதல் சீர்திருந்தி உனக்கடுத்தவர்களையும் திருத்தக் கூடியவனாவாய்.

செபம். பரம பிதாவே! உலகத்தின் பாவம் உமக்கு எவ்வளவு விசனமுண்டாக்குகிறது. பிதாவே, நாங்கள் எங்கள் கேட்டை அறிந்து குணப்பட்டு நித்திய கோபாக்கினைக்குத் தப்பிப்போக எங்கள் கண்களைத் திறந்தருளும், சுவாமி, ஆமேன்.

5 மோ. 3, 12-29. அல்லது கொலொ. 4, 2-17 வாசிக்கவும்,

திரித். பண்டி. பிக். பத்தாம் வாரம், வியாழன்.

ஏ. 251, 5. 6.

வானங்களே, கேளுங்கள்; பூமியே, செவிகொடு; ஏனெனில் கர்த்தர் பேசுகிறார்: பிள்ளைகளை வளர்த்து உயர்த்தினேன், ஆனால் அவர்கள் என்னை விட்டு மருண்டு விழுந்தார்கள். மாடு தன் எஜமானையும் கழுதை தன் ஆண்டவன் முன்னணையையும் அறியும், ஆனால் இஸ்ரவேல் அறிவில்லாமலும், என்னுடைய சனம் உணர்வில்லாமலுமிருக்கிறது என்றார். ஏசா. 1, 2. 3.

மறுதலித்து நன்றியறியாமல் போன இஸ்ரவேல் ஜனத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசி வானத்தையும் பூமியையும் சாட்சியாக அழைக்கிறான். வானத்தில் வீற்றிருக்கிற ஆண்டவர் இந்த ஜனத்தைத் தெரிந்துகொண்டு தாம் அவர்களுக்குப் பிதாவாகவும் அவர்கள் தமக்குப் பிள்ளைகளாகவும் இருக்கவேண்டுமென்றிருந்தார். அவர்களுக்கு அநேக நன்மைகளைச் செய்து [illegible] ஜாதிகளையும் தாழ்த்தி அவர்களை உயர்த்தினார். ஆகிலும் இஸ்ரவேல் அறிவில்லாமலும் உணர்வில்லாமலும் போய்விட்டது. உணர்வில்லாத ஜெந்துக்களும் தங்களைப் பராமரிக்கிற எஜமானுக்கு நன்றிபாராட்டும். இஸ்ரவேலரோ இந்த ஜெந்துக்களை விட நன்றிகேடர் ஆனார்கள். இஸ்ரவேலரைப் பார்க்கிலும் நாம் புண்ணியவான்களென்று சொல்லமுடியாது. நாமும் தினந்தோறும் கணக்கில் அடங்காத நன்மைகளை அவருடைய கையில் வாங்கி அநுபவித்தும் அவருக்குச் செலுத்தவேண்டிய நன்றியை மறந்துவிட்ட பாவிகளாயிருக்கிறோம். தேவன் இஸ்ரவேலுக்குச் செய்ததை விட நமக்கு அதிகமான நன்மைகளைச் செய்திருக்கிறார். அவர் தமது சொந்த குமாரனை நமக்காகக் கொடுத்தார். இதை அறிந்த நாம் ஏனோதானோவென்றிருக்கக் கூடாது. தேவன் மனித அவதாரம் செய்த அதிசயத்தைக் கண்டு தேவதூதர்கள் களிகூர்ந்தார்கள். இந்த அதிசயம் தேவதூதர் பொருட்டல்ல, நம் பொருட்டே

நடந்தது. ஆதலால் அவர்கள் ஸ்தோத்திரம் பாட, நாம் மவுனமாயிருக்கலாமா? தேவ வல்லமையின் அற்புதங்களையும் நித்திய அன்பின் பெருஞ் செயல்களையும் நினைத்துக் கர்த்தரைத் துதிப்போமாக. பூமி எல்லாம் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது. வானங்கள் பராபரனுடைய மகிமையைச் சொல்லுகிறது என்று வேதம் கூறுகிறது.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது கிருபையையும் பொறுமையையும் அநுதினமும் அனுபவிக்கிற நாங்கள் அதற்காக உமக்கு நன்றி செலுத்த எங்களை எவியெழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

5 மோ. 11, 1-29. அல்லது 1 தெச. 1, 1-10. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பத்தாம் வாரம், வெள்ளி.

சி. 222, 15-17.

இஸ்ரவேலே, நீ உன் சகாயமாகிய நமக்கு விரோதமானது உன்னுடைய கேடு. ஓசே. 13, 9.

தேவன் எல்லாரும் இரட்சிக்கப்பட்டுச் சத்தியத்தை அறியச் சித்தமுள்ளவராயிருக்கும் அழைக்கப்பட்டவர்களில் சிலர் மாத்திரம் தெரிந்து கொள்ளப்பட்டு மோட்சத்தை அடைகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? சுவிசேஷத்தை ஏககாலத்தில் கேட்டவர்களில் சிலர் வசனத்தை நம்பி ஏற்றுக்கொண்டு மோட்சத்தை அடைய, மற்றவர்கள் அவிசுவாசத்தில் நிலைத்திருந்து கெட்டுப்போவதற்குக் காரணம் என்ன? இப்படிக் கேட்கிற நாம் ஒன்றை மனசில் வைக்கவேண்டும். அதென்னவென்றால் நம்முடைய பாவத்தினாலே நாம் எல்லாரும் ஏகமாய் நித்திய வாழ்வின் பாக்கியத்தை இழந்து அழிவுக்கு பாத்திரர் ஆனோம் என்பதுதான். பராபரனுடைய கிருபை ஒன்றே அநேகரை இரட்சிக்கிறது. நாம் கெட்டுப்போனால் அது நமது குற்றம். ஆகையால் நாம் நெருக்கமான வாசல் வழியாய் இராச்சியத்துக்குள் பிரவேசிக்கப் பிரயாசைப்படுவோமாக. நாம் ஒரு நாள் தேவ கிருபையினால் மோட்சத்தில் சேர்ந்த பிறகு மூன்று காரியங்களைப் பற்றி ஆச்சரியப்படுவோம். முதலாவது நாம் நிச்சயமாய் அங்கே பார்ப்போமென்றிருந்தவர்களில் அநேகர் அங்கே இல்லை என்றும், இரண்டாவது அங்கே சேரமாட்டார்கள் என்று நாம் நினைத்தவர்களில் அநேகர் அங்கே சேர்ந்தார்கள் என்றும், மூன்றாவது நாமே அந்தப் பாக்கியமான இடத்தில் வந்

தோம் என்றும் பார்த்து ஆச்சரியப்படுவோம்." ஆகையால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இன்னார் என்றும் மற்றவர்கள் இன்னார் என்றும் விசாரிக்காமல் நமது பாவத்தை அறிக்கையிட்டுப் பராபரன் நமக்கு விசுவாசத்தை அளித்து அதை முடிவுபரியந்தம் காப்பாற்றும்படி மன்றாடுவோமாக.

ஜெபம். இரக்கமுள்ள பிதாவே! உமது அளவற்ற நன்மைகளை அனுபவிக்கிற நாங்கள் உம்மை உறுதியாய் நம்பி உம்மையன்றி வேறே இரட்சகரைத் தேடாமல் உம்மால் எங்கள் ஆத்துமங்களை நித்திய அழிவுக்குத் தப்புவித்துக்கொள்ள எங்களை எச்சரித்தருளும். சுவாமி, ஆமென்.

5 மோ. 18, 1-19. அல்லது 1 தெச. 2, 1-20. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பத்தாம் வாரம், சனி.

சி. 222, 18-20.

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். பின்வாங்கிப்போனானேயாகில் அப்படிக்கொத்தவன் பேரில் நம்முடைய ஆத்துமம் பிரியமாயிராது என்கிறார். நாமோவெனில் கெட்டுப்போகப் பின்வாங்குகிற மார்க்கத்தாராயிராமல் ஆத்துமம் இரட்சிக்கப்பட விசுவாச மார்க்கத்தாராயிருக்கிறோம். விசுவாசமோவென்றால் நம்புகிற காரியங்களின் நிச்சயத்தைத் தெளிவிக்குதலாயிருக்கிறது. எபி. 10, 38; 11, 1.

பராபரன் கிறிஸ்துவை நோக்கித் தனது பேரில் இரங்குவார் என்று ஒரு ஏழைப் பாவி சுவிசேஷத்தினாலே [illegible] அவன் மெய்யான விசுவாசத்துக்கு வந்திருக்கிறான். சுவிசேஷத்தில் இயேசுநாதரைப் பற்றிச் சொல்லப்பட்டதை எல்லாம் நீ அறிந்திருக்கலாம், வேதபுஸ்தகம் முழுவதும் உனக்குத் தலைகீழ்ப் பாடமாய் இருக்கலாம், அதை எல்லாம் நீ உண்மையென்றும் தேவ வசனம் என்றும் எண்ணலாம்; ஆகிலும் நீ மெய்யான விசுவாசத்தை இன்னும் பெற்றவனல்ல. நீ இயேசுகிறிஸ்துவைப் பற்றிக் கேட்டதின்பேரில் உன் இருதயத்தின் முழு நம்பிக்கையை வைத்தால் நீ மெய்யான விசுவாசத்தை அடைந்தாய். நீ கேட்டதைச் சுருக்கிச் சொல்ல வேண்டுமானால், "அவர் நம்முடைய பாவங்களின் நிமித்தம் மரித்து நமது நீதியின் நிமித்தம் உயிர்த்தார்" என்பது தான். உன் இருதயத்திலும் மனச்சாட்சியிலும் உன் பாவத்தின் பாரத்தை உணர்ந்து தேவகோபத்துக்குக் கீழாகி இம்மையிலும் மறுமையிலும் நீ கெட்டுப்போகிறதை அறிந்தால் நீ உன் பாவத்தின் நிமித்தம் ஒப்புக்கொடுக்கப்பட்டவர் மேல் நம்பிக்கை வை. அதுவே உன்னை இரட்சிக்கும்.

உன் சரீரக் கண்ணால் நீ அவரைப் பார்க்காவிட்டாலும், பாராமல் நம்புகிறவர்கள் பாக்கியவான்கள் என்று அறிவாயாக. அவரை முழு இருதயத்தாலும் பிடித்து அவரையே கண்மணியாக எண்ணுவதே மெய்யான விசுவாசம். இந்த விசுவாசத்தினால் உத்தாரத்தையும் நீதியையும் பெற்றுப் பாவ மரணத்திலிருந்து புது ஜீவனுக்கு வந்து உன் ஆத்துமா என்றும் பிழைக்கும். இப்பேர்ப்பட்ட பெரிய நன்மை நமக்குக் கொடுக்கப்படுகிறதினாலே நம்பிக்கையை விட்டுவிடாதிருப்போமாக.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது ஆவியின் வல்லமையினால் நித்திய ஜீவசம்பத்தை யெங்களில் உண்டாக்கி அதை எங்களில் காப்பாற்றி வருகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். தேவரீர் எங்களில் ஆரம்பித்த கிரியையை முடித்து நாங்கள் நம்புகிற தேவரீரைத் தரிசிக்கும்படி எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமேன்.

5 மோ. 31, 1-18. அல்லது 1 தெச. 3, 1-13. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினோராம் வாரம், ஞாயிறு.

ஞ. 160, 1-3.

ஆயக்காரன் தூரநின்று, தன் கண்களை முதலாய் வானத்துக்கு ஏறெடுக்க மனதாயிராமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: பராபரனே, பாவியாகிய என் மேல் கிருபையுள்ளவராகுமென்றான். லூக். 18, 13.

நாம் ஜெபத்தோடே பராபரனிடத்தில் சேர்ந்து ஆறுதலையும் நீதியையும் பெறுவதற்கு இந்த ஆயக்காரன் நமக்கு முன் மாதிரியாக இருக்கிறான். மகா பெரிய அநேக பாவத்தால் நாம் தேவ கோபத்துக்கும் தண்டனைக்கும் பாத்திரவான்கள். ஆகையால் பாவிகளாகிய திகிலோடும் தேவனிடத்தில் சேர்வது அவசியம். பெருமைக்காரரோடே தேவன் எதிர்த்து நின்று தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். ஏனெனில் நித்திய வாசகரும் பரிசுத்தர் என்று நாமம் உள்ளவருமாகிய உயரமும் உன்னதமுமானவர் சொல்லுகிறதாவது: பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கவும் நாமே உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் நொறுங்குண்ட பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன். நாம் சதாகாலமாய் வழக்காடுவதில்லை, நாம் என்றென்றைக்கும் கோபமாயிருப்பதுமில்லை என்று சொல்லுகிறார். நாம் பராபரனுடைய இரக்கத்தைச் சம்பாதிக்கும்படி அவருக்கு முன்பாக ஒன்றும் கொண்டுவரக் கூடாதபடியினாலே

நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்து சம்பாதித்த கிருபையை மாத்திரமே நம்பி ஆயக்காரனைப்போல் நம்முடைய மார்பில் அடித்துப் பராபரனே, பாவியாகிய என் பேரில் கிருபையுள்ளவராகுமென்று சொல்வோமாக. சுகவாளிகளுக்கு அல்ல, வியாதிக்காரருக்கே வைத்தியன் தேவை. இயேசுநாதர் நீதிமானை அல்ல, பாவிகளைக் குணப்படுத்தலுக்கு அழைக்க வந்தார். ஆகையால் அந்த ஆயக்காரன் தன் சுய நீதியை நம்புகிற பரிசேயனை விட நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பினான். தேவ கிருபையின் சூரியன் நம்மைப் பிரகாசிக்கும்படி நாம் ஏழைப்பாவிகளாக பராபரனண்டை சேருவோமாக. சுய நீதியை நம்பித் தேவ கோபாக்கினைக்கு ஆளாவதைப் பார்க்கிலும் இதுவே நலம்.

ஜெபம். இரக்கமுள்ள பிதாவே! பெருமைக்காரரோடே எதிர்த்து தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறவரே, ஏழைப் பாவிகளாகிய நாங்கள் உமக்கு முன்பாக விழுந்து உம்முடைய கிருபையையும் பொறுமையையும் தேடிவருகிறோம். தயவுள்ள சுவாமி, நியாயமாய் இருக்கிறபடி எங்களை நரகத்தில் தள்ளாமேயும், தேவரீர் எங்கள் இரட்சகராகிய கிறிஸ்துவின் முகத்தைப் பார்த்து நாங்கள் செய்த பாவங்களை எல்லாம் மன்னித்து எங்களை இரட்சியும், சுவாமி, ஆமேன்.

5 மோ. 33, 1-29. அல்லது சங். 32. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினோராம் வாரம், திங்கள்.

ஞ. 160, 4-6.

நான் அப்போஸ்தலர் எல்லாரிலுஞ் சிறியவனாயிருக்கிறேன்; நான் பராபரனுடைய சபையைத் துன்பப்படுத்தினபடியினாலே, நான் அப்போஸ்தலன் என்று அழைக்கப்படப் பாத்திரவான் அல்ல. நான் இருக்கிறதோ பராபரனுடைய கிருபையினாலே இருக்கிறேன். அவர் என் மேலே வைத்த கிருபை விருதாவுமாயிராமல், நான் அவர்கள் எல்லாரையும் பார்க்க அதிகமாய் உழைத்தேன். நானே அல்ல, என்னுடனே இருக்கும் பராபரனுடைய கிருபைதானே. 1 கொரி. 15, 9. 10.

தேவாலயத்தில் ஜெபம்செய்த ஆயக்காரனைப்போல் அப்போஸ்தலனாகிய பவுலும் தாழ்மையுள்ளவன். இருவரும் தங்கள் குற்றத்தை மறைக்காமல் அதை அறிக்கையிட்டு மன்னிப்பைக் கேட்டுக்கொண்டவர்கள்.

தேவனுடைய சபையைத் துன்பப்படுத்திக் கிறிஸ்தவர்களுடைய சாவுக்காகத் தான் சந்தோஷப்பட்டதைப் பவுல் நினைவுகூருகிறான். தான் ஒன்றுமில்லை என்றும் எல்லாவற்றையும் தன்

தேவனாகிய இரட்சகருடைய அளவற்ற கிருபையினால் பெற்றவன் என்றும் கண்டு அறிந்துகொள்ளுகிறான். ஆகையால் அவன் தேவனை மகிமைப்படுத்தி அவர் தன்மேல் வைத்த கிருபை விருதாவாய்ப் போனதில்லை என்று களிகூருகிறான். முந்திப் பராபரனுடைய சபையோடே போர்புரிந்ததைப் பற்றி மனஸ்தாபப்படுகிறான். ஆகையால் தன்னை மெச்சிக்கொள்ளாமல் தான் அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவனென்கிறான். ஆனால் அவன் செய்த சுவிசேஷப் பிரசங்கத்தால் உண்டான பலனெல்லாம் தேவனுடைய கிரியையேயல்லாமல் வேறொன்றுமில்லை. ஆகையால் அவன் தேவ கிருபையை முன்னிட்டுச் செய்த வேலையைப் புகழும்போது தேவனையே புகழுகிறான். இப்படி நாமும் நம்மில் இருக்கும் பாவமும் அக்கிரமமும் நம்முடைய குற்றமே என்று தாழ்மையாயுணர்ந்து தேவன் அதை நீக்கும்படி கிருபையாய் அவருக்கு முன் கொண்டு வருவோமா?

நம்மிலிருக்கும் நன்மையும் நம்மால் இல்லையெனில் உண்டான நன்மையும் தேவ கிருபையினால் உண்டானதென்று எண்ணி அவருக்கு ஸ்தோத்திரம் சொல்லக் கடவோம். அவருடைய கிருபையே நாம் குணப்பட்டுக் கர்த்தருக்கு ஊழியஞ்செய்து மோட்சத்தில் சேருவதற்குத் துவக்கமும் முடிவுமாயிருக்கிறது.

ஜெபம். கிருபையுள்ள இரட்சகரே! என்னையன்றி உங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று சொன்னீரே. ஆகையால் நாங்கள் எங்கள் பாவத்தை அறிக்கையிடவும், அதற்காக மன்னிப்பைத் தேடவும் எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும். நாங்கள் பாவத்தைவிட்டு உமக்குச் சுத்த இருதயத்தோடு ஊழியஞ்செய்கிறதற்கு எங்களுக்கு உமதாவியின் பலத்தைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

5 மோ. 34, 1-12. அல்லது 1 கொ. 4, 1-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பி. பதினோராம் வாரம், செவ்வாய்.

பா. 160, 9. 10.

அப்பொழுது, இயேசு அவர்களுக்குச் சொன்னதாவது: மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முந்தப் பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். அதெப்படியென்றால், யோவான் நீதியின் வழியிலே உங்களண்டை வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை, ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும் பிற்பாடு அவனை விசுவாசிக்கும்படிக்கு மனஸ்தாபப்படாதே போனீர்கள். மத். 21, 31. 32.

சுயநீதிக்காரராகிய பரிசேயரை நோக்கிக் கர்த்தர் இப்படிப் பேசுகிறார். ஆயக்காரரையும் பெரிய பாவிகளையும் மாத்திரம் குணப்படுதலுக்கு அழைக்கிறது அவசியம்; மற்றவர்களை அழைக்கிறது அவசியம் அல்லவென்று அநேகர் நினைக்கிறார்கள். ஆகிலும் நாம் எல்லாரும் பாவிகள். சிலர் பெரிய பாவங்களையும் சிலர் சிறிய பாவங்களையும் சிலர் வெளியரங்கமாகவும் சிலர் இரகசியமாகவும் பாவஞ்செய்து எல்லாரும் மோட்ச இராச்சியத்துக்குத் தூரமாயிருக்கிறார்கள். ஆயக்காரரும் பெரிய பாவிகளும், "குணப்படுங்கள் பரலோக இராச்சியம் சமீபித்தது" என்று யோவான் பிரசங்கித்ததைக் கேட்டுக் குணப்பட்டார்கள். இப்படியே அந்த ஆயக்காரனும் பராபரனே, என் பேரில் கிருபையுள்ளவராயிருமென்று தன் மார்பில் அடித்துக்கொண்டு கெஞ்சிக் கேட்டான்.

பாவத்தில் விழுந்து, தன் ஆஸ்திபாஸ்தியை இழந்து சொத்தையும் வாழ்வையும் அழித்துக் கெட்டுப்போன குமாரனைப்போல் பாவத்தின் கசப்பான கனிகளை ருசித்துப் பார்த்தவன், குணப்படுதலுக்கு அழைக்கிற இரட்சகருடைய சத்தத்தை இன்பமாய்க் கேட்பான். இப்படிப்பட்டவன் சுயநீதிக்காரனாகிய பரிசேயனை விட்டுச் சீக்கிரமாய் வான இராச்சியத்தில் சேருவான். பரிசேயன் தன் புண்ணியத்தினால் தன்னை நீதிமானாக எண்ணித் தனக்குக் குணப்படுதல் தேவை இல்லையென்று அறிந்துகொண்டான். நீ இப்படிப்பட்ட பரிசேயனாய் இருந்தால் எல்லாவற்றையும் அறிந்த தேவனைப் புகழுவாயானாலும் வெகுநாளில் ஏமாற்றமடைந்து குறைந்தவனாய்க் காணப்படுவாய்.

ஜெபம். எல்லாவற்றையும் அறிந்த எங்கள் பரம பிதாவே! எங்கள் இருதயங்களில் மறைந்த பெருமையையும் வேஷத்தையும் அறிவீர். நாங்கள் எங்களை மோசம்போக்காதபடி எங்கள் கண்களைத் திறந்து நாங்கள் இருக்கிற மோசமான நிலைமையை எங்களுக்குக் காண்பித்து நாங்கள் சீக்கிரம் குணப்படும்படி எங்களை ஏவி எழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

யோசுவா 1, 1-18. அல்லது 1 தெச. 5, 1-11. வாசிக்கவும்.

திரித். பண்டி. பி. பதினோராம் வாரம், புதன்.

பா. 178, 1. 2.

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது பராபரனுடைய ஈவு. ஒருவனும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல,

ஏனென்றால் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் நற்கிரியைகளுக்குச் சிருஷ்டிக்கப்பட்டு, பராபரனுடைய செய்கையாயிருக்கிறோம். அதுகளில் நாம் நடக்க அவர் முன்னதாக அதுகளுக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிறார். எபேசியர் 2, 8-10.

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டோமானால் நாம் எவ்வளவு பாக்கியவான்கள். நாம் இயேசு கிறிஸ்துவை நம்பினால் இந்த உலகத்தில் நம்மிலும் நம்மைச் சுற்றிலும் எவ்வளவு குறைவும் பெலவீனமும் பாடும் துன்பமும் இருந்தும் நாம் பாக்கியவான்கள். தேவன் நம்மைத் தாமுடைய இரக்கத்தினாலே மறு பிறப்பின் முழுக்கினாலும் பரிசுத்தாவியினாலும் இரட்சிக்கிறதினாலே நாம் பாக்கியவான்கள். தேவன் நமக்குத் தமது வார்த்தையினாலே கொடுத்த வாக்குத்தத்தத்தையும் இயேசுகிறிஸ்து ஞானஸ்நானத்தினால் அருளிச்செய்த பாவமன்னிப்பையும் நம்பினால் நாம் பாக்கியவான்கள்.

இந்தப் பாக்கியமானது நமது கிரியைகளினால் அல்ல, அவருடைய கிருபையினாலே நமக்குக் கிடைக்கும் ஈவு. நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் நற்கிரியைகளுக்குச் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறபடியினாலே பாக்கியவான்கள். ஆனால் நாம் நமது ஜீவியத்திலும் நடக்கையிலும் தேவனுடைய செய்கையாகவும் அவருடைய பாக்கியமான பிள்ளைகளாகவும் வெளிப்படுகிறோமா? செய்யப்பட்ட பொருள் செய்தவனது திறத்தைக் காண்பிக்கும். நாம் தேவனுடைய செய்கையாயிருந்தால் அவருடைய மகிமை நம்மிலும் வெளிப்படவேண்டும். நாம் கிரியையினால் அல்ல, கிருபையினால் இரட்சிக்கப்பட்டோமாகில், நற்கிரியைகளைச் செய்யும் அன்பினாலே மாத்திரம் பாக்கியவான்களாய் இருக்கக்கூடும். நாம் அவைகளில் நடக்க அவர் அவைகளுக்கு நம்மை ஆயத்தம்பண்ணினார். தேவன் எல்லாவற்றையும் செய்கிறதினாலே நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று நினைக்கப்படாது. நாம் கிரியைகளினால் இரட்சிப்பைச் சம்பாதிக்க முடியாவிட்டாலும் இரட்சிக்கப்பட்டவர்களாகிய நாம் உற்சாகமாய் நற்கிரியைகளைச் செய்யவேண்டும்.

ஜெபம், இரக்கமுள்ள பிதாவே! உமது அளவற்ற கிருபையின்படி ஏழைப் பாவிகளாகிய எங்களையும் உம்மண்டை அழைத்து நித்திய பாக்கியத்தை எங்களுக்குக் கொடுக்கப் போகிறீர். நாங்கள் இந்தத் தயவை நன்றாய் அறிந்து உமக்குப் பயந்து நடந்து நற்கிரியைகளினால் எங்கள் விசுவாசத்தைக் காட்டுவதற்கு எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

யோவான் 2, 1-18. அல்லது 1 தெச. 5, 12-28. வாசிக்கவும்.

திரித். பண்டி. பி. பதினோராம் வாரம், வியாழன்.

பி. 178, 5. 6.

எல்லாரும் பாவஞ்செய்து, பராபரனுடைய மகிமையற்றவர்களாயிருந்து, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவினால் மீட்குதலைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். முந்திப் பராபரனுடைய பொறுமையின் காலத்தில் நடந்த பாவங்களை அவர் மன்னித்து விட்டதற்குத் தம்முடைய நீதியை ரூபிக்கும்படியாகவும், தாம் நீதியுள்ளவரும் இயேசுவைப் பற்றிக்கொள்ளுகிற விசுவாசியை நீதிமானாக்குகிறவருமென்பதாய் இக்காலத்திலே தம்முடைய நீதியைக் காண்பிக்கும்படியாகவும். ரோ. 3, 23-25.

நாம் எல்லாரும் பாவிகள், நம்மில் ஒருவனும் பராபரனுக்கு முன்பாக நீதிமான் அல்ல. நாம் லோகத்துக்கு முன்பாக எவ்வளவு புண்ணியவான்களாகத் தோன்றினாலும் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதிக்கிறவருக்கு முன்பாக வெட்கமடையவும் கோபாக்கினைக்கு ஆளாகவும் வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆதலால்தான் இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிக்க வந்தார். அவரைத் தேவன் கிருபாசனமாக்கினார்.

அங்கே நாம் கிருபையையும் மன்னிப்பையும் கண்டடையக் கூடும். அவர் மெய்யான பிரதான ஆசாரியராகத் தமது சொந்த இரத்தத்தைக்கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து எல்லாருக்காகவும் நித்திய மீட்பை உண்டுபண்ணினார். உன் சொந்தக் கிரியைகளினாலே ஒரு புண்ணியத்தையும் சம்பாதிக்கவும் ஒரு பாவத்துக்கும் ஈடு செலுத்தவும் ஒரு பாவத்துக்கும் மன்னிப்பைப் பெறவும் கூடாது. கிறிஸ்துவின் கிரியையும் புண்ணியமும் மாத்திரம் எல்லாருக்கும் போதுமான ஆறுதலும் அடைக்கலமுமாயிருக்கவேண்டும். இதை விசுவாசிக்கிறவன் தேவனை நோக்கி: தேவரீர் குமாரன் ஏழைப் பாவிகளுக்காகச் சிந்தின இரத்தத்தைப் பார்த்து என்மேலும் கிருபையுள்ளவராயிரும் என்று சொல்லுகிறான். இப்படி விசுவாசித்தால் உன் இரட்சகருடைய புண்ணியத்தை உன் சொந்தப் புண்ணியமாக எண்ணி அவர் உனக்கு அருளிச்செய்த பாவமன்னிப்பைப் பெறுவாய். இதினாலே தேவனுக்கு முன்பாகச் செல்லும் நீதி உன்னுடையதாகும். இதே தேவன் நமக்குக் காண்பிக்கும் வழி.

ஜெபம். கிருபையும் பொறுமையுமுள்ள பராபரனே, உம்மை விட்டுப் பிரிந்த எங்களை இரட்சிக்க உமது நேச குமாரனை எங்களுக்காக மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தீர். கர்த்தாவே, நாங்கள் அவர் சம்பாதித்த புண்ணியத்தை உறுதியாய் நம்பி இரட்சிப்படைய எங்களுக்கு உமது ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

யோவான் 3, 1-17 அல்லது 2 தெச. 1, 1-12. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினோராம் வாரம், வெள்ளி.

ஞா. 178, 8. 9.

இப்போதும் கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்து மாமிசத்தின்படியல்ல ஆவியின்படியே நடக்கிறவர்கள் மீதில் ஆக்கினை சுமத்தல் ஒன்றுமில்லை. ரோ. 8, 1.

தேவாலயத்துக்குப் போன அந்த ஆயக்காரன் ஆக்கினைக்குள்ளான பல பாவங்களைச் செய்தவன். தேவனும் மனுஷரும் அவனைக் குற்றவாளி என்று சொல்லுவார்கள். அவனோடு தேவாலயத்தில் நின்ற பரிசேயனும் ஆக்கினைக்குத் தப்ப முடியாது. சுய நீதிக்காரராகிய இவ்விரு பரிசேயருக்கும் ஆயக்காரனைப் போன்ற பெரிய பாவிகளுக்கும் ஆக்கினைக்குத் தப்ப ஒரே வழி உண்டு. அது, குணப்பட்டு லோகத்தின் பாவங்களைச் சுமந்து தேவனுடைய கோபாக்கினையைச் சகித்த இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதுதான். அவருக்குள்ளிருப்பவன் தன் மீதில் ஆக்கினை சுமத்தல் இல்லை என்றும் தான் நீதிமான் என்றும் களிகூரலாம்.

மரத்தில் கனி உண்டாவதுபோல் விசுவாசத்திலிருந்து நீதிகளும் உண்டாகும். மரம் நல்ல இயல்புள்ளதாயிருந்தால் நல்ல கனியைக் கொடுக்கும். நாம் நீதிமான்களாக்கப்பட்டால் நீதியின் கனிகள் நமது நடக்கையில் காணப்படும். நாம் கிறிஸ்துவில் இருந்தால் மாமிசத்துக்குப் பிரியமானதும் அதின் இச்சைக்கு இடங்கொடாமலுமிருந்து ஆவியின் ஆவிக்குப் பிரியமானது அதின்படியே நடப்போம்.

பரிசுத்த ஆவியானவரால் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் நிலைத்திருக்கிற நாம் வாழ்விலும் சாவிலும் நியாயத்தீர்ப்பின் நாளிலும் நம்மீதில் ஆக்கினை சுமத்தல் ஒன்றுமில்லை என்று களிகூர்ந்து பாடுவோம்.

ஜெபம். எங்கள் பரம இரட்சகரே! உம்மை அண்டிக்கொள்ளும் எங்கள் மேல் ஒரு குற்றமும் இராமல் எங்கள் அக்கிரமங்களையெல்லாம் உமது மேல் சுமந்து கொண்டீர். ஆண்டவரே! நாங்கள் இனி பாவத்தின் மேல் பிரியப்படாமல் அதைப் பகைக்கவும் உமக்குப் பிரியமான பிள்ளைகளாய் நடக்கவும் எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி. ஆமென்.

யோவான் 6, 1-20. அல்லது 2 பேது. 1-17. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினோராம் வாரம், சனி.

ஞா. 130, 1. 2

நாலாம் அதி நியாயம்: ஞானஸ்நானமாவதென்ன? ஞானஸ்நானம் வெறும் தண்ணீராயிராமல் அது பராபரனுடைய கற்பனையினால் ஸ்தாபிக்கப்பட்டதும் அவருடைய வசனத்தோடு கூடியதுமான தண்ணீராயிருக்கிறது.

பராபரன் கற்பித்த அந்த வசனமேதென்ன? பரிசுத்த மத்தேயு எழுதின கடைசி அதிகாரத்தில் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லிய வசனம் அதுதான். அதாவது: நீங்கள் உலகமெங்கும் போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்கி அவர்களுக்குப் பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்களென்பதே.

ஞானஸ்நானத்தில் தண்ணீரைத்தான் உபயோகிக்கிறோம். ஆகிலும் அது சாதாரண ஸ்நானம் அல்ல, அது தெய்வ கற்பனையினாலேயே ஸ்தாபிக்கப்பட்ட ஸ்நானம். இயேசுநாதர் மத்தேயு 28-ல் சகல ஜாதிகளையும் சீஷராக்கி அவர்களுக்குப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கற்பித்திருக்கிறார். இந்தத் தெய்வ கற்பனையினாலேயே ஞானஸ்நானம் ஸ்தாபகமாயிற்று. ஆகையால் ஞானஸ்நானம் அற்பக் காரியமல்ல, அது தேவனுடைய ஏற்பாடு.

ஞானஸ்நானம் வெறும் தண்ணீராயிராமல் தெய்வ வசனத்தோடு கூடிய தண்ணீராயிருக்கிறது. சகல ஜாதிகளுக்கும் பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுங்கள் என்று இயேசுநாதர் அன்றைக்குச் சொன்ன வசனம் கடைசி நாள் வரையில் செல்லும். அதுவே ஞானஸ்நானத் தண்ணீரோடு கூடிய தெய்வ வசனம்.

பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்பது அருமையான பொருள் அடங்கிய வார்த்தை. பிதாவாகிய பரம தகப்பன் பாவ ஜாதியில் பிறந்த உன்னைத் தமக்குப் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளுகிறார். குமாரனாகிய நல்மேய்ப்பர் உன்னைத் தமக்குச் சொந்த ஆடாக ஏற்றுக்கொள்ளுகிறார். பரிசுத்த ஆவியாகிய பரம குரு தாம் வாசமாயிருக்கிற ஆலயமாக உன்னை ஏற்றுக்கொள்ளுகிறார் என்கிற பெரிய வாக்குத்தத்தம் அந்த வார்த்தையில் அடங்கியிருக்கிறது. இந்த வாக்குத்தத்தத்தை நீ நம்பும்படியாக அது ஞானஸ்நானத்தால் உனக்கு முத்திரிக்கப்பட்டது. நீ அதை நம்பினால் உன் நம்பிக்கையின்படி உனக்கு ஆகும்.

ஜெபம். ஆண்டவரே! தேவரீர் ஞானஸ்நானத்தில் எனக்குக் கொடுத்த பெரிய வாக்குத்தத்தத்தை நினைத்தோறும் உமது ஆவியால்,

எனக்கு விரைப்புடன் அதினால் என்னை மரணமட்டும் மெய்யான விசுவாசத்தில் நிலைப்படுத்திக் காப்பாற்றியருளும், சுவாமி, ஆமேன்.

யோசு. 7, 1-20. அல்லது 2 கொ. 3, 1-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பன்னிரண்டாம் வாரம், ஞாயிறு.

[illegible] 127, 1-3.

பேசமாட்டாத ஒரு செவிடனை அவரண்டைக்குக் கொண்டுவந்து, அவன்மேல் கையை வைக்க அவரை வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுது அவர் அவனைக் கும்பலை விட்டுத் தனியே அழைத்துப்போய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு: எப்பத்தா, அதாவது திறவுண்டுபோ என்றார். உடனே அவனுடைய செவிகள் திறவுண்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து செவ்வையாய்ப் பேசினான். மாற். 7, 32-35.

ஒரு விசாரிக்காமலே கர்த்தரண்டை கொண்டுவந்தார்கள். கர்த்தர் அவன்மேல் இரங்கி அவனுக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருந்தார். ஆனால் கூட்டத்தின் ஆரவாரத்தில் ஒரு அற்புதம் செய்ய அப்போது அவருக்கு மனதில்லை. அவர் அவனைக் கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துப் போனார். "விசாரிக்கிறவன் இந்த வேளையில் ஒரு நித்திய நன்மையை அடையப் போகிறான். [illegible] எனக்கு நடந்தது இன்னதென்றும் [illegible] காதையும் நாவையும் திறந்தவர் இன்னார் என்றும் [illegible] தன்னுடைய மனதிற்குப் பதிலுக்குத் தனியிடம் அவசியம். [illegible] ஜீவியத்தின் தொல்லைகளையும் [illegible] நம் [illegible] நாம் இயேசுவை மறக்கிறோம். உலகத்தின் சோலி காரியங்களால் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கிறதில்லை. ஆகையால் கர்த்தர் அநேகமுறை கூட்டத்தை விட்டுத் தனியே அழைக்கிறார். அவர் நமக்குத் துன்பத்தையும் வியாதியையும் அனுப்பி, [illegible] எழுப்பிவிட்டு ஒரு பிரார்த்தனை [illegible] படித்து மறந்த ஒரு வேத வாக்கியத்தை நினைப்பூட்டி, அதைக்கொண்டு நம்மோடு பேசுவாருண்டு. அப்போது கர்த்தர் நமக்குச் சொல்லுகிறதைக் கவனித்தால் அப்போது நமக்கு ஆசீர்வாத காலமாக மாறிப்போகும். ஆகிலும் இப்படிப்பட்ட வேளைகளுக்கு நாம் காத்திருக்கத் தேவையில்லை. ஏனெனில் நாம் தேவாலயத்திலும் வீட்டிலும் [illegible] அவருடைய வசனத்தைத் தேடுவோமாக. அவர்

எப்போதும் நம்மை அழைக்கிறார். எப்போதும் நமது ஆத்துமங்களைச் சொஸ்தப்படுத்த அவர் ஆயத்தமாயிருக்கிறார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! எங்கள் நிர்ப்பந்தத்தை அறிந்து நாங்கள் உம்மண்டை வருகிறோம், எங்கள் மேலிரங்கி எங்கள் ஆத்துமங்களை ரட்சித்தருளும், நாங்கள் நன்றியறிதலோடு உம்மைப் பின்தொடர எங்களை வழி நடத்தியருளும், சுவாமி, ஆமேன்.

யோவான் 8, 1-10. அல்லது சங். 115. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பன்னிரண்டாம் வாரம், திங்கள்.

[illegible]

இப்படிக்கொத்த நம்பிக்கை கிறிஸ்து மூலமாக எங்களுக்குத் தேவனிடத்தில் இருக்கிறது. எங்களால் யாதொன்றைச் சிந்திக்க நாங்கள் சமர்த்தராயிருக்கிறோம் என்கிறதில்லை; எங்கள் சாமர்த்தியம் தேவனாலே உண்டாயிருக்கிறது. 2 கொரி. 3, 4. 5.

அப்போஸ்தலருடைய உத்தியோகத்தைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலன் இந்த வாக்கியத்தில் பேசுகிறான். அவனை அநேகம் தடவை உலகத்துக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் சமர்த்தனாக்கினவர் ஆண்டவர்தான். இன்னொரு இடத்தில் "நான் இருக்கிறது தேவனுடைய கிருபையினாலேதான்" என்று சொல்லுகிறான். நாம் எல்லாரும் நமது சாமர்த்தியம் தேவனால் உண்டாயிருக்கிறதென்று தாழ்மையாய் ஒப்புக்கொண்டால் நலமாயிருக்கும். இந்தச் சாமர்த்தியம் நம்முடைய கெம்பீரத்திலும் விசுவாசத்திலும் கிறிஸ்தவ நடக்கையிலும் விளங்கும் தைரியத்தைக் குறிக்கிறது. முதலாவது அது நம்முடைய ஜெபத்தில் விளங்கும் தைரியத்தைக் குறிக்கிறது. ஆசாரியர்களாயும் அந்த உத்தியோகத்திலிருக்கிறவர்களாயும் உன்னை அதற்குச் சமர்த்தனாக்கினவர் கர்த்தராகிய தேவன் என்பதை மறவாதே. உன் வேலையை ஆசீர்வதித்து அதற்குத் துவக்கத்தையும் முடிவையும் அருளிச்செய்பவர் அவரே. ஆகையால் எங்கள் தேவனாகிய ஆண்டவரே! எங்கள் பேரில் பிரியமாகி நாங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும் என்று சங்கீதக்காரனோடு ஜெபிப்போமாக.

எங்கள் சாமர்த்தியம் பரமனாலே உண்டாயிருக்கிறது என்கிற வார்த்தை இரண்டாவது நமது விசுவாசத்திலும் கிறிஸ்தவ நடக்கையிலும் விளங்கும் தைரியத்தைக் குறிக்கிறது. தேவ, இரட்சிப்புக்காகவென்று பரமபிதா நம்மைச் சமர்த்தராக்கினார்.

நான் என் சுய புத்தியினாலும் பெலத்தினாலும் என் கர்த்தராயி ருக்கிற இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவும் அவரைச் சேர்ந்து அண்டிக்கொள்ளவும் கூடாதென்று அறிக்கையிடுகி றேம். அவரே நம்முடைய காதுகளையும் இருதயத்தையும் திறக்க வேண்டும். அவரே நம்மைத் தயவாலும் இரக்கத்தாலும் தம் மண்டை இழுக்கவேண்டும். அவருடைய கிருபையை எதிர்க்காத வன் பாக்கியவான். அவருடைய பெலனைக்கொண்டு அவருடைய வழியில் செல்லுகிறவன் வெட்கமடையான்.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! உமது கிருபையினால் நாங் கள் இவ்வுலகில் உமது பிள்ளைகளாக ஜீவனம் பண்ணிச் சுகத்தையும் பாக்கியத்தையும் அனுபவித்து வருகிறோம். தேவரீர் ஒருவரே எங்கள் சரீரத்தையும் ஆத்துமங்களையும் தாங்குகிறவர். உமது திருநாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக. சுவாமி, ஆமென்.

யோவான் 10, 1-14. அல்லது 1 தீமோ. 1, 1-11. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பன்னிரண்டாம் வாரம், செவ்வாய்.

ஞ. 178, 13. 14.

அவருடைய தாயும் சகோதரரும் அவரண்டைக்கு வந்து, ஜனத்தி னிமித்தமாய் அவரைச் சேரமாட்டாதிருந்தார்கள். அப்பொழுது உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மைப் பார்க்கவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்று அவருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாக: பராபரனுடைய வார்த்தையைக் கேட்டு அதின்படி செய்கிறவர்களே என்னுடைய தாயும் என்னுடைய சகோதரருமாய் இருக்கிறார்கள் என்றார். லூக். 8, 19–21.

இந்த வாக்கியத்தில் நம்மெல்லாருக்கும் ஒரு இன்பமான வாக்குத்தத்தமும் ஒரு கண்டிப்பான எச்சரிப்பும் அடங்கியிருக்கி றது. இயேசுநாதர் தமது சீஷரைக் காண்பித்துத் தேவ வசனத் தைக் கேட்கிற இவர்கள் எனக்குத் தாயும் சகோதரருமாயிருக்கி றார்கள் என்கிறார். அவருடைய வசனத்தைக் கேட்கிறவன் எவ னோ அவன் அவருக்கு அடுத்தவனும், சிநேகிதனும் சகோதரனு மாயிருப்பதால் அவன் பாக்கியமுள்ளவன். உலகமெங்கும் புக ழத்தக்க அரிய பெரிய செய்கைகளைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறதில்லை. நீ தேவ வசனத்தைக் கேட்டு அதன்பிரகாரம் செய் என்கிறார். உலகம் உன்னைச் சிற்றின்பத்தினாலும் பணத்தி னாலும் மயக்கப் பார்த்தாலும் நீ உண்மையான நம்பிக்கையில் நிலைத்திரு.

தமது பாதபடியில் உட்கார்ந்து தமது வசனத்தைக் கேட்ட மரியாளைப்பற்றி ஆண்டவர் அவள் நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்று சொல்லுகிறார். ஆண்டவர் நம்மோடு பேசும் போது நாம் செவிகொடுக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமையில் மாத்திரமல்ல மற்ற நாட்களிலும் அவருடைய வசனத்தில் நாம் நிலைக்கவேண்டும். வசந்தகாலமும் அறுப்புக்காலமும் சூரியனும் நட்சத்திரமும் இடியும் முழக்கமும் வாழ்வும் சாவும் இவையெல் லாம் நம்மோடு பேசத் துவக்கித் தேவனுடைய சர்வ வல்லமையை யும் தயவையும் இப்பூமியின் மாய்கையையும் பரலோகத்தின் நித் தியத்தையும் நமக்குத் தெரிவிக்கும். தேவ வசனத்தினால் இருத யத்தில் மெய்யான விசுவாசம் பிறக்கும். விசுவாசமோ தேவ வச னத்தின்படி நடக்க நமக்குப் பெலன் தரும். தேவ வசனத்தைக் கேட்டு அதைக் கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர் கள் பொறுமையோடே கனிகொடுக்கிறார்கள்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது சத்தியத்தில் எங்களைப் பரிசுத்தமாக்கும், உமது வசனமே சத்தியம். நாங்கள் மோசம்போகாதபடி இவ்வுலகத்தின் பொய்க்கும் சூதுக்கும் விலகி உண்மையே தேட உமதாவி யை எங்களுக்குத் தந்தருளும். சுவாமி, ஆமென்.

யோவான் 23, 1-16. அல்லது 1 தீமோ. 1, 12-30. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பன்னிரண்டாம் வாரம், புதன்.

ஞ. 180, 1-3.

இளைப்பானவர்களோடே நாம் சமயத்திலே வார்த்தை சொல்ல அறி யும்படிக்குக் கர்த்தராகிய ஆண்டவர் நமக்குக் கல்விமான்களின் நாவைத் தந்தார். காலைதோறும் நம்மை எழுப்புகிறார், கற்றுக்கொள்ளுகிறவர்களைப் போலே கேட்கும்படிக்கு நமக்குச் செவியை எழுப்புகிறார். கர்த்தராகிய ஆண்டவர் நமக்குச் செவியைத் திறந்தார்; நாம் முரண்டுத்தனம் பண்ணுகி றவரும் அல்ல, நாம் பின்வாங்கி விலகோம். ஏசா. 50, 4. 5.

செவிகளைத் திறந்து நாவை நல்ல பேச்சுக்கு ஏற்றதாக்குகிற வர் ஆண்டவர்தான். நாம் இயற்கையாக அந்தச் செவிடூமைய னுக்கொப்பு. அவனுக்குக் கர்த்தர், எப்பத்தா அதாவது திறவுண்டு போ என்று சொல்லவேண்டியதாயிருந்தது. இயற்கையாக நமது காதும் தேவனுடைய சத்தத்தைக் கேட்காது, நமது வாய் பரம காரியங்களைப் பேசாது. ஆண்டவர் நமக்குக் கேட்கும் காதையும் பேசும் வாயையும் அளிக்க மனதாயிருக்கிறார். துன்பப்பட்டு தக்க

மூத்தவர்களோடு பேசக்கூடிய கல்விமான்களின் நாவைத் தருகிறார்: அவர் பேச்சு நமக்கு விளங்கும்படி நமது காதைத் திறக்க மனதாயிருக்கிறார். நான் சீஷனைப்போல் கேட்கும்படி கர்த்தர் என் காதைத் திறக்கிறார் என்று நீயும் சொல்லக்கூடுமானால் நல்லது. சிலர் சரீரக் காதினால் மாத்திரம் கேளாமல் கர்த்தருடைய வார்த்தையை இருதயத்திலும் கேட்டுத் தியானிக்கிறார்கள். அவர்கள் தங்கள் முழு ஜீவியத்தையும் தேவ வசனத்தின் வெளிச்சத்தில் சோதித்துப் பார்க்கிறார்கள்.

நாம் ஞாயிற்றுக்கிழமையில் தேவ வசனத்தைக் கேட்பது போதும் என்று அடிக்கடி நினைக்கிறோம். அதைக் கேட்டவுடனே உலகத்திலும் அதன் கவலைகளிலும் மூழ்கிப்போகிறதினால் தேவ வசன விதை நமது இருதயங்களில் முளைக்காமலும் கனி கொடாமலும் போகிறது. எத்தனையோபேர் தேவ வசனத்தைக் கேட்டும் பரிசுத்தமாகாமலும் பாவத்தை விட்டுவிடாமலும் தங்கள் மனக்கவலைகளைத் தேவ வசனத்தைக்கொண்டு மேற்கொள்ளாமலும் போகிறார்கள். சீஷனைப் போல் தேவவசனத்தைக் கேட்டு நல்லதும் சற்குணமுமான இருதயத்தில் காக்கிறவன் எவனோ அவனில் அது ஏராளமான கனி கொடுக்கும்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! உமது திருவசனம் எங்களிடத்தில் வீணாய்ப்போகாதபடி எங்களைக் காக்கவும் நாங்கள் அதைக் கொண்டு ஏராளமான கனிகளைக் கொடுக்கவும் எங்களை ஏவியெழுப்பவும் வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். சுவாமி, ஆமென்.

யோசுவா, 24, 14-33. அல்லது 1 தீமோ. 2, 1-12. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பன்னிரண்டாம் வாரம், வியாழன்.

ஆ. 185, 1. 2.

ஆனால் நீங்கள் உங்களையே மோசம் போக்காதபடிக்கு, வசனத்தின் கேள்விக்காரராய் மாத்திரம் இராமல், அதின் செய்கைக்காரராயுமிருங்கள். ஏனென்றால் ஒருவன் வசனத்தின் செய்கைக்காரனாயிராமல் கேள்விக்காரனாயிருந்தால், இவன் தன் சுபாவ முகத்தைக் கண்ணாடியிலே கண்டறிகிற மனுஷனுக்கு ஒப்பானவன். அவன் தன்னைத்தான் கண்டறிந்து, புறப்பட்டுப்போய், உடனே தான் இருந்த விதத்தை மறந்தான். யாக். 1, 22-24.

வசனத்தைச் சரியாய்க் கேட்கிறவன் சரியாய்ப் பேசி சரியாய் நடப்பான். தேவ வசனத்தைக் கேட்டு அதின்படி நடக்காதவன் அதைச் சரியாய்க் கேட்காமல் தன்னைத்தானே மோசம்போக்கு

கிறவனாயிருக்கிறான். தேவவசனத்தைக் கேட்டபடியே நன்றும்புண்ணியமும் என்று எண்ணியும், கேட்டதின்படி செய்யாவிட்டால் புண்ணியத்தை அல்ல மோசத்தையும் நாசத்தையுமே அடைவான். தேவவசனம் ஒரு கண்ணாடியைப் போலிருக்கிறது. நாம் உள்ளபடி இப்பேர்ப்பட்டவர்களென்று அது நமக்குக் காண்பிக்கிறது. நீ மாசும் கறையும் நிறைந்தவன், நீ பெருமையுள்ளவன், பொறுமையற்றவன், பரிசுத்தம், இரக்கமற்ற நெஞ்சுடையவன் என்று அது உனக்குத் தெரிவித்து நீ புதிய ஜீவியத்தைத் துவக்கும்படி உன்னை ஏவுகிறது. கண்ணாடியில் தன் கறைகளைப் பார்த்துவிட்டுப்போய் அவைகளை மறந்துவிட்ட மனுஷனைப்போல் இராதே. நீ தேவவசனத்தைக் கேட்கும்போது, உன் குறைவுகளை அறிந்துகொண்டு தேவாலயத்தை விட்டவுடனே எல்லாவற்றையும் மறந்துவிட்டாயா? நீ தேவாலயத்தில் கேட்ட வசனமென்ற கண்ணாடியை மனதில் வைத்து, வீட்டுக்குக் கொண்டுபோய் அங்கேயும் அடிக்கடி அதில் உன்னைப் பார்த்துத் திருந்து.

இயேசுவைப் பற்றும் உயிருள்ள விசுவாசத்தையுடைய நீ அந்த வசனத்தைக் கேட்பாயாக. விசுவாசத்தினால் இயேசுவைப் பிடிப்பது எல்லாவற்றிலும் பெரிய செய்கைதான். இந்த விசுவாசத்தினால் கிறிஸ்துவின் இரத்தம் உன் கறைகளை மூடும் என்கிற ஆறுதல் மாத்திரமல்ல, புதிய ஜீவனில் நடக்கக் கூடிய பெலனும் அதினால் உனக்குக் கிடைக்கும். அப்படிக்கிடைத்தால் நீ வசனத்தின் கேள்விக்காரன் மாத்திரமல்ல, அதன் செய்கைக்காரனுமாய் இருப்பாய்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! உமது திருவசனத்தைக் கேட்டு அதின்படி நடக்க நாங்கள் சோம்பலாயிருக்கிறோம். கர்த்தாவே, எங்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயும். எங்களை எச்சரித்து உமது வசனத்தின் பாதையில் எங்களை நடத்தியருளும். சுவாமி, ஆமென்.

நியாயாதி. 2, 1-23. அல்லது 1 தீமோ. 3, 1-6. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பன்னிரண்டாம் வாரம், வெள்ளி.

ஆ. 185, 3. 4.

மனுஷர் எந்த வீண் வார்த்தையைப் பேசினார்களோ, அதற்கெல்லாம் நியாயத்தீர்க்கும் நாளிலே கணக்கு ஒப்புவிப்பார்கள். ஆதலால் உன் வார்த்தைகளினாலே நீதிமானென்றும் தீர்க்கப்படுவாய்; உன் வார்த்தைகளினாலே தோஷியென்றும் தீர்க்கப்படுவாய் என்றார். மத். 12, 36. 37.

ஆண்டவரே! எங்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயும் என்று முழங்காலிட்டு மன்றாட இந்த வார்த்தைகள் நம்மை ஏவுகிறது. உன் நாவு சொன்ன ஒவ்வொரு வீண் வார்த்தைக்காகவும் கெட்ட வார்த்தைக்காகவும் நீ கணக்கு ஒப்புவிக்க வேண்டும். கைகளினால் பொல்லாப்புச் செய்யாதபடி எச்சரிக்கையாயிருக்கிற நாம் நமது வாயின் பாவங்களை அற்பமாக எண்ணலாகாது. வார்த்தையானது புகைபோல் மறைந்துபோம் என்று அநேகர் நினைக்கிறார்கள். ஆகிலும் வீண் வார்த்தையானது அதைக் கேட்கிறவனுடைய ஆத்துமத்தில் தங்கி அவனுக்கு மேல் தந்தையுண்டுபண்ணும்; வீண்பேச்சு சமுசாரிகளைப் பிரிக்கிறது, சிநேகத்தை அழிக்கிறது; மனதைக் கசப்பாக்குகிறது, வீட்டின் சமாதானத்தை ஓட்டிவிடுகிறது. நாவினால் காயப்பட்டுச் சாகும் மனுஷரைப் பார்க்கிலும் பட்டயத்தினாலும் விஷத்தினாலும் சாகிறவர்கள் வெகு சொற்பம்.

தீயினால் சுட்ட புண்ணுள்ளாறும், ஆறாதே நாவினால் சுட்ட வடு. உன் வீட்டைத் தீக்கொளுத்துகிறவனைப் பகைக்கிறாய். ஆகிலும் அநேகருடைய இருதயங்களில் அடிக்கடி பகை, கலகம் முதலியவைகளின் தீயைக் கொளுத்துகிறாய். உன் பிறத்தியானைக் கையினால் கொலை செய்தவனை மரணத்துக்குப் பாத்திரவான் என்று தீர்ப்பாய். அவன் ஆத்துமத்தைக் கொலை செய்கிறவனைப் பற்றி அப்படித் தீர்க்கமாட்டாய். சரீரத்தைத் தேவன் மறுபடியும் எழுப்பக்கூடும். கெட்டுப்போன ஆத்துமா எப்போதும் மரணத்தில் நிலைத்திருக்கும்.

வார்த்தையைப்போல வேறொன்றும் இருதயத்தின் யோசனையையும் குணத்தையும் வெளிப்படுத்துகிறதில்லை. கையைப் பார்க்கிலும் நாவு இருதயத்துக்குச் சமீபம், இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். தேவன் நமது இருதயங்களை இயேசுவைப் பற்றும் விசுவாசத்துக்கென்று சுத்திகரித்தாரானால் அப்போது நாமும் தெய்வபயமானதும் பராபரனுக்குப் பிரியமானதும் பிறத்தியானுக்குப் பிரயோசனமுமானதைப் பேசுவோம்.

செபம். எங்கள் பரமபிதாவே! தேவரீர் எங்களுக்கு அருளின நாவை நாங்கள் உமது நாமத்தின் மகிமைக்கும் பிறத்தியானுடைய நன்மைக்கும் உபயோகிக்க எங்களைத் திருத்தியருளும். நாங்கள் கடைசி நாளில் ஒவ்வொரு வீண் வார்த்தைக்காகவும் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதை எங்களுக்கு எப்போதும் நினைப்பூட்டியருளும், சுவாமி, ஆமென்.

நியாயா. 6, 1-32. அல்லது 1 தீமோ. 4, 1-16. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பன்னிரண்டாம் வாரம், சனி.

ஞா. 130, 4. 5.

நாலாம் அத்தியாயம். (தொடர்ச்சி) ஞானஸ்நானத்தினால் உண்டாகும் பிரயோசனம் என்ன?

அதினால் பாவங்கள் மன்னிக்கப்பட்டு மரணமும் பிசாசின் வல்லமையும் நீங்கிப்போய் நித்திய மோட்சம் கொடுக்கப்படும், ஏனென்றால் பராபரன் இரக்கத் திருவுளப்பற்றின வசனமும் சொல்லித்த வார்த்தைப்பாடும் அப்படிச் சொல்லுகிறதே. அப்படியே அவைகளை விசுவாசிக்கிற யாவருக்கும் ஞானஸ்நானத்தினால் கிடைக்கும்.

ஞானஸ்நானத்தினால் நமக்குக் கிடைப்பதென்ன? பெரியோர்களோ? அப்படி நினைக்கிறவர்கள் ஞானஸ்நானமானது பரிசுத்தமும் பாக்கியமுள்ள சடங்கு என்று அறியார்கள். அதை அவர்கள் அற்பமாக எண்ணித் தாமதம்பண்ணி அதைத் தாட்சணியத்துக்கு மாத்திரம் கடைப்பிடித்துத் தங்கள் பிள்ளைகளை ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவருகிறார்கள். கிறிஸ்தவனே, ஞானஸ்நானத்தில் உனக்குக் கிடைத்தது இன்னதென்றும் உன் பிள்ளைக்குக் கிடைக்கப்போகிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறாயா? அதினால் பாவமன்னிப்பும் நித்திய மோட்சமும் வரும். மரணமும் பிசாசின் வல்லமையும் நீங்கிப்போம்.

ஞானஸ்நானத்தினால் நீ உன் இரட்சகருக்குச் சொந்தமாகி அவருடைய கிருபையில் பங்குபெற்றுக்கொண்டாய். அவர் சிலுவையில் உலகத்துக்குச் சம்பாதித்தது உன் சொந்தமாயிற்று, உன் பாவம் உன்னைப் பயமுறுத்தி உன் மனச்சாட்சி உன்னைக் குற்றப்படுத்தினால் நான் ஞானஸ்நானம்பெற்றுக் கர்த்தருக்குச் சொந்தமானேன், அவர் தம்முடையவர்களைத் தமது இரத்தத்தால் [illegible]சுத்திகரிக்கிறார் என்கிற ஆறுதல் உனக்குண்டு. மரணத்துக்கும் பிசாசுக்கும் அஞ்சி நடுங்கினால் அவைகளுக்கு உன்பேரில் அதிகாரமில்லை என்று அறி. நீ ஞானஸ்நானம் பெற்றதால் உனக்கு மரணத்தினாலும் பிசாசினாலும் யாதொரு மோசமும் சேராதபடி பரம தகப்பன் உன்மேல் தமது கையை நீட்டி உன்னைக் காப்பாற்றுகிறார். சரீர மரணத்திற்கு நீ தப்பிப்போகாவிட்டாலும் கிறிஸ்து அதின் வல்லமையையும் அழித்து அதின் வழியாகவே தம்முடையவர்களை ஜீவனுக்குக் கொண்டுபோகிறார்.

தேவன் சொன்ன வாக்குத்தத்தத்தை இஷ்டமாக நம்பி விசுவாசித்து அவருடைய கிருபையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுகிறவர்களுக்குத்தான் ஞானஸ்நானம் இந்த நன்மைகளை அருளுகிறது.

ஜெபம். இரக்கமுள்ள இரட்சகரே! தேவரீர் அளவற்ற அன்பினால் வானத்தைத் திறந்து எங்களை உம்மண்டை அழைக்கிறீர். கர்த்தாவே, ஞானஸ்நானத்தினால் நீர் எங்களோடு பண்ணின உடன்படிக்கையை நாங்கள் ஒருபோதும் மறவாமல் உமது ஐக்கியத்தை காத்தேகிவதற்கு எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

நியாயாதி. 6, 33-7, 22. அல்லது 1 தீமோ. 5, 1-8. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதின்மூன்றாம் வாரம், ஞாயிறு.

ஞ. 182, 1. 2.

அவர் சீஷரண்டைக்குத் திரும்பி, தனித்துச் சொன்னதாவது: நீங்கள் பார்க்கிறவைகளைப் பார்க்கும் கண்கள் பாக்கியமுள்ளதுகள், ஏனெனில், அநேகந் தீர்க்கதரிசிகளும் இராசாக்களும் நீங்கள் பார்க்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் ஆசையாயிருந்தும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். லூக். 10, 23. 24.

கட்டளையை நோக்கி அல்ல, தமது சீஷர்களோடே ஆண்டவர் நீங்கள் பார்க்கிறவைகளைப் பார்க்கும் கண்கள் பாக்கியமுள்ளவைகள் என்று சொல்லுகிறார். சீஷர்களைப்போல இயேசுகிறிஸ்துவைப் பார்க்கிறவன் பாக்கியமுள்ளவன். பிலாத்துவும் காய்பாவும் ஏரோதேயும் பரிசேயரும் கர்த்தரைப் பார்த்தார்கள், ஆனால் அவர்கள் பாக்கியசாலிகளல்ல. அவர்கள் இயேசுவைத் தச்சனுடைய மகனும் நாசரேத் ஊரானும் மோசக்காரனும் என்று எண்ணினார்கள். சீஷர்களோ அவருடைய மகிமையைக் கண்டு, அது பிதாவுக்கு ஒத்த பேறானவருடைய மகிமையாக இருந்தது என்று அறிக்கையிட்டார்கள். இப்படி ஆண்டவரை உலகத்தின் இரட்சகராகப் பார்க்கிறவன் பாக்கியவான்.

அநேக ஆயிரமாண்டுகளாக இஸ்ரவேல் ஜனம் இந்த இரட்சகருக்குக் காத்திருந்தது. ஆனால் மேசியா வரவில்லை. யாக்கோபிலிருந்து நட்சத்திரம் உதிக்கவில்லை. யூதா கோத்திரத்திலிருந்து வரவேண்டிய சிங்கம் தன் பயங்கரமான சத்தத்தைக் காட்டவில்லை. தாவீதும் சாலமோனும் தீர்க்கதரிசிகளும் ஆவலோடு மேசியாவை எதிர்பார்த்தார்கள். ஆ, சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வந்தால் நலமே என்று புலம்பினார்கள். ஆனால் அவர்கள் நம்பிக்கை நிறைவேறாமல் அவர்கள் இறந்தார்கள்.

நம்மை ஆண்டவர் பாக்கியவான்கள் என்று சொல்லுவாரா? நாம் அவரை ஒரு மனுஷன் என்றும் ஒரு பெரிய தீர்க்கதரிசி என்றும் எண்ணி அவர் உரைத்த வசனத்தில் நல்ல போதகத்தை மாத்திரம் கண்டுபிடிக்கிறோமா? அல்லது சீஷர்களைப்போல அவருடைய திவ்விய மகிமையின் பிரகாசத்தைப்பார்த்து அவருடைய வசனத்தைத் திவ்விய ஜீவவசனமென்று எண்ணுகிறோமா? கெட்டுப்போய்ச் சபிக்கப்பட்ட என்னை எல்லாப் பாவங்களிலும் மரணத்திலும் பிசாசின் வல்லமையிலிருந்து அவர் மீட்டு இரட்சித்தார் என்று நீ அறிக்கையிட்டால் நீ பாக்கியவான்.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உம்மை அண்டிக்கொள்ளுகிற நாங்கள் உமது மகிமையைப் பார்க்க ஆவலாய் இருக்கிறோம். உமது இரட்சிப்பின் சுவிசேஷத்தை உண்மையாய் நம்பும் நம்பிக்கையை எங்களுக்குள் உண்டாக்கியருளும், சுவாமி, ஆமென்.

நியாயாதி. 9, 1-21. அல்லது சங். 112. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதின்மூன்றாம் வாரம், திங்கள்.

ஞ. 182, 3. 4.

சமாரியன் ஒருவன் வழிப்பயணமாய்ப் பண்ணி அவனண்டையில் வந்து, அவனைக் கண்டு மனதுருகிக் கிட்டப்போய், அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, அவைகளைக் கட்டி, அவனைத் தன் சுய வாகனத்தின்மேல் ஏற்றி, அவனை மண்டபத்திலே கொண்டுபோய், அவனைப் பராமரித்து, மறுநாளிலே புறப்படும்போது, இரண்டு வெள்ளிக்காசை எடுத்து, மண்டபத்தான் கையிலே கொடுத்து, அவனுடனே: இவனைப் பார்த்துக்கொள்; அதிகமாய் நீ ஏதாகிலும் செலவழித்தால் அதை நான் திரும்ப வருகையில் உனக்குக் கொடுப்பேன் என்றான். லூக். 10, 33-35.

காட்டிலே கள்ளரால் அடிபட்ட ஒரு மனுஷன் குற்றுயிராய்க் கிடக்கிறான். காயங்களின் வலியும் அதினாலுண்டான காய்ச்சலின் கடுமையும் அதிகம். சீக்கிரம் ஒத்தாசை வராவிட்டால் அவன் பரிதாபமாய்ச் சாகவேண்டும். ஒரு ஆசாரியனும் ஒரு லேவியனும் அவ்வழியே வந்தார்கள். அவ்விருவரும் ஐயையோ பாவமனுஷன், அவன் எவ்வளவாய் அவஸ்தைப்படுகிறான் என்று ஒருவேளை எண்ணினார்கள். ஆனால் இருவரும் தங்களையே அதிகமாக நினைத்துத் தங்கள் உயிரையும் சுகத்தையும் பெரிதுபண்ணி அவனுக்கு உதவிசெய்யாமல் அவனை அடித்த கள்ளர் சமீபமாயிருக்கலாம், தங்களுக்கும் மோசம் வரக்கூடும்.

என்று எண்ணிச் சீக்கிரம் ஓட்டம்பிடித்தார்கள். இப்படியிருக்கையில் அந்த வழியாகச் சென்ற ஒரு சமாரியன் அடிபட்டவனைப் பார்த்தான். அவன் தன் சாதியானோ அந்நியனோவென்று விசாரியாமலும் தனக்கு ஆபத்து வருமோ என்று கவனியாமலும் தன் உதவி தேவையான ஒருவன் அங்கே கிடக்கிறான் என்றுமட்டும் நினைத்து நல்ல உதவி செய்து அவனை முற்றுமுடிய ஆதரித்தான். நீ இந்தச் சமாரியனைப்போல் செய்யப்பார். நீ ஆபத்தில் ஒருவனைக் கண்டால் அவன் பிறசமயத்தானாயிருந்தாலும் சத்துருவாயிருந்தாலும் தொழுநோயிருந்தாலும் அந்நியனாயிருந்தாலும் சரி, நீ அவனுக்கு உதவிசெய். எனக்கு லாபம் வருமோ, எனக்குக் கஷ்ட நஷ்டம் வருமோ என்று கேளாதே. நம் இரட்சகர் மரணபரியந்தம் உன்னை நேசித்தார். அவரைப்போல் நீ உன் சகோதரனுக்கும் சகோதரிக்கும் அன்பைக் காட்டி அவருக்கு நன்றி செலுத்து.

செபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது பாடுகளினாலும் மரணத்தினாலும் எல்லா நிர்ப்பந்தத்திலிருக்கும் எங்களை மீட்டு இரட்சித்துத் தேவரீர் மெய்யாகவே இரக்கமுள்ள சமாரியன் என்று காண்பித்தீர். ஆண்டவரே, தேவரீர் எங்களை நேசித்ததுபோல் நாங்களும் பிறரைச் சிநேகிக்க எமக்கு உமதருளைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

நியாயாதி. 11, 29-40. அல்லது 1 தீமோ. 5, 16-25. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதின்மூன்றாம் வாரம், செவ்வாய்.

தி. 182, 5. 6.

கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்டு, கோடிக்குத் தலைக்கல்லானவர் இவர்தானே. வேறொருவரிடத்திலும் இரட்சிப்பு இல்லை. வானத்தின் கீழே மனுஷர்க்குள் வேறொரு நாமம் அதினாலே நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டதும் இல்லை என்றான். அப்போ. 4, 11. 12.

பேதுரு பரிசுத்தாவியின் பெலனைப் பெற்றுத் தன் சனத்தின் தலைவருக்கு முன்பாக இவ்வாறு தைரியத்தோடு சாட்சி சொன்னதுமன்றி, அவர்கள் வேண்டாம் என்று தள்ளிச் சிலுவையில் அறைந்த இயேசு உயிர்த்தெழுந்து புதிய ஏற்பாட்டுத் திருச்சபைக்குக் கோடிக்கல்லானார் என்றான். அவரே சபை விசுவாசத்தாலும் போதகத்தாலும் அவ்வாசத்திலிருந்து இரட்சிக்கிறவர் என்றும் பொழுதுமே இயேசு என்கிற நாமத்தில்லா

மல் வேறொன்றும் ஆரிடத்திலும் இரட்சிப்பில்லை. உலகம் சரீர வாழ்வையும் ஆத்தும இரட்சிப்பையும் தேடுகிறது. சிலர் நல்ல சட்டங்கள், அருமை இயற்றல் தங்களை தேடும் பாக்கியமெல்லாம் கிடைக்கும் என்று நினைக்கிறார்கள். சிலர் பள்ளிக்கூடங்களினாலும் வித்தியாப்பியாசங்களினாலும் வாழ்வு கிடைக்கும் என்றும் எல்லாரும் நன்றாய்ப் படித்தால் நல்ல வாழ்வை அடைவாரம் என்றும் நினைக்கிறார்கள். சிலர் ஆஸ்திபாஸ்தியிருந்தால் போதும் என்றும் நன்றாய்ச் சம்பாதித்தால் ஒரு குறையும் வராதென்றும் நினைக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் தங்கள் பாவத்தை அறியாமல் பரிசேயனைப்போல் அதை மறைக்கிறவர்கள். ஆகையால் பொல்லாப்பின் காரணம் தங்களில் அல்ல, மற்ற மனிதரிலும் காலபேதங்களிலும் இருக்கிறது என்று சொல்லுவார்கள். அவர்கள் கண்கெட்டவர்கள். பாவமே நமக்கு வரும் இழிவு, பாவம் நீங்குவதே மெய்யான இரட்சிப்பு. பாவமன்னிப்படைந்தவர்கள் இம்மையில் கர்த்தரை விசுவாசிக்கிறவர்களாகவும் மறுமையில் அவரைக் கண்ணாரக் காண்கிறவர்களாகவும் இருந்து பாக்கியத்தை அனுபவிப்பார்கள். நீ தேடுகிறது என்ன? உலகம் உனக்குக் காண்பிக்கும் பொய்யான சுகத்தையா? அல்லது சபை உனக்குத் தெரிவிக்கும் மெய்யான இரட்சிப்பையா? நீ இரட்சிப்பைக் கண்டுபிடிப்பாயானால் நீ சேசுநாதருடைய சீஷனாவாய். பேதுருவைப்போல் தைரியத்தோடு இரட்சகருடைய நாமத்தை அறிக்கையிடவும் சக்தி படைவாய்.

ஜெபம். பரமபிதாவே! உமது சேசுநாதர் எங்களுக்காகச் சம்பாதித்த இரட்சிப்பை நாங்கள் உறுதியாய் நம்பி அதைத் தைரியத்தோடு பிறருக்கும் அறிவித்து உமக்கு உண்மையான சாட்சிகளாவதற்கு எங்களுக்கு அனுக்கிரகம் தந்தருளும், சுவாமி, ஆமென்.

நியாயாதி. 12, 1-15. அல்லது 1 தீமோ. 6, 1-10. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதின்மூன்றாம் வாரம், புதன்.

தி. 18[illegible], 7. 8.

அத்தவாலியன் அவருடனே இவைகளெல்லாவற்றையும் என் சிறுவயது முதல் கைக்கொண்டு நடந்தேன்; இனி என்னிடத்தில் தாழ்ச்சி என்ன என்றான். இயேசு அவனுடனே: நீ பூரண சற்குணனாய் இருக்கவேண்டுமென்றால், போய், உனக்குண்டானவைகளை விற்றுத் தரித்திரருக்குக் கொடு; அப்போது பரமண்டலத்தில் உனக்குப் பொக்

னேதும் இருக்கும்; நீயோ, வந்து என்னைப் பின்செல்லென்றார். வாலிபன் இந்த வார்த்தையைக் கேட்டபோது துக்கம் அடைந்து, போய்விட்டான்; ஏனெனில் வெகு ஆஸ்தியுள்ளவனாயிருந்தான். மத். 19, 20-22.

ஆஸ்தியுள்ள ஒரு வாலிபன் என்னசெய்து நித்திய ஜீவனைச் சுதந்தரிப்பேன் என்று கர்த்தரைக் கேட்டான். மோட்சத்தை அடைய அவனுக்கு ஆசை இருந்தது. அவன் பொல்லாப்புக்கு விலகி நன்மை செய்து பிரமாணப்படியிருப்பான். ஆகையால் அவன் தான் தேவனுடைய கற்பனைகளை எல்லாம் சிறுவயது துவக்கிக் கைக்கொண்டேன் என்றான். அப்போது ஆண்டவர் அவன் இருதயத்தின் மோசமான நிலைமையை அவனுக்கு வெளிப்படுத்தி, அது இச்சீவனின் வாழ்வையும் இன்பத்தையும் மேன்மையையும் பார்க்கத் தேவனைச் சிநேகிக்கிற நேசத்திலிருந்து இவ்வளவு தூரமென்று அவனுக்குக் காட்ட நீ போய் உனக்குண்டானவைகளை விற்றுத் தரித்திரருக்குக் கொடு என்றார். இப்பூமியில் நமக்குக் கிடைக்கும் ஆஸ்தியானது பாவம் என்றும் வறுமை புண்ணியம் என்றும் ஆண்டவர் சொல்லுகிற தில்லை; ஆகிலும் இந்த வாலிபனைப் பரமபிதாவுடைய இராச்சியத்துக்கு விக்கினமாயிருந்தது பண ஆசைதான். ஆகையால் அவன் இதை விட்டுவிடவேண்டியது. கர்த்தர் நம்முடைய இருதயத்தை முழுவதும் ஆதாயப்படுத்திக்கொள்ள விரும்புகிறார். அவருக்குச் சொந்தமாயிருக்கிறவன் யாவனோ அவன் அவருக்கு முழுவதும் சொந்தமாயிருக்கவேண்டும். இதற்குத் தடையாயிருப்பது பண ஆசையோ, பெருமையோ, பொய்யோ, சிற்றின்பமோ, உன் ஆத்துமத்தைப் பற்றி உன்னைக் கர்த்தருக்குப் புறம்பாக்குகிற எல்லாவற்றையும் விட்டுவிடு. மற்றப்படி நீ இரட்சிப்படைய முடியாது. நான் ஒருவனையும் வஞ்சித்ததில்லை. என் தேர்முறைப்படியே நான் நன்மார்க்கனே. எவ்வேளையில் ஒருவரும் ஒரு பொல்லாப்பும் சொல்லமுடியாது என்று சொல்லுகிறதில் பிரயோசனமில்லை. நீ உன் முழு இருதயத்தையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தால் மாத்திரம் நீ பாக்கியவான். கர்த்தருடைய சிநேகமும் ஐக்கியமும் எல்லாவற்றையும் விட ஆயிரம் மடங்கு பெரிது.

ஜெபம். என் ஸ்வாமி முழுமனதாலே நேசிப்பேன், என் இயேசுவே, நான் மிக்க மனவுறுதியாயுன்னைப் பின்செல்லுவேன், என் ஜீவனே, நிலைவரத்தையும் பற்றும் நீர் என் நெஞ்சில் தங்குவீர், சுவாமி, ஆமென்.

லூக்கா. 16, 16-31. அல்லது 1 தீமோ. 6, 11. 21. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதின்மூன்றும் வாரம், வியாழன்.

ம. 191, 1. 2.

மான் தண்ணீர் நதிகளின்மேல் வாஞ்சையாய்க் கதறுமாப்போல என் ஆத்துமம் உமதுமேல் வாஞ்சையாய்க் கதறுகிறது, பராபரனே. என் ஆத்துமம் ஜீவனுள்ள தெய்வமாகிய பராபரன்மேல் தாகமாயிருக்கிறது; நான் எப்போது பிரவேசித்துப் பராபரனுடைய சந்நிதியிலே காணப்படலாம், சங். 42, 2. 3.

பிள்ளை தாயை நாடுகிறது. வழிப்போக்கன் தன் சொந்த ஊரை நாடுகிறான், இப்படி மனுஷனுடைய ஆத்துமம் தான் புறப்பட்ட பரம வீட்டையும் ஜீவனுள்ள தேவனையும் நாடுகிறது. தாகமுள்ள மான் குளிர்ந்த நதியின் ஜலத்தை ஆசிக்கிறதுபோல மனுஷனுக்கு நித்திய தேவனுடைய ஐக்கியம் அதிக அவசியம். அவரை அன்றி அவன் சமாதானமின்றிக் கெட்டுப்போகவேண்டும். அநேகருக்குச் சுகமும் பணமும் போதும். அவர்கள் பராபரனைத் தேடுவதில்லை. ஆகிலும் அவர்களுக்கும் உலகத்தின் மகிமை வெறுப்பாகப் போகும் ஒரு நாள் வரும். அப்போது அவர்கள் நிர்ப்பந்தம் வெளிப்படும். அவர்கள் கர்த்தரைத் தேடாமலும் கண்டுபிடிக்காமலும் இருக்கிறார்கள். அவரை அன்றி வேறொருத்தரும் அவர்களுக்குச் சமாதானம் கொடுத்துக் குற்றத்தை நீக்கார். இந்தச் சங்கீதக்காரனைப்போல மனசாரத் தேவனை ஆசிக்கிறவன் எவனோ அவன்தான் இரட்சிப்படைவான்.

காலமே என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டுபிடிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களைக் கேட்பார். உண்மையாகத் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார். கர்த்தர் தமது பிள்ளைகளின் சத்தத்தைக் கேட்கிறதில்லைபோல் தோன்றினாலும் கிருபாகடாட்சமாய் அவர்களை நோக்கும் வேளை வரும்.

நாமும் இப்படி ஜீவனுள்ள பராபரனை நாடுகிறோமா? இவ்வுலகம் நமக்குப் போதுமென்றிருக்கிறோமா? கர்த்தர் நம்மில் பரம வீட்டை ஆசிக்கும் ஆசையை உண்டாக்கி அதற்கு வழியைக் காண்பிக்கும்படி அவரை மன்றாடுவோமாக. அப்போது மரணபயமாகிலும் இராது. மரணம் நமது ஜீவனுக்கு முடிவல்ல, நித்திய பாக்கியத்துக்குத் துவக்கம். ஆம், பிரிந்து போய்க் கிறிஸ்துவுடனே இருக்க எனக்கு ஆசை என்றும் நான் எப்போது பிரவேசித்துப் பராபரனுடைய சந்நிதியிலே காணப்படலாம் என்றும் நாமும் சொல்லுவோம்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உம்மில் இளைப்பாறும் மட்டும் எங்கள் ஆத்துமம் அமைதலின்றித் தவிக்கிறது. உமது இருதயத்தைத்

இரக்கம் அதிசய வல்லமைக்கு [illegible] தயவும் [illegible] மெய்யை அன்றி எங்களுக்கு வேறே இரட்சகர் இல்லை, சுவாமி, ஆமேன்.

ரூத். 1, 1-22. அல்லது 2 தீமொ. 1, 1-7. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதின்மூன்றும் வாரம், வெள்ளி.

ஏ. 121, 3. 4.

உனக்கு அயலானைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைக்கக் கடவாயென்று சொல்லப்பட்டிருக்கிறதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் உங்களைத் தூஷணிக்கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். நீங்கள் பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதாவின் புத்திரராய் இருக்கத்தக்கதாக. ஏனெனில் அவர் நல்லோர்பேரிலும் கெட்டோர்பேரிலும் தம்முடைய சூரியனை உதிக்கச் செய்து, நீதியர்பேரிலும் அநீதியர்பேரிலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன? மத். 5, 43-46.

சத்துருக்களைச் சிநேகிக்க வேண்டுமென்கிற கட்டளை அஞ்ஞானிகளுக்குத் தெரியாது. இக்கட்டளைக்குத் தேவன் [illegible] ஆக இருக்க அவர்கள் உன் சத்துருவைப் பகைப்பாயாக என்கிற கட்டளையைச் சேர்த்துக்கொண்டார்கள். [illegible] மாத்திரம் சிநேகித்தின் கட்டளையை [illegible] அநுசரிக்கிறார்கள். அது ஒரு கடினமான [illegible] நமக்கு நன்மை செய்கிறவர்களை [illegible] சிநேகிக்க வேண்டுமென்பது இச்சுபாவத்தில் [illegible] அஞ்ஞானிகளும் அப்படிச் செய்வார்கள். [illegible] போல அன்பு [illegible] [illegible] இருதயம் [illegible] அவர்களுக்காக மன்றாடி [illegible] இக்கட்டளையில் [illegible] பேரில் பொல்லாப [illegible] பகைக்க [illegible] மனதைத் திருப்பும்படி [illegible] அவசியமான [illegible] [illegible] ஆண்டவா [illegible] கூடியவர்.

அப்படிச் செய்ய அவர் மனதாயிருக்கிறார். நமக்குச் சாமர்த்தியத்தைக் கொடுக்காமல் ஒன்றையும் செய்யக் கற்பிக்கமாட்டார். தேவன் உன்பேரில் எவ்வளவு பொறுமையுள்ளவர் என்றும் அவர் உனக்குத் தினந்தோறும் எவ்வளவு மன்னிக்கத் தேவை என்றும் நீ அறிந்துகொண்டவுடனே நீயும் மற்றவர்கள் பேரில் பொறுமை பாராட்டி அவர்களுக்கும் மன்னிக்கக் கூடியவன் ஆவாய்.

ஜெபம். இரக்கமுள்ள இரட்சகரே! உமதன்பினால் ஏவப்பட்டு ஏழைப்பாவிகளாகிய எங்களை இரட்சிக்க உமது மகிமையை விட்டு ஏழை மனுஷனைப் பிறந்து சிலுவையில் மரித்தீர். ஆண்டவரே, இந்த அன்புக்காக நாங்கள் உமக்கு முழு மனதாலே ஸ்தோத்திரம் செலுத்தித் தேவரீர் எங்களைச் சிநேகித்ததுபோல் நாங்களும் பிறரைச் சிநேகிக்க எங்களுக்கு ஒத்தாசை பண்ணும், சுவாமி, ஆமேன்.

ரூத். 2, 1-23. அல்லது 2 தீமொ. 1, 8-18. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதின்மூன்றும் வாரம், சனி.

ஏ. 130, 6. 7.

நாலாம் அத்தியாயம்: தொடர்ச்சி. பரமன் இதற்காகத் திருவுளம்பற்றின வசனமும் கொடுத்த வார்த்தைப்பாடுமென்ன?

பரிசுத்த மாற்கு எழுதின கடைசி அதிகாரத்தில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திருவுளம்பற்றினதுதான். அதாவது: விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குத் தீர்க்கப்படுவான் என்பதே.

இயேசுநாதர் பாடுகளினாலும் மரணத்தினாலும் நமக்குச் சம்பாதித்த பாவமன்னிப்பும் ஜீவனும் மோட்சமும் ஞானஸ்நானத்தினால் நமக்கு அருளப்படுகிறது. விசுவாசத்தினாலேயே நாம் அதைப் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆதலால் கர்த்தர் ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று சொல்லாமல் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்கிறார். விசுவாசமில்லாத ஞானஸ்நானத்தினால் உனக்குப் பிரயோசனம் இல்லை. நமது விசுவாசத்தினால் ஞானஸ்நானம் பலன் அடைகிறதென்று சொல்லவும் கூடாது, தேவ கிருபையினாலேயோ ஞானஸ்நானம் பலன் அடைந்திருக்கிறது. ஆயினும் நீ கையில்லாமல் ஒரு பொருளை எப்படி வாங்க முடியாதோ அப்படி விசுவாசமில்லாமல் பரம பொருளை வாங்க முடியாது. அப்படியானால் சிறு பிள்ளைகள் பரம பொருளைப் பெற்

றுக்கொள்ளக் கூடுமோ? இயேசுநாதர் சிறு பிள்ளைகளைக் குறித்து, பிள்ளைகள் என்னண்டை வருகிறதற்குத் தடைசெய்யாமல் இடங்கொடுங்கள் ஏனெனில் பரமபரனுடைய இராச்சியம் இப்படிக்கொத்தவர்களுடையதாயிருக்கிறது என்று சொன்னதால் சிறு பிள்ளைகள் அந்தப் பரம பொருளைப் பெற்றுக்கொள்ளக் கூடுமென்று அறிகிறோம். அது மாத்திரமல்ல, பெரியோரும் குழந்தைகளைப்போலப் பரமபரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாதேபோனால் அதற்குள் பிரவேசிக்கமாட்டார்களென்று சொல்லி இருக்கிறார். குழந்தை தன்னைத்தான் நம்பாது. குழந்தை தன்னைத்தான் நம்பாமல் எல்லா விஷயங்களிலும் பெரியோரைச் சார்ந்து பிழைப்பதுபோல நாம் நம்மையே நம்பாமல் எல்லா விஷயங்களிலும் தேவனைச் சார்ந்து பிழைப்பதே விசுவாசம். குழந்தையானது தன் கையில் ஏந்திக்கொண்டிருக்கிற தாயை அறியாமல் தாயைச் சார்ந்திருப்பதுபோல் அது தன்னை அணைத்துக்கொண்டு ஆசீர்வதிக்கும் இயேசுவின் கையையும் அறியாமல் அவரைச் சார்ந்திருக்கும். பிரக்கினையில்லாமல் சாகிற பெரிய கிறிஸ்தவன் அப்படித்தான் இருக்கிறான்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! பிள்ளைகள் என்னண்டை வருகிறதற்குத் தடைபண்ணாமல் இடங்கொடுங்கள். ஏனென்றால் பரம இராச்சியம் இப்பேர்ப்பட்டவர்களுடையதாயிருக்கிறது என்று தேவரீர் சொன்னீரே; ஆதலால் எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் திருஞானஸ்நானத்தினால் கிடைக்கும் இரட்சிப்பையும் ஆசீர்வாதத்தையும் ஏராளமாய்க் கட்டளையிட்டு எங்கள் எல்லாரையும் இரட்சித்துக்கொள்ளும், சுவாமி, ஆமென்.

ரூத். 4, 1-21. அல்லது 2 தீமோ. 2, 1-13. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினுலாம் வாரம், ஞாயிறு.

பி. 283, 1-3.

அருள் இயேசு பிரசங்கித்தாராமாக: பத்துப்பேரும் சுத்தமானதில்லையோ; அந்த ஒன்பது பேரும் எங்கே? இந்த பறசாதியானேயே ஒழிய, மற்றொருவனும் பரமபரனுக்கு மகிமை செலுத்துவதற்குத் திரும்பி வரக்காணேமே என்று சொன்னார். லூக். 17, 17. 18.

பத்துப்பேருக்குக் குஷ்டரோகம் இருந்தது. பத்துப்பேரும் இயேசுவினிடத்தில் உதவியைக் கேட்டு அதைப்பெற்றிருந்தார்கள். ஆதலால் எல்லாரும் திரும்பி அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தக் கடமைப்பட்டவர்கள். ஆனால் ஒருவன் மாத்திரம் அப்படிச் செய்தான்.

இந்த விதமாய் நாடோறும் நடந்து வருகிறது. தேவன் தமது சூரியனை எல்லார் மேலும் பிரகாசிக்கச் செய்து அவர்கள் இருதயங்களைச் சந்தோஷத்தினால் நிரப்பும்படி செழிப்பான காலங்களைக் கட்டளையிடுகிறார். அவருடைய பராமரிப்பு அவரவருடைய ஆவியையும் காப்பாற்றி வருகிறது. ஆகிலும் அவருக்கு நன்றி செலுத்துகிறவர்கள் எத்தனை பேர்? சாப்பிடும் முன் ஸ்தோத்திரம் ஜெபம் சொல்லுகிறவர்கள் எத்தனை? இராத்திரியில் அவர் அளிக்கும் சுகத்துக்காகவும் பகலில் அவர் கொடுக்கும் நன்மைகளுக்காகவும் ஸ்தோத்திரம் செலுத்துவோர் எத்தனை?

ஆண்டவர் உனக்குச் செய்த நன்மைகளை மறவாதே. அவருடைய நன்மைகளுக்குக் கணக்கில்லை. தேவன் பொதுவாய் எல்லாருக்கும் அருளிச்செய்து வருகிற நன்மைகளில் உனக்கும் பங்கு கிடைக்கிறதுமல்லாமல் விசேஷித்த அன்பினாலும் அவருடைய விசேஷித்த உதவியை நீ அனுபவிக்கிறாய்.

இயேசுநாதர் எப்படி அந்தப் பத்துப்பேரையும் குஷ்டரோகம் நீங்கிச் சொஸ்தப்படுத்தினாரோ அப்படி உன் ஆத்துமத்தின் குஷ்டரோகமாகிய பாவமறச் சுத்திகரித்தார். அவர் ஞானஸ்நானத்தினால் மாத்திரம் அல்ல, நீ ஜெபம் செய்யும்போதெல்லாம் உன் பாவங்களை உனக்கு மன்னித்தாரே. அதற்காக நீ செலுத்த வேண்டிய ஸ்தோத்திரம் என்ன? நீ நாடோறும் உன்னை அவருக்குச் சொந்தமாக ஒப்புக்கொடுத்து அவருடைய பிள்ளையாக நடப்பது தான். இப்படி நீ அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினால் அவர் உன்னை ஆசீர்வதித்து எழுந்திருந்துபோ உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று சொல்லுவார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! தேவரீர் எங்களுக்கு அருளின அளவற்ற நன்மைகளுக்காக நாங்கள் அடிக்கடி நன்றி செலுத்தாமலும் நன்மை நினைக்காமலும் போனோம் என்று மனஸ்தாபத்தோடே அறிக்கையிடுகிறோம். கர்த்தாவே! எங்கள்மேல் இரங்கி எங்களைக் குணப்படுத்தியருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 1, 9-28. அல்லது சங். 92. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினுலாம் வாரம், திங்கள்.

பி. 186, 1. 2.

கிறிஸ்துவின் பாரிசமானவர்கள் மாமிசத்தை அதின் ஆசைகள் இச்சைகளோடேகூடச் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். கலா. 5. 24.

ஆண்டவர் நமக்கு அருளிச் செய்துவருகிற நன்மைகளுக்காக நாம் நன்றிசெலுத்தி, அவர் நமக்கும் ஆண்டவர்

என்று ஒப்புக்கொள்ளுகிறோம். நாம் பிறக்குமுன் அவர் நம்மைச் சிநேகித்தார். நாம் பிறந்தவுடனே நம்மை ஆவியினால் மறுபடியும் ஜெனிப்பித்துத் தம்மில் பொருந்த வைத்தார். நாமோ அவருடைய ஐக்கியத்தில் இருக்கவேண்டியது அவசியம். கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் அவருடைய சாயலாயிருப்பார்கள். அவர் பிதாவின் மகிமையால் மரித்தோரிலிருந்து எப்படி உயிர்த்தாரோ அப்படி நாமும் நவமான ஜீவனில் நடப்போம். அவர் முந்த நமது பாவங்களின் நிமித்தம் நமது பாவசரீரத்தை ஒழித்துக்கொண்டு எப்படிச் சிலுவையில் அறையுண்டாரோ அப்படி நாமும் நமது பாவசரீரத்தை ஆசை இச்சைகளோடே சிலுவையில் அறையவேண்டும்.

மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனுடைய மாமிசம் நமக்குள் இருக்கிறது. கோபம், பகை, பொறாமை, அகங்காரம், பெருமை முதலிய துர்க்குணங்களுமுண்டு. நீ இவைகளைச் சிலுவையில் அறை. இப்படிச் செய்யாமலும் குணப்படாமலும் மாமிசத்தின் இச்சைகளின்படியே நடக்கிறவர்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமாயிராமலும் அவருடைய மகிமையைப் பாராமலும் நீதிமான்களுடைய கூடாரங்களில் சேர்க்காமலுமிருப்பார்கள். உனக்குள்ளிருக்கும் எல்லா இச்சைகளையும் சிலுவையில் அறை.

செபம்: எங்கள் அருமையான இரட்சகரே! நமது பாவிகளி[illegible] [illegible] சம்பாதித்தீர். உமக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரே, எங்களுக்குச் சம்பாதித்த [illegible] நீர் [illegible] போசனையை [illegible] துராசை இச்சைகளைச் சிலுவையில் அறைந்து உம்மைப் பின் செல்ல எங்களை ஏவியருளும், சுவாமி, ஆமேன்.

1 கொரி. 3, 1-21. அல்லது 2 தீமோ. 2, 14-26. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினைலாம் வாரம், செவ்வாய்.

ஞா. 386, 3-4.

பரிசேயரில் ஒருவன் அவரைத் தன்னுடனே போசனம் பண்ண வேண்டிக்கொண்டான். அவர் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்து, பந்தி இருந்தார். அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணி பரிமள தைலத்தைக் கொண்டுவந்து, அவருடைய பாதங்களண்டை பின்னாக நின்று அழுதுகொண்டு நின்று, அவருடைய பாதங்களைக் கண்ணீரினால் நனைக்கத்

துவக்கி, தன் தலைமயிரால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தி செய்து, பரிமள தைலத்தினால் பூசினாள். லூக். 7, 36-38.

இயேசுநாதரைச் சிநேகிக்கிற ஒரு ஆத்துமாவை நாம் இங்கே பார்க்கிறோம். இந்த ஸ்திரீக்கு அவர் வெகுவான பாவங்களை மன்னித்திருந்ததினால் அவள் அவரைச் சிநேகித்தாள். இயேசுநாதரைச் சிநேகிப்பதே கிறிஸ்துமார்க்க சாரம். கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுநாதரை இவ்வளவாகச் சிநேகிக்கிறோமா? அவரைச் சிநேகிக்காவிட்டால் நாம் அவரது மன்னிப்பை ருசித்திராததே அதற்குக் காரணம். இயேசுநாதர் உன்னை நோக்கி உனக்கும் உன் பாவம் மன்னிக்கப்பட்டது என்கிறார். இதை நம்பி அவரை இவளைப்போல் சேவிக்கத் துவக்கு. உன் பாவம் எல்லாருக்கும் தெரியாவிட்டாலும் தேவனுக்கு அது தெரியும். அவர் இருதயத்தைப் பார்த்து அதில் உள்ள கெட்ட எண்ணங்களையெல்லாம் அறிந்திருக்கிறார். ஆதலால் குணப்படுதலும் பாவமன்னிப்பும் உனக்கும் அவசியம். அதை இயேசுவினிடத்தில் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம். பாவமன்னிப்புப் பெற நீ உன் சுய நீதியை நம்ப வேண்டாம். தேவ நீதியைத் தேடுவது அவசியம். அதைத் தேடுகிறவன் எவனோ அவன் அதைக் கண்டுபிடிப்பான். எனக்குப் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்கிற ஆறுதலைக் கேட்கிறவன் எவனோ அவன் இயேசுவையே சிநேகிப்பான். இந்தச் சிநேகமே நம்மை இம்மையிலும் மறுமையிலும் பாக்கியராக்கும்.

செபம். அன்புள்ள இயேசுவே! எங்கள் பாவங்களை அநுதினமும் கிருபையாய் மன்னித்து வருகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே, நாங்கள் ஆவலோடு உம்மிடத்தில் வந்து பாவ மன்னிப்பைப் பெற்று அதற்காக உம்மை உட்கருத்தாய்ச் சிநேகிக்க எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

1 கொரி. 7, 3-17. அல்லது 2 தீமோ. 3, 1-9. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினைலாம் வாரம், புதன்.

ஞா. 191, 1. 2.

கர்த்தாவே! நெருக்கத்தில் உம்மைத் தேடுகிறார்கள்; உம்முடைய தண்டனை அவர்கள்மேல் இருக்கையில், அந்தரங்க வேண்டுதலை ஊற்றுகிறார்கள். ஏசா. 26, 16.

தேவ சித்தமில்லாமல் ஒரு துன்பமும் ஒருவனுக்கும் வராது. தேவன் மனுஷரை மோட்சத்துக்கு ஆயத்தம் பண்ணவும் தம்மிடம் சேர்த்துக்கொள்ளவும் அதை அனுப்புகிறார். ஆ

ன்று நடப்புக்கொள்ளுகிறோம். நாம் பிறக்குமுன் அவர் நம்மைச் சிநேகித்தார். நாம் பிறந்தவுடனே நம்மை ஆவிக்குரிய பிரகாரமும் ஜெனிப்பித்துத் தம்மில் பொருந்த வைத்தார். நாமோ அவருடைய ஐக்கியத்தில் இருக்கவேண்டியது அவசியம். கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் அவருடையவர்களாயிருப்பார்கள். அவர் பிதாவின் மகிமையால் மரித்தோரிலிருந்து எப்படி உயிர்த்தாரோ அப்படி நாமும் புதிய ஜீவனில் நடப்போம். அவர் முந்த நமது பாவங்களின் நிமித்தம் நமது மாமிசத்தை ஏற்றுக் கொண்டு எப்படிச் சிலுவையில் அறையுண்டாரோ, அப்படி நாமும் நமது மாமிசத்தை ஆசை இச்சைகளோடே சிலுவையில் அறையவேண்டும்.

மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனுக்குரிய மாமிசம் நமக்குள் இருக்கிறது. கோபம், பகை, பொறாமை, அற்பிகேகம், பெருமை முதலிய துர்க்குணங் களுமுண்டு. நீ இவைகளைச் சிலுவையில் அறை. இப்படிச் செய்யாமலும் குணப்படாமலும் மாமிசத்தின் இச்சைகளின்படியே நடக்கிறவர்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமாயிராமலும் அவருடைய மகிமையைப் பாராமலும் நீதிமான்களுடைய கூடாரங்களில் வசிக்காமலுமிருப்பார்கள். உனக்குள்ளிருக்கும் எல்லா இச்சைகளையும் சிலுவையில் அறை.

ஜெபம். எங்கள் அருமையான இரட்சகரே! உமது பரிசுத்த மரணத்தினாலும் திவ்விய ஜீவனை எங்களுக்குச் சம்பாதித்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரே, தேவரீர் எங்களுக்குச் சம்பாதித்த ஜீவனை நாங்கள் இழந்து போகாமல் எங்கள் துர்க்குணங்களையும் இச்சைகளைச் சிலுவையில் அறைந்து உம்மைப் பின் செல்ல எங்களை ஏவியருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 3, 1-21. அல்லது 2 தீமோ. 2, 14-26. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். பதினாலாம் வாரம், செவ்வாய்

கீ. 386, 3-4.

பரிசேயரில் ஒருவன் அவரைத் தன்னுடனே அசனம் பண்ண வேண்டுமென்றான். அவர் பரிசேயனுடைய வீட்டுக்குள் பிரவேசித்து, பந்தி இருந்தார். இதோ, அந்தப் பட்டணத்திலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணி பரிமள தைலத்தைக் கொண்டுவந்து, அவருடைய பாதங்களண்டையிலே பின்னாக அழுதுகொண்டு நின்று, அவருடைய பாதங்களைக் கண்ணீரினால் நனைக்கத்

துவக்கி, தன் தலைமயிரால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தி செய்து, பரிமள தைலத்தினால் பூசினாள். லூக். 7, 36-38.

இயேசுநாதரைச் சிநேகிக்கிற ஒரு ஆத்துமாவை நாம் இங்கே பார்க்கிறோம். இந்த ஸ்திரீக்கு அவர் வெகுவான பாவங்களை மன்னித்திருந்ததினால் அவள் அவரைச் சிநேகித்தாள். இயேசுநாதரைச் சிநேகிப்பதே கிறிஸ்துமார்க்க சாரம். கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுநாதரை இவ்வளவாகச் சிநேகிக்கிறோமா? அவரைச் சிநேகிக்காவிட்டால் நாம் அவரது மன்னிப்பை ருசித்திராததே அதற்குக் காரணம். இயேசுநாதர் உன்னை நோக்கி உனக்கும் உன் பாவம் மன்னிக்கப்பட்டது என்கிறார். இதை நம்பி அவரை இவளைப்போல் நேசிக்கத் துவக்கு. உன் பாவம் எல்லாருக்கும் தெரியாவிட்டாலும் பராபரனுக்கு அது தெரியும். அவர் இருதயத்தைப் பார்த்து அதில் உள்ள கெட்ட எண்ணங்களையெல்லாம் அறிந்திருக்கிறார். ஆதலால் குணப்படுதலும் பாவமன்னிப்பும் உனக்கும் அவசியம். அதை இயேசுவினிடத்தில் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம். பாவமன்னிப்புப் பெற நீ உன் சுய நீதியை நம்ப வேண்டாம். தேவ நீதியைத் தேடுவது அவசியம். அதைத் தேடுகிறவன் எவனோ அவன் அதைக் கண்டுபிடிப்பான். எனக்குப் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்கிற ஆறுதலைக் கேட்கிறவன் எவனோ அவன் இயேசுவையே சிநேகிப்பான். இந்தச் சிநேகமே நம்மை இம்மையிலும் மறுமையிலும் பாக்கியராக்கும்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! எங்கள் பாவங்களை அநுதினமும் கிருபையாய் மன்னித்து வருகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே, நாங்கள் ஆவலோடே உம்மிடத்தில் வந்து பாவ மன்னிப்பைப் பெற்று அதற்காக உம்மை உட்கருத்தாய்ச் சிநேகிக்க எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 7, 3-17. அல்லது 2 தீமோ. 3, 1-9. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். பதினாலாம் வாரம், புதன்.

ஏ. 191, 1. 2.

கர்த்தாவே! நெருக்கத்தில் உம்மைத் தேடுகிறார்கள்; உம்முடைய தண்டனை அவர்கள்மேல் இருக்கையில், அந்தரங்க வேண்டுதலை ஊற்றுகிறார்கள். ஏசா. 26, 16.

தேவ சித்தமில்லாமல் ஒரு துன்பமும் ஒருவனுக்கும் வராது. தேவன் மனுஷரை மோட்சத்துக்கு ஆயத்தம் பண்ணவும் தம்மிடம் சேர்த்துக்கொள்ளவும் அதை அனுப்புகிறார். ஆ

னும் அவருடைய ஆசை எல்லாரிடத்திலும் பலிக்கிறதில்லை. ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தாவே, நெருக்கத்தில் உம்மைத் தேடுகிறார்கள் என்று சொல்ல, எரேமியா தீர்க்கதரிசி அவர்களை அடிக்கிறீர், ஆனால் அவர்களுக்கு நோகாது; அவர்களை நிர்மூலமாக்குகிறீர், ஆனால் புத்தியை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள். தங்கள் முகங்களைக் கன்மலையிலும் கெட்டியாக்கித் திரும்பமாட்டோம் என்கிறார்கள் என்று முறையிடுகிறான்.

உன்னை அடிக்கிறவர் ஆண்டவரே என்று உணர்ந்து அவரை நெருக்கத்தில் நோக்கிக் கூப்பிடு. கர்த்தர் தம்மைக் கூப்பிடுகிற யாவருக்கும் சமீபமாயிருந்து ஒத்தாசை செய்கிறார். ஒரு வேளை அவர் உடனே உதவி செய்யமாட்டார். துன்பம் ஒரு வேளை அதிகரிக்கவும் செய்வார். அப்போது நீ உன் ஜெபத்தையும் அதிகரிக்கப் பண்ணி உன் ஆத்துமத்தின் ஆழத்திலிருந்து புறப்படும் உன் விசுவாசத்தால் உன்னிலுள்ள களிம்பெல்லாம் நீங்கச் சுத்திகரித்துக் கொள். காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தங்கள் ஜெபம் உடனே கேட்கப்படாவிட்டாலும் ஆண்டவரைக் கெட்டியாய்ப் பிடிக்கிறார்கள். ஆண்டவர் தங்களை ஆசீர்வதித்தாலொழிய அவரை விடாமலிருந்து ஜெயமடைவார்கள்.

இதின்றவினே, ஆண்டவர் உனக்குத் துன்பமும் தண்டனையும் வரவிடுவார். ஆனால் நீ உன் இருதயத்தில் விசுவாசமும் ஜெபமும் அற்றுப் போகாதபடி கவலையாயிரு. அப்போது நீ மென்மேலும் அவருடைய இரக்கமுள்ள ஒத்தாசையை அனுபவித்து அவரை அதிகமதிகமாய்ப் புகழ்ந்து ஸ்தோத்திரிப்பாய்.

ஜெபம். பரமபிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் எல்லாத் துன்பங்களிலும் உம்மை நோக்கிக் கூப்பிட எங்களை ஏவி எழுப்பியருளும். தேவரீர் எங்களுக்கு அனுப்பும் நெருக்கத்தில் நாங்கள் உம்மைத் தேடிக் கண்டுபிடிக்க எங்களுக்கு ஒத்தாசை பண்ணும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 8, 1-22. அல்லது 2 தீமோ. 3, 10-17 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பதினாலாம் வாரம், வியாழன்.

ஏ. 283, 4. 6.

நீ பராபரனுக்கு ஸ்தோத்திரத்தைப் பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, நெருக்கப்படுகிறநாளிலே நம்

மை நோக்கிக் கூப்பிடு; அப்போது உன்னை விடுவிப்போம். அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக் கடவாய். சங். 50, 14. 15

நெருக்கம் உண்டாகும்போது தேவனை நோக்கிக் கூப்பிடுகிறவர்கள் அவரிடத்தில் ஒத்தாசை பெற்றவுடனே அவரை ஸ்தோத்திரிக்க வேண்டுமென்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். பத்துக் குஷ்டரோகிகள், இயேசு ஐயாவே! எங்கள் மேலிரங்கும் என்று எவ்வளவு பரிதாபமாய்க் கூப்பிட்டார்கள். ஆண்டவர் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டார். தம்மை ஸ்தோத்திரிக்காமல் தமது உபகாரத்தைக் கொள்ளையுடைமைபோல் கொண்டு போவார்கள் என்று ஆண்டவர் அறிந்திருந்தும் அவர்களுக்கு நன்மை செய்தார். தேவன் நாம் செலுத்தப்போகிற ஸ்தோத்திரத்தைக் கவனித்து இரக்கம் செய்யத் தலைப்படுவதானால் நமக்கு நன்மை செய்ய இடமிராது. கணக்கில்லாத ஜெபங்கள் நாள்தோறும் வானத்துக்கு ஏறுகிறது. அவைகளில் ஸ்தோத்திர ஜெபங்கள் வெகு கொஞ்சம். நீ அநேக நெருக்கமான வேளைகளில் முழங்கால்படியிட்டுப் பெருமூச்சு விட்டு அநேக விதமான ஒத்தாசைகளைப் பெற்றிருக்கிறாய். ஆனால் அத்தனைக்கும் ஸ்தோத்திரம் செலுத்திப் புது உற்சாகத்தோடும் உண்மையோடும் ஆண்டவருக்கு ஊழியஞ்செய்திருக்கிறாயா? இல்லையே.

நீ தேவனுக்கு ஸ்தோத்திரத்தைப் பலியிடு. நாள்தோறும் அவருடைய இரக்கம் அதற்கு உன்னை ஏவட்டும். கர்த்தாவே, இப்போது என்னை இரட்சியும். நான் உண்மையோடு உமக்கு ஊழியஞ்செய்வேன் என்று நீ சொன்ன ஆபத்துவேளைகளை நினை. உன் பொருத்தனைகளைச் செலுத்த மறவாதே. ஒரு பொருத்தனை செய்து, அதை நிறைவேற்றாமலிருந்து விடுகிறது ஞாயமல்ல. அப்படிச் செய்வதினால் கடன் அதிகரித்து ஆசீர்வாதம் குறைந்துபோம். ஆனால் நீ செலுத்தும் ஒவ்வொரு ஸ்தோத்திரமும் புதிய கிருபைகளைப் பெற வழியாகி எல்லா உபகாரங்களையும் ஆசீர்வாதமாக மாற்றும். பராபரனுக்குத் தன்னை ஒப்புவிப்பதே இரட்சிப்பின் வழி.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள நித்திய பராபரனே! ஏழைப் பாவிகளாகிய நாங்கள் உம்மண்டை சேரவும் எங்கள் கஷ்ட நஷ்டங்களை உமக்குத் தெரிவிக்கவும் எங்களுக்கு உத்தரவு கொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே, தேவரீர் எங்கள்மேல் பாராட்டும் கிருபைக்காக நாங்கள் உம்மை முழு மனதாலும் புகழ்ந்து ஸ்தோத்திரிக்க எங்களுக்கு உதவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 9, 1-27 அல்லது 2 தீமோ. 4, 1-8 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினைலாம் வாரம், வெள்ளி.

ஞ. 233, 7. 9.

ஸ்தோத்திரத்தைப் பலியிடுகிறவன் நம்மை மகிமைப்படுத்துகி றான்; இப்படி வழியை ஆயத்தப்படுத்துகிறவனுக்குப் பராபரனுடைய இரட்சிப்பைக் காண்பிப்போம். சங். 50, 23.

தேவனுக்கு எந்தப் பலிகள் கொடுக்கவேண்டியதாகிறது. ஆகிலும் ஸ்தோத்திரமுள்ள இருதயத்தையும் அவர் புறக்கணிக்க மாட்டார். ஆகையால் நீ அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்து. அவர் பிதாவுடையான தெய்வீக தயவினாலும் இரக்கத்தினாலும் உனக்கு இதுவரைக்கும் செய்த நன்மைகளை அறிக்கையிடு. ஏனென்றால் தேவன் நமக்கு நமது பாவங்களுக்குத் தக்கதாகச் செய்து நமது அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டி இருப்பாரானால் அவருடைய கற்பனைகளை மீறினவர்களுக்கு விதிக் கப்படும் தண்டனையே நமது மேலும் இறங்கியிருக்கும். நாம் அவ ருடைய தயவுக்குப் பாத்திரரல்லாதிருந்தும் அவர் நன்மை செய்து வருவதால் நாம் அவருக்கு நம்மை முழுதும் கையளித்து ஊழி யஞ் செய்யக் கடமைப்பட்டவர்கள்.

தேவனுக்கு ஒருவரும் ஸ்தோத்திரஞ் செலுத்தாவிட்டால் அதினால் அவருக்கு யாதொரு குறைவும் உண்டாகப்போகிற தில்லை. ஆகிலும் அவர் நமது பிரியத்தால் நாம் தமக்கு ஸ்தோத்தி ரம் செலுத்தவேண்டுமென்று விரும்புகிறார். ஏனெனில் நன்றி அறிந்த இருதயமே பூரண ஆசீர்வாதம்பெற ஏற்றது. ஸ்தோத்தி ரத்தைப் பலியிடுகிறவன் நம்மை மகிமைப்படுத்துகிறான். இப்படி வழியை ஆயத்தப்படுத்துகிறவனுக்கு இரட்சிப்பைக் காண்பிப் போம் என்று கர்த்தர் சொல்லுகிறார். மனுஷர் அவரைப் பராப ரன் என்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்திரிக்காமலும் போன தால் தங்கள் சிந்தனைகளில் வீணராய்ப் போனார்கள். அவர்கள் மதியற்ற இருதயம் இருண்டுபோயிற்று என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். நீ அவருக்கு நன்றியறிந்த மனதோடு ஊழியஞ் செய்தால் அவர் இதினாலேகொண்டு உலகத்துக்கு ஆயத்தம் பண்ணின இரட்சிப்பின் அருமையை அறிந்துகொண்டு நீ என் றென்றும் பாக்கியவானாயிருப்பாய்.

ஜெபம். நித்திய பராபரனே! உம்மை நம்புகிற நாங்கள் உம் மை நோக்கிக் கூப்பிடுகிறோம், எங்கள் கல்நெஞ்சை உருக்கி உமக்கு ஸ்தோத்திரம் செலுத்த எங்களை ஏவி எங்களுக்கு உமது இரட்சிப்பைக் காண்பித்தருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 10, 1-27, அல்லது 2 தீமோ. 4, 9-22, வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினைலாம் வாரம், சனி.

ஞ. 133, 1. 2.

நாலாம் அதிகாரம்: தொடர்ச்சி. இத்தனை கனமான நன்மைகள் தண்ணீரால் வரக்கூடுவதெப்படி? *

இந்த நன்மைகள் தண்ணீரால் அல்ல, அதோடே கூடிய பராப ரனுடைய வசனத்தினாலும் அந்த வசனத்தை நம்புகிற விசுவாசத்தினா லுமே வரும். பராபரனுடைய வசனத்தையல்லாத தண்ணீர் ஞான ஸ்நானமாயிராமல் வெறுந் தண்ணீராயிருக்கிறது. ஆனால் பராபரனுடைய வசனத்தோடே கூடிய தண்ணீர் ஞானஸ்நானமாயிருக்கிறது.

இத்தனை கனமான நன்மைகள் தண்ணீரால் வரமுடியாது. தண்ணீர் அழுக்கை நீக்கிப் புல்பூண்டு விருட்சங்களை வளரச் செய்யும். ஆகிலும் மனுஷனுடைய இருதயத்தைப் பாவங்களறக் கழுவி அவன் ஆத்துமத்தை மரணத்தின் வல்லமையிலிருந்து இரட்சித்து அவனுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கத் தண்ணீரோடே கூடிய தெய்வ வசனத்தினால் மாத்திரம் கூடும். அந்த வசனத் திலிருக்கிற பெரிய வாக்குத்தத்தம் உன்னிடத்திலும் இத்தனை கனமான நன்மைகளைச் செய்யும். ஆகிலும் விசுவாசம் அதற்கு அவசியம். நீ சாதத்தைச் சாப்பிட்டாலொழியச் சாதம் உனக்குப் பிரயோசனப்படாததுபோல் தேவ வசனத்தை நீ நம்பினா லொழிய அது உனக்குப் பிரயோசனப்படாது. நீ விசுவாசித் தால் பாவமன்னிப்பின் ஆறுதலும் உன்னைப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டு உன்னில் நற்கிரியையைத் துவக்கி அதை முடிக்கப் போகிறவருடைய ஆறுதலும் உனக்குண்டு. மரணம் உன்னைப் பயமுறுத்த வந்தாலும் பயப்படாமல் நம்பு. ஞானஸ்நானத்தினால் உன்னை ஏற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியானவர் கடைசி அவஸ் தையிலும் உனக்குத் தேற்றரவாளனாகயிருப்பார்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே, ஞானஸ்நானத்தினால் உமது ஐக்கியத்தில் சேர்க்கப்பட்ட நாங்கள் உம்மை உறுதியாய் நம்பி ஞானஸ்நானத்தினால் உண்டாகும் பெலனை உணர்ந்திருப்பதற்கு எங்களுக்கு உம் ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 11, 1-15 அல்லது தீத்து 1, 1-6 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பதினைந்தாம் வாரம், ஞாயிறு.

பி. 200, 1. 2.

முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள்; அப்போது இவையெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகையால் நாளையத்தினத்துக்காகக் கவலைப்படாதேயுங்கள், ஏனெனில் நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும். மத். 6, 33. 34.

பராபரனுடைய இராச்சியம் என்பது பராபரனுடைய ஆளுகைதான். இந்த ஆளுகை உன் இருதயத்தில் ஏற்பட்டிருக்கிறதா? உமது சித்தத்தை நான் சந்தோஷத்தோடு செய்கிறேன் என்று நீ சொல்லக் கூடுமோ? அதற்குப் பிரயாசைப்படு. நெருக்கமான வாசலுக்குள் பிரவேசிக்க உன்னால் ஆனமட்டும் முயற்சி செய். அதிலே தற்செயலாய்ச் சேரலாம் என்று நினைக்காதே. திகிலோடும் பயத்தோடும் உன் இரட்சிப்பைக் காத்துக் கொள். நீ உன் ஜீவனத்துக்காகவும் உன் அன்ன வஸ்திரத்துக்காகவும் கவலைப்படுவதற்கு மேலாக, உன் இரட்சிப்புக்காகக் கவலைப்படு. நீ எவ்வளவு கவலைப்பட்டாலும் உன் ஆயுசைப் பெருகப் பண்ண முடியாது. உன் ஜீவனுக்கு முடிவு வந்தவுடனே உனக்கு அன்ன வஸ்திரம் தேவையாயிராது. அப்போது ஆத்துமத்தைப் போஷிக்கும் ஆகாரமும் அதை அலங்கரிக்கும் கிறிஸ்துவின் நீதியாகிய வஸ்திரமும் உனக்கு அவசியம் இருக்கவேணும். உனக்கு இந்த ஆகாரமும் வஸ்திரமும் இல்லையானால் உன்னை மரண அவஸ்தையில் ஆற்றித் தேற்றி உனக்கு மோட்சத்தில் ஒரு இடம் கிடைக்கப் பண்ணுவது ஒன்றுமிராது.

கடைசி நாளில் தேவன் செல்வனென்றும் தரித்திரனென்றும் பார்க்கமாட்டார். உன் கையிலிருக்கிற ஆஸ்தியையும் நீ சம்பாதித்த பணத்தையும் கவனிக்கமாட்டார். அவர் ஒன்றை மாத்திரம் தேடுவார், அது தமது நீதியும் தமது இராச்சியத்தின் சட்டங்களுக்கு அமைந்த கீழ்ப்படிதலும் தான். அது உனக்கிருந்தால் நீ பயமின்றி அவருடைய ஐக்கியத்தில் சேரலாம்.

ஜெபம்: எங்கள் அருமை இரட்சகரே! இந்த உலகத்தின் மோசங்களுக்கு நாங்கள் தப்பவும் மோட்ச வழியில் நாங்கள் சேரவும் தேவரீர் எவ்வளவு பிரயாசைப்பட்டு வருகிறீர். கர்த்தாவே, நாங்கள் உமது சத்தத்துக்குச் செவிகொடுத்து உலகத்தின் கண்ணிகளுக்குத் தப்பிப்போக எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 13, 1-23 அல்லது சங். 147 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பதினைந்தாம் வாரம், திங்கள்.

பி. 200, 3. 4.

மோசம் போகாதிருங்கள்; பராபரன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார், ஏனெனில் மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான். தன் மாம்சத்தின்மேல் விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவியின் மேல் விதைக்கிறவனோ, ஆவியினால் நித்திய ஜீவனை அறுப்பான். கலா. 6, 7. 8.

பொய்யனை ஒருவனும் நம்பமாட்டான், அவன் சோம்பேறியும் தரித்திரனும் ஆவான். குடிகாரன் விவேகத்தையும் சுகத்தையும் இழந்து போவான். தினை விதைக்கிறவன் தினை அறுப்பான், வினை விதைக்கிறவன் வினையறுப்பான் என்று ஒரு பழமொழியுண்டு. ஆயினும் மனுஷர் இதன் உட்பொருளைக் கவனித்து நடவாதிருப்பது மெத்த ஆச்சரியம். அவர்கள் நித்தியத்தைக் குறித்துக் கொஞ்சமும் கவலைப்படாதிருப்பது அதிலும் பெரிய ஆச்சரியம். நீ செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் தினை விதைக்கிறவன் தினை அறுப்பான் என்பதை நினைத்து எச்சரிக்கையாயிரு.

நீ இப்பூமியில் நடப்பிக்கிறதெல்லாவற்றின் பலனையும் ஒரு நாள் அறுக்கப் போகிறாய். இது ஒருவனும் மீற முடியாத தேவ நீதி. இந்த அறுப்பு இப்பூமியிலேயே ஒருவாறு நடந்தேறுகிறது. தேவ வசனத்தைக் கேட்காமல் அவருடைய வாக்குத்தத்தத்தையும் பயமுறுத்தலையும் எவர்கள் அசட்டைபண்ணுகிறார்களோ அவர்கள் குடும்பத்தில் சமாதானமும் வீட்டிலே வாழ்வும் இக்கட்டிலே ஆறுதலும் அற்றுப்போகிறார்கள். இவர்கள் இம்மையில் படும் இந்த நிர்ப்பந்தம், குணப்படாதவர்கள் மறுமையில் அநுபவிக்க இருக்கும் நித்திய பரிதாபத்தை முன் காட்டுகிறது. நீ மாம்சத்தில் விதைத்தால் குணப்பட்டு இனிமேல் ஆவியில் விதை. தேவனே தமது வசனமாகிய விதையைத் தருகிறார். இந்த விதை ஏராளமாய் உன் இருதயத்தில் விழக் கடவது. இருதயமோ கையை ஆளுகிறது. உன் இருதயம் ஆவியினால் நடத்தப்பட்டால் உன் கையினாலும் தேவனை மகிமைப்படுத்திப், பிறத்தியாருக்கு உதவியுஞ் செய்வாய். அப்போது தேவன் ஆவியின் மேல் விதைக்கிறவன் ஆவியினால் நித்திய ஜீவனை அறுப்பான் என்கிற வாக்குத்தத்தத்தை உன்னிலும் நிறைவேற்றுவார்.

ஜெபம். பரமபிதாவே! வானத்தையும் பூமியையும் ஆளுகிற தேவரீர் ஒவ்வொருவனுக்கும் அவனவன் செய்கையின்படி கொடுக்கிறீர். பரம தகப்பனே! நாங்கள் உமது வசனத்தைக் கேட்டு அதின்படி நடந்து-

நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள எங்களுக்கு அனுக்கிரகம் பண்ணியருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 15, 1-28 அல்லது தீத்து. 2, 1-15 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினேந்தாம் வாரம், செவ்வாய்.

ஞா. 200, 5. 6.

ஆத்துமத்தைக் கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படாமல் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் நரகத்தில் கெடுக்கத் தக்க வல்லவருக்கே பயப்படுங்கள். ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகள் விற்கிறது அல்லவோ? என்றாலும் உங்கள் பிதாவையன்றி அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையின் மயிர்களும் எண்ணப்பட்டிருக்கிறது. ஆனபடியால் பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்க நீங்கள் விசேஷித்திருக்கிறீர்கள். மத். 10, 28-31.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள தேவனிடத்திலிருந்து எல்லாம் வருகிறது. அவர் சித்தமின்றி ஒரு அடைக்கலான் குருவி தரையில் விழுவதும் நமது தலையிலிருந்து ஒரு மயிர் உதிருவதும் இல்லை என்பது நமக்கு ஆறுதலாக இருக்கவேண்டும்.

ஆயினும் அடைக்கலான் குருவிகள் மாத்திரமல்ல, மனுஷரும் பசியினாலும் தரித்திரத்தினாலும் இறந்துபோகிறார்கள். தேவன் எண்ணின மயிர்கள் துக்கத்தினால் நரைத்து உதிர்ந்து போகிறது. உனக்கருமையான பொருட்களும் நஷ்டமாகிறது. அப்போது உனக்கு என்ன ஆறுதல்? இறந்தவர்களும் தேவனுக்கு அஞ்சுகிறவர்களும் அப்போதும் ஆறுதலில்லாமல் இருக்க மாட்டார்கள். ஆகையால் இயேசுநாதர் ஆத்துமத்தையும் சரீரத்தையும் நரகத்தில் கெடுக்கத் தக்க வல்லவருக்கே பயப்படு என்கிறார். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமானது. அதற்கு நீ அஞ்சு. இந்தப் பயத்தினாலே உன் இரட்சிப்பைத் தேடப் பிரயாசைப்படு. வானத்தில் வாசமாயிருக்கிற பரிசுத்தர் என் தகப்பன், நான் அவர் பிள்ளை என்கிற நம்பிக்கை பிறக்கும் மட்டும் ஓயாதே. அப்போது நீ உலகத்துக்கு அஞ்சத் தேவையில்லை. தேவன் நமக்கு அனுசாரியாயிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் ஆர்? இந்த நம்பிக்கையிருந்தால் எல்லாம் அழிந்துபோய் இப்பூமியிலுள்ள பொருட்களெல்லாம் இழக்க நேரிட்டாலும், இந்தத் துன்பமெல்லாம் தேவனுடைய கையிலி

ருந்து அவருடைய சித்தத்தின்படி வந்தது என்கிற ஆறுதல் உனக்கிருக்கும். அவர் உலகத்தாருக்கும் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் விளைவிக்கும் துன்பங்களைத் தமக்குப் பயப்படுகிறவர்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றக் கூடியவர்.

ஜெபம். இரக்கமுள்ள பிதாவே! உமக்குப் பயப்படும் மெய்யான பயத்தை எங்கள் இருதயங்களில் உண்டாக்கியருளும். நாங்கள் உலகத்தாரைப் போல உம்மையும் உமது வசனத்தையும் அசட்டை பண்ணி நித்திய அழிவுக்கு ஆளாகாவண்ணம் எங்களைக் காப்பாற்றியருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 16, 1-23 அல்லது தீத்து 3, 1-15 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினேந்தாம் வாரம், புதன்.

ஞா. 200, 7. 8.

நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுகவும் அறுப்பான்; ஆசீர்வாதங்களோடே விதைக்கிறவன் ஆசீர்வாதங்களோடே அறுப்பான். அவனவன் தான் மனதிலே நியமித்தபடி கொடுக்கக்கடவான்; துக்கத்தினாலே அல்லது கட்டாயத்தினாலே வேண்டாம்; எனெனில் சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப் பராபரன் சிநேகிக்கிறார். ஆனால் நீங்கள் எல்லாத்திலும் எப்போதும் எல்லா மனத் திருப்தியோடே இருந்து சகல நற்கிரியைக்கும் பெருகுவதற்காக, பராபரன் உங்கள்மேல் சகல கிருபையையும் பெருகப் பண்ண வல்லவராயிருக்கிறார். 2 கொரி. 9, 6. 8.

சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப் பராபரன் சிநேகிக்கிறார். அவர் நம்மையும் சிநேகிப்பாரா? நாமும் சந்தோஷமாய்க் கொடுக்கிறவர்களா? அல்லது நாம் வாங்கி அனுபவிக்கவேண்டும் என்கிற ஆசைமட்டும் உள்ளவர்களா? கொடுக்க உன்னை ஏவுவதற்குப் பல சமயங்களும் ஏற்பாடுகளும் உண்டு. தர்ம சாலைகளும் மிஷியோனும் உன் அன்பை நம்பி ஏற்பட்டு உதவிகளை எதிர்பார்க்கின்றன. முதிர்ந்த வயதுள்ளவர்களும் வேலையில்லாதவர்களும் அங்கவீனரும் உன் ஆதரவுக்குக் காத்திருக்கிறார்கள். ஆகையால் கொடுக்கத் தேவையும் சமயமும் உண்டு. ஆனால் கொடுக்கவேண்டியது அவசியமா? தேவன் நமக்கு அநுதினமும் செய்து வருகிற இரக்கமும் ஒத்தாசையும் நம்மை அதற்கு ஏவுகிறது. ஆகையால் நீயும் கொடு. கட்டாயத்தால் அல்ல, மனப்பூர்வத்தோடும் உற்சாகத்தோடும் கொடு. நீ கொடுத்தால் விதைக்கிறவனைப்போலச் செய். குடியானவன் அதிகமாய் அறுக்கும்படிக்கு ஏராளமாக விதைப்பான். யாருக்குக் கொடுக்கவேண்டும்

எப்போது கொடுக்க வேண்டுமென்று யோசித்துப் பார்க்கலாம். ஆயினும் உதவி பெற்றவர்களுடைய நன்றிகேட்டைக் கண்டு தளர்ச்சியடையாமல் இடைவிடாமல் நன்மை செய். சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப் பராபரன் சிநேகிக்கிறார். ஆசீர்வாதங்களோடு விதைக்கிறவனை ஆசீர்வாதங்களோடு அறுக்கச் செய்வார். அவருடைய நீதி உனக்கு வஞ்சனை பண்ணாது.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! உமக்கு வானமும் பூமியும் சொந்தம். உம்மை அண்டிக்கொள்ளுகிற நாங்கள் ஒருபோதும் குறைவுபடமாட்டோம். ஆகையால் தேவரீர் எங்களுக்குச் செய்த இரக்கத்தை நாங்கள் பிறருக்குங் காண்பிக்க எங்களுக்கு உதாரவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 17, 1-30 அல்லது பிலே. 1-25 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினைந்தாம் வாரம், வியாழன்.

ப. 260, 1. 2.

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். உன் காலைத் தள்ளாட ஒட்டார். உன்னைக் காக்கிறவர் உறங்கார். இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதும் இல்லை, தூங்குகிறதும் இல்லை. சங். 121, 1. 4.

தனக்கு எங்கே இருந்து ஒத்தாசை வரும் என்று சங்கீதக்காரன் கேட்டு வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும் என்று பதிலுரைக்கிறான். நீயும் எப்போதும் அவனைப்போல் உன் கண்களையும் இருதயத்தையும் உயர ஏறெடு. உலகத்தில் நமக்கு அநேக காரியங்கள் ஆச்சரியமாயிருக்கிறது. அதிலே அடிக்கடி பக்திமான்கள் சிறுமையடையப் பொல்லாதவர்கள் க்ஷேமமாய் வாழுவதும் மனுஷர் அடிக்கடி மாய்கையைத் தெரிந்துகொண்டு நித்தியத்தை நினைக்காமலிருப்பதும் அவர்கள் லோகத்தைச் சிநேகித்துக் கிறிஸ்துவை அசட்டைபண்ணுவதும் ஆச்சரியமே. ஆனால் நீ சங்கீதக்காரனைப்போல் நித்திய பர்வதமாகிய ஆண்டவருக்கு நேராக உன் கண்களை ஏறெடு. அப்போது வெளிச்சம் உன் ஆத்துமத்தில் பட தேவன் அதில் ஆளுகைசெய்து, தீமையணுகாமல் காத்து, சேரிடும் பொல்லாப்பையும் ஆசீர்வாதமாக மாற்றுவதாகக் கண்டுகொள்வாய். நீ உன் குறைவைக் கண்டு அஞ்சி, உன் வேலை பிரயோசனமற்றுப் போகிறதைக் கண்டு திகிலடைந்தால், உன் கண்களை ஏறெ

ந்து இக்கட்டிலே என்னை நோக்கிக் கூப்பிடு என்கிற தேவ கட்டளைப்படியே செய். உனக்கு ஒத்தாசை கர்த்தரிடமிருந்து வரும். இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை தூங்குகிறதுமில்லை. ஆகையால் அவரையறியாமல் ஒரு மயிரும் தலையிலிருந்து விழாது. பொல்லாத சத்துரு நீ தூங்குகையில் அழிக்கப் பார்த்தாலும் வாதை உன் கூடாரத்தை அணுகாது. மனுஷர் காவலைப் பார்க்கிலும் தேவ காவலை நம்பு. இஸ்ரவேலைக் காக்கிறவர் எப்போதும் உன் பக்கத் துணையாயிருக்கிறார். நீ அவரை விட்டுவிடாமல் ஜெபத்திலே அவரோடு ஐக்கியப்பண்ணு. அவர் உன் காலைத் தள்ளாட ஒட்டார்.

ஜெபம். பரம பிதாவே! இவ்வுலகத்தில் எங்களுக்கு அடைக்கலம் இல்லை, தேவரீர் ஒருவரே எங்கள் நம்பிக்கையும், கன்மலையுமானவர். உமது திருநாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக, சுவாமி, ஆமென்.

1 சாமு. 17, 31-58 அல்லது 1 பேது. 1, 1-12 வாசிக்கவும்

திரித். பண்டி. பிந். பதினைந்தாம் வாரம், வெள்ளி.

ப. 260, 3. 4.

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாத்திலும் உங்கள் விண்ணப்பங்கள் ஸ்தோத்திரிப்புடனே கூடிய செபத்தினாலும் வேண்டுதலினாலும் பராபரனுக்கு அறிவிக்கப்படக்கடவது. பிலி. 4, 6.

நீ தேவனுடைய பிள்ளையானால் உனக்குச் சர்வ வல்லமையும் எல்லாச் செல்வமுமுள்ள ஒரு தகப்பன் உண்டு என்று அறிவாய். அவர் இப்பூமியில் உனக்கு வேண்டியவைகளைக் கொடுப்பதினால் "நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுமானேன், ஆனால் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பந்தேடுகிறதையும் கண்டதில்லை" என்று சொன்ன தாவீதின் அநுபவத்தையுடையவனாவாய். நீ தேவ பிள்ளையானால் பரம நன்மைகளைப் பற்றிய கவலையும் உன்னைப் பாரப்படுத்தாது. பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பை நடப்பியுங்கள் என்கிற வார்த்தையைக் கேட்கும்போது தேவனே தமது தயவுள்ள சித்தப்படி நம்மில் விருப்பத்தையும் செய்கையையும் உண்டாக்குகிறவர் என்ற தைரியமும் ஆறுதலும் நமக்கு இருக்கும். அவர் தாம் நம்மில் துவக்கின நற்கிரியையை முடிவுபெறச் செய்வார் என்கிற நிச்சயம் நமக்குண்டு. நீ இப்படி எல்லாக் காரியங்களிலும் கவலையற்று அமர்ந்து இருக்க வேண்டுமா

னால் ஜெயம் செய். ஜெபமானது கவலையை மாற்றும் மருந்து. உன் வருத்தத்தை மனுஷருக்கு அல்ல, உன் பரம பிதாவுக்கே தெரிவித்து, அவருடைய இரக்கமுள்ள சித்தத்துக்கு ஒப்புவி. அவர் உன் வேண்டுதலைக் கேட்டு நீ கேட்கிறதை உனக்குக் கொடுப்பார். கொடுக்கத் தாமதித்தாலும் அதிலும் உனக்கு நன்மையே இருக்கும். ஆகையால் எப்போதும் உன் விண்ணப்பங்களை ஸ்தோத்திரிப்புடனே தேவனுக்கு அறிவி. கர்த்தரைச் சரியாய் ஸ்தோத்திரிக்கிறவன் கவலைக்கு நீங்கலாயிருப்பான். நன்றிகெட்டவர்களோ கவலையற்றிருக்க முடியாது. கவலைகள் நம்மை நெருக்கும்போது தேவன் நமக்கு இன்னும் கொடுத்திராதவைகளை நினையாமல் அவர் நமக்கு ஏற்கனவே கொடுத்திருக்கும் நன்மைகளையும் விசேஷமாக அவருடைய நேச குமாரனைக் கொடுத்த நேசத்தையும் நினைப்போமாக. அதை நினைத்தால், நீ தேவனுக்குப் போதுமான நன்றி செலுத்த இன்னுமுண்டென்றும் நீ அப்படிச் செய்ததில்லையென்றும் அறிவாய்.

ஜெபம். என்னுடைய அன்புள்ள பிதாவே! உமது வாக்குத்தத்தங்களை நம்புகிற நாங்கள் எவ்வகையில் ஒன்றுக்கும் கவலைப்படத்தேவையில்லை. தேவரீர் [illegible]ன். உமது மட்டில்லாத இரக்கத்தை நாங்கள் என்றும் புகழ, எங்களுக்கு உதவிசெய்யும். சுவாமி, ஆமேன்.

சாமு. 18, 1-16. அல்லது 1 பேது. 11, 3-25 வாசிக்கவும்

திரித். பண்டி. பிந். பதினைந்தாம் வாரம், சனி.

பி. 133, 5. 6.

நாலாம் ஆதி நியாயம். தொடர்ச்சி: அது கிருபையாய் இரட்சிக்கிற ஜீவ தண்ணீரும் பரிசுத்தாவி நடப்பிக்கிற மறுஜெனன முழுக்குமாம். இதைப்பற்றிப் பரிசுத்த பவுல் தீத்துவுக்கு எழுதின நிருபத்தின் மூன்றாம் அதிகாரத்தில் சொல்லுகிறதாவது: மறுஜெனனமாகிறதாலும் பரிசுத்தாவியின் புதிதாக்குதலுமுடைய ஸ்நானத்தால் [illegible] நம்மை இரட்சித்தார். அவர் பரிசுத்தாவியை நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினால் நம்முடைய பேரில் பரிபூரணமாக ஊற்றினார், நாம் அவருடைய கிருபையால் நீதிமான்களாக்கப்பட்டு நாம் நம்புகிறபடி நித்திய ஜீவனின் சுதந்தரராவதற்கு அப்படிச் செய்தார். இது உண்மையான வார்த்தை.

ஞானஸ்நானம் மறுஜெனன முழுக்கு. மறுஜெனனம் என்றால் மறுபிறப்பு. சாகக் கிடக்கிறவன் நினையாதபடி பிழைத்தால் மறுபிறப்பு என்கிறோம். அதுபோல் பாவ ஜாதியில் பிறந்த நாம், பிறந்த நாள் முதல் மரணத்துக்குள்ளாயிருந்தும் ஞானஸ்

நானத்தில் நமக்கு முத்திரிக்கப்பட்ட தெய்வ கிருபையால் ஆச்சரியமாய் இரட்சிக்கப்பட்டோம். நாம் அப்படி ஆச்சரியமாய் இரட்சிக்கப்பட்டதே மறுஜெனனம்.

இந்த ஆச்சரியமான இரட்சிப்பு ஞானஸ்நானத்தில் எப்படி ஆகிறது? அவர் பரிசுத்தாவியை நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினால் நம்முடைய பேரில் பரிபூரணமாக ஊற்றினார். ஏனெனில் ஞானஸ்நானத்தில் ஊற்றப்படும் தண்ணீர் தெய்வ வசனத்தோடு கூடிய தண்ணீர். தெய்வ வசனமோ பரிசுத்த ஆவி நிறைந்த வசனம். ஆகையால் வசனத்தோடு கூடிய தண்ணீர் ஊற்றப்படுவதில் பரிசுத்த ஆவியும் ஊற்றப்படுகிறது. அதினால் நாம் பாவம் அறக் கழுவப்பட்டு, பராபரனுடைய பிள்ளைகளும் நித்திய ஜீவனின் சுதந்தரருமானோம். இது உண்மையான வார்த்தை.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது கிருபையினால் ஏழைப்பாவிகளாகிய எங்களை ஞானஸ்நானத்தில் உம்மண்டை சேர்த்து நித்திய பாக்கியத்தை எங்களுக்கு அருளினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே! நாங்கள் இந்தத் திரு முழுக்கினால் பெற்றுக்கொண்ட ஆச்சரியமான இரட்சிப்பை அவிசுவாசத்தால் இழந்துபோகாதபடி எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும். சுவாமி, ஆமேன்.

1 சாமு. 19, 1-24. அல்லது 1 பேது. 2, 1-10 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினாறாம் வாரம், ஞாயிறு.

பி. 308, 1. 2.

அவர் ஊர் வாசலுக்குச் சமீபித்தபோது, இதோ, தன் தாய்க்கு ஒன்றான குமாரனாகிய மரித்த ஒருவன் வெளியே எடுத்துவரப்பட்டான்; அவளோ விதவையானவள்; ஊரார் வெகு கும்பு அவளோடேகூட வந்திருந்தார்கள். கர்த்தர் அவளைப் பார்த்து அவள்மேல் மனதுருகி, அவளை நோக்கி: அழாதே என்று சொல்லி, கிட்ட வந்து பாடையைத் தொட்டார். சுமக்கிறவர்கள் நின்றார்கள். அப்போது அவர் வாலிபா, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்போது மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவர் அவனை அவன் தாய்க்கு ஒப்புவித்தார். லூக். 7, 12-15.

நாயீன் ஊரிலே தன் ஒன்றான பிள்ளையைச் சாகக்கொடுத்த அந்த ஏழை விதவையின் இருதயம் எவ்வளவு துக்கம் நிறைந்தது. மரணம் நமது வீட்டுக்கு வந்து நமக்கு அருமையானவர்களை வாரிக்கொண்டுபோனால் நாமும் மனங்கசந்து துக்கிப்போம். அப்போது நமது இருதயம் சொல்லிமுடியாத வேதனைப்

பட்டு நம்மை விட்டுப் பிரிந்தவர்களின் துயரப்பட்டு அழுவோம். இப்பேர்ப்பட்ட வேதனை பிறரையும் கண்ணீர் விடும்படி செய்யும். பந்துக்களும் சிநேகிதரும் கூடிக் கல்லறைக்குப் போவார்கள். நாயீன் ஊரிலும் அப்படி நடந்தது. ஊராரில் அநேக ஜனங்கள் அந்த ஏழை விதவையோடு வந்தார்கள். இது அவளுக்கு ஆறுதலாயிருந்தாலும் அவள் துக்கத்தையும் அவள் கண்ணீரையும் நிறுத்த ஒருவனாலும் முடியவில்லை. அப்போது இயேசுநாதர் வந்தார். கிறீஸ்தவர்கள் எங்கே துக்கித்து அழுகிறார்களோ அங்கே அவர் எப்போதும் சமீபமாயிருக்கிறார். அவர் எவ்வளவு நேசத்தோடும் பட்சத்தோடும் அந்த ஏழைத் தாயைப் பார்க்கிறார். அழாதே என்று ஆறுதல் சொல்லுகிறார். ஆறுதல் சொல்வதோடு உத்தாரத்தையும் செய்கிறார். அவருடைய வார்த்தை வாலிபனுக்கு உயிர் தருகிறது. அவர் அவனைத் தாய்க்கு ஒப்புவிக்கிறார். கஷ்டமான வேதனையிலும் இயேசுநாதர் வார்த்தையினாலும் செய்கையினாலும் உத்தாரம் செய்கிறார். உன் வேதனையும் உன் கண்ணீரும் அவருக்குத் தெரியும். இன்றைக்கும் அவர் கல்லறைகளண்டை நின்று அழாதே என்கிறார். அப்பொழுது அவரே நமக்கு முன்பாக நின்று "நானே உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனுமாயிருக்கிறேன். என்னில் விசுவாசிக்கிறவன் மரித்தும் பிழைப்பான்" என்கிற வார்த்தையை நமக்கு நினைப்பூட்டுகிறார்.

அவர் உலகத்தின் துக்கத்தையும் மரணத்தையும் மேற்கொண்டவர். ஆகையால் நாம் நம்பிக்கையற்றவர்களைப்போல் துக்கிக்கவேண்டியதில்லை. மரணம் நம்மை இங்கே பிரித்தாலும் ஆண்டவர் திரும்பவும் ஒருவரையொருவர் கண்டு மகிழச் செய்வார்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள தேவ குமாரனே! மரணத்தை மேற்கொண்டு கல்லறையை விட்டெழுந்து எங்களுக்கு நித்திய ஜீவனைச் சம்பாதித்தீர். இனி நாங்கள் மரணத்திற்குப் பயப்படமாட்டோம். எங்களுக்கருமையானவர்களுக்காக அழவும் மாட்டோம். நீரே எங்கள் எல்லாரையும் உம்மண்டை சேர்த்துக்கொள்வீராக, சுவாமி, ஆமென்.

[illegible]. 20, 1-20. அல்லது சங். 116. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினொரும் வாரம், திங்கள்.

சங். 288, 1. 2.

இதுமுதல் நித்தியமாகவும், வானமண்டலங்களிலும் பூமியின்மேலுமுள்ள இனக்கட்டு அனைத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தரின் இயேசுக்கிறீஸ்துவினுடைய பிதாவை நோக்கி, என் முழங்கால்களை முடக்கி,

நீங்கள் அவருடைய ஆவியினாலே உள் மனுஷனில் வல்லமையாய்ப் பலப்பட அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அளிக்க வேண்டிக்கொள்ளுகிறேன். எபே. 3, 14-16.

ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்கிறது கிறீஸ்தவர்களுக்கு மெத்த அழகு. பவுல் அப்போஸ்தலன் அப்படிச் செய்தான். அவன் ஒவ்வொரு நாளிலும் பரம பிதாவுக்கு முன்பாக முழங்காற்படியிட்டுத் தூரத்திலுள்ள சபைகளுக்காக வேண்டுதலும் தோத்திரமும் செய்துவந்தான். வேண்டுதலினாலும் தோத்திரத்தினாலும் அவர்களோடு ஆவியிலே சந்தோஷமும் துக்கமும் பட்டான். இப்படி வேண்டுதல் செய்வதைப் பார்க்கிலும் கிறீஸ்தவர்களுக்குள் ஐக்கியமுண்டாக வேறே வழி இல்லை. என்னோடு இன்னும் அநேகம் பேர் வேண்டுதல்செய்கிறது எனக்குத் தெரிந்தால், நான் துன்பத்திலும் பிணியிலும் கவலையிலும் எவ்வளவோ ஆறுதல் அடைவேன் அல்லவா? இப்படி ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதைப் பார்க்கிலும் பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும் சிநேகிதர் சிநேகிதருக்கும் காட்டத்தக்க வேறே அன்பு இல்லை.

இப்படி வேண்டிக்கொள்ளும்போது சரீரத்துக்கடுத்த காரியங்களை மாத்திரம் நினைக்கக் கூடாது. இப்படிப்பட்ட கவலைகளுக்கும் விருப்பங்களுக்கும் நமது ஜெபங்களில் அநேகமாய் அதிக இடம் தருகிறோம். பவுல் அப்போஸ்தலனோ பிதாவானவர் எபேசியரைத் தம்முடைய ஆவியினாலே உள் மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படுத்தும்படி வேண்டினான். அவர்கள் இரட்சகரை உறுதியாய் நம்பி அவருடைய நாமத்தை உற்சாகமாக அறிக்கைவிட்டுப் பாவத்தோடு உண்மையாய்ப் போராடி இவ்வுலகத்தின் துன்பங்களைப் பொறுமையாய்ச் சகித்து வர தேவன் அருள்புரியும்படி வேண்டினான். இவ்வாறே நாமும் ஒருவருக்காக ஒருவர் ஜெபத்தில் கேட்க வேண்டும். தாய் தகப்பன்மாரே, உங்கள் பிள்ளைகளின் சுக வாழ்வை மாத்திரம் நினையாமல், அவர்கள் தேவனுடைய உண்மையான பிள்ளைகளாகி நித்திய ஜீவனை அடையும்படி, அவர்களுடைய நித்திய இரட்சிப்பை நினைத்து ஜெபம் செய்யுங்கள். நீ ஒரு வியாதியஸ்தனுக்காக ஜெபம் செய்தால் அவன் சொஸ்தமடையும்படி மாத்திரமல்ல, ஆண்டவர் அனுப்பின சுமையை அவன் சகிக்கும்படிக்கான பலத்தையும் பொறுமையையும் அவனுக்கு அருளவும், அவன்: நான் பிரிந்து போய்க் கிறிஸ்துவுடனே இருக்க ஆசைப்படுகிறேன் என்று அறிக்கையிடுவதற்கான விசுவாசத்தை அளிக்கவும் வேண்டும் என்று வேண்டிக்கொள். இப்படி நாம் வேண்டுவதினாலே இப் பூமியின் [illegible]ச் சகிக்கும்படி ஒருவருக்கொருவர் உதவியாயிருப்போம்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! எங்கள் அருமையான தாய் தகப்பன்மாரையும் பிள்ளைகளையும் உடன்பிறந்தோரையும் உமது எல்லாச் சபையாரையும் உமது ஆசீர்வாதத்தால் காத்து உமது இரக்கத்தின்படி நித்திய பாக்கியத்தில் சேர்த்தருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 20, 30-43. அல்லது 1 பேது. 2, 11-25. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினாறாம் வாரம், செவ்வாய்.

அ. 308, 3.4.

மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், என் வார்த்தையைக்கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குள் அகப்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான். மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், மரித்தோர் பராபரனுடைய குமாரனின் சத்தத்தைக் கேட்கும் வேளை வருகிறது, இப்போதும் வந்திருக்கிறது, அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள். யோவா. 5, 24. 25.

ஜீவன் எல்லாருக்கும் பிரியம். சாவு என்றால் திகில், ஐயையோ ஜீவிய காலம் எவ்வளவு குறுகினது என்று எல்லாரும் புலம்புவார்கள். நமது ஆயுள் புகைக்கும் கனவுக்கும் ஒப்பு. இதை நினைத்து நாம் வருத்தப்படுகிறோம். ஆனால் இந்தக் குறுகின ஜீவனும் அநேகரிடத்தில் மரணம்போல் இருப்பது எத்தனை பரிதாபம். தேவனில்லாதவர்கள் எவ்வளவு சிறப்பாய் வாழ்ந்தாலும் அவர்கள் செத்தவர்களே தான். தேவனையன்றி உண்மையான நிலையுற்ற வாழ்வு இல்லை. அவரையன்றி வாழும் வாழ்வினில் ஆசீர்வாதமுமில்லை, பயம் [illegible] திலிருந்து விடுதலையில்லை.

இயேசு மரணத்தை நீக்கி ஜீவனையும் அழியாமையையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார். அவருடைய வசனம் எந்தவேளையும் பிரகாசிக்கிறதே? அந்த வெளிச்சம் இருதயங்களில் புது உயிருண்டாகிறது. இயேசுவினிடத்தில் இப்பூமியில் வந்த நாள் முதற்கொண்டு தேவ குமாரனுடைய சத்தமாகிய சுவிசேஷப் பிரசங்கம் தொனித்துக்கொண்டிருக்கிறது. நீ அதை எவ்விடத்திலும் கேட்கலாம். ஆனால் அநேகர் தேவ வசனத்தை ஒரு காதால் கேட்டு மறு காதால் விட்டுவிடுகிறார்கள். ஆகையால் அவர்கள் ஆசீர்வாதம் அடைகிறதில்லை. ஆனால் தேவ வசனத்தைக் கேட்டு அதைக் கைக்கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள். என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்

கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று ஆண்டவர் சொல்லுகிறார். நீ அவருடைய சத்தத்தைக் கேட்டு உன் இருதயத்துக்குள் அதைக் காத்துக்கொண்டு வாழ்விலும் சாவிலும் அந்த வசனத்தை நம்பவேண்டும். அப்படிச் செய்கிறவன் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான். அவனுக்குத் தேவனோடு சமாதானம் உண்டு. நீ எவனானாலும் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டவனானால் [illegible]வான். நீ இயேசுநாதருடைய வார்த்தையைக் கெட்டியாய்ப் பிடித்தால் நீ இம்மையிலும் மறுமையிலும் மெய்யான ஜீவனை அடைந்தவன்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது மரணத்தினால் நாங்கள் மரணத்தை விட்டு ஜீவனுக்குட்பட்டோம். உமது திரு வசனத்தினால் எங்களுக்கு நித்திய ஆறுதலும் பாக்கியமும் கிடைக்கிறது. உமது வசனத்தை என்றும் எங்களிடத்தில் காப்பாற்றி வாரும். சுவாமி, ஆமென்.

1 சாமு. 21, 1-15 அல்லது 1 பேது. 3, 1-17 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினாறாம் வாரம், புதன்.

அ. 308, 5.6.

பிதா தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் அவரும் தம்மில்தாமே, ஜீவனுடையவராயிருக்குதலைக் கட்டளையிட்டார். அவர் மனுஷனுடைய குமாரனாயிருக்கிறபடியினாலே, நியாயத்தீர்ப்புச் செய்யவும், அவருக்கு அதிகாரங் கொடுத்தார். இதற்காக ஆச்சரியப்படாதிருங்கள்; ஏனெனில் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் வேளை வரும். அப்போது நன்மை செய்தவர்கள் ஜீவனுக்கு எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினைக்கு எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். யோவான் 5, 26-29.

நியாயத்தீர்ப்பு நாளை அநேகர் நினைக்க மாட்டார்கள். அது பயங்கரமான நாள்தான். அந்த நாளிலே சதாகாலங்களாக நிலைக்கும் ஒரு தீர்ப்புக் கூறப்படும். அப்போது நம்முடைய ஜீவியப் புத்தகம் திறக்கப்பட்டு நமக்கு இரட்சிப்போ, ஆக்கினையோ இரண்டிலொன்று கிடைக்கும். அந்த வேளைக்கு ஒருவரும் தப்ப முடியாது. ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள். கிறிஸ்தவர்களோ அந்நாளுக்கு அஞ்சாமல் சந்தோஷப்படுவார்கள். ஏனெனில் நியாயத்தீர்ப்பைச் செய்பவர் அவர்கள் பாவங்களுக்காகத் தமது [illegible] சிந்தின இரட்சகர் தான். அவர் நமது அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து நமது சேர்க்காட்டை எல்லாம் குண

மாக்கி நமது பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு நம்மைக் கிருபையாலும் இரக்கங்களாலும் முடிசூட்டுகிறார். நியாயத்தீர்ப்பைச் செய்ய அவருக்கே பிதாவானவர் அதிகாரம் கொடுத்தார். ஆண்டவரையும் அவர் வசனத்தையும் இங்கே அசட்டைபண்ணினவர்களுக்கோ அந்த நாள் பயங்கரமான நாளாயிருக்கும். மகிமையின் ஆண்டவர் தங்கள் நியாயாதிபதியாக வருவதைக் கண்டு அவர்கள் நடுநடுங்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் அன்பை அவர்கள் அசட்டைபண்ணி நன்றிகெட்டுப்போனதால் எல்லாவற்றிலும் பெரிய துரோகத்தைச் செய்தார்கள். ஆகையால் கடைசிநாளில் அவர்கள் ஆக்கினைக்கே எழுந்திருப்பார்கள். நன்மை செய்தவர்களோ ஜீவனுக்கு எழுந்திருப்பார்கள். நீ நன்மை செய்தாயா என்று கேட்டால் நீ மனம் வாடி, நான் ஏழைப் பாவியாகத்தான் ஆண்டவருக்கு முன்பாக நிற்பேன் என்கிறாய். திடன்கொள். நீ இயேசுவைச் சிநேகித்து அவரை விசுவாசித்தால் நீ எல்லாவற்றிலும் பெரிய புண்ணியத்தைச் செய்தவனாக எண்ணப்படுவாய்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! கடைசி நியாயத்தீர்ப்புக்கு எங்களை விலக்கிக் காரும். உமது பாடுகளையும் மரணத்தையும் பார்த்து எங்கள் பாவங்களை மன்னித்து எங்களை இரட்சியும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 22, 1-23 அல்லது 1 பேது. 3, 18-22. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினொரும் வாரம், வியாழன்.

பி. 308, 7. 8.

எல்லாக் கண்ணீரையும் பராபரன் அவர்கள் கண்களில் இல்லாமல் துடைப்பார்; இனி மரணமுமில்லை, இனித் துக்கமுமில்லை அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் போய்விட்டது என்று, அச்சத்தம் உரைத்தது. அபி. 21, 4.

நாம் இவ்வுலகில் கண்ணீர்க் கணவாயில் நடக்கிறோம். இங்கே இருதயத்தை மகிழ்ப்பண்ணும் அநேக வித சுகங்களும் இன்பங்களுமிருந்தும் இங்குள்ள இன்பத்தை விடத் துன்பம் அதிகம். எல்லா இன்பமும் ஒழிந்து, முடிவில் வேதனையையும் கண்ணீரையும் உண்டாக்கும் என்பது யாவருக்கும் அநுபவத்தால் தெரிந்த விஷயம். மரணமே நம்மை மேய்கிறது. அது இரக்கமின்றி வாலிபரையும் கிழவரையும் நமக்கருமையானவர்களையும் வாரிக்கொண்டுபோய் நம்முடைய நம்பிக்கையை யுத

மாக்குகிறது. ஆ, இம்மரணத்தினால் எவ்வளவு வேதனையும் கண்ணீரும் புலம்புதலும் அடங்கியிருக்கிறது. அதை நினைக்கும்போது விசனமும் மலைப்பும் உண்டாகும். இந்த உலக வாழ்வைத் தவிர நமக்கு வேறு வாழ்வு இல்லாவிட்டால் நாமே எல்லாரிலும் நிர்ப்பாக்கியராயிருப்போம். ஆயினும் நிலைத்திருக்கிற பட்டணம் நமக்கு இங்கே இல்லை என்றும் வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம் என்றும் இம்மையை அல்ல மறுமையையே நோக்கிப் பார்க்கிறோம் என்றும் அறிவோம்.

இக்காலத்துப் பாடுகள் நம்மில் வெளிப்படப் போகிற மகிமைக்குப் பாத்திரமானவைகள் அல்ல என்கிற நம்பிக்கை ஒரு கிறிஸ்தவனுக்குக் கசப்பான துன்பத்திலும் ஆறுதலைக் கொடுக்கிறது. இதோ, ஆண்டவர் உனக்கு அந்த மகிமையைக் காண்பிக்கிறார். கண்ணீரில்லாத சந்தோஷமும் மரணமில்லாத ஜீவனும் துன்பமில்லாத பாக்கியமும் அங்கே இருக்கும். அது ஆறுதலான வாக்குத்தத்தம் தான். ஆண்டவர் உனக்கு அழியாத கண்களையும் அழியாத ஜீவனையும் ஒழியாத பாக்கியத்தையும் கொடுக்கப்போகிறார். அதற்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவாயாக.

ஜெபம். எங்கள் பரமபிதாவே! நீர் எங்களுக்காக ஆயத்தம் பண்ணின பாக்கியத்தை கண்ணீரோடு [illegible] நாங்கள் நாடித் தேடுவதற்கு எங்களை எழுப்பியருளும். ஏழைப் [illegible] பாவிகளாகிய எங்களை நித்திய மகிமைக்கு அழைத்ததற்காக உமக்கு [illegible] என்றும் துதியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக, சுவாமி, ஆமென்.

1 சாமு. 23, 1-28. அல்லது 1 பேது. 4, 1-11. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினொரும் வாரம், வெள்ளி.

பி. 308, 9. 1[illegible]

தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று இதற்காக சொல்லுகிறார். எபே. 5, 14.

பொழுது போனவுடனே நாம் தூங்கப் போகிறோம். அப்போது கண்கள் அயர்ந்து அவயவங்கள் எல்லாம் இளைப்பாறும். தூங்குகிறவன் அசைவற்றுக் கிடந்து சுற்றியிருக்கிற [illegible] சத்தங்களைக் கேளாமலும் இருப்பான். இப்படிப்பட்ட அயர்ந்த தூக்கம் சரீரத்துக்கு அவசியம். அதினால்

சரீரம் மதுரசனின் வேலைக்காரர் பெலையாரிட். ஆனால் வேறொரு ஆக்கமுண்டு. அதினாலே சரீரம் அல்ல ஆத்துமம் சோர்வதும், செயலற்றுப்போம். அது பாவித்திருந்தால், அதனால் இருதயமான அதேவ அன்பைப் பாரமதும் அவருடைய இரக்கத்தின் மெய்மையைக் கவனியாமலும் தேவ வசனத்தைக் கேளாமலும் உணராமலும் தேவ கிருபையைப் பற்றி விசாரிக்காமலும் சோர்ந்து போயிருக்கும். அது மரணத்துக்கு ஏதுவான சோம்பலுள்ள ஆக்கமாம். இப்படிச் சோம்பும் ஆத்துமா தானாய் விழிக்க மாட்டாது. கர்த்தர் தாமே அதை எழுப்பவேண்டும். ஆகையால் அவர்: தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்கிறார்.

அன்புள்ள தேவன் நம்மைத் திரும்பத் திரும்ப அழைத்து எழுப்புகிறார். அவர் உன்னிடத்தில் உன் பாவத்தையும் வரப்போகிற நியாயத்தீர்ப்பையும் உணர்த்துவதாலும் பலவித அன்பாக அனுப்புவதாலும் உன்னை எழுப்பப் பார்க்கிறார். அப்போது நீ அவருடைய சத்தத்தைக் கேட்டால் நலமது. அப்போது உன் இரட்சகராகிய கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார். அவர், நீ இருக்கிற மோசத்தையும், நீ செல்லுகிற கெட்ட மார்க்கத்தின் முடிவையும் உனக்குக் காண்பிக்கிறார். தமது கிருபையையும் உனக்குக் காண்பித்து, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என் மூலமாய் அன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்கிறார். கர்த்தருடைய கிருபை உன்னைச் சந்தித்து இப்படிப் பிரகாசிக்கும்போது நீ விழித்து எழுந்திருந்து அந்தகாரத்தின் கிரியைகளைப் போட்டுவிட்டு வெளிச்சத்தின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது கிருபையினால் நாங்கள் அந்தகாரத்தை விட்டு வெளிச்சத்துக்குள் வரப் பெலனைப் பெற்றிருக்கிறோம். கர்த்தாவே, நீர் அளித்த இந்தப் பெலனைக்கொண்டு நித்திரை தெளிந்து உமது வழியில் நடக்க எங்களுக்கு ஒத்தாசை செய்யும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 24, 1-22. அல்லது 1 பேது. 4, 12-19. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினொராம் வாரம், சனி.

சங். 138, 7. 8.

நானக் ஆதி நோயால் தொட்டாலும், [illegible] ஞானதினம் கொண்டிருந்தது [illegible] அர்த்தமென்ன?

இன்னும் மீதியாயிருக்கிற நம்முடைய பழைய மனிதன் சகல பாவங்களோடும் ஆசை இச்சைகளோடும் அனுதின மனஸ்தாபத்தினாலும் தபசினாலும் அமிழ்த்தச் சாகவும் பாவமூலத்துக்கு முன்பாக நீதியோடும் சுத்தாங்கத்தோடும் என்றென்றைக்கும் பிழைக்கிற புதிய மனிதன் நம்மில் மறுபடியும் அனுதினமும் உயிர்த்தெழவும் வேண்டுமென்பதே இதற்கு அர்த்தமாம்.

அனுதின மனஸ்தாபமும் தபசும் என்றால் என்ன? இவ்விஷயத்தைப்பற்றி நாம் ஒரு நிச்சயமான அறிவுக்கு வரும்படிக்கு வேதத்தைத் தான் பார்க்கவேண்டும். வேதத்தில் ஏழு தபசு சங்கீதங்கள் உண்டு. (சங். 6. 32. 38. 51. 102. 130. 143) இந்தத் தபசு சங்கீதங்களைப் பார்த்தால்தான் தபசு இன்னதென்று விளங்கும். இச்சங்கீதங்களை எழுதினவர்கள் [illegible] புறம்புமாக உபத்திரவப்பட்டார்கள் என்று அவர்கள் எழுதின வார்த்தைகளால் தெரிகிறது. வியாதியாலும் சத்துருக்களாலும் (சங். 6, 38. 143) பாவம் விளைக்கும் ஞாபக மனவேதனையாலும் (சங். 32. 51) நிருச்சயமுள்ள தேவனுடைய கேவலமான நிலைமையாலும் (சங். 102. 130) அவர்கள் உபத்திரவப்பட்டதாகத் தெரிகிறது. இந்த உபத்திரவங்களில் கர்த்தருடைய கிருபையின் அனுபவம் அவர்களுக்கு இல்லாமல் போனதால் மனதில் நொறுங்குண்டு பெருமூச்சுவிட்டுக் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அதுதான் மெய்யான மனஸ்தாபமும் தபசுமாம். அதிலே தான் பழைய மனுஷன் [illegible] சாகிறான். நாமும் அப்படித் தபசு செய்யும்படி கர்த்தர் நமக்கும் தினம் தினம் உள்ளும் புறம்புமாக பல விதமான உபத்திரவங்களை உண்டாக்கி, நம்முடைய பழைய மனுஷனைக் கொல்லப் பார்க்கிறார். நமக்கும் இந்த அனுதின உபத்திரவத்தில் கர்த்தருடைய கிருபையின் நிச்சயம் இல்லாமல் போகிறது. அப்போ நாம் வேறு ஆறுதலைத் தேடாமல் சங்கீதக்காரரைப் போல மனதில் பெருமூச்சு விட்டுக் கூப்பிடக் கடவோம். அதுவே அனுதின மனஸ்தாபமும் தபசுமாம். அப்படிக் கூப்பிடுகிறவனுக்கு மறுபடியும் மறுபடியும் தேவ வசனத்தால் மெய்யான ஆறுதல் வருகிறது. அதினால் அவன் மறுபடியும் மறுபடியும் இரட்சிக்கப்பட்ட புது மனுஷனாய் எழுந்து சந்தோஷமாய்க் கர்த்தருடைய வழியில் நடக்கிறான்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! ஞானஸ்நானத்தினால் மறுபடியும் பிறந்த நாங்கள் இன்னும் பழைய சுபாவத்தை உடையவர்களாய்ப் புதிய ஜீவனை அனுசரியாமல் இருக்கிறோமென்று மனஸ்தாபத்தோடு அறிக்கையிடுகிறோம். தயவுள்ள சுவாமி! எங்கள் இருதயங்களைப் பிரகாசிப்பித்து நாங்கள் உம்மையும் உம்முடைய [illegible] ரசியத்தையும் தேடும்படி எங்களுக்குத் துணை செய்வீராக, சுவாமி, ஆமென்.

1 சாமு. 26, 1-25. அல்லது 1 பேது. 5, 1-14. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினேழாம் வாரம், ஞாயிறு.

பி. 288, 3. 4.

இதோ, நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்குமுன்பாக இருந்தான். இயேசு வேத சாஸ்திரிகளுக்கும் பரிசேயருக்கும் பிரத்தியுத்தரமாக: ஓய்வு நாளிலே குணமாக்குகிறது நியாயமோ என்றார். அவர்களோ பேசாதிருந்தார்கள். அப்போது அவர் அவனைப் பிடித்துக் குணமாக்கிவிட்டார். லூக். 14, 2-4.

ஓய்வு நாளிலே குணமாக்குவது நியாயமா என்று இயேசு கேட்டார். இந்த நாளிலே [illegible]படுகிற மனுஷருக்கு இரக்கத்தையும் [illegible] காட்டி இன்பமாகுதலைக் [illegible] பது நியாயம் தான், ஆண்டவர் அப்படிச் செய்திருக்கிறார். அவருடைய உத்தரவின்படி ஒரு வியாதியஸ்தனைப் பார்க்கவும், ஒரு அவஸ்தையைச் சந்திக்கவும் துன்பப்படுகிற ஒருவனை ஆற்றித்தேற்றவும் வேண்டியது தான். நீ ஓய்வுநாளிலும் இயேசுவைப்போல உபத்திரவப்படுவோருக்குச் சிநேகத்தைப் பாராட்டுவாயாக. ஆகிலும் ஓய்வுநாளை வேலைநாளாக்கி மற்ற நாட்களில் செய்யக்கூடிய வேலையை அந்த நாளில் செய்வதும் காரணமின்றிக் கோவிலுக்கு வாராமலிருந்து திருநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவதும் நியாயம் அல்ல. ஆறுநாள் வேலை செய்து ஒருநாள் இளைப்பாறுவமென்பது ஏழாம் நாளை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கின தேவனுடைய சித்தம். நீ திரு நாளிலே ஓய்ந்திருந்தால் வார நாட்களில் நல்ல உற்சாகத்தோடு உன் வேலையைச் செய்யக்கூடும். இடைவிடாமல் வேலைசெய்து கஷ்டப்படுகிற ஒரு மனுஷனுடைய சரீரமும் ஆத்துமமும் களைத்துப்போகும். ஆகையால் தேவன் ஓய்வுநாள் ஆசரிப்பைக் கட்டளையிட்டதினால் நமக்குச் செய்த நன்மையை அற்பமாக நினைக்காதே. தேவன் இந்த நாளை நமக்கு ஆசீர்வாதமாகக் கட்டளையிட்டார். அதை ஆசரிக்காதவர்கள் இந்த ஆசீர்வாதத்தையும் இழந்துபோவார்கள்.

நாம் தேவனையும் பிறத்தியானையும் நம்மைப்போல் சிநேகிப்போமானால் நாம் திருநாளில் செய்யவேண்டிய வேலை இன்னதென்றும் செய்யக்கூடாத வேலை இன்னதென்றும் அறிவோம்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! நீர் அன்பினால் ஏவப்பட்டு ஓய்வுநாளிலே [illegible] துன்பப்படுகிற மனுஷருக்கு ஒத்தாசையண்ணி எங்களுக்கு நல்ல முன்மாதிரி வைத்தீர். ஆண்டவரே, நாங்களும் பிறத்தியாரை நேசித்து உம்மைப் பின்செல்ல எங்களுக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 சாமு. 31, 1-6. அல்லது சங். 26 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினேழாம் வாரம், திங்கள்.

பி. 288, 5. 6.

இப்போதும் நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கும் பாத்திரவான்களாக எல்லா மனத்தாழ்மையுடனும் சாந்தத்துடனும் நீடியசாந்தத்தோடும் நடந்துகொண்டு, ஒருவரை ஒருவர் சிநேகமாய்ப் பொறுத்திருந்து, சமாதானக்கட்டினாலே ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுவதற்குச் சாக்கிரதையாயிருக்க, கர்த்தருக்குள் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். எபே. 4, 1-3.

ஓய்வுநாள் ஆசரிப்பு முழு வாரத்துக்கும் ஆசீர்வாதமாக இருக்கவேண்டும். நீ ஓய்வுநாளைச் சரியாய்க் கொண்டாடினால் வேலைநாட்களும் அதினால் ஆசீர்வாதத்தால் நிறைந்ததாகும். நீ ஓய்வு நாளிலே கேட்பதை வேலைநாட்களிலும் மறக்கவேண்டாம். நாம் இப்பூமியில் நமக்குப் பல வகை வேலைகளும் பல வகைக் கடமைகளும் இருந்தாலும் ஒரே கடமை எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொது. அதற்கு நாம் ஞானஸ்நானம் பெற்றது முதல் அழைக்கப்பட்டோம். அக்கடமை விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் இப்பூமியில் ஜீவனம் பண்ணுவதே. இதை நீ ஒருநாளும் மறக்கக்கூடாது. நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்துகொள்ளுங்களென்று அப்போஸ்தலன் சொல்லுகிற புத்திமதியை நாம் மறக்கலாகாது. ஒரே வீட்டிலுள்ள பிள்ளைகள் [illegible] சிநேக ஐக்கியமாய் இருப்பதுபோல பரமபிதாவின் பிள்ளைகளும் மெய்யான சமாதானத்தோடு ஐக்கியமாயிருப்பார்கள். ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்து மோட்சத்துக்கு [illegible]மாய்ச் சேர விரும்புகிறவர்கள் தங்களுக்குள்ளே சண்டைபோடுவது மெத்தப் பரிதாபம். ஆகையால் சமாதானக்கட்டினாலே ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுவதற்குச் சாக்கிரதையாயிருப்போமாக. இதற்கு மனத்தாழ்மையும் மெத்தனவும் நீடியசாந்தமும் சிநேகமும் அவசியம். ஒரு கிறிஸ்தவன் தன் அபாத்திரத்தன்மையை அறிவதும் தன்னை அற்பமாக எண்ணவும் பிறத்தியானுக்குப் பட்சத்தைக் காட்டவும் அவன் பாவங்களை மூடிப் பழிக்குப் பழி வாங்காமலிருக்கவும் வேண்டும். நீ அவரோடு உண்மையாய் ஐக்கியமாயிருந்தால் உன் சகோதரரோடும் ஐக்கியமாய் இருப்பாய்.

ஜெபம். எங்கள் பரம இராசாவே! உமக்குக் கீழ்ப்படிந்து உம்மைச் சேவிக்கிற நாங்கள் எங்களுக்குள் சண்டையின்றிச் சமாதானமாய்ப் பிழைக்க எங்களுக்கு அனுக்கிரகம் பண்ணியருளும். சமாதானப் பிரபுவாகிய தேவரீர் எங்களை முழுவதும் ஆட்கொள்ளுவீராக, சுவாமி, ஆமென்.

2 சாமு. 1, 1-27. அல்லது 2 பேது. 1, 1-11 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினேழாம் வாரம், செவ்வாய்.

பி. 288, 7. 8.

இந்தச் சிறியரிலொருவனை அற்பமாய் எண்ணாதேயுங்கள்; அதேனென்றால் அவர்களுடைய தேவ தூதர்கள் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சமுகத்தைப் பரமண்டலங்களில் எப்போதுந் தரிசிக்கிறார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மத். 18, 10.

பிள்ளைகளை இயேசுநாதர் விசேஷமாகச் சிநேகிக்கிறார். அவர்களுடைய மனத்தாழ்மையையும் உற்சாகமான நம்பிக்கையையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறார். பிள்ளைகளைப் பாவமான அற்பமாக எண்ணமாட்டார். அவர்களுடைய தெய்வதூதர்கள் பரமண்டலங்களிலிருக்கிற பிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள். அவர்களுக்காக ஆண்டவர் விசேஷமாகக் கவலைப்படுகிறார். அவர் பிள்ளையின் ஆத்துமத்தை இவ்வளவாக மதித்தால் அது எவ்வளவு விலையேறப்பெற்றதென்றறியலாம். நாம் இதை அடிக்கடி மறக்கிறோம். தாய் தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளைச் சிநேகித்து அவர்கள் இப்பூமியில் முன்னுக்கு வரும்படி பிரயாசப்பட்டாலும் பிள்ளைகளின் ஆத்துமத்துக்காகக் கவலைப்படுவது அபூர்வம். இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதேயுங்கள். பிள்ளையின் ஆத்துமம் இலேசாய் மோசம் போகக்கூடியதால் அதை நன்றாய்க் காக்கவேண்டும். பிள்ளைகளுக்குக் கண்ணும் காதும் வெகு கூர்மை. அவர்கள் கேட்ட ஒரு ஆகாத வார்த்தை அவர்கள் ஆத்துமத்துக்கு விஷமாகும். அவர்கள் பார்த்த ஒரு கெட்ட காரியம் தேவன் அவர்களில் ஆரம்பித்த நல்ல வேலையைப் பாழாக்கிவிடக்கூடும். அநேகம் பிள்ளைகள் இப்படி சிறுவயதில் கெட்டுப்போயிருக்கிறார்கள். பிள்ளைகளைக் கேட்டுக்கு நடத்துவோருக்கு ஐயோ.

தாய்தகப்பன்மாரும் வேலைக்காரரும் பிள்ளைகளுக்கு நல்ல முன்மாதிரியாய் இருந்தால் பெரிய நன்மை. பிள்ளைகளுக்கு ஜெபம் செய்ய ஆசையுண்டு. தாய் தகப்பன்மார் அவர்களோடு ஜெபம் செய்யவேண்டும். பிள்ளைகள் சந்தோஷத்தோடே இயேசுநாதருடைய சரித்திரத்தைக் கேட்க விரும்புகிறார்கள். தாய் தகப்பன்மார் அவர்களுக்கு அதைச் சொல்லவேண்டும். கர்த்தருக்கு ஊழியஞ்செய்து ஞான திரவியங்களைத் தனமடைய வழி இயேசுநாதரோடு ஜெபத்தில் பேசவேண்டிய விதத்தை அவர்களுக்குப் பெற்றோர் காட்டவேண்டும். இயேசுநாதர் அவர்களை எவ்வளவு சிநேகிக்கிறார் என்று அறிந்த நாம், நமது பிள்ளைகளும் இயேசுநாதரைச் சிநேகிக்கும்படி வார்த்தையினாலும் நடக்கையினாலும் வழிகாட்டுவோமாக.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! சிறு குழந்தைகளையும் உம்முண்டை அழைத்து அணைத்து அரவணைத்து ஆசீர்வதித்தீர். கர்த்தாவே, நாங்கள் எங்கள் பிள்ளைகளை உம்மண்டை கொண்டுவரவும் உமது அன்பையும் இரக்கத்தையும் அவர்களுக்குக் காண்பிக்கவும் எங்களை ஏவியருளும், சுவாமி, ஆமென்.

2 சாமு. 2, 1 11. அல்லது 2 பேது. 1, 12-21 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினேழாம் வாரம், புதன்.

பி. 211, [illegible]

நான் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதபடியாக்கிப் போடுமட்டும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றிதாய் அவர் தூதரில் எவனுக்காகிலும் எப்போதாகிலும் சொன்னதுண்டோ? அவர்கள் எல்லாரும் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களின் நிமித்தம் ஊழியத்துக்கு அனுப்பப்பட்ட பணிவிடை ஆவிகள் அல்லவோ? எபி. 1, 13. 14.

தேவனுக்கு ஊழியஞ்செய்வதே நமது அழைப்பு. நம்முடைய முழு ஜீவியமும் தேவ ஊழியமாயிருக்கவேண்டும். தேவதூதர் இந்த விஷயத்தில் நமக்குச் சிறந்த மாதிரி. நமக்கு நான் காலம் இன்று செய்துவருகிற ஊழியத்தை நினைப்போமாக. அவர்கள் சிம்மாசனத்தைச் சூழ்ந்த கணக்கில்லாத தூதர்கள் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிற நமது நிமித்தமாக ஊழியத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். இது மிகவும் அதிசயமான சங்கதி. தேவன் நமது இரட்சிப்புக்கென்று இவ்வாறு கவலைப்படுகிறார். இரட்சிப்பின் ஆலோசனையை மனுஷருக்குத் தெரிவிக்கும்படி அடிக்கடி தேவ தூதர்கள் காணப்பட்டார்கள். அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை நிறைவேற்றவும் அல்லது அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தவும் காணப்பட்டதுண்டு. ஆதியில் ஒரு தூதன் சுடர் ஒளியுள்ள பட்டயத்தால் பாவஞ்செய்த மனுஷரைப் பரதீசிலிருந்து துரத்திவிட்டான். இன்னொருவன் கெட்டுப்போன உலகத்துக்கு இரட்சகருடைய பிறப்பைத் தெரிவித்தான். கடைசி நாளிலோ எல்லாத் தூதர்களும் இயேசுநாதரோடு வானத்தின் மேகங்களில் வருவார்கள்.

இப்போது தேவன் அவர்களை நம்முடைய ஊழியத்துக்கு அனுப்புகிறார். நீ அவர்களைப் பார்க்காவிட்டாலும் அவர்கள் உன்னை எங்கும் சூழ்ந்திருக்கிறார்கள். கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சுற்றிலும் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறான். இப்படித் தூதர்கள் தேவ சித்தத்துக்கிசைய

நன்மை நடத்தி நாம் [illegible] இரட்சிப்பை யடைவதற்கு நமக்கு உதவியாயிருக்கிறார்கள். இதனுடைய குணப்பாட்டு மோட்சத் தைச் சுதந்தரிக்கப் போகிற பாவிகளின்மேல் இவர்கள் சந்தோ ஷங் கொண்டாடுகிறார்கள்.

ஜெபம். தயாபரனாகிய ஆண்டவரே! தேவரீர் உண்டாக்கின மனுமக்கள் எல்லாரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைத் தாக உமது பரிசுத்த தூதரை அனுப்பி அவர்களைக் காப்பாற்றி வழி நடத்தி வருகிறதினாலே உமக்குத் துதியும் புகழ்ச்சியும் உண்டாவதாக, சுவாமி, ஆமென்.

2 சாமு. 5, 1-12. அல்லது 2 பேது. 2, 1-11. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பதினேழாம் வாரம், வியாழன்.

[illegible] 240, 1. 2.

கர்த்தாவே, தேவரீர் என் அடைக்கலமாயிருக்கிறீர்; உன்னதமான வரை உனக்குத் தாபரமாக வைத்தாய். பொல்லாப்பு உனக்கு வராமலும், வாதை உன் கூடாரத்தை அணுகாமலும் இருக்கும். வழிகளில் [illegible] வழிகளில் எல்லாம் உன்னைக் காக்கும்படிக்கு உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கற்பிப்பார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் கைகளில் உன்னை ஏந்திக்கொண்டு போவார்கள். சங். 91, 9-12.

ஆண்டவர் உனக்காகச் சம்மனசுகளைக் [illegible] அனுப்புகிறார். உன் சரீரத்துக்கு நேரும் நாலாவித ஆபத்துகளினின்றும் உன்னைத் [illegible] அவர்களைக்கொண்டு விலக்கிக் காப்பாற்றுகிறார். ஆண்டவரே, [illegible] உன் மனசாட்சியாகவே, உனக்குத் தாபரம். நீ அவரை நம்பினால் ஒரு பொல்லாப்பும் உன் கூடா ரத்தை அணுகாது. [illegible] தேவனை நம்புவது எப்படியெனில் [illegible] [illegible] வழிகளிலே [illegible] வேண்டாம். நாம் [illegible] [illegible] அவர் [illegible]. நீ அவரை நம்பினால் [illegible] செய்வார். [illegible] நீக்குவார். அல்லது [illegible] எல்லாவற்றையும் [illegible] உனக்குப் [illegible] கொடுப்பார். அப்போது [illegible] ஆசீர்வாதமாக [illegible] [illegible] [illegible] அவர்களை அனுப்பி, அவர்கள் உன்னைக் காக்கும்படிக்கு அவர்களுக்கு உத்தரவு பண் ணுவார். இவ்வாறு தேவன் [illegible] [illegible] சொல்லுகிறது. [illegible] தேவனு டைய தூதர்கள் [illegible] [illegible]. தேவனுடைய

தூதன் ஒருவன் எருசலேமில் [illegible] போது [illegible] பேதுருக்குக் காவல் விட்டின் கதவைத் திறந்துவிட்டான். [illegible] [illegible] சமுத்திரத்தில் காப்பாற்றினான். இந்தத் தூதர்கள் உன்னைச் சூழ இருக்கிறார்கள். நீ இவைகளைக் கவனி. அநேகமாக நாம் அநேக மோசங்களுக்குத் தப்பியிருக்கிறோம். அநேகமாக நமக்கு அழுக்கடி ஒத்தாசை வந்திருக்கிறது. அவிசுவாசிகள் அது தற் செயலாய் நடந்தது என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட வேளைகளில் ஆண்டவருடைய கையைப் பார்த்துணராத இந்த மனுஷர் நிர்ப்பாக்கியர்தான்.

ஜெபம். பரம பிதாவே! உமது இரக்கத்தினால் எங்களை எல்லா மோசங்களுக்கும் விலக்கிக் காப்பாற்ற உமது தூதரை அனுப்புகி றீர். நாங்கள் அவர்களைப் பார்க்காவிட்டாலும் அவர்களுடைய ஒத்தா சையை நம்பி ஒன்றுக்கும் பயப்படாமல் உமது [illegible] பாக்கியமான [illegible] [illegible] ஜீவனம் பண்ண எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமென்.

2 சாமு. 7, 1-23. அல்லது 2 பேது. 2, 12-22. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பதினேழாம் வாரம், வெள்ளி.

[illegible] 116, 1. 2,

அவர் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து தமக்கும் பழக்க மானபடி ஓய்வுநாளில் ஆலயத்துக்குள் பிரவேசித்து வாசிக்க எழுந்திருந் தார். லூக். 4, 16.

இயேசுநாதருடைய தாய்தகப்பன்மார் வருஷந்தோறும் [illegible] பண்டிகைக்கு எருசலேமுக்குப் போவார்கள். தேவாலயத்தில் பண்டிகை கொண்டாடுவது ஒரு கீர்த்தியான வழக்கம்தான். இயேசுவின் பெற்றோருடைய வீட்டிலே அந் தக் [illegible] ஒருக்காலும் மறக்கவில்லை. அவர் தமக்குப் பழக்கமான படி ஓய்வுநாளில் ஆலயத்துக்குள் பிரவேசித்தார். நாமும் அவ ரைப் [illegible] தேவனுடைய [illegible] [illegible] [illegible] என் [illegible] அநேகநாளில் [illegible] [illegible] என்று சொல்லவேண்டிய [illegible] நீயும் உன் வீட்டில் [illegible] திருநாளில் கோவிலுக்குப் போய் தேவ வசனத்தைக் கேட்டு பழகியிருக்கிறீர்களா? ஒரு மொட் டில் [illegible] ஒருவரும் [illegible] [illegible] [illegible] தே வாலயத்துக்குப் போவார். தாய்தகப்பன்மார் தங்கள் பிள்ளை களுக்கு இளமையில் நல்ல [illegible] [illegible] [illegible] அவசியம். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற பழ

மொழியும் இருக்கிறது. சிலுவையின் கல்வி இலேசிலே [illegible]ல்ல
வா? ஒரு முழு வளர்ந்த [illegible] வெயிலும் பொறுமையும் வேண்டும். பின்னாக
ஆழ் பக்தியின் வளர்ச்சியும் [illegible] கர்த்தருடைய பயமும்
தேவை. இதைப் பரத்திலே பிள்ளைகளை வளர்க்கத்தான் பெற்றோர்
இருக்கிறார்கள். ஒரு பிள்ளை வளர்ந்து உலகத்திலே அநேக வித
மான வழக்க பழக்கங்களைப் பார்த்தாக்கொள்ளும். ஆயினும்
சிறு பிராயத்தில் கற்றதோ மனதில் பதிந்திருக்கும். பெரியவனான
பிறகும் அடிபடக் கேட்கும் கோவில் மணி தன்னைத் தேவால
யத்துக்கு அழைக்கிறதென்று நினைப்பான். அப்படி உன்னை
அழைத்தால் நீ சந்தோஷத்தோடு போ. வந்து உன் தேவனுடைய
கர்த்தர் உன்னோடு பேசுவதைக் கவனித்தோடு கேள். அப்போது
நீ ஜெபத்தில் கேட்பதைக் கர்த்தர் கேட்பார் என்கிற நம்பிக்கை
உனக்கு உண்டாகும்.

ஜெபம். எங்கள் அருமையுள்ள இரட்சகரே! மெய்த்தேவ
பக்தியையும் தேவபயத்தையும் எங்களில் உண்டாக்கும். நாங்களும் எங்கள்
பிள்ளைகளும் [illegible] தேட அறிவோடே [illegible] அடைய எங்களுக்கு
உமது குணத்தைக் கட்டளையிட்டருளும். சுவாமி, ஆமேன்.

2 சாமு. 12, 1-10 அல்லது 2 பேது. 3, 1-9 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினேழாம் வாரம், சனி.

சங். 133, 9. 10.

[illegible]னம் ஆத்துமாவுக்கு தொடர்ந்து [illegible] எழுதப்ப
டுகிறது. [illegible] அரமனைக்கு எதிரே [illegible] நீதியாசனத்தின் முன்பு அதிகா
ரத்தினாலே [illegible] மரித்தோரி
லிருந்து எழுப்பப்பட்டதினால் [illegible] கடந்துகொள்
ளுவதற்கு ஞானஸ்நானத்தினாலே அவரோடே கூட மரணத்துக்குள்
அடக்கம்பண்ணப்பட்டோம் என்பதே.

[illegible] சாஸ்திரியார் இவ்வசனத்தைப் பின் வருமாறு
விவரிக்கிறார். நாம் ஞானஸ்நானத்தில் இரண்டு விதமான தீர்ப்
புப் பெற்றுக்கொண்டோம். ஒன்று மரணத்தீர்ப்பு, ஒன்று ஜீவ
தீர்ப்பு. நம்முடைய பழைய மனுஷனை பராபரன் ஞானஸ்நா
னத்தில் மரணத்துக்குள்ளாகத் தீர்த்திருக்கிறார். இந்தத் தீர்ப்
பைப் பராபரன் நமது சாகும்பட்டும் நிறைவேற்றி வருகிறார். பல
வீனமுள்ள [illegible] பழைய மனுஷனை ஒடுக்கிக் கடைசியில்
அவனை முழுவதும் கொன்று ஒழித்துப் போடுகிறார். நாமோ அவ

ருடைய மனஸ்தாபத்தினாலும் தபசினாலும் பராபரனுடைய வல்ல
மையான கைக்குக் கீழாக நம்மைத் தாழ்த்த வேண்டும். கிறிஸ்து
மரணத் தீர்ப்புப்பெற்று மரித்து அடக்கம் பண்ணப்பட்டது
போல நம்முடைய பழைய மனுஷனும் சாகும்படி ஞானஸ்நானத்
தில் மரணத் தீர்ப்புப் பெற்று ஆயிற்று.

இயேசுநாதர் குற்றவாளி என்று மனுஷரால் தீர்ப்புப்
பெற்றுத் தள்ளப்பட்டார். மறுபடியும் தேவனால் நீதிமான்
என்று தீர்ப்புப் பெற்று (1 தீமோ. 3, 16) உயர்த்தப்பட்டு என்
றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிற நல் மேய்ப்ப
ரானார். இயேசுவை உயர்த்தின இந்தத் தீர்ப்பே நமக்கு ஜீவ
தீர்ப்பு. எனெனில் அந்தத் தீர்ப்பினாலே நமக்கு மேய்ப்பரானார்.
அதினாலே இரட்சிக்கப்பட்டோம். கர்த்தர் என் மேய்ப்பர், நான்
தாழ்ச்சி அடையேன் என்று சொல்லும்படியான பாக்கியத்
தைப் பெற்றோம். இந்த நம்பிக்கையோடு நல் மேய்ப்பரின்
கீழ்ப் பிழைக்கும் பாக்கியமே நவமான ஜீவன்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! உமது வாக்குத்தத்தத்தின்
படி எங்களை மீட்டு நித்திய பாக்கியத்தை எங்களுக்குக் கொடுக்கத் தயாரா
யிருக்கிறீர். கர்த்தாவே, நாங்கள் உம்மோடு நிலைமையில் செத்து உம்
மோடு பிழைத்து நித்திய காலமாய் ஆண்டுகொள்ள எங்களுக்குக் கிருபை
செய்யும், சுவாமி, ஆமேன்.

2 சாமு. 15. 1-30 அல்லது 2 பேது. 3, 10-18 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினெட்டாம் வாரம், ஞாயிறு.

சங். 189, 1. 2.

அவர்களில் நியாய சாஸ்திரி ஒருவன் அவரைச் சோதித்து: போ
தகரே, நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை பெரியதென்று கேட்
டான். இயேசு அவனுக்குச் சொன்னதாவது: உன் பராபரனாகிய கர்த்த
ரை உன் முழு இருதயத்தினாலும் உன் முழு ஆத்துமத்தினாலும் உன்
முழு விநவினாலும் சிநேகிப்பாயாக; இது முதலாம் பெரிய கற்பனையா
யிருக்கிறது. அத்தோடொத்த இரண்டாங் கற்பனையோ, உனக்கு அடுத்
தவனை உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்பது. இவ்விரண்டு கற்பனைக
ளில் எல்லா நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் தொங்குகிறது
என்றார். மத். 22, 35-40.

இயேசுவுக்கும் அவருடைய இராச்சியத்துக்கும், பூர்வ கா
லத்தில் யூதரும் அஞ்ஞானிகளும், அக்காலத்தில் பரிசேயரும்
சதுசேயரும் விரோதஞ் செய்தார்கள். அந்த சத்துருக்கள்

கூடினாலும் கடைசியில் ஜெயங்கொண்டது கிறிஸ்துவும் அவரது இராச்சியமும்தான். "கலிலேயனே, நீயே ஜெயித்தாய்" என்று முன் ஒருவன் சொன்னதுபோல் இறுதிநாளில் எல்லாரும், சபிக்கப்பட்டவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களும் அப்படிச் சொல்லுவார்கள்.

சதுசேயர் தோற்றுப்போனவுடனே ஒரு பரிசேயன் கர்த்தரை நோக்கி: போதகரே, நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை பெரியதென்று கேட்டான். இது புத்தியீனமான கேள்வியல்லவா? எல்லாக் கற்பனைகளும் தேவனையும் பிறத்தியானையும் நேசிக்கிற நேசத்தையே கேட்கிறது. நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல் முழு இருதயத்தினாலும் முழு ஆத்துமத்தினாலும் முழு நினைவினாலும் நேசிக்கிற நேசமே. நியாயத்தீர்ப்பின் நாளில் ஒருவனும் தேவனுக்கு முன் நீதிமான் என்று வெளிப்படான். அப்போது அன்புள்ள ஆண்டவரைத் தவிர நமக்கு வேறே கதி இல்லை. அவர் நம்மை முந்தி நேசித்தபடியினால் நாமும் அவரை நேசிப்போமாக. அந்த நேசத்தினால் நாம் இந்த இரண்டு கற்பனைகளையும் கைக்கொள்ளப் பெலனடைவோம்.

ஜெபம். இரக்கமுள்ள இரட்சகரே! எங்கள் குளிர்ந்துபோன இருதயங்களைப் பார்த்து அவற்றில் உமது அன்பின் தீயை மூட்டியருளும். உமது அன்பே எங்களுக்குப் பிரமாணமாவதற்கு எங்கள் உள்ளத்தை உருக்கியருளும், சுவாமி, ஆமென்.

2 சாமு. 16, 5-23 அல்லது சங். 69 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பதினெட்டாம் வாரம், திங்கள்.

ப. 189, 3. 4.

நீங்கள் சகலத்திலும் சகல வசனத்திலும் சகல அறிவிலும் இயேசு கிறிஸ்துவுக்குள் ஐசுவரியவான்களானீர்கள் என்று அவருக்குள் உங்களுக்கு அளிக்கப்பட்ட பராபரனுடைய கிருபைக்காக, எப்போதும் என் பராபரனை உங்கள் நிமித்தம் ஸ்தோத்திரிக்கிறேன். ஏனென்றால் உங்களுக்கு ஒரு வரமும் குறைவாயிராமல், நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வெளிப்படுதலுக்குக் காத்திருக்கத்தக்கதாய், கிறிஸ்துவின் சாட்சி உங்களில் திடப்பட்டது. 1 கொரி. 1, 4-7.

பெரிய மோசமுள்ள ஒரு செல்வம் உண்டு. அது ஆத்துமத்தைச் சிறைப்படுத்தி இருதயத்தில் அநேகம் கெட்ட ஆசைகளை உண்டாக்கி மனுஷரை அழிவுக்கும் கேட்டுக்கும் கொண்டு

போகிறது. அநேகம் பேர் அதைப் பெரிய பாக்கியமென்றெண்ணி ஓயாமல் அதை நாடித் தேடுவார்கள். அது மனுஷருடைய அகத்தையும் ஆவியையும் கெடுக்கிற விக்கிரகமாகிய உலகப்பொருள்தான்.

இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வாதத்தைக் கொடுக்கும் இன்னொரு செல்வம் உண்டு. அது மற்றப் பொருட்களைப் போல் சேர்க்கப்படுவதில்லை. தேவனே அதைக் கிருபையாய் கொடுக்கிறார். அது ஏழைகளைச் சகல வசனத்திலும் சகல அறிவிலும் ஐசுவரியவான்களாக்கும் தேவ கிருபைதான். பரிசுத்தாவியின் வெளிச்சத்தினாலே இயேசுநாதரையும் நித்திய மோட்சத்துக்குப் போகிற வழியையும் கண்டுபிடித்தவனே ஐசுவரியவான். பாவத்தின் வழியத்துக்கு நீங்கலாகக் கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கத்தைக் கேட்டு நீதியின் கனிகளைக் கொடுக்கும் சபையே பரம செல்வமுள்ளது. பெரியோர் சிறியோர் தேவ வசனத்தைச் சிநேகித்துப் படித்து அதின் இரகசியங்களை எங்கே ஆராய்ந்து அறிந்துகொள்ளுகிறார்களோ அந்த வீடே பாக்கியமுள்ளது. நீ ஏழையாய் மரித்தாலும், உன் பிள்ளைகள் இயேசுநாதரை அறிந்திருந்தால் நீ உற்சாகத்தோடு மரிக்கலாம். விசுவாசிக்கிற ஒரு கிறிஸ்தவன் தரித்திரனல்ல. தான் இங்கே இன்னும் அடையாத நன்மைகளை இயேசுகிறிஸ்துவின் நாளிலே அடைவான். அப்போது இரட்சகரே அவனுக்கு மோட்சத்தைக் கொடுப்பார். ஆகையால் ஒழியாத செல்வங்களைச் சேர்த்துக்கொள்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பிதாவே! சகல நல்ல ஈவும் குறைவற்ற சகல வரமும் உம்மிடத்திலிருந்து வருகிறது. ஆதலால் நாங்கள் உம்மை நோக்கித் தேவரீர் எங்கள் ஏழை ஆத்துமங்களைப் பார்த்து [illegible] உமக்குள் நித்திய செல்வத்தைத் தந்தருளும் என்று மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டை இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் கேட்டருளும், சுவாமி, ஆமென்.

2 சாமு. 17, 1-16 அல்லது 1 யோ. 1, 1-10 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பதினெட்டாம் வாரம், செவ்வாய்.

ப. 189, 5. 6.

பரிசேயர் கூடியிருக்கையில் இயேசு அவர்களை: கிறிஸ்துவைக்காக உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது; அவர் யாருடைய குமாரனாயிருக்கிறார் என்று கேட்டார்! அவருடனே: தாவீதினுடைய குமாரன் என்றார்கள். அப்பொழுது அவர் இவர்களுக்குச் சொன்னதாவது: இப்போதும் தாவீது ஆவியினாலே அவரை ஆண்டவரென்று சொல்லுகிறதெப்படி? கர்த்தர்

என் ஆண்டவருடனே: நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதபடியாக்கிப் போடுமட்டும் நம்முடைய வலதுபாரிசத்திலே உட்காரும் என்று சொன்னாரே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொன்னானேயாகில், இவர் அவனுடைய குமாரனாயிருக்கிறது எப்படி என்றார். மத். 22, 41-45.

வேதபாரகர் இயேசுநாதரைப் பேச்சில் சிக்கப்பண்ண எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் முடியவில்லை. அவரோ அவர்களை வெகு சீக்கிரத்தில் மௌனமாக்கினார். கிறிஸ்துவைப்பற்றி உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது. அவர் யாருடைய குமாரன் என்று கேட்டார். வெகு நாளாக இஸ்ரவேலர் தங்கள் மெசியாவை எதிர்பார்த்திருந்தார்கள். அவர் வந்து இஸ்ரவேலின் சத்துருக்களையெல்லாம் நிர்மூலமாக்கி இஸ்ரவேலுக்கு எல்லா இராச்சியங்களையும் சொந்தமாக்குவார் என்றும் அவர் அளவற்ற மகிமையோடு பூச்சக்கரத்தை முழுவதும் ஆளுவார் என்றும் நினைத்தார்கள். அவரை வெறும் மனுஷன் என்று எண்ணினார்கள். அவர் வெறும் மனுஷனல்ல, அவர் தேவகுமாரன். ஆகையால் அவருடைய இராச்சியம் இந்த லோகத்துக்குரியதல்ல. இந்தப் பூமியில் சிலுவையே அவருடைய சிங்காசனம், மரணமே அவருடைய கதி. இப்பேர்ப்பட்ட கிறிஸ்து உனக்குப் பிரியமா? இவர் ஒருவரே சாத்தான் பொல்லாப்பை வென்று பொல்லாருக்காகச் சென்று எல்லாவற்றுக்கும் மேலான ஒரு நாமத்தைச் சம்பாதித்தார். இவரைத் தாவீது ஆவியினால் ஆண்டவர் என்று சொன்னான். நீயும் அவரைப் பணிந்துகொண்டால் அவர் தாம் சம்பாதித்த பாக்கியத்தை உனக்கும் கொடுப்பார்.

செபம். எங்கள் பரம இராசாவே! தேவனும் மனுஷனுமானவரே, மனுஷீகத்தையும் தெய்வீகத்தையும் ஒன்றாய்ச் சேர்த்துக்கொண்டவரே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் பணிகிறோம். உம்மை இப்போதும் எப்போதும் சகல காலங்களிலும் ஸ்தோத்திரிப்போம். தாவீதின் குமாரனே, ஓசியன்னா. கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதங்களில் ஓசியன்னா, சுவாமி, ஆமென்.

2 சாமு. 18, 1-33. அல்லது 1 யோ. 2, 1-17. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பதினெட்டாம் வாரம், புதன்.

பி. 189, 7. 8.

அவர்களுடனே: நீங்களோ என்னை ஆர் என்று சொல்லுகிறீர்கள் என்றார். அதற்குச் சீமோன்பேதுரு பிரத்தியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள பரபரனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாயிருக்கிறீர் என்றான். இயேசு

பிரத்தியுத்தரமாக அவனுக்குச் சொன்னதாவது: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; சதையும் இரத்தமும் அல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்றார். மத். 16, 15-17.

நீர் ஜீவனுள்ள பரபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்கிற அறிக்கை திருச்சபையின் [illegible] அஸ்திவாரம். இந்த அஸ்திவாரம் திருச்சபைக்கு இருப்பதனால் அது பிசாசின் சகல தந்திரங்களுக்கும் லோகத்தின் [illegible] எதிர்த்து நிற்கும். இது நமக்கு அநுபோகத்தினால் தெரியும். ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுக்கு இயேசுகிறிஸ்து எல்லா சாஸ்திரங்களிலும் தமது சபைக்கு அடைக்கலமும் கோட்டையுமாயிருந்து, உண்டாகும் எல்லா யுத்தங்களிலும் அதைக் காப்பாற்றுவார்.

ஆகிலும் அநேகர் இந்த அஸ்திவாரத்தை விட்டுவிட்டது மெத்தப் பரிதாபம். அவர்கள் இயேசுவைக் கனம்பண்ணினாலும் அவர் தேவ குமாரனல்ல, மனுஷ குமாரன்தான் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு இரட்சிப்பு இல்லை. குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணான். பரபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இரட்சகராக அனுப்பினார் என்று விசுவாசிக்கிறவனுக்கு மாத்திரம் நித்திய ஜீவன் உண்டு. தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மை எல்லாப் பாவமுமறச் சுத்திகரிக்கிறது. ஆகையால் இந்த அறிக்கை செய்த சீமோனைப் பாக்கியவான் என்று இயேசுநாதர் சொல்லுகிறார். இந்த அறிக்கை நம்முடையதானால் நாமும் பாக்கியவான்கள். நாம் இப்படி நம்முடைய இரட்சகரை அறிக்கையிடும்படி வானத்திலிருந்து நமக்கு வெளிச்சம் வரவேண்டும். மாம்சமும் இரத்தமும் பரம இரகசியங்களை அறிந்துகொள்ளமாட்டாது.

இருதயத்திலுள்ள விசுவாசமின்றி அறிக்கையிடும்படி நமக்குக் கூடியதுமில்லை. ஆகையால் பரம பிதாவானவர் உனக்கு வெளிச்சத்தையும் பெலனையும் கொடுக்கும்படி அவரை வேண்டிக்கொள்.

செபம். எங்கள் பரம பிதாவே! ஒருவரும் சேரக்கூடாத வெளிச்சத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மையும் தேவரீர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் நாங்கள் அறிந்துகொள்ளத் தெரிய, தேவரீர் எங்களுக்கு முன்பாகவும் அறிக்கையிடும்படி உமது பரிசுத்த ஆவியை எங்களுக்குத் தந்து உமது மகிமையை எங்களுக்குக் காண்பித்தருளும், சுவாமி, ஆமென்.

2 சாமு. 19, 1-23. அல்லது 1 யோ. 2, 18-29. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினெட்டாம் வாரம், வியாழன்

ஞ. 260, 1-4.

நாங்களோ யூதருக்கு இடறலும் கிரேக்கருக்குப் பைத்தியமுமாகிய சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். ஆனால் அழைக்கப்பட்டிருக்கிற யூதருக்கும் கிரேக்கருக்குமோ தெய்வ வல்லமையும் தெய்வ ஞானமுமாகிய கிறிஸ்துவைத் தானே. 1 கொரி. 1, 23, 24.

இரட்சகருடைய அன்பு அதிசயமானது. அவரைப்பற்றிய பிரசங்கமும் அவசியமானது. கிரியையின் பேரில் பெருமை பாராட்டும் யூதர்களுக்கும் ஞானத்தின்பேரில் மேன்மை பாராட்டும் அஞ்ஞானிகளுக்கும் அப்போஸ்தலர் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். அவர் அவர்கள் கண்களுக்கு முன்பாக சித்தரிக்கப்பட்டார். தற்போதும் தேவ வசனம் சுத்தமாய்ப் போதிக்கப்படும் இடங்களில் புத்திசாலிகளும் புத்தியீனரும் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கத்தையே கேட்கிறார்கள். இந்தப் பிரசங்கமன்றி வேறொன்றும் மனுஷனுக்கு வேண்டிய ஆதாரத்தைத் தர முடியாது. இதுவே இருதயத்துக்குப் பாக்கியத்தையும் அமைதலையும் உண்டுபண்ணுகிறது. ஏனென்றால் சுவிசேஷம் தன்னை விசுவாசிக்கிற எவனையும் இரட்சிக்கக்கூடிய தெய்வ பலமாம். அதிலே இயேசு கர்த்தர் உனக்காகவும் மரித்தார் என்கிற சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கத்தைக் கேட்கிறாய். இதுவே கெட்டுப்போனவர்களுக்கு நற்செய்தி. இதைக் கேட்டுக் கோடாகோடி ஆத்துமாக்கள் கொல்கதா மலையில் பார்க்கப்பட்ட இரட்சகருடைய அன்பை நோக்கிச் சமாதானமடைந்திருக்கிறார்கள்.

அநேகரோ இந்தப் பிரசங்கத்துக்கு இடறலடைந்து, அது பைத்தியம் என்று சொல்லுவார்கள். சிலுவையில் அறையுண்ட இயேசு தங்களுக்குத் தேவையில்லை, ஏனென்று கேட்டால், கிறிஸ்துவின் சிலுவை அவர்களுக்கு அவர்கள் பாவங்களை நினைப்பூட்டிக் குணப்படவேண்டும் என்று சொல்லுகிறது. இதினிமித்தம் சிலுவையின் வசனம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தெய்வ பெலனாயிருக்கிறது.

ஜெபம். மாசற்ற ஆட்டுக்குட்டி, நீர் சிலுவையில் தொங்கி, எல்லார் கடன் செலுத்தி இரத்தத்தாலே பொங்கி, பொல்லாப்புப் பசாசதான் வென்றீர். வெற்றியுடனே சென்றீர். அடியார் மேலிரக்கும், நீர் சமாதானம் தரும். சுவாமி, ஆமென்.

2 சாமு. 24, 1-25. அல்லது 1 பேது. 3, 1-10 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பதினெட்டாம் வாரம், வெள்ளி.

ஞ. 260, 3. 4.

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின; இதோ, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தமக்கு ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்குக் கொடுத்த பராபரனாலே உண்டாயிருக்கிறது. ஏனென்றால் பராபரன் கிறிஸ்துவுக்குள் இருந்து, [illegible] பாவங்களை அவர்கள் மேல் சுமத்தாமல் [illegible] ஒப்புரவாக்கிக்கொண்டு, ஒப்புரவாக்குதலின் வசனத்தை [illegible] வைத்தார். 2 கொரி. 5, 17-19.

ஆதாமின் பாவத்தினால் நாம் இழந்துபோன தேவ சாயலையும் தேவ கிருபையையும் கிறிஸ்து [illegible] தேவனுக்கு முன் நாம் புதுச் சிருஷ்டிகளாகிறோம். பழையவைகள் ஒழிந்துபோயின. இதோ, எல்லாம் புதிதாயிற்று. கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசத்தினாலும் மறுஜென்ம முழுக்காகிய ஞானஸ்நானத்தினாலும் இந்த மறுபிறப்பு நடக்கிறது.

இது தேவன் செய்த அற்புதம். நம்முடைய புண்ணியத்தால் இது நடக்கவில்லை. தேவன் தம்முடைய குமாரனின் இரத்தத்தினால் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொண்டு ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை நமக்குக் கொடுத்தார். ஒப்புரவாக்குதல் என்னவென்றால் பரிசுத்த தேவன் தமது கோபத்தை விட்டு, நமது பாவங்களையும் தமது சாபத்தையும் தமது குமாரன் மேல் சாத்தி நமக்கோ [illegible] செய்ததேயாம் ஒப்புரவு. இயேசுநாதர் நமக்காக [illegible] விடப்பட்டார். அவர் நமக்காக [illegible] கிறார். இப்[illegible] பாவ [illegible] இரத்தம் சாபக் [illegible] மனிதரின் அனைவருடன் [illegible] போயிற்று.

ஒவ்வொரு மனுஷனும் இக்கிருபையைப் பெறும்படி தேவன் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை ஏற்படுத்தினார். அந்த ஊழியத்தைப் பெற்றவர்கள் பராபரனோடே ஒப்புரவாகுங்கள் என்று பிரசங்கித்து வருகிறார்கள். அவர்களைக் கேட்கிறவர்கள் தேவ பரம சமாதானத்தை அடைவார்கள்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! எங்கள் பாவங்களாகிய கடன்களையும் இரட்சிக்க ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைக்கொண்டு எங்களை அழைக்கிறீர். அதற்காக உமக்குத் தோத்திரம். நாங்கள் உமது வசனத்தினிடத்தில் [illegible] உம்மோடு ஒப்புரவாகும்படி எங்களுக்குக் கிருபை செய்தருளும். சுவாமி, ஆமென்.

[illegible] 29, 1-11. அல்லது 1 பேது. 3, 11-24. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பதினெட்டாம் வாரம், சனி.

தி. 260, 5. 6.

நற்கருணை ஆகிய தேவத்திரவியம். கர்த்தருடைய இராப்போசனமென்ன? அது கர்த்தருடைய சுத்தாங்க ரூபங்களின் குணங்களின் கட்டோடு ஜீவியவர்களாகிய நம் அப்பத்திற்குள்ளும் இரசத்திற்குள்ளும் இருக்கப்பட்ட அவருடைய மெய்யான சரீரமும் இரத்தமுமாயிருக்கிறது.

உன் காவலிலிருக்கிற உன் பாதுகாப்பைக் கருத்தாய்த் தேடு. நீ நித்திய ஜீவனைப் பிடித்துக்கொள். நீ கர்த்தருடைய இராப்போசனத்தில் சேரும்போது நீ இயேசுவின் சுத்த இருதயத்தோடும் விசுவாசத்தோடும் சேரவேண்டும். பரிசுத்த தேவன் உன்னைத் தம் பந்திக்கு அழைக்கிறார். நீ வாங்கப்போகிற போசனம் பரிசுத்த போசனம். ஜீவனுடைய அப்பம் உனக்குக் கொடுக்கப்படுகிறது. இயேசுதாமே அதைக் கொடுக்கிறார்.

நாங்கள் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாங்கள் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா, என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான். ஆகையால் அந்த அப்பமும் இரசமும் வெறும் அடையாளமாயிராமல், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமும் அவருடைய இரத்தத்தின் ஐக்கியமுமாம். நாம் அப்பத்தையும் இரசத்தையும் மாத்திரம் பானம்பண்ணுகிறோம். ஆகிலும் அவைகளைப் புசித்துக் குடிக்கிறவன் ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவினுடைய சரீரத்திலும் ஜீவ பானமாகிய அவருடைய இரத்தத்திலும் பங்கு பெறுகிறான். இப்படித் திரு இராப்போசனம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளையின்படியே விசுவாசிகளாகிய நாம் அப்பத்திற்குள்ளும் இரசத்திற்குள்ளும் தின்றுகுடிக்கிற அவருடைய மெய்யான சரீரமும் இரத்தமுமாயிருக்கிறது.

நாம் சேரணைக்காரரைப்போல பாத்திரத்தை அகற்றி, ஆசீர்வதிக்கப்பட்ட அப்பத்தை வணங்கமாட்டோம். நாம் ஒரே அப்பத்தைச் சாப்பிட்டு ஒரே பாத்திரத்தில் குடிக்கிறதினால் ஒரே சரீரமாயிருக்கிறோம். இப்படி இராப்போசனத்தினால் கிறிஸ்துவுக்கும் நமக்கும், நம்மில் ஒருவரோடொருவருக்கும் உறுதியான ஐக்கியம் உண்டாகிறது.

செபம். இரக்கமுள்ள இயேசுவே! பிசாசு [illegible] நம்முடைய பின்னோர்களை மறுபடியும் சேர்க்க, உமது திரு இரத்தத்தைச்

சிந்தினீர். எங்களுக்கும் மெய்யான ஐக்கியத்தை உண்டாக்கும். நீர் ஒருவரே எங்கள் மீட்பரும் மெய் ஆகாரமுமானவராய், ஆமென்.

1 சாமு. 30, 1-30. அல்லது 1 கொ. 4, 1-6. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பத்தொன்பதாம் வாரம், ஞாயிறு.

தி. 263, 1. 2.

இதோ, படுக்கையின்மேல் கிடக்கிற ஒரு திமிர்வாதக்காரனை அவனண்டைக்குக் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனுடனே: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்றார். மத். 9, 2.

எல்லாவற்றிலும் பெரிய நன்மையும் ஆறுதலும் பாவமன்னிப்புத்தான். அதை அசட்டைபண்ணித் தன் பாவங்களில் நிற்கிறவன் நித்திய மரணத்திலே விழுவான், பாவமன்னிப்பை நம்பி அதனால் ஆறுதலடைகிறவன் சமாதானத்தோடே இவ்வுலகத்தை விட்டு நித்தியத்தில் பிரவேசிப்பான்.

பாவமன்னிப்பு உன்னுடையதாயிருக்கப்படாமல் மட்டு. மிக்குப்போகாதே இருதயமே, உன் பாவங்கள் சிவேறிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விசுவாசிக்கிறவன் மாத்திரம் பாவமன்னிப்பைப் பெறுவான். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனுடனே, மகனே, திடன்கொள் உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொன்னார். மனுஷருடைய கண் பார்க்கக்கூடாத அந்த விசுவாசத்தைக் கர்த்தருடைய கண் கண்டது. இயேசுவின் கண்கள் உன் இருதயத்தைக் காணும். அதிலே உன் விசுவாசமுண்டோ இல்லையோ என்று அவருக்குத் தெரியும். அவர் திமிர்வாதக்காரனுடைய இருதயத்தை நோக்கி, அவன் வாயினால் செய்யாத ஜெபத்தையும் கேட்டார். அவனுடைய சரீர மாத்திரம் அல்ல, அவனுடைய ஆத்துமாவும் வியாதிப்பட்டிருந்தது. அதற்குத் தகுந்த மருந்தை கொடுப்பாரில்லை. அதைக் கர்த்தர் முதலில் கொடுத்து அப்புறம் அவனுக்குச் சரீரத்தையும் சொஸ்தப்படுத்தினார். நீயும் முதல் முதல் உன் ஆத்துமத்தில் சுகமடைய வேண்டும். அப்போது உன் சரீரமும் நித்திய சுகத்தை அடையும்.

இருதயம் பெற்ற ஒரு விசுவாசி தனக்கு நேரிடும் துன்பமானது சிறுமையைத் தண்டனையாக அல்ல, தன்னைத் தாழ்மைப்படுத்துகிற தேவனால் அனுப்பப்பட்டது என்று எண்ணுவான். நம்மைத் தம்மண்டை இழுக்க இயேசுநாதர் நமக்குத் துன்பத்தை அனுப்புகிறார். அந்தத் துன்பத்தில் நாம் அவரண்டை போனால் நம்முடைய துன்பம் இன்பமாகும்.

ஜெபம். எங்கள் பெலவீனங்களை எடுத்துக்கொண்டு எங்கள் நோவுகளைச் சுமந்த தேவாட்டுக்குட்டியே! எங்கள்மேல் இரக்கும். எங்கள் ஆத்துமத்தின் பாரத்தையும் எங்கள் சரீரத்தின் நோவையும் பார்த்து எங்களை இரட்சியும் சுவாமி! ஆமென்.

1 இராசா. 2, 1-12. அல்லது சங். 6. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பத்தொன்பதாம் வாரம், திங்கள்.

பா. 263, 3. 4.

முந்தின நடக்கையின்படி மோசம்போகும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் மனதின் ஆவியிலே புதிதாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் பராபரனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட நவமான மனுஷனைத் தரித்துக்கொள்ளவேண்டுமென்கிறதாக, நீங்கள் இயேசுவுக்குள் மெய்யுண்டென்று அவரைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவரால் போதிக்கப்பட்டீர்களே. எபே. 4, 21-24.

இருண்டுபோன புத்தியுள்ள அஞ்ஞானிகளைப்போல ஒரு விசுவாசி ஜீவனம் பண்ணாமல் பரிசுத்தமாய் நடப்பான். நீயும் அப்படிச் செய்கிறாயா? உன் இருதயமும் உன் நடக்கையும் பரிசுத்தமாயிருக்கிறதா அல்லது நீ தேவனுக்கு இன்னம் தூரமாயிருக்கிறாயா? தேவகிருபையினால் நாம் அந்தகாரத்தின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கப்பட்டு ஞானஸ்நானத்தில் எல்லாப் பாவங்களுமறச் சுத்திகரிக்கப்பட்டோம். ஆகையால் வேண்டுமென்று பாவஞ்செய்யாமல் கிறிஸ்து இயேசுவில் நன்னடக்கையாய் நடப்போம். அதற்கு நாம் ஞானஸ்நானத்தில் வாக்களித்தோம். நம்பிக்கையினால் பழைய மனிதனை அனுதினமும் வெறுத்துப் புதிய மனுஷனை உடுத்திக்கொண்டு பழைய மனுஷனைக் களைந்துபோட்டு நவமான மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான்.

பழைய மனுஷன் மனுஷனுடைய கெட்டுப்போன சுபாவமே. நாம் எல்லாரும் அதோடு பிறந்தவர்கள். பாவத்தில் விழவும் அதை நேசிக்கவும் நம்மை மோசம்போக்கும் கெட்ட சுபாவம் நம்மிலுண்டென்று நமக்குத் தெரியவருகிறது. பாவமானது முந்தித் தித்திப்பாயிருந்தாலும் அப்புறம் அது பிச்சுப்போல் கசக்கும். பழைய மனுஷன் தேவனுடைய கற்பனைகளைப் பகைப்பதினாலே நன்மைசெய்ய மனதாயிருந்தும் செய்யக்கூடாமல் பெலனற்றுப்போகிறது. நீ பரிசுத்த ஆவியானவரால் புதிதாகி நவமான மனுஷனைத் தரித்துக்கொள்.

நவமான மனுஷன் மறுபிறப்பினால் நம்மிலுண்டான புது ஜீவன் தான். அது மெய்யான பரிசுத்தத்திலும் நீதியிலும் தேவசாயலாக உண்டாகி ஒரு மரம் போல் வளர்ந்து பெருகி வரவேண்டும்.

ஜெபம். இரக்கமுள்ள பிதாவே! தேவரீர் ஞானஸ்நானத்தால் எங்களை நித்திய மோட்சத்துக்கென்றழைத்தீர். என்றாலும், எங்களுக்குள் இன்னம் இருக்கிற துர்க்குணத்தினால் இந்த லோகத்தின்மேல் ஆசைப்பட்டு வருகிறோம். ஆண்டவரே, எங்கள் துர்க்குணத்தை நீக்கி எங்களை மென்மேலும் உம்முடைய சாயலாக்கிச் சுத்திகரியும், சுவாமி, ஆமென்.

1 இராசா. 3, 1-28. அல்லது 1 பேர. 4, 7-21. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பத்தொன்பதாம் வாரம், செவ்வாய்.

பா. 238, 1. 2.

இயேசு அதைக் கேட்டு அவர்களுக்குச் சொன்னதாவது: பலமுள்ளவர்களுக்கல்ல, பிணியாளிகளுக்கு வைத்தியன் தேவையாயிருக்கிறான். நீங்கள் பலியை அல்ல, இரக்கத்தை விரும்புகிறேன் என்றது எதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நீதிமான்களை அல்ல, பாவிகளைக் குணப்படுதலுக்கு அழைக்க வந்தேன் என்றார். மத். 9, 12. 13.

நீ சுகமா? ஆம், சுகந்தான், எனக்கு வைத்தியனும் மருந்தும் வேண்டாம் என்பாய். உன் ஆத்துமமும் சுகமா?

உன் இருதயத்தில் அமைதலுண்டா? நீ எப்போதும் நன்மையை விரும்பிச் செய்துவருகிறாயா? உன் மனச்சாட்சி உன்னை வாதிக்காமலிருக்கிறதா? இருந்தால் நீ நீதிமான். உனக்குக் குணப்படுதல் தேவையில்லை, உனக்கு ஆத்தும வைத்தியரும் தேவையில்லை.

தேவனுடைய இரட்சிப்புள்ள கிருபை எல்லாருக்கும் காணப்பட்டது. எல்லாரும் மோட்சத்தில் சேரலாம். ஆனால் தேவ கிருபை தனக்கு வேண்டாமென்று சொல்லுகிறவன் கெட்டுப்போய்ச் சபிக்கப்படுவான். அநேகர் நல்லவர்களென்று நினைத்துக்கொண்டு கெட்டவர்களாயிருப்போருமுண்டு. நீ தேவ கற்பனைகளாகிய கண்ணாடியில் உன் நிலைமையைப் பார்த்தால் உன் சீர்கெட்ட நிலைமையை அறிந்துகொள்வாய். பரம வைத்தியர், உன் முழுவதும் வியாதிப்பட்டு உன் இருதயம் முழுவதும் இனத்துப் போயிருக்கிறதென்று அறிந்திருக்கிறார்.

எல்லாரும் தேவ பார்வையில் வியாதியஸ்தர் தான். இதை உணர்ந்து நீ, என்னைச் சொஸ்தப்படுத்தும் தைலம் எங்கே என்று விசாரித்தால் வைத்தியரும் அகப்படுவார், மருந்தும் அகப்படும். தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மை எல்லாப் பாவங்களுமறச் சுத்திகரிக்கிறது. இதனால் தான் நமது ஆத்துமம் சுகமடையும்.

நீ தேவனுடைய இரக்கத்தை இயேசுகிறிஸ்து மூலமாய்ப் பெற்றவுடனே உன்னைப்போல் கிருபைக்குத் தூரமாக இருக்கிறவர்கள்மேல் இரங்கி, அவர்களும் பரம வைத்தியரை அறிந்துகொள்ளும்படி பிரயாசைப்படு. இரக்கமானது தேவனுக்கு இதப்பிரியமான பலியாம்.

ஜெபம். கிருபையும் இரக்கமுமுள்ள இரட்சகராகிய தேவரீர் எங்கள் வியாதியை அறிந்து உமது பரம மகிமையைவிட்டு இந்தப் பாழுலகத்திலிறங்கினீர். நாங்கள் எங்கள் பரிதபமான நிலைமையை உணர்ந்து உம்மை எங்கள் ஒன்றான வைத்தியராக நோக்க எங்கள் கண்களைத் திறந்தருளும், சுவாமி, ஆமேன்.

1 இராசா. 4, 21-34. அல்லது 1 யோ. 5, 1-13. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பத்தோன்பதாம் வாரம், புதன்.

பி. 214, 1. 2.

அப்பொழுது இயேசு மறுபடியும் அவர்களுடனே: உங்களுக்குச் சமாதானம்; பிதா என்னை அனுப்பினதுபோல, நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொன்னார். இதைச் சொல்லி, அவர்கள்மேல் ஊதி, அவர்களுடனே: பரிசுத்த ஆவியை வாங்குங்கள். எவர்கள் பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவர்களுக்கு மன்னிக்கப்படும்; எவர்கள் பாவங்களைச் சுமத்தி வைக்கிறீர்களோ, அவர்கள்மேல் அவைகள் சுமத்தி வைக்கப்பட்டிருக்கும் என்றார். யோவா. 20, 21. 23.

நீ அடிக்கடி பாவ சங்கீர்த்தனத்துக்குப் போகிறாயா? அநேகர் அதின்பேரில் ஆசை வைக்காமல் அது வேண்டாமென்று சொல்லுவார்கள். அது மெத்த விசனமான காரியம் தான். நமக்குப் பாவமில்லையென்றோமானால் உண்மை நமக்குள்ளிராமல் நம்மை நாமே மோசம் போக்குகிறோம். அன்றன்றுள்ள அப்பம் போல நமக்குப் பாவ மன்னிப்பும் மிக அவசியம். பாவ மன்னிப்பைப் பெற்றவர்களை யன்றி வேறொருவனும் மோட்சத்தில் சேரான். இயேசுகர்த்தர் நமக்கு வானத்தைத் திறந்திருக்கிறார். அவர் திறந்ததை ஒருவனும் அடைக்க முடியாது. அவர் சாத்திவிட்டால் அப்புறம் ஒருவனும் திறக்கமுடியாது.

அவர் உயிர்த்தெழுந்த பின்பாடு திருச்சபையின் ஆறுதலுக்காக வானராச்சியத்தைத் திறக்கவும் பூட்டவும் தக்க திறவுகோல் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். குரு, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பாவங்களை மன்னிக்கிறவனுக்கு அவை வானத்திலும் மன்னிக்கப்படும். அவர் அவைகளைச் சுமத்தி வைக்கிறவனுக்கு அவை வானத்திலும் சுமத்தி வைக்கப்பட்டிருக்கும். ஆகையால் நீ அடிக்கடி பாவ சங்கீர்த்தனத்துக்கு வா. அடிக்கடி இராப்போசனப் பந்தியில் சேரு. பாவசங்கீர்த்தனத்தில் எல்லாப் பாவங்களையும் பேர் பேராக அறிக்கையிடத் தேவையில்லை. அப்படி நீ உன் அறை வீட்டிலும் செய்யலாம். பொதுவாய் நீ பா[illegible] கற்பனைகளை மீறினதை அறிக்கையிட்டு மனஸ்தாபப்பட்டு இரக்கமுள்ள தேவன் இயேசுவின் நிமித்தம் உன் பாவங்களை உனக்கு மன்னித்துவிடுகிறார் என்று உறுதியாய் நம்ப வேண்டும். பரமண்டலங்களிலுள்ள தேவதூதர்கள் அதைப் பார்த்துச் சந்தோஷப்படுவார்கள். நீ போய் இனிப் பாவம் செய்யாதபடிக்குத் தேவ பெலத்தால் ஜாக்கிரதையாயிரு.

ஜெபம். எங்கள் பரம பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவே, குற்றமற்ற உமது இரத்தத்தினால் மனுஷருடைய பாவங்களை மன்னிக்க அதிகாரம் பெற்றவரே, இந்த அதிகாரத்தை உமது சீஷருக்கும் தயவாக ஒப்புவித்தீர். நாங்கள் அடிக்கடி உமது உத்தரவின்படி பாவமன்னிப்பைப் பெற்று இப்பூமியில் நித்திய மோட்சத்தை ருசித்துப் பார்க்கும்படி எங்களை எவி எழுப்பியருளும், சுவாமி, ஆமேன்.

1 இராசா. 5, 1-18 அல்லது 1 யோ. 5, 14-21 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். பத்தோன்பதாம் வாரம், வியாழன்.

பி. 213, 3.

என் ஆத்துமமே, கர்த்தரையும், என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தையும் ஸ்தோத்திரி. என் ஆத்துமமே, கர்த்தரை

ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, உன் நோய்களை எல்லாம் குணமாக்குகிறார். சங். 103, 1. 3.

இது இரட்சிக்கப்பட்டுக் கிருபை பெற்ற ஒரு பாவி சொன்ன வார்த்தைகள். ஆண்டவர் இரட்சித்த எல்லாரும் இப்படிப் பராபரனைத் தோத்திரித்துப் பாடவேண்டும். வியாதிகளை விலக்கிப் பாவங்களை மன்னித்த அவரைப் புகழ்வது அவர்கள் மேல் விழுந்த கடமை. நீயும் உன் சிறுவயதிலிருந்து அடிக்கடி ஒத்தாசையை அநுபவித்திருக்கிறாய் அல்லவா? உனக்கு மோசம் வந்தபோது அவர் உன்னைத் தமது செட்டைகளால் மறைத்தாதரித்தார். உன் பிள்ளை வியாதிப்பட்டபோது, நீ அதை இழந்துபோவேனென்று பயந்தாய். நீயும் உன் பெண்சாதியும் ஆண்டவரே, அதை எடுத்துக்கொள்ளாதேயும் என்று பிரார்த்தித்தீர்கள். உடனே கர்த்தர் செவிகொடுத்தார். அப்படியே இன்னம் அநேக மோசங்களுக்கும் உங்களை விலக்கிக் காப்பாற்றுவார். நீங்கள் அப்புறம் பராபரனுக்குத் தோத்திரம் செலுத்துவீர்களா? கொல்கதா மலைமேல் தேவாட்டுக்குட்டி உனக்காக மரித்து உனக்குப் பாவமன்னிப்பையும் மோட்சத்தையும் சம்பாதித்த நேசத்தை நீ யோசித்துப்பார். உன் பாதைக்கு வெளிச்சமும், அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு ஆறுதலுமாகிய வேதபுஸ்தகத்தைக் கொண்டு ஆண்டவர் உன் ஆத்துமத்தை எத்தனை விசை திருப்தியாக்கினார் என்று நினை. கடற்கரை மணலைப்போல அவருடைய நன்மைகள் கணக்கில்லாதவை. அவருடைய பரிசுத்த நாமத்தைத் தோத்திரி. நீ வாயினால் மாத்திரமல்ல, உன் ஆத்துமத்தினாலும் அவரைத் தோத்திரி. உன் சரீரத்தைப் பார்க்கிலும் உன் ஆத்துமம் தேவனுடைய ஆசீர்வாதத்தை அதிகமாய் அநுபவித்து வருகிறது. என் ஆத்துமமே, கர்த்தரைத் தோத்திரி.

தேவ அன்பின் ஆழத்தை அளவிடக்கூடியவன் ஆர்? அதற்குத் தகுந்த ஸ்தோத்திரம் செலுத்தக் கூடியவன் ஆர்? பிதாவானவர் அநுதினமும் உன்னைக் காப்பாற்றிப் போஷித்து வருகிறார், குமாரன் உன் பாவங்களை மன்னிக்கிறார், பரிசுத்தாவியானவர் உனக்கு மோட்சத்தைக் காண்பிக்கிறார்.

ஜெபம். எங்கள் பரமபிதாவே! உமது அளவற்ற கிருபையினால் நாங்கள் இதுவரைக்கும் சுகத்தோடே இந்த உலகத்தில் ஜீவனம்பண்ணி வருகிறோம். நாங்கள் உமது அன்பை ஒருபோதும் மறவாமல் அதற்காக உம்மை உட்கருத்தாய் ஸ்தோத்திரிக்கத் தேவரீர் எங்களுக்கு உமது பரிசுத்த ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 இராச. 8, 1-30 அல்லது 2 யோ. 1-13 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். பத்தொன்பதாம் வாரம், வெள்ளி.

ஞா. 214, 5. 6.

பொய்யைக் களைந்து, அவனவன் தனக்கடுத்தவனுடனே மெய்யாய்ப் பேசக்கடவன்; ஏனெனில், ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். எபே. 4, 25.

மனந்திரும்பின ஒரு கிறிஸ்தவனுடைய நவமான ஜீவியம் பழைய வஸ்திரத்தைப் போட்டுவிட்டுப் புது வஸ்திரத்தைத் தரித்துக்கொள்வதுபோல இருக்கிறதென்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். ஒரு கிறிஸ்தவன் ஆயுசுபரியந்தம் பாவத்தோடே போர்செய்ய வேண்டியதாயிருந்தாலும் பரிசுத்த ஆவியானவருடைய ஒத்தாசையைக்கொண்டு உண்மையாய்ப் போராடுகிறவன் பாவத்தின்மேல் அதிகமதிகமாய் மேற்கொண்டு கடைசியாக ஜெயம் அடைவான்.

எங்கும் சர்வ சாதாரணமான பாவம் பொய்தான். அது பாவமல்லவென்று அநேகம் பேர் சொல்லுவார்கள். பிள்ளைகளிடத்திலும் அதைப் பார்க்கலாம். பெரியோர் அதை அவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பார்கள். பிள்ளைக்கு உடுப்பு அலங்காரமாயிருப்பதிலும், அது உண்மையுள்ள பிள்ளையாயிருப்பது அதிக மேலானதென்று உனக்குத் தெரியாதா? மனிதர் எத்தனையோ பொய் சொல்லுகிறார்கள். எத்தனையோ பொய்ச் சத்தியம் பண்ணுகிறார்கள். ஆகையால் பொய்யைக் களைந்து மெய்யைப் பேசுங்களென்று அப்போஸ்தலன் சொல்லுகிறான்.

பொய்யானது பொய் சொல்லுகிறவனையே சேதப்படுத்தும். ஒரு பொய்க்கு ஒன்பது பொய் என்றபடி. ஒருதரம் பொய் சொன்னவன் பிறகு மெய் சொன்னாலும் அவனை நாம் நம்பமாட்டோம். பொய்யானது சிநேக ஐக்கியத்தைக் கெடுத்துப் போடுகிறது. ஒருவன் பின்புறணி பேசுவதினால் எவ்வளவு மோசம் உண்டாகிறது. பொய்க்கும் கொலைக்கும் தகப்பன் பிசாசுதான். அவசியத்தின் பொருட்டும் பொய் சொல்லாதே. நீங்கள் பொய்யைக் களைந்துபோடுங்கள் என்று அப்போஸ்தலன் சொல்வதினாலே சகலவித பொய்களையும் களைந்துவிடவேண்டும் என்று அறியலாம். தேவைக்குப் பொய் சொல்லுகிறவன் தேவன்பேரில் நம்பிக்கை வைக்காதவன். உறுதியான நம்பிக்கையுள்ளவனோ சங்கடமான சமயங்களிலும் பொய் சொல்லான்.

ஜெபம். சத்தியத்துக்குச் சாட்சிகொடுக்க மோசம் நிறைந்த இவ்வுலகத்தில் அவதரித்த இரட்சகரே! நாங்கள் எல்லாரும் மெய்யைப்

பேசவும் தேடவும் மனமில்லாதவர்கள். கர்த்தாவே! எங்கள் இருதயங்களைத் தட்டி உமது அன்பின் தீயை அதிலே மூட்டியருளும். சுவாமி, ஆமென்.

இராசா. 9, 1-11. அல்லது 3 யோ. 1-15 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். பத்தொன்பதாம் வாரம், சனி.

ஏ. 138, 6. 7.

ஐந்தாம் ஆதி நியாயம்: தொடர்ச்சி. இது எவ்விடத்தில் எழுதி இருக்கிறது? பரிசுத்த மத்தேயு, மாற்கு, லூக்கா என்றவர்கள் எழுதின சுவிசேஷங்களிலும் பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்திலும் தானே அவைகளாவன:

நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்து தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியில் அப்பத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டுத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்துத் திருவுளம்பற்றினதாவது: நீங்கள் இதை வாங்கித் தின்னுங்கள். இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. இதை என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்கள் என்று திருவுளம் பற்றினார். பின்னையும் அந்தப்படியே இராப்போசனம் பண்ணின பின்பு அவர் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்துத் திருவுளம்பற்றினதாவது. இதிலே எல்லாரும் குடியுங்கள். இந்தப் பாத்திரம் பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தில் புதிய ஏற்பாடாயிருக்கிறது. இதை நீங்கள் குடிக்கும்போதெல்லாம் என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்களென்று திருவுளம்பற்றினார்.

பரிசுத்த இராப்போசனம் மனுஷரால் அல்ல, ஆண்டவராலேயே கட்டளை இடப்பட்டது. அவர் பொல்லாதவர்களால் பாடுபட்ட அன்று இராத்திரியில் உலகத்திற்கு அவ்வளவு அன்பைக் காட்டினார். இந்த அன்பை நினைத்து அடிக்கடி இராப்போசனத்தில் சேர்ந்து அவரை மென்மேலும் சிநேகிப்பதே கிறிஸ்தவர்களுடைய முக்கிய கடமையும் சிலாக்கியமுமாம்.

ஆண்டவர் இந்த ஞான திரவியத்தைக் கட்டளையிட்டதினால் மோசே ஏற்படுத்தின பஸ்கா ஒழிந்துபோயிற்று. நாம் திருச்சபை உடன்படிக்கையில் சேர்ந்துவிட்டோம். பாத்திரமானது ஆண்டவர் இரத்தத்தில் புதிய ஏற்பாடாம். தேவனுக்கும் மனிதனுக்கும் உண்டான புதிய ஏற்பாட்டின் இரத்தம் இந்தப் பாத்திரத்தில் இருக்கிறது. ஆண்டவர் சொன்னபடி நீ அடிக்கடி அவருடைய இராப்போசனத்தில் சேருவது அவசியம். நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தைத் தின்று

அவருடைய இரத்தத்தைக் குடிக்கவில்லையானால் உங்களுக்கு ஜீவன் இல்லை என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

ஜெபம். பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டி, எங்கள் மேல் இரங்கும். உமது உயிரை எங்களுக்காக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த தேவரீர் எங்களை இரட்சித்துக்கொள்ளும், சுவாமி, ஆமென்.

1 இராசா. 9, 26-10, 9. அல்லது எபி. 1, 1-14 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபதாம் வாரம், ஞாயிறு.

ஏ. 138, 11. 12.

அந்த ஊழியக்காரர் வழிகளில் புறப்பட்டுப் போய், அகப்பட்ட பொல்லார் நல்லார் யாவரையும் கூட்டி வந்தார்கள்; கலியாணம் பந்தியிருக்கிறவர்களால் நிறைந்தது. ஆனால் பந்தியிருக்கிறவர்களைப் பார்க்கிறதற்கு இராசா உள்ளே வந்து, கலியாண வஸ்திரம் இல்லாத ஒரு மனுஷனை அங்கே கண்டு, அவனுடனே, சிநேகிதனே, கலியாண வஸ்திரம் இல்லாமல் இங்கே எப்படி வந்தாய் என்றான். அவன் பதிலொன்றுஞ் சொல்லாமல் சும்மாவிருந்தான். மத். 22, 10-12.

பிரயாசப்பட்டுப் பாரம் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டை வாருங்கள். நான் உங்களை இளைப்பாற்றுவேன் என்று நேசமுள்ள இரட்சகர் சொல்லி நம்மை அழைக்கிறார். நாம் அவரது இரத்தத்தினாலும் அன்பினாலும் ஏவப்பட்டு எல்லாரும் வந்து திருப்தியடைய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆயிரக் கணக்கான பேரோ அவருடைய சத்தத்தை அசட்டை பண்ணுகிறார்கள். நிர்விசாரமும் உலக சிந்தையும் அவிசுவாசமும் அவர்கள் வருகைக்குத் தடையாயிருக்கிறது. அவர்கள் நிலைமை பரிதாபமே. அவர்கள் தேவாக்கினைக்குத் தப்ப மாட்டார்கள். நீ அவருடைய அன்பான சத்தத்தைக் கேட்டு வந்தால் பாக்கியவான்.

ஆயினும் வருவது போதாது. வரும் விதம் முக்கியம். நீ ஜெபத்தில் கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக வந்து, ஞாயிற்றுக் கிழமையில் ஒழுங்காய்க் கோவிலுக்குப் போய் இராப்போசனம் வாங்குகிறவனாயிருந்தாலும், உன் இருதயத்தைச் சோதித்துப் பார்க்கிற கர்த்தர், நீ எப்படி வந்தாய் என்று உன்னைக் கேட்கிறார். உனக்குக் கலியாண வஸ்திரமுண்டோ என்பதைப் பார்க்கிறார். சுய நீதியின் தகுதிக்கு அல்ல, உன்னை ஒரு வஸ்திரத்தைப் போல் மூடி மறைக்கும் இயேசுகிறிஸ்துவின் நீதிதான் அவசியம்.

அது தான் இருதயத்துக்கு ஆபரணம். அவர் அதை உனக்குக் கிருபையாய் அளிக்கிறார். நீ தாழ்மையான விசுவாசத்தோடு அவரண்டை வந்தால் அவர் உன்னை ருசிப்பாற்றுவார். இயேசுவின் நாமத்தில் செய்யும் ஜெபம் கேட்கப்படும். நியாயத்தீர்ப்பின் நாளில் பராபரன் உன்னைச் சோதித்துப் பார்க்கும்போது நீ கிறிஸ்துவின் நீதியோடே காணப்படக் கூடுமானால் பாக்கியவான்.

ஜெபம். எங்கள் பரம இராசாவே நித்திய நீதியை எங்களுக்காகச் சம்பாதித்தவரே, உமக்கு என்றும் ஸ்தோத்திரம். நாங்கள் எங்கள் நீதியையும் புண்ணியங்களையும் நம்பாமல் உமது திரு இரத்தத்தையே நம்பி நியாயத்தீர்ப்பில் தைரியமாக நிற்கும்படி தேவரீர் எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி, ஆமென்.

1 இராசா. 10, 10-27. அல்லது சங். 119, 64-77. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபதாம் வாரம், திங்கள்.

பி. 255, 1. 2.

நீங்கள் ஞானமற்றவர்களைப் போல் அல்ல, ஞானமுள்ளவர்களைப் போல் கவனமாய் நடந்துகொள்ள வகை பார்த்துக் காலத்தைத் தப்பாமல் பிடியுங்கள். தினங்கள் பொல்லாதவைகளாயிருக்கிறது. ஆகையால் நீங்கள் மதியற்றவர்களாகாமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்வுள்ளவர்களாகித் துன்மார்க்கத்துக்கேதுவான மதுபான வெறி கொள்ளாமல் ஆவியினால் நிறையப்பட்டிருங்கள். எபே. 5, 17-18.

நாம் பொல்லாதவர்கள், நமது காலமும் அப்படியே. இக்காலத்தில் அவிசுவாசிகள் துணிகரமாய்த் தேவனுடைய கட்டளையையும் மனுஷருடைய சட்டங்களையும் மீறி வருகிறார்கள். எங்கே பார்த்தாலும் சோதனை. சோதனையால் சூழப்பட்டிருக்கிறோம். அவற்றில் விசேஷித்தது குடி. அநேகர் குடியின் வாயில் அகப்பட்டுத் தங்கள் கடமைகளைக் கவனியாமலும் தங்கள் வேலையை உற்சாகத்தோடு செய்யாமலும் தங்கள் குடும்பங்களை அழித்துப் பெண்சாதி பிள்ளைகளை அவஸ்தைப்பட விட்டு, வீடு வாசல் பாழடையப் பிழைத்துத் தேவ வசனத்தின் உணர்வு அற்றிருக்கிறார்கள். ஜனங்கள் கோவிலுக்கு அல்ல, சிறைச்சாலைக்குப் போகிறார்கள். சிறைச்சாலையில் தங்கள் அக்கிரமங்களுக்காக அடைபட்டவர்களில் அநேகர் குடியினாலே பாவ வழியில் செல்லத் துவங்கினவர்கள். எசாயா தீர்க்கதரிசி சாராயத்தைநாடி அதிகாலமே எழுந்திருந்து இருட்டிப் போகுமளவும் மது

பானம் தங்களைச் சூடாக்கும்படியாய்த் தரித்திருக்கிறவர்களுக்கு ஐயோ, ஆனதுகொண்டு அவர்கள் மகிமையும் அவர்கள் திரளும் அவர்கள் சந்தடியும் அவர்களில் களிகூருகிறவர்களும் பாதாளத்தில் இறங்கிப்போகப் பாதாளம் தன் தொண்டையை விசாலித்துத் தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்தது. மதுபானத்தைக் குடிக்கிற பராக்கிரமருக்கும் சாராயத்தைக் கலந்து வைக்கிற பலசாலிகளுக்கும் ஐயோ என்று சொல்லுகிறான்.

நீங்கள் கவனமாய் நடந்துகொள்ள வகைபாருங்கள். துன்மார்க்கத்துக்கு இடம் செய்யாதிருங்கள். நாங்கள் பிசாசின் அடிமைத்தனத்தை விட்டு விடமாட்டோம் என்று சொல்லாதிருங்கள். தேவ குமாரன் எவர்களை விடுதலையாக்குகிறாரோ அவர்கள்தான் உண்மையாய் விடுதலையடைந்திருக்கிறார்கள். அவர் எல்லாரையும் விடுதலையாக்க மனதும் சக்தியுமுள்ளவர். ஆகையால் நீங்கள் அவருடைய ஆவியினால் நிரப்பப்பட்டுக் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து அதின்படி செய்யுங்கள்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பிதாவே! உம்முடைய பிள்ளைகளாகிய எங்களுக்குத் தேவரீர் இவ்வுலகில் பல விதமான சோதனைகளைச் செய்து பொல்லாத நாட்களிலுமெங்களைக் காப்பாற்றி வருகிறீர். நாங்கள் உமது வசனத்தை நம்பி கெட்டதின் அடிமைத்தனத்துக்குத் தப்பி உமது இராச்சியத்தின் பிள்ளைகளின் சுதந்திரத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 இராசா. 11, 6-13 அல்லது எபேசி. 2, 1-18 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபதாம் வாரம், செவ்வாய்.

பி. 275, 3. 4.

இடுக்க வாசலால் உட்பிரவேசிக்கப் போராடுங்கள், ஏனெனில் அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடியும், அவர்களாலே கூடாதிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். லூக். 13, 24.

வானராச்சியமானது கர்த்தராகிய தேவன் சேர்த்தியாக ஆயத்தம் பண்ணின ஒரு பெரிய விருந்து வீட்டைப் போலிருக்கிறது. எல்லா மனுஷரும் சுவிசேஷத்தினால் அதற்கு அழைக்கப்படுகிறார்கள். அதின் வாசல் கிறிஸ்துவின் இரத்தத்தினால் திறந்திருக்கிறது. ஆனாலும் வாசல் இடுக்கம். தேவ வசனமாகிய கைகாட்டி மரத்தைக் கவனிக்காதவன் அதைக் கண்டு பிடிக்கமாட்டான். வாசல் இடுக்கம். இப்பூமியில் மனிதர்

கணக்கில்லாத பாவப் பாரத்தைச் சுமந்தவர்களும் உலக சிந்தனைகளினால் நிறைந்து, சுய நீதியினாலே தங்களைத் தாங்களாய்ப் பெருமைக் காரராயிருப்பதால் அவர்கள் இந்த நெருக்க வாசலால் உட் பிரவேசிக்க முடியாது. அதை எல்லாம் தள்ளிவிட்டு வெறுமை யும் சிறுமையுமாய் வந்தாலொழிய உள்ளே பிரவேசிக்க இட மில்லை.

இந்த நெருக்க வாசலும் சாத்தப்படும் ஒரு காலம் உண்டு. அப்போது எவ்வளவு தட்டிக் கெஞ்சினாலும் பிரயோசனமிராது. திருடனைக் காவலிருக்கக் கொள்ள வாசலண்டை வெளியே நிற்க வேண்டும். ஆகையால் இந்த வாசலால் உட்பிரவேசிக்க நீ தான் உண்மையாய்ப் போராடு. தேவ வசனத்தைக் கொண்டு மெய் யான வழியை நாள்தோறும் தேடிவா. நீ நாள்தோறும் உலகத் தையும் அதின் பாவ சிந்தனைகளையும் தள்ளிவிடப் போராடு. உன் சுய நீதியைக் குப்பையாக எண்ணி, ஆண்டவர் உனக்கு அருளி யதை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் வெளுக்க வேண்டும் என்று மன்றாடத் தாமதியாதே. மரண பரியந்தம் உண்மையாயிரு. அப் போது இந்த வாசலால் உட்பிரவேசிப்பவர்களில் நீயும் ஒரு வனாயிருப்பாய்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! உம்மால் வானராஜ்யம் திறவுண்டது. பரதீசின் வாசலைத் தேவதூதன் இனிமேல் காவல்காத்து நிற்கத் தேவையில்லை. தேவரீர் எல்லாரையும் இரட்சிக்க உலகத்தில் வந் தீர்; ஆண்டவரே! திறந்திருக்கிற வாசலைப் பார்த்து நாங்கள் அதின் வழி யாய் உம்மண்டை சேரப் பிரயாசப்படும்படி எங்களுக்கு உமது பரிசுத் தாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

1 இராஜா. 11, 28-43 அல்லது எபிரே. 3, 1-6 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். இருபதாம் வாரம், புதன்.

பி. 25. 5. 6.

ஐசுவரியவான்களாக வேண்டுமென்று இருக்கிறவர்கள் சோதனை யிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான வெகு இச்சைகளிலும் விழுகிறார்கள். எல்லாவித பண ஆசை எல்லாத் தீமைகளுக்கும் வேராயிருக்கிறது; அதை சிலர் இச் சித்து, விசுவாசத்தை விட்டு மோசம்போய், தங்களை வெகு வேதனை களால் உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். 1 தீமோ. 6, 9. 10.

செல்வத்தைச் சம்பாதிப்பது பாக்கியம் என்று பெரும் பாலார் நினைத்துச் செல்வத்தை அடையப் பிரயாசப்படுகி

றார்கள். சிறிதவர்களிலும் அநேகர் அதற்கென்றே கவலைப் படுவார்கள். உன் இருதயமும் அழிந்துபோகும் பொருட்களை நாடித் தேடுகிறதோ என்று சோதித்துப் பார். ஐசுவரியவான் களாக வேண்டுமென்றிருக்கிறவர்களுடைய வழியில் சோதனை யும் கண்ணியும் அதிகம் என்று அப்போஸ்தலன் சொல்லுகி றான். இந்தப் பூமியில் சொற்பப் பொருளை அடையத் தேவனை யும் அவருடைய இராச்சியத்தையும் மறக்கும்படியாகச் சோதிக் கப்படுகிறார்கள். தங்கள் பிறத்தியானைக் கொடுமையாய் நடத்தித் தங்களைப் பார்க்கிலும் அதிகமுள்ளவர்கள் மேல் பொறாமை கொண்டு, பொய்க்கும் மோசத்துக்கும் அஞ்சாமல், பேர் கெட் டாலும் பெரிதல்லவென்று பணத்தைச் சேர்க்க முயலுவார்கள். அப்படிப்பட்டவர்களில் பலர் திருடராகிப் பிறருடைய வீடு களைக் கன்னமிட்டுக் கொலைசெய்து பொய்ச்சத்தியம் பண்ணிச் சிறைச்சாலைக்குப் போவதுமுண்டு.

உன் இருதயத்தில் பண ஆசையும் தேவனைப் பற்றும் விசுவாசமும் ஏக காலத்தில் இருக்கமுடியாது. இவ்வுலகப் பொ ருளானது நீ தேவன் அண்டை சேராவண்ணம் தடையாயிருக் கும். ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் அவனவனுக்கு வேண்டிய தை அளிக்கிறார். அவர் உனக்கு அதிகமாக அளித்திருந்தால், ஆண்டவரே! என் இருதயம் நீர் அளித்த பணத்தை நம்பிக் கெட் டுப் போகாமல் நான் அதை உமது மகிமைக்கென்றும் பிறத்தி யானுடைய நன்மைக்கென்றும் உபயோகிக்கும்படிக்குத் துணை செய்தருளும் என்று மன்றாடு. அவர் உனக்குக் கொஞ்சமாய்க் கொடுத்திருந்தால் அந்தக் கொஞ்சத்தையும் சந்தோஷத்தோடு ஆசீர்வதிக்கக் கூடிய கர்த்தரை நம்பி, ஆண்டவரே! என்னைப் பெருமைக்கும் வீண் கவலைக்கும் விலக்கிக் காருமென்று ஜெபி; அப்போது நீ அழிவுக்குரிய பொருட்களினாலே அழியாத நித்திய வாழ்வை இழந்து போகமாட்டாய்.

ஜெபம். பரமபிதாவே! உமது பிள்ளைகளாகிய எங்களுக்கு இவ்வுலகில் யாதொரு குறைவுமில்லை. வானத்தையும் பூமியையும் ஆளு கிற தேவரீர் எங்களைப் பராமரிக்கிறீர். பிதாவே, நாங்கள் இதை முழு இருதயத்தாலும் நம்பி எப்போதும் வானத்தை அண்ணாந்து பார்க்கும்படி எங்கள் இருதயங்களைத் தட்டி எழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

1 இராஜா. 12, 1-24 அல்லது எபிரே. 3, 7-19 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபதாம் வாரம், வியாழன்.

பி. 251, 1. 2.

பரிசுத்தவான்களுக்கு அடுக்கும்படியே, உங்களுக்குள் வேசித்தனம் சகல அசுத்தம் அல்லது பொருளாசை என்றவைகளின் பேர் முதலாய் இல்லாதிருப்பதாக. வம்பும் மைத்தியப் பேச்சும் பரிகாசமும் அடாததானே. அவைகள் ஏற்காத காரியங்கள்; ஸ்தோத்திரமே ஏற்றது. வேசிக்கள்ளன், அல்லது அசுத்தவான், அல்லது விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரன் ஒருவனுக்கும் பராபரனுடைய இராச்சியமாகிய கிறிஸ்துவின் இராச்சியத்திலே சுதந்தரம் இல்லையென்று அறிந்திருக்கிறீர்கள். எபே. 5, 3-5.

அநேக பாவங்கள் பாவங்களாக எண்ணப்படுகிறதில்லை. வேசித்தனம் என்கிற பாவத்துக்குக் கீழ்ப்பட்டவர்களும் அநேகம் பேருண்டு. ஒருவன் வெளியரங்கமாக துன்மார்க்கத்தில் பிழைத்தால் ஒருவேளை அதைப் பற்றிப் பலரும் பேசுவார்கள்; ஆனால் வெளிப்படையாய் நடந்தவைகள் அதைப் பற்றிப் பேசினால் விசனப்படுவார்கள். காரியம் இரகசியமாய் நடந்தால் குற்றம் இல்லை என்பார்கள்.

இந்தப் பாவம் ஆத்துமாவில் விஷமேற்றிக் குடும்பங்களின் பாக்கியத்தைக் குலைத்து ஆத்துமாக்கள் தேவனுடன் சேர்ந்து நித்திய ஜீவனை அடையாதபடிக்குத் தடையாய் இருக்கிறது. இந்தப் பாவத்தை எண்ணத்திலும் நடக்கையிலும் இருதயத்திலும் இருந்து அகற்றிவிடாதவன் நித்திய ஜீவனில் பங்கடையான். அசுத்தத்தை நேசிக்கிறவர்களுக்கு மோட்ச இராச்சியத்தில் இடமே இல்லை. ஆகையால் உன் இருதயத்தைக் கெட்ட நினைவுகளுக்கு விலக்கிக் கா. இப்போற்பட்ட நினைவுகள் வரும்போது சுத்த இருதயத்தை எனக்குள் சிருஷ்டியும் பராபரனே, நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதிதாய் உண்டாக்கும் என்று மன்றாடிக்கொள்.

உன் செவியைக் கெட்ட பேச்சுக்கும், உன் கண்ணைக் கெட்ட காட்சிகளுக்கும் விலக்கிக் காத்துக்கொள். உன் நாவு கெட்ட வார்த்தைகளையும் பாட்டுகளையும் சொல்லாதபடி பார்த்துக்கொள். உன் சரீரம் இந்தப் பாவத்தினால் கறைப்பட்டுக் கெட்டுப்போகாதபடி அதைக் காத்துக்கொள். உங்கத்தார் உன்னை எவ்வளவு பரிகாசம்பண்ணினாலும், உன் சரீரம் கிறிஸ்துவின் இராச்சியத்தில் பங்கடையும்படி அது பரிசுத்த ஆவியானவருடைய தேவாலயமாயிருப்பதற்குப் பிரயாசைப்படு.

ஜெபம். பரிசுத்த பிதாவே! எங்களை உமது சத்தியத்திலே பரிசுத்தமாக்கியருளும்; உம்மண்டை சேருகிறவர்கள் உம்மைப்போல

பரிசுத்தமாயிருக்க விரும்புகிறீர். எங்கள் பாவ அழுக்கை நீக்கி எங்களை உமது குமாரனின் இரத்தத்தால் சுத்திகரியும், சுவாமி, ஆமேன்.

1 இராசா. 12, 25-33. அல்லது எபே. 4, 1-13. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபதாம் வாரம், வெள்ளி.

பி. 251, 3. 4.

எல்லாக் காட்டு மிருகங்கள், பறவைகள், ஊருகின்ற செந்துக்கள், நீர் வாழுஞ் சாதிகளுடைய சுபாவமும் மனுஷ சுபாவத்தால் படியப்பண்ணப்படும், படியப்பண்ணப்பட்டதும் உண்டு. ஆனால் அடங்காத பொல்லாப்புஞ் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாகிய நாவை மனுஷரில் ஒருவனும் படியப்பண்ணமாட்டான். யாக். 3, 7. 8.

மேற்கண்ட வாக்கியத்துக்கு முந்தின வாக்கியத்தில், அப்போஸ்தலன் நாவை, ஒரு பெரிய காட்டைக் கொளுத்தும் தீ என்று சொல்லியிருக்கிறார். ஒரு சிறு பொறி சில சமயங்களில் பெரிய நெருப்பாக வளரும். யோசிக்காமல் சொன்ன ஒரே வார்த்தையினால் எவ்வளவு பொல்லாப்பு விளைந்துவிடுகிறது. உன் வாயைவிட்டு வெளிப்பட்டுப்போன வார்த்தையின்பேரில் உனக்கு அதிகாரமேயில்லை. காட்டிலே பிடித்த நெருப்பு ஒவ்வொரு மரமாகத் தாவி முழுக் காட்டையும் கொளுத்திவிடுதல்போல் வாயில் பிறந்த ஒரு வார்த்தை, சகல நற்குணங்களையும் தொலைத்துவிடும். தற்காலத்தில் வெளியரங்கமாய்ச் செய்யப்படும் ராஜத் துவேஷ பிரசங்கங்களும் வெளிவரும் பத்திரிகைகளும் புத்தகங்களும் மனுஷருக்குள் சமாதானத்தையும் உண்மையையும் நம்பிக்கையையும் காருண்ணியத்தையும் தேவ பக்தியையும் தேவ பயத்தையும் வேரோடே கொளுத்திப் பட்சிக்கின்றன.

காட்டு மிருகங்களை அடக்கிப் பழக்கக் கூடும். நாவை அடக்கிப் பழக்குவதெப்படி? நாவு, ஒரு பிராணிக்காகப் பதுங்கிக் குந்து அதை இரக்கமின்றிப் பீறிடும் புலிக்கு ஒப்பாம். அது பிறத்தியானை நோகப்பண்ணி அவன் இருதயத்தை இரக்கமில்லாமல் குத்திக் காயப்படுத்தும். நீ நாவினால் இப்படிப் பாவம் செய்ததுண்டானால் தேவனிடத்தில் மன்னிப்பைத் தேடு.

என் நாவு முரட்டுக் குதிரைபோல் எனக்கு அடங்குவதில்லையே என்று சொல்லுவாயானால், நாவு எதனால் ஆளப்படுகிறதென்று முன்னாக அறிந்துகொள். அது இருதயத்தினால் தான் ஆளப்படும். தேவன் தாமே பகை நிறைந்த உன் இருதயத்தை மாற்றிச் சமாதானம் நிறைந்த ஒரு புது இருதயத்தை உனக்குத்

கொடுக்கும்படி அவரை வேண்டிக்கொண்டாயானால், அப்போது உன் நாவு சமாதானத்துக்கானவைகளைப் பேசும்; இயேசுவில் சமாதானத்தைக் கண்டுபிடித்து அன்பின் ஆவியினால் ஆளப்படும் மனதிலிருந்து கசப்பான வார்த்தைகளல்ல, பிறத்தியாரை ஆறுதல்படுத்தி, அவன் வழிதப்பிப்போனால் அவனைச் செவ்வையான வழிக்குக் கொண்டுவந்து, துன்பகாலத்தில் அவனோடு நட்பமாய்ப் பேசும் வார்த்தைகளே அதிலிருந்து புறப்படும்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது அன்பினால் ஏவப்பட்டு அன்பில்லாத இந்த ஏழை உலகத்தில் இறங்கி அன்பு இன்னதென்று எங்களுக்குக் காட்டினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே, நாங்கள் இந்த அன்பை நன்றாய் அறிந்துகொண்டு அதற்கு எங்கள் இருதயங்களைத் திறக்க எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமேன்.

1. இராசா. 13, 1-10. அல்லது எபிரே. 4, 14-5, 4. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபதாம் வாரம், சனி.

ஞ. 251, 5. 6.

ஐந்தாம் சுதிநியாயம்: (தொடர்ச்சி) நாம் இப்படித் தின்றுகுடிப்பதினால் நமக்கு உண்டாகும் பிரயோசனமென்ன? இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறதென்றும் சிந்தப்படுகிறதென்றும் சொல்லுகிற வார்த்தைகளே இதின் பிரயோசனத்தை வெளிப்படுத்தும். இந்த வார்த்தைகளினால் பாவமன்னிப்பும் ஜீவனும் மோட்சமும் கர்த்தருடைய இராப்போசனத்தில் நமக்கு உண்டு, ஏனெனில் பாவமன்னிப்பு எங்கேயோ அங்கே ஜீவனும் மோட்சமும் இருக்கிறது.

1517-ம் வருஷம் அக்டோபர் மீ 31-ம் உ இல் மார்ட்டீன் லுத்தர் வித்தன்பர்க் பட்டணத்தில் 95 நியாயங்களைத் தேவாலயக் கதவில் ஆணியிட்டறைந்தார். அவை ரோமானிக்காருடைய கள்ளப்போதகங்களுக்கு விரோதமாக எழுதப்பட்டன. அப்போது திருச்சபை மறுபடியும் சுவிசேஷத்தின் சுத்த பிரசங்கத்திலும் திவ்விய கட்டளைப்படி இராப்போசனத்திலும் அஸ்திபாரப்பட்டது. அதை நாம் நன்றியறிதலோடு இந்தக் காலத்தில் நினைவுகூருகிறோம்.

இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறதென்றும் சிந்தப்படுகிறதென்றும் சொல்லுகிற இயேசுவின் வார்த்தையே அந்த நன்மையை நமக்குக் காட்டுகிறது. இந்த வார்த்தையினாலே பாவமன்னிப்பும் ஜீவனும் மோட்சமும் திரு இராப்போசனத்தில் நமக்குண்டு. இந்த வார்த்தையை

நம்புகிறவனுக்கு எவ்வளவு ஆறுதல் உண்டு. அவன் பாவமன்னிப்பினால் தேவனோடு சமாதானமும், புத்திர சுவிகாரமும் தனக்கு உண்டு என்று அறிகிறான். பாவம் எங்கேயோ அங்கே மரணமும் நரகமும் உண்டு.

இயேசுநாதர் தாமே இராப்போசனத்தில் உன்னண்டை வந்து உன்னை ஆட்கொண்டு தேவனுக்கு ஏற்றபடி நடக்க உன்னைப் பலப்படுத்திப் பாவ மன்னிப்பைப் பற்றி உன்னை நிச்சயப்படுத்துகிறார்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! தேவரீர், வாருங்கள் எல்லாம் ஆயத்தமாயிற்று என்று சொல்லுகிறீரே. நான் வருகிறேன், நான் உமது திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் என் ஆத்தும இரட்சிப்புக்காக வாங்கும்படி என் விசுவாசத்தைப் பலப்படுத்தி என்னை ஆசீர்வதித்தருளும், சுவாமி, ஆமேன்.

1 இராசா, 14, 1-20 அல்லது எபி. 5, 5-10 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தோராம் வாரம், ஞாயிறு.

ஞ. 306, 1-3.

இயேசு அவனுடனே: போ, உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையை அந்த மனுஷன் நம்பிப் போனான். யோவா. 4, 50.

இயேசுநாதர் சொன்ன வார்த்தையை நம்பி இராசாவின் மனுஷன் தன் வீட்டுக்குத் திரும்பினான். அவன் இயேசுநாதரை அவ்வளவாக நம்பினதற்கு முகாந்தரமென்ன? அவர் இதுவரையில் செய்த அற்புதங்களையும் பிரசங்கங்களையும் கவனித்துப் பார்த்திருந்தான். ஜனங்கள் அநேகமாய் வேடிக்கை பார்க்க அவரைப் பின்தொடர்ந்தார்கள். அவனோ அவருக்குள் மறைந்திருந்த மகத்துவத்தை அறிந்துகொண்டு அவரிடத்தில் ஒத்தாசை தேட வந்தான்.

இயேசுநாதரண்டை வருகிறவர்கள் தாங்களாய் வரமாட்டார்கள். சுகமாய் வாழும் நாட்களில் நாமும் அவரைத் தேடுகிறதில்லை. துன்பகாலத்தில் மாத்திரம் அவரண்டை ஓடி வருவோம். முதல் முதல் அவர் நமக்குத் துன்பத்தை வரவிடுகையில் நாம் அவருக்குத் தோத்திரம் செலுத்தித் துன்பத்தின் காரணத்தை அறிந்துகொண்டு அதைப்பற்றி முறுமுறுக்காமல் அவரிடத்தில் ஒத்தாசையைத் தேடினால் நல்லது.

ஆண்டவரண்டை வருகிறவர்களுக்கு விசுவாசம் ஒன்றே தேவை. நாம் அவருடைய அன்பையும் வல்லமையையும் நம்பி அவரிடம் வருகிறோம். இன்னமும் நாம் அவரை நம்பி அவர் நமக்குக் கொடுக்கிற கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது அவசியம். விசுவாசமென்றால் கீழ்ப்படிதல் தான். அந்த மனுஷன் இயேசுவின் வார்த்தையை நம்பிப்போனான். தன் இருதயத்தில் சந்தேகப்படாமலும் ஜனங்களின் பரிகாசத்துக்கு அஞ்சாமலும் போனான். இப்பேர்ப்பட்ட விசுவாசமுள்ளவர்களுக்கு இயேசுநாதர் பெரிய ஆசீர்வாதங்களை அளிக்க ஆயத்தமாயிருக்கிறார். அவரைப் பற்றிச் சந்தேகப்பட்டு அவருக்குக் கீழ்ப்படிய மனதில்லாதவர்களோ அவரிடத்தில் ஒன்றையும் வாங்கப் போகிறதில்லை.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது ஒத்தாசையைத் தேடுகிற எங்களைத் தள்ளாதேயும். எங்கள் அற்ப விசுவாசத்திற்கு இரங்கி அதைப் பெலப்படுத்தி எங்களுக்கு உமது மகிமையைக் காண்பித்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். சுவாமி, ஆமென்.

1 இராசா. 14, 21-31 அல்லது சங். 119, 38-63. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தோராம் வாரம், திங்கள்.

ஞ. 251, 7.

எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசத்தின் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்; அதில் நீங்கள் பொல்லாங்கனுடைய நெருப்பான அம்புகளை எல்லாம் அவித்துப்போடலாம். இரட்சிப்பின் தலைச்சீராவையும் பராபரனுடைய வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். எபே. 6, 16. 17.

கிறிஸ்தவர்கள் கையாளுகிற ஆயுதங்கள் மாம்ச ஆயுதங்களல்ல; மனுஷன் அவைகளைச் செய்கிறதில்லை. மனுஷவேலையான ஆயுதங்கள் நமக்கு இருக்கிற ஞானப் போரில் ஒன்றுக்கும் உதவாது. நாம் வல்லமையுள்ள சத்துருவும் அந்தகாரப் பிரபுவுமாகிய பிசாசோடு போராடவேண்டும். அது தன சேனையோடு நம்மை விழுங்க வருகிறது. இந்தப் போராட்டத்தில் பரம ஆயுதங்கள் மட்டும் உதவும்.

அவைகள் எவை? பவுல் அப்போஸ்தலன் அவைகளை நமக்குத் தெரிவிக்கிறான். பிசாசின் பொய்க்கு நம்மைத் தற்காக்கும் சத்தியத்தின் கச்சையும், நம்முடைய பாவக்கடன்களை மூடும் கிறிஸ்துவினுடைய நீதியின் மார்க்கவசமும், கிறிஸ்துவின் தாறு

பதிகளாகப்போய் அவருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கால்களில் அணியும் பாதரட்சையும், விசுவாசமும் நம்பிக்கையும் தேவ வசனமுமே அந்த ஆயுதங்கள். இவற்றை அணிந்து போராடுபவன் சத்துருவை மேற்கொண்டு நித்திய ஜீவ கிரீடத்தைப் பெறுவான்.

இந்த நல்ல ஆயுதங்களுக்குப் பதிலாக அநேகர் துருப்பிடித்த பழைய ஆயுதங்களைக்கொண்டு இராக்ஷதனை ஜெயிக்கப் போகிறார்கள். கிறிஸ்துவின் நீதியாகிய மார்க்கவசத்துக்குப் பதிலாகச் சுய நீதியையும், விசுவாசத்தின் கேடயத்துக்குப் பதிலாக நற்கிரியைகளையும், தேவ வசனமாகிய கூர்மையுள்ள பட்டயத்துக்குப் பதிலாகக் கள்ளப்போதகமாகிய கத்தியையும் கொண்டு யுத்தத்திற்குப் போகிறார்கள். அவர்கள் எப்படி ஜெயமடைவார்களோ அறியோம்.

உண்மையான கிறிஸ்தவர்களோ தேவன் தங்கள் கையில் கொடுத்த ஆயுதங்களை உபயோகித்து ஜெயமடைவது நிச்சயம். அவர்கள் அல்ல, சர்வ வல்லமையுள்ளவர்தாமே அவர்களுக்காகச் சத்துருவோடு போராடுவார்.

ஜெபம். எங்கள் பரம இராசாவே! மரணத்தையும் பிசாசையும் பாவத்தையும் ஜெயித்து நித்திய சமாதானத்தை எங்களுக்குச் சம்பாதித்த உம்மைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம். ஆண்டவரே! நாங்கள் உமது வல்லமையினால் தான் கடைசிமட்டும் போராடி ஜெயத்தையடைய எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும். சுவாமி, ஆமென்.

1 இராசா. 15, 1-24 அல்லது எபிரே. 6, 1-8 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தோராம் வாரம், செவ்வாய்.

ஞ. 263, 1. 2.

பராபரன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தாம் தெரிந்துகொண்டவர்கள்மேல் மகா சாந்தமாயிருந்து, அவர்களுக்கு நியாயம் செய்யாதிருப்பாரோ. சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். லூக். 18, 7. 8.

அநேகருக்கு ஜெபம் செய்யத் தெரியாது. அவர்கள் அதை மறந்துவிட்டார்கள். "நான் முன் ஒருகாலத்தில் ஜெபம் செய்தேன், இப்போது நான் செய்கிறதில்லை, அது பிரயோசனம் இல்லை" என்று பலர் சொல்லுவார்கள். தேவனுக்கும் மனுஷருக்கும் அஞ்சாத நியாயாதிபதி ஒருவன் கடைசியாக ஒரு

ஏழை விதவையின் விண்ணப்பத்தைக் கேட்டு ஒத்தாசை செய்தா னே. நீதியுள்ள தேவன் ஒத்தாசை செய்யமாட்டாரா? நமக்கு இரக்கமுள்ள இருதயத்தைக் கொடுத்த தேவன் தாமே நமது மேல் இரங்கமாட்டாரா? இரங்குவார். தாம் தெரிந்துகொண்ட வர்களை அவர் கேட்காமலிருப்பாரா? கேட்பார். ஸ்திரீ தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காதபடிக்குத் தன் பாலகனை மறப் பாளோ? அப்படிக்கொத்தவள் அவைகளை மறந்தாலும் நாம் உன்னை மறப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர் எத் தனையோ தரம் தமது திருச்சபையை இரட்சித்தார். திரும்பத் திரும்ப அதற்குத் தமது இரக்கத்தைக் கொடுத்துவருகிறார்.

எத்தனையோ பக்திமான்கள் ஆண்டவர் தங்கள் விண்ணப் பங்களுக்குச் செவிகொடுத்து வருவதாக அநுபோகத்தினால் அறிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கூப்பிட்டபோது அவர் அவர்களைக் கேட்டார்.

உன் ஜெபங்கள் தேவனுடைய இருதயத்துக்குள் புகவில்லை யென்று நினைக்காதே! சில சமயங்களில் தமது வேளை வருமட்டும் நம்மைக் காத்திருக்க வைப்பார். நம்முடைய நம்பிக்கையைச் சோதிக்கும்படி அப்படிச் செய்வார். நாம் அப்போது பொறுமை யோடு காத்திருக்கவேண்டும். உறுதியாய்க் காத்திருந்தால் நாம் கடைசியாக அவருடைய மகிமையைக் காண்போம்.

ஜெபம். பரம பிதாவே! உமது பிள்ளைகளாகிய எங்கள்மேல் நீர் எங்களுக்கு அநுதினமும் கணக்கில்லாத நன்மைகளைச் செய்து வரு கிறீர். கர்த்தாவே, நாங்கள் ஒருபோதும் நம்பிக்கையற்றுப்போகாமல் உண்மையோடும் விசுவாசத்தோடும் உம்மை நோக்கி மன்றாடுவதற்கு உம தாவியை எங்களுக்குத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

1 இராசா. 15, 25-16 அல்லது எபிரே. 6, 9-20 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். இருபத்தோராம் வாரம், புதன்.

கீ. 263, 3. 4.

என் மகனே, கர்த்தருடைய தண்டனையை அற்பமாக எண்ணாதே. அவரால் அதட்டப்படும்போது இளைத்தும் போகாதே. எனெனில் கர்த்தர் தாம் சிநேகிக்கிறவனைத் தண்டித்து, தாம் ஏற்றுக்கொள்ளுகிற மகனை எவனாம் அடிக்கிறார் என்று பிள்ளைகளாகிய உங்களுக்குச் சொல் லப்பட்டிருக்கிற புத்தியை மறந்தீர்கள். நீங்கள் தண்டனையைச் சகித்தால், உங் களைப் பாரமன் குமாரராக எண்ணித் தம்மைக் காண்பிக்கிறார். ஏனென் றால் தகப்பன் தண்டியாத எந்தப் பிள்ளை இருக்கிறது. எபி. 12, 5-7.

கர்த்தருடைய தண்டனையை அற்பமாக எண்ணாதே என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். அந்த வார்த்தை உனக்கு ஒரு வேளை ஆச்சரியமாகத் தோன்றும். என் பாடுகள் அற்பமா என்று சொல்லுவாய். நீ உன் பாடுகளில் பொறுமை யும் உற்சாகமுமின்றிப் பிறரைக் குற்றப்படுத்தித் தேவன் உன் னைக் கைவிட்டு உன்னை அநியாயமாய்த் துன்பப்படுத்துகிறதாக நினைத்து அவருக்கு விரோதமாய் முறுமுறுத்து, உன் பாடுக ளைப் பெரிதாக எண்ணுவாய். ஆண்டவர் தாம் சிநேகிக்கிறவ னைத் தண்டிக்கிறார். இந்தச் சிநேகத்திற்காக நீ ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். தேவன் உன்பேரில் கவலைப்படாதிருந்தால் அவர் உன்னைத் தண்டிக்காமல் உன்னை அதிகமதிகமாய் லோக சிந்தனைக்குள் மூழ்கிப்போகவிடுவார்.

அவர் உன்னைக் கிறிஸ்துவை நோக்கிச் சிநேகித்து, உன் பேரில் பிதாவுடைய அன்புவைத்துத் துன்பத்தினால் மோட் சத்துக்கு இழுத்து இப்பூமியில் உனக்குக் கிடைக்கும் வாழ் வின் மாயையைக் காண்பித்து, உன் ஆத்துமத்தைக் கால மிருக்கக்கொள்ள நித்திய வாழ்வுக்குக் கொண்டுபோக மனதா யிருக்கிறார். உன்னில் பாவம், கீழ்ப்படியாமை, பெருமை, உலக சிந்தனை, இரக்கமில்லாமை இன்னும் அதிகமாகக் காணப்படுகின் றன. இவை தேவனுடைய பிள்ளைகளுக்குத் தகாது. இவற்றை இருதயத்திலிருந்து தள்ளிவிடவேண்டும். ஆகையால் துன்பத்தில் மலைத்துப்போகாமல், தேவன் உன்னை நித்திய மோட்சத்துக்கு ஏற்றவன் ஆக்கப்போகிறார் என்று நம்பி உற்சாகமாய் இரு.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது இரக்கத்தின்படி எங்க ளைத் தண்டித்துத் துன்பங்களினால் உம்மண்டை இழுத்துக்கொள்ளு கிறீர். நாங்கள் அந்தத் துன்பங்களினால் இவ்வுலகத்தை வெறுத்து உமது மோட்ச இராச்சியத்தை நாடித் தேடுவதற்கு எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

1 இராசா. 16, 8-34. அல்லது. எபிரே. 7, 1-10. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். இருபத்தோராம் வாரம், வியாழன்.

கீ. 263, 5. 6.

தண்டிப்பு யாவும் கடக்கிற நேரத்திலே சந்தோஷமாய்க் காணா மல் துக்கமாய்க் காணுகிறது. பிற்பாடோ அது தன்னால் பழக்கப்பட்ட வர்களுக்கு நீதியின் சமாதானமான கனியைத் தரும். ஆகையினாலே

நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்துபோன முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்து, நொண்டியாயிருக்கிறது சுளுக்கடையாமல், குணமேயாகும்படி உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வையாக்குங்கள். எபி. 12, 11-13.

தேவ தண்டனைகள் அடிக்கடி வருத்தமாயிருக்கின்றன. அவர் உன்னை வியாதியினாலாவது கவலைகளினாலாவது ஒடுக்கி, உனக்கருமையானதை எடுத்துக்கொள்ளுகிறார். அப்போது உன் இருதயம் பெரிய விசனத்துக்குள்ளாகி உன் விசுவாசம் தளர்ந்து தடுமாறி, ஜெபத்தின் உற்சாகம் நீங்கி, என் பக்தியினாலே பிரயோசனமென்னவென்று மயங்கி நம்பிக்கையற்றுப்போகிறாய். ஆயினும், தேவன்பினாலே எந்தத் துன்பமும் நித்தியபான கனியைப் பிறப்பிக்கும். வைத்தியன் வியாதியஸ்தருக்கு வலியுண்டாக்கும்படி அல்ல, அவனைச் சொஸ்தப்படுத்தும்படிக்குத் தான் கத்தியினாலே அறுக்கிறான். ஆகையால் வியாதியஸ்தன் கத்திக்குப் பயப்படுகிறதில்லை. தேவன் நம்மைத் துன்பப்படுத்தும்படிக்கு அல்ல, நமது விசுவாசத்தைப் பெலப்படுத்தவே நம்மைத் தண்டிக்கிறார். துன்பமானது விசுவாசத்தை அப்பியாசிக்கும் பாடசாலை. அப்பியாசமின்றி உடம்பு பலப்படாது. துன்பத்தை அனுபவிக்காத விசுவாசமானது பெலவீனமுள்ளதாயிருந்து பாவத்தோடு செய்யவேண்டிய போராட்டத்திலே தோற்றுப்போம். தேவன் உனக்குக் காண்பித்த நன்மைகளுக்காக நீ தோத்திரம் செலுத்தினதில்லை என்றும், நீ மேற்கொள்ளாத இன்னம் எத்தனையோ பாவம் உன்னிலிருக்கிறதென்றும், அவர் துன்பத்தினாலே உனக்குத் தெரிவிக்கிறார்.

நீ இதைக் கவனித்து, மனஸ்தாபத்தோடு இயேசுநாதருடைய புண்ணியத்தால் மன்னிப்பைத் தேடித் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து, பிதாவே, என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தம் ஆகக்கடவது என்று ஜெபி. அப்போது அவர் புத்திக்கு எட்டாத சமாதானத்தையும் திடமான நம்பிக்கையையும் அளிப்பார்.

ஜெபம். இரக்கமுள்ள பிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் உம்மிடத்தில் அடைக்கலம் புகுந்து சுபத்திரமாயிருக்கிறோம். எங்களுக்கு ஏது நேரிட்டாலும், எங்கள் தகப்பனாகிய தேவரீர் எங்களைக் கைவிடமாட்டீர் என்றறிவோம். உமது திரு நாமத்துக்கு என்றென்றைக்கும் துதியும் புகழ்ச்சியும் உண்டாவதாக. சுவாமி, ஆமென்.

1 இராசா. 17, 1-24. அல்லது எபிரே. 7, 11-28. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தோராம் வாரம், வெள்ளி.

ப. 263, 7. 8.

யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமாகுதலையும் பின்தொடருங்கள். அதுவில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை. ஒருவனும் தேவனுடைய கிருபைக்குத் தாழ்ச்சியாய்ப் போகாமலும், யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பி, கலகம் உண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாமலும் இருக்கக் கவனித்துப் பாருங்கள். எபி. 12, 14. 15.

அநேகக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமார்க்கம் இலேசான மார்க்கமென்று நினைக்கிறார்கள். அவர்கள் கோவிலுக்கு வந்து இராப்போசனம் புசித்துக் காலையிலும் மாலையிலும் ஜெபம் செய்தாலும் தங்கள் நடக்கையினாலே இயேசுநாதருக்கு ஊழியம் செய்து எல்லாக் காரியங்களிலும் அவருடைய பரிசுத்த ஆவிக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறதில்லை. பரிசுத்தமாகுதலின்றி ஒருவனும் ஆண்டவரைத் தரிசிப்பதில்லை. இந்தப் பரிசுத்தமாகுதலில் பிறத்தியானைச் சிநேகிக்கும் சிநேகம் ஒரு பங்கு.

உலகம் தன் சுய நன்மையைத் தேடி உன்னுடைய நன்மையையும் சுகத்தையும் கவனிக்கிறதில்லை. உன் இருதயமும் சுய நன்மையைத் தேடிப் பிறத்தியானுக்குப் பிரியமானதைக் கவனிக்கிறதில்லை. இதினாலே நிரக் கோபமும் சண்டையும் பிறக்கும். பகை நிறைந்த உன் இருதயம் கோபமான வார்த்தைகளோடு தன் நியாயத்தைத் தேடும். ஒரு கிறிஸ்தவனோ அநியாயமடைந்தாலும் சமாதானத்தை விடமாட்டான். பகை, கோபம், சண்டை, சச்சரவு ஆகிய இவைகள் தேவ கிருபைக்கு உன்னை விலக்கும். ஆகையால் உன் இருதயமும் நாவும் கசப்பாகாதபடி அவைகளைக் காப்பாற்றிக்கொள். அந்தப்படியே நீ பின்புறணியினாலும் பொய்யினாலும் சண்டையுண்டாக்காதபடி எச்சரிக்கையாய் இரு. நியாயத்தீர்ப்பின் நாளிலே நீ உனக்காக மாத்திரமல்ல, உன் குற்றத்தினாலே கெட்டவர்களுக்காகவும் விசாரிக்கப்படுவாய். அப்போது “நீங்கள் ஒருவரோடொருவர் சிநேகமுள்ளவர்களாயிருந்தால் இதினால் எல்லாரும் நீங்கள் எனக்குச் சீஷரென்றறிவார்கள்” என்கிற வார்த்தை உன்னைக் குற்றப்படுத்தும்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது சீஷராகிய நாங்கள், தேவரீர் எங்களுக்கு வைத்த மாதிரியைப் பின்தொடரக் கடமைப்பட்டவர்கள். எங்கள் இருதயமோ சிநேகமற்றுக் கடினமாயிருக்கிறது. நாங்கள் உண்மையோடே உம்மைப் பின்தொடர எங்களுக்கு உமதாவி

யைத் தந்து உமதன்பின் தீயை எங்களில் மூட்டியருளும், சுவாமி, ஆமென்.

1 இராசா. 18, 1-19. அல்லது எபிரே. 8, 1-13. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். இருபத்தோராம் வாரம், சனி.

பி. 134, 1. 2.

ஐந்தாம் பகுதி நியாயம்: (தொடர்ச்சி.) தின்று குடிப்பது இத்தனை பெரிய நன்மைகளைச் செய்வதெப்படி?

தின்று குடிப்பது இவைகளைச் செய்கிறதல்லவே. இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறதென்றும் சிந்தப்படுகிறதென்றும் சொல்லுகிற வார்த்தைகளே இவைகளைச் செய்கிறது. தின்று குடிப்பதோடு இந்த வார்த்தைகளே கர்த்தருடைய இராப்போசனத்தில் பிரதான பொருளாயிருக்கிறது. இந்த வார்த்தைகளை விசுவாசிக்கிறவன் இவைகளில் சொல்லி இருக்கிற பாவமன்னிப்பைப் பெற்றிருக்கிறான்.

சொல்லி முடியாத பரம நன்மைகளை நாம் இராப்போசனத்தில் வாங்குகிறோம். குற்றம் சுமந்தவர்களாக நாம் தேவாலயத்திற்குப் போய் நீதிமான்கள் ஆக்கப்பட்டவர்களாக வீட்டுக்குத் திரும்புகிறோம்.

சப்பாணிகளும் குருடரும் அந்தப் பெரிய விருந்துக்கு வந்ததுபோல நாமும் ஆண்டவருடைய விருந்துக்கு வருகிறோம். ஏழைகளாக வந்து சொல்லி முடியாத செல்வத்தைப் பெற்று நாம் வீட்டுக்குத் திரும்புகிறோம்.

இராப்போசனம் ஞானஸ்நானத்தைப்போல் தேவ வசனத்தினாலேயே அவ்வளவு பெலன் அடைந்திருக்கிறது. உங்களுக்காகப் பாவமன்னிப்புக்கென்று கொடுக்கப்படுகிறதென்றும் சிந்தப்படுகிறதென்றும் சொல்லுகிற வார்த்தையினாலே இராப்போசனம் கிருபையாய் இரட்சிக்கக் கூடிய போசனமாகிறது. இங்கே பசியுள்ளவர்களுக்கு ஆகாரமும் தாகம் உள்ளவர்களுக்குத் தண்ணீரும் அகப்படும். கிருபையின் ஊற்று இன்னம் ஊறுகிறது. நீ அதில் மொண்டு வாடிப் போகும் உன் ஆத்துமத்தை அதினால் குளிரப்பண்ணு.

உங்களுக்காகப் பாவமன்னிப்புக்கென்று கொடுக்கப்படுகிறதென்றும் சிந்தப்படுகிறதென்றும் சொல்லுகிற வார்த்தைகளை நம்புகிறவன் சமாதானத்தோடு மோட்சத்தில் சேருவான். தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மை எல்லாப் பாவங்களுமறச் சுத்திகரிக்கிறது.

ஜெபம். பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டி,—அடியார் மேலிரங்கும், நீர் சமாதானம் தாரும், சுவாமி, ஆமென்.

இராசா. 18, 20-46. அல்லது எபி. 9, 1-10. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். இருபத்திரண்டாம் வாரம், ஞாயிறு.

பி. 167, 1. 2.

அப்போது அவன் எசமான் அவனை அழைப்பித்து, அவனுடனே: பொல்லாத பணிவிடைக்காரா, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் யாவையும் உனக்கு மன்னித்து விட்டேனே, நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் பணிவிடைத் தோழனுக்கு இரங்கவேண்டியதாய் இருந்ததல்லவோ என்று சொல்லி, அவனுடைய எசமான் கோபமடைந்து, அவன் தனக்குப் பட்ட கடனை எல்லாம் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான். மத். 18, 32-35.

இந்தப் பொல்லாத பணிவிடைக்காரன் தன் எசமானிடம் இரக்கம் பெற்றும் தன் தோழனுக்கு இரங்கமாட்டான். அவன் எசமான் அவனுக்குப் பதினாயிரம் தாலந்து கடனை மன்னித்தும், தன் தோழனை நூறு வெள்ளிக்காசுக்காகச் சிறைச்சாலையில் போடுவிக்கிறான். நீ உன் இருதயத்தைக் கா. இந்தப் பொல்லாதவனின் குணம் உன்னிலும் இருக்கிறதா இல்லையா என்று பார். தேவன் உனக்கு, உன் பெரிய கடனை மன்னித்தாலொழிய நீ கெட்டுப்போய் சபிக்கப்பட்டவனாவாய். நீ உண்மையாய் மன்னிப்பைக் கேட்டால், அவர் உனக்கு, உன் பெரிய பாவங்களையும் மன்னிப்பார். அப்படி மன்னிப்பைப் பெற்ற நீ உன்னை வருத்தப்படுத்தின சகோதரனுக்கு மன்னிக்க மனதாயிருக்கிறாயா?

இந்தப் பொல்லாத பணிவிடைக்காரனைப் பார். அவன் தோழனுக்குச் செய்த அநியாயத்தை எசமான் பார்த்து ஏனோதானோவென்று பேசாமலிருக்கவில்லை. அவன் கோபம் கொண்டு தான் மன்னித்த கடனைக் கொடுக்கும்படி அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புவிக்கிறான். இரங்காதவன் இரக்கம் பெறான். ஆகையால் நீ எச்சரிக்கையாயிரு. சகோதரருக்கு மன்னிக்காதவர்களுக்கு தேவன் மன்னிக்கமாட்டார். இரக்கமில்லாதவனுக்கு இரக்கமில்லாத ஆக்கினை நேரிடும். ஆண்டவர்: நீங்கள் உங்கள் சகோதரருக்கு மனதார மன்னியாதே போனீர்களாகில் என் பரமபிதாவும் உங்களுக்கு மன்னியார் என்று சொல்லுகிறார்.

நீ கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லும்போதெல்லாம் அவர் உனக்கு எப்படி மன்னிக்கிறாரோ அப்படியே நீயும் உன் சகோதரருக்கு மன்னிப்பதாக வாக்களிக்கிறாய். நீ பொல்லாத பணிவிடைக்காரனைப்போல ஆகிவிடக்கூடாதபடி இந்த வாக்கை நிறைவேற்றிவா.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! உமது இரக்கத்தின்படி எங்களுக்கு மன்னித்து எங்களை உமது மோட்ச இராச்சியத்தில் சேர்க்க மனதாயிருக்கிறீர். உமது பிள்ளைகளாகிய நாங்கள் உமக்கு ஒப்பாக எங்கள் பிறத்தியாருக்கு இரக்கத்தையும் அன்பையும் பாராட்ட எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

1 இராசா. 19, 1-21 அல்லது யோ. 7 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்திரண்டாம் வாரம், திங்கள்.

ஞ. 175, 1. 2.

முதல் நாள் தொடங்கி இந்நாள் வரைக்கும் நீங்கள் சுவிசேஷத்துக்காக அன்னியோன்னிய ஐக்கியமுள்ளவர்களென்று, நான் உங்களை நினைக்கிறபோதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரித்து, உங்கள் அனைவருக்காகவும் நான் பண்ணுகிற எல்லா ஜெபத்திலும் எப்போதும் சந்தோஷத்துடனே விண்ணப்பஞ்செய்து, உங்களில் நற்கிரியையைத் துவக்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் மட்டாக முடிய நடத்தி வருவாரென்கிறதையே நம்பியிருக்கிறேன். பிலி. 1, 3-6

பவுல் அப்போஸ்தலன் பிலிப்பி பட்டணத்திலுள்ள சபையை நினைக்கும்போதெல்லாம் சந்தோஷமுற்று ஆண்டவருக்குத் தோத்திரஞ் செலுத்துகிறான். ஆண்டவர் அவர்களில் நற்கிரியையைத் துவக்கினார். சுவிசேஷம் அவர்களுக்குள் பலனடைந்தது. அவர்கள் விசுவாசத்தினாலே கிறிஸ்துவின் சரீரத்தில் உயிருள்ள அவயவங்களும் பரம திராட்சச் செடியில் நல்ல கொடிகளுமானார்கள். தேவ கிருபை என்னில் விருதாவாய்ப் போகவில்லை என்று சொல்லக்கூடியவன் எல்லாரிலும் பாக்கியமுள்ளவன். விசுவாசத்துக்கு வந்தவன் விசுவாசத்தில் நிலைத்திருக்கக் கடவான். நிற்கிறவனென்பவன் உண்மையுள்ளவனாய் நிலைத்திருக்கக் கடவான். அது இலேசல்ல. நாலு திக்கிலும் மாயைகளும், லோகமும், பிசாசும் நம்மைச் சோதித்து வருகின்றன. பெலவீனராகிய நாம் வெகு இலேசாய் மனமயங்கி விசுவாசத்தை விட்டுத் தடுமாறிப் போகிறோம். அதைப் பார்க்கிற நமக்கு விசுவாசத்தின் முடிவாகிய ஆத்துமத்தின் இரட்சிப்பை

அடைவோம் என்கிற நம்பிக்கை எங்கேயிருந்து வருகிறது? உங்களில் நற்கிரியையைத் துவக்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் மட்டாக முடிய நடத்தி வருவார் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். தேவன் உண்மையுள்ளவர். அவருடைய கிருபை எல்லாச் சத்துருக்களிலும் வல்லமையுள்ளது. உண்மையாய் மோட்சத்தைத் தேடுகிறவன் ஒருபோதும் மலைத்துப் போக வேண்டியதில்லை. உன் பெலவீனத்தை நினைத்து உன் பாவத்தினால் திகிலடையும்போதெல்லாம் நீ சர்வ வல்லவருடைய வாக்குத்தத்தத்தை நினைத்துக்கொள்.

ஜெபம். எங்கள் அன்புள்ள இரட்சகரே! உமது திருச்சபையில் சேர்ந்த நாங்கள் எல்லாரும் உமது ஐக்கியத்தில் நிலைத்திருந்து எங்களுக்குள் எல்லாச் சண்டையையும் நீக்கிச் சமாதானமாய் இருப்பதற்கு உமது பரம நேசத்தை எங்கள் இருதயங்களில் ஊற்றியருளும், சுவாமி, ஆமேன்.

1 இராசா. 21, 1-29 அல்லது எபிரே. 9, 11-22 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்திரண்டாம் வாரம், செவ்வாய்.

ஞ. 175, 3. 4.

அப்பொழுது பேதுரு அவரண்டை வந்து: ஆண்டவரே, எனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்து வருகிற என் சகோதரனுக்கு எத்தனை தரம் மன்னிப்பேன்; ஏழுதரமட்டுமோ என்றான். இயேசு அவனுக்குச் சொன்னதாவது: ஏழுதரமட்டும் என்றல்ல, எழுபதுவிசை ஏழுதரமாகும் மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மத். 18, 21. 22.

தன்னை வருத்தப்படுத்தின சகோதரனுக்கு மன்னிக்க வேண்டியது தன் கடமை என்று பேதுரு அறிவான். ஆயினும் அவன் ஆண்டவருடைய ஆவியை இன்னும் முற்றிலும் உடையவனல்ல. மன்னிப்பது புறம்பான கிரியை என்றும் அதற்கு ஒரு எல்லையுண்டு என்றும் நினைக்கிறான். ஏழுதரம் மன்னித்தால் போதுமோவென்று கேட்கிறான்.

புறம்பான கிரியைகளை ஆண்டவர் மதிக்கமாட்டார். அவர் இருதயத்தைப் பார்க்கிறார். அன்பு நிறைந்த இருதயத்தை ஆண்டவர் தமது சீஷரிடம் தேடுகிறார். அந்த அன்பு ஒருபோதும் குளிர்ந்து போகாது. ஆண்டவருடைய சீஷன் எழுபது தரம் மன்னித்தால் போதுமென்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். ஏழுதரம் அல்ல, எழுபதுவிசை ஏழுதரம் என்று ஆண்டவர் சொல்

துகிறார். நீ மன்னித்ததை எண்ணிப் பார்க்கவேண்டாம் என்று இதினாலே நமக்குத் தெரியவருகிறது. சகோதரனுக்கு மன்னித்த சமயங்களை எண்ணிப் பார்க்கிறவன் உண்மையில் இன்னும் மன்னிக்கவில்லை. உண்மையான அன்பு எண்ணிப்பார்க்க மாட்டாது. தேவனும் நாம் மன்னிப்பைக் கேட்ட சமயங்களை எண்ணமாட்டார். அவர் திரும்பத் திரும்ப நமக்கு மன்னிக்கிறார். அவர் நமக்கு எப்படிச் செய்கிறாரோ அப்படி நாமும் சகோதரருக்குச் செய்ய வேண்டியது. அவருடைய அன்பு நம்மை ஆண்டால் நாமும் அவரைப்போல் நமது சத்துருக்களுக்கும் மன்னிக்கப் பெலனைப் பெறுவோம். அதனாலே நாம் அவருக்குச் சீஷர் என்று உலகத்தார் அறிவார்கள்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! எல்லாருக்கும் மன்னித்து எல்லா அநியாயத்தையும் நிந்தனைத்தையும் சகித்து நீர் தேவனால் அனுப்பப்பட்டவரென்று ரூபித்தீர். கர்த்தாவே, இப்பேர்ப்பட்ட பரம குணத்தை எங்கள் இருதயங்களில் தந்து எங்களை மென்மேலும் உமக்கு ஒப்பாக்கியருளும், சுவாமி, ஆமென்.

1 இராசா. 22, 1-28 அல்லது எபிரே. 9, 23. 28 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்திரண்டாம் வாரம், புதன்.

பி. 175, 5. 6.

சகல கசப்பும் மூர்க்கமும் கடுங்கோபமும் தூஷணமும் எல்லாத் துர்க்குணமும் கூட உங்களை விட்டு ஒழிந்துபோகக் கடவது. நீங்களோ ஒருவருக்கொருவர் அன்பும் மன உருக்கமுமாகி, பராபரன் கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். எபே. 4, 31. 32

அநேகம் கேடான காரியங்களை அப்போஸ்தலன் இங்கே நமக்குக் காண்பிக்கிறார். அவைகளினால் எவ்வளவோ சேதமும் துன்பமும் வேதனையும் மனுஷருக்குள் உண்டாகிறது.

கசப்பும் மூர்க்கமும் கோபமும் உற்பத்தியாகும் காரணமென்ன? அடிக்கடி ஒரு அற்பக் காரியத்தின்பேரில் சண்டையுண்டாகி வீட்டின் சமாதானம் கெட்டுப் போகிறதுண்டு. நாம் சண்டை கேட்டதற்காக விசனப்பட்டாலும் சமாதானத்துக்கு வர மனமற்றிருப்பதுண்டு.

ஒரு கிறிஸ்தவன் ஒருபோதும் கசப்புக்கும் மூர்க்கத்துக்கும் கோபத்துக்கும் தன் இருதயத்தில் இடம் கொடுக்கக்

கூடாது. அவன் தன் நாவினால் பிறத்தியான்பேரில் பின்புறணி பேசக் கூடாது. மெத்தனவுள்ளவர்களும் சமாதானத்தை நடப்பிக்கிறவர்களும் பாக்கியவான்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பும் மன உருக்கமுமாகித் தேவன் கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்று அப்போஸ்தலன் கற்பிக்கிறான். நான் மன்னிப்பேன், ஆகிலும் மறக்கமாட்டேன் என்று சொல்லுகிறவன் உண்மையில் மன்னிக்காதவன்தான். ஒருவன் சகோதரனை நோக்கி நான் உனக்கு மன்னிக்கிறேன் என்று சொல்லியும் உள்ளத்தில் கோபத்தை வைத்திருந்தால் அவன் மன்னித்தேதுமில்லை. தேவன் கிறிஸ்துவுக்குள் நமக்கு அப்படி மன்னிக்கவில்லை. அவர் நமக்கு மன்னிக்கையில், தாராளமான அன்பினால் நிறைந்த தமது முழு இருதயத்தையும் நமக்குத் திறக்கிறார்.

நீ உண்மையாய்த் தேவனுடைய மன்னிப்பைத் தேடி, அவர் உன் இரகசியமான கோபத்தையும் மூர்க்கத்தையும் எல்லாம் மன்னிக்கவேண்டுமென்று மன்றாடு. மன்றாடி, நீ பெற்ற இரக்கத்தை மற்றவர்களுக்குக் காண்பித்து வா. தேவ இரக்கத்திலிருந்து பிறத்தியானை சிநேகிக்கிற சிநேகம் பிறக்கும்.

ஜெபம். எங்கள் பரம பிதாவே! உம்மைப்போல் நாங்களும் இரக்கமுள்ளவர்களாவதற்கு உமது குமாரன் எங்களுக்காகச் சம்பாதித்த இரட்சிப்பை எங்களுக்குக் காண்பித்தருளும். உமது ஆவி எங்கள் இருதயங்களைப் பரிசுத்தப்படுத்துவாராக, சுவாமி, ஆமென்.

1 இராசா. 22, 29-54 அல்லது எபிரே. 10, 1-10 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்திரண்டாம் வாரம், வியாழன்.

பி. 175, 7. 8.

சகோதரரே, ஒரு மனுஷன் யாதொரு தப்பிதத்திலே அகப்பட்டுக் கொண்டாலும், ஆவியைப் பெற்றிருக்கிற நீங்கள் மெத்தனவின் ஆவியாலே இப்படிக்கொத்தவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள், நீயுஞ் சோதிக்கப்படாதபடி உன்னையே கவனித்திரு. ஒருவர் பாரங்களை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். கலா. 6, 1. 2.

உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்தானேயாகில், போய் நீயும் அவனுமாயிருக்க, அவனைக் கடிந்துகொள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஒரு மனுஷன் யா

தொரு* தப்பிதத்தில் அகப்பட்டுக் கொண்டாலும் மெத்தன
வின் ஆவியினாலே அவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள் என்று
அப்போஸ்தலன் சொல்லுகிறான். பிறத்தியானுக்குப் பொல்
லாப்புச் செய்யாமலிருந்தால் போதும் என்று நாம நினைக்கக்
கூடாது. ஒரு தப்பிதத்தில் அகப்பட்டுக்கொண்ட நமது சகோ
தரனைக் கைவிடக் கூடாது. அவனை மெத்தனவுடன் சீர்பொ
ருந்தப் பண்ணவேண்டும். அவனுக்காக ஜெபம் செய்து அவனை
எச்சரித்துப் புத்திசொல்லிச் செம்மையான வழிக்குக் கொண்டு
வரப் பார்ப்பது அவசியம்.

அப்படிச் செய்கையில் நாமும் எச்சரிக்கையாயிருக்க
வேண்டும். நாம் பிறத்தியானுக்கு உதவிசெய்யப் போகும்போது
சத்துருவாகிய பிசாசு நம்மை அணுகி நாம் மெத்த நல்ல மனுஷர்
என்று நம்மை ஏமாற்றப் பார்ப்பான். பரிசேயனைப் போல
இறுமாப்புடன் உன் சகோதரனுக்குப் புத்திசொல்லாதே. நீயும்
சோதிக்கப்படாதபடி உன்னையே நோக்கியிரு என்று அப்போஸ்
தலன் சொல்லுகிறபடியால் நீ உன்னுடைய தப்பிதங்களையும் குறைவு
களையும் பார். உன் சகோதரனிடத்தில் நீ கடிந்துகொண்ட பாவத்
துக்குள் நீயே விழக் கூடும். ஆகையால் ஆண்டவர் உன்னைச்
சோதனைக்கும் பாவத்துக்கும் விலக்கிக் காப்பாற்றும்படி அவரை
வேண்டிக்கொள். நீ உண்மையான இரக்கத்தோடு உன் பிறத்
தியானுடைய பாரத்தை உன் பாரமாகச் சுமந்து கொள்ளும்படி
அவர் உனக்கு இரக்கம் செய்ய அவரை நோக்கி ஜெபம் செய்.
கிறீஸ்து உன்னைச் சிநேகித்தது போல நீயும் உன் பிறத்தியானைச்
சிநேகி. அப்போது கிறீஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்று
வாய். நீங்கள் ஒருவரையொருவர் சிநேகியுங்களென்பது கிறீஸ்து
வின் கட்டளை.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! ஏழைப் பாவிகளாகிய எங்களை
இரட்சிக்க உமது மகிமையை விட்டு இந்த இருண்ட உலகத்துக்கு
இறங்கி வந்தீர். இந்த அன்பை நாங்கள் நன்றாய் அறிந்து அந்தப்படி
எங்கள் சகோதரருக்குச் செய்ய எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும்,
சுவாமி, ஆமென்.

2 இராஜா. 1, 1-18 அல்லது எபிரே. 10, 11-18 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிக். இருபத்திரண்டாம் வாரம், வெள்ளி.

பி. 180, 1-3.

"ஏனென்றால் அவனவன் தன் சரீரத்தினால் நடப்பித்த நன்மைக்
காகிலும் தீமைக்காகிலும் தக்கவைகளை அடையும்படி, நாம் எல்லாரும்

கிறீஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்
டியது. 2 கொரி. 5, 10.

பொல்லாத பணிவிடைக்காரன் தன் பொல்லாப்போடு
எஜமானுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்க வேண்டியதா
யிருந்ததுபோல நாம் எல்லாரும் இயேசு கிறீஸ்துவின் நியாயா
சனத்துக்கு முன்பாக நிற்கவேண்டும். ஒரே விசை மரிக்கிறதும்
அதற்குப் பிற்பாடு நியாயத்தீர்ப்பும் மனுஷருக்குக் குறித்திருக்
கிறது. இப்பூமியில் நமது ஜீவியகாலம் முடிந்தபின் நாம் எல்
லாரும் நியாயந்தீர்க்கப்படுவோம். இப்பூமியில் அநேகங் காரியங்
கள் நமக்கு மறைவாயிருந்தும் அங்கே அவை வெட்ட வெளிச்ச
மாகும். இங்கே அநேகம் பேர் பொய் சொல்லித் தண்டனைக்
குத் தப்புவார்கள். கிறீஸ்துவுக்கு முன்பாகப் பொய் சொல்லுவ
தால் பிரயோசனமிராது. அங்கே தப்பலாம் என்று நினையாதே.
எல்லாம் வெளிப்படும். தேவன் முகமாட்டமுள்ளவர் அல்ல.
அவனவன் தன் தன் சரீரத்தினால் நடப்பித்த நன்மைக்காகிலும்
தீமைக்காகிலும் தக்கவைகளை அப்போது அடைவான்.

ஆகையால் நீ என்ன செய்தாலும் உன் முடிவையும் நீ
நியாயாதிபதிக்கு முன்பாக நிற்கும் நேரத்தையும் யோசித்துச்
செய். அவர் அந்தகாரத்திலுள்ளதையும் வெளிச்சத்துக்குக்
கொண்டுவருவார். தேவன் உன்னை நியாயந் தீர்க்காதபடி நீயே
உன்னை நாள்தோறும் நியாயந் தீர்த்துக்கொள். ஒவ்வொரு நாள்
சாயங்காலத்திலும் நீ அந்த நாளைக் கழித்த விதத்தைச் சோ
தித்துப் பார். பரிசுத்த தேவனே, நான் இன்றைக்கு உமது சமு
கத்துக்கு முன்பாக நடந்துகொண்டேனா, என் எண்ணங்கள்
பாவமற்றதாகவும் என் வார்த்தைகள் உமது வசனத்திற்கு ஏற்ற
தாகவும் என் கிரியைகள் உமக்குப் பிரியமானதாகவும் இருந்ததா
என்று கேள். உன்னைக் கபடில்லாமல் விசாரித்துப் பார்த்துக்
கிருபையும் இரட்சிப்புமுள்ளவரிடத்தில் அடைக்கலம் தேடு. அப்
போது நியாயத்தீர்ப்பின் நாளிலே உன் நியாயாதிபதியும் இரட்ச
கருமாகிய ஆண்டவரைப் பற்றும் விசுவாசத்தினால தப்பிப்
பிழைப்பாய்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! நீர், உலகத்தை நியாயந்
தீர்க்க வரும்போது நாங்களும் உமக்கு முன்பாக நின்று உமக்குக் கணக்கு
ஒப்புவிக்க வேண்டியவர்கள். கர்த்தாவே, நாங்கள் அப்போது தைரி
யத்தோடு உமக்கு முன்பாக நிற்கும்படி எங்களைச் சீக்கிரம் குணப்படுத்தி
யருளும், சுவாமி, ஆமென்.

2 இராஜா. 2, 1-25 அல்லது எபிரே. 10, 19-25 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்திரண்டாம் வாரம், சனி.

ம. 180, 4-6.

ஐந்தாம் ஆதி நியாயம். தொடர்ச்சி. கர்த்தருடைய இராப்போசனத்தைப் பாத்திரமாய் வாங்கத் தக்கவனார்?

உபவாசம் முதலிய சரீர ஒடுக்கம் புறம்பான நல்லொழுக்கந்தானே. ஆனால் இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறதென்றும் சிந்தப்படுகிறதென்றும் சொல்லுகிற வார்த்தைகளை விசுவாசிக்கிறவனே இதற்கு நல்ல ஆயத்தப்பட்டவனும் பாத்திரனுமாய் இருக்கிறான். இந்த வார்த்தைகளை விசுவாசியாதவனும் சந்தேகப்படுகிறவனும் இதற்கு அபாத்திரனும் ஆயத்தமில்லாதவனுமாயிருக்கிறான். ஏனெனில் உங்களுக்காக என்கிற வார்த்தைக்குப் பூரண விசுவாசமுள்ள இருதயமே தேவை.

பரிசுத்த இராப்போசனத்தில் உன் இரட்சகர் தாமே தமது சரீரத்தோடும் இரத்தத்தோடும் உன்னண்டை வருகிறார். அவரை ஏற்றுக்கொள்வதற்கு இராப்போசனம் வாங்கும் முன் ஒன்றும் சாப்பிடக் கூடாதென்று அநேகர் நினைக்கிறார்கள். தற்காலத்திலும் இந்த வழக்கத்தை அநுசரித்து வருகிறவர் சிலர் உண்டு. ஆயினும் சரீரத்தை வருத்துவது அல்ல, உலக ஆசாபாசங்களுக்கும் பேய்களுக்கும் விலகிப்போவதே கிறிஸ்தவர்களுக்கேற்ற உபவாசமாம். இதுவும் முக்கியமல்ல. உங்களுக்காக என்கிற வார்த்தையை விசுவாசிக்கிறவனே இந்த இராப்போசனத்துக்கு நல்லாயத்தப்பட்டவன்.

உங்களுக்காக என்கிற வார்த்தைக்குப் பூரண விசுவாசமுள்ள இருதயமே தேவை. மெய்யான தேவனும் மனுஷனுமான கிறிஸ்துவானவரையன்றி வேறே கிறிஸ்து நமது பாவங்களுக்காக பலி செலுத்தினது கூடாத காரியம். இதை நம்பித் தன் பாவங்களுக்காகத் திகிலடைந்து அவைகளை அற்பமாக எண்ணுகிற கிறிஸ்துவினால் மாத்திரம் ஆறுதலடையும்படி விசுவாசத்தோடே இந்த இராப்போசனத்துக்குச் சேருகிறவனே, இராப்போசன ஆசீர்வாதத்தைப் பெறுவான்.

ஜெபம். எங்கள் பரம பிரதான ஆசாரியரே! உமது திரு இரத்தத்தினால் எங்களை மீட்டு, திரு இராப்போசனத்தினால் இந்த மீட்பில் எங்களுக்குப் பங்களிக்கிறதற்காக உமக்குத் தோத்திரம். தயவுள்ள சுவாமி, எங்கள் மெய்ம் மனஸ்தாபத்தோடும் விசுவாசத்தோடும் உமது பந்தியில் சேர எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், ஆமேன்.

2 இராசா. 4, 8-37. அல்லது எபி. [illegible], 26-30. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து மூன்றும் வாரம், ஞாயிறு.

பி. 281, 1. 2.

அவர்களுடனே: இராயனுடையதை இராயனுக்கும் பராபரனுடையதைப் பராபரனுக்கும் செலுத்துங்களென்றார். மத். 22, 21.

இயேசுநாதர், பரிசேயருடைய சீஷருக்கும் ஏரோது இராசாவின் சேவகருக்கும் இவ்வாறு பதிலுரைத்து, இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ என்று கேட்ட சத்துருக்களுடைய சதியைக் குலைத்துப்போட்டார். இதனால் தமது சீஷர்கள் இந்த உலகத்தில் நடக்கவேண்டிய விதத்தைத் தெளிவாய்க் காண்பித்தார். நாம் இராயனுடையதை இராயனுக்கும் பராபரனுடையதைப் பராபரனுக்கும் செலுத்தவேண்டும். இராயனுக்குரியது என்ன? வணக்கமும் சுங்கமும் உண்மையான கீழ்ப்படிதலும் சொத்தும் பிராணனுந்தான். பராபரனுக்குச் செலுத்தவேண்டியதென்ன? அவர் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்ததால் அவருக்கு எல்லாம் சொந்தம். ஆதலால் நாம் அவருக்கு நம்மையும் நம்முடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் ஆவியையும் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள்.

இராயனுடையதை இராயனுக்குச் செலுத்ாதவன் பராபரனுடையதைப் பராபரனுக்கும் செலுத்தான். அவன் பராபரனுடைய கற்பனைக்கும் சட்டத்துக்கும் கீழ்ப்படியான். ஒரு ஜனம் முன்னுக்கு வரவேண்டுமானால், உண்மையும் தேவபக்தியும் விசுவாசமும் அன்பும் அதற்கு இருக்கவேண்டும். கிறிஸ்துவுக்குண்மையுள்ளோன் இராஜாவுக்கும் உண்மை பாராட்டுவான். அதிகாரத்தையும் ஆளுகையையும் எதிர்க்கிறவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல. அவர்கள் தேவ வசனத்துக்கும் கீழ்ப்படியாதவர்கள்.

அதிகாரிகள் தேவ வசனத்துக்கு விரோதமான ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னால், அப்போது மனுஷரைப் பார்க்கிலும் தேவனுக்கு அதிகமாய்க் கீழ்ப்படியவேண்டும். இதினால் ஒரு கிறிஸ்தவனுக்குத் துன்பம் வரும் காலத்தில் தேவன் சித்தம் பொறுமையோடே அவன் அதைச் சகித்துத் தான் இராசாவுக்கு உண்மையாய்க் கீழ்ப்படிகிறவன் என்று காண்பிப்பான்.

ஜெபம். எங்கள் பரம இராசாவாகிய பராபரனே! எங்களுக்கு நீதியுள்ள இராஜாங்கத்தை அருளினதற்காக உமக்குத் தோத்திரம். நாங்கள் உண்மையோடே உமக்கும், தேவரீர் எங்கள் மேல் வைத்த எஜ

கள் அரசனுக்கும் கீழ்ப்படிந்து எங்கள் கடமைகளை நிறைவேற்ற எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

2 இராசா. 5, 1-27. அல்லது சங். 85. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து மூன்றாம் வாரம், திங்கள்.

பி, 231, 3. 4.

அநேகர் நடக்கையைக் குறித்து அவர்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையின் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரஞ் சொன்னேன், இப்போதோ அழுகையோடே சொல்லுகிறேன். பூமிக்கடுத்த சிந்தையான அவர்களுடைய முடிவு அழிவு தானே; அவர்கள் தேவன் வயிறு; அவர்கள் மகிமை அவர்கள் இலச்சையில் இருக்கிறது. பிலி. 3, 18. 19.

அழிவுக்குக் கொண்டுபோகும் வழியில் செல்லும் அநேகரைப் பற்றி அப்போஸ்தலன் கண்ணீரோடே இங்கே எழுதுகிறான். இரட்சிக்கப்பட அவர்களுக்கு மனதில்லை. இதைப் பார்த்து அவன் அழுகிறான். அவர்கள் இரட்சிக்கப்படாமல் போகக் காரணம் கிறிஸ்துவின் சிலுவை தங்களுக்கு வேண்டாம் என்று அவர்கள் சொல்வதே. தங்களை வெறுத்துத் தங்கள் மாம்சத்தைத் துர் ஆசை இச்சைகளோடே சிலுவையிலறைந்து பிழைக்கும் பரிசுத்த பிழைப்பு அவர்களுக்குப் பிரியமில்லை. அவர்கள் பாவத்துக்குச் செத்து உலகத்தைப் பகைக்கமாட்டார்கள். அவர்கள் உலக சிந்தையுள்ளவர்கள். அவர்கள் யோசனைகளும் ஆசைகளும் இப்பூமியோடே சம்பந்தப்பட்டவை. இப்பூமியின் இன்பத்தை நாடி இப்பூமியின் பொருளைத் தேடி வருகிறார்கள். அவர்களுக்கு வயிறே தெய்வம். அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்த அந்த மனுஷனைப்போல இருக்கவேண்டுமென்று இருக்கிறார்கள். அதினாலே அவர்கள் ஆத்துமா கெட்டு, அவர்கள் ஞானமெல்லாம் ஒழிந்து, அவர்கள் மேன்மை கெட்டுப்போகிறது. பரமபிதாவானவர் அவர்களைத் தமது பிள்ளைகளாகவும் நித்திய ஜீவ சுதந்தரராகவும் ஏற்றுக்கொண்டாலும் அவர்கள் இந்த உலகத்தை நேசிக்கிறார்கள். அவர்கள் முடிவு அக்கினி தான். ஒழிந்து போகும் சிற்றின்பங்களையும் சுகத்தையும் தேடுகிற உலகத்தார் உன்னையும் தங்கள் கூட்டத்தில் ஒருவனாக்கிக் கொள்ளாதபடி எச்சரிக்கையாயிரு. பெரும்பாலோர் இப்பூமிக்காக வானத்தையும், கூழுக்காக நித்திய சுதந்தரத்தையும், சிற்றின்பத்துக்காகப் பேரின்பத்தையும் விற்றுப் போட்டாலும், நீ

என் சந்நிதியில் பாவியாகத் திரிகிறதென்று பவுல் அப்போஸ்தலனோடே சொல்லக் கூடியவனாயிரு.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது மோட்ச இராச்சியத்தைத் தேடுகிற நாங்கள், இந்த உலகத்தின் கண்ணிகளில் சிக்கிக்கொள்ளாதபடி எங்களைக் காரும். கர்த்தர் கிறிஸ்துவின் சிலுவையைப் பகைக்காமல் அதைச் சுமந்து எங்கள் ஆசை இச்சைகளைக் கொன்று பரிசுத்தமாய் நடக்க எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமென்.

2 இராசா. 6, 8-23 அல்லது எபிரே. 11, 1-10 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து மூன்றாம் வாரம், செவ்வாய்.

பி. 283, 1. 2.

எந்த ஆத்துமாவும் மேற்பட்ட அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கக் கடவது; ஏனெனில் பராபரனால் உண்டாகாத அதிகாரம் இல்லை, உண்டான அதிகாரங்கள் பராபரனாலே கட்டளையிடப் பட்டவைகள். ஆனதுகொண்டு அதிகாரத்துக்கு எதிர்க்கிறவன் பராபரனுடைய கட்டளைக்கு எதிர்க்கிறான், எதிர்க்கிறவர்களோ தங்களுக்குத் தாங்களே ஆக்கினையைச் சம்பாதிக்கிறார்கள். ரோ. 13, 1. 2.

ரோமாபுரியில் நீரோ சக்கரவர்த்தி கொடுங்கோல் செலுத்துங் காலத்தில் அங்குள்ள கிறிஸ்தவர்களுக்குப் பவுல் அப்போஸ்தலன் இப்படி எழுதினான். இப்படிப்பட்ட அதிபர ஆளுகையும் பராபரனால் உண்டானதென்று சொல்லுகிறான். அதிகாரிகள் ஒழுங்குக்காகவும் க்ஷேமத்துக்காகவும் நீதிக்காகவும் கவலைப்படுவார்கள். ஆகையால் மனிதர் அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். கீழ்ப்படியாதவர்களைக் கீழ்ப்படியும்படி கட்டாயம்பண்ணி அக்கிரமக்காரரைத் தண்டிப்பது அவர்கள் கடமை. இக்கடமையையும் அதிகாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார்? எந்த ஆளுகையும் பராபரனால் உண்டானது. பராபரனே அதிகாரிகளுக்கு அதிகாரத்தையும் கடமையையும் கொடுத்தவர். இப்பூமியின் ஆளுகை தேவ ஆளுகையின்மேல் ஆதாரப்பட்டது. தேவ கிருபையினாலே இராஜாக்களும் பிரபுக்களும் தங்கள் தேசத்தை ஆண்டு வருகிறார்கள்.

உண்மைப்படி இராஜாக்களுக்கும் மற்ற மனுஷருக்கும் வித்தியாசமில்லை. ஆகிலும் தேவன் தமக்குப் பதிலாகச் செங்கோல் செலுத்திப் பொல்லாதவர்களைத் தண்டிக்கும்படி அவர்களுக்கு

அந்த உத்தியோகத்தைக் கொடுத்திருப்பதால் இராஜாக்கள் மேலானவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்திருப்பது கிறிஸ்தவனுடைய கடமை. அவன் அதிகாரத்தைக் கவிழ்க்க வேண்டுமென்றிருக்கிறவர்களோடு சேரமாட்டான். எந்த ஆத்துமாவும் மேற்பட்ட அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கக் கடவது என்கிற கற்பனை எல்லாருக்கும் செல்லும். நீ யாராயிருந்தாலும் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியவேண்டும். அதிகாரத்தைக் குலைக்க முயலுகிறவன் தேசத்தின் வாழ்வையும் சமாதானத்தையும் அமைதலையும் அழிக்கிறதுமன்றி, தேவனுடைய சட்டத்துக்கும் கீழ்ப்படியாதே போகிறான். இப்படிக் கீழ்ப்படியாதவர்களைப் பராபரன் தண்டியாமல் விடார்.

குடிகள் அதிகாரிகளைத் தேவ ஊழியரென்றெண்ணி அவர்களுக்குக் கீழ்ப்படிகிற தேசத்தில், சமாதானம் ஆளும். அங்கே சங்கீதக்காரன் சொன்னதுபோல நீதியும் சமாதானமும் ஒன்றுக்கொன்று முத்திசெய்யும்.

ஜெபம். எங்கள் பரமபிதாவே! எங்கள் தேசத்தில் சமாதானத்தையும் நீதியுள்ள ஆளுகையையும் கட்டளையிட்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம். தேவரீர் எங்களுக்கு மேலாக வைத்திருக்கும் அதிகாரிகளுக்கு நாங்கள் சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் கீழ்ப்படிந்து உம்மை மகிமைப்படுத்த எங்களுக்குக் கிருபை செய்யும், சுவாமி, ஆமென்.

1 இராசா. 9, 1-15 அல்லது எபிரே. 11, 13-22 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்து மூன்றாம் வாரம், புதன்.

பி. 283, 3. 4.

நாம் உங்களைச் சிறைப்பட்டுப் போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத்தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம் பண்ணுங்கள். ஏனெனில் அதற்குச் சமாதானம் இருக்கையில், உங்களுக்கும் சமாதானம் இருக்கும். எரே. 29, 7.

நீங்களிருக்கும் பட்டணத்தின் சமாதானத்தைத் தேடுங்கள் என்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியைக்கொண்டு யூதருக்குக் கற்பித்தார். அது இலேசான கட்டளை அல்ல. ஏனெனில் அந்தப் பட்டணம் தாவீது இராசாவினுடைய பட்டணமாகிய எருசலேம் அல்ல. அது தங்கள் பாவத்தினிமித்தம் அவர்கள் சிறைப்பட்டுப்போன பாபேல் பட்டணந்தான். அந்தப் பட்டணத்தினால் எருசலேமுக்கு அழிவும் ஆக்கினையும் வந்திருந்தது.

தா[illegible]இருக்கும் ஊர் அந்நிய ஊராயிருந்தும், அதின் அதிகாரிகள் அஞ்ஞானிகளாயிருந்தும், அந்தப் பட்டணத்தின் சமாதானத்தைத் தேடுங்கள், எல்லா அதிகாரத்துக்கும் கீழ்ப்படியுங்கள், இராயனுக்கு இராயனுடையதைச் செலுத்துங்கள் என்கிற கட்டளை அதில் குடியிருக்கும் பராபரனுடைய ஜனத்துக்குச் செல்லும். பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி அதற்காகக் கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணுங்கள். ஏனெனில் அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும். அதற்குச் சமாதானம் இல்லாதே போய் அதில் கலகமும் சண்டையும் உண்டாகி அக்கிரமம் அதிகரித்தால், அதில் குடியிருக்கிற எவருக்கும் சுகம் இராது. அவ்வூரில் அமைதலாய் ஜீவனம் பண்ணக் கூடியவன் ஒருவனுமிரான்.

நமது தேசத்தில் கிறிஸ்தவ ஆளுகை ஏற்பட்டிருக்கிறது. நாம் தேவனுக்கு ஊழியம் செய்து கிறிஸ்தவர்களாய் யாதொரு ஆபத்தும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது சக்கரவர்த்தியும் தேவனுடையதைத் தேவனுக்குச் செலுத்துகிறார். இந்த நன்மைகளுக்காக நாம் தேவனுக்குத் தோத்திரம் செலுத்துவோமாக. நமது தேசத்தின் சமாதானத்தைத் தேடுவோமாக. அதற்குச் சுகமிருந்தால், நமக்கும் சுகம் உண்டு.

ஜெபம். இரக்கமுள்ள பராபரனே! கிறிஸ்தவ ஆளுகையால் எங்கள் தேசத்துக்குச் சமாதானத்தை அருளி எங்களுக்கு அனுதினமும் அளவற்ற நன்மைகளைச் செய்து வருகிறீர். தேவரீர் எங்களுக்கு அருளின சமாதானத்தை நாங்கள் அநுபவித்து எங்களால் ஆனமட்டும் எங்கள் தேச விர்த்தியையும் சுகத்தையும் தேட எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

2 இராசா. 9, 16-37 அல்லது எபிரே. 11, 23-40 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்து மூன்றாம் வாரம், வியாழன்.

பி. 283, 5. 6.

நாம் எல்லாத் தேவபக்தியிலும் இலச்சணத்திலும் அமளியற்ற அமர்ந்த ஜீவனம் பண்ணும்படி எல்லா மனுஷருக்காகவும், இராசாக்களுக்காகவும், மேன்மையுள்ள அனைவருக்காகவும், விண்ணப்பங்களும் ஜெபங்களும், வேண்டுதல்களும் ஸ்தோத்திரங்களும் செய்யப்பட எல்லாவற்றிற்கும் முந்தப் புத்தி சொல்லுகிறேன். 1 தீமோ. 2, 1. 2.

நாம் கிறிஸ்தவ அரசாங்கத்துக்குக் கீழ்ப்பட்ட குடிகளாயிருக்கிறோம். இராஜாங்கத்தார் பிரஜைகளின் நன்மையைத் தேடி

வருகிறார்கள். அவர்கள் நீதிதப்பி ஆளுகை செய்தால் பிரஜைகளுடைய பிரியத்தை இழந்து போவார்களென்பதை நாம் மறக்கக் கூடாது. ஆகிலும் அவர்கள் எல்லாருக்கும் ஏற்க ஆளவு முடியாது. சர்வ வல்லமையும் ஞானமுமுள்ள தேவன் கூட எல்லாருக்கும் பிரியம் வர உலகத்தை ஆண்டுகொள்ளாமற் போனால் ஏழை மனுஷனாலே என்ன முடியும். ஆகையால் அதிகாரிகள் செய்வது உனக்குப் பிரியமில்லையானாலும் அவர்களுக்கு விரோதமாய் முறுமுறுக்காதே. கிறிஸ்தவனாக உனக்கிருக்கும் கடமையை இனி. அப்போஸ்தலன் எல்லா மனுஷருக்காகவும் இராஜாக்களுக்காகவும் மேன்மையுள்ள அனைவருக்காகவும் விண்ணப்பம், ஜெபம், வேண்டுதல், தோத்திரம் செய்ய எல்லாவற்றிற்கும் முந்திப் புத்தி சொல்லுகிறேன் என்கிறான்.

—கிறிஸ்தவர்கள் முந்தத் தங்கள் அதிகாரிகளுக்காகத் தோத்திரம் செலுத்த வேண்டியது. அதிகாரிகளைத் தூஷிப்பது அநேகருக்குப் பிரியம். தங்களுக்கு எல்லா ஞானமும் வந்து விட்டது போல் பேசுகிறார்கள். நாமோ அப்படிப்பட்டவர்களுக்குச் செவிகொடாமல், கர்த்தராகிய பராபரன் நமது தேசத்தை ஆள்வோரைக்கொண்டு நமக்குச் செய்துவரும் பெரிய நன்மைகளைக் கவனித்துப் பார்த்து அவருக்குத் தோத்திரஞ் செலுத்துவோமாக.

இரண்டாவது வேண்டுதல் செய்வதும் அவசியம். எல்லாவற்றிலும் உத்தரவாதமுள்ள உத்தியோகத்தை வகித்திருப்போர் அதைச் சரிவரச் செய்யக் கூடியவர்களாகும்படி நாம் அவர்களுக்காக அதிகமாய் ஜெபஞ்செய்யவேண்டியது. மேலும் இராயனுக்கு ஞானமுள்ள இருதயத்தையும் தேசத்துக்கு நீதியையும் சமாதானத்தையும் கட்டளையிட வேண்டுமென்று கிறிஸ்தவர்கள் விண்ணப்பம் செய்வது நியாயம். ஒரு கிறிஸ்தவன் அதிகாரிகளுக்குச் செலுத்திவருகிற எல்லாக் கடமைகளிலும் அவர்களுக்காக விண்ணப்பம் செய்தலே சிறந்த கடமையாம்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! அதிகாரத்தை இராஜாக்களுக்குக் கொடுத்து அவர்களை உமக்குப் பதிலாக நியமித்தீர். இராசாதி இராசாவாகிய நீரே அவர்களுக்கு நோக்கி, அவர்கள் உமது சித்தத்தின்படி தேசத்தை ஆண்டுகொள்ள அவர்களுக்கு ஞானத்தையும் ஆசீர்வாதத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

2 இராசா. 10, 1-25 அல்லது எபிரே. 12, 1-11 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து மூன்றும் வாரம், வெள்ளி.

பா. 283, 7. 8.

இந்த லோகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் துர்வகையாய் அனுபவியாதவர்களாக இருக்கவேண்டும் என்கிறதையே சொல்லுகிறேன், ஏனெனில் இந்த லோகத்தினுடைய வேஷம் போகிறது. 1 கொரி. 7, 31.

கிறிஸ்தவர்களாகிய நாம் தேவசித்தப்படி இவ்வுலகில் வாழவேண்டும். ஆகிலும் நாம் உலக நன்மைகளையும் இன்பங்களையும் அனுபவிக்கலாமா என்கிற சந்தேகம் நமது மனச்சாட்சியில் உண்டாகிறது. நாடக சாலைக்குப் போவதும் சீட்டு விளையாடுவதும் நியாயமா? இது நியாயமென்றும் அது நியாயமல்ல என்றும் திடமென்று தீர்க்க முடியாது. ஒருவனுக்குப் பாவமாய் முடிவது இன்னொருவனுக்குப் பாவத்துக் கேதுவாய் இராது. விழிப்பில்லாமல் பேதமான காரியங்களைச் செய்யத் துவக்கினால் கேட்டுக்கிடமாகும். ஒருவன் சீட்டு விளையாடுகிறதினாலே தன் கடமைகளை மறந்து பண ஆசைக்குட்பட நேரிடுமானால், அவன் சீட்டு விளையாடக் கூடாது. இதைப்போன்ற நன்மையும் தீமையுமல்லாத பல காரியங்களுண்டு. அவைகளை ஜாக்கிரதையில்லாமல் செய்தால் மோசம் வரும்.

இந்த உலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் துர்வகையாய் அனுபவிக்கக் கூடாது என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். ஒவ்வொருவனும் வேத வசனத்தின் வெளிச்சத்தைக் கொண்டு தன்னைச் சோதித்துப் பார்த்து, நன்மை இன்னதென்றும் தீமை இன்னதென்றும் பகுத்தறிவது அவசியம்.

நாம் ஜாக்கிரதையாய் நடப்பதற்குப் பிரயாசப்படுவோமாக. ஒருவனுக்கு மோசம் இராத இடத்தில் இன்னொருவன் மோசம் போகக் கூடும். நாம் உட்கொள்ளும் ஆகாயம் நம்மைச் சூழ்ந்திருப்பது போலவே சோதனைகளும் நம்மை எங்கும் சூழ்ந்திருக்கின்றன. இந்த உலகத்தின் வேஷம் நிலையற்றதென்றும் நிலையுள்ள நன்மைகளும் இன்பங்களும் நமக்குப் பரலோகத்தில் கிடைக்கும் என்றும் நாம் மறவாதிருந்தால் அப்போது நாம் நம்முடைய அழியாத ஆத்துமத்தை இந்த உலகத்தில் இழந்து போகாமல் இவ்வுலகத்தை எப்போதும் சரியாய் அனுபவிப்போம்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! உமது பாடுகளினாலும் மரணத்தினாலும் எங்களை இந்த உலகத்திலிருந்து மீட்டு இரட்சித்தீர். கர்த்தாவே, நாங்கள் மறுபடியும் இந்த உலகத்தோடு சேர்ந்து கெட்டுப்போ

சாதபடி எங்களைக் காப்பாற்றி எங்கள் உடம்பின் இருப்பிடையும் ஆத்துமாவையும் கண்டுபிடிக்க எங்களுக்குக் கிருபைசெய்யும், சுவாமி, ஆமென்.

2 இராசா. 11, 1-21 அல்லது பலிசே. 12, 1?-29 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து மூன்றாம் வாரம், சனி.

பி. 283, 9. 10.

நீங்கள் கழுவப்பட்டீர்கள், நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும் நமது பராபரனுடைய ஆவியினாலும் தானே. எல்லாவற்றிற்கும் எனக்கு அதிகாரமுண்டு, ஆனால் எல்லாம் பிரயோசனமாயிராது. எல்லாவற்றிற்கும் எனக்கு அதிகாரமுண்டு, ஆனால் நான் ஒன்றின் அதிகாரத்துக்குங் கீழாவதில்லை. 1 கொரி. 6, 11. 12.

விசுவாசத்தினால் மனுஷன் எல்லாவற்றுக்கும் எஜமானாகிறான். இயேசுகிறீஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் அவன் பாவமறக் கழுவப்பட்டுப் பரிசுத்தமாகித் தேவனுக்கு முன்பாக நீதிமானாகி, பாவ அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்றுப் பரம பிதாவுக்குப் பிள்ளையாகி [illegible] ஸ்தோத்திரத்தோடே பிதா அருளின நன்மைகளை அநுபவிக்கிறான்.

தேவன் சிருஷ்டித்த யாவும் நல்லதே, ஸ்தோத்திரத்தோடே அநுபவிப்பதொன்றும் தள்ளுபடியானதல்ல என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். ஆகிலும், பாவம் நம்மில் ஒட்டிக்கொண்டிருப்பதினால் தேவனுடைய நல்ல வரங்களிலும் ஒரு மோசம் மறைந்திருக்கக் கூடும். எல்லாவற்றிற்கும் எனக்கு அதிகாரமுண்டு, ஆனால் எல்லாம் பிரயோசனமாயிராது என்று சொல்லியிருப்பதால் ஒவ்வொருவரும் தனக்குப் பிரயோசனமானது இன்னதென்று சோதித்துப் பார்க்கவேண்டும். ஒரு காரியத்தினால் உன் ஆத்துமா இடறலட்டு உன் ஜெபத்துக்கு இடையூறு வந்தால் நீ அந்தக் காரியத்தை [illegible] விலகிப்போ. நீ விடுதலையானபின் மறுபடியும் உன் விடுதலையை இழந்துபோய்ச் சிறைப்பட்டு உலகத்துக்கு ஆளாகாதபடி ஜாக்கிரதையாயிரு. உன் இருதயம் அழிந்து போகும் சிருஷ்டிக்குக் கீழ்ப்படிய வேண்டாம். நீ தேவனுக்கு உன் இருதயத்தைத் தந்து அவரை எப்போதும் உன் கண்களுக்கு முன்பாகவும் இருதயத்துக்குள்ளாகவும் வைத்தால் நீ எல்லாவற்றுக்கும் எஜமானாயிருப்பாய்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! இந்த லோகத்திலிருக்கிற உமது பிள்ளைகளாகிய நாங்கள், தேவரீர் எங்களுக்கு அருளி வருகிற பற்பல நன்மைகளை அநுபவித்து வருகிறோம். ஆண்டவரே, நாங்கள் ஒருபோதும் உம்மை மறவாமல் உம்மை முழு மனதோடும் துதித்து ஸ்தோத்திரிக்க எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி, ஆமென்.

2 இராசா. 12, 1-21 அல்லது பலிசே. 13, 1-17 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து நாலாம் வாரம், ஞாயிறு.

பி. 309, 1. 2.

இயேசு தலைவனின் வீட்டிலே வந்து தாரைக்காரரையும் இரைகிற சனக்கூட்டத்தையுங் கண்டு, அவர்களை நோக்கி: அகலப்போங்கள், பெண்பிள்ளை மரித்திராமல் நித்திரை பண்ணுகிறாளென்றார். அவர்களோ அவரை நகைத்தார்கள். ஜனங்கள் வெளியே துரத்தப்பட்டபின், அவர் உட்பிரவேசித்து, அதின் கையைப் பிடித்தார். அப்போது சிறுபெண் எழுந்திருந்தது. இந்தக் கீர்த்தி அத்தேசத்தில் எங்கும் பிரபலியமாயிற்று. மத். 9, 23-26.

பணிந்துகொள்கிற தலைவன், செத்துப்போன தன் மகளை விட்டு இயேசுநாதரண்டை வந்து: என் மகள் இக்கேரத்தில் செத்துப்போனாள்; ஆகிலும் நீர் வந்து அவள் மேல் கையை வையும், அப்போது பிழைப்பாள் என்று கெஞ்சுகிறான்.

இயேசுநாதர் உன் வீட்டுக்கு வரும்படி நீயும் அவரை வேண்டிக்கொள். அவர் வியாதியஸ்தரும் சாகிறவர்களும் கிடக்கிற ஒவ்வொரு வீட்டிற்கும் வரவேண்டும். அவர் மெய்யான வைத்தியர். அவர் சாகிறவர்களுக்கு ஜீவனைக் கொடுத்துத் துன்பப்படுகிறவர்களை ஆற்றித்தேற்றுவார்.

கப்பர்க்குடியிலே தாரைக்காரரும் ஸ்திரீகளும் ஆறுதலில்லாமல் துக்கங் கொண்டாடினார்கள். அகலப்போங்கள், பெண்பிள்ளை மரித்திராமல் நித்திரைபண்ணுகிறது என்று ஆண்டவர் சொன்னார். மனுஷருடைய மரணம் அவருக்குத் தூக்கமாகத் தோன்றுகிறது. ஜனங்களோ அவரை நகைத்தார்கள். மரணத்தை வெல்லும் ஜீவாதிபதியை அவர்கள் அறியவில்லை. தாமே உயிர்த்து மரணத்தின் அதிகாரத்தை அழித்துப்போட்ட அவரை நீ அறிந்திருக்கிறாய். உனக்கருமையானவர்கள் சாகும்வேளையில் நீ அவர்களை ஆண்டவர் கையில் ஒப்புவித்துக் கர்த்தாவே, இவர்கள் உம்முடையவர்கள்; தேவரீர் இவர்களை இரட்சியும் என்று சொல். செத்துப்போன பெண்ணை இயேசுநாதர் கைபிடித்தெழுப்பினது போல் நமக்கருமையானவர்கள் கையையும் பிடித்தெழுப்பு

வார். அவர்கள் கல்லறையில் அடங்கினாலும் சர்வ வல்லமையுள்ளவருடைய கையினால் காக்கப்படுவார்கள். உயிர்த்தெழும் நாளிலே அவர் அவர்களை எழுப்பி நமக்குத் திரும்பக் கொடுப்பார்.

ஜெபம். சர்வ வல்லமையுள்ள பராபரனே! ஜீவனுக்கும் மரணத்துக்கும் ஆண்டவரே! தேவரீர் இவ்வுலகில் எங்களை எப்படிக் காப்பாற்றி வருகிறீரோ அப்படியே கல்லறையிலும் எங்களைக் காப்பாற்றக் கூடியவர் நீரே. ஆதலால் நாங்கள் மரணத்துக்கு அஞ்சாமல் அதின்வழியாகச் சந்தோஷத்தோடு உம்மண்டை சேருவதற்கு நாங்களுக்கொத்தாசை பண்ணும், சுவாமி, ஆமென்.

2 இராஜா. 13, 1-25, அல்லது சங். 39 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்து நாலாம் வாரம், திங்கள்.

பி. 309, 3. 4.

வெளிச்சத்திலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரப் பங்குக்கு நம்மை ஏற்றவர்களாக்கின பிதாவுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். அவர் நம்மை அந்தகாரத்தின் அதிகாரத்துக்கு நீங்கலாக்கி, தமது நேச குமாரனுடைய இராச்சியத்துக்கு உட்படுத்தி வைத்தார். இவருக்குள் நமக்கு இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்புண்டாயிருக்கிறது. கொலோ. 1, 12-14.

ஒரு கிறிஸ்தவனுக்குப் பிறர் பொருட்டு மன்றாடவும் தோத்திரம் செலுத்தவும் அறுதின அநுவலாய் இருக்க வேண்டும். பிதா வெளிச்சத்திலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரப் பங்குக்கு நம்மை ஏற்றவர்களாக்கினார் என்கிற வார்த்தையிலும் ஒரு கிறிஸ்தவன் தோத்திரம் செலுத்துவதற்கு அவனை ஏவும் காரணத்தை அப்போஸ்தலன் காட்டுகிறார்.

ஞானஸ்நானத்தினால் நாம் தேவனுடைய பிள்ளைகளும் நித்திய ஜீவ சுதந்தரருமாகிறோம். நாம் பாவமில்லாதவர்களாக அல்ல, தேவனால் நீதிமான்களாக்கப்பட்டவர்களாகவே அச்சுதந்தரத்தைப் பெறுகிறோம். அவர் நம்மை அந்தகாரத்தின் அதிகாரத்துக்கு நீங்கலாக்கித் தமது நேச குமாரனுடைய இராச்சியத்துக்குட்படுத்தி வைத்தார். நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து அந்தகாரம் நிறைந்த சாத்தானுடைய இராச்சியத்தை அழித்துப் போட்டார். அவர் நம்மைப் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் பிசாசின் வல்லமையிலிருந்தும், விடுவிக்கக் கூடாத தமது

பரிசுத்த இரத்தத்தினாலே மீட்டிரட்சித்தார். அதினாலே நாம் அவருக்குச் சொந்தமாகி இம்மையில் அவருடைய கிருபையின் இராச்சியத்திலும் மறுமையில் அவருடைய மகிமையின் இராச்சியத்திலும் வாழ்ந்திருக்கக் கூடும். நாம் இங்கே அவரது இராச்சியத்தில் நிலைத்திருந்து அங்கே நித்திய பாக்கியத்தைப் படையும்படி பாவமன்னிப்புத் தேவை.

கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் பாவமன்னிப்பைப் பெற்றிருக்கிறபடியினாலே அவருக்குத் தோத்திரம் செலுத்துவோமாக. நாம் தினந்தோறும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்தருளும் என்று மன்றாடினால் பரம பிதா வெளிச்சத்திலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரப் பங்குக்கு நம்மை ஏற்றவர்களாக்கிவிடுவார்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! தேவரீர் எங்களுக்கு ஆயத்தம் பண்ணின நித்திய பாக்கியத்துக்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் இந்தப் பாக்கியத்தை இழந்துபோகாமல் அதைக் கடைசி நாளிலே சுதந்தரித்துக்கொள்வதற்கு எங்களை வழி நடப்பியருளும், சுவாமி, ஆமென்.

2 இராஜா. 14, 1-29, அல்லது எபிரே. 13, 18-25. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்து நாலாம் வாரம், செவ்வாய்.

பி. 301, 5. 6.

மரித்தோருடைய உயிர்த்தெழுதலைக் குறித்துப் பராபரனால் உங்களுக்கு உரைக்கப்பட்டதை நீங்கள் வாசிக்கவில்லையோ, நான் ஆபிரகாமுடைய பராபரனும், ஈசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாயிருக்கிறேன் என்றாரே. பராபரன் மரித்தோருடைய பராபரனாயிராமல், ஜீவனுள்ளோருடைய பராபரனாயிருக்கிறார் என்றார். மத். 22, 31. 32.

இந்த வார்த்தைகளை இயேசுநாதர், உயிர்த்தெழுதலை மறுத்த சதுசேயருக்குச் சொன்னார். இறந்துபோனபின் ஒன்றுமில்லையென்று சொல்லுகிறவர்கள் தற்காலத்திலும் அநேகருண்டு. இவர்கள், இம்மையில் சுகமடைவதற்கானதை யெல்லாம் செய்யுங்கள், மறுமை என்பதே கிடையாது என்று சொல்லுவார்கள். உயிர்த்தெழுதலும் நியாயத்தீர்ப்பும் உண்டென்று விசுவாசிக்க இவர்களுக்கு மனதில்லை. இவர்கள் விசுவாசியாவிட்டாலும் பராபரன் மரித்தோருக்குப் பராபரனல்ல. மரித்தோரும் அவருக்கு முன்பாகப் பிழைக்கிறார்கள். முற்றிலும் அழிந்து போகுதல்

என்பது இல்லையாது. சரீரம், மரணத்துக்குப் பின் அழுகும் சாம்பலுமாய்ப் போய்விட்டாலும் ஆத்துமா அழியாதும் உயிரோடிருக்கும். சரீரமும் கர்த்தருடைய நாளிலே திரும்ப உயிர்க்கும். அப்போது இவர் நித்திய ஜீவனுக்கும் சிலரோ நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் எழுந்திருப்பார்கள். பராபரன் ஜீவனுள்ளோருடைய பராபரன். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மரித்து வெகு காலமாகியும் இன்னும் அவர் அவர்களுடைய தேவனாகத் தம்மை மோசேக்கு வெளிப்படுத்தினார். அவர்கள் அவரை நம்பி இறந்து போனார்கள். ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடும்போது தேவன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கப் பண்ண வல்லவரென்று எண்ணினான். வல்லமையுள்ள இவரே கல்லறைகளில் தூங்குகிற எல்லாருக்கும் ஆண்டவர். அவருக்கு முன்பாக யாவும் [illegible]. தேவகுமாரனாகிய இயேசு இறந்து நமக்கு உயிர்த்தெழுதல் உண்டு என்று நன்றாய்க் காண்பித்தார். அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார். அவரை நம்புகிறவன் மரித்தாலும் பிழைப்பான். பராபரன் [illegible] காலில் எழுப்பி எனக்கும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற யாவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுப்பார் என்று எல்லாக் கிறிஸ்தவர்களோடு நீயும் அறிக்கையிடு.

ஜெபம். நித்திய பிதாவே, பர்வதங்கள் தோன்றும் முன்னும் நீர் பூமியையும் பூச்சக்கரத்தையும் உருவாக்குமுன்னும் தேவரீர் அநாதியாய் என்றென்றைக்கும் பராபரனாயிருக்கிறீர். தேவரீர் எங்களைத் [illegible] சந்ததிகளுக்கும் [illegible] வருஷங்களுக்கும் அடைக்கலம் எங்களை மகிழ்ச்சியாக்கும், சுவாமி, ஆமென்.

2 இரா. 16, 1-20 அல்லது யாக். 1, 1-18 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து நாலாம் வாரம், புதன்.

பா. 318, 5.

வானத்திலிருந்து உண்டாகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன்; அது என்னுடனே சொன்னதாவது: கர்த்தருக்குள் சாகிற மரித்தோர் இது முதலாய்ப் பாக்கியவான்கள் என்று எழுது; ஆம், அவர்கள் தங்கள் வேலைகளை விட்டு இளைப்பாறத் தக்கதாக என்று ஆவியானவர் சொல்லுகிறார். அவர்கள் கிரியைகளோ அவர்களுடனே கூடப் பின் செல்லுகிறது என்றது. அதி. 14, 13.

கல்லறைகளின் மேல் ஒரு சிலுவையை நாட்டி அதிலே மேற்சொன்ன வாக்கியத்தை எழுதிவைக்கிறது நல்ல வழக்கம். பாக்கியவான்கள் என்றால் ஆனந்தத்தையும் சந்தோஷத்தையும் பூரண திருப்தியையும் உடையவர்களென்று அர்த்தம். தேவன் நமது இரட்சகராகிய இயேசுவின் மூலமாக மாத்திரம் மெய்ப் பாக்கியத்தை அளிக்கிறார். அவர் மூலமாய் நமது ஆத்துமங்களுக்கு இம்மையிலும் இளைப்பாறுதலைக் கண்டடைவோம். நமது பாவமும், பிறருடைய பாவமும், கவலையும், வியாதியும், துன்பமும் இம்மையில் நமது பாக்கியத்தைக் குறைக்கிறதுண்டு. சாகுமுன் ஒருவரையும் பாக்கியவான் என்று சொல்லக்கூடாது. மரணத்திலேதான் பூரணபாக்கியம் வருகிறது. ஆயினும் மரிக்கிற எல்லாரும் பாக்கியவான்களல்ல.

கர்த்தருக்குள் சாகிற மரித்தோரே பாக்கியவான்கள். அவர்கள் கர்த்தரை விசுவாசித்துப் பிரியமாய்ச் சேவித்து இந்தப் பூமியில் அவருக்குள் வாழ்ந்திருந்தவர்கள். இது முதலாய் என்று வானத்திலிருந்து உண்டான அந்தச் சத்தத்திற்கு அர்த்தமென்னவென்றால், ஆத்துமா சரீரத்தை விட்டவுடனே அந்தப் பாக்கியம் தொடங்குகிறது என்பது தான். உடனே ஆத்துமா தன் ஆண்டவருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கிறது. பாக்கியவான்கள் தங்கள் வேலைகளை விட்டு இளைப்பாறுகிறார்கள். அவர்களுடைய வேலைகள் அவர்களுக்கு முன்னாலே போய் அவர்களுக்கு மோக்ஷ கதவைத் திறக்கவில்லை; தேவ கிருபை மாத்திரம் அவர்கள் நித்திய வாழ்வை யடையக் காரணம். ஆயினும் தேவனை நேசித்து அவர்கள் செய்த நற்கிரியைகள் அவர்களோடு தேவ சந்நிதிக்கு வந்து அவருடைய கிருபை நம்மில் வீணாயிருந்ததில்லை என்பதற்குச் சாட்சியாகும். அவர் நாம் செய்த ஒன்றையும் மறக்காமல் எல்லாவற்றையும் நினைவுகூருவார்.

ஜெபம். கிருபையுள்ள பிதாவே, உமதுடைய ஜனத்துக்கு இளைப்பாறுகிற காலத்தை ஆயத்தம் பண்ணினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கப் பிரயாசைப் படுவதற்கு எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமென்.

2 இராசா. 17, 1-23 அல்லது யாக். 1, 19-27 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து நாலாம் வாரம், வியாழன்.

பி. 309, 7. 8.

இவைகளை அவர் பேசினபிறகு அவர்களுடனே: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரைபோகிறான்; ஆனால் அவனை எழுப்பப் போகிறேன் என்றார். யோவா. 11, 11.

இயேசுநாதர் வந்து தங்கும் வீடு பாக்கியமுள்ளது. அவர் மார்த்தாளையும் அவள் சகோதரியாகிய மரியாளையும் லாசருவையும் சிநேகித்தார். லாசருவைத் தமக்குச் சிநேகிதன் என்றார். நம்மையும் தமக்குச் சிநேகிதர் என்பாரானால் நாம் பாக்கியவான்கள். கர்த்தர் நம்மைச் சிநேகிப்பாரானால் எல்லாம் நமக்கு நன்மையாகவே வாய்க்கும். வியாதி வருங்காலத்திலும் கூட நாம் மார்த்தாளைப்போல ஒருவருக்காக ஒருவர் ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று ஜெபம் செய்வோம்.

இயேசுநாதர், லாசருவின் வியாதி மரணத்துக்கென்றல்ல, தேவனுடைய மகிமைக்கென்றே வந்ததென்று சொல்லிச் சகோதரிகளை ஆற்றித்தேற்றினார். தேவனுடைய மகிமையோ மனுஷருக்கு எப்போதும் நன்மையும் ஆசீர்வாதமுமாம். தகுந்த காலத்தில் ஒத்தாசை செய்வார். அவர் நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்தும்படிக்கு ஒருவேளை தாமதம் செய்வார். அவர் சாகுமுன் நம்மை இரட்சிக்காவிட்டாலும் சாகும்போதே இரட்சிப்பார்.

லாசரு மரித்தது இயேசுநாதருக்குத் தெரியும். அவர் தமது சீஷர்களை நோக்கி நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரைபோகிறான். ஆயினும் நான் போய் அவனை எழுப்புவேன் என்றார். அவர் சரீர நித்திரையைப் பற்றிப் பேசுகிறதாக அவர்கள் நினைத்ததினால் லாசரு மரித்தான் என்று அவர் சொன்னார். எல்லாவற்றையும் அறிந்த ஆண்டவர் சர்வ வல்லமையுள்ள தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். ஆகையால் லாசரு தூங்குகிறான் என்கிறார். இந்த வார்த்தையினால் அவர் மரணத்தின்மேல் தமக்கு அதிகாரம் இருப்பதாக எல்லோருக்கும் ருசுப்படுத்தினார். நீ இதை நம்பினால் கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லு. அவர் உன்னையும் நித்திய ஜீவனுக்கென்று எழுப்புவார்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! நாங்கள் மரணத்திலும் நம்பிக்கையற்றுப் போகாமல் மரணத்தையும் நரகத்தையும் மேற்கொண்ட தேவரீரைக் கெட்டியாய்ப் பிடித்து இந்த உலகத்தைவிட்டுப் போகும்போது நித்திய ஜீவனை அடைவதற்கு எங்களுக்கு உமது ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

2 இராசா. 18, 1-37. அல்லது யாக். 2, 1-13. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து நாலாம் வாரம், வெள்ளி.

பி. 3[illegible], 9. 10.

நம்முடைய சஞ்சரிப்போ பரமண்டலங்களில் இருக்கிறது; அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவாகிய இரட்சகரை வரப் பார்த்துக்கொண்டும் இருக்கிறோம். அவர் தமக்கு எல்லாவற்றையும் கீழ்ப்படுத்திக்கொள்ள வல்லமையான தம்முடைய பலத்தின்படியே, நம்முடைய தாழ்மையான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். பிலி. 3, 20, 21.

நம்முடைய சஞ்சரிப்பு வானத்திலுள்ளது என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். கிறிஸ்தவர்களாகிய நாம் இப்பூமியில் பரதேசிகளும் அன்னியருமாயிருந்து பரமபிதாவின் வீட்டை நோக்கிப் பயணம்பண்ணுகிறோம். சொந்த வீட்டுக்குத் திரும்புகிறவர்கள் இருதயமும் நினைவும் அந்த வீட்டின்மேலேயே செல்லும். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளைத் நாடி மேலான அழைப்பின் பந்தயத்தையே இலக்காகத் தொடருகிறேன் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். நாமும் முன்னானவைகளைத் தேடுகிறவர்களானால் நம்முடைய இருதயங்கள் உலக சிந்தையினாலும் இப்பூமியின் இன்ப துன்பங்களினாலும் நிறைந்திருக்கக் கூடாது. பரலோக சிந்தையினால் நிறைந்திருப்பது பரலோகத்தில் சஞ்சரிக்கிறவனுக்கு இயல்பாம். பரலோகத்தில் உள்ளதைச் சிநேகிப்பதும், வரும் இரட்சிப்பை எதிர்பார்ப்பதும் அவனுக்கு ஆனந்தம். கிறிஸ்தவர்கள் சந்தோஷத்தோடு காத்திருந்து தங்கள் இரட்சகரை எதிர்பார்க்கிறார்கள். ஆண்டவர் புதுப் பூமியில் நமக்குக் கொடுக்கப் போகிற புதுச் சரீரத்தை அடைய ஆசிக்கிறோம். நம்முடைய சரீரம் இப்பூமியில் கஷ்டத்துக்கும் வியாகுலத்துக்கும் வியாதிக்கும் உள்ளாகிக் கடைசியில் மரணத்தால் அழுகிச் சாம்பலுமாய்ப் போய் விடும். இந்தச் சரீரத்தை நாம் போட்டுவிடுவோம். நமக்குக் கிடைக்கும் புதுச் சரீரமோ எல்லாப் பலவீனங்களும் அழிவுமின்றி இயேசுவின் சரீரத்தைப் போல அழகும் மேன்மையுமுள்ளதாயிருக்கும்.

இப்படி இயேசுநாதர் இந்த மரண சரீரத்துக்கு நம்மை நீங்கலாக்கி விடுவார். தமக்கு எல்லாவற்றையும் கீழ்ப்படுத்திக் கொள்ள வல்லமையான தம்முடைய பலத்தின்படியே அதைச் செய்வார்.

ஜெபம், சர்வ வல்லமையுள்ள இரட்சகரே! தேவரீர் கல்லறையை விட்டுப் பரத்துக்கேறி உமது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து எல்லாவற்றையும் ஆண்டு நடத்திவருகிறீர். உமது வல்லமையை நம்புகிற

நாங்கள் மரணத்திற்கும் அஞ்சமாட்டோம். உமது இரக்கத்தினால் எங்களை நித்திய ஜீவனுக்கென்று எழுப்பியருளும், சுவாமி, ஆமென்.

2 இராசா. 19, 1-37. அல்லது யாக். 2, 14-26. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்து நாலாம் வாரம், சனி.

ஷ. 309, 11. 12.

எங்கள் ஆயுசு நாட்களில் எழுபது வருஷமும், வெகு பலத்திருந்தால் எண்பது வருஷமுமுண்டு; அவைகளில் மேன்மையானதோ பிரயாசமும் வீணுமாமே. எனெனில் சீக்கிரமாய் அறுப்புண்டு பறந்து போகிறோம். உமது கோபத்தின் வல்லமையும் உமது சினத்தையும் உமக்குப் பயப்படத்தக்க பயமாய் அறிந்துகொள்ளுகிறவன் யார். நாங்கள் ஞானமுள்ள இருதயத்தைத் தரித்துக்கொள்ளும்படியாக எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குக் கட்டளையிடும். சங். 90, 10-12.

இலைகள் மரத்தினின்று உதிர்ந்து பட்டுப்போவதுபோல மனுஷருடைய சரீரங்களும் பட்டுப்போய் விழுகிறன. மோயீசென்பவரும் சங்கீதத்தில் அப்படிப் பிரசங்கிக்கிறார். மனுஷனுடைய ஆயுசு சுருக்கமானது. அநேகர் இளம்பருவத்தில் செத்துப்போவார்கள். சீக்கிரமாய் அறுப்புண்டு பறந்துபோகிறோம். மனுஷ ஆயுளின் இன்பம் அற்பமாய் விசாரப்படத்தக்கதாயிருப்பதற்குக் காரணம் என்னவென்றால் நம்முடைய பாவத்தின் பேரிலுள்ள தேவ கோபமே. முள்ளுகள் குருக்கும் முளைப்பிக்கும் பூமியையும் உன் வேலையின் வருத்தத்தால் முகத்தில் வடியும் வேர்வையையும் உன் ஆயுசின் சுருக்கத்தையும் கவனித்து, தேவனுடைய சாபம் இன்னதென்று அறிந்துகொள். அது இவ்வளவென்று சொல்ல முடியாது. அதைப்பற்றி யோசித்தால் நமது மனம் திகில் அடையும். அந்தத் திகிலை நாம் அசட்டைபண்ணலாகாது. நாங்கள் ஞானமுள்ள இருதயத்தைத் தரித்துக்கொள்ளும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குக் கட்டளையிடும் என்று ஜெபித்து வா. மரணத்தை நினைத்தால் நமக்குப் புத்தி வரும். காலமிருக்கையில், நாம் சதாகாலங்களிலுமிருக்கிறவரைத் தேடி, அவர் தமது கோபத்தை விட்டு நமது பேரில் இரக்கமுள்ளவராவதற்குப் பிரயாசைப்படுவது நலம். நாம் நியாயாதிபதிக்கு அருகே நமது பாவங்களை அவருக்கு அறிக்கையிட்டு ஆண்டவரே, திரும்பி வாரும் என்று மனஸ்தாபத்தோடும் விசுவாசத்தோடும் கூப்பிட்டால், அப்போது ஆண்டவர் நமக்கிரங்கி நம்முடைய வாழ்நாட்கள் விருத்திகளானபடி நம்மைத் தமது வழியில் நடத்துவார்.

ஜெபம். பரம பிதாவே! எந்த மட்டும் கோபமாயிருப்பீர்; உமது அடியாருக்காகப் பரிதபியும். எங்கள் பாவங்களை மன்னித்துக் கிருபை கூர்ந்து எங்களை நித்திய மரணத்திலிருந்து இரட்சித்துக்கொள்ளும், சுவாமி, ஆமென்.

5 மோ. [illegible]1, 1-29. அல்லது 1 தெச. 1, 1-10. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தைந்தாம் வாரம், ஞாயிறு.

ஷ. 13, 1. 2.

மகா உபத்திரவம் அப்பொழுதுண்டாயிருக்கும். அப்படிப்பட்டது லோகத்தின் ஆதிகாலந் துவக்கி இந்நாள் வரைக்குஞ் சம்பவித்ததும் இல்லை, இனிச் சம்பவிப்பதும் இல்லை. அந்த நாட்கள் குறைக்கப்படாதே போனால், ஒரு மாமிசமாகிலும் தப்பிப்போவதில்லை. தெரிந்துகொள்ளப் பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும். மத். 24, 21. 22.

ஆண்டவர் ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவாரென்று அறிந்திருக்கிறோம். மழைகாலம் பெருங் காற்றுகளினாலும் புசல் முழக்கத்தினாலும் தன் வரவை முன் தெரிவிக்கிறது. அதுபோலவே உலகத்தின் நியாயாதிபதியும் அடையாளங்களால் தமது வருகையை முன் அறிவிக்கிறார். அவர் வருமுன் இதுவரையில் சம்பவித்திராத பெரிய துன்பம் பூமியில் சம்பவிக்கும். யுத்தம், பஞ்சம், கொள்ளைநோய் என்கிற வாதைகள் மனுஷர்மேல் வரும்.

உலகத்தார் விசுவாசிகளைப் பகைத்து அதிகமாய்த் துன்பப் படுத்துவார்கள். துன்பத்தினிமித்தம் விசுவாசம் திடப்பட்டுக் கிறிஸ்துவின் சத்துருக்களும் சிநேகிதரும் பிரிந்து போவார்கள். கிறிஸ்துவை அண்டிக்கொண்டிருப்பவர்களுடைய அன்பு குளிர்ந்து, விசுவாசம் அவிந்துபோகும்படியான துன்பம் வரும். அந்த நாட்கள் குறுக்கப்படாதே போனால் ஒரு மாமிசமும் தப்பிப் போவதில்லை. ஆண்டவரோ தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தம் அந்தக் காலத்தைச் சீக்கிரம் முடித்துவிடுவார்.

நாம் உலகத்தின் முடிவையும் கர்த்தருடைய வருகையையும் கண்ணாரப் பார்ப்போமோ என்று நமக்குத் தெரியாது. நாம் அவரை உண்மையாய் அண்டிக்கொள்ளும்படிக்குப் பிரயாசைப்படுவோமாக. பொதுத் துன்பம் வருங்காலத்தில் உன்னுடைய ஆயுசின் முடிவை எண்ணு. எருசலேம் அழிந்து போகுமுன் கிறிஸ்தவர்கள் பெல்லா என்கிற ஊருக்கு ஓடித் தப்பிப்போனது போல உனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களண்டை ஓடி நீயும்

தப்பிப் போ. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும். அவர் உன்னைக் குருவி பிடிக்கிறவனுடைய கண்ணிக்கும் விக்கினமான பெருவாரி காய்ச்சலுக்கும் தப்புவிப்பார். தமது சிறகுகளாலே உன்னை மூடுவார். அவர் செட்டைகளின் கீழே இடங்கொண்டு தங்குவாய்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே! கடைசி நாட்களில் வரும் துன்பங்களுக்கு உமது திருச்சபையை விலக்கிக் காரும். நாங்கள் உம்மை மறுதலிக்கா வண்ணம் எங்கள் விசுவாசத்தைத் திடப்படுத்தியருளும். உம்மை நம்புகிறோம், கர்த்தாவே, சுவாமி, ஆமேன்.

2 இராசா. 22, 1-20. அல்லது சங். 26. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தைந்தாம் வாரம், திங்கள்.

பி. 317, 3. 4.

கர்த்தர்தாமே ஆர்ப்பரிப்போடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் பராபரனுடைய எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்குவார்; அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முந்தி எழுந்திருப்பார்கள். பிற்பாடு உயிரோடே மீதியான நாம் அவர்களோடேகூட ஏகமாய்க் கர்த்தருக்கு ஆகாசத்தில் எதிர்கொண்டுபோக, மேகங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இப்படியே எப்போதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால் நீங்கள் ஒருவரையொருவர் இந்த வார்த்தைகளால் தேற்றிக்கொள்ளுங்கள். 1 தெச. 4, 16. 18.

பவுல் அப்போஸ்தலன் எழுதின இந்த வார்த்தைகளை அடிக்கடி நாம் கல்லறை அருகில் வாசிக்கக் கேட்கிறோம். அப்போது நீங்கள் ஒருவரையொருவர் இந்த வார்த்தைகளால் தேற்றிக்கொள்ளுங்கள் என்று சொல்லப்படும். ஒரு கிறிஸ்தவன் தனக்கு அருமையாயிருந்த மரித்தவர்களைப்பற்றி துக்கப்பட்டாலும், அவன் நம்பிக்கையற்ற மற்றவர்களைப்போல விசனப்பட வேண்டியதில்லை. அஞ்ஞானிகளும் தெய்வ வசனத்தை நம்பாதவர்களும் நம்பிக்கையற்றவர்கள். நம்மையோ தேவ வசனம் ஆற்றித் தேற்றுகிறது. அது இந்தப் பூமியின் துன்பத்தையும் துக்கத்தையும் இலேசாக்கி ஆண்டவருடைய வருகையோடு அவக்கும் நித்திய பாக்கியத்தை நமக்குக் காண்பிக்கிறது. பரத்துக்கேறினவர் அங்கிருந்து அளவற்ற மகிமையோடு இறங்கி வருவார். அவர் பரம சேனைகளுடைய ஆர்ப்பரிப்போடும், திகிலையும் கலக்கத்தையும் உண்டாக்கும் எக்காள சத்தத்தோடும், விண்மண்ணுக்கு இராஜா

வாக வருவார். அப்போது பிரதான தூதனின் சத்தம் கல்லறைகளில் தூங்குகிறவர்களை எழுப்பும். கிறிஸ்துவை நம்பி மரித்தவர்கள் முந்தி ஒரு புதுமையான சரீரத்தோடு எழும்புவார்கள். அப்புறம் ஜீவனுள்ளோரும் மறுரூபப்படுவார்கள். அவர்களும் மகிமையான சரீரத்தைத் தரித்துக்கொள்ளுவார்கள். இந்தப் பாவம் நிறைந்த பூமி இனிமேல் மகிமைப்படுபவர்களுக்கு வாசஸ்தலமாக இருக்காது. அவர்கள் ஆண்டவருக்கு ஆகாசத்தில் எதிர்கொண்டுபோவார்கள். நாம் அவரை முகமுகமாகக் காண்போம். நாம் புதுப் பூமியில் அவரோடு கூட இருப்பதோடு அவரை நம்பி மரித்தவர்களையும் பார்ப்போம். இதுதான் நமக்கிருக்கும் ஆறுதல். இயேசுநாதர் மரித்து உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்தால் நாமும் அவரைப் போல நித்திய ஜீவனுக்கென்று எழுந்திருப்போம்.

ஜெபம். பரம பிதாவே, ஜீவனுள்ளோரும் மரித்தோரும் உமது சத்தத்தைக் கேட்டு மகிமையுள்ளவர்களாக நிற்கவேண்டிய அந்நாளிலே நாங்களும் சந்தோஷத்தோடே எங்கள் கல்லறைகளை விட்டு எழுந்து, உமக்குமுன்பாக நின்று நித்திய பாக்கியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள எங்களுக்குக் கிருபை செய்யும் சுவாமி, ஆமேன்.

2 இராசா. 23, 1-20. அல்லது பாக். 4, 1-17 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தைந்தாம் வாரம், செவ்வாய்.

பி. 317, 5. 6.

அவர் ஜனங்களோடே சொன்னதாவது: நீங்கள் மேற்கே மேகம் எழும்புகிறதைக் காண்கிறபோது, மழை வரும் என்று உடனே சொல்லுகிறீர்கள்; அந்தப்படியும் ஆகும். தென்றல் அடிக்கிறதை நீங்கள் காண்கிறபோது, காங்கை உண்டாகும் என்கிறீர்கள். மாயக்காரரே, பூமியின் ரூபத்தையும் வகையறுக்க அறிந்து இருக்கிறீர்கள்; இந்தக் காலத்தையோ நீங்கள் வகையறுக்காதிருக்கிறது எப்படி? லூக். 12, 54. 56.

வானத்தின் அடையாளங்களை ஜனங்கள் கவனிப்பார்கள். கால மாறுதலைப்பற்றி அடிக்கடி பேசுவார்கள். இதை மனிதருக்குத் தெரியக் கொடுக்கத் தேவன் வானத்தில் பல அறிகுறிகளை ஏற்படுத்தியிருக்கிறார்.

தேவ இராச்சியத்திலும் அவர் இப்படிப்பட்ட அடையாளங்களை ஏற்படுத்தியிருக்கிறார். அவைகளைக் கவனிக்கிறவன் தேவனுடைய ஆலோசனையை அறிந்துகொள்ளக் கூடும். இயேசுவின்,

காலத்தில் உண்டான அடையாளங்களை இஸ்ராயேலர் கவனிக்கவில்லை. குருடர் பார்வையடைந்தார்கள், சப்பாணிகள் நடந்தார்கள், குஷ்டரோகிகள் சுத்தமானார்கள், செவிடர் கேட்டார்கள், மரித்தோர் எழுந்திருந்தார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இந்த அடையாளங்களினால், இரட்சகர் வந்துவிட்டார் என்று அவர்கள் அறிந்துகொள்ளவேண்டுமென்பது தேவனுடைய நோக்கம். மழை பெய்யுமோ இல்லையோ என்று வானத்தைக் கூர்ந்து பார்த்து அறிந்தார்கள். ஆனால் இரட்சிப்புக் கிட்டியிருந்த காலத்தை அறியாமற் போனார்கள். ஆதலால் ஆண்டவர் அவர்களை மாயக்காரர் என்று சொல்லுகிறார். அக்காலத்தில் இருந்ததுபோலக் கர்த்தர் வருமட்டும் இருக்கும்.

கிறீஸ்தவர்கள் கர்த்தருடைய வருகையை முன் தெரிவிக்கும் அடையாளங்களைக் கவனித்தறிவது அவசியம். கர்த்தர் அவைகளை மத்தேயு 24 ல் நமக்கு அறிவிக்கிறார். [illegible] வாசித்து தேவன் ஆக்கினைத் தீர்ப்பிடும் நாள் கிட்டி வந்ததோ இல்லையோ என்றறிந்துகொண்டு, நீ அந்நாளுக்குத் தப்பி [illegible]ப்படைவதற்குப் பிரயாசைப்படு.

ஜெபம். அன்புள்ள இயேசுவே, காலங் காலத்தை அறிந்து கொண்டு நித்திய சோபாக்கினைக்குத் தப்புவதற்கு வழிகளைச் [illegible]யருளும். உமது பிள்ளைகளாகிய நாங்கள் உம்மை நம்பிச் சுபத்திரமாயிருக்கிறோம். உமது திருநாமத்திற்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திர முண்டாவதாக, சுவாமி, ஆமென்.

2 இராசா. 23, 21-37 அல்லது யாக். 5, 1-20 வாசிக்கவும்.

திரித். பண்டி. பி. இருபத்தைந்தாம் வாரம், புதன்.

பூ. 31[illegible], 7. 8.

பிணம் எங்கே இருக்கிறதோ, அங்கே கழுகுகள் வந்து கூடும். மத். 24, 28.

இந்த வாக்கியத்தோடு ஆண்டவர் உலக முடிவைப் பற்றிச் சொன்ன தீர்க்கதரிசனம் முடிவடைகிறது. பிணம் என்றால் பிராணன் போன மேல் அழுகிக் கிடக்கும் சரீரம். அதன் தன்மையும் நாற்றமும் கழுகுகளையும் காகங்களையும் தன்னிடம் இழுக்கும். அவைகள் வந்து அதைப் பட்சிக்கின்றன. தேவனை விட்டுப் பிரிந்து ஜீவன் அற்றுக் கிடக்கும் நாஸ்திகரும் [illegible]ரும் பிணத்தை ஒத்தவர்கள். அவர்களுடைய பாவ நாற்-

றம் வானபரியந்தம் வீசுகிறது. இந்த நாற்றமுள்ள இடத்துக்கு நியாயத்தீர்ப்பாகிய கழுகு வரும்.

தன் இரட்சகரைத் தள்ளித் தன் மேசியாவைச் சிலுவையில் அறைந்து, இரட்சிப்பை அசட்டை பண்ணின எருசலேமில் இருந்த யூத ஜாதி முழுவதும் அந்தப் பிணத்துக்கு ஒப்பாயிருந்தது; கழுகுகளைக் கொடியாகப் பிடித்த ரோமர் தேவனுடைய கழுகுகளாக அவருடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றினார்கள். தன் தேவனை விட்டு அவர் வசனத்தை அசட்டை பண்ணுகிற ஜனம் தன்னையே அழித்துக்கொள்ளுகிறது. காந்தம் எப்படி இரும்பை இழுக்கிறதோ அப்படியே தேவனை அசட்டை பண்ணின உன் பாவமும் அவநம்பிக்கையும் இம்மைக்கும் மறுமைக்கும் அவருடைய கோபத்தையும் ஆக்கினையையும் கொண்டு வரும்.

இப்படிக் கடைசி நாட்களில் சம்பவிக்கும். கழுகுகள் பிணத்தைத் தேடி வருவதுபோல் தேவனுடைய ஆக்கினையும் தான் ஆசை இச்சைகளில் கிடந்து அழுகிப்போன உலகத்தைத் தேடி வரும். கழுகுகள் எப்படிப் பிணத்தை விடமாட்டாதோ அப்படியே தேவனுடைய ஆக்கினையும் உலகத்தை விடமாட்டாது. நமக்காகப் பிணமாகப்பட்டுச் சிலுவையில் மரித்த இரட்சகர் ஒருவரே நமது செத்த ஆத்துமாக்களை உயிர்ப்பித்துத் தமது வழியில் நடக்கச் செய்யக் கூடியவர்.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! தேவரீர் உலகத்தை நியாயந் தீர்க்க வரும் காலத்திலே நாங்கள் பயமின்றி உமக்கு முன்பாக நிற்கக் கூடும்படி எங்கள் ஆத்துமங்களை இப்போதே உயிர்ப்பித்து இரட்சித்தருளும், சுவாமி, ஆமென்.

2 இராசா. 25, 1-30 அல்லது லூகா 1. 25 வாசிக்கவும்.

திரித். பண்டி. பி. இருபத்தைந்தாம் வாரம், வியாழன்.

பூ. 317, 9. 10.

கடைசி நாட்களில் தங்கள் சுய இச்சைகளின்படி நடந்து: அவர் வருகையின் வாக்குத்தத்தம் எங்கே இருக்கிறது; பிதாக்கள் நித்திரை அடைந்த பின்பாக எல்லாம் சிருஷ்டியின் தோற்றம் முதல் இருந்த பிரகாரமாக இருக்கிறதே என்று சொல்லுகிற சக்கந்தக்காரர் வருவார்கள் என்கிறதை முதல் முதல் அறிந்திருங்கள். 2. பேதுரு 3, 3. 4.

காலமும் உலகமும் முடிவடைந்து ஆண்டவர் நியாயத் தீர்ப்புக்கு வரும் வேளையே கடைசி நேரம். சக்கந்தக்காரர்

உலகத் தோற்ற முதல் எப்போதுமிருந்திருக்கிறார்கள். கடைசி நாட்களிலோ உலகமானது அவர்களால் நிறைந்திருக்கும். அவர்கள் கடைசி நாளுக்கு முன்னோடிகள். அது சமீபித்து வரவர அவர்கள் தைரியமாகவும் வெளியரங்கமாகவும் கேடு பண்ணுவார்கள். அவர்கள் தங்கள் சுய இச்சைகளின்படி நடக்கிறபடியால் பரிசுத்த காரியங்களைப் பழித்துப் பேசுவார்கள் என்று பேதுரு சொல்லுகிறான். ஆண்டவருடைய வருகை அவர்களுக்குப் பிரியமல்ல. அது அவர்களுடைய துர்நடக்கைக்கு முடிவாகும். அவருடைய நியாயத்தீர்ப்புக்கும் அஞ்சுகிறார்கள். ஆகையால் அவர் வருகையின் வாக்குத்தத்தம் எங்கே இருக்கிறது. பிதாக்கள் நித்திரையடைந்தார்கள். அவர் வரவில்லையே. எல்லாம் சிருஷ்டியின் தோற்ற முதல் இருந்த பிரகாரமாயிருக்குதே என்று பரிகாசம் பண்ணுகிறார்கள். சர்வ வல்லமையுள்ளவரோ: இல்லை, இல்லை வானமும் பூமியும் ஒழிந்துபோம் என்கிறார். அவர்களை பக்தியற்ற மனுஷர், அக்கினிக்கு இரையாகக் காக்கப்படுகிறார்கள் என்று பேதுரு சொல்லுகிறான். ஆண்டவர் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். அவர் நியாயந்தீர்க்க வருவார். ஜலப்பிரளய காலத்தில் நடந்ததுபோல் இப்போதும் நடக்கும். அப்போது ஜனங்கள் கேளிபண்ணி, நோவா தெரிவித்த ஆக்கினை வரும் என்று நம்பாமல், ஜலத்திலே அமிழ்ந்து போனார்கள். இப்படிக் கடைசி நாளிலும் நடக்கும்.

நீயோ ஆகாதவர்களுடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரிகாசக்காரர் உட்கார்ந்திருக்கிற இடத்தில் உட்காராமலும் இருந்து ஆண்டவருக்குக் காத்திரு. அவரால் கறையும் குற்றமுமற்றவனாய்ச் சமாதானத்தில் இருக்க ஜாக்கிரதையாய் இரு.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே, உமது திரு இரத்தத்தால் மீட்கப்பட்ட நாங்கள் உமக்குப் பயபக்தியோடு காத்திருக்க எங்களைக் கடைசி நாளுக்கு ஆயத்தப்படுத்தும். நாங்கள் உமது வசனத்தை அசட்டை பண்ணாமல் அதினால் நித்திய இரட்சிப்பு அடைய எங்களுக்கு உமது ஆவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

தானி. 1, 1-21 அல்லது அபி. 1, 1-8 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தைந்தாம் வாரம், வெள்ளி.

பா. 313, 1. 2.

பிரியமானவர்களே, கர்த்தரிடத்தில் ஒருநாள் ஆயிரம் வருஷங்களைப்போலவும் ஆயிரம் வருஷங்கள் ஒரு நாளைப்போலவும் இருக்கிறதென்கிற ஒரே காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம். சிலர் தாமதம் என்று எண்ணுகிறதுபோல கர்த்தர் பண்ணின வாக்குத்தத்தத்துக்குத் தாமதிக்காமல், நம்முடைய மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து, ஒருவரும் கெட்டுப்போக அல்ல, எல்லாரும் குணப்படுவதற்கு வாஞ்சித்தமாயிருக்கிறார். 2 பேது. 3, 8. 9.

நான் சீக்கிரம் வருவேன் என்று கர்த்தர் வாக்களித்தார். ஆம், கர்த்தராகிய இயேசுவே வாருமென்று அவருடைய சபை வேண்டிக்கொள்ளுகிறது. அவர் வசனத்திலும் ஞானதிரவியங்களிலும் நம்மண்டை வந்தாலும், நம்மை எல்லாத் தீமையிலிருந்தும் இரட்சிப்பதற்கு மகிமையோடு வருவார். அதற்கு நாம் காத்திருக்கிறோம். அவர் வருவது உண்மைதான். ஆயினும் சீக்கிரம் வருவாரா? அப்போஸ்தலர் அவருடைய வருகையை எதிர்பார்த்திருந்தார்கள். அவர்களுக்குப் பின் எல்லாக் கிறிஸ்தவர்களும் அவருக்குக் காத்திருந்தார்கள். ஆனால் அவர் வந்ததில்லை. அவர் தாமதம் பண்ணினாலும் தாம் வாக்குத்த வாக்கை நிறைவேற்றுவார். நாம் காலத்தைக் கணக்கிற விதமும் தேவன் அதைக் கணிக்கும் விதமும் வித்தியாசமாம். கர்த்தருடைய பார்வையில் ஆயிரம் வருஷம் நேற்றுக் கடந்த நாள் போலிருக்கிறது. ஆயினும் அவர் சீக்கிரம் வருவார். கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்களும் அவர் சீக்கிரம் வருகிறார் என்றே நினைக்கிறார்கள். அவர் அவர்களுடைய சரீரங்களை எழுப்பி மகிமைப்படுத்தும் வேளையில் அவர்கள் நித்திரையைவிட்டு எழுந்திருக்கிறவர்களைப் போலிருப்பார்கள். மேலும் அவர் இன்னமும் வராமல் தாமதிப்பதும் கூடக் கிருபையேயன்றி வேறொன்றுமல்ல. அவர் நமது பேரில் பொறுமையுள்ளவர். ஒருவனும் கெட்டுப் போக அவருக்கு மனதில்லை. அவருக்கு இன்னமும் கிருபைக் காலத்தைக் கட்டளையிட்டிருக்கிறார்.

அவரது வருகையே இந்தக் கிருபைக் காலத்துக்கு முடிவாம். ஏழைப் பாவி தன் வழியைவிட்டுத் திரும்புகிறதற்கு நமது அன்புள்ள ஆண்டவர் காத்திருக்கிறார். இன்னம் உனக்குக் கிருபையுண்டு. ஆகாத மரணம் உன்னைக் கொண்டுபோகுமுன் நீ குணப்படு.

ஜெபம். பாவ [illegible] மனுஷர் நிறைந்த இந்த உலகத்தை இன்னமும் அழிக்காமல் அதற்குத் தலைவராகக் கிருபைச்

காலத்தை அளித்திருக்கிறீர். கர்த்தாவே, நாங்கள் இந்தக் காலத்தை வீணாய்ப் போக்கடிக்காமல் எங்கள் ஆத்துமங்களைத் தப்புவித்துக்கொள்ள எங்களுக்குப் புத்தியையும் பெலத்தையும் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

தானி. 2, 1-23. அல்லது அபி. 1, 9-20. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தைந்தாம் வாரம், சனி.

பி. 313, 3. 4.

சகல ஜாதிகளுக்குஞ் சாட்சியாக இராச்சியத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்கும் பிரசங்கிக்கப்படும்; அப்போது முடிவு வரும். மத். 24, 14.

இந்தப் பாவ உலகத்துக்கு முடிவு வந்த உடனே வான இராச்சியம் புதுப் பூமியில் வெளிப்படும். அது சீக்கிரம் வரும்படி பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் ஆண்டவரை வேண்டிக்கொள்ளுகிறார்கள். முடிவு வரும் நாளும் வேளையும் நமக்குத் தெரியாது. சுவிசேஷம் பூமியெங்கும் பிரசங்கிக்கப்படும் போதே முடிவு வரும் என்று நமக்குத் தேவ வசனத்தினால் தெரியும். மிஷியோனால் சுவிசேஷம் எங்கும் பரம்பி வருகிறது. [illegible]தைக் கவனித்தால் தேவனுடைய கடிகாரம் அடுத்த மணி இத்தனையென்று நமக்குத் தெரியும். இப்பூமியிலுள்ள இராசாக்கள் [illegible]த்தனை இராச்சியங்களைக் கட்டி அவைகளைப் பலப்படுத்தினாலும், அவை யெல்லாவற்றிற்கும் தேவ இராச்சியத்தினாலே முடிவு உண்டாகும். எல்லா ஜாதிகளும் இந்த இராச்சியத்தின் ச[illegible]சியைக் கேட்டு அது வேண்டுமோ வேண்டாமோ என்று தீர்த்துச் சொன்ன பிறகும், தேவன் குறித்த அக்கியானிகளுடைய [illegible]தாகை அவருடைய இராச்சியத்தில் சேர்ந்தபிறகும் ஆண்டவர் பெரிய பலத்தோடும் வல்லமையோடும் வருவார். அப்போது உலகமும் அதன் மகிமையும் ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கும் நியாயாதிபதிக்கு முன்பாகச் சாம்பலாய்ப் போய் விடும். உலகத்[illegible] இராச்சியங்கள் எல்லாம் பராபரனையும் அவருடைய [illegible]யும் சேரும். தேவ இராச்சியம் எல்லாரும் பார்க்குமாறு வெளிப்படும்.

ஆண்டவருடைய வரு[illegible]கையை எதிர்பார்க்கிற நாமோ மிஷியோனால் இராச்சியத்தின் [illegible] சுவிசேஷம் உலகத்தின் எல்லைகளைச் சீக்கிரம் எட்ட வேண்[illegible]ம் என்று ஆண்டவரை நோக்கிக் கூப்பிடவேண்டும். நாமும் [illegible]மாத்திரமல்ல அதற்குப் பிரயாசைப்பட்டு நமது பணத்தினாலும் [illegible] ஜெபங்களினாலும் உதவிசெய்தால் நலம்.

ஜெபம். எங்கள் பரம இராசாவாகிய இயேசுகிறிஸ்துவே! உமது நித்திய இராச்சியத்துக்கு முடிவு இல்லை. இவ்வுலகத்தின் இராச்சியங்கள் அழியும்போது தேவரீர் உமது இராச்சியத்தில் சேர்ந்தவர்களை ஜீவ கிரீடத்தினால் முடி சூட்டப்போகிறீர். ஆண்டவரே, நீர் வரும்போது நாங்கள் உமது வலதுபக்கத்தில் நின்று நித்திய பாக்கியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள எங்களுக்குக் கிருபைசெய்யும், சுவாமி, ஆமேன்.

யோசுவா. 3, 1-17. அல்லது 2 தெச. 1, 1-12. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தாறும் வாரம், ஞாயிறு.

பி. 323, 1. 2.

மனுஷனுடைய குமாரன் தமது மகிமையிலே தம்முடைய சகல பரிசுத்த தூதரோடுங் கூட வரும்போதோ, அவர் தமது மகிமையின் ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருப்பார். அப்போது அவருக்கு முன்பாக எல்லா ஜாதிகளுங் கூட்டப்படுவார்கள். அவர்களை அவர் ஒரு மேய்ப்பன் ஆடுகளையும் கடாக்களையும் பிரிக்கிறதுபோல வெவ்வேறாகப் பிரித்து, ஆடுகளைத் தம்முடைய வலது பக்கத்திலும் [illegible]டாக்களை இடது பக்கத்திலும் நிறுத்துவார். மத். 25, 31. 33.

இயேசுநாதர் உண்மையாய்த் திரும்பி வருவார். நீ அவரைக் காண்பாய். அவர் வருவது உனக்குப் பிரியமில்லாதிருந்தாலும் அவரை நீ பார்க்கவேண்டும். ஆண்டவர் வரும்போது பூமியெங்கும் பயங்கரமான கலகமும் பயமும் உண்டாகும்.

பாருங்கள், இதோ! அவர் வருகிறார் என்று அநேகர் சந்தோஷத்தோடும், அநேகரோ திகிலோடும் கூப்பிடுவார்கள். எல்லாரும் நின்று அவரையே உற்றுப் பார்ப்பார்கள். பெத்லெகேமிலே பிறந்த பிள்ளைக்கும் இவருக்கும் எவ்வளவு வித்தியாசம். இவர் மகத்துவமுள்ள இராசாவாகத் தமது தூதர் புடைசூழ மகிமையோடு வருகிறார். அவருக்கு இனிமேல் குறைவையும் சிறுமையும் கிடையாது. என்னண்டை வாருங்கள் என்று அவர் [illegible]யும் வேண்டிக்கொள்ளார். அவர் தமது மகிமைச் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் ஒருத்தரும் அவரை அணுக முடியாது. அவர் தமது கையை ஆசீர்வதிக்கும்படி அல்ல, அது செலுத்தப்படுத்தும்படி இனி [illegible]ட்டார். நியாயம் தீர்க்கவே அதை நீட்டுவார். சனசமூகங்கள் இப்பூமியில் அவருக்கு விரோதமாகக் கூட்டங் கூடினதுபோல அப்பொழுதும் அவருக்கு முன்பாக நிற்க எல்லாரும் கூடுவார்கள். அப்போது அவருடைய தீர்ப்பும் அவருடைய ஆக்கினையும் மாத்திரம் கிடைக்கும். அவர் என்ன செய்வார்? அவர் அவர்களை இரண்டு பங்காகப்

பிரிப்பார். அவர்கள் நடுவிலே ஒரு பெரும் பிளப்பிருக்கும். அதற்குப் பாலம் இராது. அப்போது அவர் தமது இடது பக்கத்தில் நிறுத்தப்படுபவர்களுக்கு ஐயோ. அவர் தமது வலது பக்கத்தில் நிறுத்திவைக்கிறவர்களோ ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

ஜெபம். அன்புள்ள இயேசுவே, உமது அரசின் மகிமையோடு தேவரீர் வரும்போது நாங்கள் உம்மைச் சந்தோஷத்தோடு எதிர்கொள்ளவும், உமது வலது பக்கத்தில் நின்று உமது அன்பான சத்தத்தைக் கேட்டு உம்மோடு நித்திய மகிமையில் சேரவும் எங்களுக்குக் கிருபைசெய்யும், சுவாமி, ஆமேன்.

தானி. 3, 1-30 அல்லது சங். 96 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தாறும் வாரம், திங்கள்.

பி. 323, 3. 4.

பராபரனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தரான இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியைச் சரிக்கட்டும்போது, உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்குத் துன்பத்தையும், துன்பப்படுகிற உங்களுக்கு எங்களுடனே இளைப்பாறுதலையும் பதிலுக்கு அளிப்பது பராபரனிடத்திலே நீதியாயிருக்கிறது. கர்த்தர் அக் காலத்திலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படவும், எங்கள் சாட்சி உங்களிடத்தில் விசுவாசிக்கப்பட்டதினால் எல்லா விசுவாசிகளிலும் ஆச்சரியப்படத் தக்கவராகவும் வரும்போது, அவர்கள் அவருடைய சந்நிதியிலும் அவருடைய பலத்தின் மகிமையிலும் நித்திய அழிவாகிய ஆக்கினையை அடைவார்கள். 2 தெச. 1, 7-10.

சாகும் வேளையில் சிலர் இளைப்பாறுதலுக்கும் சிலர் ஆக்கினைக்கும் போவார்கள். இளைப்பாறுதலுக்கும் ஆக்கினைக்கும் எவ்வளவு பயங்கரமான வித்தியாசமுண்டு. இந்தப் பூமியின் துன்பங்களையெல்லாம் அனுபவித்த பின் இரட்சகர் நித்திய இளைப்பாறுதலுக்குக் கொண்டுபோகிறவர்களே பாக்கியவான்கள். இளைப்பாறுதல் என்றால் தூக்கம் அல்ல, மோட்சத்தில் தூக்கமிராது. அங்கே எந்தக் கவலையினாலும் குற்றத்தினாலும் அலைசடிப்படாத சந்தோஷமிருக்கும். ஆக்கினைக்குப் போகிறவர்களோ நித்திய அழிவுக்குப் போகிறார்கள். அப்படி அழிந்து போகிறவர்கள் சண்டாளர், பாதகர்மட்டுமோ? பவுல் அப்போஸ்தலன் அவர்கள் பராபரனை அறியாதவர்களும் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களும் என்று சொல்லுகிறான். அவர்கள் எல்லாரும் துன்மார்க்கரல்ல. அவர்களுடைய புறம்பான நடக்கையைப் பார்த்தால் ஒரு குற்றமும் அதில் இராது. என்றாலும்

எச்சரிக்கையாயிருங்கள் என்று அவர்களுக்கும் சொல்லவேண்டும். அவர்கள் இருதயத்தைப் பார்த்தால் அதில் தேவ பயமில்லை. அவரை அறிய அவர்களுக்கு மனம் இல்லை. அவருக்குக் கீழ்ப்படிய அவர்களுக்கு ஆசையில்லை. நீ ஆக்கினைக்குட்படாமல் எல்லா விசுவாசிகளோடும் மகிமையை அடைய உனக்கு மனமிருந்தால் நீ பராபரனை அறிந்து அவருடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து நட.

ஜெபம். பரமபிதாவே, உமது பிள்ளைகளாகிய நாங்கள் நித்திய மரணத்துக்குத் தப்புவதற்கு உம்மை அறிந்து உமது நேச குமாரனுடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து அவரை ஆவலோடு எதிர்பார்க்க எங்களுக்கு உமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமேன்.

தானி. 3, 31 4, 24 அல்லது அதி. 3, 1-22 வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தாறும் வாரம், செவ்வாய்.

பி. 316, 5.

அப்போது இராசா தம்முடைய வலது பக்கத்திலுள்ளவர்களைக் குச் சொல்லுவதாவது: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, லோகத் தோற்றமுதல் உங்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்பார். மத். 25, 34.

இப்படிப் பரம இராசா தம்முடையவர்களைக் கடைசி நாளிலே வாழ்த்துவார். அவர்கள் அவருக்குச் சொந்தம். அவர் அவர்களைத் தமது இரத்தத்தினாலே சம்பாதித்துத் தமது இரக்கத்தினால் தேடித் தமது கிருபையினாலே என்னண்டை வாருங்கள் என்று திரும்பத் திரும்ப அழைத்தார். அவர்கள் மனஸ்தாபத்தோடும் விசுவாசத்தோடும் வந்து அவரைக் கண்டுபிடித்து அவருடைய அன்பை உணர்ந்திருந்தார்கள். அவருடைய அன்பு அவர்களுடைய இருதயங்களில் ஊற்றியிருக்கிறது. அவர்களுடைய விசுவாசம் பெலவீனமாய் இருந்தாலும் விசுவாசமும் அன்பும் அவர்களுடைய இருதயங்களில் உண்டு. அவர் அவர்களில் துவக்கின நற்கிரியையை முடிக்குமாறு அவர்களை எல்லாத் துன்பத்திலும் ஆபத்திலும் ஆதரித்து வழிநடத்தினார். கடைசிச் சத்துருவாகிய மரணத்தையும் மேற்கொண்டாயிற்று. ஆதலால் இப்பொழுது அவர்கள் பூரண பாக்கியத்திலும் சமாதானத்திலும் சந்தோஷத்திலும் நித்தியகாலமாக அவரிடத்தில் இருப்பார்கள்.

வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, லோகத் தோற்றமுதல் உங்களுக்கு ஆயத்தமான இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவார்.

அவர்கள் பிறக்கும் முன்னதாகவும் ஆதாம் உண்டாகு முன்னதாகவும் பராபரன், சமாதானமும் சந்தோஷமும் நிறைந்த இராச்சியத்தை அவர்களுக்கு ஆயத்தம்பண்ணினார். அவர்கள் விசுவாசத்தினாலே இரட்சகரைப் பிடித்துக்கொண்டு அவர் மூலமாய்த் தேவ பிள்ளைகள் ஆனபோது, பிதா அவர்களுக்கு இந்த இராச்சியத்தைச் சுதந்தரமாக அளித்தார். இப்பொழுது அவர்கள் அதைச் சுதந்தரிக்கப்போகிறார்கள். இராசா அதை அவர்களுக்கு அளிக்கிறதினாலே யாரும் அதை அவர்களிடத்திலிருந்து பிடுங்க முடியாது.

ஜெபம். எங்கள் பரம இராசாவாகிய இயேசுகிறிஸ்துவே! உமது திருச்சபையில் சேர்ந்த நாங்கள், உமது பிதா ஆயத்தம்பண்ணின இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள ஆசையாய் [illegible] தாலே, நாங்கள் உயிரோடிருக்குமட்டும் இந்த இராச்சியத்துக் [illegible] நடந்து உம்மை மகிமைப்படுத்த எங்களுக்குப் புத்தியையும் பலத் [illegible] தந்தருளும், சுவாமி, ஆமென்.

தானி. 4, 25-34. அல்லது அப். 4, 1-11. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தாறும் வாரம், புதன்.

பி. 316, 3. 4.

அப்போது இடது பக்கத்திலுள்ளவர்களுக்குஞ் சொல்வார்: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டுப் பிசாசுக்கும் அதன் தூதருக்கும் ஆயத்தம்பண்ணப்பட்ட நித்திய அக்கினியிலே போங்கள். மத். 25, 41.

சபிக்கப்பட்டவர்களே என்கிற வார்த்தை இயேசுநாதருடைய வாயில் வருவது எவ்வளவு பயங்கரம். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்களென்று அவர் சொன்னதில்லையோ? ஆசீர்வதிக்க வருகிற இயேசுநாதர் சபிக்கவேண்டி நேருவது எவ்வளவு பயங்கரம்! அவர் அவர்களிடத்தில் எவ்வளவு பொறுமை பாராட்டி வந்தார். அதற்கு முடிவு வந்தது. அக்கினியின் வேலை [illegible]. ஆகையால் நித்திய அக்கினியிலே போங்கள் என்கிறார். அது அவியாமல் எரியும். சாகாமல் அதில் வேதனையை அநுபவிக்கிறது இன்ன விதமென்று நமக்குத் தெரியாது. ஆகையால், இரக்கமுள்ள ஆண்டவரே, நாங்கள் நித்திய அக்கினிக்காளாகாமல் இப்போது எங்களைக் கடிந்துகொண்டு தண்டித்து அசைத்து எழுப்பியருளுமென்று மன்றாடுவோமாக.

நரகத்தில் கிடக்கும் நிர்ப்பாக்கியமுள்ளவர்கள் செய்த குற்றமென்ன? அவர்கள் இயேசுவின் சகோதரரைப் பூமியில் பசியிலும், தாகத்திலும், நிர்வாணத்திலும், வியாதியிலும், சிறைச்சாலையிலும் கிடக்க விட்டு அவர்களுக்குதவ ஒரு விரலையும் அசையாதிருந்ததுதான் என்று இயேசுநாதர் அவர்களுக்குச் சொல்லுவார். ஆண்டவர் இவ்வாறு பேசுகையில் [illegible]ப்போக்கை மாத்திரம் நினையாமல் நாம் [illegible] காட்டிலும் இரக்கமற்ற இருதயத்தைக் காண்பிக்கும் சமயங்களையெல்லாம் நினைக்கிறார். அவர்கள் செய்யாத நற்கிரியைகளின் பொருட்டு தண்டிக்கப்படுகிறார்கள். நன்மை செய்யாதிருப்பதும் பெரிய குற்றமா? அது எனக்குத் தெரியாதே என்கிற போக்கு அவருக்கு முன்பாகச் செல்லாது. ஒரு கிறிஸ்தவன், எங்கே எவ்வாறு சிநேகத்தைக் காண்பிக்கலாம் என்று யோசித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

அந்த ஆசாரியனைப் போலவும் லேவியனைப் போலவும் விலகிப்போகப்படாது. சமயமே [illegible] வந்த இரக்கமில்லாதவர்களை நோக்கி, இயேசுநாதர் சபிக்கப்பட்டவர்களே என்பார். அவர் இரக்கத்தையன்றி வேறொன்றையும் நம்மிடத்தில் தேடுகிறதில்லை.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே, உமது கிருபையினால் மீட்கப்பட்ட நாங்கள் உமது நித்திய கோபாக்கினைக்குத் தப்பிப்போக எங்களை எச்சரித்தருளும். நாங்கள் உடனே குணப்பட்டு எங்கள் ஆகாத வழிகளை விட்டு உம்மண்டை திரும்புவதற்கு எங்களுக்கு உமது பயங்கரமான நியாயத்தீர்ப்பை நினைப்பூட்டியருளும், சுவாமி. ஆமென்.

தானி. 5, 1-31. அல்லது அப். 5, 1-14. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தாறும் வாரம், வியாழன்.

பி. 211, 1.

நாம் பிள்ளைகளேயானால், சுதந்தரருமாயிருக்கிறோம்; பராபரனுடைய சுதந்தரரும், கூட மகிமைப்படும்படிக்குக் கூடப் பாடுபட்டோமானால், கிறிஸ்துவுடன் சுதந்தரருந்தானே. ரோ. 8, 17.

கர்த்தர் தமது சகோதரரிற் சிறியரைச் சிநேகித்தவர்களைத் தமது பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றழைத்து

இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளச் சொல்லுகிறார். இதனால் நாம் சிநேகக் கிரியை செய்து மோட்சத்தைச் சம்பாதிக்கக் கூடுமென்பது அவர் கருத்தல்ல; நாம் இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்வோம். சுதந்தரம் சம்பாதிக்கப்படும் பொருளாயிராமல் இலவசமாய் அடையும் பொருளாம். நீ விசுவாசித்தால் தேவனுக்குப் பிள்ளையும் இயேசுவுக்குச் சகோதரனும் ஆகிறாய். நீ தேவனுடைய பிள்ளையாய் நடந்துகொண்டு இயேசுநாதர் தமக்குச் சகோதரராகப் பாவிக்கிறவர்களில் நீயும் சேர்ந்தி. நீ தேவனுடைய பிள்ளையாகும் உன் விசுவாசத்தைப் பொறுமையினாலும் உண்மையினாலும் காண்பிப்பாய். இயேசு பாடுகளினாலும் மரணத்தினாலும் தமது மகிமையில் எப்படிப் பிரவேசிக்க வேண்டியிருந்ததோ அப்படி. நாமும் இம்பூமியில் பல விதமான பாடுகளை அநுபவித்து மகிமையைப் பெறுவது தேவன் ஏற்படுத்தின வழி. ஆதலால் நாம் தேவனுடைய பிள்ளைகளாகப் பாடனுபவிக்கத்தான் வேண்டும். பாடனுபவிப்போர் நித்திய மகிமையின் சுதந்தரர், அவர்கள் மாத்திரம் இயேசு கிறிஸ்துவின் சகோதரர். இந்தச் சுதந்தரம் உனக்குப் பரிசுத்த ஞானஸ்நானத்தில் கிடைத்தது. நீ அதை இழந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

ஜெபம். இரக்கமுள்ள இயேசுவே! உமது பிள்ளைகளும் உடன் சுதந்தரருமாகிய நாங்கள் உமது ஐக்கியத்தில் நிலைத்திருந்து பொறுமையோடு எல்லாப் பாடுகளையும் அனுபவித்து உம்மோடு மகிமைப்படுதற்கு எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

தானி. 6, 1-28 அல்லது அறி. 6, 1-17 வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தாறும் வாரம், வெள்ளி.

321, 2.

ஆனால் உன் மனக்கடினத்தினாலும் குணப்படாத இருதயத்தினாலும் உனக்கு, நீ பாரபட்சமில்லாமையும் நீதியுள்ள தீர்ப்பும் வெளிப்படும் நாளுக்குக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறாய். அவர் அவனவன் கிரியைக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பதில் அளிப்பார். நற்கிரியையில் பொறுமையாய் நிலைத்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனையும், சண்டைக்காரராயிருந்து, சத்தியத்துக்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரத்தையும் கோபத்தையும் அளிப்பார். ரோ. 2, 5-8.

இது மனதாரக் குணப்படாதிருப்பாருக்கடுத்த ஒரு கண்டிப்பான வார்த்தை. அவர்களுடைய இருதயமானது மென்மேலும் கடினப்பட்டு எந்தப் புத்திமதிகளையும் கேட்காமலும் கவனிக்காமலும் போகுமென்று இதில் சொல்லியிருக்கிறது. அவர்கள் சத்தியத்தின் சத்தத்துக்குச் செவி கொடுக்காமல் பொய்க்கும் அநியாயத்துக்கும் கீழ்ப்படிகிறார்கள். இப்படி அவர்கள் பாவத்தில் நடந்துகொண்டு தேவனுடைய தயவையும் நீடியசாந்தத்தையும் அசட்டைபண்ணுகிறபடியால் நியாயத்தீர்ப்பு நாளுக்குக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறார்கள். அப்போது கோபாக்கினை அவர்கள் மேல் பெய்யும். இதைக் கேட்டு நாம் சத்தியத்தின் சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறோமா இல்லையா என்று நம்மை உற்றுநோக்கி விசாரிப்போமாக.

இந்தச் சத்தம், நானே சத்தியம் என்று சொன்னவரை உனக்கறிவிக்கிறது. இந்தச் சத்தம் கடந்துபோன சபை வருஷத்தில் அத்தனையோ விசை உன் காதில் தொனித்தது. நாம் குணப்பட்டு எல்லாக் கீழ்ப்படியாமையையும் அநீதியைவிட்டு உயிருள்ள மட்டும் தேவனுடைய கிருபையைத் தேடுவோம், வாருங்கள்.

சத்தியத்தின் சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு மேற்சொன்ன வாக்கியம் ஒரு பெரிய வாக்குத்தத்தத்தைத் தெரிவிக்கிறது. தேவன் தங்கள் விசுவாசத்தைச் சிநேகத்தினால் காண்பிக்கிறவர்களுக்கு மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் அளிப்பார். இப்பூமியின் எல்லாத் துன்பத்திலும் போராட்டத்திலும் இரக்கமுள்ள பரமபிதா பொறுமையையும் பெலத்தையும் அளிப்பார்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது பிள்ளைகளாகிய நாங்கள் தேவரீர் எங்களுக்காக ஆயத்தம் பண்ணின இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு உமது சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து உமக்குப் பயப்பட எங்களை ஏவி எழுப்பியருளும், சுவாமி, ஆமேன்.

எஸ்றா 1, 1-11 அல்லது அறி. 7, 1-17. வாசிக்கவும்.

திரித். பண்டி. பின். இருபத்தாறும் வாரம், சனி.

பா. 321, 3.

மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்போது உனக்கு ஜீவனின் கிரீடத்தைத் தருவேன். ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதை எவனொ காதுள்ளவன் கேட்கக்கடவான்; வெல்லுகிறவனே, அவன் இரண்டாம் மரணத்தால் சேதப்படான் என்றெழுது. அறி. 2, 10. 11.

பாக்கியத்தையும் ஆக்கினையையும் தேவன் உனக்கு முன்பாக வைத்திருக்கிறார். நீ சாகும் போதே நித்திய ஜீவனுக்காவது நித்திய ஆக்கினைக்காவது போகவேண்டும். நரகாக்கினியில் ஈசுவரியமுள்ள மனுஷனைப்போல தாகத்தால் [illegible] ஒரு துளி தண்ணீர் ஆவலோடு கேட்க [illegible]. அவ்வளவு பெரிய காரியம் உனக்கு முன்பாக வைத்திருக்கிறது. நீ எதைத் தெரிந்து கொள்ளுவாய்? [illegible] உன்னை இரட்சிக்க முடியாது [illegible] இருவரையில் [illegible] இரக்கத்தினாலும் மாத்திரம் மோட்சம் கிடைக்கும். ஆண்டவரே [illegible] ஆண்டவரே என்று சொல்லுகிறவர்கள் ஆக்கினைக்குத் தப்ப [illegible]. ஒருவன் [illegible] பிரு என்று இந்த வார்த்தையும் [illegible] சொல்லுகிறது. உன்னை இரட்சிக்க இயேசு கிறிஸ்து [illegible] உன்னை ஞானஸ்நானத்தினாலே [illegible] இராச்சியத்தில் சேர்த்துக் கொண்டார். அவருடைய [illegible] இரட்சிப்பையும் மறவாதே. [illegible] பாவங்களையும் பெத்தொன்று அதிசயமான [illegible] நடக்கப் பிரயாசப்படு.

சபை வருஷத்தின் [illegible] உன் முடிவை உனக்கு [illegible] பூட்டுகிறது. எவன் வெல்லுகிறானோ அவன் இரண்டாம் மரணத்தால் சேதப்படான் என்று வேதம் கூறுகிறது. இரண்டாம் மரணம் என்றால் நரகம் [illegible]. அங்கே மோட்சத்துக்கென்று உண்டாக்கப்பட்ட ஆத்துமாக்கள் சொல்லிமுடியாத வேதனைகளைச் சகிக்கவேண்டியது. [illegible]க்கு நீ தப்ப வேண்டுமானால் நீ ஜெயத்தை அடையவேண்டும். ஜெயத்தை அடைவதற்கு நீ உண்மையாயிருப்பது அவசியம்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! தேவரீர் [illegible] எங்கள் மரணபரியந்தம் உண்மையாயிருந்து ஜீவ கிரீடத்தை அடைவதற்கு எங்களுக்குத் [illegible] தேவரீர் ஒருவரே எங்களுக்கு அடைக்கலமானவர், சுவாமி, ஆமேன்.

எஸ்றா 2, 64-3, 13. அல்லது அற். 11. 15-19. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தேழாம் வாரம், ஞாயிறு.

[illegible] 311, 1-3.

விழித்திருங்கள், மனுஷகுமாரன் வரும் நாளை யாகிலும் நாழிகை யாகிலும் அறியீர்கள், மத். 25, 13.

இது திருச்சபை வருஷத்தின் கடைசி வாரம். நம்மிடம் செலவு பெற்றுக்கொள்ளுகிற ஒரு சிநேகிதனைப்போல அது நமக்கு இன்னம் ஒரு கடைசி வார்த்தை சொல்லப்போகிறது. நம்மை விட்டுப் போகிறவர்களின் வார்த்தைகளை மனதில் வைத்துக்கொள்ளுவோம், அல்லவா? இச்சபை வருஷத்தில் நாம் எப்போதும் தேவ வசனத்தைக் கேட்டுவந்தோம். நீ அதைக்கொண்டு நற்குணத்திலும் உண்மையிலும் நம்பிக்கையிலும் சமாதானத்திலும் கடந்த வருஷத்திலே தேறினாயா? இதுவே முக்கியமான கேள்வி. இக்கேள்விக்குப் பதிலுரைக்க நமக்கு [illegible]. இந்த நாளின் வாக்கியம் நம்மை விழித்திருங்கள், விழித்திருங்களென்று எச்சரிக்க[illegible] நம்முடைய காதிலும் இருதயத்திலும் எக்காள சத்தம் போல் [illegible] ஆல்திபாஸ்[illegible]களுக்காக அல்ல, உங்கள் ஆத்தும இரக்ஷிப்புக்காகவும் உங்கள் பரம சுதந்தரத்துக்காகவும் விழித்திருங்கள். நீ இந்த வருஷத்திலே முன்னுக்கு வந்தாயா என்று கேட்டால் எல்லாருக்கும் [illegible]. உன் இருதயம் ஓர் அடைக்கத்தகா என்று கேட்டாலோ [illegible] யாருக்குக் கவலையென்று சொல்லுவார்கள். யாருக்குக் கவலையா? சிநேகிதனே, அது உனக்குத்தான். நீ மோட்சம் சேரவேண்டுமே! அப்படியானால் எல்லாம் வந்தாலும் முக்கியமான கேள்வி நான் எப்படிப் பக்தியுள்ள மனுஷன் ஆவேன் என்பது தான். மனுஷனுடைய குமாரனாகிய இயேசுநாதர் விழித்திருங்கள் என்று எச்சரித்தாரே. அவருக்கும் எனக்கும் என்ன பாத்தியமென்று கேட்காதே. அவருக்குத்தான் எல்லார் பேரிலும் பாத்தியமுண்டு. அவர் எல்லாரையும் தம்முடைய இரத்தத்தினால் சம்பாதித்தார். அந்தப் பாத்தியத்தினால் அவர் இப்பொழுது நமக்குச் சகோதரமாகவும் இருக்கிறார். கடைசியில் அவரே நியாயாதிபதியாகவும் வருவார்.

ஜெபம். எங்கள் அருமை இரட்சகரே! தேவரீர் எங்களை எச்சரித்துப் பாவ நித்திரையிலிருந்து எழும்பத் திரும்பத் திரும்ப எங்களண்டை வருகிறீர். ஆண்டவரே! நாங்கள் உமது சத்தத்தைக் கேட்டு நித்திய அழிவுக்குத் தப்பிப்போக எங்களுக்கு ஒத்தாசை பண்ணும், சுவாமி, ஆமேன்.

எஸ்றா 4, 1-24. அல்லது சங். 111. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தேழாம் வாரம், திங்கள்.

பி. 311, 4-[illegible]

நீங்களோ சகோதரரே அந்த நாள் திருடனைப்போல் உங்களைப் பிடிக்க அந்தகாரத்திலிருக்கிறவர்களல்ல, நீங்கள் எல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள். நாம் இரவுக்கும்

அந்தகாரத்துக்கும் உள்ளானவர்கள் அல்ல. ஆகையால் மற்றவர்களைப் போல் நாம் நித்திரைபண்ணாமல், விழித்துக்கொண்டு தெளிவுற்றிருக்கக் கடவோம். 1 தெச. 5, 4-6.

நாம் இரவின் பிள்ளைகள் அல்ல. இருட்டான இராத்திரியில் நமக்குப் பயமாயிருக்கிறது. இரக்ஷிக்கப்பட்ட மனுஷன் பகலின் பிள்ளை. மனுஷன் இராத்திரியில் அல்ல, பகலிலே விழித்திருந்து வேலை செய்வான். பகல் வெளிச்சத்தைச் சரீரமும் இயல்பாய் ஆத்துமமும் ஆசிக்கிறது. இருட்டான சிறைச்சாலையோ ஒருவனுக்கும் பிரியமல்ல? இருளின் பிள்ளைகளில் ஒருவனும் தன் பாவ இயல்பை விட்டுவிடமாட்டான். அவர்களில் எவனும் தன் பிள்ளைகளுக்கு நல்ல புத்தி சொல்லாமலும் பொல்லாதவ[...] கண்டிக்காமலும் பிறர் சீர் அடைவ[...] நம்[...]மலுமிருப்பான். பாவத்தின் பிள்ளைகளாக அல்ல, தேவனுடைய பிள்ளைகளாகவே மனுஷன் இந்த உலகத்தில் பிழைப்பது தேவ சித்தம். பரம பிதாவின் சாயல் பாவ அழுக்குள்ள நம்மிலும் தோன்றுகிறது. அந்தச் சாயல் நாம் பகலின் பிள்ளைகள், நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள் என்பதற்கடையாளம். நாம் வெளிச்சத்தின் பிதாவாகிய பராபரனாலும் அவருக்கென்றும் உண்டாக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். ஒரு மீன் தரையில் இருந்தால் எப்படிச் செத்துப் போகுமோ அப்படி நம்முடைய ஆத்துமாவும் பாவத்தில் கிடந்தால் சாகும். நாம் எச்சரிக்கையாயிராவிட்டால் பாவமாகிய வலையில் சிக்கிக்கொண்டு நித்திய ஜீவனை இழந்துவிடுவோம். சாத்தான் திடீரென்று ஒரு கள்ளனைப்போல வந்து நம்மைச் சர்வ கொள்ளையடித்து நமக்கு வேதனையும் அழிவும் உண்டாக்கும். ஆதலால் விழித்திருப்போமாக.

ஜெபம். எங்கள் பரம நியாயாதிபதியே! இந்தப் பூச்சக்கரத்தை நியாயந்தீர்க்கத் தேவரீர் வரும்போது நாங்கள் உமக்குக் காத்திருக்கிறவர்களாக விழித்திருக்கும்படி எங்கள் விசுவாசத்தைத் திடப்படுத்தியருளும். தேவரீர் ஒருவரே எங்களுக்கு அடைக்கலமானவர், சுவாமீ, ஆமேன்.

எஸ்றா 6, 1-22. அல்லது அதி-ஸ். 12, 7-12. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிங். இருபத்தேழாம் வாரம், செவ்வாய்.

பி. 311, 7-9.

உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து திரும்பிவந்து, தட்டும்

போது, உடனே அவருக்குத் திறக்கும்படி, எப்போது வருவார் என்று அவருக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள். எஜமான் வந்து, விழித்திருக்கக் காணும் ஊழியக்காரரே பாக்கியவான்கள். லூக். 12, 35-37.

கர்த்தர் வரும்போது நாம் அவரை இவ்வாறு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்த வாக்கியத்தினால் நமக்கு விளங்கும். அவர் நடுராத்திரியில் தன் வேலைக்காரரண்டை திரும்பி வருகிற ஒரு வீட்டெசமானைப் பற்றி இதில் பேசுகிறார். ஊழியக்காரர் தங்கள் எஜமானைச் சிநேகித்தால் அவர் வரவைச் சந்தோஷத்தோடு எதிர்பார்த்து எப்போதும் அவருக்காக ஆயத்தமாயிருப்பார்கள். இப்படிப்பட்ட ஊழியக்காரருக்கு நாம் ஒப்பாயிருக்க வேண்டும். இ[...] மகிமையில் வரும்போது கலியாண விருந்திலிருந்து திரும்புகிற ஒரு பட்சமுள்ள வீட்டெசமானைப் போலவும் மணவாளியாகிய திருச்சபையைத் தமது ஐக்கியத்திற் சேர்த்துக்கொள்ளும் மணவாளனைப்போலவும் வருவார். அவருடையவர்கள் அவரை வாஞ்சையோடு எதிர்பார்ப்பார்கள். அவர் வரும்போது உங்கள் அரைகள் கட்டப்பட்டு உங்கள் விளக்குகள் எரியவேண்டும் என்றால், நீங்கள் உங்களையே கவனித்துக் கவலைகளிலும் சோதனைகளிலும் உங்கள் மனதைச் செலுத்தாமல் உலகத்தின் மாய்கையையும் மாமிசத்தின் இச்சைகளையும் வெறுத்துக் கர்த்தருடைய ஊழியத்தையே நாடியிருக்கவென்பது பொருளாம். அவர் தம்முடையவர்களிடத்தில் எரியப் பார்க்க வேண்டுமென்றிருக்கிற விளக்கு விசுவாசமும் சிநேகமுமாம். நீ கர்த்தரை விசுவாசித்தாலும் உன் இருதயம் சிநேகத்தினால் நிறைந்திருந்தாலும் அதிலே திருப்தியுறாதே.

உன் விசுவாசம் நீங்காதபடிக்கும் உன் சிநேகம் குளிர்ந்து போகாதபடிக்கும் தினந்தோறும் மன்றாடி வா. உன் விசுவாசமும் சிநேகமும் மிகவும் பெலவீனமுள்ளதென்று நீ உணர்ந்து கர்த்தருடைய வசனத்தைப் படித்துப் பரிசுத்த ஆவியானவர் உன் விசுவாசத்தைப் பலப்படுத்தவும் உன் சிநேகத்தைப் பெருகப்பண்ணவும் ஜெபித்து வா. எஜமான் வந்து விழித்திருக்கக் காணும் ஊழியக்காரரே பாக்கியவான்கள்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! தேவரீர் தாமதம் பண்ணாமல் சீக்கிரம் வந்து எங்களை உமது மகிமையில் சேர்த்துக்கொள்ளும். உமக்கே நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம், சுவாமி, ஆமேன்.

எஸ்றா 9, 1-15. அல்லது அதிவி. 11, 1-20. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தேழாம் வாரம், புதன்.

ம. 311; 10-12.

இதோ, நாம் புது வானத்தையும் புதுப் பூமியையும் சிருஷ்டிக்கிறோம். முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதும் இல்லை, மனதில் எழும்புவதுமில்லை. நாம் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்; ஏனெனில் இதோ, எருசலேமைக் களிகூருதல் உண்டாகவும் அதின் ஜனத்தை மகிழ்ச்சி உண்டாகவும் சிருஷ்டிக்கிறேம். எசா. 65, 17. 18.

இதோ, பழையவைகளை நினைக்காதபடி நான் ஒரு புது வானத்தையும் புதுப் பூமியையும் உண்டாக்குகிறேன் என்று பராபரன் எசாயா தீர்க்கதரிசியைக்கொண்டு வாக்களித்தார். அறிவிப்பின் ஆகமத்திலே பரிசுத்த யோவான் தன் ஆவியிலே புது வானத்தையும் புதுப் பூமியையும் புது எருசலேமையும் பார்க்கிறான். இந்தப் பூமியிலும் புது எருசலேமிலும் இரட்சிக்கப்பட்டவர்கள் குடியிருப்பார்கள். அது பழைய வானத்தைப் பார்க்கிலும் பிரகாசமுள்ள வானமாய் இருக்கும். அதிலே மேகங்களும் இடிமுழக்கங்களும் இராது. புதுப் பூமியானது முள்ளுகளையுமற்றதாயிருக்கும். அது பிரேதங்களை அடக்கிவைக்கும் இடமாயிருக்காது. ஏதேன் தோட்டத்திலிருந்தது போல அங்கே இன்பமும் பாக்கியமும் மகிழ்ச்சியுமிருக்கும். ஒரு புதுப் பட்டணம், ஒரு புது எருசலேம் பராபரனால் உண்டாகி வானத்திலிருந்து இறங்கி வரும். இந்தப் பரிசுத்த பட்டணத்தில் பராபரனுடைய சிம்மாசனமும் கூடாரமுமிருக்கும்.

பராபரன் தாம் தம்முடைய ஜனத்தோடு வாசமாயிருப்பார். சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது சொப்பனம் காண்கிறவர்களைப் போலிருப்போம். அப்போது இடைவிடாத துதியால் நம்முடைய வாய் நிரம்பியிருக்கும். ஒருவரும் கேட்டிராத ஸ்தோத்திரப் பாட்டுகள் எங்கும் முழங்கும். இப்பேர்ப்பட்ட இன்பத்தை ஆண்டவர் தமது ஜனத்துக்கு ஆயத்தப்படுத்தியிருக்கிறார். அதற்கு உன்னையும் அழைக்கிறார். நீ அவருடைய இளைப்பாறுதலுக்கு வரப் பிரயாசைப்படு.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது மோட்ச பாக்கியத்தில் எங்களுக்கும் ஒரு இடத்தை ஆயத்தப்பண்ணியிருக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரே எங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தி எங்கள் ஆத்துமங்களை இரட்சித்துக்கொள்ளும், சுவாமி, ஆமேன்.

வெளி. 1, 1-11. அல்லது அறி. 19, 1-21. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தேழாம் வாரம், வியாழன்.

ம. 311, 13-15.

பிரியமானவர்களே, இப்போது பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்; நாம் என்னமாயிருப்போம் என்று இன்னும் வெளியரங்கமாகவில்லை. அவர் வெளிப்படும்போது அவருக்குச் சாயலாயிருப்போம் என்றிறதை அறிந்திருக்கிறோம்; ஏனெனில் அவர் இருக்கிற வண்ணமாக அவரைத் தரிசிப்போம். 1 யோவா. 3, 2.

இரட்சிக்கப்பட்டவர்கள் புதிய எருசலேமிலும் குடியிருப்பார்கள். அவர் இருக்கிற வண்ணமாக அவரைத் தரிசிப்பதே அவர்கள் பாக்கியமென்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். தேவனை முகமுகமாய்ப் பார்ப்பதே நித்திய ஜீவ பாக்கியபரம். தேவன் இப்பூமியிலும் தம்மை நம்புகிறவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். தேவரீர் எங்களைக் கிருபாகடாட்சமாய் நோக்கிப் பார்த்தால், எங்கள் சரீரமும் ஆத்துமமும் களிகூரும் என்று விசுவாசிகள் அடிக்கடி மனமகிழ்ச்சியோடு அறிக்கையிடுவார்கள்.

ஆகையால் விசுவாசிகள் இங்கேயும் பாக்கியவான்கள். ஆனால் இங்கே நம்பிக்கையில் மாத்திரம் அவர்களுடைய பாக்கியம் அடங்கியிருக்கிறது. அது இன்னும் பூரணமாகவில்லை. அது இம்மையில் எப்போதும் துன்பத்தோடு கலந்திருக்கும். இக்காலத்துத் துன்பங்கள் அவர்களை வருத்தப்படுத்தும் உலக சோதனைகள் அவர்களை நெருக்கிப் பாவம் அவர்களுக்கு நாள்தோறும் வேதனை உண்டாக்கி வருகிறது.

அவர்கள் தினந்தோறும் பிதாவே, எங்களுக்கு மன்னியும் என்று மன்றாடத் தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தங்களை எல்லாப் பாவங்களுக்கும் அறச் சுத்திகரிக்கிறது என்கிற ஆறுதலை அடைந்து வருகிறார்கள். அவர்கள் மகிமையில் இப்படியிருப்பார்கள் என்று இன்னும் வெளியரங்கமானதில்லை. ஆனால் சீக்கிரம் வெளியரங்கமாகும். அப்போது அவர்கள் பரலோகத்தில் தேவன் தமது பிள்ளைகளுக்கு ஆயத்தம்பண்ணியிருக்கும் மகிமைக்குள் பிரவேசித்து அவருடைய சாயலாகி மகிமைப்படுவார்கள். சுத்த இருதயம் உடையவர்கள் பாக்கியவான்கள் என்கிற வாக்கியம் அப்பொழுதுதான் நிறைவேறும். அப்போது கலந்திருந்த எல்லாச் சஞ்சலங்களும் ஒழிந்து எல்லாக் கவலைகளும் அற்று எல்லாச் சோதனைகளும் இல்லாமல் போகும். ஒரு வேதனையும் ஒரு நோவும் அவர்களை இனித் தொடாது. அவர்கள் பராபரனை அவர் இருக்கிற வண்ணமாக முகமுகமாய்ப் பார்ப்பார்கள்.

ஜெபம். பரம பிதாவே! உமது பிள்ளைகளையே எங்களுக்குக் காத்திருக்கும் மகிமை இன்னம் வெளியானதில்லை. அது வெளியாகும்போது நாங்கள் அதற்கு அபாத்திரராயிராமல் அதைச் சந்தோஷத்தோடு பெற்றுக்கொள்ளும்படி எங்களை இப்போதே குணப்படுத்தியருளும், சுவாமி, ஆமென்.

செகே. 2, 1-20. அல்லது அபி. 20, 1-15. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தேழாம் வாரம், வெள்ளி.

பி. 316, 1. 2.

அவர் சொன்ன உவமையாவது: ஒருவனுக்குத் தன் திராட்சத் தோட்டத்தில் நடப்பட்ட ஒரு அத்திமரம் இருந்தது; அதிலே கனியைத் தேடிவந்து, காணாதே போனான். அப்போது அவன் தோட்டக்காரனுடனே: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்தில் கனியைத் தேடி வருகிறேன், காணவில்லை. அதை வெட்டிப்போடு; அது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். இவனோ அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: ஐயா, நான் அதைச் சுற்றிலுங் கொத்தி எருப்போட்டு, கனி கொடுக்குமோ என்று பார்க்குமட்டாக, அது இந்த வருஷமும் இருக்கட்டும். கனி கொடாவிட்டால் நீர் மேலுக்கு அதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார். லூக். 13, 6-9.

தேவன் நம்மிடத்தில் கனி தேடிவருகிறார். அவர் நெருங்கி வந்து கனியைத் தேடுகிறார். அவர் தமது கிருபை நம்மில் விருதாய்ப் போயிற்றோ பலனுக்கு வந்ததோ என்று பார்க்கிறார். இதை நாம் விசேஷமாகச் சபை வருஷத்தின் முடிவில் கவனிக்கவேண்டியது. அவர் நமக்குச் செய்த நன்மைகளும் அவர் வசனத்தின் எச்சரிப்பும் எழுப்புதலும் அவர் ஆவியின் ஆறுதலும் திடப்படுத்தலும் இவையெல்லாம் நம்மில் உண்டாக்கின பலன் என்ன? நாம் விசுவாசத்தில் திடப்பட்டு அன்பில் அதிகரித்து நம்பிக்கையில் அதிகரித்துப் பரிசுத்தமாகுதலில் வைராக்கியமாகிக் கர்த்தரை மென்மேலும் உண்மையாய்ப் பின்சென்றோமா? அவர் வந்து நம்மிடத்தில் கனி தேடுகிறார் என்கிற சத்தியம் நம்மைக் குணப்படுதலுக்கு ஏவவேண்டும். ஆண்டவர் நியாயமாயிருக்கிறபடி நமக்குச் செய்தால் "இந்த மரத்தை வெட்டிப்போடு, அது நிலத்தை ஏன் கெடுக்கிறது" என்கிற தீர்ப்பையன்றி வேறென்ன தீர்ப்புச் செய்ய இடமுண்டு?

இயேசுகிறிஸ்து பிதாவிடத்தில் நமக்காகப் பரிந்துபேசுகிறபடியால் நாம் பாதுகாக்கப்[illegible] நான் அதைச் சுற்றிலுங் கொத்தி எருப்போட்டு அது கனி கொடுக்குமோ என்று நான்

பார்க்குமட்டாக, அது இந்த வருஷமும் இருக்கட்டும் என்று அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். இந்தக் கிருபை விருதாய்ப் போகாதபடி நாம் எச்சரிக்கையாய் இருப்போமாக. ஆண்டவர் அளவற்ற அன்பும் பொறுமையுமாயிருந்து திரும்பத் திரும்ப நமக்கென்று உழைத்து நம்மிடத்தில் கனியைத் தேடுகிறார். [illegible]துக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்காதவன் வெட்டுண்டு அக்கினிக் கிரையாவான்.

ஜெபம். அன்புள்ள பிதாவே! உமது நேச குமாரனுடைய திருமுகத்தைப் பார்த்து எங்கள்மேல் இம்மட்டும் பொறுமையும் இரக்கமுமாயிருந்து வருகிறீர். ஆண்டவரே, நாங்கள் உமக்கேற்ற கனிகளைக் கொடுக்க எங்களுக்குமதாவியைத் தந்தருளும், சுவாமி, ஆமென்.

செகே. 4, 1-23. அல்லது அபி. 21, 1-27. வாசிக்கவும்.

திரித். பண்டி. பிந். இருபத்தேழாம் வாரம், சனி.

பி. 316, 7.

அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கிற புது வானங்களுக்கும் புதிய பூமிக்கும் காத்திருக்கிறோம். ஆகையினாலே, பிரியமானவர்களே, இவைகளுக்குக் காத்திருக்கிற நீங்கள் அவரால் கறையுங் குற்றமுமற்றவர்களாய்ச் சமாதானத்தில் கண்டுபிடிக்கப்பட ஜாக்கிரதையாயிருங்கள். 2 பேது. 3, 13. 14.

திருச்சபை வருஷத்தின் கடைசி நாளிலே இந்தக் கட்டளையைக் கேட்கிற நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அதுவே நாம் பரம சுதந்தரத்தைப் பெற உதவும். பரிசுத்தமாகுதலின்றி ஒருவனும் ஆண்டவரைப் பார்க்கமாட்டான்.

நீதி வாசமாயிருக்கிற புதிய பூமியின் மகிமையில் இதிலும் அக்கிரமமும் பொய்யுமுள்ள எவரும் பங்கு பெற முடியாது. நாம் அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே காத்திருக்கிற புதுப் பூமியில் நிறைந்த புதிய குணம் அவசியம். தேவ கிருபையினால் குணப்பட்டு மாமிசத்தின் கறை அற்றிருப்பவர்களுக்கு மாத்திரம் அதின் வாசல்கள் திறந்திருக்கும்.

ஜாக்கிரதையாய் இருங்கள். பரம சுதந்தரம் வேண்டுமானால் விழித்து ஜெபித்து, நம்மை வெறுத்து உலகத்தின் இச்சைகளுக்குத் தப்பி மாமிசத்தை ஆசைகளோடே சிலுவையில் அறைந்து குற்றமற்றவர்களாய்ச் சமாதானத்தில் கண்டுபிடிக்கப்படத் தேவனை, [illegible] அவருடைய வாக்குத்

தத்தப்படி நீதி வாசமாயிருக்கிற புது வானத்துக்கும் புதுப் பூமிக்கும் காத்திருக்கிறோம். விசுவாசமற்றவர்களுக்கு முன்பாக அந்தகாரமேயன்றி வேறொன்றுமில்லை. உலகத்தார் நம்மைப் பரிகாசம் பண்ணினாலும், ஆண்டவர் தாமதம் செய்தாலும், நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். அவர் வரவே வருவார். உண்மையுள்ள தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். நீதிமான்களின் நம்பிக்கை மகிழ்ச்சியாய் முடியும்.

ஜெபம். அன்புள்ள இரட்சகரே! தேவரீர் எங்களுக்கு ஒரு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணி நாங்களும் அங்கே வர எங்களையும் அழைக்கிறீர். நாங்கள் உமது சத்தத்தைக் கேட்டு உம்மை எப்போதும் எதிர்பார்த்திருக்க எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி, ஆமென்.

லூக். 9, 1-31. அல்லது வெளி. 22, 1-21. வாசிக்கவும்.

முற்றிற்று.

Printed at the Ev. Luth. Mission Press, Tranquebar, 1910.